கலைஞரின்
கடிதங்கள்

37

20.01.2004 - முதல்
27.10.2004 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 37

20.01.2004 - 27.10.2004

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு....

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3020. திராவிட இயக்கப் பணிகளுக்குத் திரையிட முனைவதா?	20-1-2004	23
3021. அறிந்த உண்மை; அனைவரும் அறியச் செய்வோம்!	21-1-2004	31
3022. வெற்றிக் கொடியினை விண் நோக்கி ஏற்றிடுவோம்!	25-01-2004	40
3023. அறக்கட்டளை நிதி வழங்கி ஆறுதல் பெறுகிறோம்!	28-1-2004	44
3024. சட்டத்தின் முன்னால் பதில் சொல்ல வேண்டிவரும்!	29-1-2004	46
3025. வீரர் கோட்டம் விருதுநகர் அழைக்கிறது!	30-1-2004	50
3026. அஞ்சற்க; அத்தனை தொகுதியிலும் நமக்கே வெற்றி!	6-2-2004	55
3027. புதிய அவதாரம் புறப்படும்!	9-2-2004	60
3028. குறிக்கோளை நினைத்தால்; குழப்பம் நிலைக்காது!	10-2-2004	63
3029. விவாதிக்கத் துணிவில்லை; வீறாப்புக் குறையவில்லை!	13-2-2004	68
3030. நாற்பது வேட்பாளர்களும் நம்மவர்களே!	17-2-2004	72

3031. பரிவுடன் பாசமுடன் நினைவூட்டுகிறேன்!	29-2-2004	78
3032. நீர் மேல் எழுத்து!	1-3-2004	81
3033. உன் கர்ச்சனை கேட்க நான் வருகிறேன்!	3-3-2004	84
3034. நெய் மணக்கும் நெஞ்சுக்கினிய தீர்மானம்!	4-3-2004	87
3035. காரணம் புரிகிறதா?	5-3-2004	91
3036. "உன்னை விற்காதே!"	6-3-2004	94
3037. விதி மீறலுக்கு அனுமதியா? அல்லது வெகுமதியா?	8-3-2004	98
3038. தேர்தல் அறிக்கையில் தில்லுமுல்லு! (நேற்றைய தொடர்ச்சி)	9-3-2004	102
3039. இவர்தான் அவர்; அவர்தான் இவர்!	10-03-2004	109
3040. முகம் மலர்ந்திடும் மூவருலா!	12-03-2004	115
3041. அணுப்பொழுதும் அயராது ஆயத்தமாகுக!	13-03-2004	118
3042. திசை திருப்பப்படும் மகளிர் குழுக்கள்; திரும்பிப் பார்க்குமா தேர்தல் ஆணையம்?	15-03-2004	124
3043. வாழ்த்தி விடைபெற வாய்ப்பாக; வா!	19-03-2004	128
3044. ஒன்றுபட்டால் உண்டு வெற்றி!	28-3-2004	132
3045. பொய்யர்க்கும் புல்லர்க்கும் பொது வாழ்வு எதற்காக?	29-3-2004	136

3046. புகார்; பூம்புகார் போல மூழ்கி விடுமா?	1-4-2004	140
3047. புலம்பலுக்கு வழிவகுக்கும் புலம்பல்!	2-4-2004	145
3048. மலடுமல்ல; மனம் கல்லுமல்ல!	3-4-2004	149
3049. சுற்றுப்பயணம்; இரண்டாவது கட்டம்!	7-4-2004	153
3050. தேசிய செயல் திட்டம் தெளிவாக்குவதென்ன?	10-4-2004	156
3051. இதயத்தைத் துளைக்கிறதே!	11-4-2004	159
3052. பொ்னாண்டஸ் தடுமாற்றம்!	13-4-2004	162
3053. இந்நிலை கண்டு நானும் நாணமுறுகிறேன்!	14-04-2004	166
3054. கோவை செய்தியாளர் சந்திப்பு - நடந்ததென்ன?	15-4-2004	170
3055. வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்!	18-4-2004	174
3056. நேற்றைய கடிதமும்; இன்றைய நிலையும்!	19-4-2004	178
3057. பம்மாத்து கூட்டணியின் பகல் வேஷம் பாரீர்!	20-4-2004	181
3058. பதில்களை எதிர்பார்த்து பயணம் தொடங்குகிறேன்!	28-04-2004	186
3059. இவர்கள் கூட்டணியை என்ன பெயரிட்டு அழைப்பது?	4-5-2004	192
3060. வாஜ்பயும், வாய் நீளம் படைத்த வனிதாமணியும்!	7-5-2004	199

3061. “சாடிஸ்ட்” ஆட்சிக்கு; மேலும் சான்றுகள்!	12-5-2004	204
3062. சகல‘மான’வர்களுக்கும் நன்றி!	15-05-2004	208
3063. பிறந்த நாளில் நான் விடுக்கும் வேண்டுகோள்!	31-5-2004	211
3064. ஓராயிரம்; லட்சம்; ஒரு கோடி நன்றி!	9-6-2004	214
3065. முன்மாதிரி என்பது நன்மாதிரியின் பிரதிபலிப்பா? துன்மாதிரியின் நிழற்படமா?	12-6-2004	220
3066. அரசியல் புரட்சியுடன் அறிவுப்புரட்சியும் தொடர...!	15-6-2004	224
3067. தேவை ; நல்லெண்ணமும், நடுவர் மன்றத் தீர்ப்பும்!	18-6-2004	229
3068. அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்!	19-6-2004	235
3069. போலீசின் “காயமும்” - பொன்னையன் “நியாயமும்!”	21-6-2004	240
3070. இந்த ஆறு ஓடிக் கொண்டேயிருக்கும்!	25-6-2004	244
3071. ‘இட்லர்’ மனப்பான்மை - கோமாளிக் கூத்து!	26-6-2004	248
3072. மனச்சாட்சிப்படி நடந்து கொண்டார்களா?	27-6-2004	252
3073. பெங்களூரிலிருந்து சென்னை வரை!	28-6-2004	256
3074. சீமைக்குச் சென்றாலும் செந்தமிழ் உணர்வு போமோ?	30-6-2004	260

3075. ஏழை எளியோருக்கு வழங்கியுள்ள இனிய பேழை!	8-7-2004	265
3076. பரவலாக ஆழமாக சிந்திதுப் படைத்துள்ள பட்ஜெட்!	10-07-2004	269
3077. அவர்களுக்குப் பதில் சொல்லப்போவது யார்?	20-7-2004	274
3078. தாறுமாறான பதில்களும்; தார்மீக உரிமையும்!	24-7-2004	278
3079. செந்தமிழர் சேனை; சேலத்தில் திரண்டிட!	29-7-2004	284
3080. ஓரணியில் என்றென்றும் நிற்போம்!	02-08-2004	288
3081. மீண்டும் மீண்டும் தலை நீட்டுவார்கள்!	4-8-2004	292
3082. பரிவு தொடர்கிறது; பயணமும் தொடங்குகிறது!	5-8-2004	296
3083. வீரபாண்டி சார்பில் அழைக்கிறேன்; வா!	6-8-2004	304
3084. சேலத்தில் சிங்கநாதம் செய்வோம் வா!	12-8-2004	308
3085. வேறுவகை ஓய்வினை நினைக்கமாட்டேன்; எடுக்கமாட்டேன்!	14-8-2004	313
3086. மருந்தாக அமையும் மாநாட்டு வெற்றி!	25-8-2004	320
3087. ஓயாத உழைப்பு; வெற்றிக்கொடியாக உயரும்!	27-8-2004	325
3088. “புலிப் போத்துகள் நாம் எனப் புவிக்கு உணர்த்துக!”	28-8-2004	333

3089. மருமகள் - மணவாளன் - மாமியார்!	3-9-2004	338
3090. அடடா; அழைப்பு விடுக்கும் அழகே அற்புதம்!	4-9-2004	343
3091. வழக்கு வாபஸ் - வெளிச்சத்துக்கு வந்த உண்மை!	5-9-2004	349
3092. கொடியோர்க்கு அஞ்சி நம் கொடி சாயாது!	6-9-2004	354
3093. திருக்குறள் இருக்க; தீண்டுவரோ மனுநீதியை!	7-9-2004	359
3094. அய்யா, அண்ணா விழா நடத்தும் அருகதை யாருக்கு?	8-9-2004	364
3095. தாழாது என் தலை! வீழாது என் உறுதி!	14-9- 2004	369
3096. அன்று அண்ணன் சூட்டிய அந்தப் பெயர்!	15-9-2004	372
3097. உன் நெஞ்சில் நான் இருக்கும்போது...	23-9-2004	377
3098. தி.மு.க. ஆட்சியும், திரைப்படத் துறையும்!	6-10-2014	381
3099. பகுத்தறிவுப் பாசறையின் பணி!	7-10-2004	387
3100. எப்போது விளங்கிக் கொள்வார்களோ?	14-10-2004	391
3101. ஆளுநர் நெஞ்சில் அலை மோதும் வேதனை!	27-10-2004	397

3020. திராவிட இயக்கப் பணிகளுக்குத் திரையிட முனைவதா?

உடன்பிறப்பே,

1949ஆம் ஆண்டுக்கு முன்பே திராவிடர் கழகத்தின் தளபதியாக அறிஞர் அண்ணா அவர்கள் விளங்கிய அந்தக் காலத்திலேயே அவர் எழுதி நடித்த "சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" எனும் சரித்திரப் பின்னணி கொண்ட சமுதாயப் புரட்சி நாடகம், தமிழக முழுவதும் நூற்றுக்கணக்கான இடங்களில் நடைபெற்றது. அதில் சிவாஜியாக நடித்த நடிகர் திலகத்தை, "சிவாஜி கணேசன்" என்று தந்தை பெரியார் புகழ்ந்துரைத்தது சென்னையில் அந்த நாடகத்துக்கு அவர் தலைமை வகித்த போதுதான்!

சமுதாயத்தை வளைத்திடும் வர்ணாஸ்ரமக் கொடுமையும், தீண்டாமைத் தீமையும் சுட்டிக் காட்டப்பட்டு, அவை சுட்டெரிக்கப்பட வேண்டுமென்பதை விளக்கும் ஆரம்பக் காட்சிகள் இரண்டு, இதோ இந்தக் கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

முந்தைய என் கடிதங்களில் கலைவாணரின் 'கிந்தனாரை' நினைவு படுத்தினேன். அடுத்து, நான் தீட்டிய (ஒரே இரத்தம்) நந்தகுமாரையும், நாட்டு நிலையையும் எடுத்துக் காட்டினேன். இன்று, அண்ணாவின் நாடக ஓவியத்தை ஞாபகப்படுத்தி, நமது பயணம் அவ்வழியில் நாளும் தொடருமென்ற உறுதியினை வழங்குகின்றேன்.

அண்ணாவின் சந்திரமோகன்

1வது காட்சி:

இடம் : குளக்கரை

உறுப்பினர்கள் : (கேசவப்பட்டர், பாலச்சந்திரப் பட்டர், பச்சை)

(பட்டர்கள் இருவரும் தடிகளைத் தூக்கிக் கொண்டு ஓடி வருகிறார்கள். பச்சை அடிபட்டு ஓடி வருகிறான்)

கேசவப்பட்டர் : அடடே! எவ்வளவு திமிருடா உனக்கு? அடி, உதை. எவ்வளவு மண்டைக் கர்வம் இவனுக்கு?

பாலச்சந்தர் : வெட்டு, குத்து.

(பச்சை ஓடி வந்த வேகத்தில் கீழே விழுகிறான்.
அவனைத் தடியால் தாக்குகிறார்கள்.
அவன் எழுந்து கும்பிட்டபடி)

பச்சை : ஐயோ! சாமி, சாமி! கும்பிடுறேன்! அடிக்காதிங்க! தெரியாத்தனமா செய்துட்டேன். இந்தத் தடவை விட்டுடுங்க.

கேசவப்பட்டர் : (அடித்துக்கொண்டே) திருக்குளத்தில் போயா குளிப்பது? எவ்வளவு திமிருடா உனக்கு! சண்டாளா! பாவி! புண்ணிய தீர்த்தத்தையே பாழாக்கி விட்டாயே!

பச்சை : (உடம்பைத் துடைத்துக் கொண்டு) இல்லிங்க! இனிமே செய்யலிங்க! உயிர் போகுதுங்களே.....ஐயையோ!

பாலச்சந்தர் : பிடித்துக் கட்டி சவுக்காலே அடிக்கணும்! அடுக்குமாடா நீ செய்த அக்ரமம்? அடே, மதத் துரோகி! எந்தக் காலத்திலேயாவது நடந்தது உண்டா இந்த மாதிரி அக்ரமம்? உன் தோலை உரிச்சுப்புடுறேன் பார்.

பச்சை : வேணாங்க, வேணாங்க! இந்தப் பக்கமே வர மாட்டேன்.

கேசவப்பட்டர் : (மிரட்டும் குரலில்) வந்தா?

பச்சை : (பயந்து) தோலை உரிச்சுடுங்க....

கேசவப்பட்டர் : நடிப்போ? பயலே. இனி இந்தப் பக்கம் தலை காட்டவே கூடாது. தெரிஞ்சுதா?

(பச்சை ஓடி விடுகிறான்.)

கேசவப்பட்டர் : (தனிமையில்) பயல்களுக்கு எவ்வளவு கர்வம்? லோகம் என்ன ஆவது? இப்படி, இதுகள் நடக்க ஆரம்பித்தால்?

(காட்சி முடிகிறது)

★

காட்சி 2.

இடம் : வீதி

உறுப்பினர்கள் : (பச்சை, பிச்சை, ஆண்டி, சாது)

(அடிபட்ட பச்சை, காயங்களைப் பார்த்துக் கண்ணீர் விடுகிறான்)

பச்சை : ஆண்டவனே! வயலிலே வேலை செய்ததாலே உடலிலே அழுக்கு. அதைக் கழுவக் குளத்திலே இறங்கினேன். குளித்தது பாவமாமே! பாவிப் பயல்க படுகொலை செய்துட்டானுங்க. குளிக்கப் போனவன் சேத்தப் பூசிக்கிட்ட கதை மாதிரின்னு ஊரிலே உலகத்திலே சொல்லுவாங்க. என் கதி குளிக்கப் போயி ரத்தாபிஷேகமாச்சு. தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா? இந்த தேசத்திலே பிறந்தவன், இதிலேயே உழைக்கிறவன், இங்கேயே இருக்கிற குளத்திலே நான் குளிக்கக் கூடாதாம்! எங்கப்பன் சொல்லுவார் முன்பெல்லாம், இந்தக் குளத்தை எங்கப் பாட்டன் வெட்டினானாம். இதுலே குளிச்சா புண்ணியமாம்! வழியுது புண்ணியம்.

(ரத்தக் கறையைத் துடைத்துக் கொள்கிறான். பச்சையின் கூக்குரல் கேட்டு ஆண்டி ஓடிவந்து.....)

ஆண்டி : பச்சை! நீயா 'ஐயோ, ஐயோ'ன்னு கூவினது? என்னப்பா நடந்தது? உடம்பெல்லாம் காயம், ரத்தம்! என்ன அநியாயமிது?

பச்சை : ஆண்டி! பார்த்தாயா இந்தக் கோரத்தை! கேட்டியா இந்த அக்ரமத்தை? நீ என்னமோ நம்ம சாதியிலே யாரும் படிக்காத படிப்பு படிச்சவண்ணு ஊரு, நாடெல்லாம் உன்னைப் புகழுதே. இந்த அக்கிரமத்தைக் கேட்க வேண்டாமா நீ?

ஆண்டி : பச்சை! என்ன நடந்தது? முரட்டு மாடு ஏதாவது இடித்துக் காயப்படுத்தினதா? வெறிநாய் மேலே விழுந்து கடித்ததா? கொள்ளைக்காரப் பசங்க தடியாலே தாக்கினாங்களா? அழாமே சொல்லு பச்சை!

பச்சை :- ஆமாம்! முரட்டு மாடு தான் மேலே விழுந்து முட்டுச்சி. வெறி நாய்தான் கடித்தது. கொள்ளைக்காரனுங்கதான் என்னைத் தடியாலே தாக்கினாங்க!

ஆண்டி : இப்படி ஜன்னி கண்டவன் போலப் பேசினா நான் என்னான்னு நினைக்கிறது? முரட்டு மாடான்னா அதுக்கும் ஆமாங்கிறே! வெறி நாயான்னா அதுக்கும் ஆமாங்கிறே! கொள்ளைக்காரனுங்களான்னா அதுக்கும் ஆமாங்கிறே! நான் என்ன செய்யறது? யார் செய்தா இந்த அக்கிரமத்தை?

பச்சை :- அந்தப் பாழாய்ப் போன பட்டாச்சாரிக் கூட்டந்தான்.

ஆண்டி : ஏன்? நீ என்ன செய்தே?

பச்சை :- நானா? குளிக்கப் போனேன்.

ஆண்டி : எங்கே?

பச்சை :- அவுங்க வீட்டுக்காப் போனேன்? குளத்துக்குத்தான். அது புண்ணிய தீர்த்தமாம். அதிலே குளிக்கலாமான்னு பாவிப் பயலுங்க இந்த அநியாயம் செய்துட்டானுங்க!

ஆண்டி : (கோபத்துடன்) அடே முட்டாளே! போனால் என்னடா? குளத்திலே நாய் தண்ணீர் குடிக்கிறதேடா, நாய்! நாம் என்ன நாயை விடக் குறைவா? மலம் தின்னும் நாயடா நாய். அது உரிமையோடு தண்ணீர் குடிக்கிறது குளத்தில். பச்சை, நாய்க்கும் கேடு கெட்டவனா? சேற்றிலே புரளுகின்ற எருமை குளித்தால் விரட்டவில்லை. மனிதன்! தலைமுறை தலைமுறையாக மற்றவர்களுக்குப் பாடுபட்டு மேனி கருத்துப்போன சாதி நாம். நாம் குளித்தால் குளம் தீட்டாகி விடுமா? என்ன அக்ரமம்? அடுக்குமா இந்த அநீதி?

பச்சை :- அநீதியோ, அக்ரமமோ? இது இன்று நேற்று ஏற்பட்டதா? நம்ம பாட்டன் முப்பாட்டன் காலத்திலே இருந்து நடக்குது. நாம் என்ன செய்யலாம்?

ஆண்டி : என்ன செய்யலாம்? இந்தக் கொடுமையாவது தொலைய வேண்டும், அல்லது நாமாவது ஒழிய வேண்டும்.

பச்சை :- பதறாதே ஆண்டி! நாம பாவம் செய்தவங்க. அதனாலேதான் இந்தப் பாழான ஈனக் குலத்திலே பிறந்தோம்.

ஆண்டி : மடையன்! ஈன சாதி என்று எவனோ சொன்னால் அதை நம்பி நாசமாகிறாயே. நாம் எந்த விதத்திலே தாழ்வு? உழைக்கவில்லையா? நாம் மனிதரில்லையா? ஊரை ஏய்த்தா பிழைக்கிறோம்?

பச்சை :- ஆண்டி! நீ நம்ம சாதியிலே படிச்சவன். என்னென்னமோ பேசறே. நீ சொல்றதை கேட்கிற போது எனக்கென்னவோ தலை சுற்றுவதுபோல் இருக்கு.

ஆண்டி : உன்னைப் போன்ற ஜென்மங்கள் நம் சமூகத்தில் இருப்பதால்தான் இந்த இழிவு? பச்சே! பாழாய்ப்போன சமூகக் கொடுமையை நான் இப்போது பார்த்தது மட்டுமல்ல; அனுபவித்துமிருக்கிறேன்.

(சட்டையைக் கிழித்துப் பழைய தழும்புகளைக் காட்டி)

பார், தழும்புகளை! அந்தப் பாவிகள் செய்த அக்ரமம். என் பத்தாம் வயதிலே நேரிட்டது. இந்தத் தழும்பும் என் உடலை விட்டுப் போகாது. இந்த மமதையை அழிக்க வேண்டும் என்ற உறுதியும் என் உள்ளத்தை விட்டுப் போகாது. நம்மைப் படுத்துகிற பாடு இருக்கிறதே, இதற்கெல்லாம் ஒருநாள் அவர்கள் பதில் சொல்லித் தீர வேண்டும். . .வா. . . போகலாம்.

(சாது வருகிறார்)

சாது : அப்பா, பாட்டாளி மக்களே! அண்ட சராசரத்தைப் படைத்த ஐயன் உங்களைக் காப்பாற்றுவாராக! நீங்கள் எல்லாம் எந்த ஊர்? என்ன....

பச்சை :- ஐயா சாமி! நாங்க தீண்டாதவங்க!

ஆண்டி : ஆம்; ஐயா! ஆம்! நாங்க தீண்டாதவர்கள்தான்! ஊரார் சொத்தைத் தீண்டியதில்லை, வஞ்சனையைத் தீண்டியதில்லை, சூது, சூழ்ச்சியை நாங்கள் தீண்டியதில்லை; பாபத்தைத் தீண்டாதவர்கள் நாங்கள்.

சாது : தம்பி! உன் மதி கண்டு மகிழ்கிறேன். மகான் குலமானாலும், பிரபு குலமானாலும் எல்லோரும் மனிதர் குலம். பேதம் ஏது? நீ அறிவாளி.

ஆண்டி : அறிந்ததால்தான் என் அல்லல் அதிகமாகிறது. இதோ பச்சை! யாவும் தெய்வ சம்மதம் என்று நம்புகிறான். அதனால் அவனுக்கு ஜாதி வெறியரின் செயல் ஆத்திரமூட்டவில்லை.....

சாது : ஆத்திரமல்ல! அநேக காலமாக இருந்து வந்த அக்ரமத்தைக் கண்டு சத்தியம் கோபிக்கிறது என்று பொருள். நீ சலிப்படையாதே! சமரசக் கீதத்தை பல ஜீவன் முக்தர்கள் பரப்பிக்

கொண்டு வருகிறார்கள். ஆண்டவன் சன்னிதானத்தின் முன்பு, அனைவரும் சமம். சாதி, மதம், உயர்வு தாழ்வெனும் தீது, சமரச ஞான மகான்களுக்கேது என்ற தத்துவம் தழைத்து வருகிறது.

ஆண்டி : ஐயா, சாது! உம்முடைய சமரச ஞானம் அத்திப் பூத்தது போல் இருக்கிறது. சேற்றிலே ஒரு செந்தாமரை போல் இருக்கிறீர். ஆனால் என் மேல் கோபிக்காதீர். உம்முடைய முயற்சி உத்தமமானதுதான்! ஆனால் அது பலிக்காது. வேண்டுமானால் உம்மை ஒரு அவதார புருஷர் என்று கொண்டாடுவார்கள்; கோவில் கட்டுவார்கள்; கூத்தாடுவார்கள். ஆனால் எல்லோரும் சமம்; பிறவியிலே உயர்வு தாழ்வு இல்லை என்று பேசுகிறீரே, அதை மட்டும் நடைமுறையிலே கொண்டுவர மாட்டார்கள். நான் பதட்டமாகப் பேசுவதாக எண்ண வேண்டாம். ஐயா! காவியும், கமண்டலமும் எங்கள் குலத்தின் கஷ்டத்தைப் போக்காது. முக்திக்கு வழி தரக் கூடும். இழிவைத் துடைக்காது.எங்கள் சமூகத்தை இந்தக் கொடுமை செய்கிறவர்கள் தங்களைக் கடவுள், உயர்ந்த சாதியராகப் படைத்ததாகக் கூறுகிறார்கள். அது கொடுமை. இதோ பச்சை! அதை உண்மைதான் என்கிறான். இது மடமை. இந்த மடமையும், அந்தக் கொடுமையும் ஒழிய வேண்டுமே ஐயா!

சாது : அப்பா! நெறியற்றவரின் வெறிச் செயலால் நீ மிகவும் வாடியிருக்கிறாய். கடவுளின் லட்சணமும், குணமும், அக்கயவரின் மொழிப்படியல்ல என்பதை அறிந்து கொள். கடவுள் என்றால் மனம், வாக்கு, காயம் என்பனவற்றைக் கடந்தவர் என்று பொருள்.

ஆண்டி : இருக்கலாம் அய்யா! எதையும் கடந்தவராக இருப்பார். ஆனால் அந்த வர்ணாஸ்ரமம் போடும் கோட்டினை மட்டும் அவரால் கடக்க முடிவதில்லை. லோகம் மந்ராதீனம், மந்திரம் ப்ராமணாதீனம், ப்ராமணம் தேவதாதீனம் என்பது கீதையல்லவா! கடவுளுக்கே அவர்கள் எஜமானர்களாமே....?

சாது : வெறும் புரட்டு; மமதை; அகம்பாவம்; கடவுள் வாக்கல்ல அது; கபட மொழி.

ஆண்டி : கண்ணன் காட்டிய வழியாமே?

சாது : இல்லை; கயவர் வெட்டிய படுகுழி. அப்பா! புதிய சக்தி பிறந்திருக்கிறது. மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. வர்ணாஸ்ரமம் வீழ்கிறது. சமரசம் பிறந்து விட்டது. சண்டாளன், சர்மா என்னும் பேதம் இனி இராது. அனைவரும் சமம்! அனைவரும் சமம்.

ஆண்டி : அழகான ஆரூடம். ஆனால் அது பலிக்காது. இன்பக் கனவு காண்கிறீர் ஐயா! தங்களுடைய உபதேசத்தையும் ஒரு நூலாக்கி வைத்துக் கொள்வார்கள். ஏட்டுச் சர்க்கரை, காதுக்கு இனிப்பு, வாய்க்குப் பயனில்லை.

சாது : தம்பி! விதை தூவி வருகிறோம். விளையும் பயிர் முளையிலே என்பது போல, இப்போதே சமரச மணம் வீச ஆரம்பித்துவிட்டது. நிச்சயம் மாறுதல் ஏற்படும். என் மொழி கேள்! பொறுமை கொள்!

ஆண்டி : பொறுமை? ஐயா! பொல்லாங்கு ஏதும் செய்யாது, பிறருக்காக உழைத்து விட்டு, உரு மாறி, உள்ளங் குமுறி, ஒண்டக் குடிசையின்றி, ஓட்டாண்டியாகி ஓலமிட்டுக் கிடக்கிறோம். இன்று நேற்று முதல் அல்ல; பல தலைமுறைகளாகக் கொடுமைகளைச் சகித்தோம்; வறுமையால் வாடினோம். வஞ்சகரால் வீழ்ந்தோம், வாழ்வே பெரும் சுமை எங்களுக்கு? இம்சிக்கப்படும் நாங்கள், இழிவாக நடத்தப்படும் நாங்கள், ஊரிலே உரிமையோடு உலவ அனுமதிக்கப்படாத நாங்கள், மனித உரிமையும் தரப்படாது, குளத்திலே குளிக்கும் உரிமையும் பெற முடியாத நாங்கள், பொறுமையாய் இருக்க வேண்டும்! பொறுத்துக் கொள்ள வேண்டும்! காலின் கீழ் நசுக்கப்படும் நாங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். காலில் வெள்ளெலும்பு முளைத்த நாளாய் அடிமைக்காரனாக இருந்து பாடுபட்டுக் கிடக்கும் நாங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். அற்புதமான யோசனை. பாம்பின் வாயிலே சிக்கிய தேரைக்கும், புலியின் பிடியிலே சிக்கிய மானுக்கும், போய்ச் செய்யும் இந்தப் போதனையை! பொறுமை யாம் பொறுமை! பொறுத்ததெல்லாம் போதாதா? இவ்வளவுதான் உம்மால் முடியும். எங்களிடம் பொறுமையின் அருமையைப் பற்றி உபதேசிப்பீர். எம்மை மிருகங்களினும் கேவலமாக நடத்தும் கொடியோருக்கு அன்பின் பெருமையைப் பற்றிப் பேசுவீர். இருவரிடமும் மறுமையின் மேன்மையைப் பற்றிப் பேசுவீர். ஆனால் உரிமைப் போருக்கான வழி உரைக்க அறியீர். அது அறிந்திருந்தால் இந்தக் காவியும், கமண்டலமும் கையிலிராது. (போகிறான்)

(காட்சி முடிகிறது)

★

உடன்பிறப்பே, சாதிமத வேறுபாடுகளைக் களையவும், அவற்றுக்கு ஆணிவேராக இருக்கும் வர்ணாஸ்ரமத்தை அறிவென்னும் வாள் கொண்டு அடியோடு வீழ்த்தவும், இன்று நேற்றல்ல, என்றைக்கோ புறப்பட்டுவிட்டது போர் முனைக்கு திராவிட இயக்கம்! என்பதற்கான சான்றுகளில் ஒன்றுதான் அண்ணாவின் "சந்திரமோகன்" நாடகமாகும். இந்த உண்மையை திசை திருப்ப முனைவோர்க்கும், அதில் மயங்கி இன்னமும் தெளிவு பெறாத சிலர்க்கும்! அண்ணாவின் இந்த நாடகம் ஓர் ஒளிவிளக்காகும்.

அன்புள்ள,

மு.க.

20-1-2004

3021. அறிந்த உண்மை; அனைவரும் அறியச் செய்வோம்!

உடன்பிறப்பே,

1940களில் நான் எழுதிய “தூக்குமேடை” நாடகம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தளபதி கே.வி. அழகிரிசாமி போன்றவர்களின் தலைமையிலே நடைபெற்று, நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்களும், நானும் நடித்த - அந்த நாடகம் பின்னர் கலைமாமணி நடிகர் சந்திர சேகர் நடித்து அமிர்தம் இயக்கத்தில் திரைப்படமாக வெளி வந்தது.

சமுதாயப் புரட்சிக்கான கருத்துகள், காட்சிகளுடன் ஆயிரக்கணக்கில் மேடையேறிய “தூக்கு மேடை”யில் இடம் பெற்றதில், சிலவற்றை மாத்திரம் எடுத்துக்காட்டிட விரும்புகிறேன்.

ஆரம்பக் காட்சி :-

(குப்பைத் தொட்டிக்குப் பக்கத்திலே பொட்டு வைத்து பூச்சூட்டப்பட்ட ஒரு நீளமான “செங்கல்” சாமி! . . . கட்டைச் சுவர் - அதிலே காற்றிலாடும் ஓர் அகல் விளக்கு . . . குப்பைத் தொட்டி மறைவுகளிலும் . . .வேறு சில மறைவுகளிலும் . . . நடைபாதையைப் பஞ்சணையாக்கிக் கொண்டு ஆண்களும், பெண்களுமாகப் படுத்திருக்கிறார்கள்)

(கந்தன் பாடுகிறான்)

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன் என்ற வடலூரார் மறைந்து விட்டார்!
அதனாலே
வாடுங்கள்! நன்றாக வதங்குங்கள்.....
தேடுங்கள் ஒரு வழியை இறைவன்
திருவடியைச் சேர்வதற்கே!..... உடன்
சேர்வதற்கே! இன்றே சேர்வதற்கே!

குடி உயரக் கோலுயரும்.....
கோலுயரக் கொடி உயரும்....
ஆகா! எத்தனை அழகாய்
எத்துணை வளமாய்
எவ்வளவு சுகமாய்
எங்கள் மக்கள் சாகிறார் ....
எரியும் நெருப்பில் வேகிறார்! ....
எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்றார் பாட்டிலே
எங்கள் மன்னர் வாழுகின்றார் மண்ணாங்கட்டி
வீட்டிலே
இடிஇடித்தால் மழை பொழிந்தால் மன்னரெல்லாம்
ரோட்டிலே
இறகொடிந்த பறவை கூட இருக்குதய்யா கூட்டிலே....
எங்களுக்கும் உணர்ச்சி உண்டு - எங்க
பங்களாவில் முள்ளு மெத்தை உண்டு ....
புளிச்ச காடி மதுவை உண்டு
புருஷன் மனைவி சேர்வதுண்டு
வெளிச்சம் போட்ட காரும் வந்தால்
விலகி விலகிப் படுப்பதுண்டு.
முத்தெல்லாம் மூக்குச் சளி ....
ரத்தக் காயம் ரத்தினமாம்.....
வைரங்கள் நட்சத்திரம் ....
வானவில்லே வைடூர்யம் ....

குத்துக் கல்லு சிம்மாசனம் ....
குப்பைத் தொட்டி ராசாங்கம் ....
செத்துப் பிழைக்கும் மக்களுக்கு ....
ஜெகத்தை அழிக்கும் சக்தியுண்டு ....

(பற்பல பகுதிகளில் இந்தப் பாடலைக் கந்தன் பாடிக் கொண்டு வரும்போது... ஆதிக்க வெறியர் அபிநய சுந்தரத்தின் குண்டர் படையினர்... அங்கு வந்து குடிசைகளைப் பிரிக்கின்றனர்... ஏழை மக்கள் - அழுகுரல் - பரபரப்பு - பதைப்பு - குண்டர்கள் அட்டகாசம்)

கிழவன் :- அய்யா.....குந்துறதுக்கு இந்த ஒரு நிழல்தான்யா இருக்கு! இதுங்களையும் பிரிச்சிட்டா....நாங்க எங்கய்யா போவோம்?

குண்டன் :- எங்கேயாவது போய்த் தொலைங்க.....எங்க அய்யா அபிநய சுந்தரத்தோட ஆணை.....இதெல்லாம் காலேஜ் இடம்....இதை உடனே காலி பண்ணியாகணும்னு கட்டளை....

(பாண்டியன், வேலழகன் இன்னும் சில மாணவர்கள் வருதல்....)

பாண்டியன் :- பிரிக்க விட மாட்டோம்....(குரலைத் தொடர்ந்து பாண்டியன் வருதல்)

குண்டன் :- யார்ரா அவன்? (அவனைப் பார்த்து விட்டு) ஓ! பாண்டியனா...?

பாண்டியன் :- ஆமாம், எதற்காக இந்த ஏழைகளைத் துரத்துகிறீர்கள்?

குண்டன் :- அய்யா, இந்தப் பக்கம் காரிலே அடிக்கடிப் போக வேண்டியிருக்கு....குப்பையும் கூளமும் குடிசைகளும் ஒரே அசிங்கமா இருக்குறது, அவருக்குப் பிடிக்கலே.....அதனால்தான்....

கந்த :- (வந்து கொண்டே) ஆங்! அப்படிச் சொல்லு!.... அய்யா அபிநய சுந்தரம் போற வழி அழகா இருக்க வேண்டாமா....? (ஏழை எளியோரைப் பார்த்து) ஏன்யா....அய்யா வர்ர வழியை நீங்கதான் அலங்காரம் பண்ணி வச்சா என்ன? வீட்டுக்கு வீடு தோரணம் கட்டுங்க.....தோரணம் கட்ட என்னா இருக்குன்னு கேக்கறீங்களா? வயத்தைக் கிழிச்சு குடலை எடுத்து வீட்டுக்கு வீடு தோரணம் தொங்க விடுங்க. பொம்பளைங்களா! நீங்கள்ளாம் தெருவை சுத்தம் பண்ணி உங்க பங்களாக்கள் வாசல்லே கோலம் போட்டு அதுக்கு மேலே சாணம் தெளிச்சு....அய்யா அபிநய சுந்தரத்திற்கு வரவேற்பு கொடுங்க....உங்க உடம்பிலே சேலை, ரவிக்கை இல்லாட்டியும் பரவாயில்லை.....அதோ அந்த மாடி வீட்டுத் தோட்டத்திலே கிடக்கு பாருங்க எச்சி இலைகள், அதுகளை உங்க பிள்ளைகளை விட்டு நக்கி சுத்தம் பண்ணச் சொல்லி அந்த இலைகளை கட்டிக்கிட்டு அய்யா இந்தப் பக்கம் போகும் போதும் வரும்போதும் டாடா. . . .டாடா. .. டா....டா...காட்டுங்க. . . . என்ன பாண்டியா நான் சொல்றது சரிதானே.....

(காட்சி மாறுகிறது)

★

காட்சி 53:-

காளீஸ்வரி கல்லூரி கலையரங்கம்

("பாரதி விழா" என எழுதப்பட்ட இரட்டைத் திரையை நடுவிலே விலக்கிக் கொண்டு... வேணி தோன்றி .. . பின்வரும் அறிவிப்பைச் செய்கிறாள்.)

வேணி :- கவலையெல்லாம் பறப்பதற்கும், புதிய பொற்காலம் படைப்பதற்கும் கவிச் சக்கரவர்த்தி பாரதியார் எழுதிய பாடல் ஒன்றை... ...பாரதியார் வேடம் தாங்கி நமது மாணவர், தமிழ் மன்றத் தலைவர் பாண்டியன் இப்போது பாடிடுவார் . . .

(கலையரங்கில் அபிநயசுந்தரம், சமயோஜிதம், பரமார்த்திகர், அவர் அருகே வனிதா, அர்த்தநாரி, வேலழகன் மற்றும் மாணவர்கள் - அறிவுத் துறை ஆசிரியர், வரலாற்று ஆசிரியர் மற்ற ஆசிரியர்கள் - பலவேஷம், மாணவர்கள் குழுமியிருக்கிறார்கள்)

"இனி ஒரு தொல்லையும் இல்லை
பிரிவில்லை, குறையும் கவலையுமில்லை!
கனிதரும் மாமரம் ஒன்று அதில்
காய்களும் பிஞ்சு கனிகளும் உண்டு!
மனிதரில் ஆயிரம் சாதி என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை!
நந்தனைப் போல் ஒரு பார்ப்பான்
இந்த நாட்டினில் இல்லை!

குணம் நல்லது ஆயின்
எந்தக் குலத்தினரேனும் உணர்வின்பம்
அடைதல் எளிதெனக் கண்டோம்!
உண்மையின் பேர் தெய்வம் என்போம்
அன்றி ஓதிடும் தெய்வங்கள்
பொய்யெனக் கண்டோம்!
நன்று புராணங்கள் செய்தார்
அதில் நல்ல கவிதை பலபல தந்தார்!
கவிதை மிக நல்ல தேனும்

அக்கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்!
சூத்திரனுக்கொரு நீதி!
தெண்ட சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின்
அது சாத்திரமன்று, சதியென்று கண்டோம்!"

(என்ற பாரதி பாட்டை பாரதி வேடம் தாங்கிய பாண்டியன் பாடுகிறான்.... பாட்டரங்கில் திரையோரத்திலிருந்து....வேணி, ரசித்தவாறு இருக்கிறாள்.. ..பாட்டின் இறுதியில் அபிநய சுந்தரர், பரமார்த்திகர், அர்த்தநாரி ஆத்திரமுடன் வெளியேறுகிறார்கள்)

★

காட்சி 54:-

அபிநயசுந்தரர் வீடு

(அபிநயசுந்தரர் கோபமாக அங்குமிங்குமாக நடந்து கொண்டேயிருக்கிறார். ..

பரமார்த்திகர் அவர் பின்னால் போய்க் கொண்டே யிருக்கிறார்...

அர்த்தநாரி, பலவேஷம் இருவரும் ஓரிடத்தில் நிற்கிறார்கள்...)

பரமார்த்திகர் :- புராணங்கள் பொய்க் கதைகளாம்...ஒன்றே குலமாம்.... உண்மையின் பேர் தான் தெய்வமாம்....பாரதி விழா நடத்துனாங்களா..... இல்லை...அந்த ராமசாமி நாயக்கர்.... அண்ணாத் துரை....விழாக்களை நடத்துனாங்களா?.....

அபிநய :- (கோபமாக) அதான் எனக்கும் புரியிலே....என்னுடைய சகல அதிகாரத்துக்கும் உட்பட்ட ஒரு கல்லூரியிலே. . .

பலவே :- (குறுக்கிட்டு) பெரியார், அண்ணா விழா நடத்துறதுக்கு 'பர்மிஷன்' கேட்டா....கொடுக்க மாட்டீங்கன்னுதான்....புடிச்சான்.. பாரதியை!...

அர்த்த :- அடிச்சான் நம்பளை செமத்தியா!. . .

பரமார் :- அடிப்பாண்டா அடிப்பான்....நம்ப அய்யா அபிநய சுந்தரனார் நெற்றிக்கண்ணைத் திறந்தார்னா...தெரியுமடா சேதி! நெருப்பு தெறிக்குமடா தெறிக்கும்!

அபிநய :- திறக்கட்டுமா?. . .நெற்றிக் கண்ணைத் திறக்கட்டுமா?

பரமார் :- வேண்டாம்.... வேண்டாம்.... முதல்ல உங்க வெற்றிக் கண்ணைத் திறந்தாலே போதும். . . ஆயிரம் ஜாதிகள் உண்டுங்கிறது வஞ்சக வார்த்தையாம். . . அவ்வளவு திமிர்!

பலவே :- அது, பாரதி சொன்னது தானேன்னு. . .

(முடிப்பதற்குள்)

அபிநய :- பாரதி சொல்லலாம்... இந்தப் பாண்டியன் யாரு சொல்றதுக்கு....

பரமார் :- அப்படி கேளுங்க.. . . இந்தப் பாண்டியன் கூட்டத்துக்கு சரியான பனிஷ்மெண்ட் கொடுக்கணும்னா. . .

அபிநய :- பரமார்த்திகரே! சொல்லும் இப்போதே.. . .

பரமார் :- ஜாதிகள் இல்லேன்னு பாடினான்லே. . .

அபிநய :- உம்!

பரமா :- அதனால நம்ப ஹாஸ்டல்ல. . .இனிமே . . . ஜாதிவாரியாப் பிரிச்சுதான் சாப்பாடு போடணும். . . எல்லா ஜாதிக்கார மாணவர்களும் சமமா உக்காந்து சாப்பிடக் கூடாது. . .

அபிநய :- சரியான யோசனை . . . சரியான யோசனை... நாளைக்கே நடைமுறைக்கு வந்தாகணும்னு இன்னைக்கே உத்தரவு போடுறேன். . . .

★

காட்சி 55:-

ஆஸ்டல் - சாப்பிடுமிடம்.

(அர்த்தநாரி முதலிய மாணவர்கள் உட்கார்ந்து சாப்பிடத் தொடங்குகிறார்கள்... அப்போது பாண்டியன், வேலழகன் அவர்களைச் சார்ந்த மாணவர்கள் வழக்கம்போல சாப்பிடுவதற்காக வருகிறார்கள். . . பரிமாறுகிறவர்கள் அவர்களை ஒருமாதிரியாகப் பார்க்கிறார்கள்)

அர்த்தநாரி :- பாண்டியன்.. . .உங்களுக்கெல்லாம் இங்கே சாப்பாடு கிடையாது. . .

பாண்டியன் :- என்ன? . .

அர்த்த :- எல்லாரும் சமமா உட்காந்து சாப்பிடுறது நேத்தியோட சரியாப் போச்சு. .

வேலழகன் :- ஏ, அர்த்தநாரி! என்னடா சொல்றே?

(பரமார்த்திகர், பலவேஷம் பிள்ளையுடன் வந்துகொண்டே)

பரமா :- புதிய உத்தரவு! . . . ஜாதிவாரியாத்தான் இனிமே சாப்பாடு . . . சம பந்தி போஜனம் கிடையாது. . . தாழ்ந்த ஜாதிக்கார 'ஸ்டூடன்சு'க்குத் தனியிடம் ஒதுக்கியாச்சு....

பாண்டி :- என்ன . . . தனியிடம் ஒதுக்கி விட்டீர்களா?. . .

பலவே :- ஆமாம்... வகுப்புவாரியா இட ஒதுக்கீடு வேணும்கிறதுக்காகப் போராடிய கூட்டமாச்சே ... உன் கூட்டம்?

பாண்டி :- நீ சும்மா கிட பலவேஷம்! அந்த இட ஒதுக்கீடு, தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் சகல துறைகளிலும் தங்களுக்குரிய விகிதாச்சாரத்தைப் பெற்று தலை நிமிர்ந்து வாழ்ந்திட! இதோ இந்த இட ஒதுக்கீடு. . .தலை குனிந்து, தன்மானமிழந்து, தமிழ்ச் சமுதாயம் வீழ்ந்திட! . . .இரண்டையும் போட்டு நீ குழப்பாதே!. . .

(அபிநயசுந்தரர் வந்துகொண்டே ஆத்திரமாக)

அபிநய :- என்னடா குழப்பம் இங்கே...

பரமா:- வைரத்தோட புஷ்பராகத்தையும் வைக்கணுமாம் . ...அதுக்காக வாதாடுரான்!

அபிநய :- அது எப்படியடா முடியும்...

பாண்டி :- முடியாது தான் . . . நாங்கள் புஷ்பராகக் கற்களாயிருந்தால் முடியாதுதான்... அவர்களும் மனிதர், நாங்களும் மனிதர்! அவர்களை ஒரு ஆண்டவன் படைத்திருந்தால், அவன்தான் எங்களையும் படைத்திருப்பான்...

அபிநய :- அதான் இல்லேங்கிறேன்... ஆண்டவனின் முகத்திலே படைக்கப்பட்டவர்கள் ... தோளிலே, தொடையிலே, கடைசியிலே காலிலே படைக்கப்பட்டவர்கள் தனித்தனி ஜாதியாச்சே. . . பெரியவாள் பார்த்து ஜாதியை எதுக்குடா பிரிச்

சாங்க? எதுக்குன்னேன்? கழுதையும், குதிரையும் ஒரு ஜாதியாம் - பேச வந்துட்டான்! (பரமார்த்திகர், அர்த்தநாரி, பலவேஷம் கேலியாகச் சிரித்தல்)

பாண்டியன் :- (துடித்தெழுந்து) சாதி இரண்டொழிய வேறில்லை என்று கூறியதும் பெரியவர்கள்தான்! ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்று கூறியதும் பெரியவர்கள்தான்! சாதியிலே, மதங்களிலே சாயாதே! என்று கூறியதும் பெரியவர்கள் தான்! சாதி, சாதி என்று பேசுகிறீரே, பாதிக்குதே பசி என்று கதறி வீதியிலே புரளும் வடக்கு மலைப் பரதேசிக்கு உங்கள் சாதி, சாதித்த நீதி என்ன? வேதியர்க்கு வெண்பட்டும், வெண் பொங்கலும் அளித்த சாதி, அவர்கள் வைத்த மீதியையாவது நாதியற்றவர்க்கு அளிக்க நினைத்ததா? பேதியும் பீதியும், சேரிக்கு விடுத்தது உமது சாதியல்லவா? போதி மரத்துப் புத்தன் புலம்பியதும், ஆதிமகனாம் வள்ளுவன் அலறியதும் சாதி ஒழிய வேண்டுமென்று தானே?

அபிநய :- ஒழியாதுடா ஒழியாது!....ஜாதியை ஒழிய விட மாட்டோம்...

பரமா :- அப்படிச் சொல்லுங்க...

அபிநய :- பாண்டியா!... இந்த அபிநய சுந்தரம் போட்ட உத்தரவு போட்டதுதான் . . . அதைத் திரும்பப் பெற மாட்டேன்...

பாண்டி :- திரும்பப் பெறா விட்டால் தீயிட்டுக் கொளுத்துவோம்... அந்தத் தீங்கான உத்தரவை! கேட்டுக் கொள்ளுங்கள் இப்போதே! சுயமரியாதையுள்ள மாணவர்கள் சார்பாக அறிவிக்கிறேன்! நாளை முதல் மாணவர் வேலை நிறுத்தம்! கல்லூரி வாசலிலே அமைதியான முறையில் அறப்போர் மறியல்! உமது உத்தரவைத் திரும்பப் பெறும் வரையில் எங்கள் உயிரைப் பணயமாக வைத்துப் போராடுவோம். . . வருகிறோம்!

(பாண்டியனும் மற்ற மாணவர்களும் போகிறார்கள்)

காட்சி முடிகிறது.

★

உடன்பிறப்பே, உடன்பிறந்தே கொல்லும் வியாதி போல இந்தச் சமுதாயத்தையே சீரழிக்கும் சாதி மத பேதங்களைச் சாய்த்து "ஒன்றே குலம்" எனும் உன்னதக் கோட்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவர நமது திராவிட இயக்கம் தொடர்பணி ஆற்றி

வந்துள்ளது என்பதற்கு, மறுக்க முடியாத சான்றுகள்தான் கடந்த சில நாட்களாக நான் கடிதங்கள் வாயிலாக எடுத்துக்காட்டி வரும் எழுத்தோவியங்கள் என்பதை நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் அறிந்த உண்மையை, மேலும் அறிந்திட வேண்டியவர்களுக்கு அறிவித்திடுக!

அன்புள்ள,

மு.க.

21-1-2004

3022. வெற்றிக் கொடியினை விண் நோக்கி ஏற்றிடுவோம்!

உடன்பிறப்பே,

முடித்து விட்டோமாம்; ஒரு கட்சியுடன் கூட்டணி உடன்பாடு - அதனால் துடித்துப் போகிறார்கள், வெடித்துச் சிதறுகிறது அவர்களின் இருதயம்!

பாட்டாளி மக்கள் கட்சியுடன் ஒப்பந்தமா? அது "பகல் கனவு"தான் என எண்ணியிருந்தோமே; இப்போது முடிந்து விட்டது சுமூகமாக எனக் கூறி இரு தரப்பினரும் கையெழுத்துப் போட்டு ஒப்பந்தப் பத்திரங்களைப் பரிமாறிக் கொண்டுவிட்டார்களே; அந்தக் காட்சியைப் பத்திரிகையாளர்களை அழைத்துப் படம் எடுத்தும் வெளியிட்டுவிட்டார்களே!

அம்மவோ,
பதைக்கிறதே நெஞ்சம் -
படபடக்கிறதே நாடி நரம்புகள் எல்லாம் -
இரத்த அழுத்தமே உச்சந்தலை வரையில் ஏறி விட்டதே -
கிறுகிறுத்துச் சுழல்கின்றனவே கண்கள் -
நடக்கவே நடக்காது -
நடக்கவும் விடமாட்டோம் என்று
நடுங்கா நாக்குடன்
சூளுரைத்துச்
சூழ்ந்து நின்று
சூதுரை புகன்று கொண்டிருந்தோமே -
அவையனைத்தையும் சுத்தப் பொய் என ஆக்கிவிட்டு -

சுடர் விட்டுப் பிரகாசிக்கும் சிரித்த முகத்துடன் கையெழுத்திட்ட தொகுதி உடன்பாட்டு ஒப்பந்தங் களைக் காட்டி நிற்கிறார்களே!

இப்படிப் புலம்பித் தவிக்கிறார்கள் பத்திரிகை உலகில் சில நண்பர்கள்! எரிச்சல் தாங்க முடியாமல் ஏதேதோ செய்திகளை வெளியிடுகிறார்கள்!

தொடர்புடைய மற்ற கட்சிகளையெல்லாம் கேட்காமல் - கலந்து பேசாமல் - பா.ம.க.வுடன் உடன்பாடு என்ற பெயரால் ம.தி.மு.க. இடமிருந்த "திண்டிவனம்" தொகுதியை தம்பி செஞ்சி ராமச்சந்திரனுக்குத் தெரியாமல் பா.ம.க.வுக்குக் கொடுத்துவிட்டதாகச் சில ஏடுகளில் செய்தி வெளியிட்டுள்ளார்கள்.

பாவம்; அவர்களுக்குத் தெரியாது; ம.தி.மு.க.வின் கட்சி அலுவலகம் தாயகத்தில் தம்பி எல்.ஜி.யுடனும் - அடுத்து தம்பி செஞ்சியுடனும் தொடர்புகொண்டு அவர்களின் கருத்தறிந்த பிறகே அவர்களின் ஒப்பு தலைப் பெற்றே திண்டிவனம், பா.ம.க.வுக்கு என ஒதுக்கப்பட்டது என்ற உண்மை!

இந்த உண்மைகளைப் பற்றி ஒன்றுமே தெரிந்து கொள்ள முனையாமல்; ஏதோ புழுதி வாரித் தூற்றிப் புளுகிடும் கலையை மட்டும் கற்ற சிலர்; களிப்புடன் கையெழுத்திட்டு நிறைவேற்றப்பட்ட இந்த உடன் பாட்டைக் களங்கப்படுத்த முடியுமா என்ற கவலையுடன் செய்திகளைத் திரித்து வெளியிட்டுப் பார்க்கிறார்கள், "சோர்வுடன் இருந்தார் பா.ம.க. தலை வர் டாக்டர் அவர்கள்" என்று ஓர் அண்டப் புளுகு! ஆகாசப் புளுகு இது ஒரு பெரிய பத்திரிகையின் கைங்கர்யம்!

பொதுவாகவே காலம் காலமாக - என்றைக்கு அறிஞர் அண்ணா அவர்கள், தேர்தலில் கட்சிகளின் தொகுதி உடன்பாட்டுக் கூட்டணியைத் தொடங்கி வைத்தாரோ; அன்று முதல்; தொடர்ந்து பல்வேறு தேர்தல்களில் பல கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு கண்டு தூய்மையுடன் அந்தக் கட்சிகளின் வெற்றிக்குப் பாடுபட்டிருக்கிறது தி.மு.க. என்பதுதான் கடந்தகால வரலாற்றுப் பதிவாகும்.

அந்த வரலாற்றுப் புகழ்க் கம்பத்தில் வளைவுகளோ, நெளிவுகளோ ஏற்படாமல்; யாராலும் ஏற்படுத்த முடியாமல் - பாதுகாத்துப் பட்டொளி வீசி நமது கூட்டணிக் கொடி பறக்க வேண்டுமென்பதில் தி.மு. கழகத்தினர் இருதய சுத்தியுடன் இருக்கின்றனர் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

இதேசமயம் இன்னொரு முக்கியமான கருத்தையும் தெரிவித்தே தீர வேண்டியிருக்கிறது - எந்தவொரு கட்சியானாலும் அதிக இடங்களில் நிற்பது அல்லது குறைவான இடங்களில் நிற்பது என்பது அக்கட்சிகளின் வலிமையை அளவிடக் கூடியது என்ற இலக்கணம் - தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்யும் வரையில் பொருந்தலாம்.

ஆனால், நாம் நிதானத்துடன் கவனிக்க வேண்டியது; அப்படி நின்ற இடங்களில் எத்தனை இடங்களில் வென்றோம் என்பது வாக்கு எண்ணிக்கை முடிந்த பிறகுதான் தெளிவாகி அந்தக் கட்சியின் வலிவினை உணர்த்தும் என்பதை மறந்து விடக் கூடாது.

ஒரே எண்ண ம் -
ஒரே குறிக்கோள் -
மதவாதக் கொள்கைகள் மாய்ந்து,
மத பேதச் சண்டைகள் ஓய்ந்து,

மத்தியில் அமையும் அரசு எந்தவொரு மதத்திற்கும் சார்புடைய அரசாக இல்லாமல் -

எம்மதமும் சம்மதமே என்ற பரந்த மனப்பான்மை யுடன் -

சிறுபான்மையோர் உரிமைகளைச் என்றிகழாமல் -

பெரும்பான்மையோரும் சிறுபான்மையோரும் சகோதர உணர்வுடன் உறவாடி மகிழ்ந்திடும் (நிலையை உருவாக்கும் அரசாக அமைய வேண்டும் என்ற குறிக்கோள் நிறைவேறிட -

இந்தக் கூட்டணியினால்தான் முடியும் என்ற நம்பிக்கை நிறைவேற வேண்டும் என்பதேயாகும்..

எல்லோரும் வாழ வேண்டும்;

இல்லாதார், இருப்போர் எனும் ஏழை, பணக்காரர் மாறுபாடு இல்லாமற் போகவேண்டும்.

இவைகளேயன்னியில் இந்தக் கூட்டணியில் உள்ளோர் வெளியிடும் தேர்தல் அறிக்கையில் இடம் பெறும் கொள்கைகள், கோரிக்கைகள், திட்டங்கள் நிறைவேற வேண்டும்.

இந்த எதிர்பார்ப்புகளுடன் அமையும் கூட்டணிக் குள் குழப்பம் விளைவிக்க குட்டை மனம் கொண் டோர் -

குள்ள நரிச் செயல்புரிவோர் -
குறுக்குச் சால் ஓட்டிடுவோர் முயன்றிடுவா.
செய்திகள் வடிவத்தில் வருவர்.
வதந்திகளாக உருவெடுப்பர்.
கலக விதை தூவுவர்.

வஞ்சகச் சூழ்ச்சியினர் முயற்சிகளை முறியடித்து நாம்; நமது கூட்டணியின் வெற்றிக் கொடியினை விண் நோக்கி ஏற்றிடுவோம்; வா, உடன்பிறப்பே; வா!

அன்புள்ள,

மு.க.

25-01-2004

3023. அறக்கட்டளை நிதி வழங்கி ஆறுதல் பெறுகிறோம்!

உடன்பிறப்பே,

கழகத்தின் வளர்ச்சிக்காக மட்டுமல்ல, நிர்வாக அலுவலகங்கள் மாவட்டந்தோறும், ஒன்றியந்தோறும் அமைப்பதற்காக மட்டுமல்ல, சென்னையில் தலைமைக் கழகத்தின் இதயம் போன்ற மாபெரும் நிர்வாகக் கட்டிடமாம் அண்ணா அறிவாலயம் அமைப்பதற்கும் - அங்கே கலைஞர் அரங்கம் கட்டுவதற்கும், திராவிட இயக்க வரலாறு விளக்கும் கருவூலம் அமைப்பதற்கும், ஏழை எளியோருக்கு கண்ணொளி வழங்க கண் மருத்துவமனை இயங்குவதற்கும் - பெற்ற அறிவைப் போற்றிடவும், பெற வேண்டிய அறிவுக்கு பெரும் நூல்களைப் படிக்கவும் பேராசிரியர் ஆய்வு நூலகம் அமைத்து, வளரும் தலைமுறையின் ஞானத்தை வளர்க்கவும் - நிதி திரட்டிய கழகத்திற்கு வாரி வாரி வழங்கினார்கள் திராவிட இயக்கப் பற்றாளர்கள். அந்த நிதி அனைத்தும் தி.மு.க. அறக்கட்டளை சார்பில் திக்கற்றோருக்கு உதவிடவும் வேண்டுமென்பதற்காக மேலும் நான் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அவ்வப்போது குவிந்திடும் நிதியை ஆக்கப்பூர்வமாக செலவிட்டு வருகிறோம். ஆதரவற்றோர் அதனைப் பெற்று மகிழ்கிறார்கள்.

★ என் பிறந்த நாளில் கழக உடன்பிறப்புகளாகிய உன்போன்றோரும், பொதுமக்களும் வாரி வழங்கிய உண்டியல் நிதியைக் கொண்டு, இலங்கைத் தமிழருக்கு உதவினோம்.

★ காட்டாங்கொளத்தூர் சிவானந்த குருகுலம் போன்ற கருணைமிகு அமைப்புகளுக்குப் பல தடவை பல்லாயிரக்கணக்கில் பரிவுடன் அளித்து மகிழ்ந்தோம்.

★ பெங்களூர் தமிழ்ச் சங்கத்திற்கு அவர்கள் மகிழத்தக்க அளவிற்கு தி.மு.க. சார்பில் என்வாயிலாக நிதி வழங்கி பூரிப்பு கொண்டோம்.

★ குஜராத்தில் நிகழ்ந்த பெரும் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டு பரிதவித்து நின்றோருக்கு, கழகத்தின் சார்பில், பத்து இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி உதவிக்கரம் நீட்டினோம்.

★ ஈரானில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தால் பாதிக்கப்பட்டோருக்கு தி.மு.க. அறக்கட்டளை சார்பில் ஒரு லட்ச ரூபாய் நிதி வழங்கினோம்.

★ தொல்காப்பியப் பூங்கா விற்பனை மூலம் தமிழ்க்கனி பதிப்பகம் சார்பில் தி.மு.க. அறக் கட்டளைக்குச் சேர்ந்த சுமார் 40 லட்சம் ரூபாயை சுமார் 500 கழகத் தொண்டர்களின் நலிவு போக்கும் நிதியாக கொடுத்து உதவி மன ஆறுதல் பெற்றோம்.

இப்படி தொடர்ந்து எந்த வகையில் யார் பாதிக்கப்பட்டாலும் - மழையினாலோ, வெள்ளத்தினாலோ இடர்ப்பட்டாலும் அவர்களுக்கு நிதி உதவி அளித்திட தி.மு.க. தயங்கியது இல்லை.

இவையன்னியில், ஆண்டுதோறும் மாணவர்களை படிப்பிலும், இலக்கியத்திலும் ஊக்கப்படுத்த பரிசுகளும், பொற்கிழிகளும் அளிக்கிறோம். ஆன்றோர்களுக்கும், சான்றோர்களுக்கும் தலா லட்ச ரூபாய் வீதம் அன்புப் பரிசு வழங்குகிறோம்.

இவற்றுடன் "முரசொலி அறக்கட்டளை" வேறு ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர்களுக்கு ஆதரவு நிழலாக அமைந்து பணியாற்றி வருகிறது. இவற்றின் தொடர்ச்சியாகத்தான் இதோ திருச்சியில், திருவரங்கத்தில், செல்வி ஜெயஸ்ரீ என்ற பெண்ணின் குடும்பத்தில் ஏற்பட்ட வேதனையால் நாடே கண்ணீர் வடிக்கும் நிலையைக் கண்டு, நம்மால் இயன்ற உதவியை அந்த ஆதரவற்று நிற்கும் பெண்ணுக்கு செய்திட முனைந்துள்ளோம்.

திருவரங்கத்தில் தீ விளைவித்தது, எவ்வளவு பெரிய கொடுமை!

அந்தக் கொடுமையின் விளைவை அனுபவிக்கும் குலக்கொடி ஜெயஸ்ரீக்கு ரூ.2 இலட்சம் நிதி வழங்குகிறோம். இந்த நிதி - ஒரு சாதாரண ஆறுதல்தான்.

மனித நேய உணர்வுடன் தி.மு.க. அறக்கட்டளை இந்தத் தொகையை வழங்கித் தனக்கும் ஒரு ஆறுதலை வழங்கிக் கொண்டுள்ளது.

அன்புள்ள,

மு.க.

28-1-2004

3024. சட்டத்தின் முன்னால் பதில் சொல்ல வேண்டிவரும்!

உடன்பிறப்பே,

வேடிக்கையான தமிழ்நாடு - இங்கே

விநோதமான ஜனநாயகம் -

விசித்திரமான வாதங்கள் -

ஆமாம்! ஒரு தேர்தல் என்று வந்துவிட்டால், அதுவும் பொதுத் தேர்தல் சட்டமன்றத்துக்கோ, நாடாளுமன்றத்துக்கோ வந்துவிட்டால், புற்றீசல் போல புதிய கட்சிகள் புறப்படும்!

மொத்த சமுதாயத்துக்கும் யாரோ ஒருவர்தான் வழிகாட்டி என்பதைப் போல வண்ண விளம்பரங்கள் என்ன! வரவேற்புத் தோரண வளைவுகள் என்ன! வரிசை வரிசையாக! அதிவிமரிசையாக!

புதிய கட்சிகளின் பொது உறுப்பினர்கள் எத்தனை பேர்?

தேர்தலுக்குத் திரட்டிய பணம் எவ்வளவு?

எவர் வாயிலாக வந்தது?

அதில் வரவு செலவு விபரம் என்ன?

இவையெல்லாம் ரகசியம் - பரம ரகசியம்.

இந்தச் சூழலிலும் தியாக மனப்பான்மையும் - இலட்சியப் பற்றும் கொண்ட சில உத்தமர்கள், தங்களின் சமுதாய முன்னேற்றத்திற்காக "குறிஞ்சிப் பூ" போல இதழ் விரித்து நம் இதயம் கவர்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள், தமிழகத்தில்!

என்ன வேதனையென்றால், அந்த உத்தமர்களைப் போலவே தங்களையும் எண்ணிக் கொண்டு ஏமாறும் ஒரு கூட்டம் இன்னமும் இருக்கிறது. அந்தக் கூட்டத்தில் இருப்போர்

தமது வாக்கினைத் தெய்வ வாக்கெனக் கருதுவர் என்ற நம்பிக்கையில் நடமாடுகிறவர்களை நாடு அடையாளம் கண்டு கொண்டுதானிருக்கிறது.

அவர்களுக்கு தேர்தல் காலம் வந்துவிட்டாலே அது தேன் நிலவுக் காலம் போலத்தான்! சரி, போகட்டும்! - ஏதோ "அனுபவி ராஜா அனுபவி" என்று நாமும் அவர்களை விட்டுத் தள்ளிவிட்டுப் போகலாம். நம் வேலையை நாம் பார்க்கலாம்.

இவர்களைப் போலவே இன்னொரு பிரிவினர், தேர்தல் என்பது பொதுவாக எல்லாக் கட்சிகளுக்கும் உரியது என்பதையும் - அதில் போட்டியிடுவது எல்லாக் கட்சி வேட்பாளர்களுக்கும் உரிய ஒன்று என்பதையும், திடீரென்று மறந்துவிடுகிறவர்கள்.

உதாரணமாக, நாடாளுமன்றத் தேர்தலுக்கு தமிழ்நாடு, புதுவை உட்பட நாற்பது தொகுதிகள் என்பதை தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ளது. அந்த நாற்பது தொகுதிகளையும், எந்தவொரு கட்சியும் மொத்தக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, மற்றக் கட்சிகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்று சட்டப்படி எந்த விதிமுறையும் இல்லை.

ஏனெனில், நாற்பது தொகுதிகளும் பொதுவாக எல்லாக் கட்சிகளும் போட்டியிட உரிமையுள்ள தொகுதிகளே தவிர, ஒரே ஒரு கட்சியின் கரத்தில் அத்தனை தொகுதிகளும் ஒப்படைக்கப்பட்டு, அக்கட்சி பார்த்து மற்ற கட்சிகளுக்குப் போட்டியிடும் தொகுதிகள் ஒதுக்கலாம் என்று எந்த நியதியும் கிடையாது.

ஒருவேளை அப்படி ஒரு கட்சியிடமே அத்தனை தொகுதிகளும் ஒப்படைக்கப்பட்டிருந்தால், "எனக்குக் கொடுக்கவில்லை, உனக்குக் கொடுக்கவில்லை" என்று குறைபட்டுக் கொள்வதிலே நியாயம் உண்டு! அவ்வாறு எல்லா தொகுதிகளையும் மொத்தக் குத்தகைக்கு ஒரு கட்சி எடுத்திருக்கு மேயானால்; அந்தக் கட்சியின் மீது நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து "எங்கள் கட்சி புறக்கணிக்கப்பட்டுள்ளது" என்று வாதாடுவதற்கு வழி உண்டு எனலாம்!

ஆனால், இந்தத் தொகுதிப் பிரச்சினை என்பது, அடியோடு மாறுபடுகிற ஒன்றாகும்.

நாற்பது தொகுதிகள் பொதுவில் வைக்கப்பட்டிருக்கும்போது, அந்த நாற்பதையும் விருதுக் கேடயங்களாகத்தான் கருதவேண்டும். அந்த விருதுக் கேடயம் எனப்படும் தொகுதியைப் பெற்று, வெற்றி வாகையும் சூடிட - அந்தத் தொகுதிக்கு உரிமை கொண்டாடுபவரிடம் போட்டியிட்டு - போட்டியிடுவோரின் வாய்ப்புக்கேற்ப, வெற்றியோ தோல்வியோ பெறவேண்டும் - இதுதான் ஜனநாயகத்தில் "தொகுதி" - "தேர்தல்" என்பதற்குப் பெரிய எழுத்து புத்தக விளக்கங்களாகும்.

நாற்பது தொகுதிகளில் எத்தனை கட்சிகளாயினும் - எத்தனை நபர்களாயினும் போட்டியிடலாம் - தனித்து வலிமையைக் காட்டாமல், தன் வலிமையுடன் பிற வலிமையையும் கூட்டி அணி சேர்ந்தும் போட்டியிடுவதற்கு ஜனநாயக நெறியிலும் - தேர்தல் ஆணைய விதிமுறைகளிலும் - தங்கு தடை இங்கு இதுவரையில் இல்லை.

எத்தனை அணிகள் அமைந்திடினும் - எத்தனை பேர் களமிறங்கிடினும் - அது அவரவர்களின் உரிமையே தவிர, அதைத் தடுத்திட யாருக்கும் உரிமை கிடையாது.

இப்படி தேர்தல் விதிமுறை தெளிவாக இருக்கும் போது, தி.மு.கழகம் யாருடைய போட்டியிடும் உரிமையையோ தடுத்துவிட்டது போல, நம்மீது சிலர் குறை கூறுவதும், குற்றம் சாட்டுவதும் - தி.மு.க. மீது அவர்களுக்குக் காலம் காலமாக இருந்துவரும் அசூயையின் பிரதிபலிப்பாகவே வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகிறது.

பொதுவில் ஒத்தக் கருத்துடையோர்தான் ஓர் அணியினர் ஆவர்! உரசிக் கொள்ளும் போக்கினர் ஒன்றுபட்டு இயங்க இயலாது - முடியாது - கூடாது - அனுபவங்கள் அப்படித்தான் கூறுகின்றன.

நாற்பது இடங்களை நாமே அபகரித்துக் கொண்டு - ஒரு இடத்தில் கூட நுழைய யாருக்கும் உரிமை யில்லையென்று உரைக்கிறோமா? இல்லை, இல்லவே இல்லை - எத்தனை பேர் அல்லது எத்தனைக் கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டாலும் - எத்தனை நாள் தேர்தல் களத்தில் நிற்க நேரிட்டாலும், இறுதி முடிவாக அந்த நாற்பது இடங்கள்தான் இருக்கும்.

அவற்றில் யார் யார், எந்த எந்த இடத்தில் அமரப் போகிறார்கள் என்ற முடிவுதான் ஜனநாயகத்தில் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றாகும்.

அதற்காக, போட்டியிடவே குறிப்பிட்ட சிலரை தி.மு.க. அனுமதிக்காமல் விரட்டுவது போல பிரச்சாரம் செய்வது அர்த்தமற்றதாகும். வீண் அவதூறுமாகும். எல்லோரும் பொதுவில் போட்டியிடத்தான் நாற்பது தொகுதிகள். அவற்றில் கட்சிகள் அணியாகவும் போட்டியிடலாம் - தனியாகவும் போட்டியிடலாம்.

"தனியாக" என்பதை யாரும் தடுக்க முடியாது - அணியாக அமைய வருவதை இடம் உள்ளவரையில் தான் ஏற்று அணியாக உருவாக்கிட இயலும்! அதுவும் ஒன்றையொன்று அனுசரித்துப்போவதுதானே அணிக்கே அழகாகும்!

என்னவோ, தி.மு.கழகம் தனியாக தர்பார் நடத்திக் கொண்டு நாங்கள் விரும்புகிறவர்கள்தான் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று அனுமதிச் சீட்டு வழங்குவது போலவும் - கற்பனை செய்து கொண்டு, சிலர் கழகத்தின் மீது கண்டனக் கணை வீசுகிறார்கள். சில ஏடுகள் அந்தக் கற்பனைகளையே கதைகளாக்கிக் கொண்டு கலகத் தீ மூட்டிடத் திட்டம் தீட்டிச் செயல்படுகின்றன.

இவற்றின் காரணமாக ஏற்படும் விளைவுகளுக்குச் சட்டத்தின் முன்னால் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்டே தீரும் என்பது மட்டும் உறுதி!

அன்புள்ள,

மு.க.

29-1-2004

3025. வீரர் கோட்டம்
விருதுநகர் அழைக்கிறது!

உடன்பிறப்பே,

விருதுநகரில், பேரறிஞர் அண்ணாவின் பெயரால் அமைந்துள்ள பெரும் வளாகத்தில், முரசொலி மாறன் நகர் திராவிட இயக்கத்தின் தியாகத் தோன்றல்கள் எண்ணற்றோரின் திருநாமங்கள் பொறித்த வண்ணப் பதாகைகளுடனும், வடித்தெடுத்த கன்னல் தமிழ் கருத்துரைகளுடனும் அள்ளக் குறையா அழகும் பெற்று ஏடு கொள்ளாப் பெருமைமிகு எழுச்சியும் பெற்று, பிப்ரவரி 21, 22 சனி, ஞாயிறு நாட்களில் தென்மண்டல தி.மு.க. மாநாடாக நடைபெற இருக்கிறது.

அதற்காவன செய்திடும் அரிய பணிகளில், வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களும், ஏறனைய உடன்பிறப்புகளும் ஈடுபட்டு இரவு பகல் இரு பொழுதும், "இரு பொழுதே! எம் பணி முடிக்கும் வரை" என மொழிந்து, வியர்வை பொழிந்து, வினை முடித்து என் முன் வெற்றிப் புன்னகை காட்டிடத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்று, விருதுநகர் சென்று வந்த தம்பிமார்கள் அனைவரும், முகத்தில் புன்னகை மின்னிடப் புகன்றிடல் கண்டும், கேட்டும் கழிபேருவகை கொள்கின்றேன்.

கழகத்தின் 12ஆவது பொதுத் தேர்தல் நிறைவுற்று ஆங்காங்கு கிளைக் கழகங்களின் தேர்தல்கள், ஒன்றியக் கழகங்களின் தேர்தல்கள் மற்றும் பேரூர் முதல் நகரங்கள், மாநகரங்கள், மாவட்டக் கழகங்களின் தேர்தல்கள் அனைத்தும் முறையாக நடைபெற்று, பொதுக்குழு தேர்தலும், தலைமை நிர்வாகிகள் தேர்வும், நியமனங்களும் முழுமை பெற்ற நிலையில் கடந்த ஓராண்டாக உன் போன்ற கழக உடன்பிறப்புகளுக்குத்தான் எத்தனை வேலைகள்!

அறப்போராட்டங்கள் -

மறியல்கள் -

ஆர்ப்பாட்டங்கள் -

சிறை நிரப்பும் போராட்டம் -

என மக்கள் பிரச்சினைகளுக்காக எவ்வளவு பணிகளை ஏற்றிருக்கிறாய்!

எத்தனை பிரச்சாரப் பொதுக் கூட்டங்களை நடத்தியிருக்கிறாய்!

நமது கொள்கைப் பிரச்சார செயலாளர்களான தம்பிகள் விடுதலை விரும்பியும், கம்பம் செல்வேந்திரனும் கழகச் சொற்பொழிவாளர்களைக் கூட்டுவித்து, அவர்கள் சென்று முழங்கிட வேண்டிய இடங்களை வகுத்தளித்து - அந்தக் கூட்டங்களை முன்னின்று நடத்திய பெருமை உனக்கே யுரியதன்றோ!

ஒரு கூட்டம் நடத்தி, நமது கொள்கைகளை விளக்கி- நாட்டு நிலவரத்தையும், நாடாள்வோரால் ஏற்படும் மனக் கலவரத்தையும் விளக்கி - கூட்டத்தைச் சிறப்புற அமைத்தோம் என்ற நற்பெயரையும், நற்சான்றினையும் நாலு பேரிடம் பெறுவதென்பது சாதாரண காரியமல்ல என்பது அனுபவ ரீதியாக எனக்கே தெரியும்.

கூட்டங்கள் நடத்திட சுவரொட்டி ஒட்டிய கை என்னுடைய கை -

மெகபோன் வைத்துக் கொண்டு - மேள முரசு தட்டிக் கொண்டு - விளம்பரப் பிரச்சாரம் செய்தவன் நான் -

ஒரு கையில் கொடியும், ஒரு கையில் துண்டு அறிக்கைகளும் ; ஏந்தியவாறு எத்தனை நாட்கள் - மாதங்கள் - ஆண்டுகள் - அம்மவோ! அந்த நாட்கள் இந்தத் தொண்டனுக்கு மீண்டும் திரும்பி வராதா என்றல்லவா இன்றும் ஏங்கியவாறு இதை எழுதுகிறேன்.

உடன்பிறப்பே! உன் கையில் கொடி இருக்க வேண்டும் - அது வரவேற்பு நிகழ்ச்சியாயினும் - கூட்ட நிகழ்ச்சியாயினும் - அறப்போர் நிகழ்ச்சியாயினும் அப்போதெல்லாம் தவறாமல் உன் கையில் கொடி இருக்க வேண்டும் என்று வெளிப்படையாகக் கூட

அல்ல, ஒளிவு மறைவாகத்தான் எழுதிக் காட்டினேன், என் கையில் ஒரு கொடியைத் தாங்கியவாறு!

இப்போது பார்த்தால், திருவாரூர்-காட்டூருக்கு அன்னையின் நினைவு நாளுக்கு சென்றிடவும் - திருச்சியில் தீயினால் பாதிக்கப்பட்டு திக்கற்று நின்ற திருமகளாம் ஜெயஸ்ரீயை திருவரங்கத்தில் சந்திப்பதற்குச் சென்றிடவும் - கார்ப் பயணம் மேற்கொண்டபோது, அந்த இரு நாட்களும் வழியெல்லாம் உன் விழிகளில் களிப்பு துள்ளக் கையில் கொடியுடன் நின்று, என்னை வரவேற்ற காட்சி இன்னும் என் நெஞ்சை விட்டு அகலவில்லை.

நமது இரு வண்ணக் கொடிக்குத்தான் என்ன ஒரு கம்பீரம் -எத்தனை எழுச்சி! அவைகள் நூற்றுக்கணக்கில் சேர்ந்து பறக்கும்போது! இந்தக் காட்சியை நான் பெரிதும் விரும்புவேன் என்பதை பலமுறை உணர்த்தியிருக்கிறேன் உனக்கு! அந்த என் ஆசை முழுமையாக நிறைவேற வேண்டுமென்று உன் போன்றார் நினைத்துத்தான், நினைத்ததை நிறைவேற்றிக் காட்டுகிறோம் பார் என்று அறைகூவல் விடுப்பது போல திருவாரூர்-திருச்சி சாலைகளில் தீரர் படை வரிசையை நிறுத்திக் காட்டி முகிலைத் தாண்டியும் வானைத் தொடுகிற முழக்கத்தை எழுப்பினாய்!

அதனால்தானே அண்ணா சொல்லிக் கொண்டிருந்தார்; "வெட்டி வா என்றால் கட்டி வரும் தம்பிகள்" என்று உன் படை வரிசையைப் பார்த்து!

விழுப்புரம் மாநாடுதான் என்ன சாமான்யமா? அதையும் விஞ்சிடும் வகையில் நடத்திக் காட்டுகிறோம் பார் என்று, நீ விரல் நீட்டி விழியசைத்து விருதுநகர் நோக்கிக் காட்டுவது எனக்குப் புரியாமல் இல்லை.

ஆம், உடன்பிறப்பே! இப்படி நீ அறைகூவல் விட்டு அவற்றை நிறைவேற்றிக் காட்டித்தானே என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருக்கிறாய்.

தேர்தல் நிதி சேர்க்கச் சொன்னேன் -

தேங்கி நின்றிடும் ஓடையாகவா ஆனாய்?

அப்படி நீ நின்றிருந்தால் - உயிரோட்டமே இருக்காதே இந்த இயக்கத்துக்கு!

தேங்கி நிற்கவில்லை,

ஓங்கி ஒலித்தது, உன் குரல்!

“இதோ வாங்கிக் கொள்” எறும்புகளாய் நாங்கள் சேர்த்த நிதியென்று எடுத்துக் கொடுத்தாய்!

இந்தக் கழகம் வளர நீ உழைக்கும்போதெல்லாம்

எத்தனை இடையூறு -

எத்துணை இன்னல் -

எவ்வளவு தடைகள் -

எங்கெல்லாமிருந்து நரிகளின் ஊளை -

நயவஞ்சகர் விமர்சனங்கள் -

அவற்றையெல்லாம் ஒரு அலட்சியப் புன்னகையால் புறந்தள்ளி விட்டு -

உன் புனிதப் பயணத்தைத் தொடர்ந்திடு -

புரட்சிப் பயணத்தை நடத்திடு -

என்று நமது அண்ணன் சொன்ன வாசகத்தை அணுப்பொழுதும் மறவாமல், நாம் ஆற்றுகின்ற இந்த அறவழிப் பயணத்திற்கு வெற்றியே தவிர வீழ்ச்சியே இல்லை.

அப்படியே வீழ்ந்தாலும், “வீழ்வது நாமாக இருப்பினும்; வாழ்வது தமிழாக இருக்கட்டும்” என்ற நமது வீர முழக்கத்திற்கு வீழ்ச்சி என்பது எப்படி நிரந்தரமான ஒன்றாகிவிடும்.

ஆகாது! ஆக விட மாட்டோம் எனப் புறப்பட்டுள்ள அரிமாக்களாம் என் தம்பிமார்கள் இதோ அணி வகுத்துவிட்டார்கள்! விருதுநகர் மாநாட்டுக்காக மட்டுமல்ல! விரைவில் வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறப் போகும் விழாக் கோலம் காண்பதற்காகவும் - அதற்கென ஜனநாயகக் களம் இறங்குவதற்காகவும் அணிவகுத்து விட்டார்கள்.

அந்த மாநாட்டில் நமது கூட்டணித் தளகர்த்தர்கள் - கூட்டணிப் போர் வீரர்கள் - அனைவரும் குழுமிட அவர்களுக்கு மத்தியில் தேர்தல் அறிக்கையும் - தேர்தல் களமிறங்கும் வேட்பாளர்கள் பட்டியலும் வெளி வரும்.

அந்த எழுச்சியில் சங்கமித்திட அழைத்திடுகிறார் அருமைத் தம்பி கே.கே.எஸ்.எஸ்.ஆர்.

அவருடன் இணைந்து நானும் அழைக்கிறேன்.

பாசமுள்ள உடன்பிறப்பே!

பயணத்திற்குத் தயாராகிடு -

பத்திரமாக வந்து திரும்பிடவேண்டுமென்று மெத்தவும் உருக்கமுடன் உனக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

30-1-2004

3026. அஞ்சற்க; அத்தனை தொகுதியிலும் நமக்கே வெற்றி!

உடன்பிறப்பே,

தி.மு.க., காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய ஏழு கட்சிகளுடன் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தொகுதி உடன்பாட்டுக்குரிய பேச்சுவார்த்தைகள் நிறைவுற்று போட்டியிடுவதற்குப் பகிர்ந்துகொள்ளப் பட்ட தொகுதிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டு, இன்னும் அந்தத் தொகுதிகளில் கட்சிகளின் சார்பில் வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்படாவிட்டாலுங்கூட, அந்தத் தொகுதிகளில் நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் சார்பில் நிற்கும் கட்சிகளின் தேர்தல் சின்னங்கள் வண்ண வண்ண ஓவியங்களாக ஒளிவிடத் தொடங்கிவிட்டன.

இப்போது நடக்க இருப்பது நாடாளுமன்றத் தேர்தல்தான். சட்டப் பேரவைத் தேர்தல் அல்ல! சட்டப் பேரவைத் தேர்தல் என்றால் 234 தொகுதிகளில் கட்சிகளுக்கான பங்கீடுகளும், போட்டியிடுவோர் எண்ணிக்கையும் பெரும்பாலும் மன நிறைவு கொள்ளத்தக்க வகையிலே அமையும். நாடாளுமன்றத் தேர்தல் என்கிறபோது, மொத்தமே புதுச்சேரியையும் சேர்த்து 40 தொகுதிகள்தான் - அந்த 40 தொகுதிகளை 7 கட்சிகள் பங்கிட்டுக் கொள்வதென்றால்; குறைந்த எண்ணிக்கை கொண்ட தொகுதிகளே சில கட்சிகளுக்குக் கிடைக்கக் கூடும். சென்ற தேர்தலில் 18 தொகுதிகளில் போட்டியிட்ட தி.மு.க., இந்தத் தேர்தலில் 15 தொகுதிகளில் மட்டுமே போட்டியிடுகிறதென்றால், இதிலிருந்தே உண்மை நிலவரம் விளங்காமற்போகாது.

ஏழு கட்சிக் கூட்டணிக்குப் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி கிடைத்தால் போதும் என்ற பொது நோக்குடன், இந்தத் தேர்தலை எதிர்கொள்ளுவதுதான், பிற்போக்கு சக்திகளை பின்னுக்குத் தள்ளிட வழிவகுக்கும் என்பதை மறவாமல்,

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கட்சிகளும், கட்சிகளின் வேட்பாளர்களும், பணியாற்றும் செயல்வீரர்களும், வாக்களிக்கும் பெருமக்களும் பரந்த உள்ளத்துடன் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்வது என் போன்றோர் கடமையாகும்.

18 தொகுதிகளில் முன்பு போட்டியிட்டு, இப்போது அவற்றில் 3 தொகுதிகளில் போட்டியிட இயலாமற் போய்விட்டதை எண்ணி வேதனைப்படுவதோ, அந்த வேதனையை வெறுப்பாக வளர்த்துக் கொண்டு, அந்தத் தொகுதியில் போட்டியிடும் நமது கூட்டணிக் கட்சி வேட்பாளருக்கு ஒத்துழைப்பு தராமல் இருப்பதோ, பொதுவில் எந்தவொரு கட்சிக்கும் ஏற்புடைய பண்பாடல்ல! அதிலும் குறிப்பாக தி.மு.க.வைப் பொறுத்தவரையில், ஒரு தொகுதிக்காக வாதாடிப் போராடி, கடைசியாக அந்தத் தொகுதி வேறு ஒரு கட்சிக்கு ஒதுக்கப்பட்டு விட்டால், அவரும் நமது வேட்பாளரே என்ற நல்லுணர்வுடன், பொது எதிரியை வீழ்த்துகிற குறிக்கோளை நிறைவேற்றுவதிலேயே உடன்பிறப்புகள் கண்ணுங்கருத்துமாக இருப்பார்கள். அப்படித்தான் தி.மு.க.வில் மட்டுமல்ல, தி.மு.க. தலைமையிலான இந்தக் கூட்டணியில் உள்ள கட்சிகளின் முன்னணியினரும், முற்போக்குச் செயல் வீரர்களும் இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிற உரிமையும் எனக்கு இருப்பதாகவே நம்புகிறேன்.

நமது ஒப்பற்ற ஒற்றுமை உணர்வை -
உடன்பாட்டுச் செயல்பாட்டை -
எப்படியாவது குலைக்க வேண்டுமென்று
சில தீய சக்திகள் படாதபாடு படுகின்றன -
பத்ரகாளி ஆட்டம் ஆடுகின்றன -

பல்லக்குத் தூக்கிகளாக இருக்கிற சிலரைத் தூண்டிவிட்டு, நமது கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கிடையே குழப்பத்தை உண்டு பண்ணலாமா? குடுமி பிடிச் சண்டையை இழுத்து விடலாமா? எனத் திட்டமிட்டு -

"ஆகா! அந்தத் தொகுதி - அவ்வளவு பாரம்பரியமிக்க தொகுதி - இதுவரை தோல்வி காணாத தொகுதி - அதைக் கொண்டுபோய்

கொடுத்துவிட்டார்களே! அதைக் கண்டித்து இந்தக் கட்சி ஆர்ப்பாட்டம் - அந்தக் கட்சி ஆர்ப்பாட்டம் -

என்றெல்லாம் செய்திச் சரடுகளை விட்டு, ஏதாவது கலவரம் மூண்டிடாதா? நாம் குளிர்காய்வதற்கு நெருப்பு கிடைக்காதா" என நெஞ்சைப் பிசைந்து கொண்டிருக்கிறது, நஞ்சினும் கொடிய ஒரு கூட்டம்!

அந்த வஞ்சக வலையில் வீழாதிருந்தால் - அஞ்சற்க; அத்தனை தொகுதிகளிலும் நாமே மகத்தான வெற்றிபெற இருக்கிறோம்.

அந்த வெற்றியின் வெளிச்ச ரேகையை முன்கூட்டியே கண்டு விட்டுத்தான், வெகு கோடி ரூபாய்களை ஆகாத திட்டங்களுக்கு இப்போதே அள்ளிவிடப் போவதாக, அனுதினமும் பக்கம் பக்கமாக சாதனை விளம்பரங்களை ஏடுகள் கொள்ளாத அளவுக்கு வழங்கி வருகிறது, வடக்கேயுள்ள வாஜ்பய் அரசு!

அந்தத் திசையிலிருந்து தென்திசைக்கு வருவது வாஜ்பய் ஆனாலும் அல்லது பா.ஜ.க. தலைவர்கள், அமைச்சர்கள் ஆனாலும் அவர்களைக் காவேரி வட்டாரத்து மக்கள் வாக்கு கேட்க அனுமதிக்க மாட்டார்கள்! அடித்து விரட்டுவார்கள் என ஜெய லலிதா கொடுக்கிய சவுக்கின் ஒலி இன்னமும் சட்டப் பேரவையில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. அந்த ஒலி முழக்கம் முற்றாக ஓய்ந்திடவில்லை! அந்த ஓங்காரத் தொனியின் ஆங்காரம் அறவே அடங்கிடவில்லை;

விரட்டச் சொன்னவரும் -

விரட்டப்பட வேண்டுமென அடையாளம் காட்டப்பட்டவரும் ஓரணியில் வருகிறார்கள்.

கொளப்பாக்கத்தில் கூட்டப்பெற்ற அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் அக்கட்சியின் தலைவியார், வரப்போகிற நாடாளுமன்றத் தேர்தலில் எப்படிப் பிரச்சாரம் செய்யவேண்டுமென்று தன் கட்சியினர்க்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

"இந்தியர் ஒருவர்தான் பிரதமராக வேண்டும்" - இப்படிப் பேசுங்கள் என்று கட்டளையிட்டுள்ளார்.

வாஜ்பயைப் பிரதமராக ஏற்க மாட்டேன் என்று வாய் கிழிய முழங்கியவர், இப்போது அத்வானியை மனதில் வைத்துக் கொண்டு இந்தியர் ஒருவர்தான் பிரதமராக வேண்டுமென்று இன்று ஜாலம் செய்வது எல்லோருக்கும் புரியத்தான் செய்கிறது.

"அயல்நாட்டு சோனியா காந்தி பிரதமராக வரக் கூடாது" - என்று பேசுமாறு தன் கட்சியினர்க்குப் பணித்துள்ளார் ஜெயலலிதா!

ஆனால் இதே ஜெயலலிதா, வாஜ்பய் ஆட்சியைக் கவிழ்த்து விட்டு, 1999 ஏப்ரல் மாதம் டெல்லியில் நடைபெற்ற ஒரு விருந்தையொட்டி, சோனியா காந்தியை அவரது வீட்டுக்கே சென்று சந்தித்ததும் - அவர் தலைமையில் மத்தியில் மாற்று ஆட்சி அமையக் கருத்துக் கூறியதும், கனவுமல்ல - கட்டுக்கதை யுமல்ல - பத்திரிகைகளில் அப்போதே படங்களுடன் வெளிவந்த ஆதாரபூர்வமான தகவல்கள்.

அன்றைக்கு ஏற்பட்ட அரசியல் அந்நியோன்னியத்தில் சோனியா காந்தி அந்நியர் என்பது கண்ணுக்குத் தெரியவில்லை. கருத்துக்கு எட்டவில்லை. இப்போது ஜெயலலிதா கண்டுபிடித்து விட்டார்!

நம்மைப் பொறுத்தவரையில், நாம் என்றைக்குமே சோனியாவை இந்தியாவுக்கு வந்த மருமகள் என்றே ஏற்றுக் கொண்டவர்கள்.

இரு கட்சிகளுக்குமிடையே உறவு இருந்தாலும் இல்லாவிடினும் எந்த நேரத்திலும், அந்நிய நாட்டுக்காரர் என்ற அநாகரிக விமர்சனத்தில் நாம் ஈடுபட்டதில்லை.

ஜெயலலிதாவின் கொளப்பாக்கம் பேச்சு குறித்து, இன்னும் பல விளக்கங்களும், பதில்களும் நம்மிடம் தயாராகவே இருக்கின்றன - ஆனால் நாம் இந்தத் தேர்தல் யுத்தத்தில், அந்த அஸ்திரங்களைப் பயன்படுத்துவதைக் குறைத்துக் கொண்டு, மத்திய மாநில அரசுகளின் மக்கள் விரோதச் செயல்களை மட்டுமே, நிர்வாகச் சீர்கேடுகளை மட்டுமே, நேர்மைக் குறைவுகளை மட்டுமே; நீதிக்குப் புறம்பான காரியங்களை மட்டுமே பொதுமக்கள் முன் எடுத்து வைக்க இருக்கிறோம்.

அணிகள் மாறி வருவது அரசியலில் விநோதமான செயல் அல்ல! ஆனால் ஒன்று - அந்த அணிதான் பொருத்தமான அணி

- சேர வேண்டிய அணி - சேர்ந்து விட்ட அணி - ஆம்! இயற்கை எப்படியோ, நமது அணியிலும் பொருத்தமானவர்களே இடம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்திவிட்டது.

ஆம்! நாம் முற்போக்கு அணி - எதிரே வருவது பிற்போக்கு சக்திகளின் அணி - அணிகளின் படை வரிசைகளில் நபர்கள் அல்லர் முக்கியம்!

நாடு முக்கியம்!

நமது சமுதாயம் முக்கியம்!!

“மத நல்லிணக்க வரலாறு படைப்போம்

மதச் சார்பற்ற ஆட்சி அமைப்போம்”

என்ற குறிக்கோளுக்காக கொடி உயர்வது முக்கியம்!

அதை உணர்ந்து - குறுக்கே பாயும் குள்ள நரிச் சேட்டைகளைக் கடந்து - குறி தப்பாமல் - நெறி பிறழாத வெற்றிகளைக் குவிப்போம் வாரீர்! வாரீர்! என கூட்டணி உடன்பிறப்புகளை அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

6-2-2004

3027. புதிய அவதாரம் புறப்படும்!

உடன்பிறப்பே,

மாற்றாரை அச்சுறுத்தும் ஆட்சிகளைப் பார்த்திருக்கிறோம்.

அவர்களை மண்ணோடு மண்ணாக்கி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் என்று மார்தட்டும் ஆட்சியினைப் பார்த்ததுண்டா?

தவறு செய்தாய் என்று தண்டனை வாங்கித் தந்த ஆட்சிகளைப் பார்த்திருக்கிறோம்.

தண்ணீரில் விழுந்தவர் தலையில் பாறாங்கல்லையும் தூக்கிப் போட்டு தண்டனைக்கு மேல் தண்டனை வாங்கித் தரத் தவித்திடும் ஆட்சியைப் பார்த்ததுண்டா?

நீதிமன்றம் கருணை காட்டினாலும், சட்டப்படி நடந்ததை எதிர்த்துச் சவால்விட்டு, எதிரிக்குச் சமாதி கட்டும் வரையில் மனச் சாந்தியில்லை எமக்கு என்று மேலும் மேலும், வதைக்க வாள் தூக்கும் வஞ்ச நெஞ்ச ஆட்சியின் வால் நறுக்கும் வலிமைதனை மக்கள் சக்தி பெறுங் காலம் வராமலா போய்விடும்!

அந்த வரலாற்றுண்மை அறியாத அந்தகர்கள்
எவர் ஆட்சி நடத்தினாலும் -
பழிவாங்கும் கொடுமை,
பாவையர் ஓலம் -
பச்சிளங்குழந்தைகள் பரிதவிப்பு -
இப்படித்தான் அமையும் காலம்!

சொந்தத் தகராறு - சமுதாயப் பிரச்சினையுமல்ல! நாட்டுப் பிரச்சினையுமல்ல! தனிப்பட்ட விவகாரம் - நாதியற்றுப் போகிறாள் ஒரு பெண் - ஒரு பெண்ணா? அப்படி எத்தனை பெண்கள்? ஒரு பெண், சில காவலர்கள் மத்தியில் மலராய்க் கசங்குகிறாள் - நடு வீதியில் ஒரு பெண்ணிடமிருந்து கணவனைப் பிரித்துக்

கையில் குழந்தையுடன் அவள் கண்ணீர் மழையில் நனைவதைக் கண்டு ரசிக்கிற ஆட்சியாளர்களும் இருக்கிறார்கள் - தன்னை எதிர்ப்போரைத் துடிக்க விட பழைய விவகாரங்களைத் தூசி தட்டி எடுத்துப் பயமுறுத்தும் படலம்! இவைகள் எதேச்சாதிகார ஆட்சிகளில் சகஜம் என்றாலும்; இன்னும் இக்கொடூரங்கள் அனுமதிக்கப்படுகிற அநாகரிக அராஜகக் காலத்திலா வாழ்கிறோம்?

எனை நத்திக்கிட! உனை உட்கார வைப்பேன் என் பக்கத்தில் - சற்று சுயமாகச் சிந்திக்கத் தொடங்கினாயானால் சித்ரவதைக்காளாவாய் - சீ! சீ! என்று இகழப்படுவாய் - என எச்சரித்து எரிதழற் கண்களால் சுட்டுப் பொசுக்கிய ஆட்சி அதிபர்கள் ஆயிரம் ஆயிரம் பேர்! அவரெல்லாம் என்ன ஆனார்? எங்கே போனார்?

சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் மட்டந்தான் என்று சவால் விட்டு, தமது புகழைச் சாவில் நட்டவர்கள் சரித்திரத்தில் இன்னமும் வாழ்கிறார்கள் என்றால், அவர்கள் எல்லாம் அடிமைகளாய் - அடிவருடிகளாய் தசை வளர்க்க எண்ணிடாத தன்மான வீரர்கள் என்பதை அந்த நடு கற்களுக்கு நாக்கு முளைத்து நாற்றிசையும் முழங்குகின்றன.

அதிகபட்சம்,
அரசை எதிர்ப்பவர்களை -
அரசு என்பதற்காகக் கூட அல்ல!
அரசின் அவலட்சணங்களை -
அதிகாரக் கோணல்களை -
அநியாயச் சேட்டைகளை -
நீதிக்குப் புறம்பான நாசகாரியங்களை -
எதிர்ப்பவர்களை -

ஜனநாயக நெறி மறந்த சட்டத்தின் ஆட்சியல்லாத ஓர் ஆட்சியாக இருந்தாலும், அந்த ஆட்சி கூடச் செய்யத் துணியாத தகாச் செயல்களை தருமச் செயல்கள் போலச் செய்வதும், அவற்றையும் தலையில் தாங்கும் அப்பாவிகளைக் குனியக் குனியக் குட்டுவதுமான ஆட்சிகள் பல வரலாற்றில் வந்துபோயின - ஆயினும் சாகாவரம் பெற்றதாகச் சில ஆட்சிகள்

எண்ணிக் கொண்டு சல்லடம் கட்டி நிற்பதுதான் விந்தை! விந்தை! விந்தையினும் விந்தை!

இப்படி இழுத்தடிக்கிறார்களே என்று நீதிமன்றப் படிகளில் தட்டுத் தடுமாறி ஏறி ஏறி மூச்சிறைக்க முடங்குகிற ஆடவர் - பெண்டிர் செய்த குற்றம்தான் என்ன? கைது செய்தவர்களுக்கே காரணம் தெரியாது என்ற நிலையில் எத்தனை ஆட்சிகள்? அத்தனை ஆட்சிகளையும் மொத்தக் குத்தகை எடுத்துக் கொண்டது போல ஆரவாரமிக்க அநியாயம் புரிந்தால், அதைத் தட்டிக் கேட்க ஆண்டவனா அவதாரம் எடுக்கப் போகிறார்!

அவர்தான் துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்யப் பத்து அவதாரம் எடுத்துவிட்டு அத்துடன் நிறுத்திவிட்டாரே!

எனவே எந்த ஆட்சியின் அலங்கோல அகங்காரமாயினும் அதனை எதிர்த்து நிறுத்த,

மக்கள் சக்தி எனும்

புதிய அவதாரம் புறப்பட்டே தீரும்.

அன்புள்ள,

மு.க.

9-2-2004

3028. குறிக்கோளை நினைத்தால்; குழப்பம் நிலைக்காது!

உடன்பிறப்பே,

பாரதப் போரில் அறநெறிக் காவலன் என்று போற்றப்பட்ட தர்மனுக்கே ஒரு தர்மசங்கடம் ஏற்பட்டு, அவனையுமறியாமல் அவன் செய்த தவறு காரணமாக பாண்டவர்கள் பக்கம் வெற்றி வந்து சேர்ந்ததாக ஒரு நிகழ்ச்சிச் சேர்க்கை கூறப்படுகிறது.

பாண்டவர், கௌரவர் இருசாராருக்கும் போர்ப் பயிற்சி அளித்த குருநாதர் துரோணர். அவர் பாரதப் போரின்போது கௌரவர் பக்கம் இருந்தார். வித்தை கற்பித்த ஆசானையே வீழ்த்துவது பாண்டவர் களுக்கு எளிதாக இல்லை. எனவே, யுத்த களத்தில் நிற்கும் அவர் மனத்தில் அளவற்ற சோகத்தை விளைத்து, அந்தச் சமயம் பார்த்து அவரை வீழ்த்தச் சூழ்ச்சி வலை பின்னப்பட்டது.

துரோணரின் மகன் அசகாய சூரனான அசுவத்தாமன் போர்க் களத்தில் உயிர் துறந்தான் என்று ஒரு பொய்ச் செய்தியைப் பரப்புவதற்கு, பாண்டவர் தரப்பு திட்டமிட்டது. இந்தப் பொய்யை துரோணர் நம்பவேண்டுமே! அதற்காக உத்தமன் என்று பெயர் எடுத்த தர்மன் வாயிலாக அந்தச் செய்தியை வெளியிட்டனர்.

'அசுவத்தாமா' என்ற யானை கொல்லப்பட்டதை, 'அசுவத்தாமன்' என்ற துரோணரின் மகனே கொல்லப்பட்டது போல, தர்மனின் வாயினால் சொல்லும்படி செய்தார்கள். பரமாத்மா கிருஷ்ணன் மிகப் பக்குவமாக அதைச் செய்து முடித்தார். பொய்ச் செய்தி என்று தெரியாமல் தர்மனும், அந்தச் செய்தியைப் போர்க்களத்தில் பரப்பி, அதன் காரணமாக சோகத்தில் துரோணர் மயங்கி விழுந்திட - அந்த நேரம் பார்த்து விஜயன் அவரை வீழ்த்தினான் என்கிறது பாரதக் கிளைக் கதை!

போரில் எப்படியும் அறநெறி தவறிக்கூட வென்றிட வேண்டுமென்பதற்காக, நீதி நெறி தடுமாறாத தர்மனே தடுமாறினான் - என்பது போலத்தான், அரசியலில் - அரசு

நடத்துவதில் - ஜனநாயகம் காப்பாற்றுவதில் - அசல் தர்மனாகவே காட்சி யளித்துக் கொண்டிருந்த பாரதப் பிரதமர் வாஜ்பய் அவர்கள், நாடாளுமன்றத் தேர்தல் போரில் எப்படியும் ஜெயிக்க வேண்டுமென்று பா.ஜ.க.வினரின் இஷ்டத்துக்குத் தலையசைத்துக் கொண்டிருக்கிறார்.

தேர்தலில் மக்களிடத்தில் தனது அரசின் சாதனைகளை மட்டுமல்லாமல் - திட்டக்குழுவின் சாதனைகளையும் - கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக பல கோடி ரூபாய்களை வாரியிறைத்துப் பக்கம் பக்கமாக, மக்களின் வரிப் பணத்திலேயே விளம்பரம் செய்வதை, எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற இரு அவைகளிலும் சுட்டிக்காட்டியும்கூட, நம்மைப் போன்றோர் நயம்பட எடுத்துச் சொல்லியும் கூட, அதைப் பிரதமர் வாஜ்பய் அலட்சியப்படுத்திவிட்டு, அரசின் சார்பில் அந்தக் காரியம் அனுதினமும் நடந்திட அனுமதித்துக் கொண்டிருக்கிறார்.

இது போர்க்களத்தில் தர்மராஜன், யுத்த தர்மம் தவறி பொய் சொன்னதற்கு அல்லது பொய் சொல்லுமாறு செய்யப்பட்டதற்கு நிகரான காரியம் என்பதை எவரும் மறுக்க இயலாது.

இதோ! தலைமைத் தேர்தல் ஆணையத்தின் புதிய தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் - என்ன உத்தரவிட்டிருக்கிறார்? பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, இப்போது அவர் புதிய தலைவராகப் பொறுப்பேற்றதும் திட்டவட்டமாக அறிவித்திருப்பது என்ன?

ஏடுகளில் வெளிவந்துள்ள வாசகத்தை அப்படியே எழுத்துப் பிசகாமல் இதோ குறிப்பிடுகிறேன்.

“ஓர் அரசியல் கட்சியின் தேர்தல் ஆதாயத்துக்காக, மக்களின் வரிப் பணத்தைச் செலவிடக் கூடாது. தேர்தல் அறிவிக்கப்படாவிட்டாலும், இப்போதே அரசியல் கட்சிகள் தேர்தல் நடத்தை விதிகளைப் பின்பற்ற வேண்டும்”

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது; “மக்களின் வரிப் பணத்தைச் செலவிடக் கூடாது” என்பதாகும். வரிப் பணத்தை செலவிடக் கூடிய கட்சிகள், வாஜ்பய் தலைமையில் உள்ள - அதே போல ஜெயலலிதா தலைமையில் உள்ள கட்சிகள்தான் - சில மாதங்களாகவே தேர்தலை முன்னிட்டு மத்திய மாநில

அரசுகள்; அதிலும் குறிப்பாக மத்திய அரசு, குமரி முதல் இமயம் வரை உள்ள எல்லா மொழிப் பத்திரிகைகளிலும் முழுப் பக்கங்கள் விளம்பரங்கள் செய்திட, பக்கத்துக்குப் பல இலட்ச ரூபாய் கட்டணம் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால், துரோணரை வீழ்த்த பாரதத்தில் தர்மரைப் பயன்படுத்திக் கொண்டது போல - அல்லது தர்மரே பயன்பட்டது போல பிரதமர் வாஜ்பய் பயன்படுகிறார் என்பதும், தேர்தல் ஆணையத் தலைவரின் கூற்றுப்படி, மக்களின் வரிப் பணம் அரசியல் கட்சியின் தேர்தல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்தப்படக் கூடாது என்ற அறநெறிக்கு மாறாக - அரசியல் தர்மத்துக்கு விரோதமாக - நடைபெறுவதை நம்மால் காண முடிகிறது.

“மங்கை சூதகமானால் கங்கையில் முழுகலாம்;
கங்கையே சூதகமானால் எங்கே முழுகுவது?”

என்று தேவர் திருமகன் முத்துராமலிங்கனார் அடிக்கடி கேட்பாரே! அது போல - வாய்மை, நேர்மை பற்றி வாய்கிழியப் பேசுகிறவர்கள் ஆட்சியிலேயே இப்படித் தேர்தல் விதிமுறைகள், திட்டமிட்டு மீறப்படுகிறதென்றால், விழித்துக் கொண்டுவிட்ட தேர்தல் ஆணையம் இதனைத் தடுத்திடும் வினையினை இனிமேலாவது ஆற்றுமா என்று, வியப்புடன் வினவுகிறோம்.

உடன்பிறப்பே!

இப்போது நான் உடன்பிறப்பே என விளிப்பது உன் போன்ற கழக உடன் பிறப்புகளை மட்டுமல்ல; நமது கூட்டணிக் கட்சிகளில் இடம்பெற்றுள்ள - ஆதரவு வழங்குகிற எல்லாக் கட்சி உடன்பிறப்புகளுக்கும்தான் இந்த முக்கியமான வேண்டுகோளை விடுக்கிறேன்.

ஏற்பட்டுள்ள தொகுதி உடன்பாடுகளில், எங்கோ ஒரு சில இடங்களில் மன நிறைவு இல்லை என்று வரும் செய்திகள் இந்த மகத்தான கூட்டணியில் சிக்கலைத் தோற்றுவிக்காதா? அதனால் கூட்டணி சிதறுண்டு போகாதா? எனக் கனவு காண்கிறார்கள் எதிர்தரப்பினர்! நமது ‘கை’ விரலைக் கொண்டே நமது கண்களை நாமே குத்திக்கொள்ள விபரீதத் திட்டம் தீட்டுகிறார்கள்.

அதற்கு நமது அணியின் முன்னோடிகளோ, செயல்வீரர்களாம் என் அருமை உடன்பிறப்புகளோ பலியாகிவிடக் கூடாது எனப் பணிவன்புடன் - பரிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு வரலாறு இருக்கிறது - குறிப்பாகச் சில தொகுதிகள், கடந்த தேர்தலில் வேறு கட்சி நின்று வென்ற தொகுதியாகக் கூட இருப்பதை மறுக்க இயலாது - இப்போது நாம் நிற்கிறோம் என்றால் நமது கூட்டணியின் ஒரு கட்சி வேட்பாளர்தான் நிற்கிறார்.

மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்று, பிரதமர் பதவிக்கு திருமதி சோனியா காந்தி அம்மையார்தான் வரவேண்டுமென்பதில் மாறுபட்ட கருத்து எதுவுமில்லாத கட்சிகளுடன் அணிவகுத்து, இந்த முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் நிற்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது! அப்படி மறந்து விட்டு, அந்தக் கட்சிகளை மாற்றுக் கட்சிகளாக மதிப்பிடுவது நமது ஒட்டுமொத்த வெற்றிக்கு உகந்த மார்க்கமாகாது!

திருமதி சோனியா காந்தி பிரதமராக வேண்டுமென்பது குறிக்கோளாக இருக்கும்போது, அந்தக் குறிக்கோள் நிறைவேற ஒத்துழைத்து, ஓரணியில் திரண்டுள்ள கட்சிகளுக்குள் வேற்றுமை விதைகளைத் தூவுவது - பொதுவான குறிக்கோளுக்குத் தடையாகக் குறுக்கிட்டு விடக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிவிடும். அவ்வாறு உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பது ஒவ்வொரு உடன்பிறப்பின் கடமையுமாகும்.

பிரச்சினைகளைக் கிளப்புவோர் ஒரு புறமிருக்க, அந்தப் பிரச்சினைகளில் தங்களைச் சிக்க வைத்துக் கொள்வோர் சிந்திப்பதற்காக ஒன்று சொல்கிறேன்!

திருமதி சோனியா காந்தியை அந்நிய நாட்டினர் என்று கூறி, அவர் பிரதமராகக் கூடாது என்று ஓர் அணி தேர்தல் களத்தில் நிற்கிறது.

அந்த விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளாமல் தேர்தல் களத்தில் முன்னேறுகிறது நமது அணி.

இரு அணிகளில் எந்த அணி வெற்றிபெற வேண்டும்;

நாம் இரு அணிகளில் எந்த அணியில் இருக்கிறோம்?

என்பதை உறுதி செய்து கொண்டால், நாமிருக்கும் அணிக்குள் சிறு கசப்பும், காழ்ப்பும் ஏற்படாமல்,

ஆட்சிக்கு வந்தவுடன் அயோத்தி குழப்பத்தை ஏற்படுத்த ஆயத்த முழக்கம் செய்யும் மதவெறி அரசியலுக்கு முடிவுகட்டி,

புதிய மத நல்லிணக்க வரலாறு படைத்து

மதச் சார்பற்ற ஆட்சி அமைத்திட -

மக்கள் பிரச்சினைகளைக் கண்போல, கண்ணின் இமைபோலக் கவனித்து, அவர்களைக் காத்திட,

காலம் கனிந்து வருகிறது.

ஒற்றுமை உணர்வுடன் செயல்பட்டு -

நாடு நலம் பெற சூளுரைத்துப் புறப்படுக என அழைக்கிறேன்.

இது, எல்லா உடன்பிறப்புகளுக்கும் நான் விடுக்கும் இனிய அழைப்பு!

அன்புள்ள,

மு.க.

10-2-2004

3029. விவாதிக்கத் துணிவில்லை; வீறாப்புக் குறையவில்லை!

உடன்பிறப்பே,

2001-2002, 2002-2003, 2003-2004 ஆகிய மூன்று நிதி நிலை அறிக்கைகளில் மொத்தம் 1,200 கோடி ரூபாய்க்கான வரிகளை மக்கள் மீது சுமத்தி விட்டு, தி.மு.க. ஆட்சியில் விலக்களிக்கப்பட்டிருந்த பொருள்களுக்கெல்லாம் வரியை மீண்டும் விதித்து விட்டு - வணிகப் பெருங்குடி மக்கள் பெரிதும் வரவேற்று மகிழ்ந்திருந்த ஒரு முனை வரி என்ற நிலைப்பாட்டைத் தகர்த்து, பல முனை வரிகளை மறுபடியும் கொண்டு வந்து விட்டு - இப்போது ரூபாய் 140 கோடிக்கு வரிச் சலுகை அளிப்பதாக 2004-2005க்கான இந்த நிதிநிலை அறிக்கையிலே பெரிதாகப் பீத்திக் கொண்டிருக்கிறார்கள். 1969ஆம் ஆண்டு முதலமைச்சராக நான் பொறுப்பேற்று, அவையில் வைத்த முதல் நிதிநிலை அறிக்கையே வரியில்லாத நிதிநிலை அறிக்கைதான்.

முக்கியமாக அறிவிக்கப்பட்டுள்ள ஒரு சத்துள்ள விஷயம், அதாவது நில வரி ரத்து 60 கோடி ரூபாய் இழப்பில் என்பதாகும்! இந்த நிலவரி ரத்து என்பதும் ஏற்கனவே கழக ஆட்சியில் செய்யப்பட்ட ஒன்றுதான்.

அதைக்கூட நிதிநிலை அறிக்கையிலே பொன்னையன் (நிதி அமைச்சர்) அவர்களைப் படிக்க விடாமல், அதையும் முதல்நாள் ஆளுநர் உரை விவாதத்திற்குப் பதில் அளித்தபோதே, முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களே பேரவையில் தெரிவித்து விட்டார்.

எனவே, பொன்னையன் அவர்களுக்கு மிச்சப்பட்ட அறிவிப்புகள், "எய்ட்ஸ்" நோய்க்கான மருந்துக்கு வரிச்சலுகை போன்ற ஒன்றிரண்டு விஷயங்கள்தான்!

ஆனால், அவருக்கு அதிர்ஷ்டவசமாக 79 பக்கங்கள் கொண்ட இந்த "பட்ஜெட்" உரையில் சுமார் 20 பக்கங்களில் 34 இடங்களில் முதல் அமைச்சர் ஜெயலலிதாவை "ஸ்தோத்திரம்" செய்யவும்,

குறிப்பாக 61ஆம் பக்கம், 62ஆம் பக்கம் ஆகிய இரண்டு பக்கங்களுமே, ஏறத்தாழ முழுமையாக ஜெயலலிதாவின் வீரதீரப் பிரதாபங்களை விவரிப்பதற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நானும் 1957 முதல் சுமார் 45 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகச் சட்டமன்றத்தில், உறுப்பினராக - கட்சிக் கொறடாவாக - எதிர்க்கட்சித் துணைத் தலைவராக - பொதுப்பணி அமைச்சராக - முதலமைச்சராக - பின்னர் எதிர்க்கட்சித் தலைவராக - அடுத்து முதலமைச்சராக - அதன் பிறகு எதிர்க்கட்சித் தலைவராக பல பொறுப்புகளை வகித்திருக்கிறேன்.

என்னையன்னியில், பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம், பேரறிஞர் அண்ணா, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். இவர்கள் எல்லாம் முதலமைச்சர்களாக இருந்த காலத்திலும் சரி! அதற்கு முன்பு பலர் முதலமைச்சர்களாக இருந்த காலத்திலும் சரி! ஆளுநர் உரை படிக்கும்போதோ அல்லது நிதிநிலை அறிக்கை படிக்கும்போதோ, ஏதோ ஓரிரு நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும்போது மட்டுமே முதலமைச்சரைப் பற்றிய சிறு குறிப்பு வருமேயல்லாமல், இப்படி அந்த உரைகளில் முதலமைச்சரைப் பற்றிய புகழ்ப் புராணம் பாடப்பட்டதில்லை.

இதோ இந்தப் பட்ஜெட் உரையில் உள்ள ஒரே ஒரு பகுதி, உதாரணத்திற்காக!

> “தமிழ்நாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுடைய அயராத கடும் உழைப்பினால் மட்டுமே மிகக் குறுகிய காலத்தில், எவ்வித உதவியுமின்றி வளர்ச்சி மற்றும் வளமை நோக்கிய பாதையில் நாம் வெகு வேகமாக முன்னேறியுள்ளோம். தமிழ் நாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களது நிலைமாறாத கடும் உழைப்பு இல்லை யெனில், 1996-2001 கால அளவில் நிதிநிலைச் சீரழிவு படுகுழியில் தள்ளப்பட்ட தமிழ்நாட்டை மீட்பதற்கு இயலாமல் போயிருக்கும். உண்மையான தலைவர் பாதகமான ஒரு சூழ்நிலையில்தான் தன்னை நிலைநிறுத்திக் கொள்வார். தமிழ்நாட்டு மக்கள் நலமும் வளமும் பெற வேண்டும் என்பதற்கான முயற்சிகளி லிருந்து சற்றும் வழுவாது, ஒவ்வொரு தடையையும் தாண்டி நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்

தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் முன்னின்று நம்மை வழிநடத்தி வருகிறார்கள்”

(2004-2005 பட்ஜெட் பக்கம் 61)

கீர்த்தியுரைக்கும் இந்தக் கீர்த்தனத்தின் தொடர்ச்சியாக, இதோ இந்தப் பட்ஜெட்டின் இறுதிப் பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குச் சேகரிப்புப் பணியும் இணைக்கப்பட்டுள்ளதையும் காண முடிகிறது. அதே 61ஆம் பக்கம் - 142 வது பாராவில்:

“தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக கடுமையான உழைப்பு மற்றும் முழு உறுதிப்பாட்டிற்குத் தக்க வெகுமதி மிக விரைவிலேயே கிடைக்க உள்ளது. தங்களது இன்ப துன்பங்களில் பங்கேற்று, இடர்ப்பாடுகளின்போது துணை நிற்கும் உண்மையான தலைவரை, நமது நீதிபதிகளாகிய பொதுமக்கள் தவறின்றி இனங்கண்டு கொள்வார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையில், தமிழ்நாடு பீடுநடை போடுகிறது என்று உலகளவில் தற்போது பாராட்டப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஒளி பொருந்திய, எழுச்சி மிக்க, தலைமையினால்தான் குறுகிய காலத்தில் இவை அனைத்தையும் சாதிக்க முடிந்தது”

உடன்பிறப்பே, பட்ஜெட்டில் சிறப்பு அம்சங்கள் இருப்பது போல சில பத்திரிகைகள் “பாவலா” காட்ட வேண்டிய இக்கட்டான சூழலில், அவைகளுக்கு இதையெல்லாம் விமர்சிக்க நேரமில்லை - அல்லது வீரமில்லை!

வேடிக்கையும், வேதனையும் என்னவென்றால், இந்தப் பட்ஜெட் மீது பேரவையில் விவாதமே கிடையாது என்று ‘பட்’ என்று பொட்டிலே அடித்தாற்போல சொல்லிவிட்டார்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே எதிர்க்கட்சித் தலைவர்கள் எவ்வளவோ வலியுறுத்திக் கேட்டும், தனித் தனி மானியக் கோரிக்கைகளை விவாதிக்காவிட்டாலும்கூட - பட்ஜெட்டிலே பொது விவாதத்திற்காவது ஒரு பத்து நாள் - பரவாயில்லை ஏழு நாள் - இன்னுங்கூட குறைத்து ஒரு ஐந்து நாளாவது ஒதுக்குங்கள் என்று, பாரதத்திலே பரந்தாமன் கௌரவர்களிடம், பாண்டவர்க்கு

ஐந்து நாடு கொடு அல்லது ஐந்து ஊர் கொடு அல்லது ஐந்து வீடாவது கொடு என்று முறையிட்டும் கூட, முடியாது என்று விடை வந்தது போலவே, பட்ஜெட் விவாதமே கிடையாது என்று இவர்களும் பதில் அளித்து விட்டார்கள்.

ஆனால் உடன்பிறப்பே! பட்ஜெட்டின் இறுதிப் பகுதியில் முடிவுரையாக 62ஆம் பக்கத்தில் நிதியமைச்சர் பொன்னையன் என்ன குறிப்பிட்டிருக்கிறார் தெரியுமா? இதோ அதையும் படித்துப் பார்!

> "மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்யும் வகையில், 2004-2005ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின்மீது ஆக்க பூர்வமான கருத்துகளை நான் வரவேற்கிறேன்"

இப்படியொரு வாசகத்தையும் நிதி அமைச்சர் பொன்னையன் கையொப்பமுடன் வரவு செலவு திட்டத்தில் வெளியிட்டுவிட்டு, ஆக்கபூர்வமான கருத்துகளைச் சொல்லி விவாதிக்க வாய்ப்பே இல்லாமல், "பட்ஜெட் படிப்போம்; ஆனால் விவாதமே கிடையாது" என்று தடை விதிப்பது என்ன ஜனநாயகமோ? என்ன கருத்து சுதந்திரமோ?

நல்ல பல திட்டங்கள் தி.மு.க. ஆட்சியில் நடைமுறைப் படுத்தப்பட்டதையெல்லாம், மெல்ல மெல்ல ஆனால் ஒரேயடியாக ஒழித்துவிட்டு - "நமக்கு நாமே" என்று அழகான பெயருடன் - அருமையான கருத்துடன் செயல்படுத்தப்பட்ட சிறப்பான திட்டத்துக்கு "நமது கிராமம்" என்று பெயர் மாற்றம் செய்திருப்பதைத் தவிர வேறெதுவும், ஏழை எளியோர்க்கு, வேலை இழந்த சாலைப் பணியாளர், மக்கள் நலப் பணியாளர், பழிவாங்கப்பட்ட அரசு அலுவலர் என்று பல்லாயிரக்கணக்கானோருக்கு எந்தப் பலனுமில்லை. மாநில பட்ஜெட்டைப் போலவே மத்திய பட்ஜெட்டும், வளர்ந்த பகுதிகளைக் கவனித்துக் கவலைப்படுபவையே தவிர, வளரும் பகுதிகளுக்கு வாய்ப்பானவை அல்ல! அல்லவே அல்ல! எனவேதான் இந்த 'பட்ஜெட்' பற்றி அவையில் விவாதிக்க அவர்களுக்குத் துணிவில்லை! ஆனால் வீராப்பு மட்டும் குறையவில்லை!

அன்புள்ள,

மு.க.

13-2-2004

3030. நாற்பது வேட்பாளர்களும் நம்மவர்களே!

உடன்பிறப்பே,

நடக்க இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு, மத நல்லிணக்க சமுதாய அமைப்பு உருவாக்குவதிலும், மதச் சார்பற்ற ஆட்சி அமைப்பதிலும் அக்கறையுடையதும், அவற்றையே குறிக்கோளாகக் கொண்டதுமான மகத்தான கூட்டணியொன்றைத் தமிழகத்தில் உருவாக்குவதில் வெற்றி பெற்றிருக்கிறோம். இந்த வெற்றி, தி.மு.க. என்ற ஒரு கட்சியின் சாதனை மட்டுமல்ல! இந்தக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பும் - ஆதரவு தரும் கட்சிகளின் ஆர்வமிகுந்த அக்கறையும்தான் இந்தக் கூட்டணி உருவானதின் முக்கியமான காரணங்களாகும்.

கூட்டணியொன்றைக் காண்பதும், அந்தக் கூட்டணியில் இடம் பெற விரும்புகிற கட்சிகளுக்கெல்லாம் வாய்ப்பு வழங்குவது என்பதும் எவ்வளவு சிரமமான காரியம் என்பதை அதனைச் செய்து பார்த்தால்தான் உணர முடியும்.

அதிலும் 40 நாடாளுமன்றத் தொகுதிகளை, விரும்புகிற கட்சிகளுக்கெல்லாம் பகிர்ந்து கொடுப்பதென்றால், சட்டமன்றத் தேர்தலில் பகிர்ந்து கொண்டது போன்ற எளிதான விஷயமில்லை. சட்டமன்றத் தேர்தலில் தொகுதிகளின் எண்ணிக்கை 234 என்கிற நிலையில், எல்லாக் கட்சித் தலைவர்களையும் திருப்திப்படுத்த முடிந்தது. இத்தனை இடங்களைக் கொடுத்து விட்டீர்களே என்று தி.மு.கழகத்து முன்னணியினர்தான் அதிருப்திக்கு ஆளானார்களே தவிர, தோழமைக் கட்சியினர் அனைவரும் திருப்தியுடனேயே தேர்தல் களம் இறங்கினர்.

சட்டமன்றத் தேர்தல் முடிவு, எதிர்பார்த்தவாறு அமையாமல் - எதேச்சாதிகார ஆட்சியொன்றுக்கு வழி வகுத்தது. அந்த ஆட்சியின் அடாவடித்தனங்களை, அராஜகங்களை, அடக்குமுறைகளை,

அனுபவித்து அல்லற்படும் மக்களுக்கு, "இருட்டில் அகல் விளக்கு" என்பது போன்ற ஆறுதல் அளிக்கக் கூடிய ஒன்றாக விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது.

இந்தத் தேர்தலில் - மத்திய ஆட்சி, உண்மையில் மதச் சார்பற்ற ஆட்சியாக அமையவும் - மத நல்லிணக்க வரலாறு படைக்கவும் - ஓர் தலைமை, பொறுப்பேற்க வேண்டுமென்றும் - அத்தலைமை காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கிற திருமதி சோனியா காந்தி அவர்களின் தலைமையென்றும் - முடிவெடுத்துள்ள கட்சிகளில் ஒன்றாக தி.மு.கழகம் திகழ்கிறது.

இந்நிலையில் தி.மு.க. தலைமையில், தமிழ்நாட்டில் உருவாகியுள்ள ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்குச் சிறு இடையூறும் விளையாமல், எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள்ள வேண்டிய முழுப் பொறுப்பும், காங்கிரஸ் கட்சிக்கு இருக்கிறதென்பதை ஒருசில காங்கிரஸ் நண்பர்களே மறந்துவிட்டுச் செயல்படுவதுதான் விந்தையாகவும், வேதனையாகவும் இருக்கிறது.

ஒரு காங்கிரஸ்காரர், அவர் போட்டியிட விரும்புகிற ஒரு குறிப்பிட்ட தொகுதியைக் காட்டிலும், கூட்டணியின் மூலம் எத்தனை தொகுதிகளில் வெற்றி பெற்றால் மத்தியில் ஆட்சி அமைப்பது சாத்தியமாகும் என்பதைப் பற்றியே சிந்திப்பவராக இருக்க வேண்டுமே தவிர, சிக்கல் எதுவும் ஏற்படுவதற்குக் காரணகர்த்தராக இருந்து விடக்கூடாது.

காங்கிரசுக்கு ஒதுக்கப்படாத ஒரு தொகுதியிலிருந்து ஒரு முக்கியமான நண்பர் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில், அந்தத் தொகுதியை காங்கிரசுக்கே ஒதுக்கினால் அதில் அவர் நிற்பதற்கு வாய்ப்பாக இருக்குமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

என்னைக் கேட்டால், அவர் எம்.பி. ஆவதற்கு தகுதியற்றவர் என்று சொல்லமாட்டேன் - ஆனால் அவர், மத்தியில் தனது கட்சியின் ஆட்சி, தனது தலைவியின் ஆட்சி அமைய வேண்டும் என்பதற்குத் தர வேண்டிய முக்கியத்துவத்தைத் தருவதற்கு மாறாக, தனது பிரச்சினையாக மட்டும் இதைக் கருதுகிறாரே, என்பதுதான் எனக்குள்ள வருத்தம் என்று கூற வேண்டியவனாக இருக்கிறேன்.

சுமுகமான முறையில் கூட்டணி அமைந்து விட்டதானது எதிரணியினர் சிலர் மனத்தில் 'சுருக்' என முள் குத்தியது போலாகி, ஏதாவது "சகுனி வேலை" மூலம் சங்கடத்தை ஏற்படுத்தவும், அதற்கான சதிகளில் ஈடுபடவும் எதிர் அணியினரைத் தூண்டுகிறது என்பதை நான் அறியாமல் இல்லை. அதற்குச் சிலர் பலியாவது கண்டு நான் மட்டுமல்ல, இன்றைய "தினமணி" 16-2-2004 இதழில் தலையங்கப் பக்கத்தில் பி.ஏ. சித்திக் என்ற நண்பர் எழுதியுள்ள கட்டுரைக் குறிப்பிலும் சுட்டிக் காட்டியிருக்கிறார். அதில் சில முக்கிய பகுதிகளை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

> "பதினான்காவது நாடாளுமன்றத் தேர்தலின் நுழைவு வாயில் என்று கருதப்பட்ட மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் இயக்கத்திற்கு ஏற்பட்ட தோல்வி, கடந்த ஐந்து ஆண்டுகளில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தனிப்பட்ட முறையில் உருவாக்கி வைத்திருந்த அவருடைய அரசியல் உருவகத்திற்கு ஏற்பட்ட தவிர்க்க முடியாத சிதைவு. இந்தச் சூழ்நிலையில்தான், தமிழ்நாட்டிலிருந்து தன்னுடைய அடுத்த கட்ட நடவடிக்கையை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காகத் தொடங்கினார் சோனியா காந்தி. தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகுவதாக டிசம்பர் மூன்றாம் வாரத்தில் தி.மு.கழகம் முகம் சிவக்க, அடுத்த வாரத்தில் தி.மு.க. தலைவருக்குப் புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்து, அவரது முகத்தில் புன்னகைப் பூக்களைப் படர விட்டார் சோனியா காந்தி.
>
> 1971 முதல் தமிழகம் - புதுவை உட்பட்ட நாடாளுமன்றத் தொகுதிகளில் காங்கிரஸ் அமைத்த கூட்டணி, 100 சதவீத வெற்றியைப் பல தருணங்களில் மிக எளிதாக அளித்துள்ளது. அதுபோல் இப்போதும் அமையும் என்பதே சோனியா காந்தி - கருணாநிதி முதல், ஜனநாயக முற்போக்கு அணி வரிசையினரின் சிந்தனையாக இருக்கிறது.
>
> எளிய அரசு நடைமுறைகளுக்குச் சாட்சியமாய், கல்வியின் மகிமை போதித்த, கல்லாத மேதையாய் விளங்கிய பாரதப் பெருந்தலைவர் காமராஜரின்

சிலையைத் திறந்து வைத்து, இன்றைய தமிழக நிலவரங்களைத் துல்லியமாகக் கணக்கிட்டு, விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள் பிரச்சினைகளைச் சொல்லி, சிக்கல்களைச் சீர்செய்ய உறுதிமொழியையும் சோனியா காந்தி மேடையில் வழங்கிக் கொண்டிருக்கும்போது "அந்தத் தலைவர் வாழ்க என்கிறது ஒரு கூட்டம். உடனே "இந்தத் தலைவர் வாழ்க என்கிறது இன்னொரு கூட்டம். We want Nagercoil என்கிற பதாகையை உயர்த்திப் பிடிக்கிறது இன்னொரு கூட்டம். கடைசி வரிசைகளில் இருந்து NUSI ஜிந்தாபாத் என்கிறது இன்னொரு கூட்டம்.

காங்கிரஸ் இயக்கத்தின் அனைத்திந்தியத் தலைவர் - தமிழ் மண்ணில் அவர் கால் பதிக்கும் நேரங்களிலெல்லாம் அவரின் விழித்திரைகளில் ஈரம் படிவதைத் தவிர்க்க முடியாத சோகப் பெண்மணி! இன்றைய நிலையில் தம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பை உணர்ந்து, மேடையில் அவர் கர்ஜித்துக் கொண்டிருக்கும்போது மனம் போனபடி கூச்சல் போடுவோர், நாளை எப்படித் தங்கள் தலைவியை அரியணை ஏற்றப் போகிறார்கள்?

நமது நாடாளுமன்றத்தைப் பயங்கரவாதிகள் தாக்கியபோது, பிரதமர் எங்கிருக்கிறார், எப்படி இருக்கிறார் என்பதைக் கவலையோடு முதன்முதலில் விசாரித்த பண்பாடு மிக்க தலைவி, இங்கு இருக்கிற கட்சிக்காரர்களை மறந்துவிடப் போகிறாரா? வெற்றிக்குரிய தொகுதிகளைத்தான் விட்டுக் கொடுத்துவிடப் போகிறாரா?

ஓர் அரங்கத்துக்குள், தேர்ந்தெடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட கூட்டத்தில் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகளைக்கூட காங்கிரஸ் தோழர்கள் கவனத்தில் கொள்ளாமல், சோனியா காந்திக்கு முன்னாலேயே கோஷங்களால் குமுறியது பண்பாட்டின் தலைகுனிவாகும்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி, மற்ற கூட்டணிக் கட்சிகளை அங்குலம், அங்குலமாக அளந்து எல்லைகள்

போட்டுக் கொடுத்துள்ளார். அதற்குள் நின்று, வென்று, அதைத் தமதாக்கிக் கொள்ள எல்லோரும் தயாராக இருக்கும் போது, சில காங்கிரஸ் தோழர்கள் மட்டும் அது வேண்டும், இது வேண்டும் என்று அடம் பிடிப்பது அழகல்ல.

சோனியா - கருணாநிதி சந்திப்புக்குப் பின், பத்திரிகையாளர்கள் மத்தியில் சோனியா காந்தியைப் பற்றிக் கருணாநிதி குறிப்பிடுகையில், "மாமியார் வழியில் இவரும் பயணிக்கிறார்" என்றார். அதற்குப் பல பொருள்கள் உண்டு.

இந்திரா காந்தி தி.மு.கழகத்துடன் முதன்முதலில் கூட்டணி அமைத்த நேரத்தில், சட்டமன்றத்திற்கு தொகுதியே வேண்டாமென்று சொல்லிவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் இடம் கேட்டுப் பெற்று வென்றார்.

அதே போல் சோனியா காந்தி தலைமையை ஏற்போர் மட்டும் தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு வரும் விதத்தில் தேர்தல் கூட்டணி அமைத்துக் கொண்டால்கூட காங்கிரஸ் தொண்டர்கள் மகிழ்வார்கள்."

இவ்வாறு 'தினமணி' கட்டுரை கூறுகிறது.

என்னைப் பொறுத்தவரையில், அந்தக் கட்டுரையின் கடைசிப் பகுதியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள "சட்டமன்றத் தொகுதியே வேண்டாம்" என்று திருமதி இந்திரா காந்தி முடிவு எடுத்த நிலைமை, மீண்டும் வர வேண்டுமென்று விரும்புகிறவனுமல்ல! அதை வலியுறுத்தப் போகிறவனுமல்ல!

இப்போதுள்ள நிலவரம், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சோனியா காந்தி அவர்கள் பிரதமராவதற்கு இங்கே எத்தனை இடங்களை அதிகப்பட்சம் பெறுவது என்பதுதான்.

கூட்டணிக்குள் அங்கொரு பேச்சு, இங்கொரு பேச்சு என பேசிக் கொண்டு, அப்படிப் பேசுவதால் பிரச்சினை திசை திருப்பப்பட்டு, கூட்டணியின் குறிக்கோள் குந்தகப்பட்டு விடுவதற்கு யாரும் காரணமாக இருந்து விடக் கூடாது. இதுதான் என் வேண்டுகோள். இதில் கூட்டணியில் உள்ள எல்லாக்

கட்சிகளுக்கும், கட்சிகளின் தலைவர்களுக்கும் பொறுப்பும், கடமையும் இருந்தாலும் - குறிப்பாகவும், சிறப்பாகவும் காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கு மிகையான பொறுப்பும், கடமையும் இருக்கிறது.

கூட்டணியில் உள்ள ஒவ்வொரு கட்சியின் உடன் பிறப்பும் இந்தப் பொறுப்பை உணர்ந்து செயல்படுவார்கள் எனினும், மத்திய ஆட்சியை மனத்தில் வைத்துக் கொண்டு தேர்தல் களம் புகுந்திடும் காங்கிரஸ் கட்சிக்கும், அக்கட்சியின் தமிழகத் தலைமைக்கும் இந்த வேண்டுகோளை நான் விடுக்கிறேன்.

குறிப்பாக தி.மு. கழகத்தைப் பொறுத்தவரையில்கூட, சில தொகுதிகள் நமது கூட்டணிக் கட்சிகளின் மொத்தத் தொகுப்புக்குப் போயிருப்பதாகவே கருதி, ஆங்காங்கு நாற்பது தொகுதிகளிலும் நமது அணியின் வேட்பாளர்களே வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக் கூறுகளை ஏற்படுத்த இன்று முதலே கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து களமிறங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றுடன் முடிந்து விடுவதில்லை; எதுவும்!

அடுத்தடுத்து எத்தனையோ வாய்ப்புகள் எனதருமை உடன்பிறப்புகளுக்காகக் காத்திருக்கின்றன என்பதுணர்ந்து இன்றே களமிறங்க வேண்டுகிறேன் -

நாற்பது தொகுதிகளும் -

நமதே -

அங்கே

நாற்பது வேட்பாளர்களும் நம்மவர்களே -

இந்த நல்ல நினைவுடன்

நற்பணியாற்றிடுக!

நமதே வெற்றி!

அன்புள்ள,

மு.க.

17-2-2004

3031. பரிவுடன் பாசமுடன் நினைவூட்டுகிறேன்!

உடன்பிறப்பே,

நடைபெற இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலில், மொத்தம் நாற்பது தொகுதிகளில், நமது தி.மு.கழகத்திற்குக் கிடைத்துள்ள தொகுதிகள் பதினைந்து ஆகும்.

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள மற்ற கட்சிகளுடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கை ஓரளவு அதிகமானது எனினும், கடந்த தேர்தல்களில் கழகம் போட்டியிட்ட தொகுதிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது குறைவானதுதான்.

எப்படியும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அமைக்கப்பட வேண்டும் என்ற அக்கறையிலும், ஆர்வத்திலும் கூட்டணியில் உள்ள கட்சிகள், மன நிறைவுடன் இந்த உடன்பாட்டுக்கு ஒத்துழைத்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

பகிர்ந்துகொள்ளப்பட்டதில் தி.மு.க.வுக்குக் கிடைத்துள்ள 15 தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்கள் மார்ச் 1 ஆம் நாள் தலைமைக் கழகச் சார்பில் அறிவிக்கப்பட இருக்கிறது.

தொகுதிகள் பதினைந்துதான்! கேட்டிருக்கும் கழகக் கண்மணிகளோ 308 பேர்!

"கண்ணுதற் பெருங்கடவுளே" கழக மோடமர்ந்து வேட்பாளர்களை அறிவித்தாலும், எல்லோருடைய திருப்தியையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பது எனக்குத் தெரியும்.

தலைமைக் கழகம் தேர்வு செய்து அறிவிக்கும் இந்தப் பதினைந்து பேர்தான் வெற்றி பெறுவார் என்றோ, பட்டியலில் உள்ள மற்றவர்களால் வெற்றிபெற முடியாது என்றோ கூறிட "ஞானதிருஷ்டி" எதுவும் கைவசமில்லை! ஏதோ வாய்ப்பு, தகுதி, எப்படி இவர் பயன்படக் கூடும்- என்பன போன்ற சில விபரங்களை

மட்டுமே ஆய்ந்து கணித்துக் கொண்டு, அவர்களைக் களத்தில் இறங்கச் செய்கிறோம். அறிவிக்கப்பட்டவர் மட்டுமே இத்தனை தகுதியும் பெற்றவர் என்றோ, அறிவிக்கப்படாதவர்கள் இத்தகுதிக் குரியோர் அல்லர் என்றோ நிர்ணயித்துவிட முடியாது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு 25 லட்சம் ரூபாய் வரையில் செலவிடலாம் என்று தேர்தல் ஆணையமே தெரிவித்திருக்கிறது. அறிவிக்கப்படும் வேட்பாளர்களில் ஒரு சிலர் தேர்தலுக்குச் செலவிட ஓரளவு வசதி படைத்தவர்களாயிருப்பார்கள். செலவு முழுவதையும் கழகமே ஏற்றுக் கொள்வது இயலாது என்பது மட்டுமல்ல, கூடாது என்பதையும் கழகத்தின் செயல்வீரர்கள் உணராமல் இல்லை. அதனால்தான் வேட்பாளர்கள், பதவிக்குச் செல்வதில் ஆர்வம் காட்டினால் மட்டும் போதாது! அதற்கு ஆகும் செலவினத்தில் ஒரு பகுதிக்காவது பொறுப்பேற்க வேண்டுமெனத் தலைமைக் கழகம் கருதுகிறது.

இதற்கெனத் திரட்டப்பட்ட தேர்தல் நிதியும், கழக வளர்ச்சி நிதியும், வேட்பாளர் தரும் தொகையும் தேர்தலுக்குத் தேவைப்படும் ஒவ்வொரு தொகுதிக்குமான விளம்பரச் செலவு, சுவரொட்டிகள், பதாகைகள் போன்றவைகளுக்காகத் தலைமைக் கழகத்தினால் அந்தந்த தொகுதிகளில் பணியாற்றும் குழுக்களின் மூலமாக வழக்கமாக வழங்கப்படுவது போல் இப்போதும் வழங்கப்படவிருக்கிறது. தேர்தல் பணியாற்றும் செயல்வீரர்களாம் கழகக் கண்மணிகள் உற்சாகமாகவும், ஓய்வு ஒழிச்சலின்றியும் ஓடியாடி உழைக்கிறார்களே! அவர்கள் பட்டினி கிடந்து வேலை செய்து வெற்றியைப் பெற்றுத் தர வேண்டுமென்று கருதுகிற கல்மனம் நமக்கு எப்போதும் இருந்ததில்லை.

பட்டியலில் இடம் பெற்றவர்கள் மகிழ்வார்கள்- இடம் பெறாதவர்கள் என் மீது கோபம் கூட கொள்வார்கள்- தயவு செய்து அந்தக் கோபம் என் மீது மட்டும் காட்டப்பட வேண்டுமேயல்லாமல், கழகத்தின் மீது கடுகளவும் காட்டப்படக் கூடாது என்று கரம் பற்றிக் கேட்டுக் கொள்கிறேன். "காற்றுள்ளே போதே தூற்றிக் கொள்க" என்ற பழமொழி, இதற்கெல்லாம் பொருந்தாது என்பதை உடன்பிறப்புகள் உணர வேண்டுகிறேன்.

காற்று ஒரு காலகட்டத்தில் வீசாமற் போகாது- அது வீசாத நேரத்தில் தூற்றக் கூடாது.

தேர்தலுக்கான வேட்பாளர்களை அறிவிக்கும் போதெல்லாம் அறிஞர் அண்ணா சொல்வார்-

"இந்தக் காரியத்துக்கு இவர்களைப்
பயன்படுத்திக் கொள்கிறேன் -
அடுத்து வேறொரு காரியத்துக்கு
அதற்குரியவர்களைப் பயன்படுத்திக்
கொள்வேன். அதுவரையில்
பொறுமை காத்திட வேண்டும்" என்று!

அண்ணாவின் இந்த வார்த்தைகளை, வேட்பாளர் பட்டியலில் தங்கள் பெயரை எதிர்பார்த்தவர்களுக்கு மட்டுமல்ல,அவர்களுக்காக பரிந்துரைத்தவர்களுக்கும் பரிவுடன், பாசமுடன் நினைவூட்டுகிறேன்.

அன்புள்ள,
மு.க.
29-2-2004

3032. நீர் மேல் எழுத்து!

உடன்பிறப்பே,

தர்ம நெறியிலிருந்து சிறிதும் தவறாதவர் எனக் காரணம் கூறி, அதனால் பஞ்ச பாண்டவர்களில் மூத்தவரை தர்மர் என்று 'பாரதம்' கூறும் - பாமரரும் "ஆமாம், ஆமாம்" எனத் தலையாட்டுவர். பாமரர், பகுத்தறிவைப் பயன்படுத்த முடியாத நிலையில் எதற்குத்தான் தலையாட்டி 'ஆமாம்' போடாமல் இருக்கிறார்கள்?

பகாசூரனின் பல்லுக்குப் பல் இரு காதம் - அவன் பல்லிடுக்கு முக்காதம் என்று பாடினால்கூட, அதற்கும் "ஆமாம்" என்று தலையாட்டுகிறவன்தானே நமது பாமரன்!

'காதம்' என்பது பத்து மைல் தொலைவு ஆயிற்றே! இரு காதம் என்றால் இருபது மைல் தொலைவு ஆயிற்றே - முக்காதம் என்றாலோ பல்லிடுக்கு முப்பது மைல் இடைவெளி ஆயிற்றே! எனவே ஒரு பல்லுக்கும், இன்னொரு பல்லுக்கும் ஐம்பது மைல் தொலைவு என்றால், பகாசூரனின் வாயின் நீள அகலம் எத்தனை மைல்கள் இருக்கும் - வாயே அவ்வளவு என்றால் முகம், தலை, உடல் எல்லாம் சேர்ந்து அவன் எத்தனை மைல் உயரம் - எத்தனை மைல் அகலம் இருப்பான் என்பதைப் பற்றியெல்லாம் யோசிக்காமல், 'ஆமாம்' போட்டே கெட்டுப்போனவன் தானே, பெரும்பாலும் தமிழ்நாட்டுப் பாமரன்!

அதைப் போலத்தான் கண்ணாயிரம் எனில், ஆயிரம் கண்ணுடையவன் என்றும் - தர்மன் எனில், தருமமே உருவானவன் என்றும் நம்புகிற பாமரன்கள் மத்தியில் பாரதக் கதை பக்திப் பரவசமுடன் படிக்கப்பட்டது. போற்றப்பட்டது.

ஆனால், தர்மனே பஞ்சமாபாதகங்களில் ஒன்றெனக் கூறப்பட்ட; பகடையுருட்டிச் சூதாடினான் என்பதும், அந்த ஆட்டத்தில் தனது ராஜ்யத்தையே பணயமாக வைத்துத் தோற்றுப்போய் - இறுதியாகத் தனது மனைவியையே பந்தயமாக வைத்து ஆடி, அதிலும் தோற்று, நாடு நகரங்களை

இழந்து தம்பியருடனும், தம்பியருக்கும் தனக்கும் சொந்தமான பாஞ்சாலியுடனும் காடேகினான் என்பதும், பாரதக் கதையாகும்.

பாரத யுத்தத்தில் அந்தத் தர்மனை ஒரு பொய் சொல்ல வைத்தால்தான், அதுவும் அவனது குருநாதர் துரோணருடைய மகன் அசுவத்தாமன் போரில் மாண்டு விட்டான் என்று பொய் சொல்ல வைத்தால்தான், அதுகேட்டு துரோணர் போர்க்களத்தில் துடித்துப் போய் தோல்வி காண்பார் எனத் திட்டமிட்டு - அவ்வாறே தர்மனை ஏமாற்றிப் பொய் சொல்ல வைத்து, துரோணரை வீழ்த்தினார்கள் என்று 'பாரதம்' பகரும்.

இப்படி மகா உத்தமர் - சத்தியவந்தர் எனப் புகழ் மலையின் உச்சியில் வைத்துப் போற்றப்பட்ட தர்மர், தன்னிலை தாழ்ந்து தரக்குறைவான பொய் சொல்ல வைக்கப்பட்டார் என்பது போலத்தான், சூதாட வைக்கப்பட்டார் என்பது போலத்தான் இதோ இன்று பாரத நாட்டின் பிரதமர் வாஜ்பய் அவர்கள், தன்னை அறிந்தோ அறியாமலோ அன்றாடம் பத்திரிகைகளில் ஆயிரம் கோடியை எட்டுகிற அளவுக்கு அரசு விளம்பரம் என்ற பெயரால், மக்களின் வரிப் பணத்தை தேர்தல் விளம்பரத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

படிப்பவர்களுக்கே அலுத்துப்போய் - பார்ப்பவர்களுக்கே புளித்துப்போய் - அந்தப் பக்கத்தையே புரட்டாமல் - புரட்டினால் வயிறு புரட்டுகிறதே யென்று ஒதுக்கித் தள்ளிவிடுகிற நிலைமைக்கு, அந்த விளம்பரங்கள் தெவிட்டிப்போய் - ஒருவிதமான வெறுப்பையும் ஏற்படுத்தி வருகின்றன.

அரசு விளம்பரத்தை மக்கள் வரிப் பணத்தில் தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு, தேர்தல் ஆணையத்தையும் தெரிந்தே ஏமாற்றுகிற தே.ஜ.கூ., இன்றைய விளம்பரங்களில் பா.ஜ.க. தேர்தல் சின்னமான தாமரைப் பூவையும் இணைத்திருப்பது, ஓஹோ! இவரும் பாரதக் கதையிலே வரும் தர்மரைப் போன்றவர்தான்! நாம் தான் இதுநாள் வரையில் தவறாகக் கருதிக் கொண்டு தவறுக்கு மேல் தவறு செய்து விட்டோம் என்று சீத்தலைச் சாத்தனார் போல, தலையில் குத்திக் கொள்ள வேண்டியவர்களாகி விட்டோம் என்று எண்ணிப் பெருமூச்சு விட வேண்டியிருக்கிறது.


என்னதான் சகுனி தனது சூழ்ச்சிக்கு இரையாக்கினாலும் - கண்ணன் தனது திருவிளையாடலால் திசை திருப்பினாலும், தர்மனுக்கு எங்கே போயிற்று ஞானம்! அவன் கடைப்பிடித்த தர்ம

நியாயம் என்ன வாயிற்று? என்று கேள்வி எழுவது போலத்தான் இப்போது இந்தத் தேர்தல் யுத்தத்தில் "காபந்து சர்க்கார்" நடத்திக் கொண்டிருக்கிற வாஜ்பய் அவர்கள், போராயுதமாக அரசின் விளம்பரங்களைப் பயன்படுத்துவது கண்டும் நம் உள்ளங்களில் கேள்வி எழுகிறது.

தெளிவாகவும், மிகச் சரியாகவும் சொல்ல வேண்டுமேயானால், மிகுந்த வேதனையுடன் தெரிவித்துக் கொள்ள வேண்டியுள்ள ஒன்று,

நீதிமான், நியாயஸ்தர், நெறிபிறழாதவர் என்றெல்லாம் அட்டல் பிகாரி வாஜ்பய் குறித்து எழுதி வைக்கப்பட்டிருந்தவை, வெறும் நீர் மேல் எழுத்துக்களாகிவிட்டனவே! அதை நினைத்தால் நம் நெஞ்சு நெகிழத்தான் செய்கிறது.

இதோ பார்! இந்த விளம்பரத்தை! இது மத்திய அரசின் அரைப் பக்க விளம்பரத்தில் ஒரு மூலைப் பகுதியில் கத்தரித்து எடுத்து இந்தக் கடிதத்துடன் இணைக்கப்பட்டதாகும்! முழு விளம்பரம், மிகப் பெரியது! தாமரைச் சின்னங்களுடன்!



ஆம்! தாராளமாக நடக்கிறது 'தர்ம' தரிசனம்! அரசு செலவில் தாமரை மலரோடு! - தேர்தல் ஆணையம் இருந்தும் என்ன செய்ய?

அன்புள்ள,

மு.க.

1-3-2004

3033. உன் கர்ச்சனை கேட்க நான் வருகிறேன்!

உடன்பிறப்பே,

மே 10ஆம் நாள் நடைபெற இருக்கும் 14வது நாடாளுமன்றத் தேர்தலுக்கான நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர்கள் 15 பேரின் பெயர்கள், மார்ச் முதல் நாள் அறிவிக்கப் பட்டுள்ளது.

"TO MARCH AHEAD" - "முன்னேறிப் போ" என்று கழகத் தலைமையின் கட்டளை கேட்டு, கடமையாற்றிடப் புறப்படுவாய் என்பதற்கு அடையாளமாகத்தான் மார்ச் முதல் தேதியில் பட்டியலை வெளியிட்டுள்ளேன். நமது முற்போக்குக் கூட்டணியில் காங்கிரஸ் கட்சி தவிர, மற்ற எல்லாக் கட்சிகளின் வேட்பாளர் பட்டியலும் வெளியிடப்பட்டுவிட்டன. கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள் ஆங்காங்கு கூடிச் செயல்புரியத் தொடங்கிவிட்டனர். ஒருவேளை நமது அணியின் செயல்வீரர்கள் எங்கே சற்று மெத்தனமாய் இருப்பார்களோ, அப்படியிருந்தால் அவர்களை உசுப்பி விடும் முயற்சியில் ஈடுபடுவோம் என்று கருதிய பொன்னையன் என்கிற ஓர் அமைச்சர், நாம் நிற்கும் தொகுதிகளில் எல்லாம் 'டெபாசிட்' இழப்போம் என்று ஆரூடம் கூறியிருக்கிறார். ஆம், அப்படி அடித்துப் பேசியிருக்கிறார். சூளையில் வைக்கப்பட வேண்டிய மூளையுடையவர்களால்தான் அதுபோலப் பேச முடியும். அமைச்சரல்லவா பேசியிருக்கிறார் - அதை ஓர் அறைகூவலாக ஏற்றுக் கொண்டு அடலேறுகளாம் உன் போன்ற உடன்பிறப்புகள், உதவாதினி ஒரு தாமதம் உடனே புறப்படுவோம் பணியாற்றுதற்கு! என எழுந்திட, அரியதோர் வாய்ப்பாக இது அமைந்திடும் என்றே நான் நம்புகிறேன். சுரண்டல் மந்திரியின் வரண்ட சவடால் இது என்றாலும், அதனை அலட்சியப்படுத்தாமல் "டெபாசிட் இழப்பு" என்ற அவர் கூற்று அவருக்கே ஆகிட இன்னும் பல மடங்கு உழைத்திட உறுதி பூணுவாய் என்பது எனக்குத் தெரியும்.

உன் போன்ற என் உடன்பிறப்புகளை மிரள வைக்கவும் முடியாது - திசை திருப்பவும் முடியாது - முடியாது! முடியாது! எவராலும் முடியாது!

கழக வேட்பாளர் பட்டியலை அரசியல் நாகரிகத்துடன் வெளியிட்டுள்ள ஏடுகளையும் பார்த்திருப்பாய் - அந்தப் பட்டியலில் இடம் பெற்றோர் "அவர் பக்கம் இவர் பக்கம்" என்று சிண்டு முடிந்து கொண்டிருக்கிற ஏடுகளையும் பார்த்திருப்பாய் - என் செய்வது! அவரவர்கள் ரசனை அவரவர்களுக்கு! அவரவர் புத்தி அவரவர்களுக்கு!

வடிவழகி, வானத்து நிலவுடன் போட்டியிடும் வதனங் கொண்டவள் - இசையரங்கில் அமர்ந்து பாடுகிறாள் - கீத மழை பொழிகிறது - ஆகா! கோகில கானம் என்கின்றனர் அவையோர் - இடையே இருமல் எட்டிப் பார்க்கிறது; அதைத் தவிர்க்க ஒருக்கணம் கனைத்துக் கொண்டு தொடர்ந்து பாடுகிறாள் - இசை இன்பத்தைப் புகழ்ந்து எல்லா ஏடுகளும் விமர்சனம் எழுதுகின்றன. ஒரே ஒரு ஏடு மட்டும், இடையில் ஒரு முறை தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டதை சாங்கோபாங்கமாக எழுதி, அந்த இசை நிகழ்ச்சிக்கு அதையே பெரிய களங்கம் போல் கற்பனை செய்தி ருந்தது.

கழக வேட்பாளர் பட்டியல் வெளியிடும்போதே சில ஏடுகளுக்கு இப்படியோர் எரிச்சல் எனில், தேர்தல் நடந்து முடியும் வரையில் என்னென்ன விஷமங்களில் ஈடுபடக் கூடுமோ! அவற்றையெல்லாம் இடறி எறிந்து விட்டு, நமது இலட்சியம் "வெற்றி" என்ற நினைவுடன் நிமிர்ந்து நடைபோடுக!

இத்தனை நாள், இன்னும் வேட்பாளர் பெயரைக் கழகம் அறிவிக்கவில்லையே என்று காத்திருந்தாய்.

கழகம் அறிவித்து விட்டது. கூட்டணிக் கட்சிகள் வேட்பாளர்கள் பெயர்களும் பெரும்பாலும் அறிவிக்கப் பட்டாகிவிட்டது.

அனுமதி பெற்று அழகுறச் சின்னங்களும், பெயர்களும் எழுதிட எப்போது வருகிறீர்கள் எனச் செயல் வீரர்கள் இருக்கும் திக்கு நோக்கிச் சுவர்கள் கேட்கின்றன.

உடன்பிறப்புகளின் உழைப்புத் திறனை நேரில் காணும் வாய்ப்பு எனக்கு விரைவில் கிடைக்க இருக்கிறது - இதோ - என் எதிரே ஓர் அறையில் அமர்ந்து தம்பிகள் துரைமுருகனும், மு.க. ஸ்டாலினும் என் சுற்றுப்பயண நிகழ்ச்சியை வரையறுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எந்தெந்தப் பகுதிகளுக்கும், தொகுதிகளுக்கும் "போ" என்று சுட்டிக் காட்டுவார்களோ தெரியாது! எட்டிக் காயல்லவே எனக்கு எத்தனை தொலைவானாலும் உன்னை வந்து காண்பதும் - உன் உழைப்பு கண்டு மகிழ்வதும்!

எனவே, நான் உனைக் காண புறப்படுவதற்குள் - தேர்தல் சின்னங்கள் - தெருத்தெருவாக வீடு வீடாகச் சென்று வாக்காளர் சந்திப்புகள் - தெரு முனைப் பிரச்சாரக் கூட்டங்கள் - அத்தனையும், தங்குதடையின்றி பொங்குமாங்கடலெனத் திரண்டு நான் வரும்போது என்னைப் பூரிப்பில் ஆழ்த்திட வேண்டும்.

எங்கே பார்க்கலாம்! ஏதோ எங்கேயோ கத்துகிறது - ஊளையிடுகிறது - என்பதற்காக உன் கவனம் அங்கே செல்ல வேண்டாம்.

உன் கர்ச்சனை கேட்கவல்லவா நான் வருகிறேன்.

அன்புள்ள,

மு.க.

3-3-2004

3034. நெய் மணக்கும் நெஞ்சுக்கினிய தீர்மானம்!

உடன்பிறப்பே,

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் நாமும் இருந்தோம். அந்த அணியில் முதன்மைக் கட்சியாக பாரதீய ஜனதா கட்சியும் இருந்தது. எல்லாக் கட்சிகளுக்குமாகப் பொதுவான செயல் திட்டம் ஒன்றை வகுத்து, அந்த அடிப்படையிலிருந்து சிறிதும் பிறழாமல், அந்தக் கூட்டணி மத்திய ஆட்சியை நடத்துவதென்று உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது மாத்திரமல்லாமல், நாட்டு மக்களுக்கும் அந்த உறுதிமொழியை உறுதி செய்து அறிவிக்கப்பட்டது.

ஆனால், தனது மிருதுவான பாதங்களைச் சப்தமில்லாமல் ஊன்றி நடந்து, கூர்மையான நகங்களால் குத்திக் கிழித்திடும் முரட்டுப் பூனையைப் போல, பாரதீய ஜனதா கட்சியும் - அதற்குப் பக்கத் துணைகளாக பஜ்ரங் தளம், விசுவ ஹிந்து பரிட்சத் போன்ற பச்சை ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளும் இருந்துகொண்டு, மிக பவ்யமாக - ஆனால் மிகமிக பயங்கரமாக - மென்மையான பட்டுத்திரையிட்டு மூடிக் கொண்டு, எந்த அளவுக்குத் தமது ஆதிக்கத்தின் ஆணிவேரை நுழைக்க முடியுமோ, அந்த அளவுக்கு நுழைத்து - அதனை அசைக்க முடியாமற் செய்யவும் திட்டமிட்டுச் செயல்பட்டு, மத வெறி சக்தியின் முகமூடி கிழிக்கப்படும் நிலை தோன்றுவதற்கான அறிகுறி தென்பட்டவுடன், தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., ஆகிய மூன்று முற்போக்குக் கட்சிகளும் விழித்துக் கொண்டு வெளியேறும் வாய்ப்பையும், வேளையையும் எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டன.

தீவிரவாதம், பயங்கரவாதம் ஆகியவற்றின்மீது மட்டுமே பிரயோகிக்கப்படுமெனவும், எந்தவொரு மாநில அரசும் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்திடத் தயங்கோம் எனவும் பிரதமராலும், துணைப் பிரதமராலும் பாராளுமன்றத்திலேயே வாக்குறுதி வழங்கப்பட்டபோதிலும், தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான ம.தி.மு.க. பொதுச் செயலாளரும்,

நாடாளுமன்ற உறுப்பினருமான தம்பி வைகோ மீதே தமிழ் மாநில அரசு "பொடா" சட்டத்தைப் பிரயோகித்ததையும், அவரையும் மற்ற அரசியல்வாதிகளையும், பத்திரிகையாளர்களையும் 'பொடா' பிடியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று ஓராண்டு காலத்திற்கு மேலாகத் தொடர்ந்து கோரிக்கை வைத்தும், அமைதியாகப் போராடியும் - அதனைக் காதிலே போட்டுக் கொள்ளாமல் தே.ஜ.கூ. ஆட்சியினர் நடந்து கொண்டதையும் - இதற்கெல்லாம் மேலாக, தமிழ் மொழியை மத்திய ஆட்சி மொழி ஆக்குவது உள்ளிட்ட பல்வேறு முறையீடுகளை முன் வைத்து தி.மு.க. நடத்திய அறப் போராட்டத்தையும் அலட்சியம் செய்ததுடன், ஆரோக்கியமற்ற அரசியல் என்று அதனைக் கேலியும், கண்டனமும் செய்ததையும் பொறுத்துக் கொள்ள முடியாத சூழலில் - பொதுச் செயல் திட்டத்துக்கு மாறாக, அயோத்திப் பிரச்சினையை எழுப்பியதையும் கண்டித்து, கொள்கை அடிப்படையில் ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாக, தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., ஆகிய கட்சிகள் வெளியேறி, "ஜனநாயக முற்போக்குக் கூட்டணி" காண நேரிட்டது என்பது அனைவரும் அறிந்த உண்மைகளேயாகும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருக்க நேரிட்ட கால கட்டத்தில், பா.ஜ.க.வின் அடி தழுவி இருந்ததில்லை என்பதுடன் - இந்த மூன்று கட்சிகளும் தங்கள் கட்சிகளுக்கென வகுத்துக் கொண்டிருந்த அடிப்படைக் கொள்கைகளில் எந்த சமரசமும் செய்து கொண்டதில்லை என்பதும், இன்னும் சொல்லப் போனால், மூட்டிவிட முயன்ற மத வெறி நெருப்பை நீரூற்றி அணைப்பதற்கும் - அயோத்திப் பிரச்சினையால், நாடு காடாகி விடாமல் தடுத்து நிறுத்துவதற்கும் - காரணமாக இருந்திருக்கின்றன.

உண்மை இவ்வாறிருக்க, நாங்கள் என்னவோ பாரதீய ஜனதா கட்சியின் பக்கத் துணைவர்களாக இருந்தது போன்ற பச்சைப் பொய்யை, இன்று அக் கட்சியின் சில தலைவர்கள் பரப்பிட முற்பட்டுள்ளனர்.

பாரதீய ஜனதா கட்சி, விசுவ ஹிந்து பரிட்சத், பஜ்ரங் தளம் போன்ற பிற்போக்குச் சக்திகளின் மூட நம்பிக்கை வெறியையும் முந்திக் கொண்டு, தமிழகத்தில் செயல்பட்டு வருபவர் முதலமைச்சர் ஜெயலலிதா என்பதை பாரதீய ஜனதாக் கட்சியினரும், ஏனைய மத வெறியர்களும் உணர்ந்து, அவரையே

தங்கள் வழிகாட்டும் தேவதையாக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதுதான் இன்று பகிரங்கமாகியுள்ள நிலைமையாகும்.

இப்போதுகூட தேர்தலுக்காகத் தனது பிடிவாதத்திலிருந்து பின்னோக்கி இறங்கி வந்து - பிடுங்கப்பட்ட உரிமைகள், சலுகைகளைப் பாதியளவாவது திரும்பத் தரும் தந்திரத்தில் ஈடுபட்டுள்ள ஜெயலலிதா, மத மாற்றத் தடைச் சட்டத்தை வாபஸ் பெறவே முன்வராமல், சிறுபான்மை மக்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் மிரட்டிக் கொண்டுதானேயிருக்கிறார்! அவ்வளவு அழுத்தமாக அவரை பாரதீய ஜனதா பற்று, பற்றிக் கொண்டிருக்கிறது என்றுதானே திட்டவட்டமாகத் தெரிகிறது!

இதைத் தெளிவாக உணர்ந்துதான், நெய்வேலியில் கூடிய திராவிடர் கழகத்தின் பொதுக் குழுவில், நமதிளவல் வீரமணி அவர்கள் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்.

“நாடாளுமன்றத்திற்கு நான்கு கட்டமான தேர்தல்களில் தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரி மாநிலத்திலும் மே 10 ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. மதச்சார்பின்மைத் தத்துவத்திற்கு எதிரானது பி.ஜே.பி. கூட்டணிதான் என்று திராவிடர் கழகத் தலைவரின் அறிக்கை மூலம் நாட்டிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பி.ஜே.பி.யுடன் எந்தக் காலத்திலும் இனி கூட்டணி சேர மாட்டோம் என்று சென்னைக் கடற்கரையில் பிரகடனப்படுத்திய அ.தி.மு.க.வின் தலைமை இப்போது மீண்டும் கூட்டணி சேர்ந்து கொண்டதானது, ஏற்கனவே தமிழ்நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி மீறிய துரோகச் செயலாகும் என்பதை இக்கமிட்டி, தயங்காது சுட்டிக்காட்டுவதோடு, தனது வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறான இந்த பி.ஜே.பி. - அ.தி.மு.க. கூட்டணியைத் திராவிடர் கழகம் ஆதரிக்காது, எதிர்த்து தேர்தலில் வாக்களிக்கும் கடமை நமக்கும் உள்ளது என்பதால், தமிழ்நாட்டு மக்களும் இதுபோல் பி.ஜே.பி. - அ.தி.மு.க. கூட்டணியை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்றும் தமிழ்ப் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறது. எனவே பி.ஜே.பி. அணியை தமிழ்நாட்டில் தோற்கடிக்கக் கூடிய வாய்ப்பு, பலம் ஆகியவைகளைப் பெற்றுள்ள தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் அடங்கிய மதச்

சார்பற்ற அணியான ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கே உண்டு என்பதால், அந்த அணிக்கு வாக்களிக்க வேண்டும் என்று முடிவு செய்கிறது.”

உடன்பிறப்பே,

மேற்கண்ட தீர்மானத்திற்காக, இக்கடித வாயிலாக இளவல் வீரமணி அவர்களுக்கு நான் நன்றி கூற விரும்பவில்லை. நன்றி கூறுவது தேவையுமில்லை. திராவிடர் இயக்க உணர்வுகள் பட்டுப் போகாமல் காப்பாற்றிட என்ன செய்யவேண்டுமோ, அதனை அந்த உணர்வுக்கு உரியவர்களில் ஒருவர், நமது தாய்க் கழகமான திராவிடர் கழகச் சார்பில் ஆக்கபூர்வமாகச் செய்திட முன்வந்துள்ள நிலையில், நாம் ஒருவருக்கொருவர் நன்றி கூறிக் கொள்வது என்பது வெறும் சம்பிரதாயமாகத்தானே ஆகிவிடும்.

நம் எல்லோருக்கும், ஆம், இந்தப் போர்க்களத்தில் நிற்கும் நாம் விழுப்புண்களைத் தாங்கி, வெற்றிப் புன்னகை புரிந்து மத நல்லிணக்க வரலாறு படைப்பதிலும், மதச் சார்பற்ற ஆட்சி அமைப்பதிலும் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு முனைப்போடு ஆற்றும் பணிக்கு, எதிர்காலத் தமிழகமே நன்றி கூறக் காத்திருக்கும்போது நமக்குள் எதற்காக நன்றிப் பரிமாற்றம்? தேவையில்லை!

எப்படியோ,

நெய்வேலித் தீர்மானம் என்பது,

நெய் மணக்கும் தீர்மானம் என

நெஞ்சுக்கு இதமான சொல்லாரமாக

அமைகிறது.

அன்புள்ள,

மு.க.

4-3-2004

3035. காரணம் புரிகிறதா?

உடன்பிறப்பே,

வாழப்பாடியார் மகன் பாரதீய ஜனதா கட்சியில் சேர்ந்து விட்டதைச் செவிக்கினிய செய்தியாக வெளியிடுகிறார்கள். சஞ்சய் காந்தி, மேனகா காந்தி ஆகியோரின் மகன் வருண் பாரதீய ஜனதாவில் சேர்ந்ததைப் படமெடுத்துப் பெரும் செய்தியாக்கி மகிழ்கின்றனர். கர்நாடகத்தில் முன்னாள் காங்கிரஸ் முதல்வர் பங்காரப்பாவும் மற்றும் காங்கிரஸ் அமைச்சராக இருந்த அவர் மகனும் நேற்றையதினம் பா.ஜ.க.வில் இணைந்த செய்தி கூறி பரவசப்படுகிறார்கள். மத்தியில் குமாரமங்கலம் சுப்பராயன் அமைச்சரானதையும் - அவர் மகன் மோகன் குமாரமங்கலம் அமைச்சரானதையும் - அவர் மகன், அதாவது சுப்பராயனின் பேரன் ரங்கராஜன் குமாரமங்கலம் அமைச்சரானதையும் சரித்திரமாய் சித்திரித்து வியந்து போற்றியவர்கள், இன்று அதே குடும்பத்தில் அவரது பேத்தி லலிதா குமாரமங்கலம் பா.ஜ.க.வில் இணைந்து, புதுவையில் போட்டியிடப் போவதை பூரிப்புடன் வெளியிடுகிறவர்கள், இன்று மட்டுமல்ல - அன்றே ஆச்சாரியார் ராஜாஜி அவர்கள் கவர்னர் ஜெனரல், கவர்னர், முதலமைச்சர் என்ற பதவிப் பொறுப்புகளில் இருந்தபோது, அவர் மகன் சி.ஆர். நரசிம்மன் பாராளுமன்ற உறுப்பினரானதைப் பாராட்டி மகிழ்ந்தவர்கள். இன்று நெருக்கடி கால மிசாக் கொடுமையை ஓராண்டு காலம் அனுபவித்தவரும் - அண்ணா, ராஜாஜி, காயிதேமில்லத் ஆகிய பெருமைக்குரிய தலைவர்களால் வேட்பு மனு முன்மொழியப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினராகி - மத்திய அமைச்சர் பொறுப்பிலும் மகத்தான புகழ் பெற்ற மாறன் மறைந்த காரணத்தால், அவர் இடத்தில், அவர் மகன் தயாநிதி மாறனை கழகம் ஒருமனதாகத் தேர்வு செய்து நாடாளுமன்ற வேட்பாளராக நிறுத்தியிருப்பதை மட்டும் ஏனோ தாங்கிக் கொள்ள முடியவில்லை; தணலை மிதித்தவர் போல் ஆகி விடுகிறார்கள்.

நாட்டில் அரசியல் துறையில் மட்டுமல்ல! எத்தனையோ துறைகளில், அது எந்தத் துறையானாலும் அவற்றில் வழித் தோன்றல்கள் வருவதையும், வளர்வதையும் வாழ்த்தி வரவேற்றுக் களிப்பவர்கள், நமதியக்கத்தில் மட்டும் வழித்தோன்றல்கள் அரசியல் அல்லது கலைத்துறை அல்லது வேறு துறையில் உருவாகும்போது, முகம் சுளிப்பவர்களாக மாறுகிறார்களே! அதற்குக் காரணம் என்னவென்று கருதுகிறாய்?

அந்த வழித் தோன்றல்கள் மீது அவர்களுக்கு வெறுப்பு என்பதல்ல! இந்த இயக்கத்தின் மீது அவர்களுக்கு ஒரு வெறுப்பு - அதாவது இரத்தத்துடன், உயிர் அணுக்களுடன் ஒன்றிக் கலந்த வெறுப்பு - அதனால்தான் வேறு இடங்களில் வழித் தோன்றல்கள் என்றால் வெகுவாக இனிக்கிறது. நமதியக்கத்தில் என்றால், வேர் முதல் நுனி வரையில் ஒருவிதக் கசப்பு தோன்றி அவர்களுக்குக் குமட்டுகிறது. அதன் விளைவாகத்தான் வசைமொழியாக வாந்தி எடுக்கிறார்கள். வரைகிறார்கள் கேலிச் சித்திரங்களாக!

இன்று மார்ச் 4 எனத் தேதியிட்ட 'தினமணி' நாளிதழில், என்னையும், ஸ்டாலினையும், தயாநிதி மாறனையும் இணைத்து ஒரு கேலிச் சித்திரம். "SUN - SON - GRAND SON" என்ற கற்பனையை நானும் ரசித்தேன். எப்போதுமே விமர்சனங்களைக் கண்டு விளக்கமளிப்பவனே தவிர, நான் வெறுப்பு கக்குபவனல்லன்! அந்த வகையில்தான் இந்த விளக்கம் அளித்திட நேரிட்டது. இதற்கே உன் போன்ற உடன்பிறப்புகள் இதற்குப் போய் நீ எதற்காக நேரத்தை செலவிட்டு எழுத வேண்டும் என்று முணுமுணுப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.

ஒரே பிரச்சினையில், அது நாம் என்றால், எப்படி மாற்றாரின் அணுகுமுறை அமைகிறது - மற்றவர் என்றால், அவர்களின் அணுகுமுறை எப்படி மாறுகிறது என்பதை உன் போன்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இக்கடிதம் எழுத நேரிட்டது.

அந்தக் கேலிச் சித்திரம் வெளிவந்துள்ள அதே தினமணி இதழில், அதே நாளில், அதே 7ஆம் பக்கத்தில் ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மாநிலங்களவை துணைத் தலைவர் நஜ்மா ஹெப்துல்லா ஒரு விழாவில் பேசியதுதான் அது. "சிலர் தங்களுடைய குடும்பத்தின் பெருமையைப் பேசி ஆதாயம் தேடுகின்றனர். ஆனால், நான்

இன்னாருடைய பேத்தி என்று சொல்லி பதவியையோ, புகழையோ சம்பாதிக்கவில்லை. என் அறிவாலும், உழைப்பாலும் அரசியலில் எனக்கென்று இடம் பிடித்தேன். சுதந்திரப் போராட்டத் தியாகி மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பேத்தி நான்"

உடன்பிறப்பே!

அபுல் கலாம் ஆசாத் விடுதலைப் போராட்டத் தளகர்த்தர்களில் ஒருவர் - அவருடைய பேத்தி நஜ்மா ஹெப்துல்லா தனது அறிவினாலும், உழைப்பினாலும் இன்று மாநிலங்களவை துணைத் தலைவராகி விட்டிருக்கிறார் - இதை அவரே சொல்லியிருக்கிறார். அவரது தாத்தாவைப் போல தியாகச் செயல்களில் ஈடுபட்டவர் அல்ல! ஆனால் அப்போதும் சரி! இப்போதும் சரி - இதற்கும் சரி! இது போன்ற வழித் தோன்றல்களுக்கு "தினமணி" போல வரிந்து கட்டிக்கொண்டு 'கார்ட்டூன்' வரைந்திட யாரும் முன்வரவில்லை.

காரணம் புரியவில்லையா? யாரைப் பற்றியும், எதைப் பற்றியும் அவர்களுக்குக் கவலையில்லை - நம்மைப் பற்றித்தான் கவலை!

நாம் தானே அடித்தட்டு மக்களுக்காக அடி வயிறு வலிக்க வலிக்கக் குரல் கொடுப்பவர்கள் - பக்தியின் பெயரால் பகல் வேஷம் போட்டு, உண்மையான பக்தர்களை ஏமாற்றி உண்டியலை நிரப்பி, அதனையும் கொள்ளையடிப்பவர்களை அடையாளம் காட்டு பவர்கள் - மத நல்லிணக்க வரலாறு படைக்கவும், மதச்சார்பற்ற ஆட்சி அமைக்கவும் தூய தொண்டாற்றும் தோழமைக் கட்சிகளுடன், தோளொடு தோள் நின்று மத வெறியர்களை எதிர்த்து நிற்பவர்கள் நாம் தானே!

எனவே நமதியக்கமெனில், அவர்களுக்கு எட்டிக் காய்!

ஆனால், இதுதான் கட்டிக் கரும்பு எதிர் காலத் தமிழகத்திற்கு என்பதை உணர்ந்தோர், நம் பக்கம் அணிவகுத்து வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மக்கள் அணி, இன்னும் - இன்னும் - இன்னும் பெருகிட, உன் அயராப் பணியொன்றே அவசியம்! இந்த விளக்கம் அளிக்கவும், உன் போன்றோரை வீறு கொள்ளச் செய்து விரைந்து பணியாற்ற முடுக்கவும், கேலிச் சித்திரம் வரைந்துள்ள தினமணிக்கும், சித்திரக்காரருக்கும் நன்றி தெரிவித்தாகவேண்டும்.

அன்புள்ள,

மு.க.

5-3-2004

3036. "உன்னை விற்காதே!"

உடன்பிறப்பே,

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாளும், மறைந்த நாளும் ஏப்ரல் திங்களில் வருவதையொட்டி, முன்கூட்டியே மார்ச் திங்களில், நமது தம்பி முனைவர் மு.பி.பா. அவர்கள், அவர் நடத்துகிற "தமிழாலயம்" எனும் இனிய இரு திங்கள் இதழினை, "புரட்சிக் கவிஞர் சிறப்பிதழாக" வெளியிட்டுள்ளார்.

பாவேந்தரின் கவிதைகள் அனைத்தையும் நான் படித்துள்ளேன் எனினும், உன் போன்றோர் படிப்பதற்குப் புதுமையாகத் தோன்றுகிற பல பழைய கவிதைகளும் உண்டு. அவற்றை உன் போன்றோர் படிப்பதற்கு வாய்ப்பில்லாமற் போயிருக்கக் கூடும்.

பாரதிதாசனார், பகுத்தறிவு இயக்கத்தினால் ஈர்க்கப்படுவதற்கு முன்பு, பக்தி ரசப்பாடல்கள் பலவற்றை எழுதி, "சுப்பிரமணியர் துதியமுது" என்ற சிறுநூலையே வெளியிட்டவர்!

காங்கிரஸ் இயக்கத்தின் மீதும், காந்தியடிகளார் மீதும் அவர் கொண்டிருந்த ஈடுபாடு காரணமாக அந்தக் காலத்தில் எழுதிய பாடல் வரிகள் சிலவற்றை "தமிழாலயம்" ஏடு வெளியிட்டுள்ளது. அவரது விடுதலை உணர்வின் வெளிப்பாடாக;

"சீரான இமயமலை வடகோடி முதலாய்த்
தெற்குமுனை கன்னியா குமரிவரை நீளம்....
நெடிதாய் இருக்குதே எங்களது கப்பல்...
உறுதி எனும் பாயை விரியடா மேலே
உணர்வு என்ற சுக்கானை நேரே பிடிப்பாய்,
முறையாய் நடக்கையில் பேதமாம் காற்று
மோதாத விதமாகப் பாரதத் தாரை
நிறையாக ஏற்றடா, ஒற்றுமை ஆக்கி!
நேராக ஓட்டடா, பாரதக் கப்பல்....

எதிரே சுதந்திரப் பொன்னாடு காண!
துளியில்லை சந்தேகம் இனியேது தாபம்
சுதந்திரப் பொன்னாடு மிகவும் சமீபம்!”

எனும் பாடலைக் காண முடிகிறது.

காந்தியடிகளின் கதர் இயக்கத்தை ஆதரித்து பாவேந்தர் எழுதிய கவிதையில் தமிழும், நாட்டுணர்வும் போட்டி போட்டுக் கொண்டு துள்ளிக் குதிப்பதைக் காணலாம்.

“அன்னியர் நூலைத் தொடோம் என்ற சேதி
அறைந்திடடா புவி முற்றும் – எங்கள்
அறுபது கோடித் தடக்கைகள் ராட்டினம்
சுற்றும் – சுற்றும் – சுற்றும்!
கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்
கழறுகின்றேன் அதைக் கேளே – நீவிர்
கதர் அணிவீர் உங்கள் பகைவரின் வேர் அங்குத்
தூளே – தூளே – தூளே!”

இப்படிக் கதிர்வேலன் வணக்கமும், கதர் முழக்கமும் செய்திட்ட கவிஞரை, சுயமரியாதை இயக்கம் கவர்ந்திழுத்துக் கொண்டதோ! அல்லது அவர்தான் தன்மான இயக்கக் கருத்துகளைத் தழுவிக் கொள்ளத் துடித்துச் சிங்கமென எழுந்து நின்றாரோ, எப்படியோ நமக்கொரு புரட்சிக் கவிஞராகக் கிடைத்திட்டார்.

அவரது கவிதைத் தேன் மழை பொழியும் நூல்கள், எண்ணிக்கையில் நூறு என்பதைக்கூட எட்டும் என்கிற அளவுக்கு வெளிவந்துள்ளன. அவற்றில் என் இளமைப் பருவத்தில் அண்ணன் குத்தூசி குருசாமி (குஞ்சிதம்) அவர்கள் தொகுத்து வெளியிட்டதும், முத்தமிழ்க் காவலர் அண்ணன் கி.ஆ.பெ. அவர்கள் அணிந்துரை எழுதியதுமான முதல் நூலாம் “பாரதிதாசன் கவிதைகள்” எனும் நூலையே படித்து மனப்பாடம் செய்தவன் நான். அந்த நூல் மட்டும் இதுநாள் வரையில் முப்பது பதிப்புகளுக்கு மேல் வெளிவந்துள்ளது. அந்த நூலில், பாவேந்தரின் கவிதைகளுக்கு, பாவேந்தர் தந்துள்ள ஒவ்வொரு தலைப்பும் உள்ளத்தைத் தொடக் கூடியவை. உணர்ச்சியூட்டக் கூடியவை. நம்மை வியப்பில் ஆழ்த்தக் கூடியவை.

"ஒளியுலகின் ஆதிக்கம் காட்டுகின்றான்; வானில்
உயர்கின்றான்; உதயசூரியன் வாழ்க நன்றே!"

என வரும் வரிகள் கொண்ட கவிதைக்கு "உதய சூரியன்" என்றே தலைப்பு தந்திருக்கிறார். தி.மு. கழகம் தோன்றாத அந்தக் காலத்திலேயே, அறிஞர் அண்ணா தேர்தல் சின்னத்தை அறிவிக்காத அந்தக் காலத்திலேயே - கவிஞர்கள் வார்த்தை பொய்க்காது என்பதற்கேற்ப,

"விலகிற்று காரிருள்தான்! பறந்தது பார் அயர்வு!" என வியந்து போற்றி, "உயர்கின்றான் உதயசூரியன் வாழ்க நன்றே" எனப் பாவேந்தன் மொழிந்தது, எப்படிப் பலித்து வருகிறது பார்த்தாயா!

அந்தக் கவிச் சிங்கம், புராண இதிகாசங்களை, வெறும் புரட்டு எனும் வேகமான கருத்துடையவராக ஏடெழுதியவர், மேடை முழக்கம் செய்தவர் எனினும், அந்த முதல் நூலில் ஒரு கவிதையில் - இராமனை "நன்மனத்தவன்" என்று போற்றியிருப்பதற்குக் காரணம், ஆரம்ப காலக் கவிதையென்பதால் அப்படி அமைந்திருக்கக் கூடும் என்பதாகவும் இருக்கலாம்.

அந்த நூலில் "உன்னை விற்காதே!" என உபதேசம் செய்யும் தலைப்பு கொண்ட ஒரு கவிதை!

அதில்;

"தென்னிலங்கை யிராவணன் தன்னையும்
தீயனென்னும் துரியனையும் பிறர்
என்னசொல்லி யெவ்வாறு கசப்பினும்
இன்று நானவர் ஏற்றத்தைப் பாடுவேன்;"

என்று இராவணனையும், துரியோதனனையும் ஏற்றிப் பாடும் பாவேந்தர், இராமனையும் "நன்மனத்தவன்" என்றே குறிப்பிடுகிறார்.

யாரோ ஒருவரை இகழ்ந்து தூற்றிடுவதற்காகவே அவர் அப்படி எழுதியுள்ளார் என்பது, "உன்னை விற்காதே!" என்ற தலைப்பில் அவர் தீட்டியுள்ள கவிதையின் இறுதியில், ஒரு பகுதியைப் பார்க்கும் போது தெளிவாகிறது.

இதோ அந்தப் பகுதி :-

“தன் குலத்தினைத் தூக்கிடும் தாம்பெனச்
சகம் சிரிக்கப் பிறந்த விபீஷணன்
நன் மனத்தவன் ராமனைச் சார்ந்ததை
நல்லதென்பது ராமன் முகத்துக்காம்
இன்பம் வேண்டிப் பிறன் வசமாவதை
இந்தத் தேசம் இகழ்ந்திடும் மட்டிலும்
துன்பமன்றிச் சுகம் கிடையா தென்றே
துரைகள் சேர்ந்த சபைக்குமுன் கூறுவேன்”

வீடணன், தன்னை விற்றுக் கொண்டவன் என்பதைத் தாங்கிக் கொள்ள முடியாத தமிழ் உணர்வு - தன்மான உணர்வு - ராமனைக்கூட “நன்மனத்தவன்” என ஏற்றுக்கொண்டு, அவனை நாடிச் சென்று அடைக்கலம் புகுந்த வீடணனை, குலத்தினைத் தூக்கிடும் தாம்பு என்றும், சகம் சிரிக்கப் பிறந்தவன் என்றும் - தூற்றிடத் துணிகிறது. அந்த உணர்ச்சிப் பெருக்கின் ஆவேச முழக்கம்தான், நெஞ்சில் மூண்ட நெருப்பாகக் கொழுந்து விட்டுக் கிளம்பி;

“உன்னை விற்காதே!”

என்ற கவிதைத் தலைப்பாக முழங்குகிறது. இந்தத் தலைப்பு அன்றைய விபீஷணனுக்கு மட்டுமன்றி, இன்றைய விபீஷணர்களுக்கும் பொருந்துகிறதல்லவா?

அன்புள்ள,
மு.க.
6-3-2004

3037. விதி மீறலுக்கு அனுமதியா? அல்லது வெகுமதியா?

உடன்பிறப்பே,

தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகள் வெளியிடும் தேர்தல் அறிக்கையென்றால், அக்கட்சிகளின் கொள்கை விளக்கங்களும், நிறைவேற்றிட முனையும் திட்டங்களும், சகல பிரிவு மக்களின் பிரச்சினைகளுக்கு வழிவகை காணும் முனைப்பான நடவடிக்கைகளும், அந்த அறிக்கைகளில் முதன்மையாக இடம் பெறுவதுதான் வாடிக்கை.

அதற்கு முற்றிலும் மாறாக, ஜெயலலிதா கட்சியின் தேர்தல் அறிக்கை என்ற பெயரால் எதிர்க்கட்சிகளை அநாகரிகமாகவும், அவதூறாகவும் விமர்சிக்கிற ஒரு கந்தல் புராணம் வெளியிடப்பட்டிருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்களால் வலியுறுத்தப்பட்ட மாநில சுயாட்சியை, "பிரிவினை வாதம்" என்று பித்துக்குளித்தனமாக விமர்சித்துக் கொண்டிருந்த அ.தி.மு.க. தலைமை, கடந்த சில ஆண்டுகளாக அக்கட்சி ஆட்சியின் நிதிநிலை அறிக்கைகளில் "மாநில சுயாட்சி"யை வலியுறுத்தி அறிவித்திருந்ததையும் - இப்போது அதை மாற்றிக் கொண்டு "மத்தியில் கூட்டாட்சி" என்று பம்மாத்து செய்வதையும் காண்பதற்குப் பரிதாபமாகத்தானிருக்கிறது. மத்தியில் கூட்டாட்சி என்றாலே அது மாநிலங்களுக்குச் சுயாட்சி அளிக்கப்பட்டால் மட்டுமே சாத்தியமாகும் என்ற அரிச்சுவடி கூடத் தெரியாமல், தி.மு.க. வலியுறுத்துகிற மாநில சுயாட்சியை அ.தி.மு.க.வும் வலியுறுத்துவது கூடாது என்று கருதி, தலையைச் சுற்றிவளைத்து மூக்கைத் தொடும் புத்திசாலித்தனத்தைக் கையாண்டிருக்கிறது. கழகத்தின் நீண்டகாலக் கொள்கை முழக்கங்களில் ஒன்றான "மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்பதை அப்படியே "காப்பி" அடித்து விட்டதாகச் சொல்வார்களே என்பதற்காக,

"மாநில சுயாட்சி" என்பதை மட்டும் தேர்தல் அறிக்கையில் கை விட்டுவிட்டு, "மாநில அரசுகளின் உரிமைகளில் தலையிடாத கூட்டாட்சி" என்று மழுப்பல் வேலை செய்திருக்கிறார்கள். அப்படியானால், கடந்தகால அ.தி.மு.க. ஆட்சி நிதி நிலை அறிக்கைகளில், "மாநில சுயாட்சி" என்ற சொற்றொடர் இடம் பெற்றது மக்களை ஏமாற்றும் மாய்மாலம்தானா என்பதையாவது விளக்கி விடையளிப்பார்களா?

மேலவை உறுப்பினராக நான் இருந்தபோது, எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்த நாவலரைப் பார்த்து நான் சொன்னேன், "பரவாயில்லை! இந்த அறிக்கையில் மாநில சுயாட்சியை ஒத்துக்கொண்டுள்ளீர்கள்" என்று! - அதற்கு நாவலர் நெடுஞ்செழியன் சொன்ன பதில் என்ன தெரியுமா? "இத்தனை நாள் எம்.ஜி.ஆர். மாநில சுயாட்சி என்றால் பிரிவினை வாதம் என நினைத்தார். அவருக்கு விளக்கமளித்த பிறகு, இப்போது மாநில சுயாட்சி என்ற சொற்றொடரை ஏற்றுக் கொண்டுள்ளார்" என்று நாவலர் விளக்கமளித்தது எனக்கு நினைவிருக்கிறது. அது மேலவை நடவடிக்கைக் குறிப்பிலும் இடம் பெற்றிருக்கிறது.

இப்படி அண்ணா முழங்கிய மாநில சுயாட்சிக் கொள்கையிலேயே குழப்பமுள்ளவர்கள்தான், அண்ணா பெயரால் கட்சி வைத்துக் கொண்டு, அவர்களையும் குழப்பிக் கொண்டு, மற்றவர்களையும் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையை முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துகளில் வெளியிட்டுள்ள ஒரு பத்திரிகை, (தினமணி) "நிலையான ஆட்சிக்காகவே பா.ஜ.க.வுக்கு ஆதரவு" என்று, அந்த அறிக்கையின் சாராம்சத்தைப் பிரசுரித்திருக்கிறது.

திரு. வாஜ்பய் அவர்களுக்கு தமிழ் தெரிந்து அவர் இதைப் படித்திருப்பாரேயானால், "அந்த நாள் ஞாபகம் வந்ததே, நண்பனே! நண்பனே!" என்று "சிவாஜி ஸ்டைலில்" நடந்துகொண்டே பாடியிருப்பார் அல்லவா?

வாஜ்பய் தலைமையில் கூட்டணி சேர்ந்து, அவர் ஆட்சி அமைக்க முடியாமல் அல்லாடவிட்டு, அவர் பாவம் அலையாய் அலைந்து -காத்துக் காத்து அவர் கண்ணும் பூத்துப்போன பிறகு ஆதரவுக் கடிதம் அனுப்பி - அதற்குப் பிறகும் அவர் நிம்மதியாக ஆட்சி நடத்த முடியாமல், தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வற்புறுத்தி,

அதற்கு அவர் சட்டப்படி சம்மதிக்க முடியாத காரணத்தால், அவர் ஆட்சியையே மாதக் கணக்கில் கூட நடத்த முடியாமல் கவிழ்த்த புண்ணியவதிகளும், புனிதவதிகளும் இப்போது புகலுகிறார்கள், நிலையான ஆட்சிக்காகவே பா.ஜ.க.வுக்கு ஆதரவு தருகிறோம் என்று!

இரண்டொரு மாதங்களுக்கு முன்புதான் இதே சென்னை மாநகரில் உள்ள சட்டப்பேரவையில், "மத்திய அரசில் ஒரு புதிய ஆட்சி அமைய வேண்டும் - பா.ஜ.க. தலைமை ஏற்காத, காங்கிரஸ் தலைமை ஏற்காத, ஜனதா தளம் தலைமை ஏற்காத ஒரு புதிய மத்திய அரசு உருவாக வேண்டும்" - என்று முழங்கியதோடு, "பா.ஜ.க., காங்கிரஸ், ஜனதா தளம் கட்சிகள் தேர்தல் நேரத்தில் இங்கே டெல்டா பகுதியில் ஓட்டு கேட்கப் போனால், தமிழக மக்கள் அவர்களை விரட்டி அடிப்பார்கள் என்பதை உறுதியாகச் சொல்கிறேன்" என்று 6-11-2003 அன்று ஜெயலலிதா கர்ச்சனை செய்ததை, இந்தத் தேர்தல் அறிக்கையில் இடம் பெறச் செய்யவில்லையே, ஏன்? ஏன்? என்ன காரணம்?

தேர்தல் அறிக்கை என்றால், தெளிவாகவும் தீர்க்கமாகவும் அமைய வேண்டுமேயல்லாமல், தனிப்பட்ட எவரையும் தாக்குகின்ற வகையில் அமைதல் கூடாது என்பது, தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளில் ஒன்றாக இருக்கிறதோ, இல்லையோ - மேடைப் பிரச்சாரங்களில்கூட அப்படி இருக்கக்கூடாது என்கிற விதிமுறையை, அச்சியற்றப்பட்ட ஒரு அறிக்கையில் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமென்று கூடவா, ஆட்சி நடத்துவோருக்குத் தெரியாது?

"அன்டோனியா மெய்னோ என்ற சோனியா" என திருமதி சோனியா காந்தி அவர்களைக் குறிப்பிட்டு, "அவர் இந்திய நாட்டின்மீது பற்றற்ற மன நிலை கொண்ட ஒருவர்" எனச் சுட்டிக்காட்டி, சுருக்கமாகத் "தேச விரோதி" எனக் குற்றஞ்சாட்டி தேர்தல் அறிக்கை வெளியிட்டிருப்பதைத் தேர்தல் ஆணையத் தலைமை ஏற்றுக் கொள்கிறதா என்பது நமக்கு விளங்கவில்லை. இத்தகைய தனியார் மீதான தாக்குதல் - கடுமையான தாக்குதல் - அனுமதிக்கப்படுகிற ஒன்று என்றால்,

"தேசப்பற்றில்லாதவர்" என்று கூறுவதற்குச் சமமான குற்றச்சாட்டுகளை, தேர்தல் பிரச்சாரங்களிலோ - தேர்தல்

அறிக்கைகளிலோ - எவர் மீதும் சுமத்திடும் வாய்ப்புக்கு வழி திறந்துவிட்டதாகவே ஆகிவிடும்.

இன்று அந்நியராக வர்ணிக்கப்படும் சோனியா காந்தியின் வீடு வரை சென்று, அவரைப் பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு 1999ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 15ந்தேதி, ஜெயலலிதா வேண்டிக் கொண்டபோது எடுத்த படம் அன்றைக்கு எல்லா ஏடுகளிலும் வெளிவந்ததே, இன்றைக்கு மட்டும் கசக்கிறதோ?

ஜெயலலிதா கட்சியின் இந்தத் தேர்தல் அறிக்கை ராஜீவ் கொலையையும், ஜெயின் கமிஷன் அறிக்கையையும் குறிப்பிடத் தவறவில்லை. அந்தப் பொய் மாயத்துடன் ஜெயலலிதா சேலம் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், பிரதமர் நரசிம்மராவ் முன்னிலையில், ராஜிவ் கொலையில் மூப்பனாருக்கும் சம்பந்தம் உண்டு என்று பேசியதையும் - அதன்பிறகு மூப்பனார் இருந்த காங்கிரசுடன் ஜெயலலிதா தேர்தல் உடன்பாடு கொண்டதையும் நினைவுபடுத்திக் கொள்வது நலம்.

என் செய்வது! ஞாபக மறதி மக்களுக்கு! அதனால்தானே,

"என் செல்வாக்கு உயர்வதைக் கண்டு என்மீது எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார்"

எனத் தன் கைப்படவே அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஜெயலலிதா எழுதிய கடிதத்தைக்கூட மக்களில் ஒரு பகுதியினர் மறந்து விட்டார்கள்.

அப்படிப்பட்ட மக்களிடம், இப்படிப்பட்ட தேர்தல் அறிக்கைகள் எத்தனை வேண்டுமானாலும் வெளியிடலாம் - அந்தத் தைரியத்தில்தான் அ.தி.மு.க., இன்னமும் ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது.

அன்புள்ள,

மு.க.

8-3-2004

42244

க 894.8116
கருணா, 37

3038. தேர்தல் அறிக்கையில் தில்லுமுல்லு!

(நேற்றைய தொடர்ச்சி)

உடன்பிறப்பே,

"தான் திருடி; பிறரைத் திருடி" என்றாளாம் என்பதாக ஒரு பழமொழி உண்டு.

அந்தப் பழமொழிக்கு நூற்றுக்கு நூறு சதவீதம் பொருத்தமான பாத்திரம், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா என்று, எடுத்த எடுப்பிலேயே அவரை அறிந்தோர் அனைவரும் கூறிவிடுவர்.

என்னவோ மத்திய அரசிடம் வாதாடிப் போராடி தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மாற்றுவதற்குக் கிழி கிழியெனக் கிழித்துவிட்டதாக நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையிலே தன்னைப் பற்றிய நாமாவளி பாடிக் கொண்டிருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதும், குறிப்பாக சோனியா காந்தி மீதும் புழுதிவாரித் தூற்றிய பகுதிகள் நீங்கலாக, அந்தத் தேர்தல் அறிக்கையில் மற்றவை பெரும்பகுதி தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையைப் பார்த்து "ஈயடித்தான் காப்பி" அடித்தவை என்பது அதைப் படித்துப் பார்த்தவர்களுக்கு எளிதாகவே புரிகிற உண்மை விபரமாகும்.

தன்னைக் குறித்த சுயபுராணம் பாடிக் கொண்டவர், தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க போன்ற கட்சிகள் மத்திய அமைச்சரவையிலேயிருந்து என்ன சாதித்தன என்று ஒரு சொத்தை வாதத்தையும் அந்தத் தேர்தல் அறிக்கையில் இணைத்து, நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமேயென்ற நக்கீரன் என நினைத்துக் கொண்டு கேள்விகளை எழுப்பியிருக்கிறார் ஜெயலலிதா!

"மைய ஆட்சியில் இடம் பிடித்து தமிழ் நாட்டு மக்களின் நலனைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, தமிழ்நாட்டுக்குப்

பாதக மான நடவடிக்கைகளில்தான் கடந்த ஐந்தாண்டு காலமாக இக்கட்சிகள் ஈடுபட்டன"

என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அந்த அறிக்கையில் பாதகமான நடவடிக்கை என்று குறிப்பிடுவது, புதிய தலைமைச் செயலகம் கட்டுவது என்ற பெயரால் இராணி மேரிக் கல்லூரியைத் தரைமட்டமாக்கி, அந்த வரலாற்றுப் புகழ் பெற்ற கல்வி நிலையத்தைக் காணாமற் போகச் செய்ய இருந்த காரியத்தைத் தடுத்து நிறுத்தியதும், மாசு கட்டுப்பாடு விதிமுறைகளை மீறலாகாது என்பதைச் சுட்டிக்காட்டும் சட்டத்தை விளக்கி, அண்ணா பல்கலைக் கழக வளாகத்தைச் சின்னா பின்னமாக்காமல் தடை பெற்றிருப்பதும் ஆகும். இதைப் பாதகமென்று கூறுவோர், தாங்கள் அடைய இருந்த சாதகத்திற்குப் பாதகம் ஏற்பட்டுவிட்டதே என்ற கவலையில்தான் அப்படிச் சொல்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாதா என்ன?

மதவாதத்தை மெல்ல மெல்ல ஆனால், உறுதியாகப் பரப்புதல் - சிறுபான்மையோர் உரிமைகளை வலி தெரியாமல் நசுக்குதல் - கலாச்சாரத்தையும், வரலாற்றையும் மாறு கால் மாறு கை வாங்கி மாற்றிப் போடுதல் - போன்ற பச்சை ஆர்.எஸ்.எஸ். கருத்துகளை, கோபுர உச்சியில் ஏற்றிக்கொண்டிருந்த நிலையிலும் - தே.ஜ.கூ. ஆட்சியில், முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதி போல - சேற்றிலே பூத்திடும் செங்கழுநீர் மலர் போல - தமிழக தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., கட்சிகளைச் சார்ந்த அமைச்சர்களால் நாட்டுக்குத் தேவையான நற்பணிகள் நடைபெற் றிருக்கின்றன என்பதற்கு இதோ சான்றுப் பட்டியல்:-

நமது தி.மு.கழகத்தைச் சார்ந்தவர்கள், மத்தியில் அமைந்த ஆட்சிகளில் அமைச்சர்களாகப் பொறுப்பேற்ற போதெல்லாம் ஆற்றிய பணிகள், அவை எவ்வாறு நாட்டுக்கு அணிகளாக அமைந்தன என்பதை நினைவிருக்கும் வரையில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

* திராவிட முன்னேற்றக் கழகம், மத்திய ஆட்சியில் பங்கு பெற்றிருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழக நலன்களுக்கான திட்டங்களைப் போராடிப் பெறுவதில் முனைந்து செயல்பட்டிருக்கிறது. 1970களில் சேலம்

உருக்காலைத் திட்டத்தை அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம் வாதாடிப் பெற்றுத் தந்தது தி.மு.கழக ஆட்சி.

* மத்தியில் தேசிய முன்னணி அரசில், திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர் இடம் பெற்றிருந்ததாலும், மாநிலத்தில் தி.மு.கழக ஆட்சியில் சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாலும் தமிழகத்தின் நீண்ட நாள் கோரிக்கையான காவிரிப் பிரச்சினைக்கான நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

* காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு முறையாக செயல்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்காக, பிரதமர் தலைமையில் காவிரி ஆணையம் உருவாக்கப்பட்டதும் - காவிரி கண்காணிப்புக்குழு உருவாக்கப்பட்டதும் கழகத்தின் முயற்சியால்தான்.

* நம்நாட்டில் காப்புரிமை (Copy Right), தனியுரிமை (Patent Right) ஆகிய பிரச்சினைகளில் ஏற்படும் சிக்கல் களுக்குத் தீர்வுகாணும் வாரியமான முதலாவது அறிவுச் செல்வக் காப்புரிமை மேல்முறையீட்டு ஆணையம்" (Intellectual Property Appellate Board) சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

* சுமார் 780 கோடி ரூபாய் செலவில், 14 மாநிலங்களில் 28 வேளாண்மைப் பொருள் ஏற்றுமதி மண்டலங்கள் உருவாக்கப்பட்டன.

* பல ஆண்டு காலம் கிடப்பில் போடப்பட்டிருந்த சமூக நீதியின் ஒளிவிளக்கான மண்டல் கமிஷன் அறிக்கை, தி.மு.க. ஆட்சியில் மாநிலச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க பிரதமர் வி.பி.சிங் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

* திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில், 2200 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் 8000 கோடி ரூபாயில் தொழிற் பூங்கா ஒன்று சிறப்புப் பொருளாதார மண்டலமாக அமைக்கப்பட மைய அரசு அனுமதித்து அதற்கான தொடக்கப் பணிகள் நடைபெறவும், இஃதன்னியில், இந்தியா முழுமையும்

மேலும், 12 இடங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்பட முயற்சி எடுத்தவர்கள் முன்னேற்றக் கழக அமைச்சர்கள்தான்.

* தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் எடுத்த முயற்சியால் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கென புதிய தொழிற் கொள்கை உருவாக்கப்பட்டது.

* 2001 - 2002 ஆண்டில் மட்டும், 2 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பீடு அளவுக்கு அன்னிய முதலீடு நமது நாட்டிற்கு வரப்பெற்றது.

* சென்னையை அடுத்து நந்தம் பாக்கத்தில் மிகப் பெரிய நிரந்தர வர்த்தக மையம் (Trade Centre) ரூபாய் 100 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருவது கூட, தேர்தல் அறிக்கை எழுதியவர்களுக்குத் தெரியாதா?

* சென்னை மாநகரிலுள்ள கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு, ஓட்டேரி கால்வாய், மாம்பலம் கால்வாய், வீராங்கால் ஓடை, கேப்டன் காட்டன் கால்வாய் ஆகிய நீர்வழித் தடங்களைத் தூய்மைப்படுத்துவதற்கென மத்திய அரசு 100 சதவிகித மானியமாக ரூ.491 கோடி வழங்கியுள்ளது.

* தமிழகத்தில் ஓடும் நதிகளான தாமிர பரணி, வைகை, காவிரி ஆகிய நதிகளைத் தூய்மைப்படுத்துவதற்கென ரூ.611 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இராமேஸ்வரம், திருச்செந்தூர், நெல்லை, மதுரை, ஈரோடு, குமார பாளையம், பள்ளிபாளையம், பவானி, கரூர், திருச்சி, தஞ்சை, கும்ப கோணம், மயிலாடுதுறை ஆகிய நகரங்களில் உள்ள நீர்நிலைகளில், கழிவுநீர் கலப்பதைத் தடுத்து நிறுத்தி தூய்மைப்படுத்த ஒரு பெருந்திட்டம் வகுக்கப்பட்டது.

* ஊட்டி, கொடைக்கானல் ஆகிய நகரங்களில் உள்ள ஏரிகளைத் தூய்மைப்படுத்துவதற்காக, சுமார் ரூபாய் 8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டம்.

* மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனவள அமைச்சகத்தின் சார்பில் கடலூர், வேம்பார், நாகப்பட்டினம்

ஆகிய இடங்களில், எண்ணெய்ப் பொருட்கள் இறக்குமதி வசதிகளுக்கேற்ப துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கு அனுமதியும், மணலியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய விரிவாக்கத்திற்கு அனுமதியும், கடலூரில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கான அனுமதியும் - நெய்வேலி, தூத்துக்குடி, வடசென்னை, இராமநாதபுரம், திருவள்ளூர் ஆகிய இடங்களில் மின்நிலையங்கள், கிழக்கு கடற்கரைச் சாலை விரிவாக்கம், சென்னை விமானநிலையம் விரிவாக்கம் உள்ளிட்ட திட்டங்களோடு, தமிழகத்துக்கு மட்டும் ரூ.26,210 கோடி மதிப்பீட்டில் 142 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

* உலகிலேயே முதன்முறையாக, தேசிய பல்லுயிரி வளச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அதனடிப்படையில் தேசிய பல்லுயிரி வள ஆணையம் (National Biodiversity Authority) உருவாக்கப்பட்டு, அதன் தலைமையகம் சென்னையில் அமையப்பெற்றுள்ளது.

* இந்தியாவிலேயே முதன்முறையாக, தேசிய கடலோர மற்றும் கடல்வாழ் உயிரின ஆய்வு மையம் (National Institute of Coastal and Marine Biology) கன்னியாகுமரியில் அமைக்கப்பட்டுள்ளது.

* வனப்பகுதிகளில் வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கு என இந்தியா முழுவதிலும் கூட்டு வன மேலாண்மைக் குழுக்களை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அமைத்தது. தமிழகத்தில் மட்டும், 1862 கூட்டு வன மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 72290 ஆதிதிராவிடர் குடும்பங்களும், 11484 பழங்குடியினர் குடும்பங்களும் பயன்பெற்றுள்ளன. மேலும், இத்திட்டத்தில் பங்கு கொண்டுள்ள 5.32 இலட்சம் பேர்களில் 2.60 லட்சம் பேர் பெண்கள் ஆவர்.

* திண்டுக்கல்லில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளி வரும் கழிவுநீரைத் தூய்மைப்படுத்த, ரூ.4 கோடியில் சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டு வருகிறது.

* தமிழகத்தின் 102 நகரங்களிலும் மற்றும் சென்னை, மதுரை, திருநெல்வேலி, கோவை, திருச்சி, சேலம் ஆகிய மாநகராட்சிப் பகுதிகளிலும் பசுமை வளையம் அமைக்க ரூ. 4 கோடி வழங்கப்பட்டது.

* திருச்சியில் உள்ள கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி, சுமார் 100 கோடி ரூபாய் மத்திய அரசின் நிதியுதவியில் அகில இந்திய மருத்துவக் கல்வி ஆராய்ச்சிக் கழகமாக உயர்த்தப்பட்டது.

* பெரம்பலூரில் ரூ.1.5 கோடி மதிப் பீட்டில் விபத்துக்கான அவசர சிகிச்சை மையம் தொடங்கப்பட்டுள்ளது. இதே மதிப்பீட்டில் செங்கற்பட்டு, விழுப்புரம், ஓமலூர் ஆகிய தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள நகரங்களிலும் அவசர சிகிச்சை மையம் தொடங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

* சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனை, மதுரை அரசு மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளுக்கு புற்றுநோய் சிகிச்சைக்காக தலா ரூ.1.5 கோடி செலவில் நவீன கதிரியக்கக் கருவிகள் வழங்கப்பட்டன.

* மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் சார்பில் குடிநீர் மற்றும் முழு சுகாதாரத் திட்டங்களுக்காக (Drinking Water and Total Sanitation), ராஜீவ்காந்தி பெயரால் அமைக்கப்பட்ட முன்னோடித் திட்டத்தின் கீழ்,

பெரம்பலூர்	வேலூர்	தருமபுரி	கடலூர்
காஞ்சிபுரம்	திண்டுக்கல்	கோவை	மதுரை
தேனி	விருதுநகர்	விழுப்புரம்	சேலம்
கரூர்	சிவகங்கை		

ஆகிய மாவட்டங்களுக்கு, சுமார் ரூபாய் 900 கோடி வழங்கப் பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்தனையும் நமது தமிழகத்திலிருந்து மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த தி.மு.க. அமைச்சர்களின்

வலியுறுத்தலாலும், பா.ம.க., ம.தி.மு.க., அமைச்சர்கள் வைத்த கோரிக்கைகளாலும், நாட்டுக்கு, குறிப்பாகத் தமிழ்நாட்டுக்குக் கிடைத்தவைகளாகும். கழக அமைச்சர்கள் முயற்சியால் மட்டுமே உருவானவைகளை மட்டுமே குறிப்பிட்டுள்ளேன். விரிவுக்கஞ்சி வேறு கட்சி அமைச்சர்களின் பணி பற்றிக் குறிப்பிட இயலவில்லை.

இதனால் நமது கோரிக்கைகள் முழுதும் முற்றுப் பெற்றதாகப் பொருளில்லை.

இவற்றுக்கு மேலாக, நமது மொழிக் கொள்கையில் பெறவேண்டிய வெற்றி - ஆட்சி, உண்மையிலேயே மதச்சார்பற்ற ஆட்சியாக அமைய வேண்டுமென்பதில் அடைய வேண்டிய வெற்றி - இவை வெகு தொலைவில் இருப்பதாக ஒரு உணர்வு மட்டுமல்ல, அதற்கான வழியிலும், மத வெறிக் குறுக்கீடுகள் மையங்கொண்டிருப்பதும் அதற்கு இன்றுள்ள மத்திய அரசு துணை நிற்பதும் - அதனை எதிர்த்திடும் காரணத்திற்காகவே தி.மு.க. போன்ற முற்போக்கு இயக்கங்களை தே.ஜ. கூட்டணித் தலைவர்கள் வெறுத்து ஒதுக்குவதும், என முடிவெடுத்துள்ளதைப் புரிந்துகொண்டு வெளியேறி முகிழ்த்திருப்பதே ஜனநாயக முற்போக்குக் கூட்டணியாகும்.

இந்த அணியினரை அவதூறு பொழிந்து அர்ச்சிப்பதால், ஆய பயன் எதுவுமில்லை ஆளுங்கணத்தார்க்கு - என்ற அறிவுரையுடன் இக் கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

9-3-2004

3039. இவர்தான் அவர்; அவர்தான் இவர்!

உடன்பிறப்பே,

நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழக வேட்பாளர்களின் பட்டியலை, நான் தலைமைக் கழகச் சார்பாக மார்ச் 1ஆம் நாள் வெளியிட்ட பிறகு, ஆலடி அருணா அவர்கள், பா.ஜ.க.வுக்கும் அதன் கூட்டணிக் கட்சியான அ.தி.மு.க.வுக்கும் தேர்தல் பிரச்சாரம் செய்யப் போவதாகவும், தி.மு.கழகம் பா.ஜ.க. உறவை முறித்துக் கொண்டு தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகி இன்றைக்கு வாஜ்பய், அத்வானி போன்றவர்களை எதிர்த்து, காங்கிரசுடன் உடன்பாடு கொண்டு ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அமைத்திருப்பது தவறு என்பதாகவும் அறிக்கைகள் தந்து கொண்டிருப்பதையும், அவற்றை வரவேற்று பா.ஜ.க. தலைவர்கள் பேட்டிகள் அளிப்பதையும், தமிழ் ஆங்கில ஏடுகள் பெரிய அளவிலே முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிப்பதையும் நான் ஆச்சரியமாகக் கருதவில்லை. நீயும் ஆச்சரியப்படமாட்டாய் என்பது எனக்குத் தெரியும்.

பா.ஜ.க.வும் இடம் பெற்றுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தொடர்பைத் துண்டித்துக் கொள்ள வேண்டுமென்று தி.மு.க.வை இடித்துரைத்து அறிவுரை கூறி சிறப்புக் கட்டுரைகள் தீட்டிய ஏடுகள் பல! இன்றைக்கு நாம் அந்த நிலையை மேற்கொண்டு - ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அமைத்த பிறகு, நம்மை நோக்கி வீசப்படும் துருப்பிடித்த ஆயுதங் களைக் கூடப் பொறுக்கி எடுத்து அவைகளுக்குக் கூர் ஏற்றி நம் மீது வீசுவதற்கு ஆயத்தமாவதைக் காணவும் முடிகிறது! கண்டு சிரிக்கவும் முடிகிறது.

வாஜ்பயை எதிர்ப்பதா? அத்வானியை எதிர்ப்பதா? எதிர் அணி அமைத்து நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதா? என்று கேட்பதும், அதற்கு ஆரவாரம் செய்து கையொலி எழுப்பி, என்றைக்குமே நம் நிழலைக் கூடப் பிடிக்காத “நேர்மையாளர்கள்”

சிலர் கெக்கலி கொட்டுவதும் வாடிக்கை! அந்த வேடிக்கை இப்பொழுதும் நடைபெறுகிறது.

அவர்களின் கவனத்திற்கும், உன் ஞாபகத்திற்கும் அண்மைக் காலத்தில் நடைபெற்ற இரண்டு மாநாடுகளைக் கொண்டு வருகிறேன்.

சில மாதங்களுக்கு முன்பு விழுப்புரத்தில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் (21-9-2003) அன்று, ஆலடி அருணா பேசியது வருமாறு, அப்படியே ஒலிநாடாவில் உள்ளது.

பேச்சின் ஆரம்பமே சுவையானதுதான் -

"வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கியிருக்கும் வருங்கால நம்பிக்கை நட்சத்திரம், வரலாற்று எழுஞாயிறு, அருமைத் தம்பி தளபதி ஸ்டாலின் அவர்களே!"

எனத் தொடங்கி, பேச்சின் முக்கிய அம்சமாகக் குறிப்பிட்டவைதான் இப்போது தி.மு.கழகம், "ஜனநாயக முற்போக்குக் கூட்டணி" அமைத்து, தேர்தல் களத்தில் திரு.வாஜ்பய், திரு.அத்வானி போன்றவர்களை எதிர்க்கக் கூடிய நிலைக்குத் தொடக்கம் செய்தவை என்று கூடக் கூறலாம். அதையும் கேட்போமே!

"முதல்வர் செல்வி ஜெயலலிதா திருந்தி விடுவார் என்று நான் கருதவில்லை. அவர் திருந்த மாட்டார். ஆனால், சர்வாதிகாரிகளை சரித்திரம் தண்டிக்காமல் விட்டதே யில்லை. எனவே ஜெயலலிதா, தண்டனை யிலிருந்து ஒருநாளும் தப்ப முடியாது. ஆனால் இவைகளையெல்லாம் மறந்து ஆட்டம் போடுகிறார். எனக்குள் இருக்கும் ஆதங்கம், ஜெயலலிதா ஒரு மாநில அரசாங்கத்திற்கு தலைவி. அவரிடம் போலீஸ் படை உள்ளது. ஆனால் நாம், மத்திய அரசாங்கத்தில் இருக்கிறோம். மத்திய அரசாங்கம் நமக்குச் சொந்தம். மத்திய அமைச்சரகத்தில் 3 அமைச்சர்கள் நமக்குள்ளனர். அ.தி.மு.க.வில் ஒரு முதலமைச்சர்தான். நம்மிடத்தில் பிரதமரே இருக்கிறார். பரிதாபம் பார்த்தீர்களா? தோழர்களே; இந்த ஆட்டக்காரியின் கொட்டத்தை இந்த அரசாங்கத்தை வைத்துக்கொண்டு அடக்க

முடியவில்லை. ஏன்? பிரதமரை வைத்துக் கொண்டு நாம் அடக்க முடியவில்லை.

ஒரு மத்திய அரசு நம் கையில் உள்ளது. அந்த அரசுக்குச் சோதனை வந்த நேரமெல்லாம், கலைஞர் கை கொடுத்திருக்கிறார். நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வந்தபோதெல்லாம், வீழாத வகையில் பார்த்துக் கொண்டார். தேசிய ஜனநாயக முன்னணியில் அடிப்படைத் திட்டங்கள் வரும்போதெல்லாம் ஆதரவு கொடுத்தார். இவ்வாறு ஆதரவு கொடுத்த பிறகும், நண்பர்களே, இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஜெயலலிதா, கலைஞரை, எவனோ ஒரு ஊழல் பேர்வழி 4 மணிக்கு கொடுத்த பொய்ப் புகாரை வைத்துக் கொண்டு இரவிலே கைது செய்து கொடுமைப்படுத்தினார். அதைத் தடுக்கச் சென்ற மத்திய அமைச்சர்களை அடித்து விரட்டி, கலைஞரை சிறையில் தள்ளினார்கள் என்றால், இந்தக் கொடுமை ராணுவ ஆட்சியிலும் நடந்திருக்காது!

சுதந்திர காலத்திலிருந்து எந்த மத்திய அமைச்சர்களாவது சிறை வைக்கப்பட்டிருக்கிறார்களா? அன்பு சகோதரர் முரசொலி மாறன், மருத்துவமனையில் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

அருமைச் சகோதரர் டி.ஆர். பாலு, வேலூர் சிறையில் மாநில அரசால் கைதியாக இருந்தார். நம்மிடத்திலும் அரசாங்கம் இருக்கிறது. அந்த அரசாங்கத்தில் நமக்கும் பங்கு இருக்கிறது. இதைத்தான் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஏதோ ஆலடி அருணா, தேடிப்பிடித்து உறவைத் துண்டிப்பதற்குப் பேசுகிறான் என்று யாரும் காரணம் கற்பிக்க வேண்டாம். பொடா சட்டம் பயன்படுத்தக் கூடாது, அது தேவையில்லை என்று சொன்னது மட்டுமல்ல, ஒரு கோடி பேர்கள் கையெழுத்திட்டு, வைகோவை விடுதலை செய் என்று சொன்னார்கள். அந்த மனுவில் முதல் கையெழுத்து கலைஞர்தான் போட்டார். வைகோவை விடுதலை செய்யக் கோரி நாடாளுமன்றத்தில் 300 பேர் சொல்கிறார்கள். அதற்கு

உள்துறை மந்திரி பொறுப்பு வகித்துவரும் அத்வானி கொடுத்த மதிப்பென்ன? பெருமதிப்பிற்குரிய வாஜ்பய் அவர்கள் கொடுத்த மதிப்பென்ன? இந்தக் கோடி பேர்கள் என்ன தெருக்கோடிகளா? இவர்களின் கையெழுத்துக்கு மதிப்போ, மரியாதையோ இல்லையா?

அரசியல் சட்டத்தில் 256வது பிரிவின் படி, மத்திய சர்க்கார் நிறைவேற்றிய சட்டத்தை சரிவர மாநில அரசு அமல்படுத்துகிறதா, இல்லையா என்பதைக் கண்காணிக்கும் அதிகாரம் மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. மாநில அரசு அந்த அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தும்போது, மத்திய சர்க்கார் அரசியல் சட்டம் 256வது பிரிவில் விதியின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம். அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, பொடா சட்டத்தில் கைதானவர்களையெல்லாம் விடுதலை செய்யலாம். அதற்கு இன்னொரு விதியும் உள்ளது. 356வது பிரிவைப் பயன்படுத்தி ராணுவத்தையே அனுப்பி வேலூர் சிறையில் இருக்கும் வைகோவை வெளியில் கொண்டுவர மத்திய அரசிற்கு அதிகாரம் உள்ளது. இதை நீங்கள் பயன்படுத்தினீர்களா? இல்லை. எனவேதான், கூட்டு உண்டா இல்லையா? நட்பு உண்டா இல்லையா? உறவு உண்டா இல்லையா என்ற சந்தேகம் எங்களுக்கு உண்டாகிறது. எங்களுக்கு நெருக்கடி வந்த போதெல்லாம், எங்கள் சுயமரியாதைக்கு சோதனை வந்த போதெல்லாம் மத்திய அரசு எங்களை கைவிட்டுள்ளது. எனவே நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் ஆட்சியைக் கவிழ்த்தவர்கள், உங்களை விமான நிலையத்தில் வரவேற்க மறுத்தவர்கள், உங்களோடு மேடையில் அமர மறுத்த முதல்வரை, நீங்கள் மறை முகமாக ஆதரிக்கிறீர்கள் என்பது உண்மை. நான் பகிரங்கமாக குற்றஞ்சாட்டுகிறேன்.

மாயாவதி உத்திரபிரதேச முதலமைச்சராக இருந்தபோதுதான், அவர் மீது சி.பி.ஐ. விசாரணை நடத்தியது. அவரது அமைச்சர்கள் மீது விசாரணை நடத்தியது. மாயாவதிக்கு எதிராக நீங்கள் காட்டிய

வேகத்தை, ஜெயலலிதாவுக்கு எதிராக எடுத்தீர்களா என்றால் இல்லை. இந்தக் கேள்வியை எதிரே உள்ள லட்சோப லட்சம் தொண்டர்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கும் இந்த ஆதங்கம் உள்ளது.

மாயாவதி மீது வழக்கு போட்ட மத்திய அரசு, ஜெயலலிதா மீது மட்டும் ஏறத்தாழ ஏழு வழக்குகள் பதிவு செய்து, ஐந்தாண்டுகளாக ஒரு வழக்கு கூட விசாரணைக்கு கொண்டுவரவில்லை. மேலும் 16 வழக்குகள் ஸ்பெஷல் டைரக்டர் என்போர்ஸ் மென்ட் கீழ் விசாரணையில் உள்ளது. இதற்குத் தொடர்புடைய பணம் எவ்வளவு தெரியுமா? 700 கோடியாகும். ஐந்தாண்டுகளாக விசாரணையே இல்லை. அப்படியானால் நான் கேட்கிறேன். இந்த அம்மையாருக்கு மறைமுகமான ஒத்துழைப்பு கொடுத்து ஆதரவு அளிப்பது ஏன்? தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடுகிறதா? இல்லை, பிரிட்டிஷ் ராஜ்யம் போய்விட்டது, "பிராமின் ராஜ்யம்" வந்துவிட்டது என்று சொல்லவா?"

உடன்பிறப்பே! தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழு டிசம்பர் 20 அன்று கூடி முடிவெடுப்பதற்கு முன்பே, முந்திக் கொண்டு, பா.ஜ.க. இணைந்துள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி உறவை முறித்துக் கொள்ள ஆலடி அருணா அவர்கள் விழுப்புரம் மாநாட்டில் ஆறு மாதத்திற்கு முன்பே விடுத்த அறைகூவல்தான் இது.

அடுத்து, இன்று என்னையும், உன்னையும், நமது கழகத்தையும் மார்ச் 1ந்தேதிக்குப் பிறகு கடுமையாகத் தாக்குகிறாரே, அவர், இதற்குச் சில நாட்களுக்கு முன்பு, விருதுநகரில் பிப்ரவரி 23ஆம் தேதி அன்று நடைபெற்ற தென்மண்டல தி.மு.க. மாநாட்டில் என்னைக் குறித்து எவ்வளவு இனிமையாகப் பேசினார்!

அவற்றில் இதோ சில துளிகள் :-

★ தி.மு.கழகம், தேசிய நோக்கத்தோடு, தன்னுடைய கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் செயல்படுகின்ற தலைமையைப் பெற்றிருக்கின்றது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

★ இட ஒதுக்கீடு கொள்கை இந்தியா முழுவதும் எதிரொலிக்கிறதென்றால், அது தி.மு.கழகத்தின் சாதனை, டாக்டர் கலைஞர் அவர்களின் சாதனை.

★ பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்ட ஒரு அம்பேத்கர் உண்டென்றால், அந்த அம்பேத்கர் டாக்டர் கலைஞர் என்று பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

★ மாநில சுயாட்சி கொள்கைக்கு வடிவம் கொடுத்து வரலாறு படைத்த ஒரே தலைவர் கலைஞர்தான்.

★ கலைஞரை மதிக்காமல், தி.மு.க.வை மதிக்காமல் மத்தியிலே யாரும் ஆட்சி நடத்த முடியாது.

உடன்பிறப்பே! அன்றைய இனிமைக்கும், இன்றைய கடுமைக்கும் அவர் சொல்லும் காரணங்கள் எதுவும் உண்மையல்ல! திருச்செந்தூர் தொகுதி வேட்பாளராக அவர் அறிவிக்கப்படாததுதான் உண்மையான காரணம் என்பதை உணர்ந்து, அவரை அணைக்கத் துடிப்பவர்கள் எச்சரிக்கையாக இருந்தால் சரி!

எப்படியோ, நாம் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சியுடன் கொண்டிருந்த கூடா நட்பைத் துண்டித்துக் கொள்ள, அருணாவின் விழுப்புரம் மாநாட்டுப் பேச்சு ஒருவகையில் தூண்டுகோலாயிருந்ததை மறந்து விட முடியாது.

அன்புள்ள,

மு.க.

10-03-2004

3040. முகம் மலர்ந்திடும் மூவருலா!

உடன்பிறப்பே,

மாநகர் சென்னையில், மகா சமுத்திரம் போல் கூடிய கழக வேட்பாளர்கள் அறிமுகப் பொதுக் கூட்டத்திற்கு மறுநாள், 10.3.2004 அன்று காலை, அண்ணா அறிவாலயத்தில் முரசொலி மாறன் வளாகம் கூட்ட அரங்கில், கழகத்தின் 15 வேட்பாளர்களும், அவர்கள் போட்டியிடும் தொகுதிகளுக்குத் தொடர்புடைய மாவட்டச் செயலாளர்களும் கொண்ட கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

அவரவர்கள் போட்டியிடும் தொகுதி நிலவரம் பற்றியும் - மக்கள் ஆதரவு பற்றியும் - பிரச்சினைகளுக்கு இடமின்றி கழக நிர்வாகிகள் தேர்தல் பணியைத் தொடர்ந்து ஆற்றுகிறார்களா என்பது பற்றியும் - கழக வேட்பாளர்கள் மட்டுமேயன்றி, பக்கத்து தொகுதிகளில் போட்டியிடும் நமது கூட்டணி வேட்பாளர்களுக்கும் சேர்த்துப் பணியாற்றும் கடமை உணர்வைப் பெற வேண்டும் என்பது பற்றியும் மாவட்டக் கழகச் செயலாளர்களிடம் விவாதித்ததுடன், இன்னொரு நாள் "நாமினேஷன்" வேட்பு மனு தாக்கல் எல்லாம் முடிந்தவுடன், மாவட்டக் கழகச் செயலாளர்களின் கூட்டத்தை மீண்டும் கூட்டிக் கலந்து பேசிடுவதென்றும் முடிவெடுக்கப் பட்டுள்ளது.

முக்கியமாக, தேர்தலில் நிற்பதற்கு ஒவ்வொரு தொகுதியிலும் பலர் விருப்ப மனு அளித்திருந்தார்கள் அல்லவா? அவர்களில் வாய்ப்பு கிடைக்காதவர்கள் தேர்தல் பணி ஆற்றுகிறார்களா என்ற விபரங்களும் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கு மன நிறைவான பதில்களே அந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் கிடைத்துள்ளன.

இந்தச் செய்திதான் என் செவிகளுக்கு இனிமையாகவும், சிந்தைக்குத் தேனாகவும் அமைந்தது என்று சொல்லலாம். இதற்கும் மேலாக நான் உனக்கு ஒன்றைச் சொல்லியாக வேண்டும்.

கழகச் சார்பில் போட்டியிட வாய்ப்பு பெற்றவர்கள் 15 பேர் என்றால், வாய்ப்பு பெறாதவர்கள் சுமார் 300 பேர் அந்தப் பதினைந்து

தொகுதிகளிலும் கழக வெற்றிக்காக ஒத்துழைக்கிறார்கள் என்பது ஒரு வகையில் மகிழ்ச்சி தருகிறது என்பதுடன், அதனினும் கூடுதலான மகிழ்ச்சியைத் தரக் கூடிய இனிய செய்தியும் உண்டு.

கடந்த நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் என் அன்பு உடன்பிறப்புகள் மூவர், இந்த முறை போட்டியிடுவதற்கு வாய்ப்பில்லாமல், அடுத்த வாய்ப்பு வரட்டும் என்று காத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

★ ஜெயசீலன்

★ வெற்றிச்செல்வன்

★ ஆதிசங்கர்

இந்த மூவரும் புதிதாக வாய்ப்பு கேட்டவர்கள் அல்லர். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், எம்.பி.க்களாக இருந்த வாய்ப்பை இழந்தவர்கள். அவர்களுக்குச் சில சூழ்நிலைகள் காரணமாக மீண்டும் போட்டியிட வாய்ப்பளிக்கப்படவில்லை என்பதற்காக, வருத்தமோ, வாட்டமோ என் மீதும், கழகத்தின் மீதும் கோபமோ கொள்வதற்குக் காரணம் உண்டு என்ற போதிலும் - அந்த உடன்பிறப்புகள் அதுபற்றிக் கவலையே கொள்ளாமல், "பதவி என்பது துண்டு போன்றது - கொள்கை என்பது வேட்டி போன்றது - எனவே பதவி இல்லாமற் போயினும், கொள்கையில்லாமல் வாழ்வது வாழ்க்கையாகாது" என்று அண்ணா சொன்னதை நெஞ்சில் பதித்து, தேர்தலில் கழக வெற்றிக்காக - கூட்டணி வெற்றிக்காகக் கடுமையாக உழைக் கிறார்கள் என்பதைக் காணும் பொழுதும், கேட்கும் பொழுதும்,

"கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!"

எனப் புரட்சி கவிஞர் பாரதிதாசன், தமிழின் இனிமையைச் சிறப்பித்தாரே! அதனையொத்த இனிமையை என் இதயம் பெறுகிறது எனக் கூறிப் பெருமிதம் கொள்கிறேன்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, திருச்செந்தூர் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு, அப்போது கல்லூரி முதல்வராக இருந்த திரு.ஜெயசீலன் அவர்களைத் தேர்வு செய்து, அவர் திருச்செந்தூர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் வெற்றி பெற்றார். இந்தத் தேர்தலில் தனக்கு வாய்ப்பு கிடைக்காமற் போயினும், கழக வேட்பாளர் திருமதி ராதிகா செல்வியின் வெற்றிக்காகக் கடுமையாக உழைப்பதுடன், சென்னைக்கும் வந்து தயாநிதி மாறன் வெற்றிக்காகப் பணியாற்றிடுகிறார். முரசொலி மாறன் மீது கொண்டிருந்த உண்மையான பற்று காரணமாக!

இந்த முறையும், வாய்ப்புக்காக இறுதி நாள் வரை என்னைக் கண்டு கோரிக்கை வைத்த தம்பி வெற்றிச் செல்வன், இல்லை என்று முடிவானதும்; இனி தம்பி சுகவனம் வெற்றிக்காகத் தொகுதியைச் சுற்றி வருவேன் எனத் தொண்டாற்றத் தொடங்கியுள்ளார்.

ஆர்வப் பெருக்கின் அடையாளச் சின்னமான தம்பி ஆதிசங்கரும், நான் அளித்த விளக்கத்தை யேற்றுக் கொண்டு தம்பி வேங்கடபதியின் ஆற்றலைக் கழகம் பயன்படுத்திக் கொள்ள இடமளித்ததுடன், கடலூர் தொகுதியில் கழக வெற்றிக்காக கங்கணம் கட்டிக் கொண்டு தேர்தல் களம் புகுந்துள்ளார்.

எந்த நிலையிலும் என் அன்பு உடன்பிறப்புகள், தங்கள் குருதியுடன் கலந்த கொள்கை உறுதியுடன் திகழ்வார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் எத்தனையோ உள்ளன எனினும்,

இந்தத் தேர்தல் களத்தில் இவர்கள் வழங்கும் கள்ளங் கபடமற்ற வெள்ளையுள்ளத்தின் பிரதிபலிப்பான இந்த உழைப்பை, "மூவருலா" என்று கூறும் போது என் முகமும் மலருகிறது! உன் முகமும் மலருகிறது - இந்த மலர் மணம்தான் எவ்வளவு இனிமை தருகிறது!

அன்புள்ள,

மு.க.

12-03-2004

3041. அனுப்பொழுதும் அயராது ஆயத்தமாகுக!

உடன்பிறப்பே,

தர்மபுரி இ.வி. இராஜசேகரன் என்ற தம்பியின் கட்டுரைகள், கழகக் கொள்கைகளுக்குப் புத்தொளி தந்து அவர் நெஞ்சிலிருந்து புறப்பட்டு வருவதை நீ படித்துக் கொண்டிருப்பாய்.

ஒவ்வொரு நாளும் எனக்கு எத்தனையோ கடிதங்கள் - முரசொலியில் வெளியிடுவதற்காக என்று எத்தனையோ உடன்பிறப்புகளின் கட்டுரைகள் வருகின்றன. அவற்றில் பலவும் என்னைக் கவர்ந்து களிப்புறச் செய்கின்றன எனினும், கடுகை மலையாக்கி அதில் போய் நாமே மோதிக்கொள்வானேன்? வலியை வரவழைத்துக் கொள்வானேன் என்று எண்ணி அந்தக் கடிதங்களை வெளியிடுவதற்குப் பரிந்துரை செய்யாமலே இருந்து விடுவதும் உண்டு. பரிந்துரை செய்திருக்க மாட்டேனே தவிர, அக்கடிதங்களில் உள்ள கருத்துகள் என் நெஞ்சில் நிச்சயம் பதிவாகியிருக்கும்.

அன்புக் கண்மணி முரசொலி மாறனைக் குறித்து நான் எழுதியவற்றைத் தொகுத்து வெளியிடப்பட்ட "மறக்க முடியுமா!" என்ற தலைப்பமைந்த புத்தகம் மிக வேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. பொதுவாக நமது கழகத்தில், நமது கழக நூல்களைப் பரப்புகிற பணியில் - விற்பனை செய்கிற வேலையில் - மற்ற இயக்கங்களுடன் ஒப்பிடும்போது சற்று மந்தம் தான்! அதிக அக்கறை காட்டுவதில்லைதான். கழகத்தின் எல்லா எழுத்தாளர்களின் நூல்களையும் சேகரித்து, அவற்றைப் பரப்புகிற பணிக்கு ஆர்வத்துடன் தம்மை ஒப்படைத்துக் கொள்பவர்கள் தேவைப்படுகிறார்கள். இந்த விஷயத்தில் திராவிடர் கழகம் வழிகாட்டியாக இருப்பதையும், வரலாற்று நூல்கள், பகுத்தறிவு நூல்கள் மக்களிடம் பரவிட வேண்டுமென்பதில் பெரும் அக்கறைகொண்டு அவற்றை விற்பனை செய்து பரப்புவதில்

தனி ஆர்வம் கொண்டும் உழைத்திடுவதை நான் பல ஆண்டுக் காலமாகப் பார்த்து மகிழ்ந்து வருகிறேன்.

அறிவுத் தெளிவூட்டும் அந்த முயற்சி எங்கும் முகிழ்க்க வேண்டும்! இங்கும் முகிழ்க்க வேண்டும்.

இதோ "மறக்க முடியுமா!" என்ற என் நூலைப் படித்த இராஜசேகரன், அந்தத் தொடரில் இந்த நிகழ்வை மறந்து விட்டுவிட்டாயே என்று இடித்துரைப்பது போல ஒரு நீண்ட கட்டுரை தீட்டியுள்ளார்.

கட்டுரையில் அவர் எழுப்பியுள்ள 'கனல்' தேவை யில்லையென அதனை ஒதுக்கிவிட்டு, மாறனைப் பற்றியதை மட்டும், அவர் குறிப்பிட்டுள்ளதை இக்கடிதத்தில் இணைத்துள்ளேன். அந்தக் கட்டுரை பின்வருமாறு:-

★

"எங்கள் ஊரில்
ஒருவர்
ஊராட்சி உறுப்பினரானார்;
ஒன்றியத் தலைவரானார்;
சட்டமன்ற
உறுப்பினரானார்;
அமைச்சரானார்;
அயல் நாட்டுத் தூதுவரானார்;
இறுதிவரை....
ஒருமுறை கூட
மனிதரானாரில்லை"

என்று கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள், எப்போதோ எழுதிய புதுக் கவிதை நெஞ்சில் நிழலாடுகிறது.

தன்னைவிட கழகம்தான் பெரிது என்று வாழ்ந்துகாட்டிய மாமேதை அண்ணன் முரசொலி மாறன் அவர்கள், மண்ணுலகை விட்டு மறைந்து போயிருந்தாலும், என்றைக்கும் நம்முடைய இதயத்தை விட்டு நீங்காமல் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அவருடைய

எண்ணங்களும், செயல்களும் நமக்கெல்லாம் பாடமாகவும், வழிகாட்டுதலாகவும் விளங்குகிறது என்று சொன்னால் மிகையாகாது.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலின்போது, தோழமைக் கட்சிகளுடன் உடன்பாடு ஏற்படாத நிலையில், 10-02-1977 அன்று ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட கடற்கரைக் கூட்டத்தில், தேர்தல் அறிக்கையோடு 24 தொகுதிகளுக்கான கழக வேட்பாளர்களின் முதல் பட்டியலையும் தலைவர் கலைஞர் வெளியிட்டார். அந்தப் பட்டியலில் மத்திய சென்னை வேட்பாளராக அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் அறிவிக்கப் பட்டதைக் கண்டு மகிழ்வுற்ற கழகத் தோழர்களும், அமைப்புகளும் மின்னல் வேகத்தில் தேர்தல் பணிகளை முடுக்கி விட்டு, பம்பரமெனச் சுற்றிச் சுழன்று மத்திய சென்னைத் தொகுதியை ஐந்தே நாட்களில் புதுப் பொலிவு பெறும் வகையில் உற்சாகத்தோடு பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில் -

கழகத்திற்கும், ஜனதா கட்சிக்குமிடையே தேர்தல் உடன்பாடு ஏற்படுத்துவதற்காக நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள், பிப்ரவரி 15ஆம் நாள் மூன்றாவது முறையாக சென்னை வந்திருந்தார். கூட்டணி குறித்த பேச்சுவார்த்தை, தலைவர் கலைஞர் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றபோது, மத்திய சென்னைத் தொகுதிதான் பிரச்சினைக்குரியதாக அமைந்தது. அந்தத் தொகுதி பற்றிய சிக்கல் தீர்ந்தால் உடன்பாடு ஏற்பட்டு விடக் கூடிய சூழல்!

மத்திய சென்னையில் பா. இராமச் சந்திரன் அவர்களை நிறுத்த, கழகம் விட்டுக் கொடுக்க வேண்டுமென்பது சஞ்சீவ ரெட்டி அவர்களின் கோரிக்கை. ஆனால் மாவட்டக் கழகமும், கழக அமைப்புகளும் தி.மு.கழகத்தின் கோட்டை மத்திய சென்னை என்பதால், ஜனதா கட்சிக்கு விட்டுக் கொடுக்க மறுத்து விட்டனர். வேட்பாளர் அறிவிக்கப்பட்ட பிறகு, தேர்தல் வேலைகளும் துவங்கிவிட்ட நிலையில், வேட்பு மனு தாக்கல் செய்யும்

தேதியும் முடிவான நேரத்தில், இன்னொரு கட்சிக்கு விட்டுக் கொடுக்க கழக முன்னோடிகள் விடாப்பிடியாக மறுத்துவிட்ட நிலையிலும், சஞ்சீவரெட்டி அவர்கள் பிடிவாதம் பிடித்ததால், தலைவர் கலைஞர் அவர்கள் ஜனதா கட்சிக்கு விட்டுக் கொடுக்க முன்வந்தபோது, அப்போதைய கழகத்தின் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், அண்ணன் முரசொலி மாறன் அவர்களைத் தனியாக அழைத்து, "நீ இந்த முடிவுக்கு ஒப்புக் கொள்ளாதே! மத்திய சென்னைத் தொகுதியில்தான் நிற்பேன் என்று உறுதியாகக் கூறிவிடு!" என்று திட்டவட்டமாகக் கூறியதையும் பொருட்படுத்தாமல், தன்னுடைய பிரச்சினையால் தி.மு.க., ஜனதா கட்சி உடன்பாடு முறிந்துவிடக் கூடாதென்று எண்ணி, அந்தத் தொகுதியை ஜனதா கட்சிக்கு மனமுவந்து விட்டுக் கொடுப்பதாக சஞ்சீவ ரெட்டி அவர்களிடம் அண்ணன் மாறன் அவர்களே கூறியதும், அந்தத் தொகுதியில் தேர்தல் பணியாற்றிய கழகத் தோழர்களையும் அமைதிப்படுத்தி அவரே அறிக்கை யொன்றும் வெளியிட்ட அந்தப் பெருந்தன்மையை, உயர்ந்த நோக்கத்தை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. அந்தத் தேர்தலில் மத்திய சென்னைத் தொகுதியில் பா.ரா. வெற்றிபெற்று மத்திய அமைச்சராகவும் ஆனார். ஆனால் தென் சென்னையில், பத்தாயிரம் வாக்கு வித்தியாசத்தில் அண்ணன் மாறன் அவர்கள் வெற்றி வாய்ப்பை இழக்க நேரிட்டது.

"தோழமைக் கட்சிகளிடத்தில் கழகம் காட்டுகிற உண்மையான நட்புக்கும், உறவு மனப்பான்மைக்கும் தேச நலனுக்காகத் தனது வெற்றி வாய்ப்புகளைக்கூட விட்டுத் தருகின்ற நல்ல மனப்பான்மைக்கும் இது எடுத்துக்காட்டு" என்று கூறி சஞ்சீவ ரெட்டி அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டார் என்பது - கலைஞரின் பூவினும் மெல்லிய இதயத்திற்கு காலக் கண்ணாடி!

மையப்படுத்தப்பட்ட முறையில் விரிவான கழக அமைப்பும் - இராணுவ கட்டுப்பாட்டை ஒத்த உருக்கு

போன்ற ஒழுக்கமும், பண்பும் தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே இருப்பதால்தான், இலட்சோப இலட்சம் கழக உடன்பிறப்புகளும், தன்னுடைய தலைவனுக்காக உயிரைக் கொடுக்கவும் தயார்நிலையில் உள்ளனர்.

"நான் உன்னைக் காணப் புறப்படுவதற்குள் - தேர்தல் சின்னங்கள் - தெருத்தெருவாக வீடு வீடாகச் சென்று வாக்காளர் சந்திப்புகள் - தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் அத்தனையும், தங்குதடையின்றி பொங்குமாங் கடலெனத் திரண்டு நான் வரும்போது என்னைப் பூரிப்பில் ஆழ்த்திட வேண்டும். எங்கே பார்க்கலாம்! யாரோ ஏதோ பேசுகிறார்கள் என்பதற்காக உன் கவனம் அங்கே செல்ல வேண்டாம். உன் கர்ச்சனை கேட்கவல்லவா நான் வருகின்றேன்" என்று கூறிய வண்ணம் தேர்தல் களத்திலே தனது சேனாதிபதிகளைக் களம் இறக்கியுள்ளார் தலைவர்!

1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சரானபோது, "இலக்கை நோக்கி வரும் புரவி, தன்னைச் செலுத்துபவன் ஒருவனையும் தூக்கிச் செல்வதுபோல இன்று விழிப்புற்ற, எழுச்சி பெற்ற மக்கள் நிலை இருக்கிறது.

தலைவர்கள் மக்களைத் தயார் செய்வதற்குப் பதிலாக இன்று மக்கள், தலைவர்களைத் தயார் செய்கின்றனர். துரிதப்படுத்துகின்றனர்; தீவிரப்படுத்து கின்றனர்" என்று கூறியது நடைபெற விருக்கும் தேர்தலில் பிரதிபலிக்கக் கூடியதாக உள்ளதை நினைவில் கொண்டு -

"நாடு முக்கியம்!
நமது சமுதாயம் முக்கியம்!!
மத நல்லிணக்க வரலாறு படைப்போம்!
மதச்சார்பற்ற ஆட்சி அமைப்போம்"

என்ற குறிக்கோளுக்காக கொடி உயர்வது முக்கியம்"

★

உடன்பிறப்பே, நான் எண்ணியதை, எழுதியதை தம்பி இராஜசேகரன் அப்படியே எதிரொலித்திருக்கிறார்.

இப்படிக் கட்டுரை தீட்டாவிட்டாலும், எண்ணற்ற என் தம்பிமார்கள், உடன்பிறப்புகள், எண்ணத்தில் இந்த உணர்வைப் பதித்து என்னைக் காணக் காத்திருக்கிறீர்கள்!

பேரன்புகொண்டோரே!
பெற்றத் தாய்மார்களே!
நல் இளஞ்சிங்கங்காள்!

உயிரினுமேலான உடன்பிறப்புக்காள்!

வெளியிடப்பட்டுள்ள சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில், விட்டுப் போய்விட்ட பகுதிகளுக்கெல்லாம் கொள்கை பரப்பும் கழக முன்னணியினர்,

கட்டாயம் வருவர்!
கருத்துரை தருவர்!
கழக முரசு மட்டுமல்ல;
கூட்டணிக் கட்சிகளின் அறப்போர்ச்
சங்கொலியும் அட்டியின்றிக் கேட்கும் –
ஆவன செய்திட –
ஆக்கப் பணி புரிந்திட –
அருமை உடன்பிறப்பே!
அணுப்பொழுதும் தாமதிக்காமல்
ஆயத்தமாகுக!

அன்புள்ள,
மு.க.
13-03-2004

3042. திசை திருப்பப்படும் மகளிர் குழுக்கள்; திரும்பிப் பார்க்குமா தேர்தல் ஆணையம்?

உடன்பிறப்பே,

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு.கிருஷ்ண மூர்த்தி அவர்கள், நடுநிலையாகவும், கண்டிப்பாகவும் இருந்து தேர்தல் விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டு பொறுப்பேற்றிருக்கிறார் என்பது அவரது பேட்டிகள் வாயிலாகவும், அறிக்கைகள் வாயிலாகவும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கையுடன் நாமும் இந்த நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க இருக்கிறோம்.

அவர் சென்னைக்கு வந்திருக்கிறார். மத்திய சென்னைத் தொகுதியில் வாக்காளர்களுக்கு எவர்சில்வர் தட்டு, டிபன் பாக்ஸ் போன்றவற்றை வழங்கியதாக, ஒரு பூதாகாரமான பொய்ப் புகார் பற்றி அவரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு அவர், "அதுபற்றி ஆணையத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது, விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆராயப்படும்" என்றார் எனச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இன்னொரு கேள்வியையும் அவரிடம் செய்தியாளர்கள் எழுப்பியிருக்கிறார்கள்.

> "அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் காங்கிரஸ் தலைவர் சோனியாவை தனிப்பட்ட முறையில் விமர்சித்துள்ளதாகப் புகார் எழுந்துள்ளதே?"

இந்தக் கேள்விக்கு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்,

"அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையைக் கேட்டிருக்கிறோம். அது குறித்துப் பரிசீலிப்போம். விதிமீறல் இருந்தால் ஆணையம் தகுந்த நடவடிக்கை எடுக்கும்"

என்று விடையளித்துள்ளார்.

அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை 6-3-2004 அன்று வெளியிடப்பட்டு இன்னமும் அந்த அறிக்கை, தலைமைத் தேர்தல் ஆணையர் கைக்குக் கிடைக்க வில்லை என்பது தகவல் தொடர்புக்

குறைபாடு எனினும், நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை பற்றி நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானமும், தேர்தல் தலைமை ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதமும் இந்நேரம் ஆணையத்துக்குக் கிடைத்து, தகவலறிய உதவியிருக்கு மெனக் கருதுகிறேன்.

அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் திருமதி சோனியா காந்தி நாட்டுப் பற்றில்லாதவர் என்றும் - அவரது தலைமையில் உள்ள காங்கிரசுடன் கூட்டணி கொண்டிருக்கும் கட்சிகளும் இந்திய நாட்டு இறையாண்மையிலும், ஒற்றுமையிலும் பற்று இல்லாதவை என்றும் சித்திரிக்கப்பட்டிருப்பது கடுமையான ஆட்சேபணைக்குரியது என்பதைத் தேர்தல் ஆணையம் தெளிவாகவே உணர்ந்து கொண்டு, தீவிர நடவடிக்கை எடுக்குமென்று எதிர்பார்ப்பதில் தவறேதுமில்லை.

தேர்தல் விதிமுறை மீறல் என்பது அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் மட்டுமல்ல, "சோனியா காந்தி பதிபக்தி இல்லாதவர்" என்று ஜெயலலிதா, ஒவ்வொரு கூட்டத்திலும் பேசி, அது தொலைக் காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் நாள்தோறும் வெளியாகிக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, தேர்தல் பிரச்சாரத்துக்கு ஜெயலலிதா செல்லும் வழியெங்கும் நிகழ்ச்சிகளுக்குத் தேவைப்படும் மின்சாரம், முறைப்படி இணைப்பு தரப்படாமல் - ஆங்காங்கு வழியில் 'கொக்கி' போட்டு எடுக்கப்படுவதையும் பத்திரிகைகள் படம்பிடித்து வெளியிட்டுள்ளன.

தேர்தல் பிரச்சாரத் தொடக்கக் கூட்டமே எங்கு நடத்தினார்கள்?

யாருக்கும் அனுமதியில்லை என்று தடை செய்யப்பட்டிருந்த கடற்கரை காமராஜர் சாலையில் தான் - தேர்தல் பிரச்சார முதல் கூட்டத்தைப் போலீசார் புடைசூழ ஜெயலலிதா நடத்தி, மற்ற கட்சிகளும் அதே இடத்தில் பிரச்சாரம் செய்ய அனுமதி கேட்கும் நிலையை உருவாக்கிவிட்டிருக்கிறார்.

தேர்தலுக்காகவே பல சலுகைகளை அறிவித்தது மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் செயல்படும் மகளிர் குழுக்களையும் - அ.தி.மு.க. அரசியல் குழுக்களாக மாற்றி, அவற்றை தேர்தல் பிரச்சாரத்துக்கும்,

தேர்தல் பணிக்கும் பயன்படுத்திக் கொள்ளும் சூழ்ச்சியும் இந்தத் தேர்தலுக்காக ஆங்காங்கு நடைபெறத் தொடங்கியுள்ளன.

இந்த மகளிர் குழுக்கள், கிராமப்புற ஏழை எளிய பெண்களைச் சமூகப் பொருளாதார நிலைகளில் உயர்த்திடும் நோக்கத்தில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன், "தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்" என்ற பெயரால் 1989 நவம்பர் மாதம் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டு, மாநில முழுதும் படிப்படியாக வளர்ச்சிபெறச் செயல்படுத்தப்படும் மகளிர்க்கான அரிய திட்டமேயாகும்.

1996ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு இத்திட்டம், எல்லா மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டு மேலும் விரிவாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1997-98ல் 14 மாவட்டங்களிலும், 1998-99ல் 7 மாவட்டங்களிலும், 1999-2000ல் 7 மாவட்டங்களிலும், என சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களில் இந்த மகளிர் குழுத் திட்டம் விரிவாக்கப்பட்டு, சுமார் எட்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மகளிர், சுமார் 46,000 சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருந்தனர்.

அரசு சார்பில்லாத தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இத்திட்டத்தின் வெற்றிக்குப் பாடுபடுகின்றன.

இந்த மகளிர் தொழில் தொடங்கிட, ஒண்ணேகால் இலட்சம் மகளிருக்கு, ரூபாய் 73 கோடிக்கு மேல் நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது. வங்கிக் கடனாக 23 கோடி ரூபாயும், மானியமாக 48 கோடி ரூபாயும், கிடைத்திட வகை செய்யப்பட்டது. இந்த மகளிர் சேமிப்புத் தொகை மட்டும் கழக ஆட்சியிருந்தபோதே 52 கோடி ரூபாயாகும்.

சிறந்த குழுக்கள் என தேர்வு செய்யப்படும் அமைப்புகளுக்கு பரிசுத் தொகைகளும் வழங்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டம் பில்லுசேரியை சேர்ந்த சின்னபிள்ளை என்ற மூதாட்டிக்குக் கழக ஆட்சியில், ஒரு இலட்ச ரூபாய் பொற்கிழி வழங்கிப் பாராட்டியதை நினைவூட்டுகிறேன்.

இவ்வாறு கிராமப்புறப் பெண்களைச் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி வழி நடத்தும் புரட்சிகரமான திட்டத்தை, ஜெயலலிதா அரசு இப்போது திசை திருப்பி, தேர்தலுக்கு அந்த மகளிர் குழுக்களைப் பயன்படுத்த முனைவதும், ஆளுங் கட்சிக்கு ஆதரவளிக்கும் மகளிர்க்கு மட்டுமே கடன் வசதி, பச்சைப் புடவை அன்பளிப்பு என்பதும், அதற்காகத் தொண்டு நிறுவனங்களை வளைத்திட முயற்சி மேற்கொள்வதும், வடிகட்டிய விதிமீறல் களாகும். இதையும் தேர்தல் ஆணையம் தனது கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்று நம்புவோமாக!

அரசு ஊழியர்கள், குறிப்பாகக் காவல் துறையிலே ஒரு சிலர் எவ்வளவு தீவிரமான அ.தி.மு.க. ஆதரவாளராக இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் எப்படி இந்த ஆட்சியில் கட்சிக்காரர்களாகவே காட்டிக்கொள்ள முடிகிறது என்பதையும் "கட்டை விரல் காணிக்கை" சம்பவமே சாட்சியாக நின்று நிரூபித்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் விளக்காமலே தேர்தல் ஆணையம் புரிந்துகொள்ள முடியுமென்று கருதுகிறேன்.

எனவே நீதி, நேர்மை, நெறிபிறழாத்தன்மை, நாகரிகமான அரசியல் விமர்சனம், இவற்றுக்கு மாறாகச் செயல்படும் தேர்தல் விதி மீறல் பேர்வழிகள் யாராயினும், அவர்கள்மீது தேர்தல் ஆணையம் கண்டிப்பாகக் கவனம் செலுத்தி, உரிய நடவடிக் கைகள் மேற்கொள்ளுமென நடுநிலையாளர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இல்லையேல், "தேசப்பற்றில்லாதவர்" என்ற பட்டத்தைத் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு அணியினரும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு, மொத்தத்தில் இந்திய நாட்டில் எல்லோருமே நாட்டுப் பற்றில்லாதவர்களோ என்ற ஐயப்பாடு தோன்றிட வழிவகுத்துவிடும்.

அதற்கு ஜெயலலிதாவின் தேர்தல் பிரச்சாரப் பேச்சும், அவர் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையுமே தலையாய காரணங்களாக விளங்குகின்றன என்பதைத் தேர்தல் ஆணையம் புறக்கணித்துவிட முடியாது.

அன்புள்ள,

மு.க.

15-03-2004

3043. வாழ்த்தி விடைபெற வாய்ப்பாக; வா!

உடன்பிறப்பே,

நான், உன் முகம் காணவும், நீ என் முகம் காணவும், நான்கு நாட்கள்தான் குறுக்கே இருக்கின்றன. அன்பு உடன்பிறப்புகள் ஆற்றிடும் தேர்தல் பணிகள் கண்டு களித்திடவும், ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து, பொறுப்பு வகிப்போருடன் கலந்து பேசிடவும் அமைந்திடும் அரிய வாய்ப்புதான் நான் மேற்கொள்ள இருக்கும் சுற்றுப்பயண நிகழ்ச்சி.

பயண நிகழ்ச்சியில் பட்டியலிடப்பட்ட ஊர்களில் எதுவும் என் பொது வாழ்க்கையைப் பொறுத்துப் புதிய ஊர்கள் அல்ல! அறுபத்தி ஆறு ஆண்டுகளாக அலைந்து திரிந்து, நடந்தே சென்றும், சைக்கிளில் அமர்ந்தும், மாட்டு வண்டி, குதிரை வண்டி என மாறி மாறி ஏறியும், பேருந்துப் பயணம், கார் சவாரி எனக் காலமாற்றம் கண்டும், கடக்க வேண்டிய தொலைவு - காணவேண்டிய பட்டிதொட்டிகள், பட்டினக் கரைகளை முன்னிட்டு "வேன்" போன்ற வாகனங்களில் வளைய வளைய வலம் வந்தும், குறிப்பிட்ட இடம் என்றில்லாவிடினும், வசதி வாய்ப்புக்காக விமானம், ரயில் என்று பயன்படுத்தியும், எப்படியோ என் உடன்பிறப்புகளாம் உன்போன்ற கழகக் கண்மணிகளைச் சந்தித்துக் கொண்டுதானிருக்கிறேன்.

அமைக்கப்பட்டுள்ள ஜனநாயக முற்போக்குக் கூட்டணி, தி.மு. கழகத்தின் தலைமையில் இது வரையில் அமைந்த கூட்டணிகள் அனைத்தையும் காட்டிலும் சிறந்த கூட்டணியாகும்.

அப்படியானால் அண்ணா, ராஜாஜி, காயிதே மில்லத், பி. ராமமூர்த்தி, ம.பொ.சி., மூக்கையா தேவர் போன்ற பெரிய தலைவர்கள் கொண்ட 1967 ஆம் ஆண்டு கூட்டணியைவிட இக்கூட்டணி சிறந்தது என்கிறாயா என யாராவது கேட்கக் கூடும்.

ஆம்! அது பெரிய தலைவர்களைக் கொண்ட கூட்டணிதான் - ஆனால் இப்போது அந்தப் பெரிய தலைவர்கள் இல்லை! என்றாலும் இது சிறப்பான கூட்டணி என்பதற்கு முக்கியமான காரணம், இன்றைய நிலைக்கேற்ப மத நல்லிணக்க வரலாறு படைக்கும் சமுதாயம் - மதச்சார்பற்ற ஆட்சி அமைக்கும் குறிக்கோள் - எனும் கொள்கையில் ஒரு சிறு பிசிரும் இல்லாத கட்சிகளின் கூட்டணியாக - கொள்கைக் கூட்டணியாக நமது கூட்டணி விளங்குவதுதான்!

எல்லாவற்றிலும் சிறப்பான அம்சம் இந்தக் கூட்டணியில் ஒன்று உண்டென்றால், அது சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தம் இருப்பதுதான்!

"சிறுபான்மை மக்களும் நம் சகோதரர்களே" என்று பொதுத் திட்டத்திலே அறிவிப்பு செய்துவிட்டு, இடுக்கு கண்ட இடத்தில் எல்லாம் அயோத்திப் பிரச்சாரத்தை விட்டு அணுவளவும் விலகாமல் நின்றுகொண்டு, பச்சோந்தி நிறம் காட்டும் பசப்பு மொழிக் கட்சி எதுவும் நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் இல்லை. இந்தக் கூட்டணியை ஆதரிக்கும் கட்சிகளும் அப்படிப்பட்டவை அல்ல.

எம்மதமும் சம்மதமே என்ற சொல்லுக்கும், மத மாற்றத் தடைச் சட்டத்துக்கு ஆலவட்டம் சுற்றுவதற்கும் துளியளவு தொடர்பாவது உண்டா?

தொடர்பு இருத்தலாகாது எனத் துண்டித்துக் கொண்ட கட்சிகள், அணிதிரண்டு இருப்பதுதான் இந்தக் கூட்டணி!

நடைமுறைத் திட்டங்கள் நாலு விதம் இருக்கலாம். ஆனால் மனித நேயம் போற்றி, மதவாதம் அகற்றி, மனிதர்களாய் அனைவரும் விளங்குதல் என்ற அடிப்படைக் கொள்கையில் இரண்டு விதம் இருத்தலாகாது!

இருந்தால் அக்கட்சிகளுக்கு இந்த அணியில் இடம் கிடையாது.

எப்படியும் ஒட்டிக் கொண்டிருப்போம் என்ற நிலை நமது கழகத்திற்கும் கிடையாது.

எனவே, இது கொள்கைக் கூட்டணி என்பதைத் தெளிவாக, திட்டவட்டமாகத் தெரிவிக்க நாம் தகுதி பெற்றவர்கள் அல்லவா!

அந்த மனநிறைவுடன்தான் உடன்பிறப்பே, உன்னைச் சந்திக்க நான் வருகிறேன்.

எந்த நேரத்தில் மத்தியில் ஆளுங்கட்சிக் கூட்டணியிலிருந்து நாம் வெளிவந்தோம்?

அரசியல் சூட்சுமம் புரிந்தோர் யாராவது ஆச்சரியப்படாமல் இருப்பார்களா?

தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., அமைச்சர்கள் பதவியைத் தூக்கி வீசி விட்டு வெளிவந்தது எந்தக் காலக்கட்டத்தில்?

மத்தியப் பிரதேசம்,

ராஜஸ்தான்,

சட்டீஸ்கர்

ஆகிய மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸ் தோல்வியுற்று, பாரதீய ஜனதா வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள நேரத்தில், ஏதோ தோல்வியடைந்த கட்சியிலிருந்து வெளியே ஓடி வந்தது போல, வந்து விட்டோம் என்றால், அது "அதிகாரப் பொறுப்பு" - "அமைச்சர் பதவி பளபளப்பு" ஆகியவற்றைவிடக் கொள்கையைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் நமக்குள்ள அக்கறையின் மதிப்பை உணர்த்துகின்ற உறுதிவாய்ந்த உண்மையல்லவா?

அந்த உண்மையை வெற்றிபெறச் செய்திடவும், உலகுக்கு உரைத்திடவும் என் உடன்பிறப்புகள் உழைத்திடுகின்றார் ஊருக்கு ஊர் என உரைத்திடுதல் கேட்டு உவகை மேலிட, உடனே வந்து உன்னைப் பார்த்து பாராட்டிட வேண்டுமென்றுதான் ஓடி வருகிறேன்.

விலகட்டும் இடையேயுள்ள மூன்று நாட்கள் -

சந்திக்கட்டும் நமது முகங்கள் மூலமாக நமது அகங்கள்!

இக்கடிதம் உனக்குக் கிடைக்கும்போது நீ,

நமது செயல்வீரர்கள் கூட்டத்தில் இருக்கிறாயோ -

அல்லது வீடு வீடாக, வீதிவீதியாகச் சென்று நமது அணிக்கு வாக்கு சேகரித்துக் கொண்டிருக்கிறாயோ -

எங்கிருந்தாலும் நீ எப்படியிருந்தாலும் என்னைக் காண வந்திடுவாய்!

ஏற்கனவே அறிவித்தவாறு, சென்னைக் கடற்கரை காமராஜர் சாலையிலிருந்து என் பயணம் தொடங்குகிறது.

இம்மாதம் 22ஆம் நாள் பிற்பகல் சரியாக 3 மணிக்கு, சென்னை மாநகர் உடன்பிறப்புகளிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படுகிறேன்.

அண்ணன் உறங்குமிடம் இருக்கும் சாலை -

அருமை நண்பர் துயிலுமிடம் உள்ள சாலை -

அண்ணன் அமைத்த அறிஞர்கள் சிலைகள்,

ஆன்றோர் சிலைகள் விளங்கிடும் சாலை -

நீதி கேட்ட நேரிழையாள்
கண்ணகி சிலை நின்றிருந்த சாலை -

கல்விக் கூடங்கள் நிறைந்த சாலை -

உலகத் தலைவர்கள் குரலும், உள்நாட்டுத் தலைவர்கள் குரலும் எதிரொலித்த கடற்கரை சாலை-

கர்ம வீரர் காமராஜர் பெயரை நாம் சூட்டிய சாலை -

அடக்குமுறை அராஜக வெறிக்கு ஆளாகி, அறப்போர் வீரர்கள் இரத்தம் சிந்திய சாலை -

விவேகானந்தர் இல்லம், தலைமைச் செயலகம், சென்னைப் பல்கலைக் கழகம், காவல் துறைத் தலைவர் அலுவலகம், எழிலகம் போன்ற சிறப்புக்குரிய கட்டிடங்கள் எல்லாம் இடம் பெற்ற சாலை -

அங்கிருந்துதான் என் பயணம் தொடங்குகிறது.

வாழ்த்துவதற்கு வா!

உன்னை நான் வாழ்த்தி விடைபெறுதற்கு

வாய்ப்பாக; வா!

அன்புள்ள,

மு.க.

19-03-2004

3044. ஒன்றுபட்டால் உண்டு வெற்றி!

உடன்பிறப்பே,

மானசீகமாக உன்னிடம் ஒப்புதல் பெற்று, இடைவிடாத பணிகளுக்கு இரண்டு நாள் ஓய்வு வழங்கி, பெங்களூரில் தங்கிவிட்டு மீண்டும் வேலைகளை விரைந்து அணைத்துக்கொண்டு மகிழ, இன்று புறப்பட்டு விடுகிறேன் சென்னைக்கு!

கடந்த 22-3-2004 அன்று, சென்னைக் கடற்கரை காமராஜர் சாலையில் உடன்பிறப்புகளாம் பல்லாயிரவர் நீங்கள், உங்கள் விழிகளை மலர்களாக்கி என்மீது வாரியிறைத்து வழியனுப்பி வைத்ததைத் தொடர்ந்து, வழி நெடுக வாழ்த்து மழையில் நனைந்து, சேகரிக்கும் முயற்சியின்றி சேர்ந்துவிட்ட மழைநீர் வெள்ள மனைய மனித வெள்ளத்தில் மிதந்து, காஞ்சியில் அண்ணா இல்லத்திற்குள் அவர் சிலையின் காலடியில் கரை சேர்ந்தேன்.

எத்தனையோ முறை அந்த வீட்டுக்குச் சென்றிருக்கிறேன். அண்ணாவுடன் அமர்ந்து உரையாடியிருக்கிறேன். அதோ அந்த நடைத் தாழ்வாரத்தை யொட்டி யிருக்கிறதே! சிறிய அறை - அங்குதான் கல்லக்குடி போராட்டத்திற்கான வியூகம் அவருடன் கலந்து பேசி வகுக்கப்பெற்று, அதற்கான அனுமதியும் அவரிடம் பெறப்பட்டது.

ஒன்றாக அமர்ந்து உணவருந்தியிருக்கிறேன் - "காரில் இரவுப் பயணம் வேண்டாம்; காலையில் சென்னை போகலாம், படுத்துறங்கு" என்று பாசம் பொழிவார். பணிவேன். பாதி இரவில் விழித்துப் பார்த்தால், ஒரு மூலையில் விளக்கு எரியும், அந்த விளக்கொளியில் அண்ணா அந்த நேரத்திலும் எழுதிக் கொண்டிருப்பார்.

இப்படி எத்தனை முறை! எண்ணற்ற முறை எனக்கு மட்டுமல்ல! கழக முன்னோடிகளாய் அண்ணாவின் கண்ணின்

மணிகளெனத் திகழ்ந்த இயக்கத் தளகர்த்தர்களுக்கு அந்த இனிய வாய்ப்பு கிட்டியிருக்கிறது! அவையனைத்தையும் அண்ணாவுடன் இருந்து அந்த இல்லத்தில் பார்த்து மகிழ்ந்த நான், அவர் நம்மை விட்டு மறைந்த பிறகும் பல முறை காஞ்சி இல்லம் சென்றுள்ளேன். எனினும், இந்த முறை மட்டும் எந்த முறையும் இல்லாத அளவு உணர்ச்சி வசப்பட்டு விட்டேன்.

தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம், காஞ்சி வரை வந்து வழியனுப்பிச் செல்லும் அன்புக் கண்மணி மாறனும் என்னுடன் வந்து, நம்மை ஆளாக்கிய அண்ணன் சிலைக்கு மாலை அணிவித்திடவில்லையே என்பதால் என்னை ஆட்டிப் படைத்த உணர்ச்சிதான் அது!

அதன்பிறகு பொதுக்கூட்டம் - பொதுக்கூட்டமா அது? இல்லை! இல்லை! பொங்குமாங்கடல்!

காஞ்சியில் மட்டுமல்ல! அந்தக் காட்சியும், எழுச்சியும்! முதல் கட்டச் சுற்றுப் பயணத்தின் கடைசிக் கூட்டம் ஓசூர் வரையில் ஓயவில்லை மக்கள் பிரளயம்!

இப்பொழுதெல்லாம் நமது முன்னணிச் செயல் வீரர்கள் - மாவட்டத் தளகர்த்தர்கள் - பேராசைப் படலாகாது என்ற பெருநோக்குடனோ -அல்லது தங்கள் மதிப்பீடு அவ்வளவுதான், அது சரியாகவே இருக்கும் என்ற உறுதியான திட்டத்துடனோ பொதுக் கூட்ட மேடைகளையோ அல்லது மாநாட்டுப் பந்தல் களையோ அல்லது வழி நடுவே வரவேற்பு நிகழ்ச்சிகளையோ ஏற்பாடு செய்து அறிவிக்கிறார்கள். ஆனால் அது எல்லோருடைய கணக்கையும் மீறி விடுகிறது.

வரவேற்பு நிகழ்ச்சிதானே என்றால், அது ஒரு பொதுக் கூட்டமாகவே ஆகிவிடுகிறது - வாகனங்களில் அழைத்து வரும் கூட்டமாக அல்ல! வலுவில் வந்து சேரும் மக்கள் திரளாகவே!

பொதுக் கூட்டம், மாநாடாகி விடுகிறது - மாநாடு என்றாலோ; இத்தனைக்கும் இலவச அனுமதியில்லாமல், நுழைவுக் கட்டணச் சீட்டுகள் வாங்கிக் கொண்டு வந்து குவிந்திடுவோர், மாவட்ட மாநாடு என்றால் அதை மண்டல மாநாடாக ஆக்குகின்றனர். மண்டல மாநாடு என்றால் அது மாநில மாநாடு என வியக்குமளவுக்குப் புதுமை விளைவிக்கின்றனர்.

இப்படி எதிர்பார்ப்பது ஒன்று - நடப்பது ஒன்று - அதுவும் மலைக்கத்தக்க அளவுக்கு என்கிறபோது, என்னுடைய தேர்தல் பிரச்சார நிகழ்ச்சிகளை வகுத்தறிவித்த துணைப் பொதுச் செயலாளர் மு.க.ஸ்டாலினும், தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் துரைமுருகனும் இந்தச் சுற்றுப் பயணத்தில் முதல் நாள் நிகழ்ச்சி, தமிழ்ப் பெருமக்களின் பேரார்வத்தினால், அன்றிரவு 10 மணிக்குள் போய்ச் சேர வேண்டிய திருவண்ணாமலை நிகழ்ச்சிக்கு இரவு இரண்டு மணிக்குத்தான் போக முடிந்து; அதனால் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாயினர்.

அதன் காரணமாக, மறுநாள் பிற்பகல் 3.30 மணிக்கு திருவண்ணாமலையில் கூட்டம். கடும் வெயிலிலும் கடல் போன்ற கூட்டம்.

எல்லா இடங்களிலுமே மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக முன்னோடிகள், பல்வேறு அமைப்புகள், அணிகளின் நிர்வாகிகள் இவர்களேயன்னியில், நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் செயல்வீரர்கள், நிர்வாகப் பொறுப்பில் உள்ள ஆர்வலர்கள் அனைவரின் கூட்டுறவும், ஒத்துழைப்பும் இருப்பதைக் கண்டு இதயம் பூரித்துப் போகிறேன்.

இருப்பினும், இந்த என் தேர்தல் சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பட்ட நேரத்தில், குறிப்பிடப்பட்ட இடத்தில் மட்டுமே நடைபெற்றால், குறிப்பிடப்படாத இடங்களில் எதிர்பார்த்து ஏமாற்றமடைவோர் எண்ணற்றோர் என்ற நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

வெயில் கொளுத்தினாலும் கவலைப்படாமல் வெள்ளமென மக்கள் திரண்டு விடுகிற காரணத்தால், மாலைப் பொழுது வரட்டுமெனக் காத்திராமல் ஒவ்வொரு நாளும் எனது பிரச்சார நிகழ்ச்சியை பிற்பகல் சரியாக 3.30 மணிக்கு தொடங்கிவிட வேண்டும். இதனை விளம்பரம் செய்யும்போது கண்டிப்பாக அறிவித்துவிட வேண்டும். அப்பொழுதுதான், வழி நெடுக வழங்கப்படும் வரவேற்புகளைப் பெற்றுக் கொண்டு, வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்து, பின்னர் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.

கூடுமானவரை கோணல்மாணல் வழிகள் - குறுக்கு வழிகள் - இடைப்பட்ட வழிகள் என்றில்லாமல், என் உடல்நிலை கருதி,

ஒரு பொதுக் கூட்டத்திற்கும் இன்னொரு பொதுக் கூட்டத்திற்கும் நேரான பாதையமைந்த சாலை வழியிலேயே பயணம் அமைந்தால், பொதுக் கூட்டம் பயனுடையதாக அமையும்!

நான் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டங்கள் அல்லாத நிகழ்ச்சிகளில் - சிற்றூர், பேரூர்கள், குக்கிராமங்கள் மற்றும் நகரங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் - ஏன்? பொதுக் கூட்டங்களில் கூட நமது கழக முன்னணியினர் - கலைஞர் பெருமக்கள் - கூட்டணிக் கட்சிகளின் கொள்கை முரசறைவோர் எனப் பலரும் பங்கு பெற இருக்கிறார்கள்.

அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதுடன், பகலிரவு எனப் பாராது பாடுபட்டுக் கூட்டணிச் செயல்வீரர்கள், மெத்தனத்திற்குச் சிறிதும் இடம் தராமல், பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

'ஒன்றுபட்டால் உண்டு வெற்றி!'
என்ற உறுதியுடன் உழைப்பீரேல்;
என் போன்றோரின் பயண நிகழ்ச்சிகள்
வழங்கிடும் பயனை விட
பெரும் பயனை அடையலாம்.
அதுதான் எனது முதற்கட்ட
தேர்தல் சுற்றுப் பயணம்
நமக்கு தெளிவுபடுத்தும் உண்மை!

அன்புள்ள,
மு.க.
28-3-2004

3045. பொய்யர்க்கும் புல்லர்க்கும் பொது வாழ்வு எதற்காக?

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணி 34 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று ஒரு கருத்துக் கணிப்பு என்.டி.டி.வி. நிறுவனத்தின் சார்பாக பிரணாய் ராய் அவர்களால் விவரித்துச் சொல்லப்பட்டதும், இந்தியாவில் உள்ள எல்லா முதலமைச்சர்களிலும் ஜெயலலிதாதான் பெரும்பாலான மக்களின் மதிப்பை இழந்தவர் என்று கணித்துக் கூறப்பட்டதும், அந்த வட்டாரத்தை அளவுக்கு மீறிய அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கு மெனினும் - அதற்காக நீயும் உன்போன்ற நமது கூட்டணி உடன்பிறப்புகளும் அளவுக்கு மீறிய உற்சாகத்தில் ஆடிப்பாடி மகிழ்ந்து தேர்தல் பணிகளில், ஆமையுடன் போட்டியிட்ட முயல் கதைக்கு உதாரணமாகிவிடக் கூடாது என்று எச்சரிக்கிறேன் உன்னையும், நம்மவர் அனைவரையும்!

தேர்தல் தொடக்க நேரத்தில் இப்போது நான் தேடிப் பெற்ற ஓய்வினால், நாளேடு, வார ஏடு என எல்லாவற்றையும் ஒரே மூச்சில் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

அடடா! அவை என்னென்ன செய்திகளைத்தான் சிகை அலங்காரம் - நகை அலங்காரம் எல்லாம் செய்து, பகை அலங்காரம் அரசியல் அரங்கில் பெருகிடப் பாடுபடுகின்றன என்பதை அறிந்து எனக்குள்ளாக சிரித்துக் கொள்கிறேன். அந்த ஏடுகளை நடத்துவோரில் சிலர், இயல்பாகவே அரசியல் அரங்கத்தை நாராச நடைபயிலும் கூடமாக ஆக்கிட வேண்டுமெனத் தமது ரத்தத்தில் ஊறியுள்ள சூழ்ச்சித் திறனைக் காட்டுவோர்!

வேறு சிலரோ, வெறும் விற்பனைக்காகத் தமது ஏடுகளில் வெத்து வேட்டுகளைக் கிளப்புவோர் - பாவம்! அவர்களுக்கு

குறிப்பிட்ட யார் மீதும் வெறுப்பு என்றில்லை! ஆனால், புராண காலத்து நாரதனைத் தமது வழிகாட்டியாகக் கொண்டு அவ்வழியில் பிழைக்கும் வழிதேடுவோர்!

குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு, குள்ளநரிகள் சிலவும் உள்ளம் முழுதும் "திராவிட இயக்க எதிர்ப்பு" எனும் நச்சு நினைப்பை நிரப்பிக் கொண்டு, அவற்றின் குட்டை மனத்தில் குவிந்து கிடக்கும் குப்பைக் கூளங்களை, ஏடுகளெனும் முறங்களில் அள்ளி, நம்மீது கொட்டுவதையும் காலம் காலமாகப் பார்த்து வருகிறோம் - இப்போது அவற்றின் எண்ணிக்கைக் கணக்கு உயர்ந்துள்ளதே தவிர எண்ணங்கள் என்னவோ, இழிந்த நிலையிலிருந்து எள் முனையளவும் மாறிடவில்லை.

ஏதோ, பொழுதுபோகாத நேரத்தில் திண்ணையில் அமர்ந்திருக்கும்போது, தெருவில் ஒரு பைத்தியக்காரன் பிதற்றுவதும், ஏன் - அவன் நம்மையே பார்த்து வசைபாடுவதும்கூட, அலட்சியமாக ரசிக்கத் தோன்றுகிற காட்சியாக இருக்குமல்லவா? அப்படித்தான் ஓய்வு நாளில் ஒரு குவியலாய்க் கிடந்த அந்த ஏடுகளைப் பற்றி நான் நினைத்துக் கொண்டேன்.

போகட்டும்! தேர்தல் நேரத்தில் கூட்டங்களுக்கு மேடை அமைப்போர், விளம்பர சுவரொட்டிகள் தயாரிப்போர், ஒலிபெருக்கிக்காரர், மின் விளக்குக்காரர் எனப் பலரும் ஆதாயமடைவது போன்று - இவர்களும் அடையட்டுமே என எண்ணிட முடிவதில்லை! காரணம் அவர்கள் எல்லாம் உண்மையாக உழைத்து ஊதியம் பெறுகிறார்கள். இவர்களோ, உண்மையை ஒழித்தும் அல்லது ஒளித்துமன்றோ பணப்பையை உப்ப வைத்துக் கொள்கிறார்கள். ஆள்வோருக்கு அடிமைகளாக!

எந்த நேரத்திலும் கண்ணியம் தவறாத - கண்களில் ஒத்திக் கொள்ளக் கூடிய - நம்மைக் கண்டித்தே விமர்சித்தாலும் - நாம் கருத்துக் கருவூலமென ஏற்றுக்கொள்ளக் கூடிய நாளேடுகளும், வார ஏடுகளும் நீண்ட காலமாக இருக்கத்தான் செய்கின்றன. யானைக்கும் அடி சறுக்கும் என்பது போல, எப்போதோ ஒரு சமயம் அந்நிலைக்கு அவை ஆட்படினும், அவற்றின் இயல்பு, சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பது போலத்தான் பண்பாட்டுப் பெட்டகங்களாகத் திகழ்கின்றதென்பேன்.

அந்தப் பண்பாடு இங்கே நாடாளுகின்றவர்களுக்கே இல்லை என்பதை, சான்று காட்டி நாம் சாற்றிடாமலே அவர்களே தங்கள் செயலால், பேச்சால் மெய்ப்பித்து வருவதை அன்றாடம் காண்கிறோமே! அதுவும் 'தேர்தல் ஜன்னி'யில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமலே பேசுகிறார்களே!

மாறன் மகன் தயாநிதி மாறனை மத்திய அமைச்சராக்கிட வேண்டுமென பிரதமர் வாஜ்பய் அவர்களை நான் வற்புறுத்தினேனாம் - அவர் மறுத்து விட்டாராம் - அதனால்தான் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியேறி விட்டேனாம்! ஜெயலலிதா கரூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அவிழ்த்துவிட்ட அவதூறுகளில் இதுவும் ஒன்று! இதை மறுத்து விளக்கமளித்துள்ளேன் - வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது - திட்டமிட்டுச் சதி செய்து தேர்தல் விதிமுறைகளை மீறிப் பொய் கூறியவர்கள், உரிய முறையில் உரிய பதில் அளித்தே ஆகவேண்டும். தேர்தல் ஆணையமோ அல்லது நீதிமன்றமோ உரிய தீர்ப்பு வழங்கியே ஆகவேண்டும்.

"கோபாலபுரம் போ! அங்கே மஞ்சள் துண்டு போட்டவன் ஒருத்தன் இருப்பான். அவனைச் சுட்டுடு!"

என்று ஏ.கே. 47 துப்பாக்கியுடனிருக்கும் தனது மெய்க்காப்பாளனுக்கு உத்திரவிட்டதாக தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஒரு நடிக நண்பர் இப்போது பேச முடிகிறது! பேசியிருப்பதை ஏடொன்றில் கண்டேன்.

உடன்பிறப்பே, அப்படி ஒரு முடிவை எதிர்பார்ப்பவன்தான், சிரித்த முகத்துடன் ஏற்பவன்தான் பொதுவாழ்வுக்கு வர முடியும் - வரத் தகுதியானவன் - 1938ஆம் ஆண்டிலேயே இதை உணர்ந்தும், துணிந்தும்தான் நான் தமிழ் மக்களுக்கான இந்தப் பொது வாழ்வு இயக்கத்தில் தலைவனாகத் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறேன்.

எங்கே போனால் சுயநலப் பிழைப்பு நடக்கும் என அலைந்து சுயமரியாதையை விலை கூறி விற்கும் ஈன மனிதப் பிறவிகள் சிலருக்கு வேண்டுமானால் உயிர், வெல்லமாக இருக்கலாம். அவர்கள்தான் பாரதி பாடியதுபோல் அஞ்சி அஞ்சிச் சாவார்!

"இருப்பது ஓர் உயிர் - அது போகப் போவதும் ஒரு முறைதான் - அது ஒரு நல்ல காரியத்துக்காக போகட்டுமே!" என்றார் அண்ணா!

உடன்பிறப்பே! அந்த நல்ல காரியம் இப்போது உடனடியாக என்ன தெரியுமா?

இங்குள்ள நாசகார ஆட்சியைத் தமிழ் மக்களின் தலைமேலிருந்து கீழே இறக்குவதுதான்!

மத்தியில் மதச்சார்பற்ற ஆட்சியொன்றை அமைப்பதுதான்!

அதற்கு நாம் அச்சம் தவிர்த்து, அமைதி காத்து, அனைவரும் ஒன்றுபட்டு, அணி வகுத்து இந்தத் தேர்தலில் வெற்றி அடைந்திடப் பாடுபடுவோம்!

அன்புள்ள,

மு.க.

29-3-2004

3046. புகார்; பூம்புகார் போல மூழ்கி விடுமா?

உடன்பிறப்பே,

தமிழகச் சரித்திரத்தில், ஏன் இந்தியாவிலேயே முதன்முதலாக அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கிய ஆட்சி எது என்று கேட்டால், அது தி.மு.க. ஆட்சி என்று சிறுபிள்ளைகள் கூடச் சொல்லுவார்கள். அதைப்போல அந்த இலவச மின்சாரத்தை ரத்து செய்தது யார் என்று கேட்டால், ஜெயலலிதா என்ற பதில் உடனடியாக வரும்.

விவசாயிகளுக்குக் கழக ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டு, 13 ஆண்டுகளாக எவ்வளவோ நிர்ப்பந்தங்களுக்கிடையிலும், நிதி நெருக்கடிக் கிடையிலும் காப்பாற்றப்பட்டு வந்த இலவச மின்சாரம் என்பது ஜெயலலிதா ஆட்சியில் ரத்து செய்யப்பட்டதோடு, குடிசைகளுக்கான இலவச மின் கட்டணமும் ரத்து செய்யப்பட்டு, வீடுகளுக்கான மின் கட்டணமும் மிக அதிக அளவிற்கு உயர்த்தப் பட்டுள்ள கொடுமையும் நடைபெற்றுள்ளது.

* ஐந்து குதிரைத் திறனுக்கு குறைவான விவசாய மின் விசை ஏற்றங்களுக்கு ஒரு குதிரைத் திறனுக்கு ரூ. 75 என இருந்த மின் கட்டணத்தைத் தி.மு.கழக ஆட்சியில் அக்டோபர் 89இல் 50 ரூபாய் எனக் குறைத்தோம். அதன் காரணமாக, 9 இலட்சம் விவசாயிகள் பயன்பெற்றனர்.

* தொடர்ந்து 1990ஆம் ஆண்டு மார்ச் திங்கள், நிதிநிலை அறிக்கையில் - ஏழரை மற்றும் பத்து குதிரைத் திறன் வரையில் இருந்த கட்டணம், ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் என்பதை 50 ரூபாயாகக் குறைத்தோம். இதன் காரணமாக, மேலும் ஒன்றரை இலட்சம் விவசாயிகள் பயன் அடைந்தனர்.

* இதன்பிறகு, 27-10-1990 அன்று நடைபெற்ற கழக அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுதான் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவாகும். அதுதான் தமிழகம் முழுவதும் உள்ள

சுமார் 13 இலட்சம் விவசாயிகளுக்கு பயனளிக்கக் கூடிய விவசாய பம்ப் செட்டுகளுக்கான இலவச மின்சாரம் வழங்கும் திட்டமாகும். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் தரப்படாத இந்தச் சலுகை கழக ஆட்சியிலேதான் முதன் முதலாகத் தரப்பட்டது.

ஜெயலலிதா 1991ஆம் ஆண்டு பொறுப்பிற்கு வந்ததும் வராததுமாக விவசாயிகளுக்குக் கழக ஆட்சியிலே வழங்கப்பட்ட இலவச மின்சாரத்தை ரத்து செய்வதாக அறிவித்தார். இதற்கு தி.மு.கழகமும், விவசாயிகள் சங்கங்களும், எதிர்க் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக, பெரிய விவசாயிகளுக்கு மின் கட்டணம் விதிக்கிறோம் என்று கூறி, 1992ஆம் ஆண்டு, ஜூன் திங்களில் அ.தி.மு.க. அரசு, ஒரு குதிரை சக்திக்கு ஆண்டு ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் கட்டணம் வசூலிக்கப்படும் என்றும், அதனை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை செலுத்தலாம் என்றும், 25 ஆயிரம் ரூபாய் செலுத்தி முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பைப் பெற்றவர்கள் ஒரு குதிரை சக்திக்கு 150 ரூபாய் வீதம் மின் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் அறிவித்தது.

அப்போது அரசின் சார்பில் செய்த அறிவிப்பில், மின்சார பம்பு செட் வைத்துள்ள சிறு விவசாயிகளின் எண்ணிக்கை சுமார் 98 ஆயிரம் என்றும், அவர்களைத் தவிர, 11.50 இலட்சம் பம்பு செட்டுகளை வைத்துள்ள மற்ற விவசாயிகள் மின் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டது.

இதனைக் கண்டித்து, 11-6-1992 அன்று தமிழகம் முழுவதும் விளக்கப் பொதுக் கூட்டங்கள் நடத்தவும், 13-6-1992 அன்று கண்டனப் பேரணி நடத்தவும், 16-6-1992 அன்று நாடு தழுவிய அளவில் பொது வேலை நிறுத்தம் நடத்தவும் கழகத்தின் சார்பில் முடிவு செய்யப்பட்டது.

11-6-1992 அன்று மதுரையில் நடைபெற்ற கூட்டத்தில் நானும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஏ. நல்லசிவன், ப. மாணிக்கம் ஆகியோரும் கலந்து கொண்டோம். 13-6-1992 அன்று இலவச மின்சாரத்தை ரத்து செய்ததைக் கண்டித்து கழகத்தின் சார்பில் நடத்தவிருந்த வாகனப் பேரணிக்கு அரசின் சார்பில் அனுமதி மறுக்கப்பட்டது. தடையை மீறி பேரணியில்

கலந்துகொள்ள வந்த விவசாயிகளும், கழகத்தினருமாக பத்தாயிரம் பேர் தமிழகம் முழுவதும் கைது செய்யப்பட்டனர்.

அந்த வரிசையில் பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களையும் கைது செய்து ரிமாண்ட் செய்தார்கள். அவர் அப்போது மறியல் என்றுகூட அறிவிக்கவில்லை. வெறும் ஆர்ப்பாட்டம் செய்வதாகத்தான் அறிவித்திருந்தார். இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட்டதைக் கண்டித்து, தமிழகம் முழுவதும் கடுமையாக எதிர்ப்பு ஏற்படத் தொடங்கியது. அதனைச் சமாளிக்க முடியாமல் ஜெயலலிதா அரசு, விவசாயிகள் மின் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற உத்தரவுகளை திரும்பப் பெற்றது.

1997 ஆம் ஆண்டு இலவச மின்சாரத்தை நிறுத்துவது பற்றி கேள்வி எழுந்தபோது, "விவசாயிகளிடமிருந்து மின் கட்டணம் கண்டிப்பாக வசூலிக்க வேண்டும் என்று நிர்ப்பந்தங்கள் இருந்தாலும், தேர்தல் நேரத்தில் விவசாயிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்குவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது" என்று நான் தெரிவித்ததோடு, கழக ஆட்சி நீடித்த வரை அந்த உறுதிமொழியைக் காப்பாற்றியும் வந்தேன்.

இலவச மின்சாரம் வழங்கப்படுவதன் காரணமாக, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஏற்படும் இழப்பினை அரசே மானியம் என்ற முறையில் ஆண்டுதோறும் ஏற்றுக்கொண்டு வந்தது.

2001ல் மீண்டும் இந்த ஆட்சி வந்த பிறகு, 4-12-2001இல் முதல்வர் பொறுப்பிலே இருந்த ஓ.பன்னீர்செல்வம் கூறும்போது, "விவசாயிகளுக்காக வழங்கப்படும் இலவச மின்சாரத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்" என்றார். 13-2-2002 அன்று ஆண்டிப்பட்டி தேர்தல் பிரச்சாரத்தின்போது ஜெயலலிதா பேசி, பத்திரிகைகளில் முதல் பக்கத் தலைப்பே "இலவச மின்சாரத் திட்டம் நீடிக்கும், ரேஷன் அரிசி விலை உயராது - ஜெயலலிதா வாக்குறுதி" என்பதுதான். அதில், "எதிரிகள் இங்கே உங்களிடம் வந்து பொய்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கே நான் அந்தப் பொய்ப் பிரச்சாரத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆண்டிப்பட்டி தேர்தலுக்குப் பிறகும் விவசாயி களுக்கு இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும்" என்றார். இவ்வாறு 13-2-2002 ஆண்டிப்பட்டி தேர்தல் பிரச்சாரக்

கூட்டத்தில் மாத்திரமல்ல, 3-4-2002 அன்று ஜெயலலிதா சட்டப்பேரவையிலேயே "விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் நீடிக்கும். அவர்கள் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு எவ்வளவு என்பதை தெரிந்துகொள்வதற்கும், எவ்வளவு யூனிட் மின்சாரம் தேவைப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கும்தான் மீட்டர் பொருத்தப்படுகிறது." என்றார்.

ஆனால் அந்த விளக்கத்திற்கு மாறாக, இலவச மின்சாரத்தை ரத்து செய்துவிட்டு, விவசாய பம்ப் செட்டுகளுக்கு ஒரு குதிரை சக்திக்கு ஆண்டு ஒன்றுக்கு 250 ரூபாய் அல்லது மீட்டர் பொருத்திக் கொண்டால் யூனிட்டுக்கு 20 பைசா வீதம் கட்டணம் இனி வசூலிக்கப்படும் என்று அறிவித்தார்.

இதில் இலவச மின்சாரத்தை ரத்து செய்வதன் காரணமாக, 218 கோடி ரூபாய்தான் வருவாயாகக் கிடைக்கும். அதிலும் 94 கோடி ரூபாயை அரசு மானியமாக, சிறு விவசாயிகளுக்கு தரப்போவதாக முதலில் அறிவித்தார்கள். அதுவும் அந்தத் தொகையை ஒவ்வொரு விவசாயிக்கும் தனித்தனியாக மணியார்டர் மூலமாக அனுப்பப் போவதாகவும் கூறினார்கள். இவ்வாறு மணியார்டர் அனுப்புவதில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. இந்த மானிய உதவியும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மட்டுமே தரப்பட்டு வந்தது.

இந்த நிலையில், 14வது நாடாளுமன்றத் தேர்தல் வரப்போவது தெரிந்ததும், அவசர அவசரமாக கடந்த மாதம் 18ந்தேதியன்று தமிழக அரசு இந்தச் சலுகையை இதர விவசாயிகளுக்கும் வழங்கி அறிவிப்பு செய்திருக்கிறது.

இவ்வாறு தேர்தல் நேரத்தில் விவசாயிகளை ஏமாற்றுவதற்காக வழங்கப்பட்ட சலுகையேகூட ஆண்டிப்பட்டியில் இடைத் தேர்தல் நேரத்தில் அளிக்கப்பட்ட இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட மாட்டாது என்ற உறுதிமொழி போலத்தான் இருக்கும் என்ற போதிலும், இலவச மின்சாரத்திற்காக மானியம் வழங்குவதாகக் கூறி பின்புறமாக மூக்கைத் தொடுகின்ற நிகழ்ச்சியிலும் தேர்தல் முறைகேடு நடப்பதாகத் தெரியவந்துள்ளது.

பல துறைகளிலே பல்வேறு சலுகைகளைப் பெறும் பயனாளிகளுக்கு அரசின் சார்பில் உதவித் தொகையோ, நிவாரணத் தொகையோ அளிக்கும் போது அந்தத் துறையின் செயலாளர் அல்லது மற்ற அதிகாரிகள் மூலமாகத்தான் மணியார்டர்

அனுப்பப்படும். ஏனென்றால், வழங்கப்படும் உதவித் தொகை என்பது அரசின் சார்பாக அளிக்கப்படும், மக்களின் வரிப் பணத்திலிருந்து தரப்படும் தொகையாகும்.

ஆனால் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படும் தொகை, மணியார்டர் மூலமாக அனுப்பும்போது, அத்தொகையை "மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு தங்களுக்கு அன்புடன் வழங்குகின்றது" என்று அந்த மணியார்டர் படிவத்திலேயே அச்சிட்டு அனுப்புவது என்பது முழுக்க முழுக்க தேர்தல் விதிமுறைகளை மீறிச் செய்யப்படுகின்ற செயலாகும்.

இவ்வாறு முதலமைச்சரின் பெயரைக் குறிப்பிட்டு விவசாயிகளுக்கு மணியார்டர் அனுப்புவது மறைமுகமாக, பணம் கொடுத்து, அவர்கள் கட்சிக்கு வாக்களிக்கும்படி கேட்பதைப் போன்ற செயலாகும். தமிழக அரசின் சார்பாக உதவித் தொகை அனுப்புவது என்பது ஜெயலலிதா வீட்டிலிருந்து அவருடைய கைப் பணத்திலிருந்து வழங்கப்படும் தொகையல்ல. எனவே இதுகுறித்து தனிப்பட்ட சிலர் தேர்தல் ஆணையத்திற்கு புகார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் புகார் மீது தேர்தல் ஆணையம் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமா?

அல்லது புகார், பூம்புகார் போல கடலுக்குள் மூழ்கி விடுமா?

அன்புள்ள,

மு.க.

1-4-2004

3047. புலம்பலுக்கு வழிவகுக்கும் புலம்பல்!

உடன்பிறப்பே,

பாரதிய ஜனதா கட்சியின் தொலைநோக்கு ஆவண அறிக்கை - vision document - 2004 - என்ற பெயரால் மார்ச் 30ஆம் தேதி அன்று அந்தக் கட்சியின் தலைவரால் வெளியிடப்பட்டுள்ளது. 1999ஆம் ஆண்டு தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் நாட்டிற்குத் தரப்பட்ட தேசிய செயல் திட்டத்தில் இடம் பெறாத பல்வேறு அம்சங்கள் இந்தத் தொலைநோக்கு ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. உள்ளத்திலே ஒளிந்திருந்த கருத்துகள் தான் வெளியே வந்துள்ளன. ஆனால் 1999ஆம் ஆண்டு, அத்தகைய ஏற்க இயலாத கருத்துகள் திணிக்கப் பட்டபோதும், கூட்டணியிலே உள்ள கட்சிகள், முக்கியமாக மறைந்த முரசொலி மாறன் அதற்கு தடைக்கல்லாக இருந்து, பலவற்றை அதிலே சேர்க்கவிடாமல் செய்து, தேவையானவற்றை மட்டும் சேர்த்து நாட்டிற்குத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., போன்ற கட்சிகளின் குறுக்கீடுகள் எதுவுமின்றி, பா.ஜ.க.வின் கருத்துகள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. தேர்தல் அறிக்கை பின்னர் வருமென்று தெரிவித்திருக்கிறார்கள். அப்போது கூட்டணிக் கட்சிகளின் கருத்துக்களையும் அறிந்து தெரிவிப்பார்களோ, என்னவோ? எப்படியோ அடித்தளம், அனைவராலும் புரிந்துகொள்ளப்பட்டு விட்டது.

"தொலைநோக்கு" எனப்படும் இந்தத் 'தொல்லை நோக்கு' ஆவணத்தில், முக்கியமாக இடம் பெற்றிருப்பது அயோத்தியில் பிரமாண்டமாக ராமர் கோவிலைக் கட்டுவது என்பதாகும். இதன் அடிப்படையில்தான் நேற்றும், இன்றும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசிய துணைப் பிரதமர் அத்வானி அவர்கள், அயோத்தியில் ராமர் கோவில் நிச்சயமாகக் கட்டப்படும் என்று கூறி வருகிறார். உறுதியாகக் கட்டப்படும் என உரத்த குரலில் முழங்குகிறார். இந்து மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி

வாக்குகளைப் பெற்றிட இந்த உறுதிமொழியை ஓர் உத்தியாக பா.ஜ.க.வினர் பயன்படுத்தி வருகிறார்கள்.

ஆனால் 1999ஆம் ஆண்டு தி.மு.க. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றிருந்தபோது தரப்பட்ட தேர்தல் அறிக்கையில் உள்ள வாசகங்கள் வருமாறு :-

"We reach out to the minorities and even at the cost of repetition proclaim that we will safeguard the rights as enshrined in our Constitution. N.D.A. is the political arm of none other than the Indian people as a whole. No one will be cast aside. Fairness and justice will be rendered to one and all and we assure you that there will not be any discrimination. We appeal to our brothers and sisters of the minorities that we whole-heartedly extend our hands of friendship in these fraternal words. Let us hold hands and walk together to build a resurgent, modern India. Let us throw away our old prejudices. Let us put an end to divisiveness. Let us have a moratorium on contentious issues. Let us bind ourselves with bonds of trust and friendship. Secularism - the emotional harmony of all Indians and full protection of minorities."

இதன் மொழியாக்கமாவது :-

"அரசியல் சட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிப்பது எங்கள் கடமையாகும். தேசிய ஜனநாயகக் கூட்டணி இந்திய மக்களின் வலுவானதொரு அரசியல் கரமாகச் செயல்படும். சாதி, மத அடிப்படையில் யாரும் நடத்தப் படமாட்டார்கள். நீதியும், நியாயமும் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் வழங்கப்படும். யாருக்கும் சாதகமாகவோ, பாதகமாகவோ நாங்கள் செயல்பட மாட்டோம் என்ற உறுதியினை அளிக்கிறோம். சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகளே! திறந்த மனதுடன் இதயபூர்வமாக உங்களுடன் நட்பார்ந்த முறையில் நடந்துகொள்ள வாய்ப்பளியுங்கள். நவீன இந்தியாவை, சீரமைக்கப்பட்ட நல் இந்தியாவை உருவாக்கிட நாம் கரம் கோத்து இணைந்து நடைபோடுவோம். பழைய தப்பபிப்பிராயங்களைத் தூக்கி எறிவோம். மன வேற்றுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். தகராறுகளை உருவாக்கும் பிரச்சினைகளை அப்பால் தள்ளி வைப்போம். பரஸ்பர நம்பிக்கை, நட்புணர்வு இவற்றால் நம்மை நாமே பிணைத்துக் கொள்வோம். மதச்

சார்பின்மை கடைப்பிடிக்கப்பட்டு இந்திய நாட்டு மக்கள் அனைவரது உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கப்படும். சிறுபான்மை மக்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கப்படும்."

தி.மு.க. உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் இணைந்து வெளியிட்ட தேர்தல் அறிக்கைக்கும் இப்போது பா.ஜ.க. தனியாக வெளியிட்டுள்ள ஆவணத்திற்கும் உள்ள வேறுபாட்டினை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். தொலைநோக்கு ஆவணத்தில் சிறுபான்மையினரைப் பற்றி, "சிறுபான்மையினர் தங்களுடைய மனோபாவத்தை மாற்றிக்கொண்டு, வாஜ்பயியின் கரத்தை வலுப்படுத்த முன்வர வேண்டும்" (தினமணி) என்று கூறப்பட்டுள்ளது. இதே கருத்தைத்தான் குஜராத் கலவரத்தின்போது, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, சிறுபான்மையோர், பெரும்பான்மையோருக்குக் கட்டுப்பட்டு அவர்களை அனுசரித்துப் போகவேண்டுமென்று தெரிவித்திருந்தார்.

அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது மாத்திரமல்ல! நேற்று வெளிவந்த ஆவண அறிக்கையில் அனைவருக்கும் ஒரேமாதிரியான பொது சிவில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பது பாரதிய ஜனதாவின் கொள்கை ஆகும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்தக் கொள்கைகளைத்தான் அ.தி.மு.க.வின் தலைவியும் தனக்கு உகந்த உவப்பான கொள்கைகள் என்று தேர்தலுக்கு முன்பே தெரிவித்திருக்கிறார். ஏனெனில், பா.ஜ.க.வின் பரிவாரங்களைக் காட்டிலும் ஒருபடி மேலே போய் பச்சை மதவாதியாகவே தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளும் அம்மணியாரல்லவா? அதனால்தான் அயோத்தியில் ராமர் கோவிலைக் கட்டாமல் வேறு எங்கே கட்டுவது என்றே செய்தியாளர்களிடம் சினம் பொங்கிடக் கேட்டார் எனச் செய்தி வந்தது!

அதையொட்டித்தான் ஜெயலலிதா பொது சிவில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்றார். அதையேதான் பா.ஜ.க.வின் தொலைநோக்கு ஆவணமும் கூறுகிறது. ஒவ்வொரு மதத்தினரும் அவரவர் மரபுரிமைகளைப் பேணிடவும், அவற்றைப் பாதுகாத்திடவும் நீண்ட காலமாக இருந்துவரும் நிலையை மாற்றிடத் தேவையான விழிப்புணர்வைப் படிப்படியாக ஏற்படுத்திட முனையாமல், சில நாட்களுக்கு முன்பு கிராம தேவதைகளுக்கான நேர்த்திக் கடனில் நிதானப் போக்கை விடுத்து, சட்டப்படியான தீவிர நடவடிக்கை எடுத்து, அதன்

விளைவுகளைக் கண்டு வெலவெலத்துப்போய், நாடாளுமன்றத் தேர்தலையொட்டி அதனைத் தளர்த்தி நிறுத்திக்கொண்டதை நினைவில் வைத்துக் கொண்டால், பொது சிவில் சட்டம் அமல் என்பது புற்றில் கைவிடுவதற்கு ஒப்பானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

எனவே, இதுவரை பா.ஜ.க.வின் பல பிரிவினர் மறைமுகமாகவும், பட்டும் படாததுமாகச் சொல்லி வந்த சில கொள்கைகளைத்தான் தற்போது ஒளிவுமறைவின்றி திட்டவட்டமாக இந்த அறிக்கை மூலம் தெரிவித்திருக்கின்றார்கள்.

மதமாற்றத் தடைச் சட்டம் பற்றியும் பா.ஜ.க. அறிக்கையிலே கூறுகிறது. இதுவும்கூட தமிழ்நாட்டில் ஜெயலலிதா ஆட்சியிலே கொண்டு வரப்பட்டு, பலத்த எதிர்ப்புக்கு உள்ளாகியிருக்கிற சட்டம்தான்! இதை அகில இந்திய அளவிலே கொண்டுவர முயற்சிப்போம் என்று பா.ஜ.க. வின் அறிக்கை கூறுகிறது. அதாவது, மனித உரிமையை மாய்ப்போம் என்று மார்தட்டிக் கூறுகிறது.

ஒரு மதத்தின் பேரால் மனிதன் மிருகமாகப் பாவிக்கப்படவும் - நாய், பன்றிகளுக்குள்ள உரிமை கூட அவற்றைப் போலவே "நான்முகனா"ல் படைக்கப் பட்டதாகச் சொல்லப்படும் மக்களுக்குக் கிடையாது என மறுக்கப்படுவதும் - தாங்கிக் கொள்ளப்பட்டு அவன் தாசானுதாசனாக அந்த மதத்திலேயே சுருண்டு கிடக்க வேண்டும் புழுப்போல - அதை மறுத்து அவன் புலிப்போல சீறி மதம் மாறி, மான உணர்வு பெற்றிடத் துடித்தால் அவனைச் சட்டத்தால் கொட்டி சிறையில் தள்ளிட வேண்டும்- இதுதானே மதமாற்றத் தடைச் சட்டம் விளைவிக்கப் போகும் மாய்மாலம்!

"மதம் என்பது தொண்டு செய்வதே தவிர, மற்றவனை அடக்கி ஆள்வதோ, தொல்லை விளைவிப்பதோ அல்ல" என்றார் பெரியார்.

இவர்களோ, தொண்டு செய்யும் அடிமைகள், தம்மைத் தொழவேண்டுமென்பதற்காக மதங்களைக் கட்டி அழ விரும்புகிறார்கள்.

எனவே எதிர்காலத்தில் இந்திய மக்களின் புலம்பலுக்கு வழிவகுக்கும் புலம்பலாகவே இருக்கிறது பா.ஜ.க.வின் தொலைநோக்கு அறிக்கை!

அன்புள்ள,

மு.க.

2-4-2004

3048. மலடுமல்ல; மனம் கல்லுமல்ல!

உடன்பிறப்பே,

“கருணாநிதியின் பேச்சுகள் வெளிவரும் பத்திரிகைகளையோ அல்லது அவரது அறிக்கைகளையோ நான் படிப்பதில்லை. அந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ள பத்திரிகைகளின் பக்கங்களின் பக்கம் என் பார்வை திரும்புவதுமில்லை” என்று இரண்டு நாட்களுக்கு முன்புதான் ஜெயலலிதா, அறிவிப்பு ஒன்றைப் பத்திரிகைகளுக்கு அளித்துவிட்டு, பாவம்! அப்படிச் சொன்னதை எப்படியோ மறந்துவிட்டு, ராகுலின் அரசியல் பிரவேசம் பற்றியும், அமேதியில் அவர் பேசியது பற்றியும் நான் உருக்கமாகக் குறிப்பிட்டிருந்ததைப் படித்திருக்கிறார்.

“பெண்களுக்கு பிரசவ வைராக்கியம்” என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோல, என் பேச்சோ, பேட்டியோ, அறிக்கையோ வெளிவந்திருந்தால் கண்களை மூடிக் கொள்ளும் வழக்கத்தைக் கடைப்பிடிக்கும் (?) இந்த வனிதாமணி, தனது தவத்தைக் கலைத்துக்கொண்டு, ராகுல் பேச்சு பற்றி நான் தெரிவித்த கருத்தை மட்டும் படித்துவிட்டு, காந்தாரியாகவே மாறி கடுமையாக என்னைச் சாடியிருக்கிறார்.

“ராகுல்காந்தியின் கன்னிப் பேச்சு கண்ணீரை வரவழைத்தது என்பது அண்மையில் கருணாநிதி உதிர்த்து இருக்கும் திருவாசகம். ஒருவேளை கானாவுக்கு கானா வர வேண்டும் என்பதற்காக கலைஞர் கருணாநிதி அப்படி சொன்னாரா என்பது தெரிய வில்லை. அவருடைய இந்த வாசகத்தை யார் படித்தாலும் அவர்களை அறியாமலேயே ஒரு ஏளனச் சிரிப்பு எழத்தான் செய்யும். ஏன்? கருணாநிதியின் கண்ணீர் முதலை கண்ணீர். இது உள்ளூர் தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகத் தமிழர்கள் அனைவருக்கும் தெரியும். ராகுல் காந்தியின் கன்னிப் பேச்சு கருணாநிதிக்கு கண்ணீரை வரவழைத்தது என்பதை உலகம் நம்புவது ஒருபுறம் இருக்கட்டும். அவரே இதை நம்புகிறாரா? இது யாரை ஏமாற்றுவதற் காக நடத்தப்படுகிற நாடகம்? இந்திரா காந்தி மீது கொலைவெறி தாக்குதல் நடத்தியபோது வராத கண்ணீர், ராஜீவ் காந்தி இதே

தமிழக மண்ணில் பச்சைப் படுகொலை செய்யப்பட்டபோது வராத கண்ணீர், ராகுல் காந்தியின் கன்னிப் பேச்சைக் கேட்டதும் வருகிறதாம். அடடா, இதுவல்லவா கண்ணீர்?"

திருவள்ளூரில் நேற்று (1-4-2004) நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில்தான் ஜெயலலிதா மேற்கண்டவாறு உரை நிகழ்த்தியிருக்கிறார்.

ராகுலின் கன்னிப்பேச்சு கேட்டு, நான் உணர்ச்சி வசப்படுவதும், கண்ணீர் உதிர்ப்பதும் அம்மையாருக்கு ஆச்சரியமாயிருக்கிறதாம். என் செய்வது! என்னைப்போல பிள்ளைகுட்டிப் பெற்றவர்களுக்கு, ராகுலின் பேச்சு கண்ணீரைத்தான் வரவழைக்கும். நான் மலடுமல்ல, என் மனம் கல்லுமல்ல என்கிறபோது என் இதயத்தில் எழும் அதிர்வுகளை வெளிப்படுத்துவது எனக்கு ஆறுதல் அளிக்கக் கூடியது என்றால், அதைத் தடுப்பதற்கு இந்தப் பெண்மணி யார்?

இவர் முதலமைச்சராக அதிகாரம் பெற்று நடத்துகிற தர்பாரில் இதயமுடையோர் எவரானாலும் - அந்த இதயத்தில் இரக்கம் சுரப்போர் எவரானாலும் அவர்கள், தமது இமையோரத்தில் ஈரம் படிவதை மறைத்துக் கொள்ள வேண்டுமென்று ஏதாவது சட்டம் இயற்றப்பட்டிருக்கிறதா?

மேலும் ஜெயலலிதா, அந்த திரட்டப்பட்ட கூட்டத்தில் தேளின் கொடுக்கு எனப்படும் தனது நாவினால் நம்மைக் கொட்டித் தீர்த்திருக்கிறார். அந்த விஷம் ஒன்றும் நமது நாடி நரம்புகளில் ஏறிக் கொண்டு நம்மை விபத்துக்கு ஆளாக்கிவிடவில்லை; ஒரு விதூஷகியின் வேடிக்கைப் பேச்சாகவே அது விளங்குகிற காரணத்தால்!

"இந்திரா காந்தியின் மீது கொலை வெறித் தாக்குதல் நடந்தபோது - ராஜீவ் காந்தி படுகொலைக்கு ஆளானபோது வராத கண்ணீர், இப்போது எப்படி வந்தது?" என்று ஜெயலலிதா கேட்கிறார்.

அந்தக்கால கட்டங்களில், எம்.ஜி.ஆர். மறைந்தபோது, சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்த இந்தச் சீமாட்டியைப் போலவோ - அல்லது அவருக்குப் பாலில் விஷம் கலந்து கொடுக்கப்பட்டதா? அல்லது மோரில் விஷம் கலந்து கொடுக்கப்பட்டதா? என்று ஜானகி அம்மையாரும், இவரும் போட்டி போட்டுக் கொண்டு ஏடுகளில்

ஒருவரையொருவர் குற்றஞ் சாட்டி அறிக்கை கொடுத்துக் கொண்டிருந்தார்களே! அதைப்போலவோ எதுவும் நடக்கவில்லை, மாறாக மனங்கலங்கி இரங்கலுரைகளைத்தான் கண்ணீரோடு கலந்து வெளியிட்டோம்.

ஜெயலலிதாபோல மனம் கல்லாக இருந்தால், எம்.ஜி.ஆர்., தனது வளர்ச்சியையும் செல்வாக்கையும் கண்டு பொறாமைப்படுகிறார் என்றும், எம்.ஜி.ஆரால் பேச முடியவில்லை, செயல்பட முடியவில்லை என்றும் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தன் கைப்படக் கடிதம் எழுதி, 'பதி பக்தி'யைக் காட்டிக் கொண்டாரே ஜெயலலிதா! அதைப் போல அல்லவா நாமும் நடந்து கொண்டிருப்போம் - அதற்கு மாறாக எம்.ஜி.ஆர். பெயரால் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் தொடக்க விழாவையன்றோ குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்களை அழைத்து நடத்தினோம். கண்ணீர் குறித்தும் கசிந்துருகும் உள்ளம் குறித்தும் கேலி பேசுவதற்கும் ஒரு முறையான தகுதி வேண்டாமா?

அந்தத் தகுதிகளைத் தேடி நாம் ஒன்றும் பழைய காலத்து மயில் ராவணன் கதையைப் போல, ஒரு தடாகம் - அதிலே ஒரு தாமரை - அந்தத் தாமரைத் தண்டுக்குள் மாய உருவம் எடுத்துக் கொண்டு நுழைந்தால் - உள்ளே மயன் மாளிகைபோல் தோற்றமுடைய மண்டபம் - அந்த மண்டபத்தில் ஒரு குகை - அந்தக் குகைக்குள் போனால் ஒரு மாடம் - அந்த மாடத்தில் ஒரு பேழை - அந்தப் பேழையைப் பாதுகாக்கும் இரண்டு பேய்கள் - பேய்களுடன் சண்டையிட்டு வென்று, அந்தப் பேழையைக் கையில் எடுத்துத் திறந்தால் - அதற்குள் ஒரு பொன்வண்டு - அந்தப் பொன் வண்டை நசுக்கினால் - உடனடியாக மயில் ராவணன் உயிர் போகும் - என்ற மர்மங்களையெல்லாம் அறிந்து கொள்கிற அளவுக்குச் சிரமத்தை ஏற்றுக்கொண்டு, ஜெயலலிதாவின் தகுதியைத் தேடிப் பிடிக்க நாம் ஆவலாகத் துடிக்கவில்லை.

ஒருவர் உயிரோடிருக்கும்போது அரசியல் கருத்து வேறுபாடுகளால் அவரை விமர்சிப்பதும்; அவர் மறைந்திடும்போது இரங்கல் தெரிவிப்பதும் மனித நேயப் பண்பாடு!

பண்பாட்டின் பால பாடம் கூட அறிந்து கொள்ளாதவரிடம் நாம் அது பற்றிக் கூறுவது, பாறையில் பயிரிட நடத்தும் முயற்சி போன்றது என்பதை நன்கறிவேன்.

இந்திரா காந்தியையோ, ராஜீவ் காந்தியையோ அரசியல் ரீதியாக எதிர்ப்பதும் - கருத்தறிவிப்பதும் - அவர்களும் பதில் அளிப்பதும், ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக முறை!

ஆனால் அவர்கள் மறைவுக்காக மனங் கலங்காது, மகிழ்வது அல்லது மத்தாப்பு கொளுத்துவது - பட்டாசு சுடுவது - இவையெல்லாம் மனித உணர்வுக்கு அப்பாற்பட்டவை - ஜெயாவின் ஜென்மத்தோடு மட்டும் சேர்ந்து பிறந்தவை என்பதை நாடறியும் நன்றாக!

இவர் போய் ராஜீவ் காந்தி படுகொலை - ஜெயின் கமிஷன் என்றெல்லாம் நீலிக் கண்ணீர் வடித்து நீண்ட காலத்துக்கு மக்களை ஏமாற்ற முடியாது என்பதை நினைவிற்கொள்வது நல்லது!

ராஜீவ் படுகொலையின்போது ஜெயாதான் கிருஷ்ணகிரியில் இருந்தார். ஆனால் ராஜீவ் விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது, அவர்களது கூட்டணியின் அகில இந்திய தலைவர் ராஜீவ் என்ற முறையில், எந்தவொரு அ.தி.மு.க. முக்கிய பிரமுகராவது சென்று விமான நிலையத்தில் ராஜீவ் காந்தியை வரவேற்றது உண்டா? இல்லையே ஏன்? இதற்கெல்லாம் ஜெயலலிதா பதில் சொல்லமாட்டார். பதில் சொல்ல முடியாது.

ஆனால், ராகுல் காந்தியின் கன்னிப்பேச்சை நான் பாராட்டியது கண்டு மெத்தக் கடுப்பாகி விட்டார். படபடவெனப் பொறிந்து தள்ளி விட்டார்.

என் செய்வது! ராகுல் என்ற அந்த இளைஞரை நான் பாராட்டினேன் என்றால், நான் மலடு அல்ல! என் மனமும் கல் அல்ல!

பிள்ளை குட்டி பெற்றவன் - சிலர் பெற்றே இருக்க மாட்டார்கள் - பெறவும் விட மாட்டார்கள் - அவர்களுக்குக் கண்ணீர் என்பது கேலிக்குரிய ஒன்றுதான். கிளிசரினினால் மட்டுமே கண்ணீர் வடிப்பவருக்கு உண்மைக் கண்ணீரைக் கிண்டல் செய்யத்தான் தெரியும்.

என் செய்வது -

நான் மலடுமல்ல; என் மனம் கல்லுமல்ல!

அதனால் கண்ணீர் வருகிறது.

அன்புள்ள,

மு.க.

3-4-2004

3049. சுற்றுப்பயணம்; இரண்டாவது கட்டம்!

உடன்பிறப்பே,

இடையில் ஒரு நாள்தான் - இரண்டாவது கட்டமாக நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, நமது கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டிட, 8-4-2004 சென்னையிலிருந்து புறப்படுகிறேன்.

முதல் கட்டச் சுற்றுப்பயணத்தில், சென்னைக் கடற்கரை காமராஜர் சாலையிலிருந்து புறப்பட்டு, பயண நிறைவாக ஓசூரில் ஒரு கடலே சூழ்ந்தது என்ற அளவுக்கு மக்கள் வழங்கிய மகத்தான ஆதரவு கண்டு மகிழ்ச்சியில் ஆழ்ந்து - அந்தச் சுற்றுப் பயணத்தின் இடைக்கால இறுதி நிகழ்ச்சியும் காமராஜர் அரங்கத்தில் - தம்பி தி.வீரபாண்டியன் அருமையாகப் படைத்துள்ள "ஆகட்டும் பார்க்கலாம்" நூல் வெளியீட்டு விழாவாக அமைந்து, அந்தக் காமராஜர் கட்டிக் காத்த காங்கிரஸ் இயக்கமும் கொண்டதே நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணி என்பதை நினைவுபடுத்தி நம் நெஞ்சை நெகிழ வைத்தது எனலாம்.

இந்தக் கூட்டணி கண்டு ஆளுந்தரப்பினரும், அவர்களுக்கு ஆலவட்டம் சுற்றுவோரும் அசூயை மிகக் கொண்டு, தேர்தல் முடிவு எப்படியிருக்கும் - மக்கள் தீர்ப்பு எவ்வாறு அமைந்திடும் - என்பதை இப்போதே அறிந்து, அச்சம் மிக மிகக் கொண்டு வன்முறை ஆர்ப்பாட்டங்களால் நமது வெற்றியைத் தடுத்திட முடியுமெனக் கருதுகின்றனர். அதற்கும் நமது கூட்டணியின் வலிமையும், கட்டுப்பாடும் ஒரு தடையாக உயர்ந்து நிற்கிறதே என உணர்ந்து, தில்லுமுல்லு வேலைகளால் தேர்தலில் குழப்பம் ஏற்படுத்தலாமா எனத் திட்டமிடுகின்றனர். எதுவும் முடியாது, இந்த எஃகு கோட்டையென எழுந்து நிற்கும் கூட்டணியை நெருங்கிடவே இயலாது - எனப் புரிந்து கொண்டு, ஒரேயடியாகத் தேர்தலிலேயே தி.மு.க. நிற்க முடியாமல் செய்துவிட்டால் என்னவென்று ஆரூடம் பார்த்துக் கொண்டு அலைகிறார்கள்.

அதற்கு ஆணையத்தையே பயன்படுத்த முடியுமா என்று பார்த்துப் பரிதவிக்கிறார்கள்.

உன்போன்ற உடன்பிறப்புகளையும், தமிழ்ப் பெருமக்களையும் குழப்புவதற்காகவே, முதலில் குட்டையைக் குழப்புகிறார்கள். அதாவது அவர்கள் வெட்டிய குட்டையை அவர்களே குழப்பி - அந்தக் குழம்பிய குட்டையில் அவர்களே விழப் போகிறார்கள். பாரேன்! சேறும் சகதியும் பூசிக் கொண்டு, சிறு நரிகள் வாலறுந்து நிற்பது போல் நிற்கப் போகிறார்கள்.

ஏதோ தேர்தல் விதிகளை மீறிவிட்டோமாம், நாம்! - பதவி கிடையாது என்று விரட்டப்பட்டவர்கள் சிலர், அடுத்து வரும் நியமனப் பதவியாவது கிடைக்கும் என்ற நப்பாசையிலும், நம்பிக்கையிலும் நம் மீது தீவிரமான குற்றச்சாட்டுகளைக் கொட்டி, அவர்கள் அம்மாவின் அகமும், முகமும் மலராதா என அண்ணாந்து பார்த்துத் தொண்ணாந்து கிடக்கின்றனர். தேர்தலில் மக்கள் தங்களின் எண்ணத்தில் மண்ணையள்ளிப் போடத்தான் போகிறார்கள் என்பதை முன்கூட்டியே தெரிந்து கொண்டு, தேர்தலில் தி.மு.கழகத்தையே நிற்கவொட்டாமல் தடை செய்துவிட்டால் என்ன என்று அஞ்சா நெஞ்சுடனே ஆலோசனை நடத்துகிறார்கள்.

சட்டப் பிரச்சினைகளைச் சட்டத்தினால் சந்திக்கவும் - தேர்தல் விதிமுறைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு செயல்படவும், இன்று நேற்றல்ல - 1957 முதலே அதற்கான அனுபவ முத்திரையை அழுத்தம் திருத்தமாகக் குத்திக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் திட்டவட்டமாகவும், தீர்க்கமாகவும் புரியும் என்பதை தெருவில் திரியும் சிலரல்ல, தேர்தல் ஆணையமே சந்தேகத்திற்கு இடமின்றி புரிந்து கொண்டு செயல்படும் என்பதை நாமறிவோம்! நாட்டு மக்களும் அறிவார்கள்.

எனவே "அய்யோ! அவர்கள் அறிக்கைகள் அந்தப் பத்திரிகையில் வந்துள்ளதே! இந்தப் பத்திரிகையில் வந்துள்ளதே!" என்றெல்லாம் யாரும் திகைத்திடத் தேவையில்லை. தி.மு.க. என்றைக்குமே திறந்த புத்தகம். எந்த மன்றத்தில் வேண்டுமானாலும் வாதிட்டு, நீதியை நிலை நாட்டக்கூடிய நேர்மையும், திறனும் நமக்கிருக்கிறது. தங்களின் முதுகில் உள்ள அழுக்கு மூட்டையை மறைத்துக் கொண்டு - நம் முகத்தைக் குறை கூறுகிறார்கள் என்ற உண்மை, ஒரு நாள் வெளிவரத்தான்

போகிறது. ஒளி பிறக்கும் அந்த நாளில் இந்த ஓநாய்கள் தாக்குப் பிடிக்க முடியாமல் ஒன்றின் மீதொன்று பாய்ந்து தாண்டி ஓடத் தான் போகின்றன!

எனவே அந்த எரிச்சல் பிறவிகளையும், அவர்களின் பாதங்களை ஏந்தி நிற்கும் ஏடுகள் சிலவற்றையும் கண்டு - என்னவோ ஏதோ என்ற எள்முனையளவு ஐயப்பாட்டுக்கும் இடமின்றி,

நெஞ்சுயர்த்தி அணி வகுக்கட்டும் நமது கூட்டணிச் செயல்வீரர்கள்!

தோல்வி பயத்தில் நிதானமிழந்து - அமைதி குலைந்து - மனத்தில் தோன்றியதையெல்லாம் உளறிக் கொட்டும் மன நோயாளிகளின் நிலைமைக்கு ஆளாகிவிட்டவர்களின் சேட்டைகளுக்குச் செவி சாய்க்காமல்,

நம் செயல் திறனைக் காட்ட எழுந்திடுவீர் இளைஞர்காள்! என அழைக்கின்றேன்.

தாய்க்குலத்தார் - தங்களின் எதிர்காலத்தைத் தவிடு பொடியாக்கும் பேய்க் குலத்துக்கு இடம் தராமல் இன்றே எழுந்திடுக! என அன்புடன் அழைக்கின்றேன்.

நானழைத்து எத்தனையோ விழாக்கள் - எத்தனையோ பேரணிகள் - எத்தனையோ மாநாடுகள் என வந்துள்ளீர்கள். இப்போது நானே வருகிறேன்! உன்னையும், உன்போன்ற உடன் பிறப்புகளையும், தாய்க்குலத்தினையும் - தமிழகத்தின் சகல பிரிவு மக்களையும் சந்திப்பதற்கு!

தேர்தல் நேரத்திற்கு மட்டுமே வருபவனல்ல நான் என்பதையும் அறிவீர்கள்.

அதனால் என் வேண்டுகோள் செவிமடுத்திட,
செவிமடுத்ததைச் செயல்படுத்திட -

சிற்றெறும்பின் சுறுசுறுப்புடனும்
சிங்கத்தின் கம்பீரத்துடனும்
அணி சேர்ந்து வா! அன்பு உடன்பிறப்பே! என அழைக்கிறேன்.

அன்புள்ள,
மு.க.
7-4-2004

3050. தேசிய செயல் திட்டம் தெளிவாக்குவதென்ன?

உடன்பிறப்பே,

இரண்டாவது கட்டத் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம் சென்னை சைதாப்பேட்டையிலே களைகட்டத் தொடங்கி பிற்பகல் 3 மணிக்கு சென்னையில் புறப்பட்ட நாங்கள் வேலூர் வந்து சேர இரவு 9.30 மணி ஆயிற்று என்றால், வழி நெடுக ஆறரை மணி நேரப் பயணமும் - ஆற்றுப் பெருக்கில் பாய்மரப் படகொன்றில் வந்தது போலத்தான் மக்கள் வெள்ளத்தில் அமைந்தது என்பதற்கு வேறு சான்று எதுவும் வேண்டாமன்றோ!

வேலூர் தங்கும் விடுதியில் (ரிவர்வியூ ஓட்டல்) காலை எழுந்து கண்மலர்ந்தபோது, நாளேடுகள் சொன்ன செய்திகள் "நல்லோர்" என்று நாம் நம்பியவர்களே, நம் நம்பிக்கையைத் தூளாக்குபவர்களாயிருக்கிறார்களே என்ற உணர்வை அரசியல் ரீதியாக என் உள்ளத்தில் ஒரு வேலாக வீசியதை உணர்ந்தேன்.

அந்தச் செய்திகளில் ஒரு நிம்மதி! ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணி வெளியிட்டுள்ள செயல் திட்ட அறிக்கையில், அயோத்தி இராமர் கோவில் கட்டும் பிரச்சினை இடம்பெற்றிருப்பதற்குத் தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்.

ஐந்தாண்டு காலத்துக்கு முன்பு, 1999ல் ஜெயலலிதாவினால் வாஜ்பய் அரசு கவிழ்க்கப்பட்டு, நிலையான ஆட்சி அமைக்க முடியாமல் அவர் நிலை தடுமாறி நின்றபோது, நிபந்தனைகள் சில விதித்து தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., ஆகிய கட்சிகள் தேசிய ஜனநாயகக் கூட்டணி உருவாகிடத் தங்கள் ஒப்புதலை அளித்தன என்பதை நாடறியும்.

அப்போது தயாரிக்கப்பட்ட தேசியச் செயல் திட்டம் சந்திரபாபு நாயுடு அவர்களாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டதாக அறிவிக்கப்பட்ட ஒன்றாகும்.

அப்போதுதான் சென்னையில் ஒரு விழாவில் "கருணாநிதி மதவாதத்துக்கு இடமளிக்கும் அணியில் இடம் பெறலாமா?" என்று பேராயர் எஸ்றா சற்குணம் பேசப் போக, அதை மறுத்து அப்போது மேடையிலிருந்த "பாரத ரத்னா" சி. சுப்ரமணியம் அவர்கள், "கலைஞர் இருக்குமிடத்துக்கு மதவாதம் வராது" என்று உரை நிகழ்த்தினார். இறுதியாகப் பேசிய நான், "நானிருக்குமிடத்துக்கு மதவாதம் வந்தால், அதைத் தடுக்க முடியாத நிலையில் நான் அங்கிருக்க மாட்டேன்" என்று உறுதியளித்தேன்.

அப்படியேதான் இப்போது ஆகிவிட்டது. ஆனால் ஒன்று நான் நினைவுபடுத்தியாகவேண்டும் - நாங்கள் எல்லாம் கூடி தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் தேசியச் செயல் திட்டம் தயாரித்து வெளியிட்டபோது, "அரசியல் சட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிப்பது எங்கள் கடமையாகும். தேசிய ஜனநாயகக் கூட்டணி இந்திய மக்களின் வலுவானதொரு அரசியல் கரமாகச் செயல்படும். சாதி, மத அடிப்படையில் யாரும் நடத்தப்பட மாட்டார்கள். நீதியும், நியாயமும் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் வழங்கப்படும். யாருக்கும் சாதகமாகவோ, பாதகமாகவோ நாங்கள் செயல்பட மாட்டோம் என்ற உறுதியினை அளிக்கிறோம். சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகளே, திறந்த மனதுடன் இதயபூர்வமாக உங்களுடன் நட்பார்ந்த முறையில் நடந்துகொள்ள வாய்ப்பளியுங்கள். நவீன இந்தியாவை, சீரமைக்கப்பட்ட நல் இந்தியாவை உருவாக்கிட நாம் கரம் கோத்து இணைந்து நடைபோடுவோம். பழைய தப்பபிப்பிராயங்களைத் தூக்கி எறிவோம். மனவேற்றுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்போம். தகராறுகளை உருவாக்கும் பிரச்சினைக்குரிய விஷயங்களை அப்பால் தள்ளி வைப்போம்" என்று குறிப்பிட்டுச் சொன்னதோடு மாத்திரமல்லாமல், அந்தச் செயல்திட்ட அறிக்கையில் சிறுபான்மை யோர் பாதுகாப்புக்கும், உரிமைக்கும் உத்திரவாத உறுதிமொழியை இடம்பெறச் செய்ததுடன், அயோத்தியில் சர்ச்சைக்குரிய பகுதியில் இராமர் கோவில் கட்டுகிற விவகாரத்தைப் பற்றிய எந்தவொரு வாசகமும் இடம் பெறாமல் எச்சரிக்கையுடன் இருந்தோம்.

ஆனால், நாங்கள் இல்லாத தேசிய ஜனநாயகக் கூட்டணியின் இன்றைய தேசியச் செயல் திட்டம் "அயோத்தி கோவிலை"

பிரதானப்படுத்தி பிரச்சினைக்குத் தூபம்போடத் தோள் தட்டிக் காட்டுகிறது.

தென் மாநிலங்களில், குறிப்பாக பெரியார், அண்ணா, காமராஜர் பிறந்த தமிழ் மண்ணில் அத்வானி அவர்களின் ரத யாத்திரையில் தலை காட்டாத அயோத்திப் பிரச்சினை, வட புலத்தில் அத்வானி அவர்களின் வாய்மொழியிலேயே வாரிக் கட்டிக் கொண்டு, வன்முறை வாள் தூக்கும் அளவுக்கு முழங்கிடத் தொடங்கியிருக்கிறது.

போதாக்குறைக்கு, 1999 தேசிய செயல் திட்டம் போல அல்லாது, இந்தச் செயல் திட்டத்தை சங் பரிவார் போன்ற இயக்கங்கள் ஆதரிக்கின்றன. விசுவ இந்து பரிட்சத் தனது விருப்பம் நிறைவேறுவதாக மகிழ்கிறது.

இங்குள்ள ஜெயலலிதாவும், அய்யாவையும், அண்ணாவையும் தேவைக்கு மட்டுமே கருவேப்பிலையாகப் பயன்படுத்திக் கொண்டு, அசோக் சிங்காலின் நற்சான்று பத்திரத்தைப் பெற்று அவரது வாழ்த்துடன் - தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேசியச் செயல் திட்டத்துக்குப் புகழ்பாடிக் களிக்கிறார்.

சந்திரபாபு நாயுடு அவர்களின் எதிர்ப்பு, வெறும் கண்துடைப்பாக ஆகிவிடாது என்ற நம்பிக்கையுடன் -

நாம் நம்மை உறுதியாகவும்
வலிமையாகவும்
தயார்படுத்திக் கொண்டு
தடந்தோள் உயர்த்தி
மத நல்லிணக்கத்திற்கெதிரான
முயற்சிகளைத்
தகர்த்திடுவோம்.

அன்புள்ள,
மு. க.
10-4-2004

3051. இதயத்தைத் துளைக்கிறதே!

உடன்பிறப்பே,

இலங்கையில் ஈழத் தமிழர் பிரச்சினை, எரியும் நெருப்பின் ஜுவாலையாகக் கொழுந்துவிட்டுப் பரவிய காலத்திலிருந்து அந்த ஜுவாலை இந்திய பூபாகத்திலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் பரவிய நேரத்திலும், இந்திய மக்களும் குறிப்பாகத் தமிழ் மக்களும் ஆழ்ந்த அனுதாப உணர்வுடன் அந்தப் பிரச்சினையை அணுகினர் என்பது வரலாறு!

ஒட்டு மொத்த தமிழர்கள், அவர்கள் உலகில் எங்கே வாழ்ந்திருந்தபோதிலும், இலங்கையில் தமிழர் படும் அவதி அகன்றிட வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டனர். ஆர்வம் காட்டினர்.

பாதிக்கப்பட்ட தமிழர்கள் படை வீரர்களாக மாறினர் - அப்படி மாறியவர்களுக்குள்ளேயே தமிழ் இனத்திற்கே சிறப்பான 'உட்பகை' தோன்றிடத் தவறவில்லை. அதன் காரணமாகப் போராளிக் குழுக்கள் பல அமைந்தன. அந்தக் குழுக்கள் ஈழத் தமிழர் வாழ்வுக்கான ஒற்றுமையான உணர்வுடன் இணைந்து ஒரு முனையில் நிற்பதற்குப் பதிலாக, தனித்தனியே ஆயுதப் போர் நடத்தின. அந்த ஆயுதங்கள் அண்ணன் தம்பிகளையே கொன்று குவித்திட ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு அந்தப் போட்டியில் பெருந்தலைகளே பல உருண்டபோது, "சகோதர யுத்தத்தை நிறுத்துங்கள்" என்று தி.மு.க. சார்பில் வேண்டுகோள் விடுத்தேன்.

இன்றைய இந்தியப் பிரதமர் வாஜ்பய் அவர்களையும், என்.டி.ராமராவ் அவர்களையும் மற்றும் பல அனைத்திந்தியத் தலைவர்களையும் அழைத்து, மதுரையில் நானும், நமது பேராசிரியரும், தம்பி வைகோவும், இனமான இளவல்

வீரமணியும், தமிழின ஆர்வலர் பழ.நெடுமாறனும், முன்னின்று நடத்திய "டெசோ" எனப்படும் தமிழ் ஈழப் போராளிகளை ஒற்றுமைப்படுத்த முனைந்த மாநாட்டில், அந்தப் போராளிக் குழுக்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களுக்குள்ளே எழுந்த பிரச்சினைகள் பற்றி விரிவாக விவாதித்தோம்.

அதற்குப் பிறகும் அவர்களுக்குள்ளே சகோதர யுத்தம் நின்றபாடில்லை. போராளிக் குழுக்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு ரத்தம் சிந்திய நிகழ்ச்சிகள்தான் நடைபெற்றன.

தமிழ் நாட்டு மக்கள், கட்சிகளுக்கும் அப்பாற்பட்டு ஈழத் தமிழர் உரிமைபெற வேண்டுமென்பதில் காட்டிய ஆர்வத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமைந்தது இளந்தலைவர் ராஜீவ் காந்தி அவர்களின் கொடுமையான படுகொலை.

அதற்குப்பிறகும் ஏற்பட்டுள்ள நீண்ட இடைவெளியில், ஈழத் தமிழர்களின் வாழ்வு, போர் முனையில் முடிந்துபோய் விடாமல், அவர்களுக்கு நிலையான அமைதி கிடைத்திட வழி ஏற்படாதா என்பதில்தான் நமது அக்கறை மையம் கொண்டது.

ஏற்பட்ட எத்தனையோவித அரசியல் மாற்றங்களுக்கிடையே; "நார்வே" நடுவில் நுழைந்து சிங்கள அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மிடையே அமைதிக்கான பேச்சுவார்த்தை நடத்த முனைந்து, அதிலே படிப்படியாக முன்னேற்றமும் முகிழ்த்தது என்றே கூறமுடியும்.

அந்த நிலையும் நிலையற்றதாகிவிடுமோ என்று சந்தேகப்படும் அளவுக்கு இலங்கையிலே அதிபருக்கும் பிரதமருக்குமிடையே அபிப்பிராய பேதம் உருவாகி, அது அந்த நாட்டுத் தேர்தலிலே வந்து முடிந்துள்ளது.

இருள் விலகாதா என எதிர்பார்த்திருக்கும்போது, திடுமென ஒரு மின்னல் கீற்று கண்ணைப் பறித்தது போல, புலிப் போராளிகளுக்கிடையே 'கருணா விவகாரம்' வெடித்து விட்டதை பாரதி பாடியது போல "தமிழ்ச்சாதியின் விதி" என்றுதானே வேதனையுடன் நோக்க வேண்டியுள்ளது.

போராளிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே யுத்தம் நிறுத்துவதற்கு நார்வே முயற்சி மேற்கொண்டது.

அது நடுவே பிரச்சினையாகி விட்டது. இப்போது போராளிகளுக்குள்ளேயே போர் மூண்டுள்ளது.

"இந்த வகையான சகோதர யுத்தம் முடிவடையும் வரையில், சமாதானமாகவும், சந்தோஷமாகவும், சஞ்சலம் துளியுமில்லாமலும் இலங்கையில் தமிழ் இனத்தார் வாழ்வதற்கு வழிவகை ஏது?" என்ற ஏக்கம் நம் இதயத்தை அல்லவா துளைக்கிறது!

அன்புள்ள,

மு. க.

11-4-2004

3052. பெர்னாண்டஸ் தடுமாற்றம்!

உடன்பிறப்பே,

வட இந்தியத் தலைவர்கள் வரிசையில், தனக்கென ஓர் இடம் பிடித்துக் கொண்டவர் தென்னிந்தியப் பகுதியைச் சேர்ந்த ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள்.

1975-76ஆம் ஆண்டுகளில் நெருக்கடி நெருப்பு கொழுந்து விட்டெரிந்த காலகட்டங்களில், பரோடா வழக்கு போன்ற சதி வழக்குகளில் அவர் சேர்க்கப்பட்டு, அவர் தலைமறைவாகித் தமிழ்நாட்டில் ஒளிந்து திரிந்தபோது, ஒவ்வொரு நிமிடமும் அவரைத் துரத்திக் கொண்டிருந்த காவல் துறை அதிகாரிகளின் துப்பாக்கி முனையிலேயிருந்து தப்புவது என்பது அவரைப் பொறுத்தவரையில் மறுபிறவி எடுப்பதாகவே இருந்தது.

இப்படி எத்தனை முறை அவர் உயிர் காப்பாற்றப்பட்டது என்பதை, அவரே "எமர்ஜன்சி"க்குப் பிறகு தமிழ்நாட்டு மேடைகளில் நன்றிப் பெருக்குடனும், உருக்கமுடனும் பலமுறை வெளியிட்டிருக்கிறார்.

என்னைக் காட்டிலும் பெர்னாண்டசுக்குத் தம்பி மாறனிடமும், தம்பி வைகோவிடமும் அதிகமானதும், நெருக்கமானதுமான நட்பு உண்டு. அதனால்தான் மாறனை மருத்துவமனையில் இரண்டொருமுறை வந்து பார்த்து விட்டுக் கண் கலங்கினார்.

இந்தியாவின் பாதுகாப்புக்கே அமைச்சரான அவர், "பாதுகாப்பு கருதி" எனப் பசப்பி, வேலூர் சிறையில் பொடாவில் அடைக்கப்பட்ட தம்பி வைகோவை ஓரிரு முறை வந்து சிறையிலேயே சந்தித்தார் என்றால், அவர் நட்புக்குத் தரும் மதிப்பை எளிதாக உணர முடியும்.

ஒரு காலத்தில் மும்பையானாலும், வேறு எந்த வடபுலத்துப் பகுதியானாலும் அங்கெல்லாம் தொழிலாளர் சமுதாயத்தின் காவலன் என்றே போற்றப்பட்டவர் –

ஆனால் கால மாறுதல் எனும் காற்றின் வேகத்தில், பாட்டாளி மக்களிடம் மட்டுமே கொண்டிருந்த அவரது நிலைகுலையாப் பற்றும், பாசமும், எப்படியோ உப்பு நீரில் ஊறிய செங்கல் சுவர் போலவே உதிர்ந்திடத் தொடங்கிவிட்டது. எனவே இப்போது "பழைய நட்பு" எனும் "பெருங்காயமிருந்த பாண்டமே" மிச்சம்!

காரணம்? இந்தப் பாழாய்ப் போன பதவி மற்றும் அதிகாரம் என ஒன்று, எஃகு உள்ளம் படைத்தவராயினும், அவரை எப்படியெல்லாம் மிதவாதக் குட்டையில் மிதக்க விட்டு விடுகிறது!

சரண்சிங் அமைச்சரவை மீது பாராளுமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வர ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோது, இதே ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள், முதல் நாள் ஒரு முழக்கமும், மறுநாள் அதற்கெதிரான முழக்கமும் செய்ததை இந்திய நாடே அதிசயமாகப் பார்த்ததை மறந்துவிட முடிகிறதா!

இப்போது இந்த "பிளாஷ் பேக்" காட்சிகள் எதற்காக? எனக் கேட்கத் தோன்றும்.

இன்றைய நிலையில், அவர் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அமைப்பாளராக இருக்கிறார்.

ஆனால் தமிழ்நாட்டுப் பா.ஜ.க. தலைவர்களே ஆச்சரியப்படும்படியாக, பா.ஜ.க. வை தேர்தலில் எதிர்த்துப் போட்டியிடும் அணியினருக்குப் பிரச்சாரம் செய்ய, ஒரு மாநாட்டில் கலந்து கொண்டு கர்ச்சனை புரிகிறார். அத்துடன் நில்லாமல், பா.ஜ.க. கூட்டணியில் இருப்பதால் தனது சமதர்மக் கொள்கையில் சமரசம் செய்து கொண்டுவிட்டதாகத் தன் மீது கூறப்படும் புகாரை ஏற்க இயலாது என்றும் நேற்று அறிவித்து விட்டு, அயோத்திப் பிரச்சினையில் அதே சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோவிலைக் கட்டுவதற்கு சுறுசுறுப்புடன் இயங்குகிறார்.

எப்படியோ போகட்டும்! ஆனால் தேர்தல் ஜன்னி கண்டுவிட்டால், எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும் - பெரிய பதவிகளில் இருந்தாலும் - எவ்வளவு தரக்குறைவாக வேண்டுமானாலும் பேசலாம் என்று விதிவிலக்குகள் ஏதாவது இருக்கிறதோ என்னவோ?

அண்மையில்தான் போபர்ஸ் பிரச்சினையில், ராஜீவ் காந்திக்கு தொடர்பில்லை என்று நீதிமன்றம் தெளிவுபடக் கூறியிருக்கிறது. அந்தப் பிரச்சினையைப் போர்க் கருவியாகக் கையில் ஏந்தியிருந்த திரு. வி.பி.சிங் அவர்கள்கூட, நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு கருத்து அறிவித்திருக்கிறார்.

சற்றும் என்னைப் போன்றோர் எதிர்பாராதவிதமாக பிரதமர் வாஜ்பய் அவர்கள்கூட, போபர்ஸ் விவகாரத்தைப் பூதாகாரமாக்கி தேர்தல் ஆதாயம் தேடிட முனைந்துள்ளார். அத்வானி அவர்களும் இதைக் கொண்டே தேர்தல் ரதத்தை ஓட்டிவிடலாம் எனத் திட்டமிடுகிறார்.

பெர்னாண்டசுக்கு என்ன வந்தது? அவரும் இந்த விவகாரத்தில் குதித்து பேட்டியளித்துள்ளார்;

> "போபர்ஸ் பீரங்கி விவகாரத்தை, தேர்தல் நேரத்தில் பா.ஜ.க. கிளப்புவதாகக் கூறுவது சரியல்ல. அந்த ஊழலில் குவாத் ரோச்சிக்கும், சோனியா காந்திக்கும் உள்ள நெருக்கத்தை வெளிக்கொணர்ந்தால்தான் போபர்ஸ் விவகாரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க இயலும்"

நண்பர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அத்துடன் பேட்டியை முடிக்கவில்லை.

> "பா.ஜ.க. அரசு வெளியிட்டு வந்த 'இந்தியா ஒளிர்கிறது' என்ற விளம்பரம், நாட்டை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத் தில் மேற்கொள்ளப் பட்டது"

என்றும் கூறியுள்ளார்!

அய்யோ பாவம் ஜார்ஜ்! நாட்டை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்லும் இந்த உயர்ந்த நோக்கம் 1999 அல்லது 2000 ஆம் ஆண்டிலேயே ஏற்பட்டிருந்தால் பாராட்டி வரவேற்றிருக்கலாம். இது தேர்தல் நோக்கம் மட்டுமே என்கிறபோது எப்படி வரவேற்க முடியும்?

ஜார்ஜ் அவர்கள் அத்துடன் விடவில்லை.

> "தேசிய ஜனநாயகக் கூட்டணி அறிக்கையில், அயோத்தி விவகாரம் இடம் பெற்றிருப்பது தனக்குத்

தெரியாது என்று ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறியிருப்பதைக் கருத்தில்கொள்ளத் தேவையில்லை”

என்றும் நாயுடு அவர்களின் மறுப்புக் கருத்தை நாகரிகமாக அலட்சியப்படுத்தியுள்ளார்.

பொதுவாக ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், தன் முதுகில் படிந்துள்ள அழுக்கைப் போக்கிக் கொள்ள முயற்சி செய்யாமல் எதிரே இருப்பவர் முகத்தைப் பழிப்பது அறிவுடையோர் செயல் ஆகாது. ஆத்திரக்காரர், அவசரக்காரர்களின் அசட்டுச் செயலே ஆகும்! அவற்றில் ஒன்றுதான் பீகாரில் ஜனாதிபதி ஆட்சி வரும் என்ற பிதற்றலும் ஆகும்!

பெர்னாண்டஸ் மேலும் கூறும்போது, “அயோத்திப் பிரச்சினைக்கு நீதிமன்றத் தீர்வு சிறந்த வழிதான்” என்றும் குறிப்பிட்டுள்ளார். நீதி மன்றத் தீர்வு சிறந்த வழி என்றால், போபர்ஸ் வழக்கில் ராஜீவ் காந்தி மீது எவ்வித தவறும் இல்லை என்று நீதிமன்றம் தெரிவித்த பிறகும், மீண்டும் இப்போது சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று பெர்னாண்டஸ் கோருவது என்ன நியாயம்? ஓ! இதற்குப் பெயர்தான் தடம் மாற்றம் காரணமாக ஏற்படும் தடுமாற்றம் என்பதோ?

அன்புள்ள,

மு.க.

13-4-2004

3053. இந்நிலை கண்டு நானும் நாணமுறுகிறேன்!

உடன்பிறப்பே,

"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி" என்றும், "பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்" என்றும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் போற்றிப் புகழ்ந்த செய்தித்தாள்கள் பல, இன்றைக்கு அந்த சிறப்புக்குரியவைகளாக இருந்தாலும் - இன்னமும் ஒரு சில ஏடுகள் பரபரப்பு செய்திகள் வெளியிட்டாலும் கூடப் பரவாயில்லை; பச்சைப் பொய்களை இட்டுக்கட்டி உரித்தெடுத்த உண்மைகளைப் போல உலவ விடுவதையும் - அதனால் ஏற்படும் மனக்கசப்புகளையும் - விரும்பத்தகாத நிகழ்ச்சிகளையும் காணும்போது, அத்தகைய பத்திரிகைகளின் போக்கை "கூனிக்குணம்" என்பதா? "சகுனித் தனம்" என்பதா? என்றே எனக்குப் புரியவில்லை.

தமிழ்நாட்டில் அதிக விற்பனையுள்ள தமிழ் நாளேடு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏதோ காரணமாக அந்த ஏடு பல்வேறு தலைப்புப் பெயர்களில் வெளியிடப்படுகிறது. எப்படியோ ஒரு வகையில் தி.மு.க. செய்திகளையும் இருட்டடிப்பு செய்யாமல் வெளியிடுகிறது. ஆனால் சில நேரங்களில் பல பெயர்களில் வெளிவரும் அந்தப் பத்திரிகை இட்டுக் கட்டிய பொய்களால் இரத்தம் சிந்தும் வன்முறைகளுக்கும் வழிவகுத்து விடுகிறது.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவரான டாக்டர் திரு. ராமதாஸ் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களான வன்னியப் பெருமக்களை தனித் தொகுப்பாக அமைத்து அவர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் தனியாக 20 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனப் போராடி - அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்தப் போராட்டத்தில் 25 பா.ம.க.வினரைப் பலி கொடுத்தும்கூட, அந்தக் கோரிக்கை நிறைவேற்றப் படாமல் போய்; அதன்பிறகு 1989ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப்

பொறுப் பேற்ற பிறகு; பா.ம.க. போராட்டம் எதுவும் நடத்து வதற்கு அவசியமின்றி நானே டாக்டர் ராமதாஸ் அவர்களை வேளாண்துறை அமைச்சராக இருந்த தம்பி வீரபாண்டி ஆறுமுகம் மூலம் நேரில் அழைத்துப் பேசி; மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்ற புதிய தொகுப்பை அறிவித்து அவர்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்பில் 20 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கினேன் என்பது வரலாற்றுப் பேருண்மையாகும்.

அப்போதுதான் அந்த 20 சதவிகிதத்திற்கான தொகுப்பில் வன்னியர் மட்டுமல்லாமல், பிரமலைக் கள்ளர் உள்ளிட்ட சீர்மரபினரும், வேறு சில சமூகத்தினரும் சேர்க்கப்பட்டார்கள்.

அதுவரையில் டாக்டர்களாக, பொறியாளர்களாக அந்தச் சமூ கங்களில் வாய்ப்பு பெற்றவர்களை விரல் விட்டு எண்ணத்தக்க வகையில்தான் இருந்தது. அல்லது இரண்டு இலக்க எண்ணிக்கை அளவிலேதான் இருந்தது.

எனது ஆட்சியின் சார்பாக வெளியிட்ட இந்த அதிகாரபூர்வமான அறிவிப்பையொட்டிய ஆணை நிறைவேற்றப்பட்ட நிலையில் - இந்த மிகவும் பின்தங்கியோர் தொகுப்பில் 20 சதவீதம் என்ற ஒதுக்கீடு அமலான பிறகு அந்தச் சமூகங்களில் ஏராளமான டாக்டர்கள், பொறியாளர்கள் வெளி வந்திருக்கிறார்கள், ஒளி பொருந்திய வாழ்வுக்கு உரியவர்களாக!

அந்த சமூகங்களில் ஏற்பட்டுள்ள இந்த முன்னேற்றம் கண்டு - எரிச்சல் கொள்ளும் வர்க்கத்தினர் இல்லாமல் இல்லை. தி.மு.கழக அரசின் ஆணையால் ஏற்பட்ட வளர்ச்சியை அதனை அனுபவித்த மக்களை விட அதிகமாக உணர்ந்து அதற்கு எதிர்ப்பு காட்டி அதனை செயல் மூலம் நடைமுறைப்படுத்துபவர்கள்; நான் குறிப்பிடும் அந்த எரிச்சல் வர்க்கத்தினர்தான்!

அவர்களில் ஒருசிலர் தங்கள் கையில் உள்ள பத்திரிகை ஆயுதத்தைச் சூழ்ச்சியாகப் பயன்படுத்தி நம்மை பிரிக்கவும் - பிளவுபடுத்தவும் - எந்தச் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்வார்கள்.

நாம்தான் அத்தகைய சந்தர்ப்பங்களே உருவாகாமல் ஜாக்கிரதையாக இருந்திடல் வேண்டும். அப்போது அவர்களுக்கு வால் நீட்டவும் வஞ்சக வலை விரிக்கவும் வழி இல்லாமற் போய்விடும்.

எதற்கு இதைக் குறிப்பிடுகிறேன் என்றால்; சொல்லாத ஒன்றை சொன்னதாகப் பிரசுரித்து - அப்படிச் சொல்லவில்லையென்று மறுத்த பிறகும் - மீண்டும் அதையே பிரகரித்து வீணான வம்புகளை உருவாக்குவதில் - அவர்களுக்கு ஏதோ ஒரு அற்ப திருப்தி! வெறித்தனமான ஆசை! டாக்டர் ராமதாஸ் அவர்களைப் பற்றி இப்படித்தான் ஒரு பொய்ச் செய்தி - அதை அவர் மறுத்த பிறகும் தேவையற்ற விவகாரங்கள் -

சிலர்கூட நினைத்திடக் கூடும்; டாக்டர் ராமதாஸ் அவர்கள் ஒருவேளை அப்படிக் கூறியிருப்பாரோ என்று! ஆனால் 10ந்தேதியன்று சேலத்தில் ஒரு பிரமாண்டமான தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசினேன். மறுநாள் காலையில் சேலம் நாளேடுகளைப் பார்த்தால் அதிலே ஒரு செய்தி! ஆம்;

பெட்டிச் செய்தி! அதை அப்படியே இணைத்துள்ளேன் - படித்துப் பார்க்கவும்.

'சிடுசிடு' ராணி

தர்மபுரி, சேலம் வேட்பாளர்கள் பேசுவதற்கு முன்பாக கருணாநிதிக்கு சால்வை அணிவித்தனர். ஆனால், ராசிபுரம் காங்கிரஸ் வேட்பாளர் ராணி கருணாநிதிக்கு சால்வை அணிவிக்கவில்லை. காரணம், அவருடன் சால்வை கொண்டு வந்த நபரை கீழே அமர சொன்னதுதான். இதையறிந்த பா.ம.க. மாநில துணைத் தலைவர் தமிழரசு, ஒரு சால்வையை ராணியிடம் கொடுத்து கருணாநிதிக்கு அணிவிக்கச் சொன்னார். ஆனால், அவரை கோபமாக பார்த்து ராணி ஏதோ பேசினார். பின், கருணாநிதியின் பாதுகாப்பு அதிகாரி, ஒரு சால்வையை கொடுத்து அணிவிக்க சொன்னார். சால்வையை வாங்கிய ராணி அதை கருணாநிதிக்கு அணிவிக்கவில்லை, என்ன கோபமோ?

★

உடன்பிறப்பே, பெட்டிச் செய்தியில் உள்ளது போல சேலம் தேர்தல் பிரச்சார மேடையில் எதுவுமே நடக்கவில்லை. ராசிபுரம் காங்கிரஸ் வேட்பாளர் ராணி அவர்கள் மற்ற வேட்பாளர்களைப்

போலவே எனக்கு சால்வை அணிவித்து வணக்கம் தெரிவித்து விட்டுத்தான் வரிசையில் அமர்ந்தார். ஒலிபெருக்கியின் முன்னால் சென்று வாக்காளர்களிடம் ராசிபுரம் தொகுதியில் தனக்கு வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். இத்தனையையும் மறைத்துவிட்டு; அந்தப் பத்திரிகை பெட்டிச் செய்தி வெளியிடுகிறது பெரும் புளுகைப் புளுகி - நான் இந்த உண்மையைத் தெரிவிக்க விளக்கமான கடிதமல்லவா எழுதவேண்டியிருக்கிறது.

என் செய்வது? பவ்யமாகப் போற்றப்பட்ட பத்திரிகைப் பண்பாடு; சில பத்திரிகைகளின் இத்தகைய இட்டுக்கட்டும் இழிவான போக்கினால் - மிக மிகத் தரம் தாழ்ந்துவிட்டது என்பதற்கு இதுபோன்ற செய்திகளே சான்றுகளாகும். நானும் ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் இந்நிலை கண்டு நாணமுறுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

14-04-2004

3054. கோவை செய்தியாளர் சந்திப்பு - நடந்ததென்ன?

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதத்தில்தான் பத்திரிகைகளும் பண்பாடும் என்பது பற்றி விரிவாக எழுதியிருந்தேன். அதை மெய்ப்பிப்பது போல, அதே நாளில் கோவையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு பற்றிய ஒரு செய்தியை உயர்தரப் பத்திரிகைகளின் வரிசையில் உள்ள ஒருசில பத்திரிகைகள் கூட ஓரளவு இருட்டடிப்பு செய்து வெளியிட்டிருப்பதுதான் வேதனை தரக் கூடியதாகும்.

★ கருணாநிதியின் பேட்டி

★ பாதியில் திடீர் ரத்து

★ "கோவையில் இனிமேல் பேட்டி அளிக்கமாட்டேன்" என்று அறிவிப்பு.

எனத் தலைப்பிட்டுப் பெட்டிச் செய்தி வெளியிட்டு அதில் பின்வருமாறு பிரசுரித்திருக்கிறார்கள்.

"கோவையில் நேற்று தி.மு.க. தலைவர் கருணாநிதி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது ஒரு நிருபர் குறுக்கிட்டு, "ரஜினிகாந்த் பற்றிய கேள்விகளுக்கு 'நோ கமெண்ட்ஸ்' என்று கூறி பதில் அளிக்க மறுக்கிறீர்கள். அரசியலில் நடிகர் எம்.ஜி.ஆரிடம் கிடைத்த அரசியல் அடியால் தான் நடிகர் ரஜினிகாந்த் பற்றி பதில் அளிக்க மறுக்கிறீர்களா?" என்று கேட்டார். இந்தக் கேள்விக்கு கருணாநிதி மிகவும் ஆவேசப்பட்டார். "என்னை எவரும் அடிக்க முடியாது. நான் அடித்தால் தாங்க முடியாது" என்று கூறினார். அப்போது மற்றொரு நிருபர் குறுக்கிட்டு, ரஜினியை குறிப்பிடுகிறீர்களா? என்று கேட்டார். உடனே கருணாநிதி "இதற்கு மேல் பதில் அளிக்க விரும்பவில்லை" என்று கூறிவிட்டு எழுந்து

சென்றார். அப்போது கருணாநிதி, "கோவை பத்திரிகை நிருபர்கள் நாகரிகத்துடன் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்த்தேன். நாகரிகமற்ற கேள்விகளை கேட்கிறார்கள். கோவை பத்திரிகையாளர்களுடன் சந்திப்பது இதுவே கடைசி" என்று கூறிவிட்டு சென்றார்."

இவ்வாறு செய்தி வெளியிட்டவர்கள், அதனையொட்டி நடந்த நிகழ்ச்சியை என்ன காரணத்தினாலோ இருட்டடிப்பு செய்து விட்டார்கள்.

கோவை சூர்யா ஓட்டலில் நான் தங்கியிருந்த அறைக்கு சற்று தொலைவில் உள்ள ஒரு கூடத்தில் தான் 13-4-2004 அன்று கோவைப் பகுதி செய்தியாளர்களைச் சந்திக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பத்திரிகைகள் சிலவற்றில் வந்துள்ளது போல அந்தச் சந்திப்பு நிகழ்ச்சி பாதியில் ஒன்றும் ரத்தாகி விடவில்லை. பத்திரிகையாளர் சந்திப்புகளில் என்று மில்லாத அளவுக்கு இருபது அல்லது இருபத்தி ஐந்து கேள்விகளுக்குப் பதில் சொல்லி, அந்தக் கேள்வி பதில்கள் எல்லாம் பல பத்திரிகைகளில் வந்துள்ளன. பெட்டிச் செய்தி வெளியிட்ட பத்திரிகையிலும் அந்தக் கேள்வி பதில்கள் இடம் பெற்றுள்ளன. இத்தனை கேள்விகளுக்கும் பதில்களை அளித்து முடித்து விட்டு, நான் விடைபெற்று எழுந்த போதுதான் குறும்புத்தனமான கேள்வியொன்றை ஒருவர் கேட்டார். அந்தக் கேள்வியும் அதற்கு என் பதிலும் ஏடுகளில் சரியாகவே வெளியிடப்பட்டிருக்கிறது என்றாலும், "1980 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் 40 இடங்களில் 38 இடங்களில் தோல்வியுற்று, சிவகாசி, கோபி ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றார் என்பதை மறந்து விடக் கூடாது" என்று நான் அந்தப் பதிலோடு இணைத்துச் சொன்னதை ஏனோ தெரியவில்லை, இந்தச் செய்தியை வெளியிட்ட ஏடுகள் வெளியிடாமல் விட்டு விட்டார்கள்.

"நாகரிகமில்லாமல் கேள்விகள் கேட்பது கோவையில் நிருபர்களிடம் புதிதாக ஆரம்பமாகி யிருக்கிறது" என்று நான் சலிப்புடன் கூறியதும் உண்மை.

"இதை நீங்கள் சரியென்று நினைத்தால், நாம் சந்திப்பது இதுவே கடைசியாக இருக்கட்டும்" என்று நான் சொன்னதும் உண்மைதான்.

ஆனால் அப்படி நான் சொல்லிவிட்டுப் போன பிறகு - நிருபர் கூட்டத்தின் போது குறும்புத்தனமாகவும், நாகரிகமற்ற முறையிலும் வார்த்தைகளைப் பயன்படுத்திக் கேள்வி கேட்ட இரு செய்தியாளர் நண்பர்களைத் தவிர, மற்ற நிருபர்கள் அனைவரும் நான் தங்கியிருந்த அறைக்கு வந்து என்னைச் சந்தித்து; நடந்து போன நிகழ்ச்சிக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார்கள்.

இப்படி ஒரு கேள்வி கேட்டு, அதனால் உங்கள் மனம் புண்பட்டு, அதற்காக எங்களை இனிமேல் சந்திப்பதில்லை என்று முடிவெடுத்ததை மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும் - தலைவர், செய்தியாளர்கள் என்ற முறையிலே அல்லாமல்; தாங்களும், கோவை நிருபர்களும் நண்பர்களாகப் பழகியிருக் கிறோம். எனவே நடந்ததை மனத்திற்கொள்ளாமல் "இனி எங்களைச் சந்திப்பதில்லை" என்று கூறிய முடிவை மாற்றிக் கொள்ளுங்கள் என்று மிகுந்த உரிமையுடனும், அளவற்ற அன்புடனும், பண்புடனும் கேட்டார்கள். நானும் அவர்களுடைய அன்புக்குக் கட்டுப்பட்டு, "சரி! சரி! இதை நான் பெரிதுபடுத்த வில்லை. எப்போதும் போல் நமது நட்பும், உறவும் மகிழ்ச்சிகரமாகத் தொடரும்" என்று சொன்ன பிறகே அவர்கள் என் அறையை விட்டு அகன்றார்கள்.

இந்த விபரம் முழுவதையும் வெளியிட பத்திரிகையில் இடமில்லாவிட்டாலும், அந்தப் பத்திரிகைகள் அரைக் கிணறு தாண்டுகிற மாதிரி அந்தச் செய்தியை வெளியிட்டிருக்க வேண்டாம்.

ஒரு பிரச்சினையை வளர்த்துக் கொண்டே போய், மேலும் மேலும் சிக்கலை ஏற்படுத்தக் கூடாது என்ற நல்ல எண்ணத்துடன் கருதுகிற எந்தத் தலைவரும், நிருபர்கள் கேள்விக்கு சில சமயங்களில் சொல்கிற பதில்தான் "நோ கமெண்ட்ஸ்" என்பதாகும். அதாவது "இதற்குப் பதில் சொல்ல விரும்பவில்லை" அல்லது "பதில் எதுவுமில்லை" என்பது தான் அதற்கான விளக்கம்.

அந்தப் பதிலையே விமர்சிப்பதும் - நோக்கம் கற்பிப்பதும் - அடி விழுந்தது - என்று கேலி செய்வதும் - திட்டமிட்டே அது போன்ற கேள்விகளைக் கேட்க முனைந்த ஓரிரு நிருபர்களின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள, என்னைப் போன்றவர்கள் எப்படி ஒத்துழைக்க முடியும்!

எம்.ஜி.ஆரிடம் பட்ட அடியால்தானே? என்று கேட்டுவிட்டு; பிறகு 'அடி' என்பதை 'அரசியல் அடி' என்று திருத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி கேட்கும்போதே, நாகாக்க எனும் குறள் வழியைப் பின்பற்றியிருந்தால் - இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது அல்லவா? அதை விட்டு விட்டு, சில பத்திரிகைகள், கருணாநிதி கோபித்துக் கொண்டார் என்பதையல்லவா பெரிதுபடுத்தியிருக்கின்றன.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

எனக் கூறும் குறளில்தான் - "குணமுள்ளோர் கொள்ளும் கோபம் கண நேரம் கூட நிலைக்காது" என்றும் கூறப்பட்டிருக்கிறது.

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது" (திருக்குறள்)

இக்குறள் வழியைப் பின்பற்றித்தான் கோவை நிருபர்களிடம் கை குலுக்கி, பல காலமாக நீடித்து வரும் பத்திரிகையாளர் நட்புக்கு பாதிப்பு வராமல் பார்த்துக் கொண்டேன். பத்திரிகையாளர் என்று நான் குறிப்பிடுவது, செய்தி சேகரிக்கும் தும்பிகளாம், அந்தத் துறையின் தம்பிகளைத்தான்!

அன்புள்ள,

மு.க.

15-4-2004

3055. வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்!

உடன்பிறப்பே,

"விழியுங்கள்! எழுங்கள்!! இன்றேல் என்றும் நீவிர் வீழ்ந்துபட்டோராவீர்!!!"

"Awake - Arise or be forever fallen"

1914ஆம் ஆண்டு திருவல்லிக்கேணி உயர்நிலைப் பள்ளி மாடியில் நடைபெற்ற திராவிட சங்கத்தின் முதலாண்டு நிறைவு விழாவில் சிறப்புரையாற்றிய திராவிடத் திலகம் டி.எம். நாயர் அவர்கள், தனது உரையின் இறுதியில் கூறிய மேற்குறிப்பிட்ட வாசகங்களை, மறைந்த மேதை தம்பி முரசொலி மாறன் எழுதியுள்ள "திராவிட இயக்க வரலாறு" புத்தகத்தின் முதல் தொகுதியில் எடுத்துக்காட்டி யிருப்பதை எத்தனையோமுறை படித்து மெய் சிலிர்த்திருக்கிறேன் எனினும், இப்போது அதைப் படிக்கும்போது ஏதோ ஓர் இனம் தெரியாத உணர்வு எனக்கு எழுச்சியூட்டுகிறது.

"இனம் தெரியாத உணர்வு" என்பது பழக்கத்தில் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடர். ஆனால், இது "இனம் தெரிந்து செயல்படும் உணர்வு" - செயல்படத் தூண்டும் உணர்வு - இனத்தைத் தெரிந்து கொண்டு, புரிந்து கொண்டு, அந்த இனம் உறங்குவதையும் கண்டு கொண்டுதான் முதல் அன்பு ஆணையாக டாக்டர் நாயர் அவர்கள்,

"விழியுங்கள்!"

என்று உரக்க ஒலித்திடுகின்றார். விழித்தவர்களைப் பார்த்து, விழித்தால் மட்டும் போதாது! விழித்த பிறகு அயர்வு - அசதி - என்று புரண்டு கொண்டிருந்தால் புல் அளவு கூடப் பயனில்லை.

அதனால் "எழுங்கள்" என்றும் அதட்டுகிறார். எழுந்து நிற்பதற்காகவா எழுங்கள் என்றார்! இல்லை! இல்லவே இல்லை! விழுந்து கிடக்கும் திராவிட இனத்துக்கு உரிய உரிமைகளைக்

கேட்கும் உரிமையைப் பெற்றிடவும் - அந்த இனத்தின் கலாச்சாரப் பெருமையை மீட்டுக் கொள்ளவும் - காப்பரணாக இருந்து அதன் மொழி வளம் காத்திடவும் - நமக்கு உடைமையான அனைத்து வாய்ப்புகளிலும் நியாயமான ஒதுக்கீடு எய்திடவும் - "எழுங்கள்" என்றவர், எச்சரிக்கையாகவும் ஒரு முழக்கத்தை வைக்கிறார்.

"இன்றேல் என்றும் நீவிர் வீழ்ந்துபட்டோராவீர்" -

வீழ்ந்துபடாமல் திராவிட இனத்தைக் காப்பதற்கு "நீதிக் கட்சி" தோன்றியது - பெரியாரின் சுயமரியாதை இயக்கம் பிறந்தது.

ஆட்சிப் பொறுப்பை இழந்த நீதிக் கட்சி, பெரியாரின் தலைமையில், அண்ணாவின் தீர்மானத்தை ஏற்றுத் திராவிடர் கழகமானது. அக்கழகத்தின் அரசியல் அங்கமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா தலைமையில் ஆட்சி அமைத்தது.

பெரியாருக்கும், அண்ணாவுக்குமிடையே தோன்றிய பிளவில் அக்கினிப்பிழம்பு பெருக்கெடுத்தோடும், அதைக் கொண்டே இரு திராவிட இயக்கங்களையும் பொசுக்கிச் சாம்பலாக்கிவிடலாமென வஞ்சகர் வாய்பிளந்து காத்திருந்தனர். ஆனால் அக்கினியாக ஆரம்பமாகி, அருவியாகப் பெருகியது குன்றாத பாசமும், கொள்கை உறுதியும்!

அண்ணா மறைந்த பிறகு, அய்யா முயன்றும் முடியாமல் திராவிட இயக்கத்தில் அரசியல் ரீதியான பிரிவினை ஏற்பட்டது! அப்போதும் இலட்சிய ரீதியாகவே தி.மு.க. இயங்கியது.

திராவிடர் கழகத்தின் கட்டுக்கோப்பிலும் - விரிசல்,

திராவிட முன்னேற்றக் கழகக் கோட்டைச் சுவரிலும் - வெடிப்பு,

திராவிடர் கழகம், பெரியார் திராவிடர் கழகம்,

திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்,

இப்படிப் பிரிந்து நின்றாலும் ஒவ்வொன்றும் பிறந்தபோது கொண்டிருந்த கொள்கையை விடவில்லை,

பிடித்திருந்த கொடியையும் விட வில்லை,

அதே சிவப்பும் கறுப்பும்,

அய்யாவின் அங்கீகாரம் பெற்ற அந்த இரு வண்ணக் கொடி!

நீரிடித்து நீர் விலகாதல்லவா? விலக வில்லை. விநாடி நேரம் விலகினாலும், விலகியது போல் தெரிந்தாலும், விலகிடவில்லை நிரந்தரமாக!

காரணம்,

கட்டிக் காக்கும் கொள்கை வலிமைதான்!

அய்யா அவர்கள் பொழிந்திட்ட குடும்பப் பாச உணர்வுதான்!

அண்ணா அவர்கள் உணர்த்திய அண்ணன் தம்பி உறவுதான்!

தம்பி வைகோவுடன் வேலூர் சிறையில் இருமுறை சந்திப்பா? விழி நீர்ச் சங்கமமா? இதற்கு மேலாக இலட்சிய கீதமாக இன உணர்வும் இருக்கிறதல்லவா?

அதைத் தொடர்ந்து, என்னுயிரனைய மாறனின் உடலுக்கு மரியாதை செலுத்திடவந்த இளவல் வீரமணி அவர்கள், ஆறுதல் வழங்கியதுடன், அள்ளிப் பொழிந்த அந்த வார்த்தைகள் - என் சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்த்திடச் செய்தது மட்டுமல்ல! "சேர்ந்து வாழ்ந்தால் என்ன? திராவிடர் நாம்!" என்பதையும் புதிய கோணத்தில் சிந்திக்க வைத்தது!

தனித்தனி கலாச்சாரங்கள் -

தனித்தனி தேசிய மொழிகள் கொண்ட மாநிலங்கள் அமைந்த இந்திய நாட்டில், வேற்றுமையில் ஒற்றுமை காண்போம் என்கிற போது;

ஒரே விதமான கொள்கைக்கு இன உணர்வுக்கு தனித்தனி கட்சிகள், அமைப்புகள், இயக்கங்கள் இருந்திடினும் - அவற்றின் பெயர்கள், கொடிகள், நடைமுறைத் திட்டங்கள் - ஆகியவற்றின் வேற்றுமைக்கிடையே ஒற்றுமை காண முடியாதா என்ன?

அதைத்தான் நான் கம்யூனிஸ்டு கட்சிகளை உதாரணத்துக்கு ஒப்பிட்டுக் காட்டி - சில திங்களுக்கு முன் - வைகோவை பொடாவில்

கைது செய்ததைக் கண்டித்து மயிலை மாங்கொல்லையில் நடந்த கூட்டத்தில் விரிவாகப் பேசியிருக்கிறேன்.

எனவே, திராவிட இயக்கத்திலிருந்து சிதறிக் கிடக்கும் அமைப்புகள் அனைத்தும் ஒரே அமைப்பு ரீதியாக சேர்ந்தியங்குவது என்பது செயல்பாட்டுக்கு ஒத்துவராது எனினும், தனித்தனி அமைப்புகளாயிருந்து கொண்டே கொள்கை குறிக்கோளை, லட்சிய கீதத்தை ஒரே குரலில் ஒலிக்கலாமன்றோ! ஒருசேர முழக்கலாமன்றோ!

மடமை ஒழித்து
மத நல்லிணக்க
வரலாறு படைத்து
மதச்சார்பற்ற
ஆட்சி அமைத்திட
பகுத்தறிவுப் பாதையைத்
தடுத்துக்கொண்டு
குறுக்கே நிற்போர் யார் என்று நான் அறியாமலில்லை.

“உள்ளத்தால் ஒருவரே
உடலினால் பலராய்க் காண்பர்”

எனும் புரட்சிக் கவிஞரின் கவிதைக்கான பொருள், திராவிட இயக்கங்களுக்கும் பொருந்துமாறு செய்ய வேண்டியது எனது கடமையாகும். இது கனவாகி விடாமல் முதுமைக் காலத்தில் நான் ஏற்றுக்கொண்டுள்ள இந்தப் பொறுப்பை நிறைவேற்ற உண்மையான திராவிட இயக்கங்களின் ஒத்துழைப்பை, உதயத்தை எதிர்பார்க்கும் உழவனைப் போல் எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

18-4-2004

3056. நேற்றைய கடிதமும்; இன்றைய நிலையும்!

உடன்பிறப்பே,

எப்படித்தான் புரட்சிக் கவிஞருக்கு அறுபது அல்லது எழுபது ஆண்டுகட்கு முன்பே, எதிர்காலத்தில் திராவிட இயக்கத்தின் வளர்ச்சியையும் வலிமையையும் பத்திரிகை உலகில் சிலர் திரையிட்டு மறைத்திட முனைவர் என்று "ஆரூடம்" போல் கணிக்கத் தோன்றியதோ! அதைத் தனது கவிதையில் பதிவு செய்து, "காரிருளால் சூரியன் தான் மறைவதுண்டோ?" என்று கேட்டு - "மறைக்க முடியாது" என்பதை அழுத்தம்திருத்தமாக அப்போதே எழுதியுள்ளார். அற்றை நாளில் அந்தப் பெருங் கவிஞர் பெருமான் மறைந்த செய்தியையே பெரிதுபடுத்த விரும்பாமல் சில 'உயர்ஜாதி' ஏடுகள், 'மரணச் செய்திகள்' என்ற பட்டியலில் வெளியிட்டதை நான் மரணமடையும் வரையில், மறக்காமல் மனத்திற் போட்டு வைத்திருப்பேன். இப்போதும் என் நண்பர் களிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பேன்.

விஞ்ஞான வளர்ச்சியில், "மீடியா" என்பது பத்திரிகை வாயிலாக அறிதல் என்பதிலிருந்து பல படிகள் மேலேபோய், பரந்து விரிந்துள்ள கால கட்டத்தில் நாம் இருக்கிறோம். ஆனால், அதற்குப் பயன்படக்கூடிய சாதனங்களான தொலைக்காட்சி போன்றவை, தொழில்ரீதியாகத்தான் செயல்பட முடிகிறதே தவிர, நமதியக்கத்துக்கு முழுமையாகத் துணை நிற்க முடிவதில்லை.

அதனால்தான், ஒல்லும்வகையெல்லாம் பட்டி தொட்டி முதல் பட்டினக் கரைகள் வரையில், நமது கொள்கை முரசுகள் கொட்டப்பட வேண்டுமென்று திட்டமிட்டுச் செயல்பட வேண்டிய தேவை, முன்னைக் காட்டிலும் பன்மடங்கு பெருகியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். கடந்த ஓரிரு வாரங்களில் நான் மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் வெள்ளமெனத் திரண்ட தமிழ்ப் பெருமக்களின் எழுச்சியை சில ஏடுகள் வேண்டுமானால் இருட்டடிப்பு செய்துவிடலாம். அவ்வாறு செய்தும் வருகின்றன. நிகழ்ச்சிகளிலும், வழிநெடுகிலும் சதுக்கமும், சாலைகளும் நிரம்பித் ததும்பியதை வேண்டுமென்றே சில ஏடுகள் மறைப்பது, தங்கள் கண்களை மூடிக்கொண்டு எல்லோரது கண்களும் மூடிக் கிடப்பதாக எண்ணிடுவது, "பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டுபோமோ?" என்று நான் "ராஜா ராணி" படத்தில் எழுதிய பாட்டைத்தான் எனக்கு அடிக்கடி நினைவுபடுத்திடும்.

ஒவ்வொரு கட்சிக்கும் நாளேடு அல்லது வார ஏடு இருப்பினும், அவற்றில் அந்தக் கட்சிகளின் செய்திகள் வெளிவரவே இடம் போதாத நிலையிருப்பதை எவரும் எளிதில் உணர முடியும்.

நடுநிலை ஏடுகள் என்ற வரிசையில், திராவிட இயக்கங்களின் செய்திகளை முக்கியத்துவம் அளித்து வெளியிடுகிற ஒரு "தினகரன்" நாளிதழைப் போலவோ - "தமிழ் முரசு" மாலை இதழைப் போலவோ எல்லா ஏடுகளும் வெளியிட முடியாது என்பதை உணருகிறேன் எனினும், செய்திகளின் கழுத்தை முறித்துக் குற்றுயிரும் குலை உயிருமாகத் தருகிற அந்தக் குள்ள மனப்போக்கையாவது அந்த ஏடுகள் தவிர்த்தல், அந்தச் செய்தியை வெளியிடுவதைக் காட்டிலும் சிறப்பான காரியமல்லவா?

கிராமியச் சூழல் நிறைந்த பகுதிகள்தான் திருவள்ளூரும், பொன்னேரியும் - சென்னை மாநகருக்கு அருகில் உள்ள பகுதிகள் - செய்தி சேகரிக்கும் பத்திரிகையாளருக்கும் தொலைதூர இடங்கள் அல்ல - அங்கே இரண்டு நாட்கள் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்கு வந்திட அவர்களுக்கும் வாகன வசதி செய்யப்பட்டிருந்தது - அந்த இரு ஊர்களும் தாங்காத அளவுக்கு பொங்குமாங்கடலெனப் பொதுக் கூட்டங் கள் - இரு கூட்டங்களிலும் நீண்ட நேரம் (தேர்தல் ஆணைய விதியை மீறாமல்) உரையாற்றியிருக்கிறேன். ஆயினும், பத்திரிகையாளர்களுக்கு அதிகாரக் கெடுபிடி - தடையுத்தரவு - இவற்றிலிருந்து தப்பிப் பிழைத்தவை - தலை நிமிர்ந்து நிற்பவை - நான் முதலில் குறிப்பிட்டவை போன்ற இரண்டொரு ஏடுகள்தான்!

உடன்பிறப்பே!

இதுபோன்ற எத்தனையோ எதிர்ப்புகளை, இருட்டடிப்புகளை, குழிபறிப்புகளை, குத்திவிடும் செயல்களைச் சந்தித்துச் சந்தித்து - அதனால் சோர்ந்து விடாமல் சந்தனமாய்த் தேய்ந்து, வெந்தணலில் வீழ்ந்த மெழுகாய் உருகித்தான் இந்தச் சமுதாயத்திற்காகத் திராவிட இயக்கம் பணியாற்றி வருகிறது.

புல்லுக்கும் சேர்த்துத்தானே நெல்லுக்கு நீர் இறைக்கிறான் விவசாயி! அந்த விவசாயி நிலையில் இருந்து கொண்டு திராவிட இயக்கம் ஆற்றும் பணி, இந்தத் தேர்தல் ஒன்றுக்காக மட்டுமல்ல, ஒட்டு மொத்த திராவிட இன எழுச்சிக்காக அமைய வேண்டுமென்பதற்காகவே நேற்றைய கடிதத்தில் என் இதய வேட்கையை வெளியிட்டிருக்கிறேன்.

எந்தச் சூழ்நிலையில் நாம் இயக்கம் வளர்க்கிறோம் என்பதையும், எதிரிகள் எந்தெந்த உருவில் உலவுகிறார்கள் என்பதையும் அறிந்து எச்சரிக்கையாக இருக்கவும், வேற்றுமையில் ஒற்றுமை காணும் வித்தகம் போற்றி, வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி கண்டிட, திராவிட இயக்கம் வலிமைபெற வேண்டுமென நான் தெளிவுபடுத்தியுள்ள நேற்றைய கடிதத்தையொட்டி சிலவற்றை இன்று சுட்டிக் காட்டியுள்ளேன்.

அன்புள்ள,

மு.க.

19-4-2004

3057. பம்மாத்து கூட்டணியின் பகல் வேஷம் பாரீர்!

உடன்பிறப்பே,

> "போதுமடா சாமி! புற்றீசல் போலக் கிளம்பிடும் பல்வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு நான் பட்டபாடு; அதைவிடச் சிரமமான வேலை வேறொன்றுமில்லை. அதனால் பா.ஜ.க. தனித்துப் பெரும்பான்மை பெறக் கூடிய அளவுக்கு எங்களுக்கு வாக்களியுங்கள்."

என்ற கருத்தை இந்தியப் பிரதமர் அட்டல் பிஹாரி வாஜ்பய் அவர்கள், தனக்கேயுரிய உரைநடை மொழியில் நாக்பூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தெரிவித்து, வாக்காளர்களுக்கு வேண்டுகோளும் விடுத்திருக்கிறார்.

இதுபோல் வாய்மைக்கு விடைகொடுத்து அனுப்பி விட்டு, வாக்கு சேகரிக்கும் தந்திரத்தை வாஜ்பய் அவர்களும் கையாளுவார் என்று நான் கனவுகூடக் கண்டதில்லை. அவ்வளவு நேர்மையாளர் என்ற நம்பிக்கை எனக்கு அவரிடம் உண்டு. ஆனால் இப்போது அவர் கூட்டணி ஆட்சிக்குத் தலைமை ஏற்க விருப்பமில்லை என்று தெரிவிப்பது, அவரது மனச்சாட்சிப்படி வெளிவந்த அறிவிப்பு என்பது உண்மையானால், அந்தக் கூட்டணிக் கட்சிகளில் எந்தக் கட்சியைத் தற்போதைக்குப் பெயர் குறிப்பிடாமல் சொல்லியிருக்கிறார் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து கொள்கை ரீதியாக மாறுபட்டு, ஆட்சியின் செயல்பாடுகளில் வேறுபட்டு வெளிவந்துவிட்ட தமிழ் நாட்டுக் கட்சிகளுடன் பிரதமர் வாஜ்பயிக்குச் சங்கடம் தரக்கூடிய தனிப்பட்ட பிரச்சினைகள் எதுவுமில்லை.

ஆனால் பா.ஜ.க., ஜெயலலிதாவின் அ.தி.மு.க. வுடன் கூட்டணி கண்டு அரசு அமைத்த கால கட்டத்திலும் - ஜெயலலிதா

அந்த அரசை உதைத்துக் கவிழ்த்திட்ட காலகட்டத்திலும் - அனைத்தையும் மறந்துவிட்டு, மரியாதையைத் துறந்துவிட்டு இப்போது மீண்டும் ஜெயாவுடன் கூட்டணி கண்டுள்ள இந்தக் காலகட்டத்திலும், திருநாவுக்கரசர் இந்தத் திசையிலேயே தலைகாட்டக் கூடாது என்று தொகுதி மறுக்கப்பட்டு தூக்கி எறிந்து பேசிய வெட்கங்கெட்ட வேதனையையும் தாங்கிக் கொண்டு, அகில இந்திய அமைப்பும் - ஆளும் தரப்புமான பா.ஜ.க. பணிந்து இணங்கிப் போனதும் - பார்க்கவும், கேட்கவும், பத்திரிகைகளில் படிக்கவும் மிகப் பரிதாபகரமான விஷயங்கள்தான்!

இருந்தாலும், பாரதப் பிரதமர் என்ற பதவியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசையை அடக்கமுடியாமல்தானே அந்தக் கட்சியுடனான கூட்டணிக்கு வாய்மையாளர் எனப்படும் வாஜ்பாயே வசப்பட்டுப் போனார்!

இதோ ஜெயாவுடன் கூட்டணி கண்ட காலத்திலும் - அதன் பிறகு அந்த அணி குலைந்துவிட்ட காலத்திலும் - ஜெயாவும் வாஜ்பய் அவர்களும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்ட தேதி வாரியான கருத்துகள் ஏடுகளில் வெளிவந்ததை ஒருமுறை படித்தாலே போதுமே!

இன்று 'பம்மாத்து' செய்கிற பாசாங்குக் கூட்டணியின் "பகல் வேஷம்" கலைந்து பளிச்சென உண்மை புலப்படுமே!

இதோ அந்த ரசத் துளிகளில் "சாம்பிளுக்கு" ஒன்றிரண்டு!

★

"அ.தி.மு.க.வுடன் கூட்டணி இருந்த காலம்தான் எனது அரசியல் வாழ்க்கையிலேயே மிகவும் வேதனையான காலமாகும். மத்தியில் பா.ஜ.க. ஆட்சி அமைத்த நாளிலிருந்தே ஜெயலலிதா தொல்லை கொடுக்கத் துவங்கினார். பா.ஜ.க. அரசை பலவீனப்படுத்தக் கூடிய வகையில், ஒவ்வொரு வாரமும் ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருந்தார். மத்திய அரசைக் கவிழ்க்கப்போவதாகச் சுதந்திர தினத்திற்கு முந்தைய நாளன்றுகூட அவர் அச்சுறுத்தினார். ஆனால், அவரது பிளாக்மெயில் தந்திரத்திற்கு நாங்கள் அடி பணியவில்லை."

இது, 22-8-1999 'தினமணி' சென்னைப் பதிப்பில் வெளிவந்த வாஜ்பய் அவர்களின் பேச்சு.

★

"கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை பாரதிய ஜனதா கூட்டணியில் சேர்த்துக் கொண்டது நாங்கள் செய்த தவறுதான். அவருடைய ஆதரவு இல்லாமல் ஆட்சி அமைக்க முடியாது என்ற இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அதனால்தான் வேறு வழியில்லாமல் அவரது ஆதரவை ஏற்றுக் கொண்டோம்"

இது, 11-8-1999 'தினத்தந்தி' இதழில் வெளிவந்த வாஜ்பய் அவர்களின் பேச்சு.

★

இதோ மூன்றாவது "டோஸ்" கொஞ்சம் காரமானது. இதுவும் வாஜ்பய் அவர்களின் வாய்மொழிதான். சென்னையில் பேசி 22-8-1999 அன்று தினமணியில் வெளிவந்தது.

"அ.தி.மு.க. எங்கள் அரசைக் கவிழ்க்க வந்தபோது, தமிழ்நாட்டிலிருந்து ஓர் உதவி கிடைத்தது. உற்ற நேரத்தில் உதவுபவன்தான் உண்மையான நண்பன். தி.மு.க. முன்வந்து ஆதரவு தந்தது. ராஜீவ் காந்தி படுகொலையில் தி.மு.க.வுக்கு பங்கு உண்டு என்று குற்றம் சாட்டினார்கள். மத்தியில் உள்ள தி.மு.க. மந்திரிகளை பதவி விலக்க வேண்டும் என்றார்கள். ஆனால், ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையில் தி.மு.க.வுக்கு சம்பந்தம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. டெல்லியில் எங்கள் ஆட்சி உருவானது முதற்கொண்டே, அ.தி.மு.க. தொந்தரவு கொடுத்தது. ஒவ்வொரு வாரமும் ஏதாவது அறிக்கை கொடுத்து மத்திய அரசின் கவுரவத்தையும், கூட்டணியின் ஒற்றுமையையும் பாழ்படுத்தினர். நாட்டில் சுதந்திர தினம் என்பது புனிதமான நாள். அன்று பி.ஜெ.பி. அரசுக்கு தந்த ஆதரவை வாபஸ் பெறுவோம் என்று மிரட்டினர். என்னுடைய அரசியல் வாழ்வில் கஷ்டமான நாட்களை அ.தி.மு.க. கூட்டணியில் இருந்தபோதுதான் சந்தித்தேன். அ.தி.மு.க.வின் இந்தச் செயலுக்கு பின்னணியில் இருந்த காரணங்கள் இரண்டு. ஒன்று, ஜெயலலிதா தன் மீதுள்ள ஊழல் வழக்குகளை வாபஸ்பெற வேண்டும், தன் மீது மத்திய புலனாய்வு துறையினர் தொடுத்த புலன் விசாரணையை நிறுத்த வேண்டும் என்று வற்புறுத்தினார். இரண்டாவது

வற்புறுத்தல், தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்யவேண்டும் என்பது. நாங்கள் இந்த இரண்டு நிபந்தனைகளையும் ஏற்க மறுத்து விட்டோம்."

★

இவை வாஜ்பய் பக்கமிருந்துவந்த குற்றச்சாட்டுகள் - இதோ; திருப்பி அடிக்கிறார் ஜெயலலிதா! அதையும் படியுங்கள்!

"இந்திய ராணுவத்துக்கு தரம் குறைந்த ஆயுதங்களை வாங்கியதில் ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் நடந் துள்ளது. இதேபோல் தனியார் தொலை பேசி நிறுவனங்களுக்கு சலுகை அளிக்கும் வகையில் புதிய தொலைத் தொடர்பு கொள்கையை உருவாக்கி அமல் செய்ததன் மூலம் பிரதமர் அலுவலக ஊழியர்களுக்கும், பிரதமர் குடும்பத்தினருக்கும் பெரும் தொகை வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் செலவுக்காக பாரதிய ஜனதா கட்சிக்கு அந் நிறுவனங்கள் பல கோடி ரூபாய் வழங்கியுள்ளன."

இது ஜெயலலிதா பேச்சு. (தினமணி 2-9-1999)

★

அடுத்து ஓர் அடி! அடல் பிகாரி வாஜ்பயியின் அலுவலகம், குடும்பம் இரண்டுமே ஊழல் களஞ்சியம் என்று ஜெயா உரைத்திட்ட விவகாரம் :-

"டெலிகாம் ஊழலில் 3 ஆயிரத்து 800 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஊழலில் பிரதமர் வாஜ்பய் குடும்பத்தினருக்கும், பிரதமர் அலுவலகத்தில் உள்ள சிலருக்கும் பெரும் தொகை கொடுக்கப்பட்டுள்ளது"

இது ஜெயலலிதா பேச்சு - 27-7-1999 (தினமலர்).

★

இதுபோன்ற சான்றுகள் இன்னும் ஏராளமாக உள்ளன என்றபோதிலும் இறுதியாக, 25-5-1999 அன்று தினமணி பத்திரிகையில் வெளிவந்த, ஜெயலலிதா, அவருடைய கட்சித் தொண்டர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் உள்ள வாசகங்கள்தான் முக்கியம். அது இதோ :-

"பதவியில் நீடிப்பதற்காக யாரோடும் கூட்டுச் சேரவும், எந்தவித பாதகத்தைச் செய்யவும் பா.ஜ.க. தயாராக

இருக்கிறது. தேச விரோதக் கும்பலோடும், அந்நிய நாட்டு ஆயுத முதலாளிகளோடும் தொடர்புடைய பா.ஜ.க. குறித்தும், அதன் தலைவர்கள் குறித்தும் அதிர்ச்சியூட்டும் தகவல்கள் என்னிடம் உள்ளன. நேரம் வரும்போது அவற்றை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவேன்"

★

அவ்வளவு தொலைவு போவானேன்? இதோ, அண்மைக் காலத்தில் அதாவது நான்கு மாதங்களுக்கு முன்பு 6-11-2003 அன்று, தமிழகச் சட்டப் பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா உதிர்த்த முத்துக்கள் இவை :-

"ஒரு புதிய ஆட்சி மத்தியில் அமைய வேண்டும். காங்கிரஸ் தலைமை ஏற்காத, பா.ஜ.க. தலைமை ஏற்காத, ஜனதா தளம் தலைமை ஏற்காத ஒரு புதிய மத்திய அரசு உருவாக வேண்டும். தொடர்ந்து காவிரிப் பிரச்சினையில் தமிழகத்தை வஞ்சித்துக் கொண்டிருக்கின்ற பா.ஜ.க., காங்கிரஸ், ஜனதா தளம் கட்சிகள் தேர்தல் நேரத்தில் இங்கு வந்து ஓட்டு கேட்டால், தமிழக மக்கள் குறிப்பாக காவிரி டெல்டா பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் அவர்களை விரட்டி அடிப்பார்கள் என்பதை உறுதியாகச் சொல்கிறேன்"

★

உடன்பிறப்பே, இவையனைத்தும் பா.ஜ.க., அ.தி.மு.க., கூட்டணியில் பரிமாறிக் கொள்ளப்பட்ட - அல்லது பருகிய ரசங்கள்! ரசங்களோ! விரசங்களோ!

இதையெல்லாம் நினைத்துத்தான் "போதுமடா சாமி; பொல்லாத கூட்டணி!" என்று நாகபுரி பொதுக் கூட்டத்தில் புலம்பித் தவித்திருக்கிறார். பாவம்! பாரதப் பிரதமர்! நாமும் பரிதாபப்படுவோம்!

அன்புள்ள,

மு.க.

20-4-2004

3058. பதில்களை எதிர்பார்த்து பயணம் தொடங்குகிறேன்!

உடன்பிறப்பே,

இன்று மீண்டும் புறப்படுகிறேன், கன்னியாகுமரியிலிருந்து நெல்லை, காயல்பட்டினம், திருச்செந்தூர், அருப்புக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை என ஊர்களை எண்ணிப் பார்த்தால் குறைவாகத்தான் தோன்றும்; இடையிடையே எத்தனை இடங்களில் நிறுத்தங்கள், தமிழ்ப் பெருமக்களின் எழுச்சிமிகு வரவேற்புகள்; அவை எண்ணற்றவைகளாகிவிடும். இரண்டு மூன்று கட்டங்களாக இந்தத் தேர்தலுக்கான சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டதில் ஏற்பட்ட அனுபவத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

நாடாளுமன்றத் தேர்தலையொட்டி நமது துணைப் பொதுச் செயலாளர் மு.க.ஸ்டாலினும், தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் துரைமுருகனும், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களுடன் கலந்துபேசி வகுக்கப்பெற்ற சுற்றுப் பயணத் திட்டம் இது என்றாலும்; ஏதோ அவர்கள் என்னைவிட்டுவிட்டு தங்களின் வயது - வலிவு - இவற்றை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டு ; அறுபத்தி ஆறு ஆண்டுகளாக ஓடியாடி உழைத்த கட்டை இது என்பதையும், இன்னமும் தொடர்ந்து அந்தத் தொண்டினை ஆற்றி வருகிற தொண்டர்க்குத் தொண்டன் என்பதையும் ஏனோ மறந்துவிட்டார்கள்!

சுற்றுப் பயணத்தின் முதல் நாளே, சென்னையிலிருந்து காஞ்சி; காஞ்சியிலிருந்து செய்யாறு - ஆரணி வழியாக - கடைசி நிகழ்ச்சியாக திருவண்ணாமலை பொதுக் கூட்டம் என அறிவிக்கப் பட்டிருந்தபோதிலும் - வழிநெடுக வரவேற்பு நிகழ்ச்சிகளின் குறுக்கீடுகளாலும் - ஆடவர், பெண்டிர், வயோதிகர், வாலிபர் என ஆயிரமாயிரவர் ஆரவன முழக்கமிட்டு அன்பைப் பொழிந்ததாலும்

- அவர்தம் அன்புப் பொழிவுக்கு முன்னே "காலந்தாழ்ந்து விட்டது, காவல்துறை விதித்துள்ள நேரம் கடந்துவிடும்" என எடுத்துரைத்த காரணங்கள் எதுவும் யார் காதிலும் விழவில்லை என்பதாலும் திருவண்ணாமலை போய்ச் சேர இரவு இரண்டு மணி ஆயிற்று. எனவே முதல் நாள் இரவு நடந்திருக்க வேண்டிய கூட்டம் மறுநாள் பிற்பகல் 3 மணியளவில் திருவண்ணாமலையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு முதல் நாளைவிட அதிகக் கூட்டம் வந்திருந்ததாக இரண்டு நாள் நிகழ்ச்சியையும் கண்டவர்கள் சொன்னார்கள். இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் முதல் நிகழ்ச்சியாக திருவண்ணாமலையைச் சேர்த்த காரணத்தால், அன்று கடைசி நிகழ்ச்சியான கிருஷ்ணகிரி கூட்டத்தில் ஐந்து நிமிடங்களே பேச நேரிட்டது.

ஒரு நாளில் பல நிகழ்ச்சிகள் இருக்கும்போது, முதலில் நிகழ்ச்சிகளை நடத்துவோர் குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ச்சிகளை நடத்த முன்வராமல் மின்விளக்கு அலங்காரம் செய்வதற்காக தாமதமாக வரச் சொல்லி வற்புறுத்துவதும், அதன் காரணமாக கடைசியாக குறிப்பிடப்படும் நிகழ்ச்சிகளுக்கு குறித்த நேரத்தில் செல்ல முடியாததுமான நிலை ஏற்படுகின்றது.

உடன்பிறப்பே, இப்போதுகூட கன்னியாகுமரியில் தொடங்கிடும் இன்றைய நிகழ்ச்சிகள் முதலில் குறைந்த தொலைவு இடைவெளியைக் கொண்டதாக அமைந்து, அடுத்தடுத்து நெல்லையிலிருந்து இராமநாதபுரம் என்றும், சிவகங்கை, மதுரை என்றும் நெடிய தொலைவு நீளுகிறது.

இந்த ஆண்டு மே தினத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் கர்ஜித் அவர்களுடன் மதுரையில் ஒரே மேடையில் கொண்டாடுகிறேன் என்பது எனக்கும் உனக்கும் இனிப்பான செய்தி. தி.மு.க. ஆட்சியில் அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்டு - பிறகு நான் முதல்வராக இருந்தபோது சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாளாக 'மே நாள்' ஆக்கப்பட்டதும் நினைவுகூர்ந்திடத்தக்கவை.

அன்று எதிர்க்கட்சி வரிசையில் சட்டப் பேரவையில் அமர்ந்திருந்த மார்க்சிஸ்ட் நண்பர் உரா. வரதராசன் அவர்கள் மே தின நினைவுச் சின்னம் ஒன்று அமைக்க வேண்டுமெனக் கோரிக்கை வைத்துப் பேசினார். உடனே நான் அதை ஏற்றுக்

கொண்டு; அதனைச் செயல்படுத்தி 'மே நாள்' நினைவுச் சின்னத்தின் வரைபடத்தையும் நானே தீட்டி, அவ்வாறே அமைத்ததுடன் - அந்தச் சின்னம் எழுப்பப் பெற்ற 'நேப்பியர் பூங்கா'வுக்கும் "மே தினப் பூங்கா" என்று பெயரும் சூட்டினேன்.

மதுரையில் மே தினம்- தேர்தல் பிரச்சாரக் கூட்டம் முடித்துவிட்டு சென்னை வந்த பிறகும் நிறைய நிகழ்ச்சிகள், குவிந்து கிடக்கின்றன.

எப்படித்தான் இந்த உடம்பு தாங்குகிறதோ என்று கேட்டுக் கொண்டே கழிவிரக்கத்தைக் கண்களால் தெரிவிப்பவர்கள்; ஆம்; நமது உடன்பிறப்புகள் - தங்களுக்கு ஒரு நிகழ்ச்சிக்கான நாளோ அல்லது நேரமோ கேட்க மட்டும் தவறுவதில்லை. என் செய்வது; முதலில் நான் கோபத்தைக் காட்டி மறுத்தாலும்; பிறகு அவர்தான் என்ன செய்வார் பாவம்; எனும் இரக்க உணர்ச்சியும் அதையும் மீறிக் கொண்டு பாச உணர்ச்சியுமல்லவா பீறிட்டுக் கிளம்பி விடுகின்றன!

என்னை நம்பி நீ இருக்கிறாயோ இல்லையோ அது வேறு விஷயம் - ஆனால் உன்னை நம்பித்தான் இந்தக் கழகம் இருக்கிறது. உன் போன்றோரால்தான் இந்த இயக்கம் எஃகுக் கோட்டையாக இருக்கிறது!

அ.தி.மு.க. தலைவி ஜெயாவுக்கு வேண்டுமானால் தி.மு. கழகமும், அதன் தலைமையில் அமைந்துள்ள தமிழக ஜனநாயக முற்போக்குக் கூட்டணியும் கிள்ளுக் கீரையாகத் தெரியலாம்.

அவருக்கு யாரைத்தான் அல்லது எந்த இயக்கத்தைத்தான் மதிக்கத் தெரியும். மரியாதை காட்டத் தெரியும்?

அத்வானியே அவரது அகராதியில் 'செலக்டிவ் அம்னீஷியா!'

பிரதமர் வாஜ்பாயே அவரது சட்டப் பேரவை பேச்சுப்படி தமிழ்நாட்டுக்குத் துரோகி!

சோனியா காந்தி ஜெயா பாஷையில் பதிபக்தி இல்லாதவர்!

கவர்னர் சென்னா ரெட்டியே அவர் வாய்மொழிப்படி அவரிடம் தவறாக நடந்து கொண்டவர்!

ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது அவருக்குத் தன் கைப்பட எழுதிய கடிதப்படி எம்.ஜி.ஆர்., 'ஜெயா'வின் செல்வாக்கு கண்டு பொறாமைப்படுகிறவர்! செயல்படாத முதலமைச்சர்!

நரசிம்மராவுக்கு தலைமுறை இடைவெளி - ராஜீவ் காந்தி கொலையில் மூப்பனாருக்கும் பங்கு உண்டு!

மத்திய - அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஒரு பொய்யர்!

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபுநாயுடு ஒரு மோசடிப் பேர்வழி!

கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நிர்வாகம் தெரியாதவர்!

இதுபோன்ற ஆணவங்கள், அடாவடிப் பேச்சுக்கள் மட்டுமல்ல; அவருக்குத் தெரிந்த மிகப் பெரிய சாகசம்; பணவலை வீசி "பதவி மோகிகளை" தன் பக்கம் இழுப்பது - பயந்தாங்கொள்ளிகளை தன் பாதம் விழச் செய்வது - இதில் கடுகளவு வெற்றி கண்டு கடல் அளவு கர்வங்கொண்டு; கழகத்தைப் பார்த்து கர்ச்சிக்க மட்டும் தவறுவதில்லை.

உனக்கு இந்தக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கும்போது காலைப் பத்திரிகையில் படித்தேன் -

"தி.மு.க. கூட்டணி எண்ணிக்கையில் அதிக கட்சிகள் கொண்ட கூட்டணியாக இருக்கலாம். ஆனால் பாண்டவர்கள் ஐந்து பேர்தான் - கௌரவர்கள் நூறு பேரை வெற்றி கண்டது போல் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும்"

என்று அறைகூவல் விட்டிருக்கிறார்.

அதாவது அம்மையாரின் கருத்து ஜனநாயகத்தில் எண்ணிக்கையே முக்கியமல்ல என்பதாகிறது.

"எண்ணிக்கை மட்டுமே முக்கியமல்ல என்று சொன்ன அண்ணா அவர்கள் கூட ; ஜனநாயகத்தில் எண்ணிக்கையின் மதிப்பை மறுத்ததில்லை."

ஆனால் அம்மையார் சொல்கிறார்;

"எண்ணிக்கையே பலம் என்பது உண்மையானால் ஐந்து பாண்டவர்கள், நூறு கௌரவர்களை வெற்றிகொண்ட வரலாறு இந்த நாட்டில் காலம் காலமாய்ப் பேசப்பட்டு இருக்காது"

'ஜெ'யின் இந்தக் கூற்றுப்படி மகாபாரதம் என்பது ஐந்து பேரும், நூறு பேரும் எதிர் நின்று மோதி நடத்திய யுத்தமல்ல! அக்ரோணிக்கணக்கான சேனைகள் இரு தரப்பிலும் போரில் ஈடுபட்டன. குருஷேத்திரத்தில் இந்தப் பக்கம் 5 பேரும் அந்தப் பக்கம் 100 பேரும் மட்டும் நின்று கொண்டிருக்கவில்லை. ஆயிரமாயிரம் பேர் இருபுறமும் நின்று போரிட்டதாகத்தான் பாரதப் புராணம் கூறுகிறது. அதுமட்டுமல்ல; கிருஷ்ண பரமாத்மாவின் சூழ்ச்சிகள்தான் அந்தப் போரில் முக்கியமான ஆயுதங்களாகப் பயன்பட்டன.

கர்ணனிடமிருந்த யாராலும் வெல்ல முடியாத கணையை அர்ச்சுனன் மீது ஒரு முறைதான் ஏவிட வேண்டுமென அவன் தாய் குந்தி தேவியை விட்டு வரம் கேட்கச் சொல்லி ; அப்படி ஏவி விடப்பட்ட கணையையும் அர்ச்சுனன் மீது படாமல் தடுத்து சூழ்ச்சியால் கர்ணனின் தான தர்மப் பலன்களையும் பறித்துக் கொண்டு; அப்படியல்லவா பாரதப் போர் முடிவுக்கு வந்தது.

அந்தப் போருக்குக் காரணமே ஒரு பெண்ணின் ஆணவச் சிரிப்புத்தானே யார் அந்தப் பெண்? ஐவருக்கும் தேவியாக அழியாத பத்தினி என்று புகழப்பட்டு; ஆறாவதாக கர்ணன் மீதும் ஆசை வைத்திருந்த திரௌபதி என்பாள், பாண்டவர் கட்டிய மாளிகையில் துரியோதனன் பளிங்குத் தரைக்கும் தண்ணீருக்கும் வித்தியாசம் தெரியாமல் தடுக்கி விழப்போய்; அதைக் கண்டு அந்தப் பாஞ்சாலி "களுக்" என்று சிரித்ததால் வந்த வினையல்லவா அந்தச் சகோதர யுத்தமாம் பாரதப் போர்! "ஜெயா" இதையெல்லாம் படிக்காமலோ தெரிந்து கொள்ளாமலோ பேசுவது; அவருக்கல்ல; அவரது பதவிக்கு, அழகல்ல!

"நான் கேட்கிற எந்தக் கேள்விக்கும் தி.மு.க. கூட்டணி வீரர்கள் பதில் சொல்வதில்லை"

இதுவும் முதலமைச்சரின் கேலிப் பேச்சில் ஒரு பகுதிதான்

"ஜெயலலிதா அவர்களே! பிரபாகரன் மீது தூசி பட்டாலும் தமிழ்நாடு பிரளயத்தைச் சந்திக்கும்" என்றும் –

"புலிகளுக்கு தனி நாடு பிரித்துக் கொடுக்க இந்தியா படையெடுக்க வேண்டும்" என்றும் தாங்கள் சிறப்புப் பேட்டி கொடுத்தது உண்டா இல்லையா? -

"எம்.ஜி.ஆர். உங்கள் செல்வாக்கு கண்டு பொறாமைப்படுகிறார்" என்று பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தெரிவிக்கச் சொல்லி உங்கள் கைப்பட கடிதம் எழுதியது உண்டா இல்லையா?

"எம்.ஜி.ஆரை ஜானகி அம்மையார் விஷம் கொடுத்துக் கொன்று விட்டார்" என்று தாங்கள் மாறி மாறி அறிக்கைகள் விடுத்தது உண்டா இல்லையா?

அம்மையார் அவர்களே! இப்படிச் சில கேள்விகள் தங்கள் பதிலுக்காக நீண்ட காலமாகக் காத்துக் கிடக்கின்றன. இவற்றுக்கு எப்போது விடை அளிக்கப் போகிறீர்கள் என்ற கேள்வியுடன், பதில்களை எதிர்பார்த்து என் பயணத்தை குமரி முனை நோக்கித் தொடங்குகிறேன்.

அன்புள்ள,

மு.க

28-04-2004

.

3059. இவர்கள் கூட்டணியை என்ன பெயரிட்டு அழைப்பது?

உடன்பிறப்பே,

நாடாளுமன்றத் தேர்தல் இறுதிக் கட்டம் மே 5 - மே 10 - இரு நாட்களுடன் நிறைவுற்று, மே 13 அன்று மக்களின் தீர்ப்பு வெளிவரப்போகிறது.

இதற்கிடையே பிரதமர் வாஜ்பய் அவர்களும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் என்ற முறையில் ஒரே மேடையில் பேசுவதாக இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அந்த இரு கட்சிக் கூட்டணியின் "ரிங் மாஸ்டர்" ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. தான் என்பதால், அந்தக் கூட்டணியின் செயல்பாடுகளும் - ஒவ்வொரு அடி எடுத்து வைப்பதற்கும் பாரதீய ஜனதாவின் பெருந்தலைகள்,

போயஸ் தோட்டத்தின் உத்தரவுக்குத் தவம் கிடக்க நேரிட்டு, இறுதியாக ஜெயலலிதா அருளிய ஏழு தொகுதிகளை,

"இதாவது கிடைத்ததே" என்று அழுவதா, சிரிப்பதா எனத் தெரியாமல் ஏற்றுக்கொண்டுள்ள நிலையும் உருவாகியுள்ளது.

அத்துடன் நின்றதா? அந்த ஏழு தொகுதிகளிலும் பா.ஜ.க. வேட்பாளர்களாக யாரை நிறுத்துவது என்று முடிவெடுக்கின்ற உரிமையும் ஜெயாவுக்கே உரியது.

பா.ஜ.க. அந்தப் பட்டியலில் மரியாதையாகக் கையெழுத்துப் போட வேண்டும்.

> "மத்தியில் ஆளுங்கட்சியாக இருந்தாலும், நான் கொடுக்கும் தொகுதிகளைத்தான் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பிச்சையெடுக்க திருவோடு ஏந்தி விட்டு, பிறகென்ன அதில் லட்டு போடு, ஜிலேபி போடு என்று கேட்பது? - போட்டதைத்தானே வாயில் போட்டுக் கொண்டு போகவேண்டும்."

இதே வார்த்தைகளைச் சொல்லவில்லை, ஆனால் செயலில் அதுதான் நடந்தது!

இன்ன தொகுதியில் இன்னாரைத்தான் நிறுத்த வேண்டுமென்பது மட்டுமல்ல!

இன்னாருக்கு எந்தத் தொகுதியும் கொடுக்கக் கூடாது என்றும் கட்டளை!

மத்தியில் அமைச்சராக இருக்கும் திருநாவுக்கரசருக்கே அந்தக் கதி!

அந்த நிபந்தனையையும் பா.ஜ.க. பெருந் தலைவர்கள், "அப்படியே ஆகட்டும் தாயே!" என்று தலையசைத்துத் தயங்காமல் ஏற்றுக்கொண்டனர். தங்களில் ஒருவருக்கு வந்த அவமானம் தங்கள் கட்சிக்கே வந்ததாகக் கருதுகிற தன்மான உணர்வுக்கு மத்திய பா.ஜ.க., மாநில பா.ஜ.க., இரண்டிலுமே இடமில்லாமற் போய்விட்டதுதான் விந்தை!

பாவம்! திருநாவுக்கரசர் அவ்வளவு படுமோசமாகப் பழிவாங்கப்பட்டார். அறந்தாங்கித் தொகுதியே அதிர்ந்தது! ஆனால், 'அறவாழி அந்தணர்கள்' அதற்காக அலட்டிக் கொள்ளவில்லை.

ஆற்று வெள்ளத்தில் சிக்கிக் கொண்டவரைக் காப்பாற்றப்போய், நாமும் ஆற்றோடு போய்விடக் கூடாதே என்ற அச்சம் ஆட்டிப் படைத்ததால், மிச்சமிருப்போர் ஆமைகளாக அடங்கிக் கிடந்தனர், ஓட்டுக்குள் உடலைச் சுருக்கிக் கொண்டு!

இப்படியொரு தொகுதி உடன்பாடு - கூட்டணி - வெட்கம்! வெட்கம்!

இந்த விசித்திரமான கூட்டணியின் தலைவர்கள் தான் ஒரே மேடையில் முழங்கப் போகிறார்கள்! ஆம்! வாஜ்பய், ஜெயா இருவரும்!

ஐந்து மாதங்களுக்கு முன்புதான், நவம்பர் 6ஆம் நாள் சட்டப் பேரவைக் கூட்டத்தில் முதல்வர் என்ற நிலையில் ஜெயா பேசும்போது கூட,

> "இனி மத்தியில் காங்கிரஸ் ஆட்சியையோ, பாரதிய ஜனதா கட்சி ஆட்சியையோ - அந்தக் கட்சிகளின் பிரதமர்களையோ வர விட மாட்டோம்"

என்று கர்ச்சனை செய்தது இன்னமும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமா? காவேரிப் பிரச்சினையில் துரோகம் செய்துவிட்ட பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளை, காவேரி டெல்டா விவசாயிகள் விரட்டியடிப்பார்கள் என்று கைகளை உயர்த்தி ஜெயலலிதா சட்டப் பேரவையில் முழங்கியதை எவர்தான் மறக்க முடியும்!

சமீப காலமாக அதாவது இரண்டொரு மாதமாக, ஜெயலலிதா, தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசிவருவதைத்தான் மே 5ந்தேதியும் பேசப் போகிறார்.

மண்ணின் மைந்தர் வாஜ்பய் என்பார் - இந்தியாவை இந்தியரே ஆளவேண்டும் என்பார் - சோனியா காந்தியை கத்துக்குட்டி, அரசியலில் அரை வேக்காடு, பதி பக்தி இல்லாதவர் என்றெல்லாம் பழித்துரைப்பார்! இழித்துரைப்பார்!

ஆனால், இன்று ஜெயாவினால் இழித்துரைக்கப்படும் சோனியா காந்தியை இந்தியாவின் பிரதமராக்கும் முயற்சியில் ஈடுபட்டு, 1999ஆம் ஆண்டு டெல்லிக்கே இதே ஜெயலலிதா செல்லவில்லையா?

டெல்லி விமான நிலையத்தில், செய்தியாளர்கள் "டெல்லியில் சோனியா காந்தியைச் சந்தித்துப் பேசுவீர்களா" என்று கேட்டபோது, "எனது டெல்லி பயணத்தின் முக்கிய நோக்கமே சோனியா காந்தியை சந்திப்பதற்குத்தான். ஆகவே சோனியா காந்தியை நிச்சயமாகச் சந்தித்துப் பேசுவேன்" என்று பதிலளித்தது ஏடுகளில் வெளிவரவில்லையா? (இதோ ஆதாரம்:- தினத்தந்தி, 13-4-1999).

தொடர்ந்து ஜெயலலிதா டெல்லியிலும், சென்னையிலும் அளித்த பேட்டிகளில் சோனியா காந்திதான் பிரதமராக வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டு அச்செய்திகள் பத்திரிகைகளில் இடம்பெறவில்லையா?

17-4-1999 அன்று டெல்லியில் அளித்த பேட்டியில், ஜெயலலிதா, "வாஜ்பய் அரசு கவிழ்ந்தவுடன் காங்கிரஸ் ஆட்சி அமைக்க முடிவு செய்திருப்பதை வரவேற்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக்கு அ.தி.மு.க. ஆதரவு கொடுக்கும். அடுத்த பிரதமர் யார் என்பது பற்றி சோனியா காந்திதான் பதில் அளிக்க வேண்டும்" என்றார்.

மீண்டும் 20-4-99 அன்று அளித்த பேட்டியில் ஜெயலலிதா, "சோனியா காந்தி பிரதமர் ஆவதை அ.தி.மு.க. ஆதரிக்குமா" என்ற கேள்விக்கு, "ஆதரவு கொடுப்பதில் எங்களுக்கு எந்தத் தடையும் இல்லை, அனைத்து எதிர்க்கட்சிகளும் அதை ஆதரிக்க வேண்டும்" என்றார். (20-4-1999, தினத்தந்தி)

23-7-1999 அன்றைய தேதியிட்ட தினமணியில் -

"எங்கள் கூட்டணி வெற்றி பெற்றால் சோனியா காந்திதான் பிரதமர் என்று அறிவிப்பதில் தயக்கமில்லை. பிரதமர் பதவிக்கு யார் வேட்பாளர் என்பதை காங்கிரஸ்தான் சொல்ல வேண்டும். காங்கிரஸ் கட்சி, தனி மெஜாரிட்டி வந்தால் காங்கிரஸ் ஆட்சி அமைப்பது இயல்பு. எங்களைப் பொறுத்த வரையில், நாங்கள் காங்கிரசோடு கூட்டணி அமைத்துள்ளோம், மத்தியில் மக்கள் நலனில் அக்கறை செலுத்தக்கூடிய, சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய, தேசிய பாதுகாப்பை வலுப்படச் செய்ய மதச்சார்பற்ற அரசை ஆதரிப்போம். நானும், சோனியா காந்தியும் கூட்டாகத் தேர்தல் பிரச்சாரம் செய்வோம்"

என்று ஜெயலலிதாவின் பேட்டி வெளிவரவில்லையா?

இப்போது மாத்திரம் சோனியா காந்தி, ஜெயலலிதா கண்ணுக்கு அந்நியராகி விட்டாரா?

வாஜ்பய்தான் மீண்டும் பிரதமராக வரவேண்டுமென்றும், அவர்தான் உத்தமர் என்றும் இன்றைக்கு உரக்கக் குரல் எழுப்பும் இந்த உத்தமி,

அவரை ஊழல் பேர்வழி என்றும், அவரது குடும்பமே ஊழல் பணத்தைப் பங்கிட்டுக் கொண்டது என்றும் பேசியவை இதோ தேதி வாரியாக!

"டெலிகாம் ஊழலில் 3 ஆயிரத்து 800 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஊழலில் பிரதமர் வாஜ்பய் குடும்பத்தினருக்கும், பிரதமர் அலுவலகத்திலே உள்ள சிலருக்கும் பெரும் தொகை கொடுக்கப்பட்டுள்ளது."

(ஜெயலலிதா பேச்சு - தினமலர், 27-7-1999)

★

"இந்திய ராணுவத்துக்கு தரம் குறைந்த ஆயுதங்களை வாங்கியதில் ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளது. இதேபோல் தனியார் தொலைபேசி நிறுவனங்களுக்கு சலுகை அளிக்கும் வகையில், புதிய தொலைத் தொடர்பு கொள்கையை உருவாக்கி அமல் செய்ததின் மூலம் பிரதமர் அலுவலக ஊழியர்களுக்கும், பிரதமர் குடும் பத்தினருக்கும் பெரும் தொகை வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் செலவுக்காக பாரதிய ஜனதா கட்சிக்கு அந்நிறுவனங்கள் பல கோடி ரூபாய் வழங்கியுள்ளன."

(ஜெயலலிதா பேச்சு - தினமணி, 2-9-1999)

★

உடன்பிறப்பே, இவ்வாறு ஜெயலலிதா பா.ஜ.க.வின் ஊழல்கள் எனப் பட்டியலிட்டது மட்டுமல்ல! பா.ஜ.க.வினர் அபாயகரமானவர்கள் என்ற அச்சுறுத்தலும்கூட ஜெயாவின் உபயமாக இருந்தது.

"பதவியில் நீடிப்பதற்காக யாரோடு கூட்டுச் சேரவும், எந்தவித பாதகத்தைச் செய்யவும் பா.ஜ.க. தயாராக இருக்கிறது.

தேச விரோதக் கும்பலோடும், அந்நிய நாட்டு ஆயுத முதலாளிகளோடும் தொடர்புடைய பா.ஜ.க. குறித்தும், அதன் தலைவர்கள் குறித்தும், அதிர்ச்சியூட்டும் தகவல்கள் என்னிடம் உள்ளன. நேரம் வரும்போது நாட்டு மக்களுக்கு அவற்றை வெளிப்படுத்துவேன்."

(தினமணி - 25-5-1999)

- என்று ஜெயலலிதா தன் கைப்பட கட்சித் தொண்டர்களுக்கு எழுதிய மடலில் எச்சரித்தாரே! ஒருவேளை வருகிற மே 5 ஆம் நாள் சென்னை தீவுத் திடல் கூட்டத்தில், வாஜ்பய்க்கு நேராகவே அதே

மேடையில் வெளிப்படுத்துவாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேறிய பிறகும்கூட, அண்மையில் பிரதமர் வாஜ்பய் அவர்கள், "எங்களுடன் கூட்டணியில் இருந்தவரையில் தி.மு.க.வுக்கும், பா.ஜ.க.வுக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு இருந்தது" என்றே பாராட்டியிருக்கிறார்.

ஆனால், ஜெயலலிதா கூட்டணியோடு இருந்த காலத்தைப் பற்றி வாஜ்பய் சொன்னது என்ன?

வாஜ்பய் அவர்களின் பேச்சு, 22-8-1999 தேதியிட்ட தினமணியில் வெளிவந்தது இதோ:-

> "அ.தி.மு.க.வுடன் கூட்டணி இருந்த காலம்தான் எனது அரசியல் வாழ்க்கையிலேயே மிகவும் வேதனையான காலம். அரசைக் கவிழ்க்கப்போவதாக சுதந்திர தினத்திற்கு முந்தைய நாளன்றுகூட அவர் அச்சுறுத்தினார். ஆனால், அவரது பிளாக் மெயில் தந்திரத்திற்கு நாங்கள் அடிபணியவில்லை."

இவ்வாறு வாஜ்பய் அவர்கள் சொன்னதை அவரே மறந்திருந்தால், அதுவும் அவருக்கு ஒரு சோதனை தானே?

திராவிட உணர்வுகள், திராவிடக் கலாச்சாரம் ஆகியவற்றையும், திராவிடத் தலைவர் அண்ணா அவர்களையும் மதிப்பவர் என்று வாஜ்பய் நேற்றையதினம் ஒரு பத்திரிகைக்குப் பேட்டி அளித்தது, படிக்க நன்றாகத்தான் இருக்கிறது.

ஆனால், தமிழை செம்மொழியாக்க வேண்டு மென்றும், மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்க வேண்டுமென்றும் அண்ணாவின் குரல் எழுந்து எத்தனையோ ஆண்டுகள் ஆகியும், அதனை நினைவுபடுத்தி பிரதமர் வாஜ்பய்க்கு நேராக பேசியும், எழுதியும், இறுதியாகப் பல்லாயிரவர் சிறை செல்லும் அளவுக்கு பெரியதோர் மறியல் போராட்டம் நடத்தியும் கூட, இன்னமும் அதற்கு செவிசாய்க்காத நிலையைக் காணும்போது, வாஜ்பய் அவர்கள் திராவிட என்பதும், அண்ணாவைப் புகழ்வதும் தேர்தல் வாக்கு சேகரிப்புக்காகத் தமிழ் மக்களை ஏமாற்றும் வேலைதானா என்று கேட்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

நான் சுட்டிக்காட்டியுள்ள தமிழ்ப் பத்திரிகைப் பேட்டியில், வாஜ்பய் அவர்கள், ஜெயின் கமிஷன் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அவரே சென்னையில் 22-8-1999 தேதியில் பேசிய கூட்டத்தில்,

"ராஜீவ் காந்தி படுகொலையில் தி.மு.க.வுக்கு பங்கு உண்டு என்று குற்றஞ்சாட்டினார்கள். மத்தியில் உள்ள தி.மு.க. மந்திரிகளை பதவி விலக்க வேண்டும் என்றார்கள். ஆனால், ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையில் தி.மு.க. வுக்கு சம்பந்தம் இல்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது"

என்று கூறியிருக்கிறார்.

அவ்வளவு ஏன்? அறிக்கை தயாரித்த நீதிபதி ஜெயின் அவர்களே,

"ராஜீவ் காந்தி கொலை சதி தொடர்பான எனது விசாரணை அறிக்கையில், சந்தேகத்திற்குரியவர்கள் பட்டியலில் தமிழக முதல் அமைச்சர் மு.கருணாநிதியின் பெயரை, நான் ஒரு போதும் குறிப்பிடவில்லை. கருணாநிதியின் பெயரை நான் குறிப்பிடாத நிலையில், மத்திய அரசு எனது அறிக்கையை சரியாகப் படிக்காமல், நடவடிக்கை அறிக்கையை தயார் செய்திருக்கிறது. கருணாநிதியின் மீது சந்தேகப்பட எவ்வித ஆதாரமும் இல்லை"

என்றே குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நிலையில் தி.மு.க., காங்கிரஸ் கூட்டு என்பது சந்தர்ப்பவாத கூட்டு என்று வாஜ்பய் சொல்வாரே யானால் - அவரையும், அவரது பா.ஜ.க.வையும் அந்நிய நாட்டு ஆயுத முதலாளிகளுடன் தொடர்பு படுத்தியதுடன் - ஊழல் சாம்ராஜ்யாதிபதிகளாகவும் சித்திரித்துள்ள ஜெயலலிதாவுடன் பா.ஜ.க. வைத்துள்ள கூட்டணியை நாம் என்ன பெயரிட்டு அழைப்பது?

அன்புள்ள,

மு.க.

4-5-2004

3060. வாஜ்பயும், வாய் நீளம் படைத்த வனிதாமணியும்!

உடன்பிறப்பே,

தேர்தல் பிரச்சாரத்தில் தனிப்பட்டோரைப் பற்றித் தாக்குதல் கூடாது என்று தர்மோபதேசம் புரியும் தயாபரர் –

தர்மத்தின் மொத்த உருவம் –

பிரதமருக்குப் பிரதமர் –

பெரிய மனிதருக்குப் பெரிய மனிதர் –

அடல் பிகாரி வாஜ்பய் முன்னிலையில் – அடடா! எவ்வளவு நாகரிகமாக நடுத்தெரு பாஷையில் – நரகல் நடையழகுடன் – நடுங்கா நாக்கழகராய் நின்று நமது (அய்யோ 'நமது' என்று சொல்லுவதற்கே வெட்கமாக இருக்கிறது) முதலமைச்சர் எதிர்க்கட்சிக் கூட்டணி பற்றி, என்ன அழகாக, எவ்வளவு அமைதியாக, எத்துணை கௌரவமாக விமர்சனம் செய்திருக்கிறார்!

ஜெயலலிதா, திருமதி சோனியா பற்றி செய்த விமர்சனத்தில் சிந்திய ஒரு சில முத்துக்கள் இதோ!

- யார் பிரதமராக வரவேண்டும்? ஆற்றல் மிக்க ஒருவர் இந்திய பிரதமராக வரவேண்டுமா? அரசியல் அரை வேக்காடான ஒருவர் இந்தியப் பிரதமராக வரவேண்டுமா? பழுத்த அனுபவம் உடையவர் பாரதப் பிரதமராக வேண்டுமா? எதுவுமே அறியாத ஒரு கத்துக்குட்டி பாரதப் பிரதமராக வேண்டுமா?

ஆனால் இதே ஜெயலலிதா, 1999ஆம் ஆண்டு வாஜ்பய் அரசு கவிழ்ந்தவுடன், டெல்லியில் 17-4-99 அன்று அளித்த பேட்டியில் "வாஜ்பய் அரசு கவிழ்ந்தவுடன் காங்கிரஸ் ஆட்சி அமைக்க முடிவு செய்திருப்பதை வரவேற்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக்கு அ.தி.மு.க.

ஆதரவு கொடுக்கும். அடுத்த பிரதமர் யார் என்பது பற்றி சோனியா காந்திதான் பதில் அளிக்க வேண்டும்" என்று கூறியவர்தான்.

அதுமாத்திரமல்ல, "எங்கள் கூட்டணி வெற்றி பெற்றால் சோனியா காந்திதான் பிரதமர் என்று அறிவிப்பதில் தயக்கமில்லை. அனைத்து எதிர்க்கட்சிகளும் இதை ஆதரிக்க வேண்டும். எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் காங்கிரசோடு கூட்டணி அமைத்துள்ளோம். நானும், சோனியா காந்தியும் கூட்டாகத் தேர்தல் பிரச்சாரம் செய்வோம்" என்று சொன்னவரும் இதே ஜெயலலிதாதான்.

பிரதமர் முன்னிலையில் ஜெயலலிதா செய்த அர்ச்சனை இத்துடன் நிற்கவில்லை. இதோ மற்றொன்று.

- ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சந்தர்ப்பவாதம் பெற்றெடுத்த சைத்தானாகவே இருக்கும். (சைத்தான் கூட்டணி என்று "சகோதரி" சொன்னதை "சகோதரர்" வாஜ்பய் ரசித்துக் கொண்டிருந்தார்)
- மத்திய அரசில் அங்கம் வகித்த தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்கள் வாஜ்பாய் அவர்களைச் சந்தித்து, தமிழகத்தின் பிரச் சினைகளை எடுத்துச் சொல்லி தமிழகத்திற்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டிருந்தால் நிச்சயமாக பிரதமர் வாஜ்பாய் அந்த உதவிகளைச் செய்திருப்பார்.

உடன்பிறப்பே, மத்திய அரசிடம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தால், பிரதமர் வாஜ்பய் உடனடியாகச் செய்திருப்பார் என்று அவரது தாராள மனதைப் பற்றி ஏராளமாகப் புகழ்ந்திருக்கின்ற இதே ஜெயலலிதா, இதே பிரதமர் வாஜ்பயைப் பற்றி 2-8-1999 அன்று பேசியது என்ன? ஜெயலலிதாவின் நேற்றைய பேச்சை வெளியிட்ட அதே தினத் தந்தி 2-8-99 அன்று வெளியிட்ட ஜெயலலிதாவின் பேச்சு இதோ :-

> "நம் கோரிக்கை எதுவுமே பாரதிய ஜனதாவின் காதில் விழவில்லை. ஒட்டு மொத்தமாக நமக்குத் துரோகம்

செய் தார்கள். அவர்களுக்கு நாட்டு நலனிலும் அக்கறை இல்லை, பொறுப்பு இல்லை என்பதைத்தான் கடந்த 13 மாத ஆட்சி நிரூபித்துக் காட்டியுள்ளது. எத்தனையோ நல்ல கருத்துகளைச் சொன்னோம். பாரதிய ஜனதாவின் செவிட்டுக் காதில் அவை விழவில்லை. வெட்டி முறிக்கப்பட வேண்டிய மரம் பாரதிய ஜனதா. நமது தயவில் மஞ்சள் குளியல் நடத்தியவர்கள் நமது கோரிக்கைகளை ஏற்க மறுத்தது என்ன நியாயம்? பாரதிய ஜனதா விஷ விருட்சம். அந்தத் தீய சக்தியை வீட்டுக்கும், காட்டுக்கும் அனுப்ப வேண்டும்."

★

உடன்பிறப்பே, பா.ஜ.க. அரசிடமும், வாஜ்பய் அவர்களிடமும் ஜெயலலிதா தமிழகத்திற்காக வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்று ஜெயலலிதா பேசிய பேச்சுகளிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். அடுத்து ஜெயலலிதா, தி.மு.க. சார்பில் மத்திய அரசிடம் எந்தக் கோரிக்கையையும் வைக்கவில்லை என்றும், அப்படி வைத்திருந்தால் வாஜ்பய் நிறைவேற்றியிருப்பார் என்றும் தீவுத் திடலில் முழங்கியிருக்கிறார். அதுவாவது உண்மையா?

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றக்கோரி பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு, 8-5-2002 அன்று நான்கு பக்கங்கள் கொண்ட நீண்ட கடிதம் எழுதியிருக்கிறேன். மீண்டும் 15-10-2002 அன்று பிரதமருக்கு அதுபற்றி நினைவூட்டி ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். ரயில்வே துறையில் சில மாற்றங்கள் செய்வது குறித்து, 27-1-2003 அன்று மத்திய ரயில்வே அமைச்சருக்கே கடிதம் எழுதியிருக்கிறேன். அகில இந்திய அளவில் லாரிகள் வேலை நிறுத்தம் நடை பெற்றபோது, 15-4-2003 அன்று பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். தமிழ் மொழியை செம்மொழியாக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து, 22-4-2003 அன்று பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அரசு அலுவலர், ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் குறித்து, 7-7-2003 அன்றும், 17-7-2003 அன்றும் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். 5-7-2002 அன்று தமிழக டெல்டா

பகுதி மக்கள் படும் வேதனைகளைச் சுட்டிக்காட்டி, காவேரி ஆணையக் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டு மென்று பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். மேலும் முரசொலி மாறன் உடல்நிலையைக் காண்பதற்காக மருத்துவமனைக்கு பிரதமர் வாஜ்பய் வந்தபோது, நேரிலும் அதுபற்றி அவரிடம் பேசியிருக் கிறேன். வெளிநாடுகளில் வதைபட்ட தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கோரி, 9-12-2003 அன்று பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். நிரந்தரமாக அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்றே கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

இவ்வளவையும் ஜெயலலிதா மறைத்துவிட்டு, வாஜ்பய் முன்னிலையில் பேசியிருப்பது அவரது வாய்மைக்கு (?) உதாரணமாகவே திகழ்கிறது அல்லவா?

மேலும் பிரதமர் வாஜ்பய் முன்னிலையில், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியிலே உள்ள கட்சிகளின் தலைவர்களைப் பற்றி ஜெயலலிதாவின் வசைபுராணம் இதோ தொடருகிறது, பாருங்கள்.

★ தமிழகத்திற்கு துரோகம் செய்வதையே தொழிலாகக் கொண்ட கருணாநிதி.

★ ஜாதி வெறியர் டாக்டர் ராமதாஸ்.

★ தண்டமாக தமிழகத்தில் ம.தி.மு.க. என்ற பெயரில் கட்சியை நடத்திக் கொண்டிருக்கும் வாய்ச் சவடால் வைகோ.

★ தடம் புரண்டு பேசும் தத்துவ பச்சோந்திகளாகிய கம்யூனிஸ்டுகள்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கண்ணியமாகப் பேசவேண்டும், தரக் குறைவாகப் பேசக் கூடாது, தனிப்பட்ட முறையிலே தாக்கிப் பேசக் கூடாது என்றெல்லாம் முதன் முதலில் உபதேசம் செய்த பிரதமர் வாஜ்பய் அவர்களை மேடையில் வைத்துக் கொண்டு, அவரது கூட்டணியிலே உள்ள ஒரு கட்சியின் தலைவி பேசிய இந்த வார்த்தைகளையெல்லாம் அவர் அருகே அமர்ந்து திரு. இல. கணேசன் மொழிபெயர்ப்பு செய்திட

அதனை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார் வாஜ்பய். அத்தனையையும் கேட்டு விட்டுத்தான் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைப் பார்த்து, சந்தர்ப்பவாதக் கூட்டணி என்று அவரும் விமர்சித்துள்ளார்.

பிரதமர் முன்னிலையில், ஜெயலலிதா தலைக்கனம் கொண்டு பிதற்றியுள்ள இந்தச் சொற்றொடர்களுக்கு, கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள், தங்கள் நெஞ்சில் எழும் கொந்தளிப்பை அடக்கிக் கொண்டு, மே 10 அன்று வாக்குச் சீட்டுகள் வாயிலாக பதில் அளித்து வாஜ்பய்க்கும் - வாய் நீளம் படைத்த வனிதாமணிக்கும் பாடம் கற்றுத் தரத் தயாராக வேண்டாமா?

அன்புள்ள,

மு.க.

7-5-2004

3061. "சாடிஸ்ட்" ஆட்சிக்கு; மேலும் சான்றுகள்!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் 14வது நாடாளுமன்றத் தேர்தல் நேற்றையதினம் நடைபெற்று முடிந்திருக்கின்றது. ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் ம.தி.மு.க. வேட்பாளர் சிப்பிப்பாறை ரவிச்சந்திரன் அ.தி.மு.க. அமைச்சர் ஒருவரால் ஐந்து ரவுண்ட் சுடப்பட்டு நூலிழையில் உயிர் தப்பியிருக்கிறார். ஆனால், அ.தி.மு.க. அரசும், ஆளுங்கட்சியினரும் முழுப் பூசணிக்காயை இலைச்சோற்றிலே மறைக்க முயற்சிப்பது போல, பழியினை எதிர்க்கட்சியினர் மீது சுமத்த முயற்சி செய்கிறார்கள். எதிர்க்கட்சியினரைத் தாக்கி விட்டு, தாங்கள் குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, தங்கள் உடம்பிலும் சிறு காயங்களை ஏற்படுத்திக் கொண்டு, எதிர்த் தரப்பினர் காவல் நிலையத்தில் புகார் தருவதற்கு முன்பே தாக்கியவர்கள் தாங்களே முந்திக் கொண்டு புகார் செய்வதும், அதற்கு அனுசரணையாகக் காவல்துறையினர் அந்தப் புகாரைப் பதிவு செய்வதும், தங்களுக்கு வேண்டிய ஏடுகளில் காவல்துறை மேலதிகாரிகளைக் கொண்டு கதை ஜோடித்து வெளியிடுவதும் புதிதாக நடைபெறும் சம்பவங்கள் அல்ல என்பதை சாதாரண பொதுமக்கள்கூட அறிவார்கள். அதே கதைதான் சிவகாசி சம்பவத்திலும் நடைபெற்றுள்ளது.

பொதுவாக அமைச்சர்கள், தேர்தல் நாளன்று தொகுதிக்குள் சென்று பணியாற்றுவது என்பது மரபு மீறலாகும். தேர்தலுக்கு முந்தைய நாள் வரை அங்கே தேர்தல் பணியாற்றி விட்டு, தேர்தல் நாளன்று தொகுதிக்குள் அமைச்சர்கள் தங்கிடாமல் தலை நகருக்குத் திரும்பி விடுவதுதான் கடந்த காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நடைமுறையாகும். அதற்கு மாறாக, சிவகாசியில் ஆளுங்கட்சி அமைச்சர் தொகுதிக்குள் சென்று, ம.தி.மு.க. வேட்பாளரை நோக்கிச் சுட்டதற்கு வெங்கடாசலபுரம் கிராம மக்களே சாட்சியாக இருந்திருக்கிறார்கள். அந்த வன்முறை வெறியாட்டமே மற்றொரு மறுக்க முடியாத சாட்சியாகவும் விளங்குகிறது.

ஆனால், ஆளுங்கட்சி தரப்பிலே உள்ளவர்களும், சம்பவம் நடந்த போது அந்தத் தொகுதியிலே இல்லாத ஓ. பன்னீர்செல்வம் என்ற அமைச்சரும் பாதுகாவலர் வானத்தை நோக்கிச் சுட்டதாக ஒரு அறிக்கையினை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தச் செய்தி உண்மையாக இருக்கும் பட்சத்தில், வானத்தை நோக்கி சுடப்பட்டிருக்குமேயானால், ம.தி.மு.க. வேட்பாளர் ரவிச்சந்திரன் காரிலே துப்பாக்கி குண்டு துளைத்திருப்பதை அ.தி.மு.க.விற்கு ஆதரவான "தினமலர்" ஏடே புகைப்படம் எடுத்து வெளியிட்டிருப்பது எப்படி சாத்தியமாகும்? இதிலிருந்து துப்பாக்கியால் சுட்டக் குற்றத்தை விட, அதை மறைக்க முயற்சி செய்து, பாதுகாவலர், வானத்தை நோக்கிச் சுட்டார் என்று பொய் கூற முயன்றுள்ள குற்றத்தையும் ஆளுங்கட்சியினர் செய்தவர்களாகிறார்கள். பாதுகாவலர் வானத்தை நோக்கிச் சுட்டது எப்படி ம.தி.மு.க. வேட்பாளரின் காரைத் துளைத்திருக்க முடியும்? அது என்ன வானில் பறக்கும் காரா? "பொய் சொன்னாலும், பொருத்தமாகச் சொல்லுங்கடா போக்கத்த பசங்களா" என்று உடுமலைக் கவிராயர் பாடினாரே! அதைப் போலத்தான் இருக்கின்றது ஆளுங்கட்சியினரின் கட்டுக் கதை!

அது மாத்திரமல்ல. இதுவரை நடைபெற்ற எந்தத் தேர்தலிலும் இல்லாத அளவிற்கு பல ஆயிரக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. கடந்த தேர்தல் வரை தொடர்ந்து வாக்களித்தவர்களின் பெயர்கள் எல்லாம் இந்தத் தேர்தலில் நீக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டினைத் தேர்தல் அறிவித்த நாளிலிருந்து எதிர்க்கட்சிகள் அனைத்தும் எடுத்துக் கூறி, தேர்தல் ஆணையத்திற்கும் அதைப் புகார் மனுக்களாக எழுதி, தேர்தல் ஆணையம் அதனையேற்று சில நடவடிக்கைகளை மேற்கொண்டது அனைவரும் அறிந்த ஒன்றுதான். அ.தி.மு.க. ஆட்சியினரின் இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தக் காரணங்களுக்காக மாற்றமே செய்யப்பட்டது அலட்சியப்படுத்தக் கூடிய ஒன்றல்ல.

ஆனால் தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, இடையிலே இருந்த நாட்கள் அதிகம் இல்லை என்பதால், நீக்கப்பட்ட அத்தனை வாக்காளர்களின் பெயர்களையும் அறிந்து புகார் செய்திட இயலவில்லை. இந்தப் புகார் குறித்து நேற்றைய தினம் வாக்களிக்க வந்த தமிழக முதல் அமைச்சரிடமே வரிசையிலே நின்ற பொதுமக்கள் புகார் கூறிய போது, வாக்காளர் பட்டியல் நீக்கத்திற்கு

தேர்தல் ஆணையம்தான் பொறுப்பு என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறியதோடு மட்டுமல்லாமல், செய்தியாளர்களிடமும் அதையே கூறி வாக்காளர் பட்டியல் தயாரிப்பு தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வராது என்றும் சொல்லியிருக்கிறார்.

ஆனால், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் இந்தக் குற்றச்சாட்டினைத் தலைமைத் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு நேற்று கொண்டு சென்ற போது, தலைமைத் தேர்தல் ஆணையத் துணை கமிஷனர், திரு. ஏ.என். ஜா அவர்கள் அளித்த பேட்டியில், "தமிழக வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விடுபட்டிருப்பது உள்ளிட்ட குறைபாடுகள் 90 சதவிகிதம் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில்தான் நடந்திருக்கின்றன. இதன் காரணமாகத்தான் திருவள்ளூர் கலெக்டரை தலைமைத் தேர்தல் கமிஷன் இடமாற்றம் செய்து உத்தரவிட்டது. இந்தக் குறைபாடுகளுக்குத் தமிழக அரசு அதிகாரிகள்தான் முழு பொறுப்பு" என்று திட்டவட்டமாகப் பதில் கூறியிருக்கிறார்.

தலைமைத் தேர்தல் ஆணையம் மாத்திரமல்ல, தமிழகத்திலே உள்ள தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரியான திரு. மிருத்யுஞ்சய் சாரங்கி, ஐ.ஏ.எஸ்., அவர்கள், நேற்றையதினம் அளித்த பேட்டியில், "சென்னையில் பெரும் அளவில் வாக்காளர் பெயர்கள் நீக்கப்பட்டிருப்பதாக எனக்கும் புகார்கள் வந்துள்ளன. தலைமைத் தேர்தல் அலுவலகத்துக்கும் இது தொடர்பாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளன. இதற்கு முந்தைய தேர்தலில் பெயர் நீக்கம் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக புகார்கள் தெரிவிக்கப்படும். ஆனால், இத்தேர்தலில் ஏராளமான புகார்கள் வந்திருப்பது உண்மைதான். இது மிகவும் வருந்தத்தக்கது. வாக்காளர் பெயர் நீக்கத்துக்கு மாவட்ட தேர்தல் அதிகாரிகளே காரணம். மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள்தான் வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணிகளை மேற்கொண்டனர்" என்று முதல்வர் கூற்றுக்கு நெற்றியடி கொடுப்பது போலத் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றார்.

மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் எல்லாம் தமிழக அரசின் அதாவது ஜெயலலிதாவின் கட்டுப்பாட்டிலே உள்ளவர்கள்தான். அதற்கு பொறுப்பேற்க வேண்டிய கடமை தமிழக அரசுக்குத்தான் உண்டு. எனவே, வாக்காளர் பட்டியலில்

ஏற்பட்ட இவ்வளவு குளறுபடிக்கும் பொறுப்பேற்க வேண்டியது தமிழக அரசும், முதலமைச்சர் ஜெயலலிதாவும்தான்.

குறிப்பாக, வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களின் பட்டியலைப் பார்த்தால் அரசு அலுவலர்களின் பெயர்கள், இஸ்லாமிய, கிறித்தவ சகோதரர்களின் பெயர்கள் அதிகமாக இருப்பதைச் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும். இவர்கள் எல்லாம் அ.தி.மு.க.விற்கு எதிராக இந்தத் தேர்தலில் வாக்களிப்பார்கள் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டுதான் அவர்களின் வாக்குகள் நீக்கப்பட்டுள்ளன.

இதிலே தங்கள் மீது பழியில்லை என்பதைக் காட்டிக் கொள்வதற்காக, வேண்டுமென்றே அமைச்சர் பொன்னையன் பெயர் கூட வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதாக ஒரு ஏற்பாட்டினை செய்து, அதனை செய்தியாக்கியிருக்கிறார்கள்.

தன்னுடைய பெயரை தானே அகற்றிவிட்டு, அப்பாவி மக்களை ஏமாற்றுவதற்காக, என்னுடைய பெயரே வாக்காளர் பட்டியலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது என்ற கதையை ஜோடித்து ஊரை ஏமாற்றுகின்ற செயலில் ஈடுபட்டுள்ளார்கள். அமைச்சரின் பெயர் வாக்காளர் பட்டியலிலே இருக்கிறதா இல்லையா என்பதை அவரது உதவியாளர்கள் முன்கூட்டியே பார்த்துச் சொல்லாமலா இருந்திருப்பார்கள்? எனவே அ.தி.மு.க. அரசும், அமைச்சர்களும், முதலமைச்சரும் எந்த அளவிற்கு இந்தத் தேர்தலில் முறைகேடாக நடந்திருக்கிறார்கள் என்பதை இந்த நிகழ்ச்சிகளே தெளிவாக விளக்கும்.

வேண்டுமென்றே திட்டமிட்டு சில முக்கிய பிரமுகர்களின் பெயர்களையும் பட்டியலில் இருந்து நீக்கிப் "பாவலா" காட்டிவிட்டு, இடுக்கிலே கடுக்கன் கழற்றிய கதையாக பல்லாயிரக்கணக்கான வாக்குகள், எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவானவைகளை அகற்றி, இது "சாடிஸ்ட்" ஆட்சி என்பதற்கு மற்றொரு சான்று காட்டியிருக்கிறார்கள்.

அன்புள்ள,

மு.க.

12-5-2004

3062. சகல'மான'வர்களுக்கும் நன்றி!

உடன்பிறப்பே,

"நீ இருக்கும்போதா? உன் நெஞ்சில்

நான் இருக்கும்போதா?"

'காஞ்சித் தலைவன்' திரைப்படத்தில் இப்படி ஒரு வசனம் எழுதியிருந்தேன். காஞ்சி மன்னன் தனது தளபதியுடன் உரையாடும்போது உதிர்த்திடும் வாசகம் இது. வஞ்சக வலைவிரித்து வாதாபி மன்னன் காஞ்சியை வென்று தன் கைக்குள் போட்டுக் கொள்ளத் திட்டம் தீட்டியபோது; அந்த நிலையில் போரைத் தவிர்த்திடத் தளபதி பரஞ்சோதி யோசனை கூறி; "ஆராயாமல் ஆபத்தில் சிக்கிக் கொள்ளக் கூடாது அரசே!" என்பான்.

உடனே காஞ்சித் தலைவன் நரசிம்மவர்மன் சொல்வான்; "ஆபத்தா? நீ இருக்கும்போதா? உன் நெஞ்சில் நான் இருக்கும்போதா? அச்சம் தவிர்!" என்று!

இந்த உரையாடல் இப்போது என் நினைவுக்கு வந்தது ஏன் என்பதை நீ இந்நேரம் புரிந்து கொண்டிருப்பாயே!

நாடாளுமன்றத் தேர்தலுக்காக, புதிய கூட்டணி உருவாக்கப்பட வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டபோது, பழைய கூட்டணியின் தலைவர்கள் சிலரின் பரிசுத்தமான நட்புக்கும் மீறிய கொள்கைப் பற்றும் - ஈரோடு தந்த இயல்பான சுயமரியாதை உணர்வும்தான் - எனக்கும் உனக்கும் துணிவைத் தந்து தொடங்கினோம் புதிய கூட்டணியை! ஆம், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியை!

செய்தி; செந்தேனாக இனிப்பதாக பெரியவர் சுர்ஜித்தும், பெருமாட்டி சோனியா காந்தியும், பிரியத்துக்குரிய நண்பர் பரதனும் டெல்லியிலிருந்தே வாழ்த்தினர். நேரில் வந்தும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இன்று என்னவோ எல்லாம் வெற்றிகரமாக முடிந்து விட்டது. ஆனால் அன்று; இந்த

முயற்சியில் நாம் ஈடுபடும்போது இந்த இயக்கத்தின் தளகர்த்தனாய், பெரும்படையின் பெரு வீரனாய், எனக்குத் தம்பியாய், தங்கையாய், பொதுவில் சகோதரனாய் என்னுடனிருந்து பணி தொடங்கிய உன் போன்றார்க்கு; தொடங்கிய போதும் - பின்னர் தொடர்ந்து இயங்கிய போதும் - மலையளவு நம்பிக்கை மனதில் தோன்றிட வில்லை. மாறாக, தினையளவு அச்சமும் விதையாகி வேரூன்றியதை நானறிவேன். தினையளவுதானே என அலட்சியப்படுத்திட முடியுமா? தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதை தெண்ணீர்க் கயத்துட் சிறு மீன் சினையினும் நுண்ணிதே ஆயினும்; அணி தேர்ப் புரவி ஆட்பெரும் படையினர்க்கு நிழல் தரும் மரமாவதுபோல்; இந்த அச்சம் அர்த்தமுடையதாகி, அரசின் அதிகார பலம், அரசு நடத்துவோரின்

ஐஸ்வர்ய பலம், அடியாட்கள் பலம் அனைத்தும் கொண்ட ஆலகாலவிருட்சமாக விரிவடைந்தால் என் செய்வது; எப்படி வெல்வது? இயக்கத்தின் அடிப்படைக்கே ஆபத்தாகி விடுமே?

இந்த அச்சம் உன் போன்றோர் உள்ளத்தை தொட்டதை நான் அறியாமல் இல்லை, அப்போதுதான் நினைத்துக் கொண்டேன்,

“ஆபத்தா? நீ இருக்கும்போதா?

உன் நெஞ்சில் நானிருக்கும்போது?

உடன்பிறப்பே,

உன் நெஞ்சில் நானிருக்கிறேனோ இல்லையோ; என் நெஞ்சில் நிச்சயம் நீ இருக்கிறாய்! உன்னையும் இணைத்து என் நெஞ்சில் வைத்திருப்பதால் - உன் நெஞ்சிலும் நானிருப்பதாகவே கற்பனை - செய்து கொள்கிறேன்; ஓர் ஆறுதலுக்காக! நான் பெற்றிடும் பேறுகளில் இது ஒன்றே பெரும் பேறாக இருப்பதால்

நானிருக்கிறேன்; என் நெஞ்சில்

நிரந்தரமாக நீயிருக்கிறாய்!

நானும் நீயும் தொண்டாற்றும் இந்த இயக்கத்துக்கும் - நம்முடன் தோழமை பூண்டு கூட்டணியாகச் செயல்படும் இயக்கங்களுக்கும் தேர்தல் நேரமாயினும் - கூட்டுப் போராட்டக்

காலமாயினும் - தினையின் நுனியளவும் - வேறுபாடு காட்டாமல் ஒன்றுபட்டு ஒரே குறிக்கோளுடன் வெற்றிகளை வரலாறு காணாத அளவுக்குக் குவிப்பதிலே வியப்பென்ன இருக்க முடியும்!"

அந்த வெற்றிகளின் இமய முகட்டைத்தான் இதோ காண்கிறோம்

நாற்பதில் நின்றோம், நாற்பதிலும் வென்றோம்

நாடு இதுவரை கண்டிராத வரலாறு படைத்துள்ளோம்!

இந்த வரலாற்றின் ஒவ்வொரு பக்கமும் -

அந்தப் பக்கங்களின் ஒவ்வொருவாக்கியம் -

அந்த வாக்கியத்தின் ஒவ்வொரு வார்த்தையும் -

அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் -

ஓய்வின்றி உழைத்திட்ட நமது கூட்டணிச் செயல் வீரர்களாம் நமது உடன்பிறப்புகளின் வியர்வைத்துளிகள் அல்லவா!

அனைத்துப் பிரிவு மக்களின் அல்லல் - அவதி!!

அவர்கள் சந்தித்த அடக்குமுறை- அராஜகம்!

எள்ளல்! எதேச்சாதிகாரத் துள்ளல்!

எல்லாவற்றையும் சமாளித்து,

சாதாரண, சாமானிய, நடுத்தர மக்கள் படைத்திட்ட சரித்திரமல்லவா,

நாடாளுமன்றத் தேர்தல் முழு வெற்றி; மூளியில்லாத வெற்றி என்ற இந்தச் சாதனை!

இந்தச் சாதனைக்குக் காரணமான சகல'மான'வர்களுக்கும்

நன்றி!

நன்றி!

நன்றி!

அன்புள்ள,

மு.க.

15-05-2004

3063. பிறந்த நாளில் நான் விடுக்கும் வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

இன்று மே 30ஆம் நாள்.

இன்னும் மூன்று நாட்களுக்குப் பிறகு ஜூன் 3ஆம் நாள்;

நான் பிறந்த நாள்.

அன்றையதினம் இந்த உலகில் நான் மட்டுமா பிறந்தேன். எத்தனையோ ஆயிரம் பேர், லட்சம் பேர் பிறந்திருப்பார்கள். அவர்களின் இல்லங்களில் தாய், தந்தை, தமையன், தம்பி, தங்கை, அக்காள், மனைவி, மக்கள் என்று உற்றார், உறவினர், சுற்றத்தார் என ஐந்து அல்லது பத்துப் பேர் அடங்கிய குடும்பத்தினர் அந்தப் பிறந்த நாட்களைக் கொண்டாடி மகிழ்வர்.

எனக்கோ உன் போன்ற லட்சக்கணக்கான உடன்பிறப்புகள், உற்றார், பெற்றோர், உடன்பிறவாச் சகோதரர் என்ற அளவில் இருக்கிறீர்கள், பிறந்த நாள் கொண்டாட.

அவ்வளவு பெரிய குடும்பம் இது. எப்போதும் ஓடிக் கொண்டிருக்கிற ஜீவநதி! இந்த நதியின் கங்குகரைகளில் செங்கழுநீர்ப் பூக்கள் மலர்ந்திருப்பதும், அவை இந்த நதிக்கே பேரழகைப் பெருமையுடன் சேர்ப்பதும், மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அது போர்த்து நடந்தாய் வாழி என நாவலன் இளங்கோவடிகள் நாவார மனமாரப் போற்றுவதும், அந் நதிக்குற்ற சிறப்பு என்பது போல், நம் ஜீவநதியாம் இந்த இயக்கத்திற்குற்ற சிறப்பன்றோ! அதனால் தானே ஆடையென அடர்த்தியாக மிதந்து வந்து காலச் சுழலில் காணாமற் போய் விடும் மலர்களை நினைந்து நினைந்து கவலையுறுகிறோம் நாம் எனினும், அந்த மணிப்பூக்கள் ஆடைகளாக இந்த ஜீவநதிக்கு அமைந்து அழகூட்டியதை மறக்காமல் நமது மனக்கண்கள் பனித் துளிகளை வெளிப்படுத்துவதைக் கண நேரமும் ஒத்திவைத்ததில்லையே!

இந்த ஜீவநதியில் மிதந்து கொண்டிருக்கும் மணிப்பூ ஆடையில் ஓர் இதழ்தானே நான் - இந்த இதழை வாரி அணைத்து வகையாகச் சுருட்டிக் கொள்ள, எந்த இடத்தில், எந்தச் சுழல் எப்போது காத்திருக்குமோ! அதற்குள் இந்த இதழ் ஆற்றிட வேண்டிய கடமைகள் நிறைவு பெறுமா? அல்லது நிதானமாகுமா?

ஆனால் ஒரு நம்பிக்கை எனக்கு! "மணிப்பூ ஆடையது போர்த்து" என்ற அழகு தமிழ்ச் சொற்றொடர் இளங்கோவின் சிலப்பதிகாரத்தில் நினைக்கப்படும் வரையில், நினைக்கப்படுகிற இயக்க மலர்களில் ஒன்றாக நானும் நினைக்கப்படுவேன் என்பதுதான் அந்த நம்பிக்கை!

முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை, நான் ஆற்ற வேண்டிய கடமைகளுக்கு எனினும், குற்றப்புள்ளி வைக்கப்படாதவை அக்கடமைகள் எனத் தலை நிமிர்ந்து கூறுவேன்.

உடன்பிறப்பே, இந்தப் பிறந்த நாட்களில் நான் களைப்புறும் அளவுக்கு என்னைக் களிப்பில் ஆழ்த்துவாய் -

மலையெனக் குவிப்பாய் மாலைகளை -

என் கரங்கள் உன் முத்தங்களால் நனையும் -

ஆயிரம் ஆண்டு வாழ்க என அன்புடன் 'சாபம்' கொடுப்பாய் -

பன்னீர் தெளிப்பாய் -

பழங்களை நிறைப்பாய் -

மகிழ்வேன் நான் - அதை மறுக்கவில்லை! ஆனாலும் அந்த மகிழ்ச்சியினூடே மறைமுகமாக ஒரு சோக இழை என் மனத்தில் ஓடிக்கொண்டு தானிருக்கும்.

எத்தனை பேருக்குப் பிறந்த நாள் எதுவெனத் தெரிந்தும் அதனைக் கொண்டாட முடியாத நிலை - ஏன்! அதனைப் பிறரிடம் கூறவே முடியாத நிலை - வயதைச் சொல்லக் கூடாது என்பதற்காக அல்ல! வாழ்க்கையே அவர்களுக்கு வறண்ட பாலை என்கிற நிலையில், வையத்தில் வந்துதித்த நாளைப் பற்றியா அவர்களுக்குக் கவலை?

ஆனால் எனக்கு அவர்களைப் பற்றிய பெருங் கவலை - இந்தக் கவலை எல்லோர்க்கும் பிறந்தால், எல்லோர்க்கும் பிறந்த நாள் சிறந்த நாளாகவே அமையுமல்லவா? அந்நிலை நோக்கி

இவ்வையம் வளம்பெற விரைந்திட வேண்டுமென்ற குறிக் கோளை இந்த என் பிறந்த நாளில் கூர்மைப்படுத்துகிறேன்.

என் பிறந்த நாளையொட்டி எதிர்பார்த்த பெரு வெற்றி கிடைத்திருக்கிறது. பிரிந்து பிரிந்து பிணக்கு கொண்டு வாழ்ந்திடும் மதங்கள் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கம் காண, மதச் சார்பற்ற அரசு மத்தியிலும், மத நல்லிணக்க மனித நேய உணர்வு மக்களிடையிலும் அமைந்து, நம் அகமகிழ்வை மலரச் செய்து மணக்கச் செய்திருக்கிறது.

மக்களாட்சியின் மாண்பு கொழித்திடும்வண்ணம் "ஐக்கிய முற்போக்குக் கூட்டணி" அனைத்திந்திய அளவிலும், அதற்கு அடிப்படைத் தொடக்கமாக "ஜனநாயக முற்போக்குக் கூட்டணி" தமிழகத்திலும் வெற்றி மேல் வெற்றியெனப் பெற்று வீறு கொண்டு எழுந்துள்ளன.

இந்த எழுச்சியின் விளைவு எத்தகைய எதேச்சாதிகாரம் எத்துறை வாயிலாகத் தலைகாட்டினாலும் அதனைத் தடுத்து வென்றிட மட்டுமல்ல, "தமிழ் செம்மொழி"யெனும் கோரிக்கையில் நாம் பெற்றுள்ள ஆரம்ப வெற்றியினைப் போல, தகவு நிறை நம் தேவைகள் அனைத்திலும் முழு வெற்றி பெற தந்தை பெரியார் வழியில், நம்மைத் தம்பியராய்க் கொண்ட அண்ணா வழியில் தொடர் நடைப் பயணத்தை நிறுத்தாமல் தொடர்ந்து நடத்துவோம். இதுவே என் பிறந்த நாளில் நான் விடுக்கும் வேண்டுகோள் செய்தி!

அன்புள்ள,

மு.க.

31-5-2004

3064. ஓராயிரம்; லட்சம்; ஒரு கோடி நன்றி!

உடன்பிறப்பே,

பல்வேறு முற்போக்குச் சட்டங்களும், திட்டங்களும் நிறைவேற்றப்படுமெனச் சுட்டிக்காட்டி நெஞ்சினிக்கப் பல செய்திகளைத் தரும் குடியரசுத் தலைவர் உரையில், எட்டாவது அட்டவணை மொழிகளை மத்திய ஆட்சி மொழிகளாக்கிட ஆய்வு நடக்குமென்பதுடன், "தமிழ், செம்மொழியாக அறிவிக்கப்படும்" என்ற தேன் தோய்த்த பலாச் சுளைச் செய்தியும் கூறப்பட்டுள்ளது. இச்செய்தி கேட்டு இங்குள்ள தமிழர் மட்டுமன்றி, கடல் கடந்து வாழ் தமிழர்களும் ஆடிப்பாடி அகமகிழ்ந்து வாழ்த்தொலி முழங்குகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம், தனது தொடக்கக் காலம் முதல் இந்திய ஆட்சி மொழி பிரச்சினையில் அரசியல் சட்டத்தின் 8வது அட்டவணையில் இருக்கின்ற மொழிகளை மத்திய ஆட்சி மொழிகளாக ஆக்குங்கள் என்பதை வலியுறுத்தி வந்திருக்கின்றது.

அதற்கு முன்பே, 1965ஆம் ஆண்டு மாநிலங்களவையில் நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் மத்தியில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டு மென்பதை வலியுறுத்திப் பேசியது வருமாறு:-

"மிகத் தொன்மையான மொழியான தமிழைத் தாய் மொழியாக நான் பெற்றிருக்கிறேன் என்பதை நான் மறந்து விட முடியாது. எனது முன்னோர்கள் பேசிய அந்த மொழி - எமது கவிஞர்கள் அரும் பெரும் அறிவுரைகளையும், தத்துவங்களையும் யாத்துக் கொடுத்த அந்த மொழி - அள்ள, அள்ளக் குறையாத அறிவுக் களஞ்சியங்களும், காவியங்களும், இலக்கியங்களும் நிறைந்த அந்த மொழி - அதுதான் எமது தமிழ் மொழி - அம்மொழி இந்தியாவின்

ஆட்சி மொழிகளில் ஒன்றாக உரிய இடத்தைப் பெறும்வரை, நான் ஒரு போதும் திருப்தியடைய மாட்டேன். அநீதி இழைக்கப்படாமல் இருப்பதற்காக என்னுடைய மொழியாகிய தமிழ்மொழியை ஆட்சி மொழி ஆக்குக. அதுவரையில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கட்டும். உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ், என் தாய்மொழி என்ற பெருமிதம் எனக்கு இருக்கிறது. அந்தத் தமிழ் மொழி மற்ற எந்த மொழிக்கும் தாழாத வகையில், ஆட்சி மொழி என்ற தகுதி தரப்படும்வரை நான் அமைதி பெற மாட்டேன்."

இவ்வாறு அண்ணா அவர்கள் முழங்கியதையும், 1996இல் திருச்சி மாநில மாநாட்டில் தம்பி முரசொலி மாறன் முன்மொழிந்து, பொதுச் செயலாளர் பேராசிரியர் வழி மொழிந்த "தமிழையும் இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்குக" என்ற தலைப்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் பின்பற்றி, கழக ஆட்சியில் நான் முதல்வராக இருந்தபோது, பிரதமராக இருந்த திரு. வாஜ்பய் அவர்களுக்கு,

3-3-2000 அன்று எழுதிய கடிதத்தில்,

"தமிழையும், ஏனைய மொழிகளையும் இந்தி மற்றும் ஆங்கிலத்துடன் ஆட்சி மொழிகளாக ஆக்குவதற்கு ஏற்ற வகையில், அரசியல் சட்டத்தில் மத்திய அரசு இன்னும் திருத்தம் செய்யவில்லை என்ற மனக்குறை தமிழக அரசுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் உண்டு. தமிழக மக்களின் இந்த உண்மையான உணர்வுகளை நீங்கள் நிச்சயம் புரிந்து கொள்வீர்கள். எனவே நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றக் கூடிய வகையில், இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற் கொள்ள வேண்டுகிறேன்"

என்று கேட்டுக் கொண்டேன்.

அதற்கு முன்பும், அதற்குப் பின்பும் எழுதப்பட்ட பல கடிதங்களுக்குச் சாதகமான பதில் எதுவும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசிடமிருந்து நமக்கு கிடைத்தபாடில்லை.

கழகத்தின் இந்த முக்கியமான மொழிக் கோரிக்கையை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பது செப்டம்பர் 2003இல் விழுப்புரம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அறப்போராட்ட தீர்மானங்களில் ஒன்றாகும். அதே தீர்மானத்தில் தமிழ்மொழியை மத்திய அரசு செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தக் கோரிக்கையும் பல ஆண்டு காலமாக தமிழ் மக்கள் சார்பாக தி.மு.கழகத்தின் வாயிலாக கூறப்பட்டு வருகின்றது.

ஒரு மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட எத்தனை தகுதிப்பாடு தேவை என்பது குறித்தும், அவை அத்தனையும் பொருந்திய மொழி தமிழ் என்பது குறித்தும், மாநாட்டிலேயே நான் தெளிவாக விளக்கி உரையாற்றியிருக்கிறேன்.

உலகத்திலே உள்ள முக்கியமான மொழிகள் என்று எடுத்துக் கொண்டால், சுமார் 600 மொழிகள் இருக்கின்றன. அதிலே இலக்கிய, இலக்கணம் உடைய மொழிகள் சுமார் 300. இதிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடைய மொழிகள் ஆறு. அவை தமிழ், சீனம், சமஸ்கிருதம், லத்தீன், ஹிப்ரூ, கிரீக். இதிலே லத்தீனும், ஹிப்ரூவும் செத்துப்போன மொழிகள். இஸ்ரேல் அரசாங்கம் ஹிப்ரூவுக்கு உயிரூட்டும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. கிரீக் மொழி தற்போது புது வாழ்வு பெற்று வருகிறது. சமஸ்கிருதத்துக்கு என்றுமே பேச்சு வழக்கு இருந்ததில்லை, எழுத்து வழக்கு மட்டுமே.

தி.மு.கழக ஆட்சியில் இதுகுறித்து கருத்து அறிவிக்க திருவாளர்கள் அகத்தியலிங்கம், வ.செ. குழந்தைசாமி, பொற்கோ, ஜான் சாமுவேல், மணவை முஸ்தபா ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் கருத்துரையைப் பெற்று, அது மத்திய அரசுக்கும் அனுப்பப்பட்டது. மத்திய அரசு, அந்தக் கருத்துரையை மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திற்கு அனுப்பியது. அந்த நடுவண் நிறுவனம் தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்கலாம் என்ற பரிந்துரையுடன், அந்தக் கருத்துரையை மத்திய அரசுக்கு அனுப்பியது.

1998இல் சென்னைப் பல்கலைக் கழகமும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகமும், கழக ஆட்சிக் காலத்தில், தமிழ்,

செவ்வியல் மொழி என்று தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். இன்னும் சொல்லப் போனால், 1918ஆம் ஆண்டில் சென்னையில் சைவ சித்தாந்த மகா சமாஜம் நடத்திய மாநாட்டிலேயே தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கரந்தை தமிழ்ச் சங்கம், 1919லும், 1920லும் இதேபோன்ற தீர்மானங்களை நிறைவேற்றியது.

கடந்த 2003ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் நாளன்று தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளின் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய பிரதமர் வாஜ்பய் அவர்களைச் சந்தித்து தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று கோரி மனு கொடுத்தனர்.

நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதும், எதிர்க்கட்சியிலே இருக்கின்றபோதும் தமிழைச் செம்மொழி என அறிவிக்க வேண்டுமென்பதற்காக, அன்றைய பிரதமர் வாஜ்பய் அவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியிருக்கின்றேன்.

தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்ச் சான்றோர்கள், புலவர் பெருமக்கள் டெல்லியில், 2003ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18ஆம் நாள் நாடாளுமன்றம் முன்பாக தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்கக் கோரி, பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். டெல்லியில் நடந்த அந்த உண்ணா விரதத்தை தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் ஆதரித்துள்ளன. நாடாளுமன்றத்தில் ஆகஸ்ட் திங்களில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்பட்டபோது பேசிய மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலு, இந்தக் கோரிக்கை குறித்து வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

தமிழ் செவ்வியல் மொழியாக ஆக்கப்படுவதால் தமிழகத்திற்கு என்னென்ன பயன்கள் ஏற்படும் என்பதையும் விளக்கிட விரும்புகிறேன்.

* மத்திய அரசு, தமிழைச் செம்மொழி என்று அறிவித்தால், உடனடியாக இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழு அதனை ஏற்கும். அதன்பின் அனைத்து இந்தியப் பல்கலைக் கழகங்களிலும்

தமிழ்த் துறை தனித் துறைகளாக உருவாகும். தமிழ் மொழி, தமிழகக் கலை, இலக்கிய ஆய்வுகள் முனைப்பாக நடைபெறும்.

* இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழு தமிழைச் செம்மொழியாக ஏற்றால், உலகப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் அதை ஏற்கும்.

* தமிழ் மொழிக்கும், தமிழர்க்கும் உலக அளவில் தன்மதிப்பு உயரும்.

* பன்னாட்டு மொழிக் கலைக் களஞ்சியங்களில் - தமிழ் இலக்கியங்கள், கட்டுரைகள், வரலாறு, பண்பாட்டுக் கருத்துகள் இடம் பெறும்.

* பல்கலைக்கழகங்களில் தற்போது தமிழ் மொழி கீழ்த்திசை மொழி என்று கருதப்படுகிறது. இந்நிலை மாறி இந்தியப் பல்கலைக் கழகங்களிலும், உலகப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் மொழிக்குத் தனி இருக்கை நிறுவப்பெறும். அத்துறைகள் தனித்தன்மையுடன் செயற்பட வாய்ப்பு ஏற்படும்.

* சமஸ்கிருதத்திற்கு இந்திய அரசு, நேரடியாக 40 கோடி ரூபாயும், அரசு சார்பு நிறுவனங்கள் வாயிலாக 100 கோடி ரூபாயும் ஒதுக்கி, அந்த மொழியின் வளர்ச்சிக்கு உதவி வருவது போல், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் உதவி கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

* தமிழ்நாட்டிலும், இந்திய நாட்டிலும் பரந்து விரிந்து கிடக்கும் கல்வெட்டாய்வு, ஓலைச்சுவடி ஆய்வுகள் சமஸ்கிருதத்தை மையப்படுத்தியே ஆராயப்படுகின்றன. இந்த நிலையில் தமிழ் மொழியை மையப்படுத்தி உண்மையான வரலாற்று பண்பாட்டுக் கருத்துகள் வெளிவர முடியும்.

* அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு வேக மூட்டும் வகையில், மேலும் பல திட்டங்கள் வகுத்துச் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

* இந்திய மொழிகளில் மட்டும் அல்லாது ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளில் தமிழ் இலக்கியங்களும், நவீன படைப்புகளும் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் பரவும்.

எனவே, தமிழுக்கும், தமிழர்க்கும் எழுச்சி மிகுந்த - ஏற்றம் நிறைந்த - எதிர்காலம் அமைவதற்கு இன்றைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சார்பில், குடியரசுத் தலைவர் உரையில் கொடி உயர்த்தப்பட்டிருப்பதற்கு உடன்பிறப்பே! உன் சார்பிலும், உலகத் தமிழர் சார்பிலும் நன்றி! நன்றி! ஓராயிரம்; லட்சம்; ஒரு கோடி நன்றி!

அன்புள்ள,

மு.க.

9-6-2004

3065. முன்மாதிரி என்பது நன்மாதிரியின் பிரதிபலிப்பா? துன்மாதிரியின் நிழற்படமா?

உடன்பிறப்பே,

நல்லவைகள் முன்மாதிரிகளாக இருந்தால், அவற்றைப் பின்பற்றி நடக்கலாம். நல்லவை அல்லாதவை முன்மாதிரிகளாக இருந்தால், "முன்னரே நடந்ததுதானே, இப்போது திருப்பி நடத்தினால் என்னவென்று கேட்டு, அவற்றை நாமும் பின்பற்றுவது நாகரிகமும் ஆகாது, நல்லோர் போற்றும் ஜனநாயக முறைக்கு ஏற்றதும் ஆகாது" என்ற கருத்தை அண்மையில்கூட என் பெயர்த்தி - மு.க.ஸ்டாலின் மகள் செந்தாமரை - சபரீசன் திருமண விழாவில் நான் குறிப்பிட்டது உனக்கு நினைவிருக்கும்.

விரிவான விவாதங்கள் - கடுமையான கண்டனங்கள் - காரசாரமான குற்றச்சாட்டுகள் என அனல் பறக்கலாம், ஆட்சி மன்ற அவைக் களங்களில் - அதனை யாரும் ஜனநாயக விரோதச் செயல் எனக் கூறிட மாட்டார்கள்.

ஆனால், ஆளுங்கட்சியைச் செயல்பட விடாமல் எதிர்க் கட்சி கலாம் விளைவிப்பதும், "உனக்கு நான் இளைத்தவனா?" என்று ஆளுங்கட்சியினர் முண்டா தட்டுவதும் - இந்த விரும்பத் தகாத நிலைமைகளால், விபரீத நிகழ்வுகள் விளைவதும் - பிரச்சினைகளை விவாதித்து முடிவெடுக்க வேண்டிய அவைக் களம், அமர்க்களமாக மாறி விடுவதால் வாக்களித்த மக்களின் வாழ்வுடன் தொடர்புடைய பிரச்சினைகள் நாதியற்றுப் போய் விடுகிற காட்சியை மட்டுமே காண நேரிடுகிறது.

உடன்பிறப்பே! நாடாளுமன்ற அவைகளிலும் - நகராளும் மன்றங்களிலும் - ஊராளும் மன்றங்களிலும் - மக்கள் பிரதிநிதிகள் என்பதை மறந்து விட்டு, மல்யுத்தம் புரிய ஆயத்தமாவோர் யாராயினும், அவர்கள் மன்னிக்கப்பட முடியாதவர்களேயாவார்கள்.

தொடர்ந்து - ஓரிரு நாள் உஷ்ணம் அதிகமாகி, குமுறிக் கொண்டிருந்த எரிமலை வெடித்துச் சிதறலாம். அதைக்கூட இயற்கையென எண்ணிடலாம் எனினும், அதுவே அனுதினமும் வாடிக்கையாக நடைபெறுமானால் - வாழ்வதற்கே அந்த வட்டாரம் தகுதியற்றது என முடிவு செய்து வெகு தொலைவு சென்று விடுவதுதானே அங்குள்ள ஜனங்கள் தப்புவதற்கு வழி என்கிறபோது, ஜனநாயகம் தப்பிப் பிழைப்பதற்கும் அதுதானே வழியாகிறது!

இன்று மத்தியில் நமது தி.மு.கழகமும் பங்கேற்றுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி நடக்கிறது. இந்த ஆட்சியில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் நடக்கவொட்டாமல் பாரதிய ஜனதா தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணியினர் அன்றாடம் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். அதனால் அன்றாடம் அவை ஒத்தி வைக்கப்படுகிறது. மக்கள் பிரச்சினைகள், நாட்டுக்கான நிர்வாக நடவடிக்கைகள் எல்லாமே பார்ப்போரும், கேட்போருமற்ற ஊனமுற்ற அனாதைகள் போல் ஆகி விடுகின்றன என்பதற்காக மட்டும் நான் இந்தக் கருத்தையும், கவலையையும் தெரிவிக்கவில்லை.

இதே நிலை, முன்பு பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடை பெற்ற போதும், எதிர்க்கட்சிக் கூட்டணியினரால் இரண்டு அவைகளிலும் உருவாக்கப்பட்டதை நான் மறந்துவிடவில்லை. அதைக் கண்டித்து என் கருத்தை எடுத்தியம்ப அப்போதே தவறவும் இல்லை.

“ஐக்கிய முன்னணி செயலாக்கக் குழுவிலிருந்து, ஊழல் குற்றச்சாட்டுக்காக லல்லு பிரசாத் யாதவ் அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று முக்கிய கட்சிகள் முழக்கமிட்டபோது, குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்படாத நிலையில், அவரை ஐக்கிய முன்னணியிலிருந்து விலக்கத் தேவையில்லை” என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறேன்.

அன்று கழகம் எடுத்த அதே நிலையைத்தான் அதன் பிறகு வாஜ்பய் தலைமையில் இருந்த அரசு, “ஆயுதபேர ஊழல் என்பதற்காக பதவி விலக வேண்டும்” என்று எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பிய போதும் எடுத்தது என்பதை நினைவூட்டுகிறேன். “ஊழல் நடந்ததா? இல்லையா? அதற்கு ஆதாரம் இருக்கிறதா?

எந்த அடிப்படையில் இந்தக் குற்றச்சாட்டு? இவைகளைப் பற்றியெல்லாம் விவாதிப்பதற்கு அவையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமேயல்லாமல், கூச்சல் குழப்பம் என்ற ஆயுதங்களைக் கொண்டு ஓர் ஆட்சியை இயங்க முடியாமல் தடுத்தால், பிறகு ஜனநாயகம் கேலிக் கூத்தாகி விடும். இந்த முறைகளே முன்மாதிரி ஆகிவிடும்." (முரசொலி - கலைஞர் பதில் - 27.3.2001)

என்று என் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறேன்.

ஊழல் நடைபெற்றதா? இல்லையா? என்பதல்ல! அதனை உரிய முறையில் விவாதித்து வெளிப்படுத்த வேண்டும் - ஜனநாயக முறையில் முடிவெடுக்க வழி வகுக்க வேண்டும் - நீதிமன்ற தீர்ப்புக்காகக் காத்திருக்க வேண்டும் - அன்று வாஜ்பய் ஆட்சிக்காக நான் வைத்த அதே வாதத்தைத்தான் இப்போதும் நமது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்காகவும் வைக்கிறேன்.

"அப்போது-இப்போது" என்பதுகூட அல்ல! "எப்போதுமே" நல்லவைகளல்லாத முன் மாதிரிகளை பின்பற்றக் கூடாது என்பதே என் வாதம். என் திடமான கருத்து.

"ஆம்! வாஜ்பய் பிரதமராக இருந்தபோது அவையில் கூச்சல் குழப்பத்தால்,

அவை நடவடிக்கைகள் முடக்கப்படவில்லையா?" என்ற கேள்வி, வாதத்திற்கு சரியாக இருக்கலாம்.

ஆனால் வாக்களித்த மக்கள்,

மாறி மாறி வரும்

இந்தக் கூச்சல் குழப்பங்களுக்கு,

"முன் மாதிரி உண்டு"

என்பதற்காக

பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

மக்களவை நடைபெறுகிறதென்றால், அதற்கென ஒரு நாள் செலவு ஏறத்தாழ ஒண்ணே கால் கோடி ரூபாய் ஆகிறது எனக் கணக்கிடப்படுகிறது. கடந்த நான்கு நாட்களில் மட்டும் நடக்கத் தேவையில்லாத கலவரக் கூச்சலால் பயனின்றிப் பாழ்பட்ட

தொகை ஐந்து கோடி ரூபாய் என்று பத்திரிகைகள் தலைப்புக் கட்டியுள்ளன.

யாருடைய பணம்? தங்கள் தொகுதிக்காக வாதிடுவார் என நம்பி, ஒருவரைத் தேர்ந்தெடுத்து, ஆட்சி மன்றத்துக்கு அனுப்பி வைக்கும் அப்பாவி வாக்காளர்களின் வரிப் பணமல்லவா? ஆனால் அந்த உறுப்பினர், அங்கு சென்று "வஸ்தாது" வேலையில் அல்லவா வல்லவராக மாறவேண்டியிருக்கிறது.

எனவே முன்பு நடந்தவற்றையும் அப்போதே கண்டித்தவன் என்ற உரிமையுடன், இப்போது நடப்பவற்றையும் கண்டிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

முன்மாதிரி என்பது நன்மாதிரியை பிரதிபலிக்க வேண்டுமே தவிர, துன்மாதிரியின் நிழற்படமாகக் கூடாது.

அடல்பிகாரி வாஜ்பய் போன்ற அறிவாற்றலும், அடக்கப் பண்பும் கொண்ட பா.ஜ.க. பெருந்தலைவர்களும் பாரதத்தில் வரும் பீஷ்மர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்ளாமல், விதுரர்களாக விடுபட்டு வந்து வினையாற்றிட வேண்டுமென்பதே ஜனநாயக முறையில் நாட்டம் கொண்டுள்ள நடுநிலையாளர்கள் அனைவரின் விருப்பமும் ஆகும்.

ஆர்ப்பாட்ட அரசியலைக் கட்டோடு விரும்பாத மனித நேயர் மன்மோகன் சிங் அவர்களும், "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல, தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை" எனும் குறளுக்கு இலக்கணமாய்த் திகழும் காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களும், மக்களவை நாட்டு மக்களுக்கான அவையாக விளங்கிட அமைதியை நிலைநாட்டி, அற்புதமான விவாதங்களுக்கும் அருமையான சட்டதிட்டங்கள் உருவாவதற்கும் வழி வகுப்பதற்கு தயாராக இருக்கும்போது, போகாத வழிதனிலே யாரும் போகத் தேவையில்லை என்பதே வாக்களித்த கோடானு கோடிப் பொதுமக்களின் கருத்தாகும்.

அன்புள்ள,

மு.க.

12-6-2004

3066. அரசியல் புரட்சியுடன் அறிவுப்புரட்சியும் தொடர...!

உடன்பிறப்பே,

அறிவுக்கதிர், ஒளிவெள்ளம் பாய்ச்சும் போதெல்லாம் அதையும் மீறிக் கொண்டு இருளின் ரேகைகள் இந்தச் சமுதாயத்தில் ஊடுருவிக் கொண்டுதானிருக்கின்றன.

ஏமாறுவதற்கென்று அப்பாவிகளின் கூட்டம் பெருகிடுவதும், ஏமாற்றிப் பிழைக்கும் எத்தர்கள் கடவுளின் பெயரால், அந்த அப்பாவிகளின் அறியாமையைப் பயன்படுத்திக் கொள்வதும் காலம் காலமாக சமுதாயத்தைக் குட்டிச் சுவராக்கும் காரியமாகச் சுழன்று கொண்டுதானிருக்கிறது.

எத்தனை எத்தனை சாமியார்களிடம், மந்திர தந்திர வாதிகளிடம் பாமர மக்கள், பைத்தியக்காரத்தனமாகத் தங்கள் அறிவைப் பறிகொடுத்திருக்கிறார்கள், அதற்குப் பிறகாவது தங்கள் அறிவை அடகு வைக்காமல் விழிப்புற்று; மூடநம்பிக்கைச் செயல்களை விட்டுத் தங்களை விடுவித்துக் கொண்டார்களா?

இல்லை! இல்லவே இல்லை! சர்வ வல்லமை படைத்த சாமியாரிலிருந்து, சாராயங்குடிக்கும் சாமியார் வரையில் பார்த்தவர்கள், அவர்கள் வெறும் ஏமாற்றுப் பேர்வழிகள் என அறிந்த பிறகும் - அடுத்து அவதரிக்கிற "டெலிபோன்" சாமியாரைச் சுற்றிப் பத்து நாளாவது பயபக்தியுடன் அலையத்தான் செய்கிறார்கள்.

ஒரு சாமியார், பிரார்த்தனைக்கு வரும் பெண்களைச் சவுக்கால் அடித்துப் புரட்டி எடுத்துப் பின்னர் அருள் பாலிப்பதையும் - ஒரு சாமியார் வரம் கேட்டு வருவோர் தலையில் எல்லாம் தேங்காய் உடைப்பதையும் - ஒரு சாமியார் வெட்டப்பட்ட ஆடுமாடுகளின் ரத்தத்தை அப்படியே உறிஞ்சிக் குடித்துவிட்டு, அதுவும்

போதாமல், மதுவையும் அருந்தியவாறு மந்திரம் ஜெபிப்பதையும் சில தொலைக்காட்சிகளில் பார்த்தபோது பகுத்தறிவாளர்கள் பதைத்துப் போயினர்.

ஏதுமறியாத பாமரரின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஈடுகொடுத்து, இத்தகைய மூடச்செயல்களை எதிர்ப்போர்கூட, என்ன காரணத்தினாலோ 'நமக்கேன் வம்பு' என்று ஒதுங்கிப் போய்விடுவதால், எத்தர்களின் கை சில நேரங்களில் ஓங்கி விடுவதைக் காண முடிகிறது!

காவி, கமண்டலம், கையில் சூலம், மந்திரம், மாயம், யாகம், யோகம் போன்ற தந்திரப் பேச்சுக்களில் மயங்கி, காசு பணம் மட்டுமின்றி, கற்பையும் பறிகொடுத்தனர் என்று எத்தனை எத்தனை நிகழ்வுகள்.

இதில் வேதனையான வேடிக்கை என்னவென்றால், எந்த ஆட்சியானாலும், அந்த ஆட்சியின் காவல்துறையினர் சிலர் இதுபோன்ற சாமிகளின் நடமாட்டத்தை ஆரம்பத்திலேயே கவனித்து, கண்காணித்து, கட்டுப்படுத்தாதது மட்டுமல்ல! அவர்களே அந்தச் சாமியார்களின் பக்தகோடிகளாகின்ற பரிதாபத்தையும் காணவேண்டியிருக்கிறது. பின்னர் சாதாரண சாமான்ய மக்கள் அவர்களைப் பின்பற்றுவதில் வியப்பென்ன இருக்க முடியும்!

இதோ, இன்றைய ஏடுகளில் ஒரு செய்தி - ஊரை ஏமாற்றிக் கொண்டிருந்த ஒரு சாமி, கடைசியில் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்ட நிகழ்ச்சி!

"திண்டுக்கல் மாவட்டம் கொடை ரோடு பக்கம் உள்ள ஜெகநாதபுரத்தை சேர்ந்தவர் கண்ணன். இவரது மகன் ஆனந்தசாமி (வயது 22). இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் உள்ள பால தண்டாயுதபாணி சுவாமி கோவிலுக்கு வந்தார்.

காவி உடை அணிந்த அவர் கோவில் பகுதியிலேயே தங்கினார். பக்தர்களுக்கு விபூதி, குங்குமம் கொடுத்து ஆசி வழங்கத் தொடங்கினார். பக்தர்கள் ஏராளமானோர் ஆசிபெறத் தொடங்கினார்கள்.

கோவிலின் முன்பு பூமியில் தோண்டப்பட்ட குழிக்குள் அமர்ந்து 3 முறை தவம் செய்துள்ளார். தோண்டப்பட்ட பள்ளத்திற்குள் ஆனந்தசாமி இறங்கியதும், மேல் பகுதியை பலகையால் மூடி விடுவார்கள். அதன் மேல் மண்ணை போட்டு மூடுவார்கள். 3 முறையும் ஒவ்வொரு நாள், இவ்வாறு குழிக்குள் இறங்கி தவம் இருந்து பூஜை செய்து மேலே வந்து இருக்கிறார்.

கோவிலுக்கு வரும் பக்தர்கள் கூட்டமும் அதிகரித்தது. இந்த நிலையில் வைகாசி விசாக திருவிழாவை யொட்டி திருவிழா கூட்டம் அதிகமாக இருந்தது.

அதனால் தனிமையான இடத்திற்கு சென்று தவம் மேற்கொள்ள நினைத்தார். அதன்படி வாடிப்பட்டி அருகே உள்ள குட்லாடம்பட்டி அருவி பகுதிக்கு சென்றார்.

அங்குள்ள ஒரு ஆசிரமம் அருகே குடிசை அமைத்து தங்கினார். அங்கு 3 நாட்கள் மூடிய குழிக்குள் உட்கார்ந்து தவம் இருக்க திட்டமிட்டார். அதற்காக அங்கு பள்ளம் தோண்டப்பட்டது. அந்தக் குழியில் 4 பக்கமும் சுற்றி செங்கல்லால் சுவர் கட்டப்பட்டு பள்ளம் தயாரானது.

ஏராளமான பக்தர்கள் முன்னிலையில், கடந்த வெள்ளிக்கிழமை (11ஆம் தேதி) மாலையில் ஆனந்தசாமி தவம் இருக்க குழிக்குள் இறங்கினார். அதன்பின் குழியின் மேல் பகுதியை பலகை வைத்து மண்ணால் மூடினார்கள்.

ஆனந்தசாமி குழிக்குள் இறங்கும் முன்பு, தவம் முடிந்து ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு குழியை விட்டு மேலே வருவேன் என்று அங்கிருந்த பக்தர்களிடம் கூறிச் சென்றார்.

2 நாட்களாக தவம் இருந்த குழியைச் சுற்றி தீ வைத்து எரித்துக் கொண்டு இருந்தார்கள். தவம் முடிந்து ஆனந்த சாமி மேலே வருவதைக் காண காலை முதல் பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கினார்கள்.

காலை 10 மணிக்கும் மேல் ஆகியும் அவர் வெளியே வரவில்லை. எதிர்பார்த்துக் காத்திருந்தவர்கள் சில மணி நேரம் பொறுத்து இருந்து பார்த்தனர். அவர் வெளியே வருவதற்கான அறிகுறி தெரியவில்லை. இதனால் பதற்றம் அடைந்தனர்.

சந்தேகம் அடைந்து மண்ணை அகற்றி பலகைகளை அப்புறப்படுத்தினார்கள். குழிக்குள் ஆனந்தசாமி தலையை குனிந்து கவிழ்ந்த நிலையில் இருந்தார். அதை பார்த்து பக்தர்கள் குரல் கொடுத்தனர். ஆனாலும் எந்தவிதச் சலனமும் இல்லை.

அப்போதுதான் தெரிந்தது தவம் இருந்த ஆனந்தசாமி குழிக்குள்ளேயே பிணமாகி விட்டார் என்பது. அவர் இறந்ததை அறிந்து அதிர்ச்சி அடைந்தனர்.

தவம் இருந்து சாதனை புரிய முயன்ற சாமியார், சமாதியாகி விட்டாரே என்று கண்ணீர் சிந்தினார்கள்.

தகவல் அறிந்ததும் போலீசார் சம்பவ இடம் சென்று ஆனந்தசாமியின் உடலைக் கைப்பற்றி விசாரணை நடத்தினார்கள். இது குறித்து வழக்குப் பதிவு செய்துள்ளனர்.”

இது ஏடுகளில் வந்துள்ள செய்தி! இனி வழக்குப் பதிவு செய்தால் என்ன? செய்யாவிட்டால் என்ன? ஆழ்குழிக்குள் வைத்து மூடப்பட்ட ஆனந்தசாமியார் ஆகாயத்தில் தோன்றி அனைவருக்கும் அசரீரியில் ஆசி கூறப்போகிறாரா என்ன?

உடன்பிறப்பே, அந்தச் சாமியார் படமும் ஏடுகளில் வெளிவந்துள்ளது - அவரைப் புதைத்துப் பலகை போட்டு மூடுகின்றவர்களின் படங்களும் அதே ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. காவல்துறை என்ன நடவடிக்கை, எந்த சட்டப் பிரிவில், யார் மீது எடுக்குமோ நமக்குத் தெரியாது.

எந்த நடவடிக்கை எடுத்தாலும், அது மூடத்தனத்தின் முடை நாற்றம், இனி எந்தவொரு மூலையிலும் இந்தச் சமுதாயத்தில் வீசக்கூடாது என்ற கண்டிப்பான முடிவுடன் அமையவேண்டும்.

தவத்தின் சக்தியைக் காட்டுகிறேன் என்று, சாவில் தடுமாறி விழுந்து, தன்னைத்தானே சமாதியாக்கிக் கொண்ட, ஆனந்தசாமியார்கள், நம் அனுதாபத்திற்குரியவர்கள் மட்டுமல்ல - அறிவு வளர்ச்சிப் பாதையில் குறுக்குச் சுவர்களாகவும் கருதப்பட வேண்டியவர்கள்.

உடன்பிறப்பே, அரசியல் மாற்றத்திற்காக மாத்திரமல்லாமல், சமுதாய மாற்றத்திற்காகவும், பெரியார் தொடங்கிய அறிவுப் புரட்சி தொடர்ந்திடவும் - அந்தப் புரட்சி அண்ணாவின் அமைதி வழியில் வெற்றி பெற்றிடவும் அயராது ஆற்ற வேண்டிய பணி நமக்காகக் காத்திருக்கிறது என்பதை மட்டும் மறந்துவிடக்கூடாது.

அன்புள்ள,

மு.க.

15-6-2004

3067. தேவை ; நல்லெண்ணமும், நடுவர் மன்றத் தீர்ப்பும்!

உடன்பிறப்பே,

என் பிறந்த நாள் ஜூன் 3 அன்று முன்னாள் பிரதமரும், சமூக நீதிக் காவலருமான திரு. வி.பி. சிங் அவர்கள் முன்னிலையில், மத்திய அமைச்சர்கள் மற்றும் தமிழ்நாடு ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் மழை பொழிந்தாற்போல் என் மீது வாழ்த்து மலர்கள் தூவி, பாராட்டுப் பன்னீர்த் துளிகளைத் தெளித்தபோது, தீவுத் திடலில் பல்லாயிரக்கணக்கில் வீற்றிருந்த உன் போன்ற உடன்பிறப்புகள், நாடாளுமன்றத் தேர்தலில் நமது அணி, நாற்பது தொகுதிகளிலும் அமோக வெற்றி பெற்றது குறித்துத்தான் உரையாற்றுவேன் என்று எதிர்பார்த்திருக்கக் கூடும்.

குஜராத் மோடிகளும், கோட்டை ராணிகளும் நேரு குடும்பத்தின் மருமகள் சோனியாகாந்தியை நேருக்கு நேர் வம்பிழுத்து, "கத்துக்குட்டி", "அரசியல் அரை வேக்காடு", "பதிபக்தியில்லாதவர்", "குமாஸ்தா வேலைக்குக் கூட லாயக்கற்றவர்" என்றெல்லாம் கூட்டத்திற்குக் கூட்டம் கொக்கரித்தார்களே! அந்தக் கொக்கரிப்புகள் என்ன ஆயின - குப்பை மேட்டுக்கல்லவா போயின என்றெல்லாம் அந்த நாளில் நான் பேசுவேன் - இனி எம்மை யாரும் அசைக்க முடியாது என விரலை உயர்த்தி விண்ணைக் காட்டிக் கோடையிடியென முழங்குவேன் - வெற்றிகள் நம்மைத் தொடரும் என வெறியாட்டச் சிரிப்பு சிரிப்பேன் என்றெல்லாம் யாராவது எதிர்பார்த்திருந்தால் அது என்னைச் சரியாக அறிந்து கொள்ளாதவர்களின் அவசர ஆசை,அற்ப ஆவல் என்பதை மட்டும் நான் அழுத்தம் திருத்தமாகக் கூறுவேன்.

அதனால்தான் அன்றைக்கு என் பேச்சு வெற்றிக் களிப்பில் ஓங்கி உயர்ந்து சுழலும் பளபளப்பான வாளாக இல்லாமல், நமது மக்களுக்காக ஆற்றிட வேண்டிய கடமைகளை உணர்த்தும்

நிலையிலும், உணர்ந்ததை உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய நினைவிலும் அமைந்த ஒன்றாயிற்று.

பூ விரித்தாற் போல சிரித்த உன் சிரிப்பு என்னைக் கவர்ந்த அந்த வேளையிலும், காவிரித் தாயின் கருணை இந்த ஆண்டிலாவது கிட்டுமா? நமது கவலையின் ஓலம் கர்நாடகத்தின் காதுகளுக்கு எட்டுமா? நடுவணரசு தலையிட்டுப் பிரச்சினையைத் தீர்க்குமென்ற நம்பிக்கை பழுக்குமா?

இந்த விழைவுகளும், விழுதுகளும் ஆழம் ஆழமாக என் இதயத்தில் இறங்கிக்கொண்டேயிருந்ததின் விளைவுதான், பிறந்த நாள் முத்து விழாவில் நான் பேசிய அந்தப் பேச்சு.

காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சட்ட ரீதியான வழிவகுக்கும் முகப்பு வாயிற் கதவு திறந்தது என்பது போல, வி.பி.சிங் அவர்களின் நல்லெண்ணத்தின் துணையால் நடுவர் மன்றம் - அந்த மன்றம் அமைந்தும் கூட அதன் வாயிலாகப் பெறக்கூடிய முழுமையான ஆதாயத்தைத் தமிழக விவசாயிகள் பெற முடியாத தவிப்பு இன்னமும் தொடர்கிறதே என்ற கவலைதான் அன்றைக்கு என் பேச்சு முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்டது என்பதை அனைவரும் அறிவர். அந்தப் பேச்சின் ஒரு பகுதி வருமாறு :-

> "ஜூன் 12ஆம் தேதி வரப்போகிறது. தஞ்சை விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்குமா கிடைக்காதா என்று தெரியவில்லை. நடுவர் மன்றம் இருக்கின்றது. ஆனால், நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு இன்னும் வரவில்லை. இடைக் காலத் தீர்ப்பையே நடைமுறைப்படுத்த முடியாத நிலையிலே இருக்கிறோம். எனவே என்னுடைய பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டத்தில், நான் வி.பி. சிங் அவர்கள் அன்று நடந்து காட்டியதை எடுத்துக்காட்டி, அவர்கள் ஆரம்பித்ததை நல்ல முறையில் நிறைவேற்றுகின்ற வகையில், மத்திய அரசு, கர்நாடகத்தில் இருக்கின்ற மாநில அரசோடு கலந்து பேசி, அவர்களும் சட்டத்திற்கு உட்பட வேண்டும், தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதை அவர்களுக்கும் எடுத்துச் சொல்லி, அவர்களும் இணங்கி வந்து, எங்களைப் பொறுத்தவரையில் கர்நாடக

விவசாயிகளைப் பட்டினி போட்டு, தமிழக விவசாயிகள் மாத்திரம் வாழவேண்டுமென்ற நிலை எடுப்பவர்கள் அல்ல. இரண்டு மாநில விவசாயிகளும் நல்வாழ்வு வாழ வேண்டும், இரண்டு மாநில விவசாயிகளுக்கும் எந்தக் கேடுபாடும் வரக் கூடாது என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை அணுக மத்தியிலே வீற்றிருக்கின்ற பிரதமர் அவர்களும், அந்தப் பிரதமரின் கட்சிக்குத் தலைமை வகிக்கின்ற அன்புக்குரிய திருமதி சோனியா காந்தி அவர்களும் முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை இந்தப் பிறந்த நாள் விழாச் செய்தியாக, பிறந்த நாள் விழா வேண்டுகோளாக இத்தனை பேர் சாட்சியாக நான் முன்வைக்கிறேன்."

முன்பு இருந்த பிரதமர் வாஜ்பய் அவர்களிடமும் இந்த வேண்டுகோளை வைத்தேன். முதலமைச்சராக இருந்துகொண்டும் வைத்தேன். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டும் வைத்தேன். ஆனால் காவேரி ஆணையத்தையே ஒப்புக் கொள்ளாமல், அதனைப் பழித்துக் கொண்டிருந்தவர்களின் முழு ஒத்துழைப்பைப் பிரதமர் வாஜ்பய் அவர்களால் பெற முடியவில்லை. கர்நாடக அரசைக் கலைப்போம் என்று தமிழகச் சட்டசபையில் முழங்குவதுதான் நமது முதலமைச்சரின் அண்டை மாநிலத்துடனான அணுகுமுறையாக இருந்தது.

தம்பி முரசொலி மாறன் உடல்நிலையை விசாரிக்க பிரதமர் வாஜ்பய் சென்னை மருத்துவமனைக்கு வந்த போதுகூட, அவரிடம் நான் உடனடியாக காவேரி ஆணையத்தைக் கூட்டுமாறு கேட்டுக் கொண்டது அனைவரும் அறிந்தது! ஆனால் அப்போது பிரதமர் சென்னைக்கு வருவது தெரிந்தும், தமிழ்நாடு முதலமைச்சர் ஊட்டிக்குச் சென்று விட்டு, அங்கிருந்து மைசூர் சாமுண்டீஸ்வரி கோயிலுக்குச் சென்றதும், வாஜ்பயின் வருகை மட்டுமல்ல; வாடிய பயிர் கண்டு வாடிப்போன விவசாயிகளின் வாழ்வு புறக் கணிக்கப்பட்டதும் கேட்டு நல்லோர் வயிறு எரிந்தது!

உடன்பிறப்பே, ஜூன் 3 அன்று தீவுத் திடல் விழாவில் காவிரி பற்றிப் பேசியது மட்டுமல்ல, ஜூன் 5 அன்று ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்று, அந்தக் கூட்டத்தில் பின்வரும் முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி ஜூன் 8 அன்று தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், அ.தி.மு.க. உறுப்பினர்கள் உட்பட அனைவருமே தம்பி துரைமுருகன் தலைமையில், டெல்லி சென்று பிரதமர் மன்மோகன்சிங் அவர்களைச் சந்தித்துக் காவிரியில் உடனே தண்ணீர் விட உதவிடுமாறு கோரினர்.

அடுத்து, ஜூன் 10 அன்று ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள், பெங்களூர் சென்று கர்நாடக முதலமைச்சரைச் சந்தித்து, காவேரிப் பிரச்சினை பற்றி விவாதித்தனர். தண்ணீர் தருமாறு வேண்டுகோள் விடுத்தனர். இவற்றுடன் எம் பணி முடிந்து விட்டதாக எண்ணிடவில்லை.

டெல்லியில் உள்ள நமது தமிழக அமைச்சர்களிடம் நாள்தோறும் மணிக்கு மணி தொடர்பு கொண்டு, தமிழக டெல்டா பகுதி நிலைமைகளை பிரதமர் மன்மோகன்சிங் அவர்களிடமும், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அவர்களிடமும் விளக்கிடுமாறு கேட்டுக் கொண்டே இருந்தேன். இப்போதும் கேட்டுக் கொண்டே இருக்கிறேன். நல்ல செய்திகளாக இரண்டு செய்திகள். கர்நாடகத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நல்ல மழை பொழிகிறது. இது ஒரு செய்தி. அடுத்த செய்தி, நம்முடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களும், தமிழக பாராளுமன்ற உறுப்பினர்களும் தூதுக் குழுவாக சென்றதன் விளைவாக, பிரதமர் அவர்கள், ஒரு ஆய்வுக் குழுவினை அனுப்பி இரண்டு மாநில நிலைமைகளையும் அறிந்துவரச் செய்து, அதற்கான அறிக்கையும் பிரதமர் அவர்களிடத்திலே சேர்க்கப் பட்டுவிட்டது. இதைத் தொடர்ந்து நான் ஜூன் 15 ஆம் தேதியன்று பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்குப் பின்வரும் கடிதம் எழுதினேன்.

> "அன்பார்ந்த பிரதமர் அவர்களுக்கு, வணக்கம். தமிழக விவசாயிகளின் பரிதாபகரமான நிலைமை குறித்தும், கடந்த மூன்று ஆண்டுகளாகவே அவர்கள் தொடர்ந்து சொல்லொணாத் துயரில் இருந்து வருகிறார்கள் என்பது குறித்தும் தாங்கள் நன்கறிவீர்கள். தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களை நேரில் சந்தித்தபோது இந்த உண்மையை நன்றாக விளக்கியுள்ளனர்.

அதற்கடுத்த நாள், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரும் கர்நாடக மாநில முதலமைச்சரை நேரில் சந்தித்து, காவேரி டெல்டா விவசாயிகளின் நிலைமையை விளக்கியதோடு தமிழகத்திற்கு உடனடியாகத் தண்ணீர் திறந்து விடுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர். தற்போது, கர்நாடகாவில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருவதாகவும், எந்த நேரத்திலும் அது நிரம்பி வழியக் கூடிய அளவில் இருக்கும் என்றும் எனக்கு நம்பகமான தகவல் வந்துள்ளது. எனவே, கர்நாடக மாநிலம் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடலாம். தமிழகத்திற்கு உடனடியாகத் தண்ணீரை திறந்துவிட, கர்நாடக முதலமைச்சரை தாங்கள் வற்புறுத்துவீர்களேயானால், நான் கடமைப்பட்டவனாக இருப்பேன். இந்தக் கடிதத்தை மிகவும் அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியதோடு மட்டுமல்லாமல், அன்றையதினமே கர்நாடக முதலமைச்சர் நண்பர் தரம்சிங் அவர்களுக்கும் வேண்டுகோள் கடிதம் ஒன்றை எழுதினேன்.

இந்தக் கடிதங்களைத் தொடர்ந்து, நேற்றையதினம் 16-6-2004 அன்று அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில்,

"கர்நாடகத்தில் தற்போது அதிக மழை பொழிந்து கொண்டிருக்கின்றது. தமிழக அரசின் சார்பில் மூன்று அமைச்சர்கள் (16-6-2004 அன்று) கர்நாடக முதலமைச்சரைச் சந்தித்து, தமிழக விவசாயிகளின் நிலைமையைத் தெரிவித்துள்ளார்கள். ஏற்கனவே ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பில் அதன் தலைவர்களைக் கொண்ட குழுவும் நேரில் சென்று நிலைமைகளை விளக்கியுள்ளது. நேற்று (15-6-2004) நான் பிரதமருக்கும், கர்நாடக முதல்வருக்கும் அவசர அவசியத்தைச் சுட்டிக்காட்டி கடிதம் எழுதியுள்ளேன். தாங்களும் இப்பிரச்சினையில் தலையிட்டு, தமிழகத்

துக்கு உடனடியாக தண்ணீர் திறந்து விடவும், தமிழக விவசாயிகளை துயரங்களிலிருந்து காப்பாற்றவும் உதவிட வேண்டுகிறேன்”

என்று கேட்டுக் கொண்டேன்.

நான் பிரதமருக்கு கடிதம் வாயிலாக விடுத்த வேண்டுகோளும் வீண் போகவில்லை, காங்கிரஸ் தலைவரான திருமதி சோனியா காந்தி அவர்களும் தலையிட்டு, இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு காண உதவிட வேண்டுமென்று நான் எழுதிய கடிதமும் வீண் போகவில்லை. இருவருமே உடனடியாகத் தலையிட்டு நேற்று (16-6-2004) நம்முடைய கழக மத்திய அமைச்சர்கள் தம்பிகள் டி.ஆர். பாலு, தயாநிதி மாறன், ஆ. இராஜா ஆகியோரையும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தம்பி ஜி.கே. வாசன் அவர்களையும் அழைத்துப் பேசி, என் கடிதங்கள் கிடைத்த விவரத்தையும், உடனடியாக ஆவன செய்வோம் என்ற உறுதிமொழியையும் கூறியிருக்கிறார்கள். உறுதிமொழியோடு மட்டுமல்லாமல், அதற்கேற்ப இன்று (17-6-2004) மாலையில் மத்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக் குழுவின் அவசரக் கூட்டமும் கூட்டப்பட்டுள்ளது. இந்தப் புதிய அரசு அமைந்த பிறகு, அந்தக் குழு முதன் முதலாக இப்போதுதான் கூடுகிறது என்பதும், அப்படி கூட்டப்படுவதும் காவேரிப் பிரச்சினைக்காகத்தான் கூட்டப்படுகிறது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

காவேரிப் பிரச்சினை முற்றாகத் தீர்ந்து,
நமது தமிழக விவசாயிகளின் கவலைகள் அகன்று,
நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்தது என்று
நாம் மகிழும் செய்தி கிட்டும் வரையில்,
தொய்வின்றி தொடர்பணி ஆற்றிட வேண்டும்.
அதற்குத் தூண்டுகோலாக நடுவணரசு
எடுக்கும் முயற்சிகள் விளங்கிட வேண்டும்.

அன்புள்ள,
மு.க.
18-6-2004

3068. அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்!

உடன்பிறப்பே,

மக்கள் நலன் ஒன்றையே மையமாக வைத்துத் தி.மு.க. ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள், பாதுகாக்கப்பட்ட உரிமைகள், வழங்கப்பட்ட சலுகைகள் அனைத்தையும் ரத்து செய்துவிட்டு, "கருணாநிதி ஆட்சியில் காட்டாற்று வெள்ளம்போல் பணத்தை வாரியிறைத்து, கண்டபடி திட்டங்களை அறிவித்து கஜானாவைக் காலி செய்து விட்டார்கள்" என்று கடைந்தெடுத்த பொய் கூறியதுடன், அராஜக ஆட்டமும் ஆடியதால், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் படு பாதாளத் தோல்வி கண்டார் ஜெயலலிதா என்பதை, அவரே தன் வீட்டு நிலைக் கண்ணாடியைப் பார்த்துத் தெரிந்து கொண்டதை என்ன காரணத்தினாலோ அதற்குள் மறந்துவிட்டார்.

"மக்கள் குரலே மகேசன் குரல்" எனும் மொழிக்கிணங்க, மக்கள் கோரிக்கைகளை மதிக்க வேண்டும் என்று எண்ணிடாமல், "யார் அந்த மக்கள், மதோன்மத்தர்கள்" என மதம் கொண்டு பேசியதால் - செக்கு என்றும், சிவலிங்கம் என்றும் தெரியாமல் சகட்டு மேனிக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரையும் "சகஸ்ர நாம அர்ச்சனை" செய்து முடித்ததால், "பூஜ்யத்"தைத் தேர்தல் பரிசாகப் பெற்று, இனி ராஜ்யத்தைக் காப்பாற்றிக்கொள்ள, கோபுரத்திலிருந்து குழாய் அடிக்கு இறங்கி வந்த கதையாக; ஏற்றிய கட்டணங்களையெல்லாம் குறைத்து - ஜோடித்த வழக்குகளையெல்லாம் விலக்கிக் கொண்டு - கழக ஆட்சியின் திட்டங்களில் ரத்து செய்தவற்றைத் திரும்ப அறிவித்து - இலவசமாக எதுவுமே கிடையாது எனப் பொருளாதாரப் புலமை காட்டிய நிலையிலிருந்து வீழ்ந்து, எல்லாமே இலவசம்தான் என்ற தாராளத்துக்குத் தலை தாழ்ந்து - 'அம்மாடி! திருந்தி விட்டார் போலும்' என ஊரில் ஓரிருவர் உதட்டைத் திறப்பதற்கு முன்பே, "யாரைப் பார்த்து திருந்தி விட்டதாகத் திட்டுகிறாய்?" எனக் கேட்பதுபோல,

சர்வதேசச் சந்தை நிலவரத்தையொட்டி தவிர்க்க முடியாமல் பெட்ரோல் டீசல் விலைகள் மற்றும் சமையல் எரிவாயு விலை நிர்ணயித்து வருகிற மத்திய அரசு, இப்போதும் வேறு வழியின்றி முடிந்த அளவு சுமையைத் தன் முதுகில் தாங்கிக் கொண்டு முன்பிருந்த அரசுகளின் வழியில் விலைகளை சற்று அதிகப்படுத்தியதைக் கண்டித்துள்ளார் ஜெயலலிதா - கண்டிக்கும் உரிமை அவருக்கு உண்டு. ஆனால், அந்த உரிமையை அவர் பயன்படுத்திக் கொண்டு நிதியமைச்சர் சிதம்பரமும், பெட்ரோலியத் துறை அமைச்சர் மணி சங்கர அய்யரும் ஆக்ஸ்போர்டு, ஹார்வேர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் படித்த மேதாவிகள் என்று கூறி நையாண்டியில் இறங்கியிருக்கிறார். அவர்களை 'நவ நாகரிக நவீன மனிதர்கள்' என்றும் நகையாடியிருக்கிறார். அத்துடன் அவர் தனது நாக்கைச் சுருட்டிக் கொள்ளாமல், "மத்திய கூட்டணி ஆட்சிக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு என்று மார்தட்டிக் கொள்கிற தி.மு.க. தலைவர் கருணாநிதி" என வர்ணித்து என்னையும் வம்புக்கு இழுத்திருக்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின்போதும் - அதற்கு முன்பும் - சட்டமன்றத்தைக்கூட சவால் மன்றமாக ஆக்கிக் கொண்டவர் அவர் - அவரிடம் வாஜ்பய் பட்ட பாடு - காவிரியில் தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்தவர் வாஜ்பய் என்று ஜெயலலிதாவிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட வசை புராணம் - டெல்டா பகுதிக்கு பா.ஜ.க.வினர் சென்றால் விவசாயிகள் அடித்து விரட்டுவார்கள் என்று அவையிலேயே முழங்கிய ஆங்காரம் - இவைகளையும், திருமதி சோனியா காந்தியையே "கத்துக்குட்டி" என்றும், "அரசியல் அரை வேக்காடு" என்றும், "பதி பக்தி இல்லாதவர்" என்றும் திட்டித் தீர்த்த 'வைபவம்' ஆகியவைகளையும் எண்ணிடும்போது, இப்போது ஜெயலலிதா எனக்கு செய்துள்ள அர்ச்சனை அளவில் குறைவுதான் எனினும், இது அவரது அடி வயிற்றிலிருந்து கிளம்பும் கோபாக்கினி என்பது நன்றாகவே புரிகிறது. மத்திய ஆட்சிக்கு வழி காட்டும் ஒளிவிளக்கு என்று, என்னை நானே இந்த அம்மையார் கூறுவதுபோல, நெஞ்சுயர்த்திக் காட்டிக் கொண்டதில்லை. வழிகாட்டும் ஒளி விளக்காக என்னை நான் எண்ணிக் கொண்டதுமில்லை. வழி காட்டும் விளக்காக இருந்து பாதையில் உள்ள பாறைகளில் முட்டிக் கொள்ளாமலோ - பள்ளங்களில் விழுந்து விடாமலோ பாதுகாப்பது ஒன்றும் பாபகரமான காரியமுமல்ல!

எனவே, வயிற்றெரிச்சலில் வெளிப்படும் வசை மாரிகளைப் பற்றிக் கவலைப்படாமல் - ஆத்திரத்தில் அள்ளித் தெளிக்கும் அலங்கோலங்களுக்காக அலட்டிக் கொள்ளாமல் - சர்வதேசச் சந்தையை அனுசரித்து நிர்ணயிக்கப்படுகிற பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு விலைகள் கடந்த கால ஆட்சியில் எவ்வாறு அமைந்திருந்தன என்ற விளக்கத்தை மட்டும் அளித்திட விழைகிறேன்.

2001ஆம் ஆண்டிற்குப் பிறகு என்று எடுத்துக் கொண்டால், பெட்ரோல் விலை 1-4-2001 அன்று ஒரு லிட்டர் ரூ. 30.38 என்றிருந்தது,

5-7-2001	அன்று	ரூபாய் 30.49 என்றும்,
10-11-2001	அன்று	ரூ. 30.67 என்றும்,
4-6-2002	அன்று	ரூ. 31.05 என்றும்,
16-6-2002	அன்று	ரூ. 31.30 என்றும்,
2-7-2002	அன்று	ரூ. 31.64 என்றும்,
16-9-2002	அன்று	ரூ. 32.16 என்றும்,
11-10-2002	அன்று	ரூ. 32.42 என்றும்,
17-10-2002	அன்று	ரூ. 32.77 என்றும்,
16-1-2003	அன்று	ரூ. 32.99 என்றும்,
1-2-2003	அன்று	ரூ. 33.39 என்றும்,
1-3-2003	அன்று	ரூ. 34.89 என்றும்,
1-1-2004	அன்று	ரூ. 36.79 என்றும் பா.ஜ.க.

ஆட்சியிலே உயர்த்தப்பட்டுள்ளது.

இதைப் போலவே, டீசலின் விலையும் தொடர்ந்து உயர்த்தப்பட்டு வந்துள்ளது. தாய்மார்கள் பெரிதும் பயன்படுத்தும் காஸ் சிலிண்டர் விலையை எடுத்துக் கொண்டால், ஒரு சிலிண்டரின் விலை ரூ. 202.40 என்று இருந்தது, பா.ஜ.க. ஆட்சியில் 30-9-2000 அன்று ரூ. 230 என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டது.

மீண்டும் 1-3-2002இல் காஸ் சிலிண்டரின் விலை ரூ. 230 என்பது ரூ. 248 ஆக உயர்த்தப்பட்டது. இவ்வாறு ரூ. 248 என்றிருந்ததைத்தான் தற்போது ஐக்கிய முற்போக்கு கூட்டணி

ஆட்சியிலே ரூ. 268.57 என்ற விலைக்கு உயர்த்தியிருக்கிறார்கள். எனவே, இந்தப் பெட்ரோலியப் பொருட்களின் விலை என்பது சர்வதேச மார்க்கெட்டில் கச்சா எண்ணெய் விலை உயரும்போது மத்திய அரசு விலைகளை உயர்த்த வேண்டிய நிலைக்கு உள்ளாகிறது. இன்னும் சொல்லப்போனால், 3-6-2002 அன்று பா.ஜ.க. ஆட்சியிலே இருந்த பெட்ரோலிய அமைச்சர் திரு. ராம் நாயக் அவர்கள், "இனிமேல் கச்சா எண்ணெய் விலைக்குத் தகுந்தபடி 15 நாள்களுக்கு ஒரு முறை விலை மாற்றி அமைக்கப்படும்" என்று திட்டவட்டமாக அறிவிப்பே செய்திருக்கிறார். இதையெல்லாம் மறந்து விட்டு அல்லது மறைத்து விட்டு பா.ஜ.க.வினரும், ஜெயலலிதாவும் அறிக்கை விட்டுள்ளனர்.

அனல் கிளம்ப, தணல் கிளம்ப ஆர்ப்பரித்து அறிக்கைவிட்டுள்ள அம்மையார், தாய்க் குலத்திற்காக - தரித்திர நாராயணர்களுக்காக - நீலிக் கண்ணீர் நாடகத்தைத் தொடங்குவதற்கு முன்பு,

தனது ஆட்சியில், அன்றாடம் பயன்படுத்துகிற அத்யாவசியப் பொருள்களின் விலைகள் எப்படியிருக்கின்றன? தி.மு.கழக ஆட்சியில் 2001ல் இருந்ததை விட இப்போது குறைந்துள்ளதா? அல்லது அதிகரித்துள்ளதா? என்பதைச் சற்று அழுகையை நிறுத்திவிட்டு சிந்தித்துப் பார்க்கட்டும்.

13-5-2001 அன்று தி.மு.கழக ஆட்சியில் ஒரு கிலோ மஞ்சள் விலை ரூ. 36. ஆனால் ஜெயலலிதாவின் மூன்றாண்டு ஆட்சிக்குப் பின் 7-4-2004 அன்று ஒரு கிலோ மஞ்சள் விலை 58 ரூபாய். நெம்பர் 1 துவரம் பருப்பு ஒரு கிலோ தி.மு.கழக ஆட்சியில் விலை 27 ரூபாய். தற்போது ஜெயலலிதா ஆட்சியில் அதன் விலை ஒரு கிலோ 35 ரூபாய்.

தி.மு.கழக ஆட்சியில் ஒரு கிலோ நல்லெண்ணெய் 45 ரூபாய். தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு கிலோ நல்லெண்ணெய் 100 ரூபாய். கழக ஆட்சியில் கடலெண்ணெய் விலை ஒரு கிலோ 36 ரூபாய். தற்போது ஜெயலலிதா ஆட்சியில் கடலெண்ணெய் விலை ஒரு கிலோ 55 ரூபாய். அதைப் போலவே தேங்காய் எண்ணெய் விலை கழக ஆட்சியில் ஒரு கிலோ 48 ரூபாய். ஜெயலலிதா ஆட்சியில் ஒரு கிலோ 100 ரூபாய். பாமாயில் கழக ஆட்சியில் ஒரு கிலோ விலை 21 ரூபாய் என்பது தற்போது ஜெயலலிதா ஆட்சியில் 48 ரூபாய். கழக ஆட்சியில் 30 ரூபாய்க்கு விற்ற

மிளகாய் ஜெயலலிதா ஆட்சியில் 46 ரூபாய்க்கு விற்கிறது. இந்த இலட்சணத்தில்தான் ஜெயலலிதா சண்ட மாருதமாக மற்றவர்கள் மீது வசைபாடத் துணிந்துள்ளார்.

தேர்தலுக்குச் சில நாட்களுக்கு முன்புகூட, பாடப் புத்தகங்களின் விலையை தாறுமாறாக உயர்த்தியவர் யார்? இந்த ஜெயலலிதாதான். அது மாத்திரமல்ல, மாணவர்களின் கல்விக் கட்டணம் இந்தப் புண்ணியவதியின் ஆட்சியிலே எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டது? பேருந்துகளின் கட்டணம் ரெயில் கட்டணத்தை மிஞ்சுகின்ற அளவிற்கு உயர்த்தியது யார்? ஜெயலலிதா அல்லவா?

சென்னையிலிருந்து திருச்சிக்கு கழக ஆட்சியில் பேருந்து கட்டணம் 81 ரூபாய் என்பது தற்போது 104 ரூபாயாக ஜெயலலிதா ஆட்சியில் உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து மதுரைக்கு கழக ஆட்சியில் பேருந்து கட்டணம் 113 ரூபாய் என்பது 144 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து திருநெல்வேலிக்கு கழக ஆட்சியில் பேருந்து கட்டணம் 152 ரூபாய். தற்போது இது 195 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கோயம்புத்தூருக்கு சென்னையிலிருந்து 128 ரூபாயாக இருந்த பேருந்து கட்டணம் ஜெயலலிதா ஆட்சியில் 164 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, இந்த விலைவாசி விபரங்களையும், கட்டண உயர்வு விபரங்களையும் பழைய விஷயம் தானே என்று கருதாமல் மக்கள் கூடுகிற இடங்களில் எல்லாம் விளக்கமாகத் தெரியப்படுத்து! விரிவாக எடுத்துக் கூறு!

அப்போதுதான் வீறிட்டெழுந்து நம்மீது வீண்பழி சுமத்துவோர் கொட்டம் அடங்கும்!

சொல்லப் போனால் இவ்வளவு விளக்கங்களும் தேவையில்லை. ஜெயலலிதாவின் நேற்றைய அறிக்கைக்குப் பதிலாக

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

என்ற இந்தக் குறள் ஒன்றே போதுமானது.

அன்புள்ள,

மு.க.

19-6-2004

3069. போலீசின் "காயமும்" - பொன்னையன் "நியாயமும்!"

உடன்பிறப்பே,

நாடாளுமன்றத் தேர்தலில், வேரோடும், வேரடி மண்ணோடும் அ.தி.மு.க.வை மக்கள் சக்தி வீழ்த்திய பிறகு சில நாட்கள் மூச்சற்றுக் கிடந்த அ.தி.மு.க. தலைமையின் முகத்தில் யாரோ தண்ணீர் தெளிக்க, அது லேசாகக் கண்விழித்துப் பார்த்து, இழைகிறது மூச்சு என்பதைக் காட்டிக் கொள்ள - மூச்சு இழைகிற நிலை என்றாலும், பேச்சு முன்போலத்தான் எனும் விதத்தில் சகட்டு மேனிக்கு எதிர்க்கட்சித் தலைவர்களைச் சாடியவாறு, சகல தரப்பு மக்களுக்கும் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டிருந்த சலுகைகள், உரிமைகள் ஆகியவற்றைப் பறித்துக் கொண்டதால்தான் அடியற்ற மரமாக வீழ நேரிட்டது என உள்ளூர உணர்ந்து, அந்தச் சலுகைகளையும் உரிமைகளையும் ஒவ்வொரு நாளும் திரும்பக் கொடுத்து, பத்திரிகைகளில்கூட இன்று 23வது அதிரடி அறிவிப்பு அல்லது 24வது அறிவிப்பு! என்றெல்லாம் செய்திகள் விளிம்புகட்டி வெளியிடப்பட்டன.

இந்த "சலாங்கோடு விளையாட்டால்" ஜன சக்தியை மீண்டும் தமது பக்கம் சாய்ப்பது என்பது சாதாரண காரியமல்ல என்பதைப் புரிந்து கொண்டு, "ஓ! ஒரு வேளை நமது கட்சி ஆட்களுக்கு அரசின் வாரியங்களை அள்ளித்தந்தால் அக்கறையுடன் வேலை நடக்கும்" என்று கணக்கிட்டோ என்னவோ, ஏற்கனவே வழங்கியுள்ளவை போக 15 வாரியங்களுக்குத் தலைவர்கள் நியமனமென்று ஒரே தடவையில் திடீர் அறிவிப்பும் செய்தாகிவிட்டது.

இந்த காரணங்களால்தான் தேர்தலில் வீழ்ச்சி ஏற்பட்டது என்று அ.தி.மு.க. தலைமை எண்ணிச் செயல்படுவது, தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதாகும் என்பதையும் சற்றுத் தாமதமாக இப்போது உணர்ந்திருக்கிறது போலும்!

அதனால் தான் பொன்னையன், பன்னீர் போன்ற அமைச்சர்கள் வாக்காளர் பட்டியல்களை மூட்டை கட்டிக் கொண்டு, தேர்தல்

முறைகேடுகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள கோரள மாநில அதிகாரி தாமஸ் அவர்களைச் சந்தித்து முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறார்கள்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இரு சாராரும் அரசின் மீதுள்ள கோபத்தில் வாக்காளர் பட்டியலில் "தில்லு முல்லு" செய்து விட்டார்கள் என்று ஒரு "பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை"யைத் தயாரித்து, அதை புத்தகமாக அச்சிட்டுப் பொதுமக்களிடம் வழங்கியது போதாதென்று, தேர்தல் முறைகேடுகளை விசாரிக்க வந்துள்ள அதிகாரியின் கவனத்தையும் கவர முனைந்திருக்கிறார்கள்.

லட்சக்கணக்கான தங்களின் ஆதரவாளர்கள் பெயரை அரசு ஊழியர்கள் திட்டமிட்டு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கி விட்டார்களாம். அதனால் தான் தோற்று விட்டார்களாம். சோக நாடக முடிவில் ஒரு நகைச்சுவைக் காட்சியைப் போல பொன்னையனும் பன்னீரும் போட்டி போட்டுக் கொண்டு புளுகியிருக்கிறார்கள்.

அரசு ஊழியர்கள்மீது பழிபோட்டு, தங்களின் படுதோல்விக்கு 'படுதா' போட்டு மறைக்கிறவர்களுக்கு ஒரு கேள்வி!

"அவ்வளவு அரசு ஊழியர்களுமா உங்களுக்கு விரோதமானவர்கள்? நண்பர் சூர்யமூர்த்தி தலைமையில் உள்ள பெரிய யூனியன் உங்களுக்கு விசுவாசமான யூனியன் என்றுதானே சொல்லிக் கொண்டிருந்தீர்கள். இப்போது அதையும் சேர்த்துப் பழி போடுகிறீர்களே! நியாயமா?" என்று கேட்டால் பல்லை இளித்துப் பசப்புவார்கள், சரியான பகல் வேஷக்காரர்கள்!

ஒரு பானைச் சோறுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, தமிழ்நாடு முழுதும் அ.தி.மு.க. அரசினர் தேர்தல் வாக்காளர் பட்டியலில் நடத்திய "திருவிளையாடல் புராணத்"திற்கு, அண்ணா நகர் தொகுதியில் அவர்கள் நடத்தியுள்ள ஜனநாயக விரோதச் செயலே சான்று எனும் விதத்திலே ஆதாரங்களை எடுத்துக்காட்ட, ஆரம்ப முதலே அதற்கான ஆவணங்களைத் திரட்டியவர் என்ற முறையில், நமது பொருளாளர் நண்பர் ஆர்க்காடு வீராசாமி அவர்களும், அமைப்புச் செயலாளர் தம்பி டி.கே.எஸ். இளங்கோவனும், அவர்களுடன் அண்ணா நகர் கழக நிர்வாகிகள் தணிக்கைக் குழு உறுப்பினர் பெ.வீ. கல்யாணசுந்தரம், சோ.

மா.இராமச்சந்திரன், பகுதிச் செயலாளர் நா. இராமலிங்கம், கோ. நடராசன், காட்டூர் சம்பத் ஆகியோரும் கேரள மாநிலத் தேர்தல் அதிகாரி திரு. தாமஸ் அவர்களைச் சந்தித்து நீண்ட விளக்கங்களை அளித்துள்ளார்கள்.

இத்தகைய முறைகேடுகள் குறித்து குரல் கிளம்பியதோடு, அதற்கான ஆதார ஆவணங்களையும் ஆங்காங்கு நமது தலைமைக் கழக சார்பில், ஆர்க்காடு வீராசாமி மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகளுக்கு விடுத்த தாக்கீதுக்கேற்ப, அவர் களும் ஆதாரங்களைத் திரட்டுகிற பணியில் ஈடுபட்டுள்ளது கண்டு ஆடிப்போன ஆளுங்கட்சியினர், தாங்களும் வாக்காளர் பட்டியலில் பாதிக்கப்பட்டிருப்பதாகக் காட்டிக்கொள்ள கடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

உடன்பிறப்பே! உனக்குத் தெரியும், சில கலவர நிகழ்வுகளில் போலீசார் சிலர் கடுமையான முறையில் நடந்து கொண்டு, துப்பாக்கிப் பிரயோகம் வரையில் செய்திருப்பார்கள். தங்களின் அத்துமீறல் அம்பலத்துக்கு வந்து விடுமே என்பதற்காக - ஓரிரு போலீஸ்காரர்கள் தங்கள் கையிலோ காலிலோ, ஒரு கத்தியால் கிழித்து, பொய்க்காயத்தை ஏற்படுத்திக் கொள்வார்கள். "கலவரக்காரர்கள் எங்களைக் குத்திக் கொல்ல முயன்றார்கள், அதனால் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டது" என்றுரைத்து விசாரணையைத் திசைதிருப்பி விடுவார்கள். அப்படித்தான் இந்த ஆட்சியாளர்களான அ.தி.மு.க.வினரும், தங்கள் பெயர்களையே அரசு ஊழியர்கள் சூழ்ச்சி செய்து வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கி விட்டார்கள் என்று கதையளந்துள்ளார்கள்.

அதிலும் குறிப்பாக, அமைச்சர் பொன்னையனின் "நாமதேயம்" வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்டு விட்டதாம். இதனைப் பொன்னையனே அறிவித்துள்ளார். அறிவாய் நீ! ஆனால் உண்மை என்ன?

இதோ அதிகாரியின் முன்னே ஆர்க்காடு வீராசாமியே போட்டுடைத்திருக்கிறார் பார்!

> "அரசு ஊழியர்கள் அரசாங்கத்தின் மீதுள்ள தங்களின் எதிர்ப்பைக் காட்ட, ஆளுங்கட்சிக்கு எதிராக வாக்களிக்க வந்திருப்பார்களே தவிர - தங்களுடைய பெயர்களை தாங்களே நீக்கிக் கொள்ள மாட்டார்கள்".

என்று வாதிட்ட வீராசாமி அவர்கள், பொன்னையன் பெயர் எப்படி நீக்கப்பட்டது என்ற விபரத்தையும் விளக்கியுள்ளார்.

"அதாவது, தன்னுடைய பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் பொன்னையன் கூறுவது அ.தி.மு.க. அரசின் தில்லு முல்லுகளில் ஒரு பகுதியாகும். ஏனெனில் அமைச்சர் பொன்னையன், வாக்காளர் பட்டியலில் பெயர்களை நீக்குவதற்குள்ள படிவம் (7) என்பதை பூர்த்தி செய்து அவரே கையெழுத்திட்டுக் கொடுத்துள்ளார். அந்த அடிப்படையில்தான் அவர் பெயர் நீக்கப்பட்டுள்ளது."

உடன்பிறப்பே! இப்போது புரிகிறதா ஒரு பானைச் சோறுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழியின் உண்மை?

"இப்போது வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணியை தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அ.தி.மு.க. கோருகிறது. அப்படி ஒப்படைத்தால் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவர்களைத் தங்களுக்குச் சாதகமாக செயல்பட வைப்பார்கள். எனவே இப்போதுள்ள நிலையே நீடிக்க வேண்டும். அரசு ஊழியர்களே வாக்காளர் பட்டியலைச் சரிபார்க்க வேண்டும். வாக்காளர் சேர்த்தல் - நீக்குதல் ஆகியவை கொண்ட வரைவுப் பட்டியலை அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் வழங்க வேண்டும்".

ஜனநாயகம் முறையாகச் செயல்பட வேண்டியதற்கான யோசனையை தி.மு.க. இவ்வாறு தெரிவித்துள்ளது.

வஞ்சக சூழ்ச்சியால் வெற்றியை வளைத்துப்போட அ.தி.மு.க. முனைகிறது. அந்தப் பித்தலாட்டத்திற்கு தேர்தல் ஆணையம் இடம் தரக்கூடாது. இடம் தராது என நம்புகிறோம்.

அன்புள்ள,

மு.க.

21-6-2004

3070. இந்த ஆறு ஓடிக் கொண்டேயிருக்கும்!

உடன்பிறப்பே,

இதோ இந்த ஆறு, உற்பத்தியான காலத்திலிருந்து ஓடிக்கொண்டுதானிருக்கிறது. பெருமழை, அதன் விளைவாகப் பெருகிடும் வெள்ளம் இரண்டையும் உள்வாங்கிக் கொண்டு, விசுவரூபம் எடுத்ததுபோல ஓடிக்கொண்டு தானிருக்கிறது.

கரை துண்டிக்கப்பட்டு உடைப்பெடுத்து விடுமோ - ஊருக்குள் நீர் புகுந்து ஆற்றின் போக்கும், வடிவமும் மாறிவிடுமோ என்று எண்ணி அதிர்ந்தபோதுகூட, இந்த ஆறு, தன்னை இயற்கையோ, செயற்கையோ எதுவும் பாலையாக மாற்றிவிட முடியாதென்ற வைராக்கியத்துடன் ஓடிக் கொண்டுதானிருக்கிறது.

கரையோரப் பூங்காக்களில் கலாப மயில்களைக் காண்பதிலே ஒரு களிப்பின் மயக்கமோ - கவர்ச்சி ஈர்ப்போ இந்த ஆற்றுக்கு ஏற்படாதது போலவே, காக்கைகளும், கொக்கு குருவிகளும் தன்மீது எச்சமிடுவது கண்டும் இதற்குச் சினமோ, சீற்றமோ ஏற்படுவதில்லை.

இது போகும் வழியில் எத்தனையோ காட்சிகள் - நிகழ்ச்சிகள் - திருமணம் முடித்து தேன்நிலவுக்கு வந்த தம்பதிகள், படகிலேறி உற்சாக உலா நடத்துவதும் இந்த ஆற்றில்தான்.

ஆவி துறந்தார்க்கு அவர்தம் உற்றார் உறவினர், அஞ்சலி செலுத்தி இறுதிக் கடமையாற்றிவிட்டு, நீராடிச் செல்வதும் இந்த ஆற்றில்தான்.

நல்லது கெட்டது இரண்டுக்கும் ஈடு கொடுத்து, நன்செய்யும் புன்செய்யும் நன்கு செழித்திட, நலிவு நீங்கி நாட்டோர் வாழ்ந்திட நமது கடமையை நாம் தொடர்ந்து செய்துகொண்டேயிருப்போமென்று இந்த நதி, ஓட்டத்தை நிறுத்தாமல் உழைத்துக் கொண்டிருக்கிறது.

மேடான கரைப் பகுதியில், இருகரைகளிலும் போட்டி போட்டுக்கொண்டு கலக்குகிறேன் பார் நீரையென்று சிறுவர்கள் சிலர், ஆற்றுக்குள் மாறி மாறி எச்சில் துப்பிக் களிக்கிறார்கள். ஓடும் வேகத்தில் இந்த ஆற்றின் சுழலில் அந்த எச்சில், மீன் குஞ்சுகளின் வயிற்றுக்குள் போகிறது.

வைக்கோல் கட்டுகளை எரித்துக் கொட்டி ஆற்றின் தெளிந்த தண்ணீரைக் கறுப்பாக்க முனைகிறார்கள், எதையும் கறுப்பாக்கிக் களிப்பதே கண்ணியமெனக் கதைப்பவர்கள். அவர்களைப் பார்த்துக் கை கொட்டிச் சிரிப்பதுபோல் இந்த ஆறு சலசலவெனும் சப்தமுடன் கண்மாய்களில் நுழைந்து செல்கிறது. என்றுமே குழைந்து செல்வதில்லை, கோழைகள் போலே! நேர்மை தவறாத வீரன்போல் நிமிர்ந்தே செல்கிறது.

'ஆறு' எனக் கூறுகிறேனே! "எதை ஒப்பிட்டு?" என்பதை எங்கே உடன்பிறப்பே நீ கூறு! நதியுடன் நான் ஒப்பிடுவது நமதியக்கத்தைத்தான்! தி.மு. கழகத்தை மட்டுமல்ல! திராவிட இயக்கத்தையே ஒப்பிட்டுக் காட்டுகிறேன் - 1912ஆம் ஆண்டு வாக்கில் திராவிடர் சங்கமாகத் தோன்றி, திராவிடர் கழகமாகப் பெருகி, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பெரு நதியாம் கிளை நதி கண்டு, அக்கிளையில் ஒரு கிளையாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகி - இந்த எல்லா நதிகளிலும் திராவிட உணர்வுப் பேராறுதான் ஓடுகிறது எனினும், ஓராறாக ஓட இயலாத காரணத்தால் தனித் தனி ஆறுகளாக, எனினும் தன்மான 'முரசொலி'த்து, தமிழ் மான 'சங்கொலி'த்து தமிழர் இன 'விடுதலை' முழக்கமிட்டுக் கொண்டுதான் ஓடுகின்றன.

இந்த உணர்வுக்குத் துளியும் சேதாரம் வராமல் - இந்த இனத்துக்கு ஆதாரம் நாம்தான் என்ற நிலையை, நம் உயிர் இருக்கும்வரையிலும், அதற்குப் பிறகும் நாட்டிட வேண்டியது நம் கடமை யென்பதை கடந்த சில காலமாக நான் எழுதியும், பேசியும் இதில் ஒத்த கருத்துடையோருடன் உரையாடியும் உறுதிப்படுத்தி வருகிறேன்.

தனித்தனி இல்லங்களில் வாழும் சகோதரர்கள், திராவிட உணர்வுக்குச் சவால் ஒன்று வரும்போது, உள்ளங்களால் ஒன்றுபடுவதும் - பொதுப் பிரச்சினைகள் எதுவாயினும், அவை மக்கள் நலனுக்கு என ஓரணியில் திரளுவதும் - அது அரசியல்

கூட்டணியாயினும், இடம் பெறுவதும் - துணை நிற்பதும் - தொய்வின்றித் தொடர வேண்டியதாகும்.

இந்த உறுதிமொழியை ஓங்கி ஒலிக்கத்தான் விழுப்புரத்தில் - விருதுநகரில் மாநாடுகளில் கூடினோம்.

அந்த மாநாடுகளுக்குப் பிறகு, நாம் வகுத்த அணிக்கு மக்களின் பெருத்த ஆதரவு கண்டோம்.

ஆதரவுக்கு அடையாளமாக, நமது ஆற்றில் நாற்பது வெற்றிப் படகுகள்!

நம்புகிறேன்! திராவிட இயக்க ஒற்றுமை பற்றிய என் எண்ணம் ஈடேறுமென்று! என் நம்பிக்கை பலிக்குமென்று!

மண்டல மாநாடு நடத்துக என்றோம் சேலத்தில்!

நீதான் தலைமையேற்க வேண்டும் என்று விடாப்பிடியாக 'அண்ணா அறிவாலய'த்தை முற்றுகையிட்டார் தம்பி வீரபாண்டி ஆறுமுகம்!

"கழகச் சட்ட திட்டப்படி, கழகத் தலைவராகிய நான் மாவட்ட மாநாட்டுக்கோ, மண்டல மாநாட்டுக்கோ தலைமை வகிக்கக் கூடாதே!" என்றேன்.

அப்படியானால் கழகச் சட்டதிட்டப்படி சேலத்தில் தி.மு.க. சிறப்பு மாநாடு நடத்துகிறோம். நீயே தலைமை வகித்திடு என்றார். இதற்குப் பேராசிரியர் பரிந்துரையும் வேறு.

பிறகு நான் என்ன செய்ய?

ஒப்புக் கொண்டு விட்டேன் -

தலைமை வகிக்கும் ஆசையிலா? - அல்ல!

தம்பிகள் சொல்லைத் தட்ட முடியாத

நெருக்கடியில்!

இன்று விளம்பரங்களும் முரசொலி, தினகரனில் பெங்களூரிலிருந்தவாறு கண்டேன்.

சேலம் மாநாடு -

அதுவும் சிறப்பு மாநாடு -

ஆம், வீரபாண்டி நடத்தும் மாநாடு -

நமது வளர்ச்சிகள் - வெற்றிகள் -
மாற்றாரை மருளச் செய்து கொண்டிருக்கும் வேளையில் -
நம்மவர்க்கு எள் முனையளவும் இறுமாப்பு,
மமதை கிடையாது - மாறாக;
அடக்கத்துடன், அமைதியுடன் -
இதோ இந்த ஆறு போவது போலப்
போவோம் என்றுரைத்து!
ஆற்றின் பெருக்கம் காண -
அடலேறுகள் நாம் அனைவரும்
சேலம் புறப்படத் தயாராவோம்.

அன்புள்ள,
மு.க.
25-6-2004

3071. 'இட்லர்' மனப்பான்மை - கோமாளிக் கூத்து!

உடன்பிறப்பே,

இந்தியாவில் உள்ள மாநில முதலமைச்சர்களை வரிசைப்படுத்தி, ஒவ்வொருவருக்கும் மதிப் பெண்கள் வழங்கி, அந்த வரிசையில் கடைசி முதலமைச்சர் என்ற விருதினை, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பே, "இந்தியா டுடே" எனும் ஏடு நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கியதை மறந்திருக்க மாட்டாய்.

திட்டமிடல், நிர்வாகம் நடத்துதல், மக்களை ஆளும் பாங்கு இவற்றில் மட்டுமல்ல! ஜனநாயகச் சோதனையிலும் "பூஜ்யம்" தான் பெறமுடிந்தது என்ற உண்மை வெளிப்பட்ட பிறகு, நமக்கு மட்டுமல்லாமல் மக்களுக்கும் வெற்றி மேல் வெற்றி கிடைக்கத் தொடங்கி விட்டது.

தி.மு.க. ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட நல்ல திட்டங்களை ரத்து செய்து, வழங்கப்பட்ட அரசு ஊழியர், ஆசிரியர், தொழிலாளர் உரிமைகளைப் பறித்துக் கொண்டு, சாதாரண, சாமானிய, நடுத்தர மக்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகளையும் ஒழித்துக்கட்டி விட்டு, "நினைத்ததை முடிப்பவர் நானே" என்று நெஞ்சுயர்த்திக் கொக்கரித்த நிலை கண்டு நித்த நித்தம் செத்துக் கொண்டிருந்தவர்கள், "எங்களுக்கு நிம்மதிக்கு வழி ஏது" என்று கேட்டபோது, அவர்களுக்கு நாமளித்த பதில் - "வாக்காளப் பெருமக்களே! வதைபடும் பொதுமக்களே! உங்களைத் தொல்லைக்கு ஆளாக்கியோரைத் தோற்கடியுங்கள்! ஆம்! தோற் கடியுங்கள்! எங்கள் சொற்படி கேட்டால் நீங்கள் இழந்ததைப் பெறுவீர்கள்!" என்று மேடைக்கு மேடை சொன்னோம். கடிதத்திற்குக் கடிதம் அதையேதான் குறிப்பிட்டுக் காட்டினேன்.

"நீங்கள் மீண்டும் வந்து, நாங்கள் இழந்தவை களை மீட்டுத் தருவதென்றால் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகுமே! 2006 வரையில் காத்திருக்க வேண்டுமே!" என்று மௌன பாஷையில் கேட்டீர்கள்!

"பயப்படாதீர்கள். பாடம் புகட்டினால்போதும். பாபத்தை உணருவார்கள். பணிந்து அடங்குவார்கள். இழந்த உரிமைகளையும், சலுகைகளையும் திரும்பவும் பெற, அவற்றைப் பறித்துக் கொண்டவர்களுக்குப் பாடம் புகட்டுங்கள்"

இப்படித்தான் உடன்பிறப்பே! நமது கூட்டணிக் கட்சிகளின் முன்னோடிகளுக்கும், வாக்காளப் பெருமக்களுக்குமிடையே மானசீகமானதும், மனச்சாட்சி கொண்டதுமான உரையாடல் அமைந்தது.

நமது சொல்லை நம்பி வாக்களித்தார்கள். இழந்தவற்றை முற்றிலுமாக இல்லாவிடினும், ஓரளவு திரும்பப் பெற்றிருக்கிறார்கள்.

2006 வரை காத்திருந்து நம்மை வெற்றிபெற வைத்து, அதன் பிறகு ஏற்கனவே இழந்தவைகளை முழுமையாகத் திரும்பப் பெறுவது என்றில்லாமல், இப்போதே ஆளுங்கட்சியினரைத் தோற்கடித்து, நாமும் மக்களுக்கு அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றக் கூடிய வாய்ப்பை வழங்கிய வாக்காளர்களின் மன உறுதியையும், நம்பிக்கையையும் பாராட்டத்தானே வேண்டும்.

மக்கள் இவற்றையெல்லாம் கண்டு, இடையே ஒரு பெருமூச்சு விட்டுக்கொள்வதற்குள்ளாக - தற்காலிகப் பணியாளர்கள் 16 ஆயிரம் பேர் தலையில் கைவைத்தார்கள். நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் கடுமையான கண்டனத்தையொட்டி, 16 ஆயிரம் பேரின் வாழ்க்கை, பாலைவனமாகாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. இல்லையேல், அவர்கள் கதி என்ன ஆகியிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் எப்படியோ தப்பி விட்டார்களே என்ற ஆத்திரம் அரசியாருக்கு இன்னும் தணியவில்லை என்பதால்தான், மறைமுகமாக ஏதோ காரணம் கற்பித்து அவர்கள் மீது பாயத் தொடங்கியிருக்கிறார்.

"அதாவது எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் டூ தேர்வில் பள்ளியின் மாணவர்கள் தேர்ச்சி விகிதம் 60 சதவிகிதத்துக்குக் குறைவாக

இருந்தால், அந்தப் பள்ளியின் ஆசிரியர் இடம் மாற்றம் செய்யப்படுவார் என்று உத்தரவு"

இந்த உத்தரவின்படி, நெல்லை மாவட்டம், புளியங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் இ. அப்துல் மாலிக் என்பவர் இடம் மாறுதல் செய்யப்படுகிறார்.

உடனே ஆசிரியர் அப்துல் மாலிக், அந்த உத்தரவை எதிர்த்து நீதிமன்றம் சென்று இடைக்காலத் தடை பெறுகிறார்.

உடன்பிறப்பே! இதில் அப்துல் மாலிக் அவர்கள் உயர்நீதிமன்றத்தில் அளித்துள்ள மனுவில் கூறியுள்ள விபரங்கள் முக்கியமானவை.

அந்த மனு வருமாறு :-

"புளியங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். என்னை திருநெல்வேலி மாவட்டம் ஏர்வாடியில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு மாறுதல் செய்து கடந்த 17ந்தேதி அரசு உத்தரவிட்டுள்ளது. எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் பிளஸ் டூ தேர்வில் என் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 51 சதவிகிதம். அதைக் காரணமாகக் கூறி என்னை வேறு ஊருக்கு அரசு மாறுதல் செய்துள்ளது. நான் ஆசிரியர் பணியைச் சிறப்பாகச் செய்ததற்காக 2001ஆம் ஆண்டு தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றவன். அரசின் தற்போதைய உத்தரவால் எனக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற உத்தரவால் பயன் ஏதும் ஏற்படாது. எனது பள்ளியில் வேதியியல் பாடத்தில் 45 சதவிகித மாணவர்களே தேர்ச்சி அடைந்துள்ளனர். இதையொட்டி வேதியியல் ஆசிரியர் மணி மேகலையை வேறு பள்ளிக்கு மாற்றி விட்டனர். அவருக்குப் பதிலாக வேறு பள்ளியிலிருந்து மோகன் என்ற ஆசிரியர் இங்கு மாற்றப்பட்டுள்ளார். மோகன் பணியாற்றிய பள்ளியில் 37 சதவிகித மாணவர்களே வேதியியல் பாடத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனர். 45 சதவிகித தேர்ச்சி காட்டிய மணி மேகலை மாற்றப்பட்டு, 37 சதவிகித தேர்ச்சி மட்டும் கொடுத்த ஒரு ஆசிரியரை நியமிப்பது விந்தையாக இருக்கிறது"

அப்துல் மாலிக் அவர்கள் நீதிமன்றத்தில் அளித்துள்ள மனுவின் விபரமொன்றே, இன்னும் இந்த ஆட்சியாளரின் "விதூஷகத்தனம்" போகவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறதா இல்லையா?

இந்தியாவின் கடைசி முதலமைச்சர் என்கிற மதிப்பெண்ணைப் பெற்ற ஒருவருக்கு, ஆசிரியர்களுக்குத் தகுதி குறிப்பிட்டு மதிப்பெண் வழங்கி இடம் மாற்ற தார்மீக நியாயம் என்ன இருக்கிறது?

எனவேதான், இப்போது கிடைத்துள்ள தோல்வி மட்டும் இவர்களுக்குப் போதாது - தொடர்ந்து பாடம் கற்பித்துக் கொண்டேயிருக்க வேண்டும்!

அப்போதுதான் "இட்லர்" மனப்பான்மைக்கும் - கோமாளிக் கூத்துக்கும் இடமில்லாத நல்லாட்சியின் நிழலில், தமிழ்நாட்டு சகல தரப்பு மக்களும் நலம் காண முடியும்.

அன்புள்ள,

மு.க.

26-6-2004

3072. மனச்சாட்சிப்படி நடந்து கொண்டார்களா?

உடன்பிறப்பே,

அரசுச் சார்புடைய நிறுவனமான டான்சி நிலத்தை அமைச்சர் பதவியில் இருக்கும் ஒருவர் வாங்கியது தவறு - அதிலும் முதலமைச்சர் பதவியில் இருக்கும் ஒருவரே வாங்கியிருப்பது பெருந்தவறு - குற்றம் குற்றமே என்று சுட்டிக் காட்டியபோது 1992ஆம் ஆண்டு மதுரை அ.தி.மு.க. மாநாட்டில் முதல் அமைச்சர் ஜெயலலிதா, "ஆமாம் வாங்கியது உண்மைதான்" என்று அச்சடித்த தலைமையுரையை அனைவருக்கும் வழங்கியதோடு, அதனை வாங்கியதற்கானக் காரணங்களையும் விளக்கினார்.

அதன்பிறகுதான் வழக்கே வந்தது - அந்த வழக்கில் வாங்கவே இல்லை என்றும் - பத்திரத்தில் இருப்பது தன் கையெழுத்தே இல்லை என்றும் - உச்சநீதிமன்றம் வரையில் உரத்த குரலில் சொல்லிவிட்டு; வேண்டுமானால் அந்த நிலத்தைத் திருப்பிக் கொடுக்கவும் தயாராக இருக்கிறேன் - என்றுரைத்து "அதாவது எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்ற பழைய வேடிக்கைக் கதையை வேறு ஞாபகப்படுத்தினார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பை உலகமே எதிர்பார்த்தது. அந்தத் தீர்ப்பில், ஜெயலலிதா, டான்சி நிலம் வாங்க அரசு அதிகாரிகள் ஆர்வம் காட்டியது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அவரே கையெழுத்துப் போட்டுவிட்டு அது தன்னுடைய கையெழுத்தில்லையென்று கூறியதும் குத்திக்காட்டப்பட்டுள்ளது. இவ்வளவுக்கும் பிறகு திருடப்பட்ட பொருளை, அப்பொருளை பறிகொடுத்தவனிடமே ஒப்படைத்துவிடு என்பதைப் போல, டான்சி நிலத்தை திரும்பக் கொடுத்துவிட வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டது. தண்டனையென்று ஒன்று இல்லையே தவிர, அதை விடக் கடுமையாக ஜெயலலிதா, தனது மனச்சாட்சிப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது. "வாங்கிய

நிலத்தைத் திரும்பக் கொடுத்து விடு" என்ற உத்தரவைவிட, "மனச்சாட்சிப்படி நடந்து கொள்க" என்ற அறிவுறுத்தலைவிட, கையெழுத்துப் போட்டு விட்டு இல்லையென்று சொன்ன பொய்யுரையைத் தோலுரித்துக் காட்டியதைவிட, இன்னும் என்ன தண்டனை விதித்திருக்க முடியும்?

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் ஒரு பகுதி அப்படியே இங்கே வெளியிடப்பட்டுள்ளது.

> "ஜெயலலிதா குற்றவாளியா, இல்லையா என்று தீர்மானிப்பது ஒருபுறமிருப்பினும், அவர் தனது மனச் சாட்சிக்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். பத்திரத்தில் இடப்பட்ட அவரது கையெழுத்தையே அவர் மறுத்திருப்பதையும், அமைச்சர்களுக்கான நடத்தை விதிமுறைகளை அவர் மீறியிருப்பதையும், பொது சொத்தை சுய இலாபத்துக்காக வாங்கியிருப் பதில் விதிகளும், நடைமுறைகளும் மீறப்பட்டுள்ளன என்ற ஐயம் எழுந்திருப்பதையும், அந்த நிலத்தை வாங்குவதில் அரசு அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட்டதையும் எண்ணிப் பார்த்து, தனது செயல் சரிதானா என்று சிந்திப்பதுடன், அந்த நிலத்தையும் அவர் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்"

"திரும்பக் கொடுத்து விடு" என்பதிலிருந்தே, தவறாக எடுக்கப்பட்டது என்ற உண்மை, உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாகத் தெரிந்துவிட்டதல்லவா?

"திரும்பக் கொடுத்து விடு" - இப்படியொரு தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஜெயலலிதாவுக்கு வழங்கியதைப் போலவே, கடந்த மே மாதம் 10ஆம் தேதி மக்கள் மன்றம் ஒரு தீர்ப்பை எழுதி, அந்தத் தீர்ப்பை மே மாதம் 13ந்தேதி ஊரறியப் படித்து முடித்தது.

"டான்சி நிலத்தை திரும்பக் கொடுத்து விடு!"

இது உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பு!

இதோ மக்கள் மன்றம், நாடாளுமன்றத் தேர்தலையொட்டி அளித்துள்ள தீர்ப்பு என்ன?

இந்தத் தீர்ப்பும் "திரும்பக் கொடுத்து விடுக" என்ற பாணியில்தான் தமிழ் மக்களின் மன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பின்படி, இதோ திரும்ப வழங்கப்பட்டவற்றின் பட்டியலை ஒரு முறை பார்க்கலாம்.

- கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் திரும்பப் பெறப்பட்டது. அதாவது மனித உரிமை திரும்ப வழங்கப்பட்டது.
- ரேஷன் அட்டையில் "எச்" சின்னம் ரத்து!
- கூப்பனில்லாமல் அரிசி வாங்கலாம்.
- ரத்து செய்யப்பட்ட இலவச மின்சாரம் மீண்டும் திரும்பத் தரப்படும்.
- சத்துணவில் மறுபடியும் முட்டை வழங்கப்படும்.
- அரசு, தனியார் பள்ளி மாணவர்களுக்கு ரத்து செய்யப்பட்ட இலவச பஸ் பாஸ் திரும்பத் தரப்படும்.
- கல்லூரி மாணவர்களுக்கு 50 சதவிகித சலுகையில் எல்லா நாட்களிலும் பஸ் பாஸ்.
- வேலைநிறுத்த அறப்போரில் ஈடுபட்ட அரசு ஊழியர், ஆசிரியர் மீதான தண்டனை ரத்து.
- கட்சித் தலைவர்கள் மீது தொடரப்பட்ட "டெஸ்மா" வழக்கு திரும்பப் பெறப்படுகிறது.
- பத்திரிகைகள் மீதான வழக்குகள் வாபஸ்.
- ஏற்றப்பட்ட மின் கட்டணம், தி.மு.க. ஆட்சி கட்டணத்துக்கு இணையாகக் குறைப்பு.
- அரசு மருத்துவமனைகளில் பார்வையாளர் கட்டணம் ரத்து.
- மோட்டார் மற்றும் சைக்கிள்களுக்கு 'பார்க்கிங்' கட்டணம் ரத்து.
- ஆயிரம் ரூபாய் என்ற மணல் விலை, 600 ரூபாயாகக் குறைப்பு.
- தற்காலிகப் பணியாளர்கள் 16 ஆயிரம் பேர் நீக்கப்பட்டு உடனடியாகப் பணியில் சேர்ப்பு.

உடன்பிறப்பே!

மே 13ந்தேதி வெளியிடப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலில், தமிழக மக்கள் அளித்த தீர்ப்பின்படி, ஜெயலலிதா அரசினால் பறிக்கப்பட்டிருந்த உரிமைகளும், சலுகைகளும் மக்களுக்கே திரும்ப அளிக்கப்பட்டுள்ளன.

முழுமையாக இல்லாவிடினும், ஓரளவு மக்கள் தீர்ப்புக்கு வெற்றி என்ற நிலையில் அளிக்கப்பட்டுள்ளன.

டான்சி வழக்கில் வாங்கிய நிலத்தைத் திரும்பத் தந்து விட்டு, மனச்சாட்சிப்படி நடந்து கொள்க என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

மக்கள் மன்றத்தின் மே மாதத் தீர்ப்பும், ஏறத்தாழ அதேபோலத்தான் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரும்பக் கொடுத்துவிட்டால் போதுமா? தண்டனை பெறாவிடினும், மனச்சாட்சிப்படி நடந்துகொண்டார்களா?

அப்படியொன்று இருந்தால்தானே அதன்படி நடந்து கொள்ள?

அன்புள்ள,

மு.க.

27-6-2004

3073. பெங்களூரிலிருந்து சென்னை வரை!

உடன்பிறப்பே,

ஓய்வுக்காக பெங்களூரில் தங்கியிருந்தபோது, ஒரு கன்னட மொழிப் பத்திரிகை நிருபர், அவருக்கு என்னிடமுள்ள நட்புரிமை காரணமாக முன்கூட்டி அறிவிக்காமலே பேட்டி காண வந்து விட்டார். தனது பத்திரிகைக்கு சிறப்புப் பேட்டி, அதனால்தான் தகவல் தெரிவித்தால் ஒருவேளை அனுமதிக்க மாட்டீர்களோ பேட்டிக்கு என்று திடீரென வந்து விட்டேன் என்றார். கன்னட ஏட்டின் சார்பில் வந்தவர் எனினும், கழகத்தின் மீது ஈடுபாடும் – என் மீது பல்லாண்டு காலமாக பாசமும் கொண்டு பழகுபவர் என்பதால் பேட்டிக்கு மறுப்புச் சொல்ல மனம் இடம் தரவில்லை. கேளுங்கள் என்றேன். கேட்கத் தொடங்கினார். அவர் கேள்விகளையும் என் பதில்களையும் வரிசைப்படுத்தித் தொகுத்துத் தருவதே, இன்று என் பணி!

கன்னட பத்திரிகை நிருபர் :- நீங்கள் அதைப்பற்றி இதுவரையில் எதுவும் சொல்ல வில்லையே?

மு.க. :- எதைப்பற்றி?

நிருபர் :- அதைப்பற்றித்தான்!

மு.க. :- என் எல்லைக்கு அப்பாற்பட்ட விஷயங்களைப் பற்றி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது!

நிருபர் :- நீங்கள் அதைப்பற்றியும் சொல்லலாம் அல்லவா?

மு.க. :- "அதைப்பற்றி" என்று சுட்டிக்காட்டிக் கேட்கும்போது, "அந்த அதைப் பற்றி" என்பது அமெரிக்கா, ஈராக் மீது தொடுத்த போரைப் பற்றியாகவும் இருக்கலாம். போர்க் கைதிகளை சிறையில் அமெரிக்க அதிகாரிகள் மானபங்கப்படுத்திச் சித்ரவதை செய்ததாகவும் இருக்கலாம் - இப்படிக் கேட்கப்படும் கேள்விகள்

"அதைப்பற்றி" என்ற அட்டவணையில் அடங்கும். "இதைப்பற்றி" என்று கேட்பீர்களேயானால், இங்கே பெரம்பலூர் போன்ற மாவட்டத் தலை நகரங்களைக்கூட கிராம ஊராட்சி மன்றங்களாக இந்த ஆட்சியாளர்கள் ஆக்கி விட்டார்களே! இதைப் பற்றிக் கேட்பதாக எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?

நிருபர் :- சரி! சரி! இந்த "அதைப்பற்றி" - "இதைப்பற்றி" என்று வேண்டாம்!" பொதுவாகக் கலையுலகத்தைப் பற்றி என்று எடுத்துக் கொள்ளுங்கள்.... அதிலே.....

மு.க. :- ஓ! அதைக் கேட்கிறீர்களா? நான் கலையுலகிலிருந்து அரசியலுக்கு வந்தேனா? அல்லது அரசியலில் இருந்து கலையுலகிற்கு வந்தேனா என்று கேட்கிறீர்கள்! இல்லையா?

நிருபர் :- ஆமாம் - அப்படித்தான் வைத்துக் கொண்டு பதில் சொல்லுங்களேன். சினிமாவில் இருந்து தானே அரசியலுக்கு வந்தீர்கள்?

மு.க. :- பலமுறை நான் தெளிவாக்கியிருக்கிறேன். 1938இல் 14வது வயதில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து பெரியார் தலைமையில் நடந்த போராட்டக் காலம்தான் நான் அரசியலில் அடி எடுத்து வைத்த காலம். அதற்கு முன்பு சிறு பிராயத்தில் தெருப் பிள்ளைகளுடன் கூடிக் கொண்டு, விளையாட்டுக்காக வேடங்கள் கட்டிக் கொண்டு ஆடிப் பாடியதை எல்லாம் "சினிமா" என்று உங்களைப் போன்றோர் கற்பனை செய்து கொண்டால்; அது என் பொறுப்பல்ல! "நெஞ்சுக்கு நீதி" என்ற என் வாழ்க்கை வரலாற்றில், என் அரசியல் கொள்கைப் பிரச்சாரத்துக்குக் கலையுலகை, திரைப்படங்களைப் பயன்படுத்திக் கொண்டேனே தவி, கலையுலகிலிருந்து அரசியலுக்கு வரவில்லை. அப்படி வந்திருந்தாலும், அது ஒன்றும் தவறில்லை என்ற கருத்து வெளிப் படுத்தப்பட்டிருப்பதை நீங்கள் கண்டுணர முடியும். முடிந்தால் "நெஞ்சுக்கு நீதி" நான்கு பாகமும் படியுங்கள். நெஞ்சுக்கு நீதி நிச்சயம் கிடைக்கும்.

நிருபர் :- மத்திய அமைச்சரவையில் பங்கேற்பதில்லை என்று முதலில் கூறினீர்கள்.... பிறகு மாற்றிக் கொண்டீர்களே?

மு.க. :- மத்திய அமைச்சரவையில் பங்கேற்காமல் வெளியிலிருந்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியை ஆதரிக்கலாம் என்பது என் தனிப்பட்ட கருத்து. ஆனால் கட்சியின் கருத்து, மத்திய அமைச்சரவையில் சேரலாம் என்பது! டெல்லியிலும் வி.பி. சிங், சுர்ஜித் போன்ற தலைவர்களும், திருமதி சோனியா காந்தி அவர்களும், பிரதமரும் என்னைச் சந்தித்து வலியுறுத்தி யதை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

நிருபர் :- இலாகாக்களைப் பிரிக்கும் போது, தமிழ்நாட்டுக்கு விவசாயத்துக்குத் தேவையான நீர்ப்பாசனத் துறையைக் கேட்டு வாங்கவில்லை என்று குறை கூறப்படுகிறதே?

மு.க. :- இதற்கு நான் தமிழ்நாட்டிலேயே பதில் சொல்லியிருக்கிறேனே - காவிரி நீர்ப் பிரச்சினை தகராறு, தமிழ்நாடு - கர்நாடகம் என இரண்டு மாநிலங்களுக்கிடையே இருக்கும்போது, மத்திய நீர்ப்பாசன துறையை இந்த இரண்டில் ஒரு மாநிலத்திற்கு ஒதுக்கினால், பிரச்சினை தானே அதிகமாகும். நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா?

நிருபர் :- புரிகிறது - நடுவணரசு என்றால் நடுநிலையாகத்தானே இலாகாக்களைப் பிரித்து ஒதுக்க வேண்டும் என்கிறீர்கள் - அது போகட்டும், காவேரிப் பிரச்சினைக்கு எப்போது தான் நிலையான ஒரு முடிவு ஏற்படும்?

மு.க.:- அதையும் நான் தொடர்ந்து பல முறை சொல்லியிருக்கிறேன். நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு பத்தாண்டுகளாகத் தேங்கிக் கிடக்கிறது. கட்சி மாறுபாடுகளை ஓரம் கட்டி விட்டு, தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு விரைவில் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வெளிவரப் பாடுபட வேண்டும். இரு மாநில மக்களுக்கும் அப்போதுதான் நிம்மதி.

நிருபர் :- நான் உங்களைச் சந்தித்து கேட்க வந்த பிரச்சினை என்னவென்றால்.....

மு.க. :- இப்போது நம் முன் உள்ள பிரச்சினைகளில் காவேரி தான் உயிர்ப் பிரச்சினை! அதைத்தான் கேட்டு விட்டீர்கள். நானும் பதில் சொல்லி விட்டேன் - இன்று சென்னை திரும்புகிறேன்.

அடுத்த முறை சந்திப்போம். வணக்கம். நேரமாகி விட்டது, விமானத்துக்கு!

நிருபர் :- (சற்று திகைப்புடன்) வணக்கம்.

உடன்பிறப்பே, இந்த நிருபர் சந்திப்பையே இன்றைய கடிதமாகக் கருதிக் கொள்க!

அன்புள்ள,

மு.க.

28-6-2004

3074. சீமைக்குச் சென்றாலும் செந்தமிழ் உணர்வு போமோ?

உடன்பிறப்பே,

இனிய நண்பர் முன்னாள் அமைச்சர் மாதவனின் மகள், வெற்றிச்செல்வி ராஜமாணிக்கம் அமெரிக்காவில் வாழ்கிறார். தாயகம் வரும் போதெல்லாம் என்னைக் காணாமல் அமெரிக்காவுக்கு அவர் திரும்புவதில்லை.

அங்கே அவர், தன் குடும்பத்துடன் வாழ்வது மட்டுமல்ல! தமிழையும் வாழ வைக்கும் அக்கறையுடன் செயல்படுகிறார் என்பதற்கு உயர்ந்ததோர் சான்றாக விளங்குவதுதான் California Tamil Academy ஆகும். இந்தக் கலிபோர்னியா தமிழ்க் கழகத்துக்கு வெற்றிச்செல்விதான் தலைவர்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, அந்தத் தமிழ்க் கழகத்தின் ஆறாம் ஆண்டு மலருடன் வீட்டுக்கு வந்தார். மலரில் அவர் எழுதியுள்ள முன்னுரை, தமிழ் நாட்டிலிருந்து படிக்கும் நமக்கு பெரும் வியப்பாக இருக்காது. அவர் அதனை எங்கிருந்து எழுதியுள்ளார் - எந்த நாட்டிலேயிருந்து வெளியிட்டுள்ளார் என்பதை எண்ணிப் பார்க்கும்போதுதான், அவரது தமிழ் ஆர்வம், தாங்கொணாத வியப்பை நமக்கு ஏற்படுத்துகிறது.

நாம் சுகமாக வாழ்ந்தால் சரி! நம் பிள்ளைகள் நலமாக வளர்ந்தால் சரி! என்ற தன்னல மனப்பான்மையைத் தள்ளி வைத்து விட்டு, தமிழ் மொழிக்கு இந்தத் தரணி முழுதும் விழுதுகளும், வேர்களும், கிளைகளும், கனிகளும் இருந்திடல் வேண்டும் என்ற விருப்பம் மேலிட, இந்தச் செல்வி போன்ற சிலர் உழைத்திடுவது நம் சிந்தையில் தேன் பாய்ச்சும் செயலாகவன்றோ அமைகின்றது. ஐம்பது பக்கங்கள் கொண்ட அந்த மலரில் கலிபோர்னியா தமிழ்க் கழகத்தில் பயிலுகின்ற மாணவர்கள் தீட்டியுள்ள ஓவியங்கள்,

சிறுசிறு கட்டுரைகள், நகைச்சுவைத் துணுக்குகள் - எல்லாமே தமிழைத் தூக்கிப் பிடிக்க எடுக்கப்படும் தளராத முயற்சிகள் என்பதை விளக்குகின்றன.

> "ஆறு ஆண்டுகளுக்கு முன் வெறும் 13 மாணவ மாணவியருடன் தொடங்கப்பட்ட நமது பள்ளி, இந்த ஆண்டு 200 மாணவர்களைக் கொண்டுள்ளது" என்றும்,
>
> "மாணவர்கள் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தால் மட்டும் போதாது, வேறு திறமைகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் பேச்சு, விவாதம், கட்டுரை எழுதுதல், கணினியில் தமிழ், பாட்டு, நூலகம் போன்ற வகுப்புசாராக் கல்வியும் இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது" என்றும்,

மலரின் முகப்பில் வெற்றிச்செல்வி குறிப்பிட்டிருப்பது எத்துணை மகிழ்ச்சியை நம் உள்ளத்தில் மலர வைக்கிறது தெரியுமா!

லோகநாதன் வெங்கடாசலம் என்பார் மலரில் எழுதியுள்ள கட்டுரையில்,


> "கலிபோர்னியா தமிழ்க் கழகத்தில் தமிழ் கற்பதால் எனக்கு சன் டி.வி. நிகழ்ச்சிகள் நன்றாகப் புரிகிறது என்கிறான் எங்கள் சிறுவன்"
>
> என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்க் குழந்தைகள் கோடுகளாகக் கிழித்துள்ள படங்கள், பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டுகின்றன. அவற்றில் ஒன்றிரண்டை இக்கடிதத்தில் இணைத்துள்ளேன்.

"இங்கு பயிலும் நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியரைப் பார்க்கையில், இங்கு வாழும் இத்தமிழர்களின் இளைய தலைமுறைகள் தமிழைப் பயின்று, தமிழோசை ஆங்காங்கே கேட்கும் வகை செய்வரெனும் நம்பிக்கை பிறக்கிறது"

என்று ஒரு கட்டுரையில் வித்யா நாராயணன், லதா சந்திர மோகன் ஆகிய இருவரும் குறிப்பிடுகின்றனர்.

ஐந்தாம் வகுப்பில் பயிலும் அர்ச்சனா என்ற மாணவி தமிழ் மொழியிலே எழுதிய வார்த்தைகள் இதோ:-




“என் பெயர் அர்ச்சனா. நான் தமிழ்ப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறேன். நான் தமிழ் படிக்க விரும்புகிறேன். ஏனென்றால் தமிழ் என் தாய்மொழி. தமிழ் கற்றுக் கொண்டால் சென்னைக்குச் செல்லும் போது எனக்கு உதவியாக இருக்கும். எனக்கு இரண்டாவது மொழி கற்றுக் கொள்வது முக்கியமாகத் தெரிகிறது. தமிழில் உள்ள இலக்கியங்களை படிப்பதற்கு உதவியாக இருக்கும். இதனால் எனக்கு தமிழ் கற்றுக் கொள்ள வேண்டும்.”

மலரில் ஏராளமான சித்திரங்கள் குழந்தைகளால் வரையப்பட்டுள்ளன. அவற்றில் சில இதோ :-

மலரில் இடம் பெற்றுள்ள நகைச்சுவைத் துணுக்குகள் பெரிதும் என்னைக் கவர்ந்தன எனினும், அவற்றில் ஒன்றிரண்டை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.





மயில்

இந்தியாவின் தேசிய பறவை

"குழந்தைகள் சாப்பிடுவதற்கு வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். ஒரு மேசையில் ஆப்பிள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. ஆப்பிளுக்குப் பக்கத்தில், "ஒன்று மட்டும் எடுக்கவும், கடவுள் பார்க்கிறார்" என்ற வாசகம் இருந்தது. அடுத்த மேசையில் தட்டில் மிட்டாய்கள் இருந்தன. இதைப் பார்த்த ஒரு சிறுமி, "எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். கடவுள் ஆப்பிளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்று ஒரு காகிதத்தில் எழுதி வைத்து விட்டு, மிட்டாய் அனைத் தையும் எடுத்துக் கொண்டாள்".

ரகு சந்திரசேகரன் என்ற குழந்தை எழுதிய மற்றொரு நகைச்சுவைத் துணுக்கு இதோ :-

"ஒரு குழந்தை சமையற்கட்டில் அவள் அம்மாவிற்கு உதவி செய்து கொண்டிருந்தாள். அப்போது குழந்தை அம்மாவைப் பார்த்து, "ஏன் சில முடிகள் உங்களுக்கு நரைத்திருக்கிறது?" என்று கேட்டாள். அதற்கு அம்மா, "நீ ஒவ்வொரு தவறு செய்யும்போது எனக்கு ஒவ்வொரு முடி நரைக்கிறது" என்று சொன்னார்கள். சட்டென்று குழந்தை, "பாட்டிக்கு எல்லா முடியும் நரைத்துவிட்டதே" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள்."

உடன்பிறப்பே,

சிரிக்க - சிந்தனையைத் தூண்ட - சீமைக்குச் சென்றாலும் "செம்மொழி"யாகப் போகும் செந்தமிழ் வளர்ச்சியைச் சிரமேல் தாங்கி செயல்படுகிறார்களே என நினைத்து நெஞ்சம் நெகிழ்கிறேன். அந்தத் தமிழ் உள்ளங்களையெல்லாம் வாழ்த்துகிறேன்.

அதேநேரத்தில் "தமிழ் அணு" எனும் அச்சியற்றிய சிறு இதழில், தம்பி கோவி. லெனின் எழுதி வெளிவந்துள்ள தலையங்கப் பகுதியையும் நினைவூட்டுகிறேன்.

"தமிழுக்குச் செம்மொழித் தகுதி உறுதி செய்யப்படும்போது உலகப் பல்கலைக் கழகங்களில் தமிழுக்கெனத் தனி நாற்காலி கிடைக்கும். அதே நேரத்தில், தமிழகத்தில் தமிழை 'தரை டிக்கெட்'டாக பார்க்கும் மனநிலை அதிகரித்து வருகிறது. நர்சரி பள்ளிகள் தொடங்கி நட்சத்திர உணவகங்கள் வரை தமிழைத் தேட வேண்டியிருக்கிறது. இந்தக் கொடுமையை கோயிலில் உள்ள சாமியிடம் முறையிடலாம் என்றால் அங்கும் தமிழ் இல்லை. உலக அரங்கில் செம்மொழியாகும் நம் மொழியின் வேர்கள் சொந்த மண்ணில் அறுபடாமல் காக்க வேண்டிய கடமை எல்லோருக்கும் உள்ளது"

★

எனவே, நம் மொழிக்கு வெளிநாடுகளில் அளிக்கப்படும் ஊக்கத்தை எண்ணி உற்சாகம் பெறும்போது, தமிழகத்தில் நமக்கு ஏற்படும் இந்த ஏக்கத்தையும் போக்கிக் கொள்ள வழி காண வேண்டும் அல்லவா?

அன்புள்ள,

மு.க.

30-6-2004

3075. ஏழை எளியோருக்கு வழங்கியுள்ள இனிய பேழை!

உடன்பிறப்பே,

மண் குவளையில் பானங்கள் வழங்கும் திட்டப்படி, கிராமப்புறத்து மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு ஓரளவு வழி வகுத்து, கைத்தறியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும், கதருக்கு ஆக்கம் அளிக்கும் வகையிலும், அறிவிப்புகளைச் சுமந்து கொண்டு வந்துள்ள திரு. லாலு பிரசாத் யாதவ் அவர்களின் ரயில்வே பட்ஜெட், அனைத்துப் பிரிவினராலும் புகழப்படுகிற நிலையில்,

- பயணிகளுக்குக் கட்டண உயர்வு இல்லை என்றும்,
- சரக்குக் கட்டணமும் பழையபடிதான் என்றும்,
- பலியான இராணுவ வீரர்களின் மனைவியர்க்கு 75 சதவீதக் கட்டண சலுகை என்றும்,
- செவிடர்கள், ஊமைகளுக்குத் துணையாகச் செல்பவர்களுக்கு, எல்லா வகுப்பிலும் 50 சதவீதக் கட்டணச் சலுகையென்றும்,
- புற்று நோயாளிகளுக்கு 75 சதவீதக் கட்டணச் சலுகை என்றும்,
- மத்திய அரசு வேலைகளுக்கான நேர்காணலுக்குச் செல்பவர்களுக்கு இரண்டாம் வகுப்புக் கட்டண முழுச் சலுகையென்றும்,

ஏழை எளிய நடுத்தர மக்களுக்குச் சலுகைகள் கொண்ட பேழையாக விளங்கும் ரயில்வே பட்ஜெட்டில்,

மிக விரைவு ரயில்கள் கூடுதலாக 15 விடப்படும் என்ற அறிவிப்பும் - பிரபலமான ரயில்கள் 12 கூடுதல் நாட்கள் இயக்கப்படுமென்ற தகவலும் - வரும் ஆண்டில் 1650 கிலோ

மீட்டர் ரயில் பாதை அகலப் பாதையாக மாற்றப்படும் என்ற செய்தியும் - எளிய மக்களுக்கும் ஏற்ற வகையில் தூங்கும் வசதிகள் கொண்ட பெட்டிகள் இணைக்கப்படும் என்ற மகிழ்ச்சிக் குறிப்பும் - கணினி மூலம் ரயில் போக்குவரத்துகள் கண்காணிக்கப்படும் என்று கூறியிருப்பதும் - வேலை வாய்ப்பில் தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோருக்கான காலியிடங்களை நிரப்பச் சிறப்பு நடவடிக்கை எனும் இனிய செய்தியையும் தாங்கியுள்ள இந்த பட்ஜெட் தமிழ் மக்களின் பாராட்டையும் பெற்றிருக்கிறது. மக்களின் பாராட்டை மட்டுமல்லாமல், ஏடுகளின் ஏகோபித்த பாராட்டையும் பெற்ற பட்ஜெட் என்பதற்கு இதோ சில விவரங்கள்:-

- 'இந்து' நாளேடு, "ரயில்வே அமைச்சர் லல்லு பிரசாத் அவர்கள் பயணிகள் கட்டணத்தையோ, சரக்குக் கட்டணத்தையோ உயர்த்தாத, மக்கள் விரும்பும் நிதிநிலை அறிக்கையை (People-friendly Budget) அளித்ததோடு, எல்லா வகுப்பினருக்கும் பல்வேறு சலுகைகளையும் அறிவித்துள்ளார் என்று எழுதியுள்ளது.
- 'தினமணி' நாளேடு, "லாலுவின் சாமான்ய பட்ஜெட்" என்ற தலைப்பில் ஏழைகள், நடுத்தர மக்கள் நிம்மதி பெருமூச்சு விடும் வகையிலும், பலதரப்பட்ட மக்களுக்கும் பயனுள்ள வகையில் பல புதிய சலுகைகளும் அறிவிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.
- 'தினத்தந்தி' நாளேடு, தலைப்பில் சரக்கு கட்டணத்தில் மாற்றம் இல்லை என்றும், வேலை தேடிச் செல்லும் இளைஞர்களுக்கு சலுகை என்றும், தமிழ்நாட்டில் ஐந்து புதிய ரெயில்கள் விடப்படும் என்றும், பயணிகள் கட்டணம் உயர்வு இல்லை என்றும் குறிப்பிட்டிருப்பதோடு, "அசத்தினார் லல்லு" என்றே பெரிய எழுத்துகளில் புகழ் பாடியுள்ளது.
- ஏழைகள், நடுத்தர மக்களுக்கு நிம்மதி வழங்கும் பட்ஜெட் என்று தலைப்புச் செய்தியாக 'தினகரன்' வெளியிட்டுள்ளது.

- ‘தினமலர்’ நாளேடு, “தாராளம், சலுகைகளை அள்ளி வீசினார் லல்லு, எந்த வகுப்புக்கும் கட்டண உயர்வு இல்லை” என்ற தலைப்பில், ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை எல்லாரும் மகிழ்ச்சி அடையக் கூடிய மக்கள் ஆதரவு ரயில்வே பட்ஜெட் என்றும், ஏழைகள், போர்ட்டர்கள், வேலை தேடும் இளைஞர்கள், நோயாளிகள், ராணுவ வீரர்களின் விதவை மனைவிகள் என்று எல்லோருக்கும் தாராளமாகச் சலுகைகளை லல்லு அள்ளி வீசியிருப்பதாகவும் எழுதியிருக்கின்றது.

இந்த அளவிற்கு வரவேற்பைப் பெற்றுள்ள ரயில்வே பட்ஜெட்டைப் பற்றி, தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு மட்டும்தான் இந்தப் பட்ஜெட் தொலைதூரப் பார்வை கொண்டதாக அமையவில்லை என்று கூறத் தோன்றியிருக்கிறது.

என் செய்வது! இந்தியாவுக்குள் இருக்கின்ற தூரத்துக்குள்ளேதானே ரயில்களை இயக்க முடியும் - அதுவும் படிப்படியாகத்தானே இயக்க முடியும்!

ஆனால், தமிழக முதலமைச்சரைப் பற்றி லல்லு பிரசாத் யாதவ் அண்மையில் கூறிய அந்த ஒரு வாசகத்துக்குப் பதிலடியாகத்தான் இந்தப் பட்ஜெட்டைப் பற்றிய முதல்வரின் மதிப்புரை அமைந்திருக்கிறது.

அது என்ன வாசகம் என்று அறிய ஆவல் கொள்ளுவாய் என்று எனக்குத் தெரியும்.

குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்களை எதிர்த்து, பாராளுமன்றத்தில் கூச்சலும், குழப்பமும் விளைவித்த பா.ஜ.க.வினரைப் பார்த்து,

“ஊழல் குற்றச்சாட்டுகள் பலவற்றுக்கு ஆளான ஜெயலலிதாவுடன் கூட்டணி வைக்கிறீர்கள் - எங்களை மட்டும் உங்களுக்குக் கசக்கிறதா?”

என்று ஆதாரபூர்வமானதும், ஆவேசம் கலந்ததுமான ஒரு ஒப்பீட்டுக் குற்றச்சாட்டை லல்லு பிரசாத் யாதவ் ஓங்கி ஒலித்தார்.

அதனால் ஏற்பட்ட ஆத்திரத்தில் - மொத்த ரயில்வே பட்ஜெட்டையே “தொலை நோக்கு இல்லாதது” என்று பொத்தாம் பொதுவில் ஜெயலலிதா குற்றஞ்சாட்டி விட்டார்.

மாநிலத்தில் மேலும் நிறைவேற வேண்டிய திட்டங்களைச் சுட்டிக்காட்டி, அவற்றை நிறைவேற்றிடக் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறையை அறவே புறக்கணித்து விட்டு,

எடுத்த எடுப்பில் "ஏமாற்றமளிக்கிற பட்ஜெட்" என்றும் -

"திசை திருப்பும் பட்ஜெட்" என்றும் -

"வளர்ச்சியற்ற பட்ஜெட்" என்றும் -

"ஆரோக்கியமற்ற பட்ஜெட்" என்றும் -

ஆத்திரத்தை அள்ளி அள்ளிக் கொட்டியிருக்கிறார்.

அதே பாட்டை - அதே மெட்டில் - அம்மையாரின் கூட்டணிக் கட்சியான பா.ஜ.க.வும்,

"இது முன்னேற்றத்துக்கு எதிரான பட்ஜெட்"

என்று வர்ணித்திருக்கிறது.

ரயிலடியில் சுமை தூக்கும் போர்ட்டருக்கு வசதிகளைப் பெருக்குவது பற்றியும் -

கைத்தறியாளர், கதர் உற்பத்தியாளர், ஏழை எளிய ஊனமுற்றோர் - விதவைகளான, வீரர்களின் துணைவியர் - இவர்களுக்குச் சலுகைகளும்,

மகளிர் நலன் கருதி, டிக்கெட் பரிசோதகர்களாக இனி பெண்களும் நியமிக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பும்;

வேலை வாய்ப்பில் தாழ்த்தப்பட்டோர்க்கும், பிற்படுத்தப்பட்டோர்க்கும், சிறுபான்மையினருக்கும் இடஒதுக்கீட்டு உரிமைகளும் வழங்கினால் அது பா.ஜ.க. அகராதியில், "முன்னேற்றமில்லாத" ஒன்று தானே!

பாவம்! பா.ஜ.க.வையும், ஜெயலலிதாவையும் பொறுத்தவரையில், லல்லு முன்னேறிய பிரிவில் பிறக்காதது அவர் செய்த குற்றம்தானே!

அன்புள்ள,

மு.க.

8-7-2004

3076. பரவலாக ஆழமாக சிந்தித்துப் படைத்துள்ள பட்ஜெட்!

உடன்பிறப்பே,

"விவசாயத்துக்கு ஊக்கம் தரும் பட்ஜெட்" என்று பெருந் தலைப்பிட்டு; பாராட்டியுள்ள "தினமணி"; டிராக்டர், உழவு கருவிகள் விலை குறையும் என்பதையும்; ஏரி, குளங்களை பேம்படுத்த மாபெரும் திட்டம் என்பதையும்; கம்ப்யூட்டர், செல்போன், காஸ் ஸ்டவ் விலை சரியும் என்பதையும்; ஏழைகளுக்கு குறைந்த பிரீமிய மருத்துவ இன்சூரன்ஸ் என்பதையும் முதல் பக்கத்திலேயே பெட்டிச் செய்திகளாக்கி; "கனிவும் துணிவும்" என்ற துணைத் தலைப்புடனும்; "தமிழகம் மீது சிறப்புக் கவனம்" என்ற பெருமிதத் துடனும் பின்வருமாறு; நிதியமைச்சர் திரு. சிதம்பரம் அளித்துள்ள "பட்ஜெட்" குறித்து செய்திச் சித்திரம் தீட்டியுள்ளது.-

அது வருமாறு:

"2004-05ஆம் ஆண்டுக்கான இந்த நிதியறிக்கை பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளையும் கிராமப்புற வளர்ச் சிக்கான திட்டங்களையும் ஒருங்கே கொண்டிருக்கிறது. ஐக்கிய முற்போக்கு அணியின் குறைந்தபட்ச பொதுத் திட்டத் தின் பெரும்பாலான அம்சங்களைக் கருத்தில் கொண்டு பட்ஜெட் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டுள்ளன, கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்கும் வகையில் அவர்கள் மீதான சென்வாட் வரி ரத்து செய்யப்பட்டுள்ளது. சேது சமுத்திரம் திட்டத்தை அரசின் பங்களிப்புடன் நிறைவேற்ற நடவடிக்கை களுக்கு உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறது.

சென்னையில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாடு முழுவதற்கும் பொருந்தும் வகையில் வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்பு, வேளாண் வளர்ச்சி, கிராம முன்னேற்றம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தரப்பட் டிருக்கிறது. தொழில் துறை, ஏற்றுமதித் துறை, சேவைத் துறை ஆகியவற்றுக்கும் உரிய சலுகைகள் தரப்பட்டுள்ளன. பாது காப்பு, சுகாதாரம், குடிநீர் வசதி, தாழ்த் தப்பட்ட மக்கள், பழங்குடியினர் நலனிலும் அக்கறை காட்டப்பட்டு ஒதுக்கீடு அதி கரிக்கப்பட்டிருக்கிறது.

வருமான வரி கணக்கிடுவதில் அமலில் உள்ள ஸ்லாப்புகளிலோ, விலக்கு களுக்கான அம்சங்களிலோ மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. விலக்கு வரம்பு மட்டுமே உயர்த்தப்பட்டிருக்கிறது, லாரி உரிமையாளர்கள், லாரித் தொழிலை நடத்துவோர் மீது சேவை வரி விதிக்கப்பட மாட்டாது என்ற அமைச்சர் இன்சூரன்ஸ் துறையில் வசூலிக்கப்படும் பிரீமியத்தின் மீது சேவை வரி விதிக்கப்பட மாட்டாது என்றார்.

கம்ப்யூட்டர் தொழில் துறைக்கு உத் வேகம் தரும் வகையில் கணினிகள் மீதான 8 சதவிகித வரி அடியோடு ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

ரூ. 2000 வரையில் விற்கப்படும் எல்.பி.ஜி. அடுப்புகளுக்கும், ரூ.250 வரை யிலான காலணிகளுக்கும் உற்பத்தி வரி யிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக் கிறது.

மூத்த குடிமக்களின் சேமிப்புகளுக்கு மட்டும் 9 சதவிகித ஆண்டு வட்டி தரும் சிறப்பு சேமிப்பு திட்டம் அறிவிக்கப்பட்டி ருக்கிறது.

தலித்துகளின் வீடமைப்புத் திட்டம் ஒருங்கிணைக்கப்பட்டு அதிக நிதி ஒதுக்கீட்டுடன் அமல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ராணுவ வீரர்கள், துணை நிலை ராணுவப் படைவீரர்கள் ஆகியோர், போரிலும், தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் இறந்தால் அவர் களுடைய குடும்பத்தாருக்குத் தரும் ஓய்வூதியத்துக்கு வருமான வரியிலிருந்து முழு விலக்கு தரப்படுகிறது"

இது தினமணியில் தீட்டப்பட்டுள்ள முதல் பக்க முத்திரைச் செய்தி

"எதிர்பாராத சலுகைகளை வாரி இறைத்துள்ள மத்திய பட்ஜெட்" என்று நமது "தினகரன்" ஏடு தலைப்பிட்டு மகிழ்ச்சியடைவதில் வியப்பில்லை. உறுதியளித்தவைகளை நிறைவேற்றிய அதே நேரத்தில் வாக்குறுதிப் பட்டியலில் சேராத பல சலுகைகளையும் விவசாயிகள், நடுத்தர மக்கள், பயனுறும் வகையில் வழங்கியமைக்காக 'தினகரன்' பாராட்டுவதுபோல தமிழகமே ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களையும், பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களையும், குறிப்பாக நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களையும் - பல்வேறு துறை களின் அமைச்சர்களையும் கைகுலுக்கிப் பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால் லல்லு பிரசாத் அவர்களின் ரயில்வே பட்ஜெட்டைப் பாராட்டி எழுதியும் - பரபரப்பாக செய்திகளை வெளியிட்டுப் பாரவசமுற்ற பத்திரிகை கள் சில; மற்றும் நபர்கள் சிலர், அதன் காரணமாகவே பயமுறுத்தல்களுக்கு ஆளாகி; இந்த நிதி நிலை அறிக்கை குறித்து மிக நிதானமாகவே செய்திகளை யும், கருத்துக்களையும் வெளியிட்டிருப்பது கண்டு நமக்கு சிரிப்பு வராமல் இல்லை.

நெசவாளர்கள் கொதித்துப்போய் மூலைக்கு மூலை போராட்டம் நடத்திக் கொண்டிருந்த சென்வாட்' வரி விலக்கு கோரிக்கை இந்தப் பட்ஜெட்டில் ஏற்றுக் கொண்டு அறிவிக்கப்பட்டிருப்பது பற்றி; பெரிய எழுத்துக்களில் பெருமகிழ்ச்சியுடன் வெளியிடப்படவேண்டியதற்கு மாறாக; சிறப்புச் செய்தியாகத் தீட்டிக் காட்டுவதற்குப் பதிலாக - சில ஏடுகளில் எங்கோ ஒரு மூலையில் "ஏனோதானோ" என வெளியிடப்படுவதற்கும்;

அதேபோல வருமான வரிக்கான வரம்பு ஒரு லட்ச ரூபாய் என உயர்த்தப்பட்டிருப்பதை சில ஏடுகள் ஒளித்து மறைத்துப் பிரசுரிப்பதற்கும்;

என்ன காரணம் எனக் கருதுகிறாய்?

திரு. வாஜ்பய் உட்பட சில தலைவர்கள் பட்ஜெட்டை முழுமையாகப் பாராட்டாமல் விமர்சனம் செய்து தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் லாவகமாக! நாகரிக மொழியில்! அவர்களுக்குரிய அரசியல் பண்பாட்டுடன்!

ஆனால் நமது முதலமைச்சர், "இந்த நிதி நிலை அறிக்கை செயலற்ற அறிக்கை" என்று தூற்றித் தள்ளி விட்டார்.

பத்திரிகைகள் படித்துப் பார்த்து, பட்டியலிட்டுள்ள சலுகை அறிவிப்புகளைக்கூட பாராட்டுவதற்கு அவருக்கு மனமில்லை.

"செயலற்ற அறிக்கை" என்று முதலமைச்சர் அவர்கள் சொல்வது ஒன்றும் புதிய விமர்சனமல்ல!

"செயலற்ற பிரதமார்" என்று ஏற்கனவே இவரால் நரசிம்மராவ் அவர்களுக்கு பட்டம் சூட்டப்பட்டிருக் கிறது.

"செயலற்ற ஆணையம்" என்று காவேரி ஆணை யத்துக்கு இவரால் விருது வழங்கப்பட்டிருக்கிறது. அந்த ஆனையக் கூட்டங்களுக்கு விஜயம் செய்யாமலே அத்தகைய விருதினை அவர் ஆணையத்துக்கு அளித்திருக்கிறார்.

அந்த வரிசையில் சிதம்பரம் அளித்துள்ள நிதி நிலை அறிக்கையும் முதலமைச்சர் பார்வையில் "செயலற்ற அறிக்கை" எனக் கூறப்பட்டிருக்கிறது.

சேது சமுத்திரம் திட்டத்துக்கு நிதி ஒதுக்காதது ஏமாற்றம் தருவதாக பா.ஜ.க. சார்பில் திருநாவுக்கரசர் கூறியுள்ளார். நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் படித்த நிதிநிலை அறிக்கையில் சேது சமுத்திரம் திட்டத்திற்காக ஒரு பாராவே எழுதப்பட்டுள்ளது. அது வருமாறு:

> ''தீபகற்ப இந்திய மக்களின் கனவுத் திட்டமான சேது சமுத்திரத் திட்டம் நீண்ட நாள் கோரிக்கையாகும். நாக்பூரில் உள்ள தேசிய சுற்றுச் சூழல் ஆராய்ச்சி நிறுவனம் தற்போது இத்திட்டத்திற்கான பொருளா

தார சாத்தியக்கூறு அறிக்கையினை தயாரித்துக் கொண்டுள்ளது. அந்த அறிக்கை விரைவில் தாக்கல் செய்யப்படு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சகம் இத் திட்டத்திற்காக ஒரு சிறப்புப் பிரிவினையே ஏற்படுத்த எண்ணியுள்ளது. இத்திட்டத் திற்கான நிதியினை அந்தச் சிறப்புப் பிரிவு எழுப்புவதோடு அரசே இந்த நிதி ஒதுக் கீட்டில் பங்கேற்றும் கூடன் பெற உத்தர வாதம் வழங்கியும் உதவிடும்."

இந்த அளவிற்கு தீட்டப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கை குறித்து செய்யப்பட்டுள்ள விமர்சனங்கள், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் செயலாக் கத்தை உறுதிப்படுத்தவும் - விரைவுப்படுத்தவும் - பயன்படும் என்பதால்; முதலமைச்சார் வெளியிட்டது போன்ற காழ்ப்பு விமர்சனங்களைக்கூட நம் கைகூப்பி நன்றி கூறி வரவேற்க வேண்டியதுதான்.

அன்புள்ள,

மு.க.

10-07-2004

3077. அவர்களுக்குப் பதில் சொல்லப்போவது யார்?

உடன்பிறப்பே,

புயல் அடித்து ஓய்ந்ததுபோல் இருக்கிறது. கொட்டோ கொட்டு என்று குற்றாலம் நீர்வீழ்ச்சியே கொட்டியபடி முரட்டுப் பாறைகளையும் உருட்டிக் கொண்டு வந்து தலையில் விழுந்து நொறுக்கியது போன்ற "பேய்" மழை பெருவெள்ளமாகப் பெருக் கெடுத்து சீரழிவுகளுக்குப் பிறகு சிறிது நேரத்துக்கு முன்புதான் சீற்றம் தணிந்ததுபோல் இருக்கிறது.

இப்போது வேறெந்த 'வேதனை வேல்' நெஞ்சில் பாய்ந்ததைப் பற்றிச் சொல்லப் போகிறேன்? அடுக்கடுக்காகப் பாய்ந்து ஆழமான புண்களை - ஆறாத புண்களை ஏற்படுத்தியுள்ள அவற்றின் தொடர்ச்சியாகத்தான் கும்பகோணத்திலே குழந்தைப் பூக்களை கொய்துகொண்டு போனதே சாவு, அதைப்பற்றிச் சொல்லுகிறேன்.

"கல்வி நீரோடையில் முதலைகள்" என்று மறைந்த அண்ணன் குத்தூசி குருசாமி அவர்கள் 'விடுதலை'யில் எழுதுவாரே, அதனையே மிஞ்சிடும் வண்ணம், கடந்த மூன்றாண்டுகளாக "நீரோடையில் முதலைகள்" என்று இல்லை, நீரோடையே முதலையாக மாறியுள்ள சூழ்நிலை - "விலை போட்டு வாங்கவா முடியும் கல்வி?" என்று பாவேந்தர் கேட்டாரே, ஆம்! இப்போது நாட்டில் விலை போட்டுத்தான் கல்வியை வாங்க வேண்டியிருக்கிறது. அதுவும் ஆனை விலை, குதிரை விலை! அதுவும் தங்கம் வைரத்தால் செய்யப்பட்ட ஆனை குதிரைகள் விலை - என்று ஆகிவிட்டது. அந்த நிலையைப் பொறுத்துக் கொண்டு அதையும் தாண்டிச் செல்லலாம் என்றால் கல்வியில் குழப்பமோ குழப்பம் - கணக்கற்ற குழப்பம்!

மழலைக் கல்விக்கான பள்ளிகள் துவங்குவதிலேயிருந்து - அப்பள்ளிகள் பலவிதமான வளர்ச்சிகளைப் பெறுவது வரையில், பணம்!

பரிந்துரை!

வாணிபமாகிவிட்டது கல்வியென்று வருந்திப் பயன் என்ன?

கல்விக் கூடங்கள் -

கல்லூரிகள் -

பல்கலைக் கழகங்கள் -

தேர்விலே மாணவர்க்கு அளித்த கேள்வித்தாளே கேள்விக்குறியாகி, எல்லாமே தவறான கேள்விகள் என்ற தவிப்பும், ஆமாம் என்ற தீர்ப்பும்!

கல்வி மன்றங்களில் நுழைந்து, மலை வாழைக் கல்வியை மகிழ்ந்து உண்ண வேண்டிய மாணவர், இன்று நீதிமன்றங்களில் நுழைந்தல்லவா தங்கள் வாழ்வுக்கான ஏணிப்படிகள் முறிந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

சில பல்கலைக்கழகங்களில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்காக மாணவர் சேர்க்கையையே தள்ளிப்போட்டு, தள்ளிப்போட்டு தாய் தந்தையர் உளம் சோர்ந்து, உடல் சோர்ந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உலவுகின்றனர்.

இப்படிக் குழப்பங்களின் எடுத்துக்காட்டாக கல்வி நிலையங்களும் - கல்வித் துறைப் பிரிவுகளும் - காணப்படும் சூழலில்; பாதிக்கப்பட்டோர் அனைவரின் கவனத்தைத் திருப்பும் வகையிலும் - பாதிப்புக்குக் காரணமாயிருந்தோர், இருப்போர் ஆகியோருக்கு - மூச்சு விட்டுக்கொள்ள அவகாசம் அளிக்கும் வகையிலும் - தமிழகத்தையே அதிரச் செய்திடும், நிலை குலையச் செய்திடும் அவலச் செய்தி கும்பகோணத்திலிருந்து வந்தது.

சுமார் நூறு மழலைப் பூக்கள்,

“தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
சாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை!
சிலைபோல ஏனங்கு நின்றாய்? நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?
விலை போட்டு வாங்கவா முடியும்? கல்வி
வேளைதோறும் கற்று வருவதால் படியும்!

மலைவாழை அல்லவோ கல்வி? நீ
வாயார உண்ணுவாய் போ என் புதல்வி!"

என்று அன்னையர் பாடிய பாவேந்தர் பாடல் கேட்டுச் சென்ற செல்வக் கண்மணிகள் - சென்ற இடம்! சென்ற இடம்! அவர்களைத் தீ தின்ற இடமாகி விட்டதே!

முதலிலேயே, அதாவது குறைந்தபட்சம் திருவரங்கத் திருமண வீட்டுத் தீ விபத்துச் சாவுகளுக்குப் பிறகாவது, உச்சரிக்கப்பட்ட உத்தரவுகளை - சட்டதிட்டங்களை - இந்தச் "செயல்படும் அரசு" (?) செயல்படுத்தியிருந்தால் கும்பகோணத்தில் சரசுவதிப் பள்ளிக்கூடம், தளிர்களின் சாவுக் கூடமாவதிலிருந்து தப்பித்திருக்கும்.

இன்று கும்பகோணம் நிகழ்ச்சியை ஒரு கோலாக ஊன்றி நடந்திட கொக்கரித்துக் கட்டளைகளை அறிக்கைகளாக்குபவர்கள், அன்றைக்குத் தீ விபத்தில் மணமகன் உள்ளிட்ட அறுபது பேரை பலிகொண்ட திருவரங்கம் சென்றதுண்டா? அதற்குப் பிறகு வெளியிடப்பட்ட தீத்தடுப்பு ஏற்பாடுகள், உத்தரவுகளையாவது நிறைவேற்றிட நினைத்ததாவது உண்டா?

கும்பகோணத்துக்கு ஆளுங்கட்சி முதல்வர் ஆறுதல் சொல்லச் சென்று, குடும்ப நிதியும் அரசின் சார்பாக வழங்கியுள்ளார்.

தாய்லாந்து பயணத்திலிருந்து நேராகக் குடந்தைக் கொடுமை கேட்டு ஆறுதல் வழங்கிட வந்த காங்கிரஸ் தலைவர், திருமதி சோனியா காந்தி அவர்களுடன் குடந்தைக்குச் சென்ற மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் நெஞ்சு நெகிழும் செய்தியொன்று சொன்னார். சில ஏடுகளிலும் இச்செய்தி வந்துள்ளது.

குடந்தையில் குழந்தைகள் இறந்துபோன வீடுகளுக்கு சோனியா சென்றாராம். அதில் ஒரு வீட்டில் நான்கு குழந்தைகளுக்கு என்ன பெயர் தெரியுமா? பிரியங்கா, இராகுல், சோனியா, இந்திரா. அவற்றில் இரண்டு குழந்தைகள் தீயில் கருகி விட்டனவாம். பள்ளிக்குப் போகாமல் பிழைத்திருந்த இரண்டு குழந்தைகளில் ஒன்றின் பெயர் இந்திரா! அந்தக் குழந்தையைத்தான் சோனியா அம்மையார் கையில் வாங்கி சோகம் பொங்கிடக் காணுகிறார், தொலைக்காட்சியில் கண்டோம்.

உயிருள்ள குழந்தையை உருக்கமுடன் கொஞ்சியது ஒரு காட்சி!

உயிரற்றுப்போன தமது செல்வச்சிட்டுக்களை சேர்த்தணைத்துக் கொண்டு, சோர்ந்தழும் தாய்கள் எத்தனை பேர்?

அவர்களுக்கெல்லாம்
பதில் சொல்லப் போவது யார்?

அன்புள்ள,

மு.க.

20-7-2004

3078. தாறுமாறான பதில்களும்; தார்மீக உரிமையும்!

உடன்பிறப்பே!

நான் பிறந்த மண்ணில் பிறந்து, தீயில் கருகி இறந்துவிட்ட பூக்கள், பிஞ்சுகள், அரும்புகள் - அவற்றை ஈன்ற அன்னை தந்தையராம் வாடிய செடி கொடிகளைக் காண்பதற்கும், கண்ணீரைக் காணிக்கையாக்குதற்கும் நெருப்பின் சீற்றத்துக்குத் தப்பிப் பிழைத்து மருத்துவமனையில் இருக்கும் மலர்களுக்கு ஆறுதல் கூறுதற்கும் எனது குடந்தைப் பயணம் பயன்பட்டது.

காலையில் சென்னையிலிருந்து காரில் புறப்பட்டு - 12 மணிக்குக் குடந்தையை அடைந்து, அங்கே இரண்டு மணி நேரம் விபத்துக் கொடுமைகளை அறியவும் - தி.மு.க. அறக்கட்டளை சார்பில் 28 இலட்ச ரூபாய் 112 குடும்பங்களுக்கு வழங்கவும் அன்புத் தம்பி கோ.சி. மணி செம்மையான ஏற்பாடு களை ஒழுங்குபடுத்திச் செய்திருந்தார். உறவு பூர்வமான, உணர்வுபூர்வமான துக்கத்தில் பங்கு கொண்டு அன்று இரவே 11 மணி அளவில் சென்னை வந்து சேர்ந்தோம். என்னுடன் தம்பி துரைமுருகன், தம்பி பழனிமாணிக்கம், தம்பி ஏ.கே.எஸ். விஜயன், தம்பி நெப்போலியன், தம்பிகள் சென்னை கு.க. செல்வம், சித்திரைமல்லி எத்திராஜன் ஆகியோர் வந்திருந்தனர்.

நான் போவதற்கு முன்பே, குடந்தையின் பக்கத்து மாவட்டக் கழகங்களின் செயலாளர்களும், செயல் வீரர்களும் அங்கு வந்து கூடிவிட்டார்கள்.

தினகரன், முரசொலியைத் தவிர வேறு ஏடுகளிலோ - மற்றும் தொலைக்காட்சி, செய்தித் துறை ஊடகங்களிலோ நான் சென்று வந்த செய்தி பெரிதாக்கப்படவில்லை. பரவாயில்லை! நான் விளம்பரத்துக்காகச் செல்லவில்லையே! இளமை முதல் என் கடன் பணிசெய்து கிடப்பதுதானே!

ஆளுங்கட்சி மேலிடத்து ஆணையினால், உதறல் எடுத்து நடுங்கிக் கொண்டே சில ஏடுகள் செய்தி வெளியிட்டிருக்கும் நிலை கண்டு, குடந்தை சோகத்தையும் மீறிய கேலிப் புன்னகை என் நெஞ்சில் சிகப்புக் கோடுகளாக மின்னுகின்றன! அந்தோ! பரிதாபம்! சில செய்தி ஏடுகள்!

குடந்தை தீ விபத்தை முன்னிலைப்படுத்தி, விழுந்திருக்கும் பள்ளத்தாக்கிலிருந்து ஏணியாகக் கொண்டு ஏறிவிடலாம் உச்சிக்கு என எதிர்பார்த்து,

நான் குடந்தையில் இருந்தபோது, அதுபற்றிய செய்திகள் ஏடுகளில் வந்துவிடக் கூடாது என்பதற்காக ஏதேதோ புளுகுகளையெல்லாம் சென்னையில் அவிழ்த்து கொட்டியிருக்கிறார் ஜெயலலிதா, நிருபர்கள் பேட்டி என்ற பெயரால்!

2004ஆம் ஆண்டு துவக்கத்தில், ஆளுநர் உரையின் மீதான விவாதத்தையும், நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தையும் நடத்துவதற்கு அஞ்சி, எதிர்க்கட்சித் தலைவர்களும், உறுப்பினர் களும் நேரடியாகக் கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமே என்பதற்காக நாடாளுமன்றத் தேர்தலை ஒரு 'நொண்டி' காரணமாகக் காட்டி, விவாதம் இல்லாமலே பேரவையை அவசர அவசரமாக ஜெயலலிதா முடிக்கச் செய்தார். தற்போது நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து, அதிலே நாற்பது தொகுதிகளிலும் ஒரு தொகுதியிலேகூட வெற்றிபெற முடியாத அளவிற்கு சரித்திரப் பிரசித்தி பெற்ற தோல்வியைச் சந்தித்த ஜெயலலிதா, தேர்தலுக்குப் பிறகாவது ஜூன் மாதத்திலாவது சட்டப் பேரவையைக் கூட்டி நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தை வைத்துக் கொண்டிருக்கலாம். அதற்கும் துணிவில்லாமல் இருந்துவிட்டு, தற்போது வேறு வழியில்லாமல் ஜூலை 31ஆம் தேதிக்குள் நிதிநிலை அறிக்கை நிறைவேற வேண்டிய நிலையில், ஒரே வாரத்திற்குள் நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம், மானியங்களின் மீதான விவாதம், அரசினர் மசோதாக்கள் அனைத்தையும் பற்றிய விவாதத்தை நடத்தி முடிக்கப் போவதாக முடிவெடுத்திருக்கிறார். வேடிக்கையான வேதனை என்னவென்றால், ஒரே நாளில் 24 முக்கியமான மானியங்களில் விவாதமும், அமைச்சர்களின் பதில் உரையும், வாக்கெடுப்பும்! நடக்கிற காரியமா? மாயமா? மந்திரமா?

சட்டப் பேரவைத் தலைவர் அலுவல் ஆய்வுக் குழுவில் பெரும்பான்மையினர் எடுத்துரைத்தக் கருத்துகளை ஏற்காமல், ஆளுங்கட்சி மட்டும் கூறிய கருத்துக்கேற்ப அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார். அவையிலே உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல அஞ்சுகின்ற ஜெயலலிதா, நேற்றையதினம் செய்தியாளர்களுக்கு நீண்ட பேட்டி அளித்திருக்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து மூன்று மாதங்கள் முடிந்து விட்டன. நேற்றையதினம்தான் அ.தி.மு.க. படுதோல்விக்கு என்ன காரணம் என்பதற்கு, ஜெயலலிதா, ஒரு கதையைக் கூறியிருக்கிறார். கேள்வி கேட்டவரே பா.ஜ.க.வுடன் தேர்தல் கூட்டணி வைத்ததுதான் தோல்விக்குக் காரணமா என்று கேட்டிருக்கிறார். ஆனால் தோல்வியைப் பற்றிதான் அலசி ஆராய விரும்பவில்லை என்று கூறிவிட்டு, அந்தக் கேள்விக்கே பத்து நிமிடம் பதில் அளித்திருக்கிறார். அதாவது, வாக்காளர் பட்டியலில் பெரும்பாலான அ.தி.மு.க.வினரின் பெயர்கள் நீக்கப்பட்டு விட்டது என்று கூறியிருக்கிறார். நடுநிலையாளர்கள் கேட்பதெல்லாம் அப்போது தமிழகத்திலே நடைபெற்றது ஜெயலலிதாவின் ஆட்சிதானே! அவருடைய கட்டுப்பாட்டிலே உள்ள அதிகாரிகள் தானே வாக்காளர்கள் பட்டியலில் சேர்ப்பது, தவிர்ப்பது என்று அத்தனை பணிகளையும் செய்தார்கள். வாக்காளர் பட்டியலிலே பெயர்கள் நீக்கப்பட்டதென்றால், அதற்குப் பொறுப்பு ஜெயலலிதா ஆட்சி தானே!

தோல்விக்கு ஜெயலலிதா சொல்லும் அடுத்த காரணம், வாக்கு இயந்திரத்தில் எந்தக் கட்சி சின்னத்தின் பொத்தானை அழுத்தினாலும், அது உதயசூரியன் சின்னத்திற்கே பதிவாகி இருக்கிறது என்று ஒரு இமாலயப் பொய்யை செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டை, ஜெயலலிதா, எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் சாட்டியிருந்த போதிலும், இதற்கான பதிலை சொல்ல வேண்டிய கடமை மத்திய தேர்தல் ஆணையத்திற்கு உள்ளது. ஒரு பொறுப்பான இடத்திலே, முதலமைச்சர் பொறுப்பிலே இருப்பவர் இந்திய நாட்டின் மிகப் பெரிய நிறுவனத்தின் மீது இப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறபோது, தேர்தல் ஆணையம், இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறது என்பதை நாடு எதிர்பார்க்கிறது!

தேர்தல் ஆணையம், இதற்கான பதிலைக் கூறா விட்டால் நாட்டு மக்கள் அந்த அமைப்பின் மீதுள்ள நம்பிக்கையையே இழந்துவிடுவார்கள். ஏனென்றால், குற்றச்சாட்டைக் கூறியிருப்பவர் ஏனோதானோ அல்ல. ஒரு முதலமைச்சர். ஆனால் ஜெயலலிதா வின் கூற்றுப்படி, எந்தப் பொத்தானை அழுத்தினாலும், அது உதயசூரியன் சின்னத்திற்கே பதிவாகியிருக்கிறது என்றால், தமிழ்நாட்டில் வெறும் 16 தொகுதிகளிலேதான் உதயசூரியன் சின்னம் போட்டியிட்டு வெற்றி பெற்றது. புதுவை உட்பட மற்றுமுள்ள 24 இடங்களிலும் ஜெயலலிதா படு தோல்வி அடைந்திருக்கிறாரே, அந்த இடங்களில் எல்லாம் உதயசூரியன் சின்னமே கிடையாதே, பிறகு ஏன் அங்கெல்லாம் ஜெயலலிதா தோற்றாராம்?

அது மாத்திரமல்ல! வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனைத்தும் அண்ணா அறிவாலயத்திலே தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் அனுப்பப் படவில்லை. மத்திய தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டிற்குள் தயாரிக்கப்பட்டு, மாநில தேர்தல் ஆணையத்தின் மூலமாக விநியோகிக்கப்பட்டவை. இதிலே எவ்வாறு எந்தச் சின்னத்தின் பொத்தானை அழுத்தினாலும் உதயசூரியன் சின்னத்திலே பதிவாகச் செய்திருக்க முடியும்? சின்னஞ்சிறு பிள்ளைகளுக்குக் கூட உதிக்காத இந்தக் கற்பனைக் கதை, ஜெயலலிதாவின் மூளையிலே எப்படி உதித்தது? மத்திய தேர்தல் ஆணையமும், தமிழ்நாட்டுத் தேர்தல் ஆணையமும் தி.மு.கழகத்தின் கட்டுப்பாட்டிலா உள்ளன?

அதுமட்டுமல்ல! நாடாளுமன்றத் தேர்தலில் மத்திய அரசின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த பாரதிய ஜனதா கட்சியுடன்தான் ஜெயாவுக்குக் கூட்டு! வாக்கு இயந்திரத்தில் தில்லுமுல்லு செய்வதென்றால் மத்திய அரசு உதவியுடன் ஜெயலலிதாதானே செய்திருக்க வேண்டும். மத்திய பா.ஜ.க. அரசுக்கே தோன்றாத இந்த வக்கிரம், ஜெயாவுக்குத் தானே மூளையில் உதிக்கும்! "கேழ்வரகில் நெய் வடிகிறது என்றால் கேட்பவனுக்கு புத்தி எங்கே போச்சு" என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல செய்தியாளர்கள் ஜெயலலிதாவின் இந்தப் பதிலைக் கேட்டுவிட்டு, அதை மறுத்து அது எப்படி இயலும் என்று கேட்பதற்கு மாறாக, அப்படியே பத்தி பத்தியாக அந்தப் பதிலை பிரசுரித்திருக்கிறார்கள். ஒரு வேளை அவர்களும் வேண்டுமென்றே அந்த அம்மையாரின்

"அறியாமை" உலகத்திற்கு தெரியட்டும் என்பதற்காக அதனை வெளியிட்டிருக்கிறார்களோ என்னவோ? இவர் போய் விஜயகாந்துக்கு அறியாமையென்று விமர்சிக்கிறார். வெட்கக்கேடு!

இருந்தாலும் ஜெயலலிதாவின் பதிலைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், ஒரு செய்தியாளர், 2001ஆம் ஆண்டு தேர்தலின்போதும் வாக்குப் பதிவில் எலெக்ட்ரானிக் ஓட்டுப்பதிவு இயந்திரம்தானே பயன்படுத்தப்பட்டது, அப்போது மட்டும் அ.தி.மு.க. வெற்றி பெற்றது எப்படி என்று நறுக்கெனக் கேட்டிருக்கிறார். அதற்கும் அம்மையார் ஒரு வேடிக்கையான பதிலைக் கூறியிருக்கிறார். அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெறாது என்று எண்ணிக் கொண்டு தி.மு.க. மெத்தனமாக இருந்து விட்டதாகக் கூறியிருக்கிறார். சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. மெத்தனமாக இருந்துவிட்டு, தற்போது நாடாளுமன்றத் தேர்தலில் மோசடி செய்து விட்டதாம்!

மேலும் அவர், சட்டப் பேரவை தேர்தலை சவாலாக எடுத்துக் கொண்டு பட்டி தொட்டியெல்லாம் சென்று வாக்கு கேட்டதால் வெற்றி பெற்றாராம்! நாடாளுமன்றத் தேர்தலிலும் அப்படித்தானே தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே பிரச்சாரத்தைத் துவங்கினார்! ஊர் ஊராகத்தானே சென்றார். ஏன் ஒரு தொகுதியிலே கூட வெற்றி பெறவில்லை?

மேட்டூர் அணையில் 73 அடிக்கு மேலாக நீர் மட்டம் உள்ள நிலையில், அந்த அணையில் நீரைத் திறந்து விட வேண்டுமென்று நான் டெல்டா விவசாயிகளின் நலனை முன் வைத்து கோரிக்கை வைத்திருந்தேன். ஆனால், திறக்க முடியாதென்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். ஏற்கனவே பலமுறை 73 அடிக்குக் குறைவாக நீர்மட்டம் இருந்த நிலையில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. எனினும், தண்ணீரை திறக்க மாட்டேன் என்று மறுக்கின்ற ஜெயலலிதாவின் அறிவிப்பு பற்றி டெல்டா பகுதியிலே உள்ள விவசாயிகளே புரிந்து கொள்ளட்டும்.

அண்டை மாநில அரசுகளுடன் சுமுகமான அணுகுமுறை வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் பல முறை தெரிவித்திருந்தபோதிலும், ஆந்திர அரசின் மீது ஜெயலலிதா தாக்குதல் தொடுத்திருக்கிறார். அந்த மாநிலத்தில் அங்கேயுள்ள அரசியல் நிலைமைகளுக்கேற்ப அந்த மாநில முதல்வர் எடுத்த

'நக்சலைட்' குறித்த நடவடிக்கையைப் பற்றி, ஜெயலலிதா மிகவும் கடுமையாகச் சாடியுள்ளார். அந்த மாநிலத்தில் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு செய்தது பற்றியும் ஜெயலலிதா குறை கூறியதோடு, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலிலும் ஈடுபட்டுள்ளார்.

பேரவையை போதுமான நாட்கள் கூட்டுவதற்குப் பதிலாக குறைத்து விட்டீர்களே என்று நான் கேட்டதற்கு, அதுபற்றி விமர்சிக்க சபைக்கே வராத கருணாநிதிக்கு முகாந்திரமில்லை என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஜெயலலிதா அவைக்கே வராமல் இருந்தாரே, அப்போது சட்டப் பேரவை நடவடிக்கைகளைப் பற்றி எத்தனையோ முறை வெளியேயிருந்து விமர்சித்திருக்கிறாரே! அதையெல்லாம் மறந்துவிட்டாரா? இந்த அரசாங்கத்தின் நடைமுறையைப் பற்றி தனிப்பட்ட கருணாநிதிக்கு மட்டும் அல்ல, இந்த நாட்டிலே வரி செலுத்தும் ஒவ்வொரு குடிமகனுக்கும் கேள்வி கேட்க உரிமை உண்டு. பேரவை எத்தனை நாட்கள் கூடுவதென்று முடிவெடுக்கக் கூடியது அலுவல் ஆய்வுக் குழுவே தவிர, ஆளுங்கட்சி அல்ல. சட்டசபை செத்துவிட்டது என்றே சொல்லி சட்ட சபைக்கு வராமலே இருக்க ஜெயலலிதா கட்சிக்கு மட்டும்தான் உரிமையுண்டு! மற்றவர்களுக்கு இல்லையா?சட்டசபைக்கு வராதவர்களுக்கு அல்லது சட்ட சபையில் இல்லாதவர்களுக்கு சட்டமன்ற ஜனநாயகம் பற்றிப் பேச தார்மீக உரிமை கிடையாது என்று சொல்வது எப்படியிருக்கிறதென்றால்,

திருமணம் செய்து கொள்ளாமல், குழந்தையும் பெறாமல் இருக்கிற ஒரு பெண்மணிக்கு, கும்பகோணம் தீ விபத்தில் இறந்துவிட்ட குழந்தைகளுக்காக அனுதாபம் தெரிவிக்க தார்மீக உரிமையில்லை என்பதுபோல இருக்கிறது!

அன்புள்ள,

மு.க.

24-7-2004

3079. செந்தமிழர் சேனை; சேலத்தில் திரண்டிட!

உடன்பிறப்பே,

பெரியாருடன் இருந்த காலத்தை வாழ்வில் வசந்த காலமென வர்ணித்துப் பெருமிதம் கொண்டார் பேரறிஞர் அண்ணா.

வசந்தகாலமெனில் வண்ணமயில் அருகிருக்க,

வான் தொட நிமிர்ந்து நிற்கும் கூட கோபுர வீடகத்தில்,

விருந்துகளும், கேளிக்கைகளும் விதம் விதமாக நடைபெற,

வாழ்க்கையை வாழ்ந்து பார்ப்பதற்கே வாலிபம் என்று வகுத்துக் கொண்டு,

கோடையை சமாளிக்கக் கொடைக்கானல், ஊட்டி சென்று குளுகுளு வாசம் அனுபவிப்பதுதான் வாழ்வில் வசந்தமெனக் கூறிடும் கூட்டம் ஒன்றுண்டு.

அண்ணா சொன்னது என்னவோ அந்த வசந்த காலமல்ல! அவர் சொன்னது, வாலிபம் என்பது வாழ்க்கையைச் சுவைக்கின்ற பருவம் எனினும், அந்தப் பருவ கால முழுவதையும் பகுத்தறிவு இயக்கத்துக்கென ஒப்படைத்துவிட்டு,

பாவீ!

நாசகாரா!

நாத்திகனே!

நான்காம் சாதி சூத்திரனே!

என நாத்தழும்பேறியவர்கள் நாமாவளி பாடிட, அது கேட்டு மகிழ்ந்து, நம் பணிக்குக் கிடைக்கிற பாராட்டு மொழிகள் இவை என எடுத்துக் கொண்டு,

அதற்குப் பரிசாகக் கிடைப்பது கல்லடியா? சொல்லடியா? கடுஞ் சிறையா? என்பன பற்றிக் கவலையுறாது,

தாழ்ந்த தமிழகத்தைத் தட்டியெழுப்பித் தூக்கி நிறுத்தவும்,
வீழ்ந்த சமுதாயத்தை விழிப்புற்றுக் கிளம்பிடத் தூண்டவும்,

பயன்படும் தூயத் தொண்டாற்றிடும் துடிப்புள்ள தோழர்களுடன் அணி வகுத்துச் சென்றிடும் காலமே, களங்கமற்ற பொது வாழ்வுக்கெனத் தன்னை ஒப்படைத்துக் கொண்டவர்களுக்கு வசந்த காலமாகும்.

அந்தக் காலத்தின் அருமையைத்தான் பெரியாருடன் இருந்து இயக்கப் பணியாற்றிய போது அண்ணா, வசந்த காலமென உணர்ந்து மகிழ்ந்ததாக, அவரே பெரியாருக்கு எழுதிய மடலில் குறிப்பிடுகிறார்.

இன்றைக்கு வேண்டுமானால் இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள், முன்னோடிகள் ஆட்சி மன்றங்களில் ஆளும் வரிசையிலோ, எதிர் வரிசையிலோ அமரும் வாய்ப்புகளை - ஊராட்சி முதல் நாட்டாட்சி வரையில் பெற்றிருக்கிறார்கள்.

ஏன்? மத்திய ஆட்சியிலேகூட இன்றுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் நமது இயக்கத்தினர் இருக்கின்றோம்.

ஆனால், சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கக் காலத்தில் -

திராவிடர் கழகமெனும் தாய்க்கழகத்தில் நாம் இருந்த காலத்தில் -

பின்னர் திராவிட முன்னேற்றக் கழகமாக முகிழ்த்துவிட்ட அந்த ஆரம்பக் கட்டத்தில் -

சொற்பொழிவு நிகழ்த்துவோராயினும் -

தலைவர்கள் வரிசையில் இருப்போராயினும் -

நடந்தே சென்று நாடு முழுதும் கிராமம், கிராமமாக விரிவுரை நிகழ்த்திய கூட்டங்கள் எத்தனை?

நடக்கக் கஷ்டப்படும்போது இரட்டை மாட்டு வண்டிகளில் - ஒன்றிய அல்லது கிளைக் கழகச் செயலாளரின் சைக்கிளின் பின் இருக்கையில் - இப்படி எத்தனை தொலைதூரம்?

"நெஞ்சுக்கு நீதி"யில்கூட எழுதியிருக்கிறேனே! ஆரூருக்கு அருகில் உள்ள ஒரு ஊரில், கூட்டம் நடத்தச் சென்றபோது,எரிந்து கொண்டிருந்த பெட்ரோமாக்ஸ் விளக்கை - கிளைக்கழகச்

செயலாளரின் தந்தை எடுத்துக் கொண்டு போய்விட்டார், என் கூட்டத்தை நிறுத்திட!

பின்னர் ஒரு சட்டியில் நெருப்பைக் கொட்டி தீ வளர்த்து, அந்த வெளிச்சத்தில் கூட்டம் நடத்தினோம், என்று!

நமக்கே இந்தப் பாடு என்றால், நமக்கு முன் பல ஆண்டுகளுக்கு முன்பு, வித்தியாசமான கருத்துகளையும், விளக்கங்களையும் சுயமரியாதை இயக்கத்தின் பேரால் மக்கள் விழிப்புற எடுத்துரைத்திட, எதிர் நீச்சல் போட்ட பெரியார், அண்ணா, பட்டுக்கோட்டை அழகிரி போன்றவர்கள் எவ்வளவு இன்னலுக்கு ஆளாகியிருப்பார்கள்.....

அந்த இன்னல் நிறைந்த காலத்தைத்தான் அண்ணா "வசந்த காலம்" என அழைத்திருக்கிறார்.

ஆம்! இப்போது நாம் சந்திக்கிற எதிர்ப்புகள் - நம்மீது வீசப்படும் கண்டனக் கணைகள் - இந்தக் காலத்தையும்கூட இனிமை ததும்பும் வசந்த காலம் என்றே நம்மை எண்ணிட வைக்கிறது.

ஆளுங்கட்சி நம்மீது அவதூறு பொழிந்தால், அதனைப் பக்கம் பக்கமாக வெளியிட்டுப் பரவசப்படுகிறவர்கள், அந்த அவதூறுப் பிரச்சாரத்தின் அடி வயிற்றைக் கிழிக்குமளவுக்கு நாம் அளிக்கும் பதில்களையும், விளக்கங்களையும் மூடி மறைத்து விடுகிறார்களே! அந்த முகமூடிகளைக் கிழிக்க முனைந்திட வேண்டாமோ!

மொழிப்போர் வீரர்கள்

தாளமுத்து, நடராசனை நினைத்துக் கொண்டு -

தீக்குளித்த தமிழ்ப் போராளி சிங்கத் தமிழன் சின்னசாமியை எண்ணியவாறு -

சிறை சென்று மாண்டோரை -

தீக்குளித்து மாய்ந்தோரை -

குண்டு பாய்ந்து உயிர் இழந்தோரை

நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு,

மெய் வருத்தம் பாராமல் - பசி நோக்காமல் - கண் துஞ்சாமல் - கருமமே கண்ணாக - கன்னியாகுமரி முதல் தலைநகர் சென்னை வரையில்,

சிங்க இளைஞர்காள் -

செந்தமிழர் சேனை -

சேலத்தில் திரண்டிட -

சிறப்புறு பிரச்சாரம் - சீர்மிகுப் பிரச்சாரம் -

"சேலம் புறப்படுவீர்!"

எனும் முழக்கம் சிங்கத்தின் கர்ச்சனையாக விளங்கிட,

ஒன்றியந்தோறும்

சைக்கிள் பேரணிகள்

நடக்கட்டும்; நன்கு தொடரட்டும்!

நாடெங்கும் சேலம் சிறப்பு மாநாட்டினையொட்டி, நாம் நடத்தும் பிரச்சாரக் கூட்டங்களும், இளைஞர் அணியினரின் சைக்கிள் பேரணிகளும் ஊர்தோறும், ஊர்தோறும், குறைந்தது ஒரு நூறு பேருக்காவது உளத்தெளிவை ஏற்படுத்தட்டும்!

ஊரையடித்து உலையில் போடுவோர் -

இங்கே நாடாளுகிறார் - என்கின்ற உண்மையை ஒவ்வொருவர் செவியிலும் போட்டு வைப்போம் - அவர்தம் சிந்தனைக் கதவுகளைத் திறந்து வைப்போம்.

ஜனநாயகக் கூடம் என்பர் சட்டமன்றத்தை! அந்தக் கூடத்தைக் குலைத்து சர்வாதிகாரத்துக்குச் சாமரம் வீசுகிறார் -

அந்தச் சதிச் செயல் பொடிபட சேலத்தில் அறவழி வியூகம் வகுப்போம்.

அதற்கென ஒன்றியந்தோறும் அணி வகுப்போம்!

ஆளுவோர் ஆணவத்திற்கு அறைகூவல் விடுப்போம்!

ஆகஸ்டு 21, 22 சேலம்!

ஆம்! எழுச்சிக் கோலம்!

படைத்திடுவோம் வா!

அன்புள்ள,

மு.க.

29-7-2004

3080. ஓரணியில் என்றென்றும் நிற்போம்!

உடன்பிறப்பே,

பாரதீய ஜனதா கட்சியின் வளர்ச்சிக்கு "இந்துத்துவா" கொள்கை அவசியம் என்று அந்தக் கட்சியின் முக்கிய தலைவர்களான அடல் பிகாரி வாஜ்பய், அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, வெங்கய்ய நாயுடு, சுஷ்மா சுவராஜ், மல்ஹோத்ரா, முக்தார் அப்பாஸ் நக்வி, யஷ்வந்த் சின்ஹா, சஞ்சய் ஜோஷி, அருண் ஜெட்லி, நரேந்திர மோடி உள்ளிட்ட 30க்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட 'கோவா' கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது; அல்லது வற்புறுத்தப்பட்டுள்ளது. முடிவாகச் சொல்ல வேண்டுமானால் அவ்வாறு முடிவான கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

பா.ஜ.க.வை பொறுத்தவரையில் இந்த வற்புறுத்தலும், முடிவும் ஒன்றும் புதிதல்ல! 1999ஆம் ஆண்டு தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பா.ம.க.., ம.தி.மு.க., மற்றும் மதச்சார்பற்ற நிலையைக் கடைப்பிடிக்கும் கட்சிகள் இடம் பெற்றிருந்த அந்தக் காலகட்டத்தில் அந்த அணியில் தி.மு.கழகமும் இடம் பெறும் சூழல் ஏற்பட்டபோது; "இந்துத்துவா" என்பதைப் பற்றியே வாய் திறக்காமல் இருந்ததுதான் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தலைமை யேற்றிருந்த பா.ஜ.க. என்பதை நாடும் நல்லறிவாளர் களும் மறந்துவிடவில்லை.

அதுமட்டுமின்றி அப்போது வெளியிடப்பட்ட செயல் திட்டப் பிரகடனத்திலும் சிறுபான்மையோருக்காகவும், இஸ்லாமிய சகோதரர்களுக்காகவும் அந்த முன்னணிப் பிரகடனத்தில் எவ்வாறெல்லாம் உறுதி மொழிகள், நம்பிக்கை வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன என்பதை; யாரும் அவ்வளவு எளிதில் மறந்திட இயலாது.

காலப்போக்கில் காவியின் நிழல் - கழுகு பறக்கும் நிழலாக மாறி, பிறகு கழுகே பறந்து, பின்னர், பறந்தது, பாய்ந்து;

செயல்திட்ட அறிவிப்புக்களையெல்லாம் பிராண்டிப் பிய்த்து எறிந்துவிட்ட விபரீதத்தைக் கண்ட பிறகுதான்; இந்துத்துவாவை நோக்கி அதே திசையில் பா.ஜ.க. பயணம் நடத்துகிறது என்பதைப் புரிந்து கொண்டு தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய முற்போக்கு எண்ணம் கொண்ட - மதச்சார்பற்ற - மத நல்லிணக்கம் பேணுகிற கட்சிகள் மத்திய அரசிலிருந்தும், அந்த அரசை அமைத்த கூட்டணியிலிருந்தும் விலகி வர நேரிட்டது.

அன்று நாம் ஜாடையாக உணர்ந்தது; சரியாக உணர்ந்ததுதான் என்பதை இப்போது கூவிக் கூவிச் சொல்கிறது கோவாவில் பா.ஜ.க. தலைவர்கள் நடத்திய கூட்டம்! அங்கு எழுப்பப்பட்டுள்ள குரலும் கட்டுப்படுத்தி மிக சிரமப்பட்டு அடக்கி வைக்கப்பட்டு இப்போது அவர்களையும் மீறித் தொண்டையைக் கிழித்துக் கொண்டு வந்த குரலேயாகும். "இந்துத்துவா" என்ற சொல்லுக்கு விரோதமாக சில நேரங்களிலும் - விசுவாசமாக சில நேரங்களிலும் வியாக்கியானம் செய்வதென்பது அத்வானி அவர்களைப் போன்ற தலைவர்கள் கற்ற வித்தையாகும்.

"இந்தியா என்பது இந்துக்களின் நாடல்ல; இந்தியர்களின் நாடு - மதக் கண்ணோட்டத்துடன் பார்க்கக்கூடாது" என்பது மக்களை ஏமாற்ற தேர்தல் நேரத்தில் பா.ஜ.க. வினர் பயன்படுத்திய பசப்பு வாசகம் என்பதை ஒவ்வொரு தேர்தலும் முடிந்த பிறகு நம்மால் உணர முடிந்த காரணத்தினால்தான் அங்கிருந்து வெளியேறுவதைத் தவிர, திராவிட இயக்கத்துக் கொள்கைகளைக் காப்பாற்றிட வழியே வேறில்லை என்ற முடிவெடுத்தோம்.

மனத்திலிருந்த அழுத்தமும் உறுத்தலும் நாளுக்கு நாள் தீவிரமடைந்த காரணத்தினால்தான்; இரண்டு மூன்று ஆண்டுக் காலமாகவே ஏற்கனவே பல்வேறு சூழ்நிலைகளால் பிரிந்து நிற்கும் திராவிட இயக்கங்கள்; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு - இந்தியக் கம்யூனிஸ்டு என்று இரண்டு கட்சிகளாக இயங்குபவை, பொதுவான கொள்கை உடன்பாடுகளில் ஒரே பேரியக்கமாக இயங்குவதுபோல் வேண்டும் என்று கருத்தறிவித்து வருகிறது.

இந்த என் கருத்துக்கு அன்புத்தம்பி வைகோவின் தலைமையில் உள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் - ஆருயிர் இளவல் அவர்களின் தலைமையில் உள்ள திராவிடர் கழகமும் - இதற்கெனத் தனியாக ஒப்புதல் அறிக்கை தராமலே -

நடைமுறையில் தங்களின் உணர்வைப் பதிவு செய்து வருகின்றன. அந்த உணர்வுகளுடன் நம் உணர்வும் ஒன்றிக் கலந்திருக்கிறது.

இதில் முக்கியமாக நான் கோடிட்டுக் காட்டுவது என்னவென்றால்; நான் குறிப்பிட்டுள்ள இந்த ஒவ்வொரு இயக்கத்திலும் உள்ள பல்வேறு மட்டங்களின் முன்னணியினர் - செயல்வீரர்கள்; கடந்த கால நிகழ்வுகளை மனத்திற்கொண்டு அந்தக் கசப்பை அகற்றிக் கொள்ளாமல் ஐயப்பாடு எழுப்புதல்,

தேவையற்ற விமர்சனங்களில் ஈடுபடுதல் - போன்றவை தவிர்த்திடாமல் இருப்பது திராவிட இயக்க ஒற்றுமையைக் கட்டிக்காத்திட ஒரு தடையாக ஆகிவிடக் கூடாது என்பதுதான்.

நாம் ஒன்றுபட்டு விடக் கூடாது என்றும்; நான் ஓர் உதாரணத்திற்காக எடுத்துக்காட்டிய கம்யூனிஸ்டு கட்சிகளின் நிலையை நமதியக்கங்களும் கடைப்பிடித்திட முன்வர வேண்டுமென்றும் - குறிப்பிட்டது கண்டு குலை நடுக்கமெடுத்த குள்ள மனப்பான்மையினர் தமது ஏடுகளில் தாறுமாறாக ஏதேதோ செய்தி வெளியிடுவர் - வெளியிடுகிறார்கள்.

இந்தப் பொதுக் குழுவில் இந்தக் கழகத்தைப் பற்றி இப்படிப் பேசினார்கள் - அந்தப் பொதுக் குழுவில் அதற்குப் பதில் அப்படிச் சொன்னார்கள் என்று கற்பனைச் சிறகு விரித்துக் கதைகள் கட்டப்படுவது நமது ஒற்றுமை ஆர்வத்தையும் - கட்டுப்பாட்டு ஆர்வத்தையும் - குலைத்திட கலாம் விளைக்கும் முயற்சியே தவிர வேறில்லை என்ற முடிவோடு - அந்த ஏடுகளைக் காணாமலே; கண்டாலும் அதுபற்றிய கவலை கொள்ளாமலே - உண்மையான திராவிட உணர்வுக்கு ஓரணுவும் சேதாரம் விளையாமல்

பொறுப்புடன் பாதுகாத்திட வேண்டும். இது பொறுப்புடையோர் கடமை. பொறுப்பற்று ஏனோ தானோ என்று பேசுவோர் யாராயினும் அவர்கள் எங்கிருப்பினும் அவர்கள் பேச்சை ஒரு பொருட்டாக மதிக்காமல் - பொல்லாங்கு கூறி, கலக விதை தூவி கட்டுக்கோப்பான வலிவைக் கலகலக்கச் செய்திட முனைவோர்க்கு - நமது செயல் ஒரு பாடமாக அமையும் வண்ணம் இந்த இயக்கங்களில் உள்ளோர் நடந்துகாட்டுவதே "நமது இன ஒற்றுமை குறிக்கோள்" நிறைவேற ஒப்பற்ற வழியாக அமையும் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது! இது; "இன நலன்"

குறித்து உண்மையாகக் கவலைப்படுவோர்க்கு நான் விடுக்கும் வேண்டுகோளாகும்!

இன நலன் - சமுதாய நலன் - முற்போக்கு வளர்ச்சி - பகுத்தறிவுக் கொள்கை - போன்ற திராவிட இயக்கச் சித்தாந்தங்களை அன்னியில் - இவற்றையொத்த கருத்துக்களைக் கொண்டதும் - இவையன்னியில் அரசியல் ரீதியாக நம்முடன் கூட்டணி கொண்டிருப்பதுமான கட்சிகள், இயக்கங்கள் கட்டிக் காத்த ஒற்றுமையால் பெற்றுள்ள அரசியல் அடிப்படையிலான வெற்றிகள் - மத நல்லிணக்கத்தில் பெற்றுள்ள வெற்றிகள் - மதச் சார்பற்ற அரசை மத்தியில் அமைக்கும் முயற்சியில் கிடைத்துள்ள வெற்றிகள் - இவை தொடர் - தொய்வின்றித் தொடர் - நமது கூட்டணியையும் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளியேற்றிடும் உத்வேகத்தைப் பெறுவோம்!

கடிதத் தொடக்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பா.ஜ.க. வின் கோவா கூட்டத்துக் குரல் வலுப்பெற்று 'இந்துத்துவா' வைப் பரப்பும் முயற்சி தொடருமானால் - ஏற்படும் ஆபத்தை எண்ணிப் பார்த்து,

இந்திய மக்கள் சகோதரத்துவம் காத்திட -

இரத்தம் சிந்தும் மதவெறி அகற்றிட -

நம் இதய கீதமாம் திராவிட இயக்கங்களின் ஒற்றுமை
வலுப்பெற -

ஒன்றுபட்டுக் குரல் கொடுப்போம் -

வென்றெடுத்து ஓரணியில்

என்றென்றும் நிற்போம்.

அன்புள்ள,

மு.க.

02-08-2004

3081. மீண்டும் மீண்டும் தலை நீட்டுவார்கள்!

உடன்பிறப்பே,

திரு. டாக்டர் பீட்டர் சாலமன் அவர்கள் எழுதிய "இறையியல் இலக்கணம்" என்ற தலைப்பிட்ட பல்வேறு மதங்களைப் பற்றிய ஒரு புத்தகம் படித்தேன்.

கருத்து வேறுபாடுகளுக்கிடையே அந்த நூலில் என்னைக் கவர்ந்த சில வரிகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

"மயக்கம்" என்ற தலைப்பில் அவர் எழுதுகிறார்;

- உடல் மயக்கம்,
  மின் வெட்டு மாதிரி!
  மீண்டும் சரி செய்யலாம்.

- மன மயக்கம்,
  பொருள் திருட்டு மாதிரி!
  திரும்பப் பெறலாம்.

- அறிவு தடுமாற்றமும், மயக்கமே!
  வந்தால் குரங்காட்டம்தான்!

இவைதான் என்னைக் கவர்ந்த வரிகள் என்கிறேன். ஆம்! உடலை மயக்கம் ஆட்படுத்துமானால், தகுந்த சிகிச்சை வாயிலாக விடுபட்டு நலம் பெற முடிகிறது.

மனத்தையே மயக்கம் ஆழ்த்தி விடுமானால், என்னதான் மாதவி மடியில் கோவலன் கிடந்தாலும், திரும்ப அவன் கண்ணகியை நாடி வந்தது போல் மனம் திருந்தி மயக்கம் தெளிந்து விடும். அல்லது மயக்கம் தெளிந்து மனம் திருந்திவிடும்.

எனவே உடல் மயக்கமும், மன மயக்கமும் தீரக் கூடியவை.

ஆனால், அறிவு கெடக் கூடிய அளவுக்கு அல்லது அறிவு கெட்ட பிறகு ஏற்படுவதே அறியாமை எனும் மயக்கம்.

அந்த மயக்கம் ஏற்பட்டுவிட்டால், ஒரு மனிதனையே இன்னொரு மனிதன், குரங்கை ஆட்டுவிப்பது போல ஆட்டுவிப்பான்.

மேலே கண்டுள்ள வாசகங்களுக்கு இதுவே சரியான பொருளாக இருக்க முடியும்.

இந்த மூன்றாம் வகை மயக்கத்தில் மக்களை ஆழ்த்துகின்ற செயலில்தான் அரசியலுடன் கலந்து சிலர் ஈடுபட்டு, காலப் போக்கில் அதை மக்கள் இயக்கமாகவே மாற்றிக் கொள்ளவும் முனைகிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தள், விசுவ இந்து பரிட்சத் எனும் பல பிரிவுகளாய்த் தோன்றி, ஒவ்வொரு பிரிவும் பாரதிய ஜனதா எனும் அரசியல் இயக்கத்தில் உபநதிகளாய் இணைந்தும் - கிளைநதிகளாய் வெளிப்பட்டும் இந்துத்துவாவைப் பரப்பிடவும், அதனைப் பரப்புதற்கேற்பப் பலப்படுத்திக் கொள்ளவும் முனைப்பான முயற்சிகள் நடைபெற்று, அரசியல் ரீதியாக வலுப்பெற்றால் - அதனைக் கொண்டு அரசாங்க ரீதியாகவே இந்துத்துவா எனும் தரு வளர்ச்சியடையத் தக்க தருணம் வாய்க்கும் என்று திட்டமிட்டு,

செயல் திட்டப் பிரகடனங்கள் வாயிலாக முடிந்த வரையில் எல்லோரையும் ஏமாற்ற எண்ணி, "இந்தியா ஒளிர்கிறது" என்ற சொற்றொடரில் ஏமாந்து போகாத மக்கள், தமக்கேற்ற மதச் சார்பற்ற ஆட்சியை அமைத்துக் கொண்டவுடன் அதிர்ச்சியுற்று, ஆட்சியோ, நிர்வாகமோ அமைதியாக நடைபெற வொட்டாமல் தமது ஆத்திரத்தைத் தணித்துக் கொள்ளும் வண்ணம் அருவருப்பான எதிர்ப்புகளில் இறங்கத் தலைப்பட்டனர்.

இதற்கிடையே தங்கள் கூட்டணியில் ஏற்பட்டு விட்ட குழப்பத்தை மூடி மறைக்க, கோவாவில் கூடிய முக்கிய பா.ஜ.க. தலைவர்களின் கூட்டத்தில், "இனி இந்துத்துவாவுக்கு" உயிர் கொடுக்கப்படுமென வற்புறுத்திப் பேசி, பின்னர் அந்தக் கருத்தினையே முன் மொழிந்து பார்த்தனர்.

ஜார்ஜ் பொன்னாண்டஸ் இயக்கத்தினர், இந்துத்துவாவை ஏற்றிட இயலாதெனக் கண்டனம் வெளியிட்டனர்.

தெலுங்கு தேசமும், அதே கண்டனத்தை தெரிவித்தது.

இப்படி "பூனைக்குட்டி" பாரதிய ஜனதாவின் கூண்டிலிருந்து வெளிவந்த பிறகு, ஏற்பட்ட குழப்பங்கண்டு குலை நடுங்கிப் போன பா.ஜ.க., "தேசிய ஜனநாயகக் கூட்டணி கரைந்து போகாமல் தடுத்திட இந்துத்துவாவை கை கழுவுகிறது" என்ற கொட்டை எழுத்துச் செய்தியுடன் கோட்டைக்கு வெளியேயிருந்து தலை நீட்டிப் பார்க்கிறது.

"இந்துத்துவாவை கை கழுவுகிறோம்" என்று பா.ஜ.க. சொல்லும் போதெல்லாம், அதன் முக்கிய தலைவர்களான வெங்கய்யா நாயுடு போன்றவர்கள், "தேவைப்படும் போது இந்துத்துவா முழக்கம் செய்யத் தவற மாட்டோம்" என்று சொல்லத் தவறுவதில்லை. புதிய வியாக்ஞானம் அளிக்கவும் தவறுவதில்லை.

உதாரணமாக, 14-6-2004 அன்று "இந்துத்துவா கொள்கையை பா.ஜ. கைவிடாது" என்ற தலைப்பில் வெங்கய்யா நாயுடு அளித்த பேட்டி வருமாறு :-

> "இந்துத்துவாக் கொள்கையை பா.ஜ. கைவிடவில்லை. இந்துத்துவா என்பது தேர்தல் பிரச்சினையல்ல. ஒரு வாழ்க்கை முறை. அதை நினைத்து பா.ஜ. பெருமைப் படுகிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இந்த நாட்டில் சில சக்திகள் தங்களின் அரசியல் லாபத்துக்காக இந்துத்துவா என்பதை வகுப்புவாதம் போல காட்ட முயல்கின்றன. இந்துத்துவாக் கொள்கையை பா.ஜ. கைவிட்டுவிட்டதாக தொண்டர்கள் மத்தியில் ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுள்ளது. அதை விரைவில் களைவோம்."

இவ்வாறு இந்துத்துவாக் கொள்கையை பா.ஜ. கைவிடாது என்று கடந்த ஜூன் திங்களில் பேட்டியளித்த அதே வெங்கய்யா நாயுடு, நேற்று அளித்த பேட்டிக்கு ஏடுகள் கொடுத்த தலைப்பே "இந்துத்துவாவை கை கழுவுகிறது பா.ஜ." என்பதுதான்.

இந்த முரண்பட்ட பேச்சுகளையும், வாதங்களையும்தான் இப்போது கேட்க முடிகிறது!

"புகை பிடித்தால் புற்றுநோய் வரும்" என்று எச்சரிக்கும் போதெல்லாம் ஒருவன் "நான் புகை பிடிப்பதை விட்டுவிட்டேன்" என்றான்.

"எப்படி அது உனக்குச் சாதியமாயிற்று?" - இன்னொருவன் கேட்டான்.

"புகை பிடிப்பதை நான் பல முறை விட்டிருக்கிறேன். அதனால் இது ஒன்றும் பிரமாதமில்லை" என்றான்.

இப்படித்தான் பா.ஜ.க., இந்துத்துவாப் பிரச்சாரத்தை விட்டுவிட்டோம் என்பதும் ஆகும்!

திரு. டாக்டர் பீட்டரின் நூலில் குறிப்பிட்டிருப்பதைப் போலக் கருதிப் பார்த்தால்;

- இந்துத்துவா என்பது
  உடல் மயக்கமல்ல;
  மின்வெட்டு மாதிரி
  மீண்டும் சரியாக!

- மன மயக்கமுமல்ல;
  திருட்டுப் போனது
  திரும்பக் கிடைப்பது போல,
  கிடைப்பதற்கு!

- 'இந்துத்துவா' அறிவையே தடுமாறச்
  செய்யும் மயக்கம் - குரங்காட்டியின்
  கோலுக்கு ஆடும் குரங்கு போல
  மனிதன் ஆட வேண்டியதுதான்!
  ஆடிக் கொண்டேயிருக்க வேண்டியது தான்!
  1999இல் "இந்துத்துவா" இல்லை என்றனர் -
  நேற்று உண்டு என்றனர்.

இன்று தலை நீட்டிப் பார்க்கின்றனர் -

தலையில் நிலைப்படி இடித்ததும்
தலையைக் குனிந்து கொள்வது போல,
குனிந்து கொள்கின்றனர்.
நம்ப முடியாது!
மீண்டும் தலை நீட்டுவார்கள்!

அன்புள்ள,
மு.க.
4-8-2004

3082. பரிவு தொடர்கிறது; பயணமும் தொடங்குகிறது!

உடன்பிறப்பே,

ஐம்பத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 1952ஆம் ஆண்டு வெளிவந்த 'பராசக்தி' படத்தில், கல்யாணி என்ற கதாபாத்திரம் கதியற்ற அபலையாக கையில் குழந்தையுடன் கண்ணீரும் கம்பலையுமாக சோகக் கீதமொன்றை இசைப்பாள்.

இசையமைப்பாளர் தந்த மெட்டுக்கு நான் எழுதிய பாடல் அது.

"பூமாலை நீயே...
புழுதி மண் மேலே வீணே
வந்தேன் தவழ்ந்தாய்?
பறவை வீட்டில் நீ பிறந்திருந்தாலும்
பசி நீங்கவே உணவும்
பறந்தோடி வந்திடும்"

இப்படித் தொடங்கித் தொடரும் அந்தப் பாடல், பலரைத் தேம்பித் தேம்பி அழவைத்திருக்கிறது.

அதைப்போல இன்னொரு சோகம் ததும்பும் கவிதை, அறிஞர் அண்ணா மறைந்தபோதுதான் என்னால் எழுத முடிந்தது.

"இதயத்தைத் தந்திடு அண்ணா" என்ற அந்தக் கவிதாஞ்சலிக்குப் பிறகு - எத்தனையோ சோகக் கவிதைகள் எழுதியுள்ளேன் எனினும்,

இந்த 52 ஆண்டுக் காலத்தில் "பூமாலை"க்கு அடுத்து, "இதயத்தைத் தந்திடு அண்ணா"வுக்கு அடுத்து அல்லது அந்த இரண்டு கவிதைகளுக்கு நிகராக நான் கவிதாஞ்சலி எதையும் தீட்டவில்லை. எழுதிய எதுவும் பழைய கவிதாஞ்சலியை மிஞ்சிட வில்லை.

தம்பி மாறனுக்காக துடித்ததபோதும் சரி! கழக மாவீரர்கள் மறைந்தபோது, "தென் பாண்டிக் கடல் முத்தே, தீர்ந்ததோ உன் வாழ்வு" "சேது நாட்டுச் செல்லக்கிளி எங்கே சென்றது" என்றெல்லாம் தேம்பியபோதும் சரி! "போய் விட்டாயா போர்வாள் மீசைக்காரா" என்று புலம்பிய போதும் சரி! அவர்களை யொத்த அடலேறுகளை இழந்து தவித்தபோதும் சரி! என் கவிதையுள்ளம் கண்ணீராகக் கரைந்து அந்த நீர்த் துளிகள் எழுத்துகளாக மாறியதில்லை.

ஆனால், உடன்பிறப்பே! அவற்றுக்கெல்லாம் நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு, இதோ கடந்த ஜூன் திங்கள் (2004 ஆம் ஆண்டு) குடந்தை சரசுவதிப் பள்ளியில்

"பூமாலை நீயே புழுதி மண் மேலே"

என்பதைப் போல,

"இதயத்தைத் தந்திடு அண்ணா"

என்பதைப் போல,

நான் கவிதாஞ்சலியொன்று எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

குடந்தை எனப்படும் கும்பகோணம் சரசுவதி பள்ளியில் குருத்தோலைகள் - சின்னச் சின்ன மலர்கள் - சிங்கார அகல் விளக்குகள் எண்ணிக்கையில் 94 பேர் - எரிந்து கருகி, சரிந்து விட்டனர் சாவுப் படுகுழியில்! மரணத்தை நெருங்கிவிட்ட 18 குழந்தைகளை மட்டுமே வாழ்நாள் முழுதும் வாட்டும் காயத் தழும்புகளுடன் மீட்கும் பணியில் வெற்றி பெற்றுள்ளனர்.

நான் எழுத எண்ணிய கவிதாஞ்சலிக்கு அந்த 112 பிள்ளைகளே எழுத்துகளாகி விட்டனர். அந்தக் கவிதாஞ்சலிக்காக நான் உகுத்த கண்ணீர்த் துளிகள் இதோ :-

குடந்தை காட்சி, கொடுமை! கொடுமை!!
கிள்ளைகள் மரம் நோக்கிப்
பழம் தின்னப் பறப்பது போல்
பிள்ளைகள் பள்ளி நோக்கிக்
கல்வியுண்ணப் பறந்து சென்றனர்.

கல்விக்குத் தெய்வம் சரசுவதி என்பர்.
பள்ளியும் அவள் பெயராலே அமைந்ததுதான்.
படித்துவிட்டு என்ன ஆவாய் என்று கேட்டதற்கு
துடிப்புமிக்க ஒரு சிறுவன் "பாட்டி! நான் பட்டாளத்தில்
கேப்டனாவேன்" என்று கர்ச்சித்தான்.
கோல மயிலாய் காட்சி தந்த சிறுமியிடம்,
குறும்பாக அவள் அத்தை "நீ கலெக்டரா?" என்றவுடன்
கோபம் கொப்பளிக்க "ஏன் ஆகக் கூடாதா?
கட்டாயம் கலெக்டராவேன்" என்றாள்.
"போலீஸ் உடைதான் எனக்குப் பொருந்தும்,
பொறுத்திருந்து பாருங்கள் ; போலீஸ் டி.ஜி.பி.
ஆவேன்" என்றான் ஒரு பொடியன்.
"நீ என்ன ஆவாய் அம்மா"யென்று தந்தை கேட்க,
"அப்பா! நான் தப்பாது டாக்டராவேன்" என்றாள்,
அந்தத் தங்கம்!

பொன்னார் மேனியன் என் புதல்வன்
பொறி இயல் படித்துப் பொதுப் பணியில்
இணையற்ற இன்ஜினீயர் ஆவேன் என்கிறான்
புகழ் பெறுவதில் அவ்வளவு தாகம் ; அவனுக்கு!
இப்படி வீட்டார், சுற்றத்தார், விரும்பிக்
கேட்டோர் அனைவரிடமும்
கேப்டனாவேன், கலெக்டராவேன்
டாக்டராவேன், இன்ஜினியராவேன்
அய்.ஏ.எஸ்.ஆவேன்
அய்.பி.எஸ். ஆவேன் எனப்
பதில் அளித்த பள்ளிப் பிள்ளைகள்
எதுவுமே ஆகவில்லை!
சரசுவதி பள்ளியில்
சவமானார்கள் என்பதே உண்மை.

அம்மவோ! அல்லித் தண்டுகளை
அக்கினிச் சட்டியில் வாட்டியதுபோல,

ரோஜாமலர்களைக் காளவாயில் வைத்து
கூசாமல் கருக்கியது போல,
பாரிஜாதப் பூமாலையை பற்றி எரியும்
சூளையில் வைத்து சுட்டதைப் போல,
குடந்தைப் பள்ளியின் காட்சி

கொடுமை! கொடுமை! கொடுமை!

★

நான் எழுதியதை நாட்டுக்குக் காணிக்கையாக்கி, இந்தக் கவிதாஞ்சலியையும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைத்தேன். அவரும் குழந்தைகளிடம் மாறாத அன்பு கொண்டவர் என்பதால்! எதிர்பார்த்தபடி அவர் வளமிகு தமிழில் எழுதிய வற்றாத அன்பு கலந்த கடிதம் இதோ :-

குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம்

டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு,

வணக்கம்,

கும்பகோணம் நிகழ்ச்சி குறித்து தாங்கள் எழுதிய அருமையான கவிதைக் கடிதம் கிடைத்தது. நன்றி.

கண்களில் கண்ணீர் மல்க அதைப் படித்தேன். உங்கள் நாட்டுப் பற்றுக்கும், கவிதை உணர்வுக்கும், மனித நேயத்திற்கும் என் வணக்கங்கள்.

★

பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கும் இந்தக் கவிதாஞ்சலியை அனுப்பினேன். அந்த நல்ல இதயத்திலிருந்து, கருணை நெஞ்சத்திலிருந்து வெளிப்பட்ட உணர்வினை, இத்துடன் இணைத்திருக்கிறேன்.

பிரதமர் மன்மோகன் சிங்

அன்பார்ந்த டாக்டர் கருணாநிதி அவர்கட்கு,

கும்பகோணத்தில் நடந்த சோகமான- கொடூரமான விபத்தில், உயிர்களை இழந்த மழலைகளின் நினைவலைகள் பற்றிய உங்களது கவிதையின் மொழி யாக்கத்தை கண்ணுற்றேன்.

சின்னஞ்சிறு வயதில், ஏராளமான உயிர்கள் பலியானதன் பொருட்டு உங்களுக்கு ஏற்பட்ட வருத்தத்தையும், சோகத்தையும் நானும் பகிர்ந்து கொள்கிறேன். பலியானவர்களின் குடும்பத்தாருக்கு அந்தத் தருணத்தில் ஏற்பட்ட சோகத்தை இந்த நாடும், நானும் பகிர்ந்து கொண்டோம் என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

உயிரிழந்த குழந்தைகளுக்காகவும், அந்தக் கொடூர சம்பவத்தால் ஆற்றொணாத் துயருறுவோருக்காகவும் தாங்கள் செலுத்தும் அஞ்சலியில் நானும் பங்கேற்கிறேன்.

★

அடுத்ததாக, அடல் பிகாரி வாஜ்பய் அவர்களுக்கும் அந்தக் கவிதாஞ்சலியை அனுப்பினேன்.

அவரும் கவிஞரல்லவா - கற்பனை அருவி யல்லவா - அந்தத் தோழமை உள்ளத்திலிருந்து வந்த கருத்துப் பொழிவைக் கவனித்தாயா?

முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய்

உங்களது, "குடந்தைக் காட்சி; கொடுமை கொடுமை!" என்ற கவிதையின் இந்தி மொழியாக்கம் கண்டேன். அது எனது உள்ளத்தை ஆழமாகத் தொட்டது. உங்களது உணர்வுபூர்வமான வருத்தமும், சோகமும் அதில் வெளிப்பட்டது. கும்பகோணம் சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது. அந்த இளம் மொட்டுக்கள் உலகை விட்டு நீங்கினாலும், அவர்களது நினைவலைகள் நம் நெஞ்சை விட்டு என்றைக்கும் அகலாது.

அவர்கள், தங்களது தியாகத்தின் மூலம் நமக்கொரு மார்க்கத்தை காட்டியுள்ளனர். வருங்கால சந்ததியினர் தொடர்பான பிரச்சினைகளை இனி அணுகும்போது, மிகவும் உணர்வு பூர்வமாக செயல்படுவதன் மூலமே நமது சமுதாயம் சிறப்பாக விளங்கும் என்பதுதான் அந்த மார்க்கமாகும்.

சின்னஞ்சிறு அரும்புகளை இழந்து தவிக்கும் குடும்பத்தாருடைய துக்கத்தில், இந்த நாடே

பங்கேற்கிறது என்பதை மீண்டும் உங்களுக்கு உறுதி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★

உடன்பிறப்பே,

நல்லோர் - நட்புறவு கொண்டோர் - இந்த மூவரின் நற்சான்றிதழ்களை இணைத்துக் கொண்டு வெளிப்படும் என் கவிதாஞ்சலி, இசை அஞ்சலியாக ஒலிப்பதற்கு இந்த மனிதர்தான் முக்கிய காரண கர்த்தா - பண்பார்ந்த இந்த மனிதருக்குப் பெயர் பரத்வாஜ் - இசை மேதை - படங்கள் பலவற்றின் இசை இயக்குநர் - அவர் சொன்னாராம்! "ஏடுகளில் கலைஞர் கவிதாஞ்சலி படித்தேன். நான் அதற்கு இசை அமைத்து குடந்தை மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தவேண்டும்" என்று!

அவர் இவ்வாறு சொன்னதை ஏடுகளில் கண்டேன். அந்த இசைவாணரின் ஏக்கத்தையும் - என்பால் கொண்ட ஊக்கத்தையும் மனத்துக்குள் பாராட்டிக் கொண்டேன்.

இதில் தன் பங்கு இல்லாவிட்டால் தமிழின் பங்கு இல்லாமற் போய் விடுமேயென்று எண்ணியோ, என்னவோ என் தம்பி கவிப் பேரரசு வைரமுத்து,

நண்பர் பரத்வாஜின் நம்பிக்கை வீண் போகாமல் அவரது ஆவலை என் காதில் போட்டு வைத்தார்.

"கரும்பு தின்னக் கூலியா?" பரத்வாஜ் விருப்பம் நிறைவேறினால் என் இதயம் இன்பத் தேனாறு ஆகும்! எனவே ஒப்புதல் வழங்கினேன். அதன் விளைவுதான் இதோ; - "குடந்தை மலர்களே!" என்ற இந்தக் கவிதை - இசையஞ்சலி!

இதன் ஆடியோ கேசட்டுகள், சி.டி. ஒலி நாடாப் பேழைகள் ஒவ்வொன்றும் ஆயிரம் வீதம் தயாரிக்கப்பட்டுள்ளன - ஆடியோ கேசட் ஒன்றின் விலை 20 ரூபாய் - ஆடியோ சி.டி. ஒன்றின் விலை 50 ரூபாய்தான் - இதில் கிடைக்கும் ஆதாயம் எவ்வளவு ஆயினும், அதனை குடந்தையில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் குடும்பத்துக்காக, அன்புத் தம்பி கோ.சி.மணியின் தலைமையில் உள்ள குழுவின் வாயிலாக, தி.மு.க. அறக்கட்டளை ஒப்படைக்கும்.

கழக உடன்பிறப்புகளும், தமிழ்ப் பெருமக்களும் இந்த ஒலி நாடாக்களை வாங்கி, ஒத்துழைப்பு தர வேண்டுகிறேன்.

இந்த ஒலி நாடாக்களின் விலை முறையே ரூபாய் இருபது, ரூபாய் ஐம்பது என்ற போதிலும், சேலம் தி.மு.கழக சிறப்பு மாநாட்டில் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரின் கையிலும் இந்த ஒலிநாடாக்கள் இருக்க வேண்டும் என்றும், இந்தக் கவிதை இசையஞ்சலியை கேட்ட பிறகாவது இளஞ் சிறார்கள் இந்நாட்டின் எதிர்கால ஒளிவிளக்குகளாகத் திகழ வேண்டியவர்கள், அவர்களின் வாழ்வைப் பிஞ்சு வயதிலேயே அணைத்து விடக் கூடாது என்ற உணர்வைக் கல்வித் துறையில் அதன் வளர்ச்சிக்குப் பொறுப்புடையோர் அனைவரும் பெற்றிட வேண்டும் என்பதற்காக, பத்து ஆடியோ சி.டி. ஒலிநாடாக்களை மொத்தமாக வாங்குவோர்க்கு ரூபாய் 500க்குப் பதிலாக, ரூபாய் 400க்கே தரப்படும். மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் அன்புத் தம்பி வீரபாண்டி ஆறுமுகத்திடம் தொடர்பு கொண்டு, அவர் வாயிலாக அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பாடல் பதிவு செய்யப்பட்டு இதன் மாதிரிப் பிரதியை கவிப் பேரரசு போட்டுக் காட்டிய போது, அருகிருந்து இந்தப் பாடலைக் கேட்டு மெய் மறந்து பாராட்டியவர் தம்பி வீரபாண்டி! இந்த இசை அஞ்சலிப் பாடல் தமிழகத்தின் பட்டிதொட்டி யெல்லாம் பரவிட வேண்டும். குழந்தைகளாம் குல விளக்குகளைப் பாதுகாப்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காக!

என்ன? இன்றைய கடிதம், பாட்டுடன் நிறுத்தி விட்டாய் என்று கேட்கத் தோன்றுகிறதா? சேலத்தில் எத்தனை செய்திகள் பற்றி விவாதிக்க வேண்டியுள்ளது! கழக அமைப்புகளை மேலும் செம்மைப்படுத்த எத்தனை செயல்பாடுகள் தேவைப்படுகிறது என்பதையெல்லாம், சிந்தித்துச் செயல்படத்தானே சேலத்தில் கூடுகிறோம். இடையில் இன்னும் பதினாறு நாட்கள் இருக்கின்றனவே! உன் போன்ற உடன்பிறப்புகளின் பயண ஏற்பாடுகள் எல்லாம் எப்படி என்பதை விசாரித்தறிந்த வண்ணம் இருக்கிறேன்.

இளைஞர் அணியினர் நடத்தும் சைக்கிள் பிரச்சாரப் பேரணிகள், எல்லா ஊர்களிலும் நல்ல வெற்றியைப் பெற்று வருகின்றன.

இதற்கிடையே தஞ்சைத் தரணியில், கழக முன்னணியினர் அனைவரும் விவசாயிகளுக்காக நடத்தும் அறவழி மறியல் போர் -

மேட்டூர் அணை திறக்கப்பட வேண்டுமென்பதற்காக நடைபெறுமென்று தம்பி கோ.சி. மணி அறிவித்துள்ளார்.

அதே நாளில் ஆருயிர் இளவல் வீரமணி அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத்தினர் மறியல் அறப்போரில் ஈடுபடுகிறார்கள். இரு அணிகளும் இணைந்தே செயல்படவேண்டுமென்று கோ.சி.மணியிடமும் சொல்லியிருக்கிறேன்.

இப்படி சேலம் மாநாட்டுக்கிடையே எத்தனையோ பணிகள் - அவற்றையும் கவனித்துக் கொண்டு, சேலத்தை நோக்கியும் சிங்க நடை போட அண்ணாவின் சேனை ஆயத்தமாகட்டும்!

அன்புள்ள,

மு.க.

5-8-2004

3083. வீரபாண்டி சார்பில் அழைக்கிறேன்; வா!

உடன்பிறப்பே,

சேலம், எழிற்கோலம் பூணுகிறது - நீயும் வந்து விட்டால் எழுச்சிக் கோலம் காணும் என்பதில் ஐயமில்லை. சந்தித்துக் கொள்வோர் யாராயினும், சிந்தனையெல்லாம் சேலம் பற்றித்தான் எனச் சொல்லாமல் இருப்பதில்லை. தொலைபேசியில் தொடர்பு கொண்டாலும் சேலத்துக்கு எப்போது? எப்படி நடக்கின்றன பணிகள்! இந்தக் கேள்விக்குப் பிறகுதான் பெண்டு பிள்ளைகள் நலமா என்ற கேள்வியே எழுகிறது!

சேலத்தில்தானே, நமது இயக்கம் பட்டம் பதவிகளைத் தூக்கி எறிந்துவிட்டு - இனி ஜரிகைத் தொப்பிகளுக்கு விடை கொடுப்போம் என வீறு கொண்டெழுந்திட தீவிரத் தீர்மானத்தை நிறைவேற்றி - ஜஸ்டிஸ் கட்சியை திராவிடர் கழகமாக மாற்றிட அண்ணா முன்மொழிந்து, அய்யா முன்னிலையில் 35 மணி நேர விவாதத்திற்குப் பிறகு பின்வரும் வரலாற்றுப் புகழ் பெற்றமுடிவுகள் எடுக்கப்பட்டன.

1. வெள்ளையன் ஆட்சியில் தரப்பட்ட சர், ராவ்பகதூர், திவான் பகதூர், ராவ் சாகேப் போன்ற கௌரவப் பட்டங்களைப் பெற்றவர்கள், அந்தப் பட்டங்களைத் துறக்க வேண்டும். மீண்டும் அவர்களோ, மற்றவர்களோ அத்தகைய பட்டங்களையும், விருதுகளையும் வெள்ளையரிடமிருந்து பெறக் கூடாது.

2. உள்ளாட்சி மன்றத்தில் தலைவர் முதலிய பதவிகள் கௌரவ மாஜிஸ்ட்ரேட், நிர்வாகத் தொடர்பு கொண்ட மற்ற பதவிகளை உடன் ராஜினாமா செய்வதுடன் மீண்டும் பெறுதல் கூடாது.

3. தங்கள் பெயருக்குப் பின்னர் உள்ள சாதிப் பெயரைக் குறிக்கும் பட்டங்களை விட்டொழிக்க

வேண்டும். எதிர்காலத்தில் எவரும் பயன்படுத்தவும் கூடாது.

4. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (ஜஸ்டிஸ் கட்சி) என்ற பெயரை மாற்றி 'திராவிடர் கழகம்' என்று பெயரிடப்பட வேண்டும்.

இப்படி எடுக்கப்பட்ட முடிவுகளின் நோக்கம், நாம் வெள்ளையர் ஆதிக்கத்தைத் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம் என்பதை வெளிப்படுத்துவதற்காக மட்டுமல்ல! இந்த இயக்கம் ஏழை எளிய நடுத்தர மக்களின் இதய கீதம் என்பதைத் தூய்மையாக நிலைநாட்டுவதற்காகவும்கூட!

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (எஸ்.ஐ.எல்.எப்.) என்று அரசியல் ரீதியாக அமைக்கப்பட்டு, ஜஸ்டிஸ் கட்சி அல்லது நீதிக் கட்சி என்று வழக்காறுப் பெயர் பெற்றிருந்த இந்த இயக்கத்திற்குத் துணையாக விளங்கிய சுயமரியாதை இயக்கத்தின் மனித உரிமை, பகுத்தறிவு வளர்ச்சி, மூட நம்பிக்கை ஒழிப்பு, சாதி, மத, பேதம் அகற்றல் போன்ற சமுதாய நலக் கொள்கைகளை அரவணைத்துக் கொண்டு - திராவிடர் கழகமாக எழுந்து நின்று, திராவிட முன்னேற்றக் கழகமாகவும் வளர்ச்சியும் அரசியல் ஆக்கமும் பெற்றுள்ளோமென்றால், அதற்கு விதை ஊன்றிய இடம்தான் சேலம்!

பட்டம் பதவிகள் இருந்தால் மட்டுமே திட்டமிட்டவாறு மக்கள் பணியாற்ற முடியும் என்ற மனப்பான்மை, மக்கள் பணியைவிட பட்டம் பதவிகளை மட்டுமே அதிகம் நேசிப்பதை எடுத்துக்காட்டுகிறது என்பதை, பட்டம் பதவியில்லாமலே பணியாற்றி, இயக்கத்திற்கு அணி சேர்த்திடும் சாதாரண, சாமானிய மனிதர்கள் தங்களின் தன்னலமற்ற உழைப்பின் மூலம் சாதித்துக் காட்டுவார்கள். அத்தகையோர் எண்ணிரந்தோர் நிறைந்த இயக்கம்தான் நமது "தி.மு.க." எனும் தீரர் கோட்டம்! இது கொள்கை மணக்கும் தோட்டம்!

இக்கோட்டத்திற்கும், தோட்டத்திற்கும் காவலர்களில் ஒருவனாக இருப்பதில், அதிலும் தலைமைக் காவலனாக இருப்பதில் - நானடையும் இன்பம், கற்பனைச் சொர்க்கத்திலும் காணக் கிடைப்பதோ! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

அந்த இன்ப உணர்வு - மகிழ்ச்சியின் மலர்ச்சி - இவற்றுக்கிடையே, எட்பகவு அன்ன மன பாதிப்பு எனக்கு ஏற்படுவதுண்டு!

அதாவது ஊர் கூடித் தேர் இழுக்கும்போது, ஓரிருவர் தேரின் வடத்தைத் தொட்டுக் கொண்டிருந்தவனைத் தொட்டுக் கொண்டிருந்தவர் நாங்கள் என்று கூறிக் கொள்வது மட்டுமல்ல, கூடிக் கொண்டு தொல்லையும் கொடுக்கும்போதுதான் எட்பகவு அன்ன உளைச்சல் விளையும் எனக்கு - விளைந்தது பின்னர் விலகியும் விடும். அந்தச் சிறு வேதனை கூட எட்டிப் பார்க்காதிருந்தால் - எல்லோரும் கூடிப் பணிபுரியும்போது ஏற்படும் எல்லையற்ற மகிழ்ச்சி என்னை ஆட்கொள்ளும் என்பதை என் உடன்பிறப்புகள் உணர்ந்துதானே இருக்கிறீர்கள்.

எவ்வளவு பெரிய காரியம் நமக்குத் தலைக்கு மேலிருக்கிறது.

நமது மாநாடு நடக்கும் சேலத்துக்கு அருகில்தானே பொய்மான்கரடு இருக்கிறது. மலைகளின் இடுக்கில் மான் போன்ற தோற்றமுடைய ஓர் உருவம் - அதுவும் ஒரு குறிப்பிட்ட கோணத்திலிருந்து பார்த்தால்தான் மானாகத் தெரியும் - தவறிப்போய் வேறு கோணத்தில் பார்த்தால் மான், தாண்டிக் குதித்து தாவி மறைந்திடும்.

"பொய்மான்கரடு" என அந்த இடத்துக்குப் பெயர் இருந்தாலும், அது உண்மையான மான்தான் என்றும், சீதையை மயக்கி, ஸ்ரீராமனையும் (?) ஏமாற்றப் பார்த்த மாரிச மான் அதுவென்றும் இன்றைக்கும் அந்த இடத்தில் நின்று பேசுவோர் இல்லாமற் போய்விட வில்லை.

அது மானல்ல! மான்போல் தோற்றம் காட்டும் மலைப்பாறையின் அமைப்பு - என்ற உண்மையை அருகில் சென்று பார்ப்போரே அறிவர்! அதிலும் அறிவைப் பயன்படுத்துவோரே தெளிவர்! இல்லையேல் மாரிசன் என்றே மலைத்து நிற்பர்.

என் செய்வது? எதையும் நம்பி எத்தர்களின் சித்து வேலைக்கு ஏமாறுகிறவர்கள் இருப்பதால்தான் சேலத்திற்கருகே மாத்திரமல்ல "பொய்மான் கரடு" - சிம்மாசனங்களிலேகூட செருக்குடன் உட்கார்ந்து கொள்கிற பொய்மான்களைக் காண முடிகிறது.

அந்தக் கரட்டின் நடுவே பொய்மானை ஒரு கோணத்தில் பார்க்க முடிவதைப்போல - இந்தப் பொய்மான்களையும் பணம், பந்தா, பதவி போன்ற கோணங்களின் நடுவே காண முடிகிறது.

கோணம் மாறினால், மானும் கோணலாகி விடும் - உருவமே மாறிவிடும் - காண்போர்க்கும் உண்மை விளங்கி விடும்.

உடன்பிறப்பே, பொய்மான்கரடு காண விரும்பிப் போனாலும் சரி! போகாவிட்டாலும் சரி! தன்னல ஆட்சி என்ற பொய்மானை நம்பி, தமிழ்ச் சமுதாயத்தின் நலன்களையே பறிகொடுக்காமல் பாதுகாத்திட, ஒவ்வொரு கழக உடன்பிறப்பும் - கெட்டிக்காரக் காவலர்களாகத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே சேலத்திற்கு அழைக்கிறேன்! தம்பி வீரபாண்டி சார்பில் அழைக்கிறேன்! வா!

அன்புள்ள,

மு.க.

6-8-2004

3084. சேலத்தில் சிங்கநாதம் செய்வோம் வா!

உடன்பிறப்பே,

ஆகஸ்ட் 21,22 சனி ஞாயிறு, இடையில் இன்னும் பத்து நாட்கள்தான் இருக்கின்றன. அதுவும் பறந்துவிடும்! அதைவிட நமது மனம் வேகமாகப் பறந்து சேலத்தில் போய் நிற்கிறது.

அதோ! அதுதான் மாநாட்டுப் பந்தல் - பந்தல் அல்ல, முழுவதுமே கொட்டகை! எவ்வளவு நெருக்கமாக ஓலைக்கீற்று வேய்ந்து நேர்த்தியாக மட்டுமல்ல, அந்தக் கொட்டகையைத் தம்பி ஆறுமுகம் நிமிர்ந்தும் நிற்கச் செய்திருக்கிறார் பார்!.

கால் நீட்டிப் படுத்துக் கொண்டிருக்கும் ஆண் சிங்கத்தைப் போல மாநாட்டுக் கொட்டகையின் அமைப்பும் அதற்கேற்ப கம்பீரமான முகப்பும் காணும்பொழுது, "கிளம்பிற்றுக்காண் தமிழச் சிங்கக் கூட்டம்" என்று புரட்சிக் கவிஞர் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு ஆரூர் தமிழ் மாணவர் மன்ற விழாவுக்கு எழுதி அனுப்பிய வாழ்த்து முழக்கத்தை நினைவூட்டும்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டுமடா தம்பி! என்று எந்நேரமும் நம் நாடி நரம்புகளில் துணிவினை மூட்டிக்கொண்டிருக்கும் அண்ணாவின் பெயரால், மாநாட்டுக்கென அமைக்கப்பட்டுள்ள அழகுநகர்!

சிந்தை அணு ஒவ்வொன்றிலும் குடிகொண்டுள்ள சிந்தனையாளன் - செயல் வீரன் முரசொலி மாறன் பெயரால் மாநாட்டு அரங்கம் -

நெஞ்சிலோர் வஞ்சகமின்றி பழகிடும் நாஞ்சிலார் பெயரால் மாநாட்டு வளாகம் -

நடிப்புக்குச் சிறிதும் இடமின்றி, மெய்யாகவே இயக்கத்திற்கெனத் துடிக்கும் இதயங்கொண்டோன் - இளைய வேங்கை - எனக்கும் பிள்ளை போன்றோன் - குறை வயதில் மறைவெய்திய மாணிக்கம் - வீரபாண்டி செழியன் பெயரால் பந்தல்

- கழக வீராங்கனை கடமைக் கருவூலம் கமலம் மாணிக்கம் பெயரால் முகப்பு - கொள்கைக் குன்று சகாதேவன் பெயரால் கொடிமேடை -

நினைவில் நிழலாடிக் கொண்டிருக்கும் இத்தனை இலட்சிய முத்துக்களின் பெயர்கள் நிறைந்து கிடக்கும் அந்த இடத்துக்குப் பெயர்தான் சேலம் - அங்குதான் நமது ஆட்பெரும் படை, அண்ணா வழி நின்று, ஆக்கப்பணிகளுக்கான அரிய பல திட்டங்களைத் தீட்டியும் - தமிழகம் தலை நிமிர - வளங்குவிய - தன்மானக் கொடி உயர்த்தி தரணியில் புகழ் விரித்திட, தக்க முடிவுகளை எடுத்திடவும் இருநாட்கள் கூடுகிறோம்! ஆம்! எழுச்சித் திருநாட்கள் அவை!

தியாக வடுக்கள் பல தேகத்தில் பெற்றுத் திகழும் தீரன் வீரபாண்டி, வரவேற்புரையாற்றுகிறார்.

நெருக்கடி நெருப்பில் புடம் போட்டு எடுக்கப்பட்ட தங்கம் ஸ்டாலின், இயக்கக் கொடியேற்றி வைக்கிறார்.

நம் இருகண்ணில் ஒரு கண்ணாக இருந்து இடுக்கண் வரும் போதெல்லாம் கழகத்தை, இமைப்பொழுதும் அயராமல் காத்து நிற்கும் இனியவர் பேராசிரியர் அவர்கள், மாநாட்டை தொடங்கி வைக்கிறார்.

திராவிட இயக்கத் தோன்றல்களின் படம் திறந்து வைத்து, நமது பகுத்தறிவுப் படையினர் ஆற்ற வேண்டிய பண்பார்ந்த ஆக்கபூர்வ செயல் குறித்து அறிவுரை தருவார் - ஆர்க்காடு வீராசாமி!

துணைப் பொதுச் செயலாளர்கள் அருமைத் தங்கை சற்குணபாண்டியன், ஆற்றல்மிகு தம்பி பரிதி இளம்வழுதி ஆகியோர், இவர்களுடன் இன்சொல் எடுத்து இனியவை உரைத்து இயக்கத்தின் கீர்த்தி பெருக்கிவரும் முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன் -

இன்னும்
இன்னும்
எத்தனை எத்தனை
முத்தனைய கருத்துரைப்போர் -
இசை பொழிவோர் -
கலையழகு காட்டுவோர் -

அடலேறு அனையத் தம்பிமார்கள் -

சேலத்தில் - சிறப்பு மாநாட்டில் - நம் சேனை திரளும் அண்ணா நகரில்! செழியன் பந்தலில்! மாறன் அரங்கெனும், மாநாட்டு மேடையில்!

உடன்பிறப்பே,

மாநாடுகளை, தொடர்ந்து மாவட்டத் தலைநகர்களில் நடத்துவதென்று கழகம் முடிவெடுத்த போதும் - அதையொட்டி, முறையே தம்பி பொன்முடி முன்நின்று நடத்திய விழுப்புரம் மாநாடு - தம்பி கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்., முன்நின்று நடத்திய விருதுநகர் மாநாடு ஆகியவை, நாட்டு மக்களை விழிப்புறச் செய்கிற அளவுக்குத் திருப்பு முனைகளாக நடைபெற்றபோதும், அப்போது இருந்த அரசியல் நிலைமைக்கும், இப்போது சேலம் மாநாடு நடைபெறும்போது இருக்கிற அரசியல் நிலைமைக்கும் உள்ள வேறுபாடு, வெளிப்படையானது!

2003 - செப்டம்பர் 19,20,21-ல் நடைபெற்ற விழுப்புரம் மாநாட்டில்தான், பொடா சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று வற்புறுத்தியும் - தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வற்புறுத்தியும் - மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழும் ஆகவேண்டுமென்று வலியுறுத்தியும் - சேது சமுத்திரத் திட்டம் போன்ற தமிழகத்தை வளப்படுத்தும் திட்டங்களை வற்புறுத்தியும் - இன்னும் சில கோரிக்கைகளை முன்வைத்தும் மத்திய மாநில அரசு அலுவலகங்களுக்கு முன்னால் அறப்போர் மறியல் நடத்த தீர்மானிக்கப்பட்டது - அதன்படி, அந்தப் போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்று, லட்சம் பேர் சிறை சென்றனர்.

அடுத்து 2004 - பிப்ரவரி 21,22, தேதிகளில் நடைபெற்ற விருதுநகர் மாநாட்டுக்கு முன்பே, தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசிலிருந்து தி.மு.க.வும் - தொடர்ந்து ம.தி.மு.க.வும் - பா.ம.க.வும் வெளியேறியது என்பது வரலாறு! அதையொட்டி அமைந்த தமிழகக் கூட்டணியின் கட்சித் தலைவர்கள், விருதுநகர் மாநாட்டில் கலந்து கொண்ட சிறப்பும் சேர்ந்து கொண்டது -

அதன்பிறகு 2004 மே திங்களில் நாடாளுமன்றத் தேர்தல் - தமிழகத்தில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி, தி.மு.க. தலைமையில்!

அகில இந்திய அளவில் காங்கிரஸ் தலைமையில் - இடதுசாரிக் கட்சிகள் பக்கபலமாயிருக்க - ஐக்கிய முற்போக்கு கூட்டணி!

மதவெறித் தூண்டுதலால் இருள் படியத் தொடங்கிய இந்தியாவில், "இந்தியா ஒளிர்கிறது" என்று கற்பனை விளம்பரம் செய்து, களத்தில் வென்றிடப் பார்த்தார்கள் -

நம் அணிக்கு எதிராக அமைந்த அணியினர் மூர்க்கமாகத் தாக்கிப் பேசினர் - மோசமான மொழிகளைப் பயன்படுத்தி மோதினர்!

நாம் தமிழகத்திலும், புதுவையிலும் அமைத்த கூட்டணி - நாற்பதும் நமதே என்று வென்றது!

அதனால் நாடாளுமன்றமும் நமதாயிற்று!

இடதுசாரிக் கட்சிகளும் நம்மோடு - அதனால், மதவாதத்தின் இடுப்பு முறிக்கப்பட்டது -

"பொடா"வைத் திரும்ப பெறுக! தம்பி வைகோவை விடுவித்திடுக! என்று தமிழகத்தில் ஒரு கோடி கையெழுத்து - முதல் கையெழுத்து என் கையெழுத்து! -

தி.மு.க. அறிவித்த உண்ணா நோன்பு அறப்போர் தமிழக முழுவதும்!

கண்டனக் கூட்டங்கள் தமிழக முழுவதும்! - அறவழி ஆர்ப்பாட்டங்கள்!

இத்தனையும் பொடா சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி! வைகோவை விடுவிக்க வலியுறுத்தி!

எதற்கும் மத்திய அரசும் - இங்குள்ள மாநில அரசும் அசைந்து கொடுக்கவில்லை -

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு, மத்தியில் நமது கூட்டணி ஆட்சி!

இப்போது "பொடா" போகிறது! காரணம், மக்கள் அளித்த தீர்ப்பு - நமது கூட்டணிக்கும், இடதுசாரிக் கட்சிகளுக்கும்! ஆம் முக்கியமாக கம்யூனிஸ்டு கட்சிகளுக்கும்! -

அதுமட்டுமா? - மலையுச்சியில் ஏறி நின்று கொண்டு, மமதையுடன் - யார் என்ன சொன்னாலும் - பொடா வழக்கை,

வைகோ மீது தொடர்ந்ததை வாபஸ் வாங்க மாட்டேன் என்று வாய்நீளம் காட்டிய ஜெயலலிதா, இதோ "பொடா" வழக்கை "பொடக்" என்று கீழே போட்டு விட்டாரே! எல்லாம் மக்கள் சக்தி தந்த பாடம்தான்! -

விழுப்புரம் மாநாடு - விருதுநகர் மாநாடு - இந்த இரு மாநாடுகளுக்கும், சேலம் மாநாட்டுக்கும் இடையிலே இருந்த காலத்தில், மக்கள் சக்தியை நாம் திரட்டி வெற்றி பெற்றதால்தான் - ஜெயலலிதாவின் வீண்பிடிவாதங்கள் தகர்ந்துள்ளன - வீம்பு வீழ்ந்துள்ளது -

கழக ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்டு இந்த ஆட்சியில் பறிக்கப்பட்ட சலுகைகள், உரிமைகள் திரும்பக் கிடைக்கவும் - கைவிடப்பட்ட திட்டங்கள் மீண்டும் கை கூடவும் - ஆனதற்குக் காரணம், நாற்பதும் நமக்கே ஆனதுதான்! ஆம்! இது முழுக்க முழுக்க மக்கள் பெற்ற வெற்றி! - சேலத்துக்குப் பிறகும் இந்த சிறப்பான வெற்றிகள் தொடர சேலத்தில் சிங்கநாதம் செய்வோம்! வா!

அன்புள்ள,

மு.க.

12-8-2004

3085. வேறுவகை ஓய்வினை நினைக்கமாட்டேன்; எடுக்கமாட்டேன்!

உடன்பிறப்பே,

இரு விளக்கங்களை இந்த ஒரு கடிதத்தில் அளித்திட விரும்புகிறேன். தமிழகத்தின் நிதியமைச்சர் பொன்னையன், கடந்த 7-8-2004 அன்று நான் விடுத்த அறிக்கைக்கு, 12-8-2004 அன்று பதிலளித்திருக்கிறார்.

காரமான அறிக்கை! ஆனால் சாரமில்லை! நான் வெளியிட்ட அறிக்கையில் தணிக்கை அதிகாரி ஒருவர் கொடுத்த பேட்டிக்காக மக்களின் வரிப்பணம், 122 இலட்சம் ரூபாய் விரயமாக்கப்பட்டுள்ளது என்று தான் முக்கிய குற்றச்சாட்டாகக் கூறியிருந்தேன். அந்தக் குற்றச்சாட்டுக்கு பொன்னையனின் அறிக்கையிலே ஒரு வரியாவது பதில் கூறப்பட்டிருக்கிறதா என்றுதான் அவரது அறிக்கையைப் படித்த அத்தனை பேரையும் கேட்க விரும்புகிறேன்.

ஒரு அதிகாரிக்கு பதில் சொல்வதற்காக, மக்களின் வரிப் பணம் கோடிக் கணக்கில் செலவாக வேண்டுமா? என்று நான் நேரடியாகக் கேட்டதற்கு, முதலமைச்சரும், நிதியமைச்சரும் என்ன பதில் சொல்கிறார்கள்?

இந்த நேரடியான கேள்விக்குப் பதில் சொல்வதைத் தவிர்த்துவிட்ட நிதியமைச்சர், என்னை அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டுமென்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். ஏன்? நான் ஓய்வு பெற்றுவிட்டால் தமிழ்நாட்டை அவர்கள் இப்படியே தொடர்ந்து கொள்ளை அடிக்கலாம் என்பதற்காக!

தமிழகத்தின் நிதி நிலையை முற்றிலுமாக தி.மு.க. ஆட்சி சீரழித்துவிட்டதாக மூன்றாண்டு காலம் கழிந்த பிறகும், அதே பல்லவியை இப்போதும் பொன்னையன் பாடியிருக்கிறார். நிதிநிலையை நாங்கள் என்ன சீரழித்து விட்டோம்? எதை சீரழிப்பு செலவுகள் என்கிறார் பொன்னையன்?

திருமணமாகாத ஏழைப் பெண்கள் திருமணம் செய்வதற்கு உதவியாக, பத்தாயிரம் ரூபாய் வீதம் 2 லட்சத்து 28 ஆயிரத்து 593 ஏழைப் பெண்களுக்கு நிதியளித்தோமே, அதுவா?

தொழிலாளர்களுக்கு ஆண்டு தோறும் 20 சதவிகித அளவிற்கு போனஸ் அளித்தோமே, அதைச் சொல்கிறாரா?

அரசு அலுவலர்களுக்கு முறைப்படி அகவிலைப்படி உயர்வு அளித்தோமே, அதைச் சொல்கிறாரா?

மத்திய அரசு அலுவலர்க்குச் சமமான ஊதியத்தை தமிழக அரசு அலுவலர்க்கு வழங்கினோமே, அதைக் கூறுகிறாரா?

அனைத்துச் சாதியினரும் ஒன்றாக இணைந்து வாழ, பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தை அமைத்தோமே, அதைச் சொல்கிறாரா?

உழவர் சந்தையை உபயோகமற்றது என்கிறாரா?

மக்கள் நலப் பணியாளர்களையும், சாலைப் பணியாளர்களையும் நியமித்து வேலை வாய்ப்பினைப் பெருக்கினோமே, அதைச் சொல்கிறாரா?

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது ஊதாரித்தனம் என உரைக்கிறாரா?

மாணவர்க்கு 'பஸ்' பாஸ் வழங்கியது தவறு என்கிறாரா?

குழந்தைகளுக்கு முட்டையோடு சாப்பாடு அளித்ததை மாபாதகச் சீரழிவு என்கிறாரா?

இதையெல்லாம் சீரழிவுச் செலவுகள் என்று பொன்னையன் கூறுவாரேயானால், இந்த அரியத் திட்டங்களையெல்லாம் இவர்கள் ஆட்சியிலே குப்பையிலே தூக்கிப் போட்டிருந்தார்களே, அதற்குப் பிறகு நிதி நிலைமை என்னவாயிற்று? இவர்கள் துப்பி யதை நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு இவர்களே தூக்கி வாயில் போட்டுக் கொள்கிறார்களே! ஏன்?

தமிழக அரசின் கணக்கில் குறை கண்டு பேட்டி யளித்தவர் ஒரு தணிக்கை துறை அதிகாரி. அதற்குப் பதிலளிக்க வேண்டியவர் நிதியமைச்சர். அவர் பதில் கூறாமல், அகில இந்திய பத்திரிகைகளில் முதலமைச்சர் பெயரால் முழுப் பக்கம் விளம்பர அறிக்கை

வெளிவந்தது. ஒரு அதிகாரியின் பேட்டிக்கு முதலமைச்சரே 122 லட்சங்களைச் செலவழித்து பதில் அளித்தது நியாயந்தானா? என்று நான் கேட்டால், நான் தான் நிதியை சீரழித்து விட்டேன் என்றும், நான் அரசியலிலிருந்து ஓய்வு பெற வேண்டும் என்றும் பொன்னையன் அறிக்கை விட்டால் அவர் வீர, தீர, பராக்கிரம, விவேக சிந்தாமணி ஆகி விடுவாரா?

என்னுடைய தலைமையில் உள்ள தி.மு.க. கூட்டணிதான் அண்மையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்திலும், புதுவையிலும் சேர்ந்து 40 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளது. ஆனால் நான் ஓய்வு பெற வேண்டுமாம். பொன்னையன் ஆணையிடுகிறார். 40 இடங்களிலும் படு தோல்வி அடைந்தவர் இவருடைய தலைவி ஜெயலலிதா! இன்னும் சொல்லப்போனால், தன்னுடைய சொந்தத் தொகுதிக்குள்ளேயே நுழைய முடியாத அளவிற்குத் திருச்செங்கோட்டிலிருந்து சென்னைக்கு வந்து பணியாற்றி, இங்கேயும் தோல்வியைத் தழுவிக் கொண்ட பொன்னையன் ஓய்வு பெறாமலிருந்து மேலும் மேலும் மக்களை ஏமாற்ற வேண்டுமாம்.

பொன்னையன் தனது அறிக்கையை முடிக்கும் போது கருணாநிதி, சட்டமன்றத்தின் மரபுகளையும், உரிமைகளையும் காக்கும் பாதுகாவலராக ஒரு போதும் ஆக இயலாது என்று சொல்லியிருக்கிறார். உண்மைதான். ஏனென்றால் இந்தச் சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தை ஒரே நாளில் முடிப்பார்கள், 24 மானியங்களின் மீதான விவாதங்களையும் ஒரே நாளில் அவசரக் கோலம் அள்ளித் தெளி என முடிப்பார்கள், நிதி நிலை அறிக்கை மீதான கூட்டத் தொடரையே எட்டே நாளில் முடிப்பார்கள், அனைத்து எதிர்க்கட்சிகளையும் அவையிலே இல்லாமல் செய்து விட்டு, தங்களுக்குத் தாங்களே புகழ் புராணம் பாடிக் கொண்டு அவையை நடத்துவார்கள், எதிர்க்கட்சிகள் ஆதாரபூர்வமாக குற்றஞ்சாட்டினால், அவர்கள் மீது அவர்களே உரிமைப் பிரச்சினை எழுப்பி குழுவிற்கு பரிந்துரை செய்வார்கள், காவல்துறைக்குப் பொறுப்பான துறையின் அமைச்சரான ஜெயலலிதா இல்லாமலே அந்த மானியத்தின் மீது விவாதம் நடத்தி முடிப்பார்கள், இதுபோன்ற வேடிக்கை விநோதங்களை நடத்தும் சட்டமன்றத்திற்கு நான் எப்படிப் பாதுகாவலாக இருந்திட முடியும்!

அ.தி.மு.க. ஆட்சியின் சட்டமன்றச் செயல்பாட்டிற்கு ஒரே ஒரு சிறிய உதாரணத்தை மட்டும் இங்கே கூறுகிறேன். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி திங்களில் அந்த ஆண்டிற்கான நாட்குறிப்பினை (டயரி) தயாரித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்குவது பல ஆண்டுகளாக இருந்து வரும் நடைமுறை. ஜனவரி திங்கள் அல்லது தாமதமானால், அதற்கு அடுத்த மாதத்தில் அந்த நாட்குறிப்புகள் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். ஆனால் இந்த ஆண்டுக்கான நாட்குறிப்பு, இந்த ஆட்சியினரால் ஜூலைத் திங்கள் இறுதியிலேதான் உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. அதாவது நாட்குறிப்பில் ஏழு மாதங்கள் முடிவடைகின்ற நிலையில்தான் அது விநியோகிக்கப் பட்டுள்ளது என்ற இந்த ஒரு சான்றிலிருந்தே இவர்களுடைய திறமை தெரிகிறதா? இல்லையா? இந்த லட்சணத்தில்தான் தமிழக முதலமைச்சர், மத்தியில் ஓர் அரசாங்கம் இருக்கிறதா என்றே மக்களுக்குச் சந்தேகம் என்றும் செயல்படாத மத்திய அரசு என்றும், சாடியிருக்கிறார்.

"செயல்படாதவர்" என்று பிரதமர்களை வர்ணிப்பதில் ஜெயலலிதாவுக்கு எப்போதுமே ஒரு சுவையுண்டு. ராஜீவ் காந்தி, நரசிம்மராவ், வாஜ்பய் இவர்கள் மட்டுமல்ல! எம்.ஜி.ஆர். பற்றியே ஜெயலலிதா தனது கைப்பட கடிதமே எழுதியிருக்கிறார், செயல்படாத முதல்வர் என்று டெல்லிக்கு!

> "தமிழகம் வறட்சி மாநிலங்களுள் ஒன்றாக அறிவிக்கப்பட்டிருந்தால் அரிசி கிடைக்கும், நிதி கிடைக்கும், விவசாயக் கடன்களில் சலுகை இருக்கும். ஆனால் கிடைக்கவில்லை. தமிழகத்திலிருந்து சென்ற 12 மந்திரிமார்களும், இதைவிட வேறு என்ன வேலையை முக்கியம் என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்?"

இந்தக் கேள்வி ஜனநாயக முற்போக்கு கூட்டணி அமைச்சர்களை நோக்கி சில நாட்களாக ஜெயலலிதாவினாலும் - இதே பொன்னையன் போன்றவர்களாலும் - அவருக்குத் துணை நிற்பவர்களாலும் எழுப்பப்பட்டு வருகிறது. இதைப் படிப்பவர்களும் கேள்வி சரிதானே என்று நினைப்பார்கள். உண்மை நிலவரம் என்ன என்பதை, கேள்வி கேட்பவர்களும், அதைப் படிப்பவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு மாநிலம் வறட்சி மாநிலமாக மத்திய அரசினால் அறிவிக்கப்பட வேண்டுமென்றால், பாதிக்கப்பட்ட மாநில அரசுகள் உரிய நேரத்தில், மாநிலத்தில் உள்ள நிலைமைகளை புள்ளிவிவரத்தோடு அறிக்கையாகத் தயாரித்து, அதனை மத்திய அரசின் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி வைக்கவேண்டும். பின்னர் அவர்கள், அந்த மாநிலத்திலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டு மத்திய அரசிலே அமைச்சர்களாகப் பொறுப்பேற்றிருப்பவர்களிடம், அந்த மாநிலம் வறட்சியாக இருப்பது குறித்து தயாரிக்கப்பட்ட அறிக்கையின் நகல்களைக் கொடுத்து, மத்திய அரசிடம் பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும். மாநிலத்திலே என்ன நிலைமை என்று மாநில அரசு மூலம் அதிகாரபூர்வமாகத் தெரியாத நிலையில், மத்திய அரசிலே அமைச்சர்களாக இருப்பவர்களால் எதுவும் செய்ய இயலாது. மாநில மக்களை வாழ வைக்க வேண்டியது மத்திய, மாநில அரசுகளின் பொறுப்பு என்றபோதிலும், மத்திய அரசைவிட அந்த மாநில அரசிலே பதவி வகிப்பவர்களுக்குத்தான் அதிகப் பொறுப்புண்டு.

மத்திய அரசையோ, அதில் அமைச்சர்களாக இருப்பவர்களையோ, குறிப்பாக, பிரதமரையோ சந்திப்பது என்பது தன்னுடைய மரியாதைக்கு உகந்தது அல்ல என்று மாநில முதலமைச்சர்கள் நினைப்பார்களேயானால், மத்தியிலே அமைச்சர்களாக இருப்பவர்கள் மட்டும் நினைத்தால் ஒரு மாநிலத்தை வறட்சி மாநிலமாக அறிவித்திட இயலாது.

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் சார்பில், மத்தியிலே 12 அமைச்சர்கள் பொறுப்பிலே இருக்கிறார்கள் என்றால் அவர்கள், தமிழகத்தின் நலனுக்காக எதையும் செய்யாமல் இருந்துவிடவில்லை. தொடர்ந்து ஏடுகளைப் படிப்போர் அனைவரும் அதனை அறிவார்கள்.

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகத்தான், நெசவாளர்களை நெருக்கிய சென்வாட் வரி ரத்து செய்யப்பட்டது. சேது சமுத்திரத் திட்டம் தொடங்கப்படுகிறது. சென்னையிலே கடல் நீரைக் குடிநீராக்கும் ஆயிரம் கோடி ரூபாய் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. எத்தனையோ ஆண்டுகளாக நிறைவேறாத கோரிக்கையான தமிழ் செம்மொழித் திட்டம் அமல்படுத்தப்படவுள்ளது. தமிழகத்திலே மட்டும் ஐந்து புதிய

ரெயில்வே திட்டங்கள் இந்த ஆண்டு வரவுள்ளன. மூன்று மாதக் காலத்திலே அறிவிக்கப்பட்டவைதான் இவை.

இவற்றையெல்லாம் மறந்துவிட்டு அல்லது மறைத்து விட்டு பன்னிருவர் இருந்தும் என்ன பயன்? ஏன் வறட்சி மாநிலமாக அறிவிக்கப்படவில்லை? என்று புகார் கூறுவதில் எந்தவிதமான நியாயமும் இல்லை.

தமிழகம் வறட்சி மாநிலமா? என்பது பொது மக்களால் அனுபவ ரீதியாக உணர்ந்து தெரிந்து கொள்ள முடிகிறதே தவிர, அரசு தரப்பிலிருந்து எந்தவிதமான அறிவிப்பும் கிடையாது. திடீரென்று நாளேடுகளில், முதல் அமைச்சர் ஜெயலலிதா, பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதாகவும், அதில் வறட்சி பாதித்த மாநில முதல்வர்கள் கூட்டத்தில் பங்கேற்கத் தமிழக அரசையும் அழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருப்பதாகவும் செய்தி வந்தது. இந்தச் செய்தியை பத்திரிகையாளர்களிடம் ஜெயலலிதா கூறியபோதுகூட, தமிழகத்திலிருந்து சென்றுள்ள 12 மத்திய அமைச்சர்களும் தமிழகத்தை வறட்சி மாநிலமாகக் கருதி நிதி பெற்றிட உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவில்லை. கேட்டுக் கொள்ளக் கூட வேண்டாம், சும்மாவாவது இருந்தாரா என்றால் அதுவுமில்லை. மாறாக, தமிழக அமைச்சர்கள் அதற்காக முயற்சி செய்யாதது, வெட்கக் கேடாகவும், அதிர்ச்சியாகவும் உள்ளதென்று அவர்களைத் தாக்கியிருந்தார். இவரோ அல்லது இவருடைய அமைச்சர்களோ யாரும் நேரடியாகத் தமிழகத்தின் மத்திய அமைச்சர்களைச் சந்தித்து, நிலைமைகளை விளக்கி மத்திய அரசிடமிருந்து நிதி பெற்றிட உதவிட வேண்டுமென்று கோரவில்லை. கடிதங்கள் மூலமாகவும் கேட்கவில்லை. இதுவரை நமது முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு மரியாதை சந்திப்பாகக் கூட பிரதமர் மன்மோகன்சிங் அவர்களைப் போய்ப் பார்க்கவில்லை. குஜராத் முதலமைச்சர் மோடி கூட பிரதமரைப் போய் சந்தித்துவிட்டார்.

உண்மை நிலை இவ்வாறிருக்க, ஒருசிலர் மத்திய அமைச்சர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள், ஏன் உதவிடவில்லை என்றெல்லாம் கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றார்கள். மத்திய அரசு மீது கண்டனம், கிண்டல் பொழிகிறார்கள்.

ஆனாலும், பொதுவாக ஒரு குறையைச் சுட்டிக்காட்டாமலிருக்க முடியவில்லை. மத்தியில் எந்த ஆட்சி அமைந்தாலும், முன்னேறிய மாநிலங்களை விட பின்தங்கிய மாநிலங்களுக்கு அதிக உதவி என்ற ஒரு கொள்கையைப் பின்பற்றுவதால், முன்னேறிய மாநிலங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்தக் கருத்தை நான் ஆட்சியில் இருந்தபோதே சுட்டிக் காட்டி முன்னேறிய மாநிலங்களுக்கு தண்டனை வழங்கக் கூடாது என்று பல முறை வாதிட்டிருக்கிறேன். தமிழகத்தில் நீர் வளம் குறைவு, கனிம வளம் குறைவு, மூன்றாண்டுகளாக மழை கிடையாது, எனினும், இன்றுவரை தமிழகம் முன்னேறிய மாநிலங்களில் ஒன்றாகத்தான் கருதப்படுகிறது. இதையெல்லாம் புரிந்து கொள்ள தெளிவானதும் - தி.மு.க. கூட்டணி மீது தேவையற்ற காழ்ப்புணர்வு கொள்ளாததுமான சிந்தனை தேவை.

மத்திய மாநில அரசுகளைப் பற்றிய சமீப காலப் பிரச்சினை (அதாவது தணிக்கை அதிகாரிப் பிரச்சினை) குறித்தும் - மாநில அரசுக்குரிய கடமைகளை, உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய முறை - இவற்றைக் குறித்தும் நான் தந்துள்ள இந்த விளக்கங்களுக்குப் பிறகும், நண்பர் பொன்னையன் அவர்கள், "கருணாநிதி ஓய்வு பெற வேண்டும்" என்று ஜெயலலிதாவை மகிழ்விப்பதற்காக கூறுவாரேயானால், அவருக்கும், அவர் போன்றோர்க்கும் நான் சொல்லும் உறுதியான பதில் இதுதான்!

> பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் திராவிட இயக்கம் காத்திடுவதற்காக இட்டுள்ள கட்டளைகள், இன்னும் என்னாலும், என் நண்பர்களாலும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அதற்குள் ஓய்வு என்றால் அது பொன்னையன் போன்ற பிற்போக்குச் சக்திகளால் அளிக்கப்படும் நிரந்தர ஓய்வாகத்தான் இருக்க முடியும் - நிச்சயமாக வேறு வகை ஓய்வினை நினைக்கவும் மாட்டேன். அந்த ஓய்வை எடுக்கவும் மாட்டேன்.

அன்புள்ள,

மு.க.

14-8-2004

3086. மருந்தாக அமையும் மாநாட்டு வெற்றி!

உடன்பிறப்பே,

கண்ணீரைக் கொட்டி, கையெடுத்துக் கும்பிட்டு வேண்டுகோள், வாய் மொழியாகவும் - கடிதˆ வாயிலாகவும் விடுத்தும்கூட, சேலம் மாநாட்டுக்கு வந்த கழகக் கண்மணிகளில் இருவர், நாகர்கோவில் இளைஞரணி என்.ஆர்.எஸ். சுந்தரம், பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த நீலமேகம் என்கிற சுரேஷ் ஆகியோர், வழியில் சாலை விபத்தில் பலியான செய்தி, மாநாடு தந்த மகிழ்ச்சியைப் புறந்தள்ளி விட்டது என்பதை, என்னையும் என் மனோ நிலையையும் அறிந்த நீ நிச்சயம் உணர்வாய்!

எச்சரிக்கையின்மையாலும், விரைவுக்கும் - அவசரத்துக்கும் - வேகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை எண்ணிச் செயல்படாத காரணத்தினாலும் பெரும்பாலும் விபத்துகள் நடைபெறுகின்றன.

விபத்துகளை அரசியல் வர்ணம் பூசி, விமர்சிக்க நான் விரும்பவில்லை. ஆனால் அதேநேரத்தில், கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டில் மட்டும், நாள் ஒன்றுக்கு சராசரி ஐந்து பேருக்குக் குறையாமல் சாலை விபத்துகளில் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறைத்துச் சொல்லவும் முடியாது. குறைத்துக் கூறவும் இயலாது.

இதற்கு நேரடியாக ஆட்சியிலே இருப்பவர்கள் தான் பொறுப்பு என்று குற்றஞ்சாட்டுகிற அளவுக்கு, 'அரசியல்' செய்ய வேறு பிரச்சினைகளே இந்த ஆட்சியில் கிடைக்காமல் நாம் அலைந்து கொண்டிருக்கவுமில்லை.

குலை நடுங்கக்கூடிய அளவுக்கு, நாள்தோறும் நடைபெறும் விபத்து காரணமான உயிர்ப்பலிகள், அரசின் அலட்சியத்தால் ஏற்படுகின்றன என்று ஒரு வரியில் சொல்லிவிட முடியும். அப்படிச் சொல்லுகிற அரசியல் அநாகரிகத்தை நாம் பயிற்சியாகப் பெற்ற தில்லை. ஆனால் ஒன்றைக் குறிப்பிடாமலிருக்க முடியாது

- அரசு இயந்திரமோ, அமைச்சர்களின் துறைகளோதான் பொறுப்பு என்று நம்மால் குற்றம் கூறப்படாவிடினும், சாலைப் போக்குவரத்து நடமாட்டத்தில் வாகனங்களை வேகக் கட்டுப்பாடு, ஓட்டுநருக்குரிய கட்டுப்பாடு போன்ற பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தி, சீரான முறையில் தொடர்ந்து கவனித்து ஆவன செய்கிற பணியை, யாரோ ஆற்ற வேண்டிய பணியென்று அலட்சியமாக இருந்து விடாமல் - காவல் துறையினர் கண்ணும் கருத்துமாக ஆற்றிடுவார்கள் என்றால் விபத்துகளின் எண்ணிக்கை பெருகாமல் தடுக்கப்படும் என்பதோடு, நாள்தோறும் நடக்கின்ற உயிர்ப் பலிகளும் நிச்சயமாகக் குறையும்.

விபத்து இல்லாத நாளே இல்லை என்பது சிறப்புக்குரிய செய்தி அல்ல!

அரசுத் துறையினர் இதில் காட்ட வேண்டிய அக் கறை எவ்வளவோ, அதில் பாதி அளவாவது - பயணம் மேற்கொள்கிறவர்களாலும் காட்டப்பட வேண்டும்.

இந்த விஷயத்தில் என் வேண்டுகோள், வேண்டுமென்றே காதில் போட்டுக் கொள்ளப்படாமல் போய் விட்டது என்று நான் கூறமாட்டேன். ஏதோ எதற்கும் ஒரு காரணம் இருக்குமே - இருந்தாக வேண்டுமே - அதனால் ஏற்பட்ட விபத்தில் கழக உடன்பிறப்புகள் இருவர், மாநாடு காண வந்தவர்கள் மரணப்படு குழியில் விழுந்து விட்டார்கள்.

அந்த அதிர்ச்சியில், சேலம் மாநாடு தந்த மகிழ்ச்சியை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை.

அதற்காக, மாநாடு மாபெரும் வெற்றியடையப் பாடுபட்டுப் பணியாற்றிய கழக மாமணிகளைப் பாராட்டும் கடமையை மறந்து விடவும் முடியாதல்லவா!

“தலைவா! இது நீயே முன்னின்று நடத்துகிற மாநாடு” என்று தம்பி வீரபாண்டி ஆறுமுகம், தனது மாநாட்டு வரவேற்புரையிலே உணர்ச்சி பொங்கிடக் குறிப்பிட்டதுபோல, அது வெறும் வாய்ச்சொல் அலங்காரமாக இல்லாமல் - ஆம்! நானே முன்னின்று நடத்திய மாநாடு போன்ற பெருமிதத்தை எனக்கு மட்டுமல்ல, என் உடன்பிறப்புகளாம் உன் போன்றவர்களுக்கும் ஏற்படுத்தித்தான் இருக்கிறது.

சேலம் மாநாடு, வெறும் விழாக் கோலமோ - விளம்பரக் கோலமோ அல்ல!

நமக்கு விளம்பரம் என்பது நமக்காக யாரும் விரும்பிச் செய்வதுமல்ல! ஏற்ற விலை கொடுத்து நாம் வாங்குவதுமல்ல!

நாம் ஆற்றிடும் நல்வினைகளுக்காகவும், அந்த நல்வினையாற்றிட நாம் விதைத்திடும் திடமிக்க தீர்மானங்களுக்காகவும் - தவிர்க்க இயலாத நிலையில் கிடைக்கின்ற விளம்பரங்கள் போதும் நமக்கு!

சேலம் மாநாட்டில் 54 தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறோம். அத்தனை தீர்மானங்களையும் வெளியிட்டு நமது அரசியல் தகுதியை மேலும் உயர்த்தி விடக் கூடாது எனத் திட்டமிட்டுச் செய்தி ஏடுகள், அவற்றில் பலவற்றை மறைத்தும் குறைத்தும் மன நிறைவு பெற்றுள்ளன.

அதேவேளையில்; இத்தனை என்பதல்ல முக்கியம்! இத்தகைய தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளோம் என்பதே முக்கியம், எனும் உறுதியான நினைவோடு, உருவாக்கியுள்ள தீர்மானங்கள், தலைமைக் கழகச் சார்பில் தனிப் புத்தகமாகவே வெளியிடப்பட்டிருக்கிறது, முன்மொழிந்தோர் வழி மொழிந்தோர் பெயர்களுடன்!

(தேவைப்படுவோர் தலைமைக் கழகத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ள முடியும்)

சேலம் மாநாட்டிற்குப் பிறகு, சில பாடங்களை நாம் பெற முடிந்திருக்கிறது என்பதைச் சொல்லத்தான் வேண்டும்.

(1) இனி மாநாடுகளுக்குர் பந்தல் அமைக்க இருபது ஏக்கர், முப்பது ஏக்கர் என்று நிலத்தை தேர்வு செய்தால் போதாது.

(2) மாநாட்டுப் பந்தலையொட்டி அமையப்பெறும் வெளிப்புற நிலமும் - இன்னும் இரண்டு மூன்று மடங்கு பரப்பளவு கொண்டதாக இருந்திடல் வேண்டும்.

(3) கழகக் கொள்கை விளக்கப் பேச்சாளர்கள் எண்ணிக்கை விரிவடைந்து கொண்டே போவதால்,

அவர்களும் மாநாடுகளில் நீண்ட நேரம் பேசுவதே சிறப்பு எனக் கருதுவதால், இனி வரும் மாநாடுகளில் மொத்தமே இருபது அல்லது இருபத்தி ஐந்து பேர் மட்டுமே உரையாற்றலாம் என்றும், ஒரு மாநாட்டில் பேசுவோர் அடுத்த மாநாட்டில் பேச்சாளர் பட்டியலில் இடம்பெற மாட்டார் என்ற நிலையும் ஏற்பட்டால்தான் அனைவருமே நிறைவான விரிவுரைகள் ஆற்றிட இயலும்.

(4) நானே மாநாட்டில் இரண்டு மணி நேரம் பேசுவதற்கானத் தயாரிப்புடன் - குறிப்புகளுடன் வந்திருந்தேன். மாநாட்டில் நான் தாமதமாகப் பேசுவதற்கு நேரிட்டதாலும் - இரவு 9.30 முதல் 10.45க்குள் பேசி முடிப்பதுதான் பத்திரிகைகளுக்கு வசதி என்பதாலும் - 1.15 மணி நேரம் மட்டுமே பேசுகிற வாய்ப்புக் கிட்டியது. அதுவே பத்திரிகையாளருக்கு போதுமான அவகாசமில்லை யென்று குறைபட்டுக் கொண்டார்கள்.

உடன்பிறப்பே,

ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்ணா காலத்தில் அரக்கோணத்தில் ஒரு பொதுக் குழு - அன்று மாலை பொதுக்கூட்டம். நாவலர் முதலில் பேசிவிட்டு வெளியூர் நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்றுவிட்டார். அண்ணா 8.30 மணிக்குப் பேசுவ தாகத் திட்டம். அவருக்கு முன்னதாக நான் 8 மணிக்குப் பேசத் தொடங்கி, "அடுத்து நமது தலைவர் அண்ணா பேச இருப்பதால் நான் முடித்துக் கொள்கிறேன்" என்று அடக்கத்துடன் கூறி பத்து நிமிடங்கள் பேசிவிட்டு முடித்துக் கொண்டேன். பிறகு அண்ணா பேச எழுந்தார். இரண்டொரு வார்த்தைகளே பேசினார். என்ன பேசினார் தெரியுமா?

"தம்பி கருணாநிதி சென்னையில் இருக்கிறார். நான் அரக்கோணத்துக்கு அருகில் காஞ்சிபுரத்தில்தான் இருக் கிறேன். நான் அடிக்கடி வந்து இங்கே பேச முடியும். சென்னையிலிருந்து கருணாநிதி அடிக்கடி அரக்கோணம் வர முடியாது. எனவே அவர் பத்து நிமிடத்துடன் பேச்சை முடித்துக் கொண்டது சரியல்ல - மீண்டும் அவரே

தொடர்ந்து பேச விரும்புகிறேன். எனவே, மீண்டும் கருணாநிதி பேசுவார்”

என்று அண்ணா கூறிவிட்டு, அமர்ந்து விட்டார். பிறகு அவரது ஆணைப்படி மேலும் முக்கால் மணி நேரம் பேசினேன், ஆம், அண்ணா ஆணைப்படி!

அண்ணாவுக்குப் பிறகு!

அதன்பிறகு அண்ணா அக்கூட்டத்தில் நீண்ட நேரம் பேசினார்.

குறிப்பு :- நமது கழகச் சொற்பொழிவாளர்கள் நினைவிற்கொள்ள வேண்டுமென்பதற்காக அன்றைய அரக்கோணம் நிகழ்ச்சியை நினைவு படுத்தினேன்.

சேலம் மாநாடு, இதுபோன்ற சிறப்பான குறிப்பு களை அறிவுரையாக வழங்கியிருக்கிறது என்பதை நமது சொற்பொழிவாளர்களும், முன்னணியினரும் மறந்திடலாகாது!

எல்லாவற்றுக்கும் மேலாக, சேலம் இரும்புக் கனியை மன உறுதியிலும் - மாங்கனியைப் பழகிடும் பாச உணர்விலும் - மெய்ப்பித்துக் காட்டுகின்ற உடன்பிறப்புகளை மாநாட்டில் கண்டேன் - மகிழ்ச்சி கொண்டேன்.

அடுத்தடுத்து நமது மாநாடுகள் - மற்றும் கழக நிகழ்ச்சிகள் - விழாக்கள் அனைத்திலும் நாம் திருத்திக்கொள்ள வேண்டிய பல விஷயங்கள், மேலும் மெருகேறிப் பட்டொளி வீசிட சேலம் மாநாடு, சிறந்த வழிகாட்டியாக அமைந்தது என்பேன்!

மாநாட்டுக்கான அயராத பணிகளால் தம்பி வீரபாண்டிக்குக் கையிலே கூட கட்டு போட வேண்டிய அளவுக்குக் காயம் - அந்தக் காயத்துக்கு மருந்தாக இந்த அண்ணனின் அன்பு மட்டுமல்ல, மாநாட்டு வெற்றியும் அமைந்துள்ளது என்பேன்.

அன்புள்ள,

மு.க.

25-8-2004

3087. ஓயாத உழைப்பு; வெற்றிக்கொடியாக உயரும்!

உடன்பிறப்பே,

இன்று துணைப் பொதுச் செயலாளர் மு.க.ஸ்டாலின் சுற்றுப்பயண நிகழ்ச்சி முரசொலியில் கண்டதும் இதை எழுத வேண்டுமெனத் தோன்றியது.

'முரசொலி' இதழ்களின் விற்பனையைப் பெருக்குவதற்காக ஆங்காங்கு கழக நிர்வாகிகள் மூலம் நேரடியாகவே ஆயுள் சந்தாவிலிருந்து ஆண்டு சந்தாக்கள் வரையில் வழங்கிடக் கூடியவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்று, அதன் காரணமாக, முரசொலி வளர்ச்சியில் புதிய திருப்பத்தைக் காண்பதில் ஸ்டாலின் வெற்றிபெற்று வருகிறார். அப்பணியை மேலும் தொடருவார்.

அவருடைய சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் என்னைக் கவர்ந்த ஒன்றும் உண்டு. வேலூர், விழுப்புரம் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகள் சிலவற்றில் கொடியேற்று விழா நிகழ்ச்சிகள் என்று குறிக்கப்பட்டுள்ளதைப் பற்றித்தான் கூற விரும்புகிறேன்.

சேலம் மாநாட்டில் கழகத்தின் இருவண்ணக் கொடியை அவர் ஏற்றி வைத்துவிட்டு உரையாற்றி முடிக்கும்போது, இனி கழகத்தினர் இல்லங்களின் முகப்புகளிலும், கழகத்தினர் பயணிக்கும் வாகனங்களிலும் கட்டாயம் நமது கழகக் கொடி பறந்திடல் வேண்டும் என்பதுதான் அவரது வேண்டுகோளாக அமைந்தது.

1945ஆம் ஆண்டு வாக்கில், திராவிடர் கழகத்திற்கெனக் கொடி எப்படி அமையவேண்டுமென்று, பெரியார் - கழகத் தோழர்களிடத்தில் கருத்து கேட்ட போது - வழங்கப்பட்ட

கருத்துகளின் அடிப்படையில் - கறுப்பு வண்ணத்தில் ரத்தத் துளிகள் சிதறியது போன்ற புரட்சிகரமாகக் கொடி அமையவேண்டு மென்று 'குடியரசு' அலுவலகத்திலிருந்த நானும், கருணானந்தம், தவமணிராசன் போன்ற நண்பர்களும் ஆலோசித்து, அதனைப் பெரியார் அவர்களிடம் வரைந்து காட்டியபோது, புரட்சிச் சின்னத்துக்கு அமைய வேண்டிய சிவப்பு வண்ணத்துக்காக என் விரலில் ஊசியால் குத்தி எடுத்த ரத்தத்தை அதில் பூசினேன் - கொடி வடிவம் கண்ட பெரியார் அவர்கள், "இப்படி சிவப்பு வண்ணம் சிதறியெழுவது போல கொடி தயாரிப்பது சிரமம்" என்று கூறி, கறுப்புப் பரப்பளவில் சிவப்பு வண்ணத்தை வட்ட வடிவமாக ஆக்கிடச் செய்தார். திராவிடர் கழகக் கொடியின் அந்த சிவப்பும், கறுப்பும்தான் தி.மு.க. தொடங்கிய போது அந்தக் கொடியில் இடம் பெற்றன.

அதன்பிறகு பல கட்சிகள் தோன்றின. அந்த சிவப்பு வண்ணமும், கறுப்பு வண்ணமும் எப்படியோ ஒரு வடிவத்தில் அந்தப் புதிய கட்சிகளின் கொடிகளில் இடம் பெறத் தவறவில்லை. அதிலே எனக்கும் ஒரு பெருமிதம்! ஏன் என்று நான் சொல்லாமலே உனக்குத் தெரியும்.

அப்போதெல்லாம் மாவட்டந்தோறும், மாணவர் சுற்றுப் பயண ஏற்பாடுகளைச் செய்து, ஐவர் கொண்ட பிரச்சாரக் குழு - மூவர் கொண்ட பிரச்சாரக் குழு எனப் பெரியார் ஆணைப்படி அனுப்பப்படும். அந்தக் கொள்கைக் குழுக்களில் கொடியேந்தியவாறு நானும், ஆருயிர் இளவல் வீரமணி, ஈரோடு சுப்பையா ஆகியோரும், பட்டி தொட்டிகள், கிராமாந்திரங்கள், பேரூர், நகரங்களில் பிரச்சாரம் செய்து இயக்கம் வளர்த்ததும் - அதற்கென இரவு, பகல் - மழை, வெயில் எனப் பாராது மேற்கொண்ட கடுமையான பயணங்களும் - இன்னமும் நினைவை விட்டு அகலவில்லை.

பகுதி பகுதியாக மாவட்டந்தோறும் - நகரங்கள், கிராமங்களில் - ஸ்டாலின் கழகக் கொடியேற்று விழா நிகழ்ச்சிகளின் பட்டியலை 'முரசொலி'யில் படித்த போது, "நெஞ்சுக்கு நீதி"யில் நான் எழுதிப் பதிய வைத்துள்ள 36வது பகுதி (1ஆம் பாகம், பக்கம் 167)யை இக்கடித வாயிலாக நினைவூட்ட விரும்புகிறேன். அது வருமாறு:-

"தி.மு.க. தொடங்கிய பிறகு, அதனுடைய வேகமான வளர்ச்சி கண்டு பெரியார் சோர்ந்து போய்விடவில்லை. நாட்டின் கவனத்தை ஈர்க்கத்தக்க அறப் போர்க்களங்கள் பலவற்றை அமைத்தார். அவைகளில் முக்கியமானது வட நாட்டுக் கடை மறியல்! அடுத்தது சாதிப் பெயர் தாங்கிய உணவு விடுதிகளின் முன் மறியல்! ஏற்கெனவே பெரியார் துவக்கிய கிளர்ச்சியின் காரணமாகப் புகைவண்டி நிலைய உணவு விடுதிகளில் சாதிப் பெயர் எழுதப்பட்ட பலகைகள் அகற்றப் பட்டன. அதனைத் தொடர்ந்து சாதி ஒழிப்புக்கு அவர் நடத்திய அடுத்த கிளர்ச்சியிலும் அவர் வெற்றி பெற்றார்.

வடநாட்டுக் கடை மறியல் சில மாதங்கள் தொடர்ந்து நடைபெற்றுப் பிறகு நிறுத்தப்பட்டது. புகைவண்டி நிலையப் பெயர்ப் பலகைகளில் ஊரின் பெயர் இந்தியில் முதல் வரிசையில் எழுதப்பட்டிருப்பதை எதிர்த்துப் பெரியாரும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் தனித்தனியே போர்க் கொடி உயர்த்தினர். நாடெங்கும் உள்ள புகை வண்டி நிலையங்களில் முதல் வரிசையில் உள்ள இந்தி எழுத்துகளைத் தார் கொண்டு அழிப்பது என்ற இயக்கம் தொடங்கப் பெற்றது.

அறிஞர் அண்ணா, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, நண்பர் ஈ.வே.கி. சம்பத் ஆகியோர் கோவை ரயிலடியில் இந்தி எழுத்துகளை அழித்தனர். எனக்கு அந்தப் போராட்டத்தில் ஒரு பெரும் நல்வாய்ப்பே கிடைத்தது. திருச்சி ரயிலடியில் பெரியாரும், நானும் இந்தி எழுத்துகளை அழித்தோம். ரயிலடிக் களம் முடிந்து, நானும், ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களும் கொடி ஏந்தியவாறு திருச்சி நகர வீதிகள் அனைத்திலும் நடந்து சென்றே ஊர்வலம் நடத்தினோம். தெப்பக்குளம் வழியாக ஊர்வலம் வந்தபோது, காரில் சென்று கொண் டிருந்த பெரியார் அவர்கள் இறங்கி, எங்களை வாழ்த்தி வழி அனுப்பினார். இரு வேறுபட்ட கட்சிகளாகப் பிரிந்த பிறகு ஏற்பட்ட இந்தத் திடீர்ச் சந்திப்பில், பாசமும், பற்றும் பட்டுப்போகவில்லை என்ற உண்மை ஒளிவிடலாயிற்று.

பெரியாரின் காரைக் கடந்து எங்கள் ஊர்வலம் நகர்ந்தபோது, என் கண்களில் தெப்பக்குளத்துக்கு அருகே உள்ள அஞ்சல் நிலையம் தென்பட்டது. அத்துடன் முதல் வரிசையில் மின்னிய இந்தி எழுத்துகளையும் ஆத்திரத்துடன் நோக்கினேன். ஆனால் அந்தப் பலகை, சுலபமாக அழிக்கக் கூடிய எட்டும் தொலைவில் இல்லை. கட்டடத்தின் உச்சியில் இருந்தது. ஏறுவதற்கும் வசதியில்லை. ஏறினாலும் பலகையிடம் செல்வதற்கு இயலாத நிலையில், சறுக்கலான கூரை வேறு! எப்படியும் அதனை அழித்தே ஆக வேண்டும் என்று முடிவு செய்தேன்.

இரண்டு தோழர்களின் தோளிலே ஏறி, கட்டடத்தின்மீது தாவி ஏறினேன். சறுக்கலான பகுதியில் படுத்தவாறு முன்னேறி அஞ்சல் நிலையத்தின் இந்திப் பலகையை அணுகினேன். 'டென்சிங்' இமாலயச் சிகரத்தில் ஏறியபோதுகூட அவ்வளவு மகிழ்ந்திருக்கமாட்டான். அதையேன் சொல்ல வேண்டும்? முதன்முதலில் 'ஆம்ஸ்ட்ராங்' சந்திரனில் காலடி எடுத்து வைத்தபோதுகூட என்னைப்போல மகிழ்ந்திருக்க மாட்டான். அந்தச் சிறிய கட்டடத்தின் சறுக்குப் பகுதியில் ஏறி, இந்தி எழுத்துகளை அழித்ததை நான் அவ்வளவு மகிழ்ச்சியோடும், உணர்ச்சியோடும் கொண்டாடினேன்.

இதற்கடுத்து, திருச்சியில் கழகத் தோழர்களிடம் உள்ளூர வளர்ந்த கசப்பு உணர்ச்சி வெளிப்படையாகவும் பரவத் தொடங்கியது. தோழர் திரு. சாம்பு, சம்பத்தின் நண்பர். அதனால் திருச்சியில் சாம்புவின் வீடு அண்ணா அடிக்கடி வந்து தங்கும் வீடாயிற்று.

சாம்பு வீட்டுக் குடும்ப நண்பராக அண்ணா இருந்தபோது, திருச்சியில் உள்ள கழகத் தோழர்களுக்கும், சாம்புவின் நண்பர்களான கழகத் தோழர்களுக்கும் மாற்சரியங்கள் பெருமளவில் வளர்ந்தன.

'நண்பர் வேறு - கட்சி வேறு' என்ற கொள்கையில் அண்ணா அவர்கள், திருச்சியில் பிரச்சினைகளை அணுகினார்கள். இருதரப்பாரிடமும் ஒற்றுமையை

ஏற்படுத்த அண்ணா அவர்கள் எவ்வளவோ முயன்றும் பலனில்லாமல் போயிற்று.

திருச்சியைத் திருத்த அண்ணா கடைசியாக ஒரு வழியைக் கையாண்டார். அதுதான் அண்ணா அவர்கள் திருச்சிக்கு வருவதில்லை என்பது! எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கு அவரை அழைத்தபோதெல்லாம் அவர் மறுத்து விட்டார். இரு குழுவினரின் சச்சரவில் கழக வளர்ச்சி குறைந்து விட்டது என்பது அவருக்குள்ள அளவு கடந்த வேதனை.

திருச்சியைப் பற்றிக் கவலை கொண்ட நண்பர்கள் அன்பில் தர்ம லிங்கம், பொன்மலை பராங்குசம், எம்.எஸ். மணி, பண்ணை முத்துகிருஷ்ணன் ஆகியோர் எப்படியும் அண்ணாவை அழைத்துத் திருச்சியில் ஒரு கூட்டம் நடத்திவிடத் துடித்தனர். அதற்கான தூதுவராகத் தோழர் பராங்குசத்தைச் சென்னைக்கு அனுப்பினர்.

சென்னையிலிருந்து நானும், பராங்குசமும், இரா. செழியன், வாணன் ஆகியோரும் காஞ்சிக்குச் சென்றோம். பராங்குசம், அண்ணாவிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார். நாங்களும் அவருக்காக அண்ணாவிடம் நீண்ட நேரம் பரிந்து பேசினோம். பயனில்லை. அண்ணா கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

“திருச்சியில் உள்ள உள்சண்டையின் காரணமாகக் கழகத்தையே குலைத்து விட்டீர்கள். அதைச் சரி செய்து என்னிடம் காட்டும் வரையில், நான் திருச்சி நகரக் கூட்டத்தில் பேச மாட்டேன்”

இது, அண்ணாவின் பதில்.

“நீங்கள் வந்து பேசினால்தானே அண்ணா, எல்லாம் சரியாகும்”

இது, பராங்குசத்தின் வேண்டுகோள்.

“முதலில் கருணாநிதியை வைத்து நகரில் கழகக் கூட்டங்களை நடத்து! கழகத்திற்கு உயிர் இருக்கிறது என்று தெரிந்தால் நான் வருகிறேன்!”

இது, அண்ணாவின் முடிவான வார்த்தை. பராங்குசம் அழுது கொண்டே புறப்பட்டு விட்டார்.

"என்ன அண்ணா, இப்படிச் சொல்லிவிட்டீர்களே?" என்று நாங்கள் கேட்டதற்கு, "இதுதான் நல்ல விளைவைக் கொடுக்கும்" என்று அண்ணா விடையிறுத்தார்.

அண்ணாவின் திட்டவட்டமான கண்டிப்பு நிறைந்த பதிலைக் கேட்ட திருச்சித் தோழர்கள், மிகவும் நொந்து கழகத்திலிருந்தே ஒதுங்கி விடலாமென முடிவு செய்திருப்பதாக எனக்குச் செய்தி வந்து, உடனே நான் திருச்சிக்கு ஓடினேன். கழகத் தோழர்கள் அனை வரையும் கூட்டி வைத்துப் புண்பட்டுப் போயிருக்கிற அண்ணாவின் உள்ள உணர்ச்சிகளை அவர்களுக்கு விளக்கினேன். "நீங்கள் கட்டிக் காக்கிற ஒற்றுமையும், வளர்த்துக் காட்டுகிற கழக வளர்ச்சியும், அண்ணாவைத் தானாகவே கூப்பிட்டு வரச் செய்யும்" என்று உறுதி யளித்தேன்.

சோர்ந்து போன தோழர்களிடம் புதிய சுறுசுறுப்புத் தோன்றியது. "அண்ணா வாழ்க!" என்று ஆர்த் தெழுந்தனர். அடுத்த வாரமே திருச்சி நகரில் ஐம்பது இடங்களில் நான் கொடிகளை ஏற்றி வைப்பது என்றும், ஐந்தாறு கூட்டங்களில் பேசுவது என்றும் திட்டம் தீட்டப் பெற்றது. தொடர்ந்து சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நகர் எங்கும் தோரணங்கள்! ஐம்பது இடங்களில் கொடியேற்று விழாகள்! ஆட்டோ ரிக்ஷா ஒன்றில் என்னை உட்கார வைத்து ஐம்பது இடங்களுக்கு ஊர்வலம் விட்டனர்.

திருச்சியில் ஏற்பட்ட அந்த உற்சாகமும், பரபரப்பும் எல்லா ஊர்களுக்கும் பரவின! சேலத்தில் அறுபது கொடி! கோவையில் எழுபது கொடி! இப்படி எனக்கு நிகழ்ச்சிகள் ஏற்பாடாயின. கொடியேற்று விழாக்கள் ஒரு புதுமை யான பிரச்சார சாதனமாக விளங்கத் தொடங்கின! திருச்சி மாவட்டம் எங்கும் சூறாவளி வேகத்தில் கழகத் தோழர்களின் சுற்றுப் பயணங்கள்! ஓராண்டு காலத்தில்

திருச்சி நகரம் ஒப்பற்ற வளர்ச்சி கண்டது. அண்ணா மகிழ்ந்தார். தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை விற்பதற்காக தி.மு.க. ஒரு நாள் குறித்தது. திருச்சியில் யார் விற்பது என்ற கேள்வி எழுந்தபோது, "நான் விற்கப் போகிறேன்!" என்று ஒரு குரல் ஒலித்தது. ஆம்! அது அண்ணாவின் குரல்தான்!

கனிவு ததும்பப் பேசியே பல வெற்றிகளைக் கண்ட அண்ணன், கண்டிப்புக் காட்டியதன் மூலம் திருச்சி நகரில் கழகத்திற்குப் பெரும் வெற்றியைத் தேடித் தந்தார்.

"எங்கே தனது மனத்தைச் சிரமப்பட்டுக் கல்லாக்கிக் கொண்டு கழகக் காவலர்களிடம் அண்ணா அவர்கள், கடுமையாக நடந்து கொண்டார்களோ, அதே திருச்சியிலேதான் மாநில மாநாட்டை நடத்துவதற்கு ஒப்புதல் அளித்தார்கள். அண்ணாவின் சோதனைகளுக்கு ஆளானவர்களோ, அல்லது ஆளான அமைப்புகளோ, வெகு விரைவில் அவரது அன்புக்கும், அரவணைப்புக்கும் உரித்தாகிவிடும் என்ற நிகழ்ச்சிக்கு இது ஒன்றே தக்க எடுத்துக்காட்டாகும்"

உடன்பிறப்பே, நான் "நெஞ்சுக்கு நீதி"யில் குறிப் பிட்டிருப்பதைப் போலவே, திருச்சி, சேலம், கோவை ஆகிய மாவட்டங்களில் மட்டுமல்ல,

மதுரை, தஞ்சை, நெல்லை மற்றும் பல்வேறு நகரங்களில் - மாவட்டங்களில் - ஒன்றியங்களில் - ஐம்பது, நூறு, அதற்கு மேலும் என்ற எண்ணிக்கையில் தி.மு.க. கொடிகளை, எத்தனையோ இடை யூறுகள் எதிர்ப்புகளுக்கிடையே ஏற்றி வைத்திருக்கிறேன்.

அந்த எழுச்சிமிகு நிகழ்ச்சிதான், இப்போது புதுப் பிக்கப்படுகிறது - உரியவர்களுக்கு அறிவித்து விட்டு, அனுமதி பெற்று, விண்ணோக்கி ஏற்றிடுக நமது வெற்றிக் கொடியை என்று வீர இளைஞர்களை அழைக்கிறேன்! தம்பி ஸ்டாலின் மட்டுமல்ல; எல்லோருமே நமது கழகக் கொடியை ஏற்றிடும் இந்த இனிய திருப்பணியில் ஈடுபடலாம்.

எத்தனை தோழர்கள் சிந்திய இரத்தம் இந்தக் கொடியின் சிவப்புச் சின்னமாக சித்திரிக்கப்பட்டுள்ளது என்பதைச் சிந்தித்தால்

மட்டுமே, தொடர்ந்து செயலாற்றும் துணிவும் - தியாக உணர்வும் - ஒளிவிடும்!

அந்த ஒளியில் நமது தம்பிமார்களின் ஓயாத உழைப்பு, வெற்றிக் கொடியாக உயர்ந்திடும்!

அன்புள்ள,

மு.க.

27-8-2004

3088. "புலிப் போத்துகள் நாம் எனப் புவிக்கு உணர்த்துக!"

உடன்பிறப்பே,

நமது கழகத்தைக் குடும்பம் என்று கருதுகிறோம் - அப்படியே அழைக்கிறோம் - ஒருவருக்கொருவர் குடும்ப உறுப்பினர்களாகவே பாசத்துடன் பழகுகிறோம்.

குடும்பம் என்றால், காதணி விழா, திருமண விழா, வளையற்காப்பு விழா, சீமந்தம், நிச்சயதார்த்தம் என்று எத்தனையோ விழாக்கள் சம்பந்தி வீடுகளில் நடந்து கொண்டேயிருக்கும். அவற்றுக்கெல்லாம் சம்பந்தி வீட்டார் சென்று கலந்துகொள்ளவேண்டும். கட்டாயம்.

விழாவோ - விசேடமோ இருப்பதைச் சொல்லாமல் விட்டாலோ, அறிவிக்காமல் இருந்துவிட்டாலோ - முறைப்படி வெற்றிலை பாக்கு வைக்காமல் இருந்து விட்டாலோ சம்பந்தி வீட்டார் எவ்வளவு மனச் சங்கடப்படுவார்கள்?

அதுபோல அழைப்பையேற்று வந்துவிட்டாலோ, முதல் பந்திக்குக் கூப்பிடவில்லை - மூன்றாவது பந்தியிலும் ஒரு மூலையில் உட்கார வைத்து விட்டார்கள் என்று சம்பந்தபுறத்தாரின் முணுமுணுப்பு ஓயாது!

கழகத்தை, குடும்பத்துடன் ஒப்பிடும்போதும் உற்றார், உறவினர்களின் உறுமலும் - சம்பந்திமார்களுக்கு ஏற்படும் சங்கடங்களும் - குடும்ப விசேடங்களில் காணப்படுவது போலவே, கழக மாநாடுகள், கழக விழாக்கள், நிகழ்ச்சிகள் அனைத்திலுமே காண முடிகிறது என்பது வியப்பான விஷயமல்ல! இவை வாடிக்கையென்று எண்ணிக் கொண்டு அந்தக் குடும்பங்களின் தலைவர்கள் நடந்து கொள்வதை நாம் உணர முடிகிறதல்லவா! அதேபோல நமது கழகமாம் குடும்பத்தின் தலைவர்களும்,

நமதியக்க நிகழ்ச்சிகளில் நடந்து கொள்வதையும், நடந்து கொண்டதையும் நாம் நன்கறிவோம்.

ஒரு படி பட்டாணிக் கடலையை வாங்கி பத்து பேர் பங்கிட்டுச் சாப்பிடும்போதுகூட, அவற்றில் கடைசியாக ஒரு நாலு கடலை சொத்தைக் கடலையாகி கசப்பாக இருந்து வாயைக் கெடுத்து விடுகிறதா இல்லையா?

அது போலத்தான் பல மகிழ்ச்சியான செயல்களுக்கிடையே, மன வருத்தம் விளைக்கக் கூடிய காரியங்களும் நடந்து விடுவதுண்டு, என்னைப் பொறுத்தவரையில் ஆயிரம் பேர் மன நிறைவு கொண்டிடும் வேளையில், ஓரிருவர் அதிருப்திக்குள்ளாயினர் என்பதை, சர்வ சாதாரணமாகக் கருதி விடுபவனல்லன்.

நிறைவான நிகழ்ச்சிகளுக்கிடையே குறை யொன்று தலை நீட்டி விட்டாலும், குமுறிடத் தொடங்கி விடும் என் இதயம் - குறையொன்று இழைக்கப் பட்டவருக்காக மட்டுமல்லாமல், இந்தக் குறையைக் கூட பெரிதுபடுத்தாத குண நலனும் - குடும்பப் பற்றும் - கொள்கை ஆர்வமும் - இவர்களுக்கு இல்லாமல் போய் விட்டதே என்ற மனக்குறை என் மனத்தைப் பிளந்தெடுத்துவிடும். மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றதென்ற மகிழ்ச்சிகூட அது மலர்ந்த அடுத்த நொடியில் அந்தப் புன்னகைப் பூவிதழ் மங்கி வதங்கி விட்டதே என்ற கவலை என்னை ஆட்டிப் படைத்துக் கொண்டுதானிருக்கும்.

சேலம் மாநாட்டுக்குத் தலைமைக் கழகத்தின் சார்பிலும் - மாநாட்டு வரவேற்புக் குழுவின் சார்பிலும் ஆயிரக்கணக்கில் அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்துங்கூட, அது ஒரு வேளை அஞ்சலகத்தின் தவறு காரணமாக ஒருவருக்குக் கிடைக்காமல் போய், அவர் அதுபற்றி விசாரித்தறியும் கடமையை நினைத்துக் கூடப் பார்க்காமல், எடுக்கிறார் எழுதுகோலை - குத்துகிறார் வெள்ளைத் தாளில் - அனுப்புகிறார் ஆத்திரத்துடன்! அடிக்கிறார் என் நெஞ்சில்! கசிகிறது குருதி!

அவரது அந்த ஆத்திரத்தில் அன்பும் மறைந்து கிடப்பதால் எனக்குப் பதிலுக்கு ஆத்திரம் வரவில்லை. வேதனைதான் தாக்குகிறது! பேரன் பேத்திகளுடன் வாழும் அனுபவம்!

இதோ வேதனை, ஒரு கீரைப்பாத்தியாகவே உருவாகிட விதைக்கப்பட்ட விதைகள்! அத்தனையும் எழுத்துகளாக :-

> “49 முதல் நமது இயக்கத்தில் இயங்கும் என்னை, எப்படி தலை முதல் கிளை வரையில் மறந்தனர்? எந்தவிதத் தீயப்பழக்கமும் இல்லாத என்னை எவரும் காண்கின்ற போது, “கழகம் உங்களை ஒதுக்கி விட்டதா? ஓரம் கட்டி விட்டனரா? ஓய்ந்து போனவன் என்று ஓட்டி விட்டார்களா? என்ற கேள்விக் கணைகள்!” எதிலும் தகுதியற்றவன் என்று முரசொலியில் வந்தால் ஒருவேளை நண்பர்கள் - கழகத் தோழர்கள் மத்தியில் நான், நானாக விளங்குவேன்”

இப்படிக் கடிதம் எழுதி என் கண்களைக் கலங்க வைப்பதில் அவருக்கொரு நிறைவு! அதனால் எழுதியிருக்கிறார் ஆரூரில் இருந்து! தென்னன் அல்ல! அவர்தான் அழைப்பின்றியே சேலம் மாநாட்டிற்கு வந்திருந்தாரே! என்னுடன் இணைந்து வளர்ந்த கட்சிக்காரரன்றோ தென்னன்! எழுதியவர் பெயரை நான் வெளியிட விரும்பவில்லை. இவரைப் போல மாநாட்டுக்கு வர இயலாதவர் இன்னும் சிலர் இருக்கலாம் - அழைப்பு ஒருவர் பாக்கியில்லாமல் அனுப்பப்பட்டது என்று சொல்லமாட்டேன். ஆனால், இவருக்கு நிச்சயம் அனுப்பப்பட்டது. போய்ச் சேரவில்லை என்றால், ஏன் அனுப்பவில்லையென்று கேட்கும் உரிமை படைத்தவர்களில் ஒருவர், எழுதிக் கேட்டிருக்கலாம் அல்லது எதிர் நின்றே கேட்டிருக்கலாம்.

அழைப்பே கையில் கிடைக்காவிடினும், அவர் போன்றோர் ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் சேலத்திற்கு வந்திருக்கும்போது, அவர் மட்டும் ‘சம்பந்தி’ சண்டைக்குச் சல்லடம் கட்டலாமா? சரியா? முறையா? ஓ! குடும்ப உரிமையில் வரும் கோபமாக்கும்! “ஓய்ந்துபோய் விட்டான் என்பதற்காக அழைப்பு அனுப்பவில்லையா?” என்றும் கேட்கிறார். வலிந்து “வனவாசம்” சென்றுவிட்டு, வம்புக்கு வருவது வாய்மையே அல்லவே!

உழைத்து உழைத்து ஓய்ந்து போனவர்களுக்கு, வழக்கம்போல் இந்த ஆண்டும் முப்பெரும் விழா விருதுகள், கோவையில் நடைபெறும் நிகழ்ச்சியில் வழங்கப்படுகிறது என்கிறபோது,

"ஓய்ந்து போய்விட்டான் என்பதற்காக யாரையும் உதறிவிடும் இயக்கமா இது? இல்லை, இல்லவே இல்லை. விருது பெற்றோர் பட்டியலை ஆண்டுவாரியாகப் பார்த் தாலே உண்மை விளங்குமே!"

இத்தனை விளக்கமும் சொல்லிவிட்டோம் என்பதற்காக எனக்கு நானே ஆறுதலடையத் தயாராக இல்லை.

இன்னும் சில விபரங்கள் தருவது என் கடமையென்றே கருதுகிறேன்.

பல லட்சம் பேர் கலந்து கொண்ட சேலம் மாநாட்டில் - மாநாட்டுத் தலைவரை வழிமொழிபவர்களாக 34 மாவட்டக் கழகச் செயலாளர், மாநில அமைப்பாளர்கள் - மாநாட்டுத் தலைவர், திறப்பாளர், கொடியேற்றியவர், திராவிட இயக்கத் தோன்றல்களின் படத் திறப்பாளர்கள் என்று 11 முன்னணியினர், பல்வேறு அரசியல், சமுதாயத் தலைப்புகளில் உரையாற்றியோர் 36 சொற்பொழிவாளர்கள், 54 தீர்மானங்களை முன் மொழிந்தோர், வழி மொழிந்தோர் என்ற பட்டியல்படி, 108 பேர் என்ற அளவில் மொத்தம் 189 பேர் இரண்டு நாட்கள் இருபத்தி நான்கு மணி நேரமும் ஆக்ரமித்துக் கொண்டு தங்கள் பங்கினை ஏதோ ஒரு வகையில் செலுத்திட இந்த மாநாடு வழிவகுத்திருக்கிறது என்பதை நினைக்கும்போது, ஓரிருவர் அழைக்கப்படாத காரணத்தினால் கலந்து கொள்ளவில்லை யென்று "சம்பந்தி" வீட்டார் போலக் குறை சொல்வதற்கு மாறாக, அழைக்காத நிலையிலேயே உரிமை யோடு வந்து கலந்து கொண்டு உறவை உறுதிப்படுத்தியோர் பட்டியலில் இடம் பெற்றிருக்கலாம் அல்லவா என்று நினைக்கத்தானே தோன்றுகிறது!

சேலம் மாநாட்டில் பங்கு பெற்றோர் 189 பேர் மட்டுமே - ஆம்! அந்த முன்னணியினர் மட்டுமே - இந்தக் குடும்ப உறுப்பினர்கள் என்பதல்ல! மாவட்டங்கள் பலவற்றிலுமிருந்து, ஏன், மாநில முழுவதுமிருந்து வந்து குழுமிய பல லட்சம் பேரும், பாசமிகு நமது குடும்பத்தின் உடன்பிறப்புகள்தான்!

அந்தக் குடும்ப உடன்பிறப்புகளில் ஒருவன்தான், உன்னைப் போல் ஒருவனாக, ஏன் - உனக்கே தலைவனாக உன்னால் தேர்வு செய்யப்பட்டவன் என்பதை மறந்து விடாதே!

“குன்றின் மீது நின்று கண்டேன்
கோலம் என்ன கோலமே!”

என்று கொள்கை வேங்கை புரட்சிக் கவிஞர் அன்று சுவைத்துப் பாடினார்.

இன்று சேலம் குமரகிரி மலையோரம் நின்று பாடுவோம் -

“கோலம், என்ன கோலம்”

என்றல்ல!

“சேலம் என்ன சேலம் நம்மைச்
சேர்த்தினைத்த சேலம் என்ன சேலம்!”

என்று பாடுவோம் - அத்துடன் “குற்றம் பார்க்கின் சுற்றமில்லை”யென்று அண்ணா நமது கழகக் குடும்பத்திற்கு வழங்கிய அறிவுரையையும் நெஞ்சில் தாங்கி, நம்மை வளைக்க முனையும் வஞ்சகத்தைப் பொடியாக்குவோம் - புலிப் போத்துகள் நாம் என்பதை இந்தப் புவிக்கு உணர்த்துவோம்!

அன்புள்ள,

மு.க.

28-8-2004

3089. மருமகள் - மணவாளன் - மாமியார்!

உடன்பிறப்பே,

ஒரு கேள்வி பதில் வாயிலாக உனக்கோர் விளக்கம் தரப் போகிறேன். அதுவே இன்றைய கடிதமெனக் கருதிக் கொள்க.

★

கேள்வி :- ஒருநாள் கூட சட்டசபைக்கு வராத கருணாநிதிக்கு வருஷத்திலே 15 நாள் தான் சட்டசபை நடந்தது என்று குறை கூறவோ, பட்ஜெட் மீதான பொது விவாதம் ஒரே ஒரு நாள் மட்டுமே நடத்தப்பட்டது என்று குற்றம் சாட்டவோ, முக்கியமான மானியக் கோரிக்கைகள் இருபதுக்கு மேற்பட்டவைகளை விவாதிக்க ஒரு நாள் மட்டுமே ஒதுக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டவோ,முதலமைச்சரின் முக்கியமான துறையான காவல்துறை மானியம் விவாதிக்கப்படும்போது அன்றைக்கு உடல் நிலை நன்றாக இருந்தும்கூட முதலமைச்சர், சபைக்கே வரவில்லை என்பதை எடுத்துக்காட்டவோ - என்ன உரிமை அதாவது Locus standi (தலையிடும் உரிமை) என்ன இருக்கிறது? என்று ஜெயலலிதா அறிக்கை விட்டிருக்கிறாரே?

கலைஞர் :- இதோ, Locus standi க்கான (லோகஸ் ஸ்டான்டி) ஒரு வழக்கு பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள். நான் கூறும் வழக்கு பற்றிக் கேட்பதற்கு முன்பு, இதே ஜெயலலிதாவும், இவருடைய தலைவர் எம்.ஜி.ஆரும், ஒரேயொரு நாள் தவிர, மற்ற நாட்கள் - சட்டசபை நடைபெற்ற எல்லா நாட்களிலுமே மாதக் கணக்கில், வருடக் கணக்கில் சபைக்கே வராமல், சட்டசபைத் தாழ்வாரத்தில் கையெழுத்து மட்டுமே போட்டு விட்டுப் போனவர்கள் என்பதையும் மறந்துவிடாமல் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

அதேபோல, சுதந்திர நாளன்று கவர்னர் அளிக்கும் தேநீர் விருந்தின் போதும், எதிர்க்கட்சியாக இருந்த அ.தி.மு.க.வினர் யாரும் கலந்து கொண்டதில்லை என்பதையும் மறந்துவிடாதீர்கள். ஏன் ஆளுங்கட்சியாகவே அ.தி.மு.க. இருந்தபோதுகூட,

சென்னா ரெட்டி கவர்னராக இருந்தபோது அவர் குடியரசு தினத்தன்று அளித்த தேநீர் விருந்தில் அ.தி.மு.க. வினர் கலந்து கொண்டதில்லை.

இப்பொழுது ஜெயலலிதாவின் "No Locus standi" வாதம் பற்றிய ஒரு வழக்கின் நிகழ்ச்சிகளைக் கவனிப்போம்.

திருமணமாகி வீட்டுக்கு வந்த மருமகளை மாமியாரும், கணவனும் துளைத்தெடுத்து அடிக்கடி சீர்வரிசை கேட்டு வந்தார்கள். அந்த மருமகளும் தனது தாய் தந்தையரிடம் கெஞ்சிக் கேட்டு, தங்க நகைகள், ஆயிரக்கணக்கில் மாதந்தோறும் ரூபாய் கொண்டு வந்து மாமியாரிடமும், கணவனிடமும் கொடுத்து வந்தாள்.

அப்படிக் கொடுத்தும்கூட இன்னும் கொண்டு வா என்று அவளைக் கசக்கிப் பிழிந்துகொண்டேயிருந்தனர்.

உச்சகட்டமாக ஒரு நாள், ஒரு காரே வேண்டுமென்று கறாராகச் சொல்லிவிட்டனர்.

அவளும் தாய் தந்தையைக் கேட்டுப் பார்த்தாள். அவர்களால் கார் வாங்கிக் கொடுக்க முடியவில்லை.

மருமகள், தனது குடும்ப நிலையை எவ்வளவோ விளக்கிக் கூறியும், மாமியாரும், கணவனும் அதைக் கேட்பதாக இல்லை.

மருமகளை இருவரும் சேர்ந்து அடித்தார்கள், வதைத்தார்கள். இறுதியாக மருமகள் மீது பெட்ரோல் ஊற்றிக் கருக்கி சாகவே அடித்துவிட்டு, "ஸ்டவ் அடுப்பு" வெடித்து தீயில் கருகிவிட்டதாகக் கதை கட்டி விட்டார்கள். ஆனால், உண்மை ஊமையாகி விடவில்லை. இந்த வீட்டு விவகாரங்களையும், மருமகளுக்கு நடத்தப்படுகிற கொடுமைகளையும் பக்கத்து வீட்டிலிருந்தே நன்கு தெரிந்து கொண்டிருந்த "நல்லான்" எனும் ஒருவன் போலீசுக்கு உண்மையை தெரிவித்து விட்டான்.

புகாரைப் பெற்ற போலீசார், அந்த வீட்டுக்குள் நுழைந்து பரிசோதனை செய்து, மாமியாரையும், அவள் மகனையும் கைது செய்து வழக்கு தொடர்ந்தார்கள்.

மருமகளை அவர்கள் இருவரும் கொடுமை செய்து வந்ததற்கான சாட்சிகள் எல்லாம் விசாரிக்கப்பட்டார்கள்.

புகார் கொடுத்த பக்கத்து வீட்டு நல்லானும் சாட்சியாக விசாரிக்கப்பட்டான். அரசு வழக்கறிஞர் விசாரணை முடிந்த பிறகு, எதிரிகளான மாமியார், அவளது மகன் இருவர் தரப்பிலும் வாதாடிய வழக்கறிஞர், சாட்சி நல்லானை குறுக்கு விசாரணை செய்தார்.

எதிரி வக்கீல்:- "மிஸ்டர் நல்லான்! தீயில் கருகி இறந்துபோன பெண்மணி, அதாவது அந்த வீட்டு மருமகள் 'ஸ்டவ் அடுப்பு' பற்ற வைக்கும்போதுதான் அது வெடித்து தீப்பிடித்து இறந்தாள் என்கிறேன் நான்!"

நல்லான்:- "இல்லை - இல்லவே இல்லை - அந்தப் பெண்ணின் கணவன் பெட்ரோல் வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் போனதையும் நான் பார்த்தேன் - கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்தப் பெண் 'குய்யோ முறையோ' என்று சத்தம் போட்டு அலறியதையும் கேட்டேன் - உடம்பில் நெருப்பு எரிய எரிய அந்தப் பெண் தெருவுக்கு ஓடிவந்தவளை, அவள் மாமியாரும், கணவனும் கதவைச் சாத்தி தடுத்து விட்டதையும் பார்த்தேன்"

எதிரி வக்கீல்:- மிஸ்டர் நல்லான்! நீர் அந்த வீட்டுக்கு எப்போதாவது போயிருக்கிறீரா?

நல்லான்:- நான் போனதில்லை.

எதிரி வக்கீல்:- அந்த வீட்டுக்கே போகாத உமக்கு, அந்தப் பெண் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டது எப்படித் தெரியும்?

நல்லான்:- தீ எரியும்போது - அந்தப் பெண் துடித்து ஓடும்போது - அதை அணைக்க முனையாமல் - என்னைப் போன்ற யாரும் உள்ளே நுழைந்து அவளைக் காப்பாற்றுவதற்கும் இடம் தராமல் கதவை இழுத்துத் தாள் போட்டு விட்டதை என் கண்ணால் பார்த்தேனே - தெருவில் நின்றே பார்க்கும்போது தெளிவாகத் தெரிந்ததே!

எதிரி வக்கீல்:- அந்த நிகழ்ச்சிக்கு முன்பும் சரி! நெருப்பு பிடித்து எரியும் போதும் சரி! நீர் அந்த வீட்டுக்குப் போனதில்லை அல்லவா?

நல்லான்:- எப்படிப் போக முடியும்? அந்தப் பெண்ணோடு மாமியார் சண்டை போடும்போது சமாதானம் செய்யப் போனவர்களுக்கெல்லாம் அந்த மாமியார் தன் அடியாட்களை ஏவிவிட்டு சரியான உதையல்லவா கொடுத்திருக்கிறார்!

(எதிரி வக்கீல் குறுக்கு விசாரணையை நிறுத்தி விட்டு, நீதிபதியைப் பார்த்து)

எதிரி வக்கீல்:- மை லார்டு! இந்த நல்லான் அந்த வீட்டுக்குள் இது வரையில் போனதே இல்லையென்பதை அவரே ஒப்புக் கொள்கிறார். ஆனால் அந்த வீட்டுக்குள் நடந்ததாக ஒரு நிகழ்ச்சியைப் பற்றி மட்டும், கூறுகிறார், அதைக் கொலை நிகழ்ச்சி என்கிறார். அந்த வீட்டுக்கே இதுவரை போகாதவருக்கு அந்த "தீ" நிகழ்ச்சி பற்றிச் சொல்ல உரிமை கிடையாது. அதாவது No Locus Standi - என்பது என் ஆணித்தரமான வாதம்.

நீதிபதி (கோபமாக):- என்ன சார், லோகஸ் ஸ்டாண்டி? .... லோகஸ் ஸ்டாண்டியைத் தூக்கி பாழுங்கிணத்துலே போடுங்க!

தீயில் கருகிச் செத்துப்போன பெண்ணின் தாயும், தந்தையும் சாட்சியம் அளித்தபோது, அந்த மாமியாரும், கணவனும் அந்தப் பெண்ணை, தொடர்ந்து எவ்வளவு தொல்லைப் படுத்தினார்கள் என்பதை தொகுத்துச் சொல்லியிருக்கிறார்களே! அது போதாதா?

நெருப்பில் எரிந்து கொண்டே அந்தப் பெண் வெளியே ஓடி வந்தபோது, அந்தக் கயவர்கள் கதவைத் தாளிட்டுத் தடுத்து நன்றாக எரிந்து கருகவிட்டிருப்பதை சாட்சி நல்லான், தன் கண்ணால் பார்த்திருக்கிறாரே? இதைவிட என்ன வேண்டும்?

எதிரி வக்கீல்:- மை லார்ட்! மன்னிக்க வேண்டும் - மிஸ்டர் நல்லான் அந்த வீட்டுக்குள் இதுவரை செல்லாதவர். அதனால் அவர் சாட்சி சொல்ல, லோகஸ் ஸ்டாண்டி கிடையாது என்கிறேன்.

நீதிபதி:- பிரேத விசாரணை செய்த டாக்டர்கள் இது பெட்ரோல் ஊற்றி வைக்கப்பட்ட தீ தான் என்கிறார்களே! அவர்களுக்கு என்ன லோகஸ் ஸ்டாண்டி இருக்கிறது? அவர்கள் அந்த வீட்டுக்கு அடிக்கடி போனவர்களா என்ன?

எதிரி வக்கீல்:- (விழித்துக் கொண்டே) மை லார்டு....? ?...

நீதிபதி:- நீதிமன்றம் ஒத்திவைக்கப்படுகிறது, நாளை விசாரணை தொடரும்.....

★

உடன்பிறப்பே! தீயிட்டுக் கருக்கப்படும் மருமகளுக்கு "ஜனநாயகம்" என்று பெயர் வைத்துக் கொண்டால், பிறகு அவள் கணவன் பெயரும், மாமியார் பெயரும் தெளிவாகவே உனக்கு விளங்கிவிடும்.

அன்புள்ள,

மு.க.

3-9-2004

3090. அடடா; அழைப்பு விடுக்கும் அழகே அற்புதம்!

உடன்பிறப்பே,

ஆறு காபினெட் அமைச்சர்கள் உள்ளிட்ட பனிரெண்டு அமைச்சர்களைத் தமிழ்நாட்டில் பெற்றிருக்கிற ஜனநாயக முற்போக்கு கூட்டணி, தமிழகத் தேவைகளை நிறைவு செய்யக் கோரியும், திட்டங்களை நிறைவேற்ற முயற்சி எடுத்தும், ஆக்கபூர்வமான வகையில் மத்திய அரசை வலியுறுத்தி, தமிழக நலன்களைக் காத்திட வேண்டுமென்று, நடுநிலையாளர்கள் - பொதுமக்களின் பிரதிநிதிகள் - இதழாளர்கள் வெளியிடும் கருத்துகள், இந்தக் கூட்டணியிலேயுள்ள கட்சிகளின் தலைவர்களுக்கு ஒத்த கருத்து என்பதால்தான், கடந்த ஆகஸ்டு திங்கள் 30ஆம் தேதியன்று நடைபெற்ற தமிழக ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களின் கலந்துரையாடல் கூட்டத்தில், பின்வரும் முடிவு எடுக்கப்பட்டது.

தீர்மானம்

“தமிழ்நாட்டுக்குத் தேவையான திட்டங்கள், தொழில் வளர்ச்சித் தொடர்புடைய செயல்பாடுகள், ரெயில்வே புதிய பாதைகள், பழைய பாதைகள் விரிவாக்கம், வேளாண் துறை பாசன வசதி மேம்பாடு, குடிநீர் வசதி செய்தல், சாலைகள் இணைப்பு, கிராமாந்திர நலத் திட்டங்கள், சேது சமுத்திரத் திட்டம் போன்றவை குறித்தும், வறட்சி நிவாரணம், மக்கள் நல்வாழ்வுத் துறை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், இன்னும் தேவையானவை குறித்தும் மத்திய அரசிடம் எடுத்துக் கூறும் அளவுக்கு வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளவும், அதற்கான செயல்முறைகள் பற்றியும் விவாதித்து கோரிக்கைகளை முறைப்படுத்திட தமிழ்நாடு ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் சார்பில் மக்களவையிலும், மாநிலங்களவையிலும்

இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள், அமைச்சர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்ளும் கூட்டத்தை 7-9-2004 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நடத்துவதென்றும், அந்தக் கூட்டத்தில் கருத்துகளை எடுத்துரைக்க, மக்களவை, மாநிலங்களவை ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினர்களேயன்றி - கூட்டணிக் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்படுகிறது."

இவ்வாறு எடுக்கப்பட்ட முடிவின்படி, வருகிற 7-9-2004 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில், தமிழக ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் கட்சித் தலைவர்கள், மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் முதற்கூட்டம் நடைபெற இருக்கிறது. அத்தகைய கூட்டங்கள் அடிக்கடி நடைபெறவும் - தொடர்ச்சி கெடாமல் நடைபெறவும் - தமிழக நலன்களுக்குத் தேவையான முறையில் முடிவுகள் மேற்கொண்டு செயல்படவும் - தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

இதற்கிடையிலே கர்நாடகத்திலிருந்து அதிர்ச்சி தரும் செய்தியொன்று வந்தது. 1990ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட காவேரி நடுவர் மன்றம் 13 ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டு; தனது இறுதி அறிக்கையை விரைவில் வெளியிட இருக்கும் தருணத்தில், அந்த நடுவர் மன்றத்தையே மாற்றி அமைக்க வேண்டுமென்ற கருத்து கர்நாடக மாநில அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது என்ற செய்திதான் அது.

மேலும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த காந்தி சாகித்ய சங்கம், உச்ச நீதிமன்றத்தில் நடுவர் மன்ற ஆணை குறித்து தாக்கல் செய்த மனு ஒன்றும் வரும் 10ஆம் தேதியன்று விசாரணைக்கு வரவுள்ளது.

இந்தச் செய்திகள் ஏடுகளிலும், தொலைக்காட்சிகளிலும் அறிவிக்கப்பட்டவுடன், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள், தங்களது மறுப்புகளையும், கண்டனங்களையும் தெரிவித்து அறிக்கைகள் வெளியிட்டார்கள்.

அனைத்துக் கட்சிகளுமே கட்சி மாறுபாடுகளை மறந்து இந்தப் பிரச்சினையில் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ண அடிப்படையில் திராவிடர் கழகத் தலைவர் ஆருயிர் இளவல் வீரமணி அவர்கள், பின்வரும் வேண்டுகோள் கொண்ட அறிக்கையொன்றினைத் தந்துள்ளார்கள். அந்த அறிக்கையின் சுருக்கம் வருமாறு:-

"தி.மு.க. தலைவரும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தமிழ்நாட்டுத் தலைவருமான கலைஞர் அவர்களும், பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் இதில் உடனடியாக மறுப்புக் கூறி எதிர்ப்பைத் தெரிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. தமிழக ஆளுங்கட்சி இதைப் பயன்படுத்தி எல்லாக் களங்களிலும் அனைவரும் ஓர் அணி - இப்பிரச்சினையில் என்பதைக் காட்டும் வண்ணம், எதிர்க்கட்சித் தலைவர்களின் அறிக்கைகளில், வாசகங்களில் கிடைத்துள்ள ஆதரவினைப் பயன்படுத்திக் கடமையாற்றிடத் தவறக் கூடாது என்று தமிழ்நாட்டு முதல் அமைச்சரை நாம் கேட்டுக் கொள்கிறோம்"

இவ்வாறு வீரமணி அவர்கள் விடுத்த அறிக்கை 2-9-2004 அன்று வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து, மற்றக் கட்சித் தலைவர்கள் பலரின் அறிக்கைகள், கர்நாடகத்தின் போக்கைக் கண்டித்து வெளியிடப்பட்டன.

காவேரிப் பிரச்சினை போன்ற பொதுப் பிரச்சினைகளில் - தமிழ்நாட்டு நலன் காக்கும் பிரச்சினைகளில் - திறந்த மனத்துடன் ஒரே குரலில் முழங்கி ஓரணியில் நிற்பதற்கு நாம் என்றைக்குமே தயங்கியதில்லை. அப்படி ஓரணி உருவான போதெல்லாம் ஒத்துழைப்பு எங்கிருந்து கிடைக்கவில்லை என்பதைக் கடந்த கால நீண்ட வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்து ஒரு பாமரன் கூடப் புரிந்து கொள்ள முடியும்.

அதையெல்லாம் தமிழ்நாட்டு நலனுக்காக மறந்து விட்டு, நடுவர் மன்றத்தை மாற்றியமைக்க முனையும் கர்நாடக அனைத்துக் கட்சிகளின் கருத்துக்கு மாறாக, "நாம் ஒன்று கூடுவோம்" என்று மானமிகு வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்த பிறகும், அனைத்துக்

கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோரி முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையின் வாசகம் எப்படி அமைந்துள்ளது என்பதைச் சற்றுக் கவனிக்க வேண்டும்.

> "மத்தியில் ஆளும் கூட்டணியில் அங்கமாக உள்ள தமிழ்நாட்டு எதிர்க்கட்சிகளுக்கு, காங்கிரஸ் கூட்டணி அமைத்துள்ள கர்நாடக அரசின் இத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்கும் விசேஷப் பொறுப்பு இருக்கிறது. இதை அவர்கள் செய்யத் தவறினால், இந்தத் துரோகத்தைத் தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்"

இவ்வாறு எச்சரித்து, மிரட்டி, தமிழ்நாட்டு எதிர்க் கட்சிகளை விவசாயிகள் மன்னிக்க மாட்டார்கள் என்று எவ்வளவு நாகரிக(?) மாக அழைப்பு விடுத்திருக்கிறார் என்பதை, இதுபோன்ற நிகழ்வுகளிலாவது ஒன்றுபட வேண்டும், என்று கருதுகிற நல் லெண்ணம் படைத்த நமது வீரமணி போன்றவர்கள், சிந்தித்துப் பார்த்திட வேண்டுகிறேன்.

முதலமைச்சர் ஜெயலலிதா மாத்திரமல்ல, அந்தக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் பன்னீர்செல்வம் விடுத்த அறிக்கையில், "காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன்தான் அரசியல் அனுபவம் அற்ற ஒரு அரை வேக்காடு என்றால், டாக்டர் ராமதாசும் அந்தத் தகுதிக்குப் போட்டியிடுவது பரிதாபகரமானது" என்றும், "டாக்டர் ராமதாசுக்கு இந்த வயதிலேயே தள்ளாட்டமும், தடுமாற்றமும் ஏற்பட்டிருக்கிறது, நல்லதொரு மருத்துவரை அவர் நாட வேண்டிய நேரமிது" என்றும் வர்ணித்துள்ளார்.

இதோ இந்தப் படம் இந்நாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும் - முன்னாள் பிரதமர் வாஜ்பய் அவர்களும் நேற்றைய தினம் அமிர்தசரஸ் பொற்கோயிலில் சீக்கியர் விழா ஒன்றின்போது இணைந்து நின்று இருவரும் முக மலர்ச்சியுடன் கையசைக்கும் படம்.

எத்தனையோ கருத்துவேறுபாடுகளுக்கிடையே, முத்தனைய நட்பு இருவரிடமும் முகிழ்த்திருப்பதை இந்தப் படம் விளக்குகிறது.

இந்த இரு தலைவர்களுக்குமிடையே அரசியல் ரீதியான சர்ச்சைகள் - எவ்வளவோ நடைபெற்றிருக்கின்றன.

அத்தகைய நேரங்களில் வாஜ்பய் அவர்களும் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற நிலையில் வார்த்தைகளைப் பயன்படுத்தியதில்லை. மன்மோகன் சிங் அவர்களும் மனம் போன போக்கில் எதிர்ச் சொல் எதையும் இழி சொல்லாகக் கூறியதில்லை. இத்தகைய நாகரிக அரசியல் நடத்தப்படுகிற காரணத்தினால்தான், நட்பு மணம் வீசுகிற தோழமை உணர்வை எதிர் எதிராக இருப்பவர் களிடமும் காண முடிகிறது. அதற்குத்தான் இந்தப் படம் சான்றாக விளங்குகிறது.

"ஒருவரைப் பற்றி ஒரு அரசியல் தலைவரோ அல்லது பிறரோ விமர்சிக்கும்போது - எப்போதாவது இருவரும் மீண்டும் சந்திக்க நேரிடும் என்ற நினைப்பு தேவை" என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு, ஏன், பல நாட்களுக்கு முன்பு ஜெயலலிதா என்னைப் பற்றியும், என் தலைமையில் உள்ள கழகத்தைப் பற்றியும் - கழகத்தின் தலைமையில் உள்ள தமிழக ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் உள்ள கட்சிகளின் தலைவர்கள் பற்றியும் வாரியிறைத்த வசைமாரிகளைக் கூட இந்தப் பொதுப் பிரச்சினைக்காக மறந்து விடத் தயார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு "கருணாநிதிக்கு புத்தி சுவாதீனமில்லை" என்று ஜெயலலிதா கூறியதை அப்படியே அச்சுப் பிசகாமல் வெளியிட்டுள்ளனவே பத்திரிகைகள்! அதைக் கூட இந்தப் பொதுப் பிரச்சினைக்காக மறந்து விடலாம்.

ஆனால், வீரமணி அவர்களின் அன்பான வேண்டுகோளுக்குப் பிறகும், ஜெயலலிதா ஒரு முதலமைச்சர் என்ற முறையில் தமிழகத்தில் உள்ள எதிர்க் கட்சிகளைக் காவேரிப் பிரச்சினைக்காக ஒன்று திரட்ட அழைப்பு விடுக்கும் முறை இதுதான் என்றால்; துரோகத்தைப் பற்றி ஜெயலலிதா பேசுவதும், அறிக்கைகளில் குறிப்பிடுவதும் - அவருடைய மனச் சாட்சியே அவரைக் கேலி செய்யும் விஷயங்களாகும் என்பதை வினயமுடன் நம்மால் தெரிவிக்காமலிருக்க முடியாது.

அதே நேரத்தில் கர்நாடகத்தின் விபரீத முயற்சியாகவும் - தமிழ்நாட்டை வெறும் பாலைவனமாக மாற்றக் கூடிய விளைவை ஏற்படுத்தக் கூடியதாகவும் - நடுவர் மன்றத்தையே புதிதாக

உருவாக்கக் கூடியதாகவும் - எடுக்கப்படும் எந்த முடிவையும், உடல், பொருள், ஆவி அனைத்தையும் பணயமாக வைத்து எதிர்க்கத் தயாராக இருக்கிறோம் என்பதை உறுதிபடத் தெரிவிப்பதுடன் - மத்திய அரசும் இதில் மௌனம் சாதிக்காமல், ஏற்கனவே 1990 முதல் இயங்கிக் கொண்டிருக்கிற நடுவர் மன்றம், தொடர்ந்து இயங்கவும், விரைவில் இறுதித் தீர்ப்பை வழங்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

4-9-2004

3091. வழக்கு வாபஸ் - வெளிச்சத்துக்கு வந்த உண்மை!

உடன்பிறப்பே,

சிண்டு முடிபவர்கள், சிண்டு முடிவதையே தொழிலாகக் கொண்டு அதன் காரணமாகவே செழித்து வாழ்ந்திட வழிகண்டவர்களைப் பற்றி, முழுமையாகத் தெரிந்து கொள்ளப் பொது வாழ்வில் போதிய அனுபவம் தேவை.

அந்த அனுபவத்தைப் பெற்றவர்களில் அடியேனும் ஒருவன் என்பதை, எனக்கு இயல்பாக உரிய அடக்க சுபாவத்துடன் சொல்லிக் கொள்வது பெருமை யென்றே நான் கருதுகிறேன்.

இளம்பிராயத்திலேயே அரும்பி, பொதுவாழ்வுப் பணியில் 66 ஆண்டு காலமாகப் போதாகி - இன்று 80ஆம் அகவை நிறைவுறும் காலத்துடன் இணைந்து மலர்ந்துள்ள இன்ப துன்பங்கள் இரண்டும் கலந்துள்ள அனுபவப் பழமாக நானிருக்கிறேன் என்பதை, இப்போது சொல்லிக் கொள்ளாமல் வேறு எப்போது சொல்லிக் கொள்ளப் போகிறேன்.

அந்த அனுபவப் பெருமையை ஏதோ பெரிய காரியம் ஒன்றுக்காகக் குறிப்பிடப் போகிறேன் என்று எதிர்பார்த்தால்; பெரிய காரியமா? சிறிய காரியமா? என்பது அதனால் பாதிக்கப்படப்போகிறவைகளை வைத்துத்தான் உணர்ந்து கொள்ளக் கூடியதாக அமைய முடியும்.

சில நேரங்களில் சில செயல்பாடுகளால் ஜனநாயகத்தின் சீர்மையே பாதிக்கப்படும் -

சில சமயங்களில் நீதி நேர்மையே பாதிக்கப்படும் -

நான் குறிப்பிடும் ஜனநாயகமானாலும், நீதி நேர்மை யானாலும், தானாகவே அழுகியோ - அல்லது காய்ந்து உலர்ந்தோ - கெட்டு விடுபவையல்ல - அவற்றைக் கெடுக்கத் துணிவோர்

அல்லது முனைவோர்தான் இரண்டையும் பாதிப்புக்கு உள்ளாக்க முடியும்.

ஜனநாயக முறை அடியோடு வெட்டிச் சாய்க்கப்பட்டுள்ள ஒரு ஆட்சியின் அலங்கோலம் தாண்டவ மாடுகிற தமிழகத்திலிருந்து, ஜனநாயகம் - நீதி நேர்மை, இவைகளைப் பற்றியெல்லாம் நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அவற்றைக் கரை சேர்க்க முடியுமா என்று ஆழ்ந்த யோசனையிலுமிருக்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில்தான் நான் சொல்லும் சில கருத்துகள், சிண்டு முடிவோரிடம் சிக்கி அவர்களின் இஷ்டத்துக்குச் செதுக்கப்பெற்று, பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிகிற வேடிக்கையான நிகழ்வுகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன.

விரிவாக வளர்த்துவானேன்! இதோ விஷயத்துக்கே வந்து விடுகிறேன்.

மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் புதிய ஆட்சி அமைந்தவுடன் - குறைந்தபட்சப் பொதுத் திட்டங்கள் ஆராயப்பட்டு, அறிவிக்கப்பட்ட நிலையில் "பொடா" எனும் பொல்லாத சட்டத்தையும் திரும்பப் பெற வேண்டும் - ரத்து செய்தாக வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று, பொடாவுக்கு விடை கொடுக்கப்படும் என்ற அறிவிப்பும் மத்திய அரசு வாயிலாக வெளியிடப்பட்டது.

ஆனால் 'பொடா'வைப் பிரசவித்த பழைய ஆட்சியில் பங்கு பெற்றிருந்த பா.ஜ.க. வினருக்குக் கூட வராத கோபம், அந்தக் கொடிய விலங்கினை வளர்த்து, தம்பி வைகோ போன்றவர்கள் மீது முட்ட விட்ட முதல்வர் ஜெயலலிதாவுக்கு வந்து, அந்தச் சட்டத்தை ரத்து செய்யக்கூடாது என்று ஒற்றைக் காலில் நின்றார்.

இதற்கிடையே வேலூர் வெஞ்சிறைக் கொடுமைக்கு ஆளாகியிருந்த வைகோவும், அவருடன் கைதான எட்டு நண்பர்களும் 'ஜாமீன்' கிடைத்து வெளி வந்தனர். ஆனாலும், அவர்கள் மீதான வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

'பொடா' பற்றி ஆராய்ந்து அறிவித்திட அமைக்கப்பட்ட நீதிபதி சகாரியா தலைமையிலான பொடா மறு ஆய்வுக் குழு, தனது ஆய்வை முடித்து, வைகோ உள்ளிட்ட ஒன்பது பேர் மீது 'பொடா' வழக்கு தொடர்ந்தது தவறு என்றும், அந்த வழக்குகளை வாபஸ் பெற

வேண்டுமென்றும் கடந்த ஏப்ரல் மாதமே தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்தது.

ஏப்ரலுக்குப் பிறகு மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் இப்போது செப்டம்பர்!

மே திங்களில் ஆட்சி மாற்றமே மத்தியில் ஏற்பட்டது. 'பொடா' சட்டம் ரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பு உரிய முறையில் வெளிவந்தது.

பாராளுமன்றத்தை நடத்தவிடாமல் பா.ஜ.க. அணியினர் தொடர்ந்து குழப்பம் விளைவித்த நிலையில், மக்களுக்குத் தேவையான பல நல்ல முடிவுகளை விவாதித்து எடுக்க முடியாத சூழலில் - இடையே பொடாவை ரத்து செய்யும் நடவடிக்கையும் அவற்றில் ஒன்றாகத் தடைப்பட்டுக் கிடக்கிறது.

அவசரச் சட்டம் கொண்டு வந்து பொடாவை ரத்து செய்வோம் என்று மத்திய அரசு கருத்தறிவித்துள்ள சமயத்தில், முதல்வர் ஜெயலலிதா, இந்தியாவில் உள்ள எல்லா முதல்வர்களுக்கும் "பொடாவை ரத்து செய்யக் கூடாது" என்ற கருத்தை வெளியிடுமாறு கடிதம் எழுத; அதற்கு உடனடியாக ஒரேயொரு முதல்வர் மோடி மட்டுமே ஓடிவந்து ஒப்புதல் தெரிவித்தார்.

நீதிபதி சகாரியா குழு, ஏப்ரல் மாதம் கொடுத்த பரிந்துரையை ஜெயலலிதா அரசு, ஆகஸ்டு மாதம் பொருட்படுத்தி, தம்பி வைகோ உள்ளிட்ட ஒன்பது பேர் மீதான வழக்கை வாபஸ் பெறுவதாகத் தெரிவித்து, அதற்கான மனு ஒன்றை 9-8-2004 அன்று 'பொடா' நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

அந்த மனுவின் மீது 'பொடா' நீதி மன்றம் அளித்த தீர்ப்பு பலருக்கு வியப்பை ஏற்படுத்தியது. அரசே வழக்கை வாபஸ் வாங்க மனு கொடுத்த நிலையில், அந்த மனுவை நீதி மன்றம் நிராகரித்து விட்டது.

ஆகஸ்ட் 26ந்தேதியன்று முரசொலியில் ஒரு கேள்விக்கு நான் அளித்த பதிலில், "மர்மம்" என்று ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தேன். அதைப் பூதாகாரமாக்கி சில வார ஏடுகள்கூட தங்களுக்கு முடிந்த வக்கணைகளை செய்திருந்தன. அதாவது, சிண்டு முடியும் வேலை நடத்தின!

இதோ அந்தக் கேள்வி பதில் :-

கேள்வி :- "பொடா சட்டத்தை வாபஸ் வாங்கக் கூடாது என்று மத்திய அரசுக்கு வற்புறுத்தி எழுதுங்கள் என எல்லா முதலமைச்சர்களுக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளாராமே?"

கலைஞர்:- "பொடா சட்டத்தை இப்படி உடும்புப் பிடியாக பிடித்துக் கொண்டிருக்கும் ஜெயலலிதா, இங்கே வைகோ மீது தொடர்ந்து இருந்த 'பொடா' வழக்கை வாபஸ் வாங்கியது ஏன்? அதுவும் அவரைச் சிறையில் பூட்டி ஒன்றரை ஆண்டுக்குப் பிறகு, அவர் மீதுள்ள பொடா வழக்கை வாபஸ் வாங்குவதாகக் கூறிவிட்டு - மத்திய அரசு பொடாவை ரத்து செய்யக்கூடாது என்று எல்லா முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதும் "மர்மம்" என்ன வென்றே தெரிய வில்லையே!"

இந்தக் கேள்வி பதிலில் உள்ள "மர்மம் என்ன?" என்பதை வைத்துத்தான் சிலர் திரிப்பு வேலை செய்தனர்! சிலர் திரிலோக சஞ்சாரி வேலை செய்து பார்த்தனர்!

ஆனால், அவர்கள் யாரும் கயிறு திரித்ததுபோல் இல்லாமல், என் அனுபவம் சொன்னதுபோல்தான் நடந்திருக்கிறது.

தன்னிடம் அளிக்கப்பட்ட வழக்கு வாபஸ் மனுவை வைத்துத்தான் நீதிபதி தீர்ப்பளிப்பார் . - மனுவிலேயே வழக்கு வாபஸ் ஆக வேண்டுமென்ற வலுவான வாதம் வைக்கப்படவில்லையென்றால் - நீதிபதிதான் என்ன செய்வார்!

வலுவான வாதமா? வஞ்சம் தீர்க்க முனையும் இந்த அரசிடம் வாபஸ் வாங்க வேண்டுமென்ற வாய்மைக்கும், அதற்கேற்ற வலுவான வாதத்திற்கும் ஒரு துளியும் இடமிருக்காது என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்திருப்பதால்தான் "பொடா சட்டம் ரத்தாகக் கூடாது" என்றும், அதே காலத்தில் "பொடா வழக்கு வாபஸ்" என்றும் ஒரே வாயிலிருந்து இரண்டு மாறுபட்ட ஒலிகள், ஒரே நேரத்தில் வந்ததைக் கண்டுதான், நான் கேள்வி பதிலில் "மர்மம் என்னவென்று தெரியவில்லையே" என்று வியப்பு தெரிவித்திருந்தேன்.

அது அர்த்தமற்ற வியப்பு அல்ல! அர்த்தமுள்ள வியப்புதான் என்பதை - நான் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் உறுதிப்படுத்துகிறேன்.

"அரசின் மனுவில் பொடா வழக்கை ஏன் வாபஸ் பெற வேண்டும் என்பதற்கானக் காரணங்கள் சரியாகக் கூறப்பட வில்லை"

என்று பொடா நீதிமன்ற நீதிபதி கூறியிருப்பதிலிருந்து "வழக்கு வாபஸ்" ஒரு மர்ம நாடகம் என்பது வெளிச்சத்துக்கு வந்துவிட்ட உண்மையாகிறதல்லவா?

அன்புள்ள,

மு.க.

5-9-2004

3092. கொடியோர்க்கு அஞ்சி நம் கொடி சாயாது!

உடன்பிறப்பே,

"தி.மு.க.வுல ஒருத்தர் மாநாடு நடத்தி நொந்து போய் நிற்கிறாராம்.....

அது யாருன்னு எங்களுக்குத் தெரியாதாக்கும்..... சேலத்து மாஜி மந்திரிதான்! விழுப்புரம் மாநாட்டை விடப் பெரிசா நடத்துவேன்னு விழுப்புரத்திலேயே அறிவிச்சாரு - சொன்ன சொல்லை அவரால (சேலத்துல) காப்பாத்த முடியாம போயிருச்சாம். சேலத்திலே எதிர்பார்த்த கூட்டம் வரலியாம். "இதுக்குக் காரணம் மேலிடத்து சதின்னு புலம்பிக்கிட்டு இருக்கிறாராம். அதாவது ஸ்டாலின் ஆதரவு மாவட்ட செயலாளர்கள் 21 பேருக்கு ரகசிய தகவல் போயி..... மாநாட்டுக்கு வரவேண்டிய கூட்டத்தைத் திட்டமிட்டுக் குறைத்துவிட்டதாலே..... அதனால் மாஜி மந்திரிக்கு மனசே சரியில்லையாம். அவரை ஒரு நல்ல டாக்டர்கிட்ட அனுப்பலாம் இல்லியா?"

இந்த விரசமிகு சாராம்சம் கொண்ட ஓர் "சம்பாஷணை" டீக்கடையில் "டீ" குடிப்பது என்ற சாக்கில், வேறு எதையோ குடித்துவிட்டுப் பேசியவர்களால் உளறப்பட்டு, அது கடையில் கிடந்த "பெஞ்சு"களில் "வாந்தி"யாகப் பெருக்கெடுத்து ஓடியதை; கிருஷ்ணமூர்த்தியும், லட்சுமிபதியும் வழித்தெடுத்து வாசகர்கள் படிப்பதற்காக வழங்கியுள்ளார்கள். அவர்கள் சென்னையில் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் வேலை பார்க்கும் பத்திரிகை அலுவலகத்திலிருந்து!

சேலம் தி.மு.க. சிறப்பு மாநாட்டின் வெற்றி, சேல்விழியை சிகப்பு விழியாக்கிடும் அளவுக்கு சினம் பொங்கிடச் செய்தபோது, இந்த இரு பிறவிகளும், கொடுங்கோலேந்தியின் கோபம்

தணிப்பதற்காக, "கூட்டமேயில்லை சேலம் மாநாட்டில் - கருணாநிதி கடுங் கோபமாயிருக்கிறார்" என்றெல்லாம் கதை கட்டி - "கனிவு தோன்றாதா தங்கள் கடவுள் முகத்தில்" என்று எதிர்பார்த்து, எல்லையில்லாப் பொய்யை, எதிரும் புதிருமாக அமர்ந்து எதையோ அருந்தியவர்கள் அவிழ்த்து விடுவதுபோல அவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.

சேலம் மாநாட்டில் கூட்டமேயில்லையென்று ஓலமிடுவதற்குக் காரணம், கண் இருக்க வேண்டிய இடத்தில் இரு புண் இருப்பதால் என்றும் கருதலாம்.

சேலம் மாநாட்டுக்கு மாவட்டச் செயலாளர்களுக்கு ஸ்டாலின் ரகசியமாக செய்தி அனுப்பிக் கூட்டம் இல்லாமல் செய்து விட்டார் என்று ஒரு அபத்தம்!

மாநில மாநாடு ஒன்றில், இயக்கத்தின் கொடியை ஏற்றுகிற மகத்தான வாய்ப்பு ஸ்டாலினுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அவர், அத்தகைய பெருமை வாய்ந்த வாய்ப்பை வெறுத்து, அந்த மாநாட்டுக்குக் கூட்டம் வராமல் பார்த்துக் கொண்டார் என்று எழுதியிருப்பது எவ்வளவு கோமாளித்தனமான பச்சைப் பொய்!

ஏனிப்படி பொய்யில் நெளியும் புழுக்களாக பேனா பிடிப்பவர்கள் சிலர் திரிகிறார்கள்? என்பதை நன்கு சிந்திக்க வேண்டும்.

சேலத்தைக் குறைத்துச் சொல்வதற்காக, விழுப்புரத்தையும், விருதுநகரையும் ஏற்றிச் சொல்கிறார்கள், போற்றிச் சொல்கிறார்கள்!

கூட்டம் குறைய வேண்டும் என அவர்களின் இஷ்ட தெய்வங்களிடம் பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள். ஆனாலும் அது நடக்கவில்லை.

விழுப்புரமும் வெற்றிகர மாநாடுதான் - விருதுநகரும் வெற்றிகர மாநாடுதான் - மூன்றாவதாக நடைபெற்ற சேலமும் பெயரில் மட்டுமல்ல, பெருமை பெற்றதிலும் சிறப்பு மாநாடுதான்.

வீரபாண்டி, பொன்முடி, கே.கே.எஸ்.எஸ்.ஆர். போன்ற என் தம்பிமார்கள் ஒருவரை மிஞ்சி ஒருவர் இயக்கத்திற்கான வெற்றிகளை ஈட்டுபவர்கள்தான் - கூட்டங்களாயினும், விழாக்களாயினும், மாநாடுகளாயினும் பொது வாழ்வில் புகழ் தரும் போட்டிகளை விரும்புகிறவர்களே தவிர, சில பத்திரிகை

அலுவலக டீக்கடைகளில் அமர்ந்து வேறு சரக்கு அருந்தியவர்கள் நினைப்பது போலவோ - பேசுவது போலவோ - தூண்டி விடுபவர்களின் தூண்டிலில் சிக்குபவர்களுமல்லர் - வஞ்சகர் விரிக்கும் வலைகளில் மாட்டுபவர்களுமல்லர் - அவர்கள் சிக்கும் வலையெல்லாம் இந்த அண்ணனின் பாசவலையில்தான் - காய்தல் உவத்தலுக்கு இடமின்றி, கழகம் எல்லாக் களங்களிலும் வெற்றி பெற ஒருவருக்கொருவர் போட்டி போடுவர் என் தம்பிமார்கள் என்பதை, ஒன்றையொன்று மிஞ்சிடும் வகையில் மாநாடுகளை நடத்துவதில் மட்டுமல்ல, அறப்போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறைகளை நிரப்புவதிலும் காட்டக் கூடியவர்கள் - காட்டிக் கொண்டிருப்பவர்கள்!

இதோ சேலம், சிறப்புற - செழிப்புற - சிங்கக் கூட்டத்தின் ஆற்றலை நமக்கெல்லாம் தந்திடும் வகையில் வீரபாண்டியின் திறனைத் தெரிவித்திடும் வண்ணம் நடந்து முடிந்ததைத் தொடர்ந்து, அடுத்து அரிமாக்களென ஆர்த்தெழுந்துள்ளனர் கோவையின் கொள்கைத் தங்கங்கள்!

தம்பி கோவை ராமநாதன் வழிகாட்டுதல் - தம்பி பொங்கலூர் பழனிசாமியின் வகைப்படுத்தப்படும் பணிகள் - மாநகரச் செயலாளர் தம்பி வீரகோபாலின் வற்றாத உழைப்பு - அத்தனையும் கலந்து கொங்குச் சீமை எடுக்கும் கழகத்தின் முப்பெரும் விழா, செப்டம்பர் 15 அன்று காலை முதல் இரவு வரையில், கோவையில் நடைபெற இருக்கிறது.

1977 ஆம் ஆண்டு நாம் தொடங்கிய விழாதான் முப்பெரும் விழா!

அண்ணா பிறந்த நாள்

அய்யாவும்

கழகமும் பிறந்த நாள்

மூன்றையும் இணைத்து, ஆண்டுதோறும் முப்பெரும் விழாவாகக் கொண்டாடுகிறோம்.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்த விழாவை, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரில் நடத்துவது என்று முடிவு செய்து, இந்த

ஆண்டு முப்பெரும் விழாவுக்காக கோவை மாநகரில் முக்கடல் சங்கமமாகக் கூடுகிறோம்.

இதோ கோவை முப்பெரும் விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்துள்ளேன்.

கோவை, சி.ஐ.டி. பொறியியல் கல்லூரி கலை அரங்கத்தில் 15-ந் தேதி காலை 9 மணி அளவில், தி.மு.க. அறக்கட்டளை சார்பில் மாணவர்க்கு நிதியளிப்பு விழா. விழாவிற்கு கழகப் பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் தலைமை தாங்குகிறார். மேல்நிலைப் பள்ளித் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்க்கு, தி.மு.க. அறக்கட்டளை சார்பில் நான் நிதி அளித்து, சான்றிதழ் வழங்கி உரையாற்றுகிறேன்.

காலை 9.30 மணியளவில், அதே அரங்கில் முரசொலி அறக்கட்டளை சார்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் ஒப்பித்தல் போட்டியில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி மற்றும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்க்கு நிதியளிப்பு, சான்றிதழ் வழங்குதல், மற்றும் சிறந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்கான சான்றிதழும், பண முடிப்பும், பதக்கமும் வழங்கும் விழா. இந்த நிகழ்ச்சிக்கு முரசொலி அறக்கட்டளையின் தலைவரும், கழகத் துணைப் பொதுச் செயலாளருமான மு.க. ஸ்டாலின் தலைமை தாங்குகிறார். நிதி மற்றும் சான்றிதழ்களை நான் வழங்குகிறேன். முரசொலி அறக்கட்டளையின் இதர உறுப்பினர்களான செ. குப்புசாமி எம்.பி., விழாவிற்கு முன்னிலை வகிக்கவும், முரசொலி செல்வம் வரவேற்புரை ஆற்றவும், எஸ்.ஏ.எம். உசேன் எம்.எல்.ஏ. நன்றியுரையாற்றவும் இருக்கிறார்கள்.

அடுத்து காலை 10 மணியளவில், அதே அரங்கத்தில் விருது வழங்கும் விழா. 1985ஆம் ஆண்டிலிருந்து கழகத்தின் சார்பில் முப்பெரும் விழாவினையொட்டி நாம் நடத்தி வருகின்ற விருதுகள் வழங்கும் விழா. இந்த விழாவிற்கும் பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமை தாங்குகிறார். இந்த ஆண்டு பெரியார் விருதினை விருதுநகர் கே.பி.எஸ். பாண்டியன், அண்ணா விருதினை குமாரபாளையம் ஜே.கே.கே. சுந்தரம், பாவேந்தர் பாரதிதாசன் விருதினை அந்தமான் ஏ.ஆர். மருதவாணன், கலைஞர் விருதினை தஞ்சை கு. சுல்தான் ஆகியோர் என் கையால் பெறுகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து மாபெரும் சிந்தனைப் பட்டிமன்ற நிகழ்ச்சி. "நகைச்சுவைத் தென்றல்" நண்பர் திண்டுக்கல் ஐ. லியோனி நடுவராக இருந்து நடத்தவிருக்கின்ற நிகழ்ச்சி. பட்டிமன்றத்தின் தலைப்பு "இலக்கியங்களில் சிறந்தது இன்னா நாற்பதா? இனியவை நாற்பதா" என்பதாகும். இன்னா நாற்பதே என்ற தலைப்பில் பெரும்புலவர் அரங்க நெடுமாறன், பேராசிரியர் முருகன் ஆகியோரும், இனியவை நாற்பதே என்ற தலைப்பில் பேராசிரியர் சுபாஷ் சந்திரபோஸ், கவிஞர் நந்தலாலா ஆகியோரும் உரையாற்றவிருக்கிறார்கள்.

மாலையில் கோவை மாவட்ட, மாநகர தி.மு.க. சார்பில் கோவை சிதம்பரம் பூங்காவில் முப்பெரும் விழா பொதுக் கூட்டம் பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமையில் நடைபெறுகிறது. மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பொங்கலூர் பழனிசாமி வரவேற்புரை ஆற்றுகிறார். நானும், பொருளாளர் அருமை நண்பர் ஆற்காடு வீராசாமியும், துணைப் பொதுச் செயலாளர்கள் தம்பிகள் மு.க. ஸ்டாலின், பரிதி இளம்வழுதி, தங்கை திருமதி சற்குணப் பாண்டியன், தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன், தம்பி கோவை மு. இராமநாதன் ஆகியோரும் உரையாற்றுகின்றோம். மாநகரக் கழகச் செயலாளர் தம்பி எம்.வீரகோபால் நன்றியுரையாற்றுகிறார்.

நண்பர் திண்டுக்கல் லியோனியின் பட்டிமன்றத் தலைப்பு பார்த்தாயா? "இனியவை நாற்பதா? இன்னா நாற்பதா? எது சிறந்தது?"

இந்தக் கேள்விக்கு விடைகாண கோவை விழாக்களுக்கு
இனியவனே வந்திடுக!
இன்னாதோர் என்றும் போல் வசை பொழிந்திடுக!
வாழ்க! வசவாளர்கள் என வாழ்த்தியவாறு,
இரு சாரார்க்குமிடையே நம் எழுச்சி முரசு ஒலிப்பது
என்றைக்கும் ஓயாது! ஓயாது!
கொடியோர்க்கும் கோமாளிகட்கும் அஞ்சி நம் கொடி சாயாது!

அன்புள்ள,
மு.க.
6-9-2004

3093. திருக்குறள் இருக்க; தீண்டுவரோ மனுநீதியை!

உடன்பிறப்பே,

1942ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 62 ஆண்டுகளுக்கு முன்பே துண்டு அறிக்கை வடிவில் வெளிவந்து கொண்டிருந்த 'முரசொலி'யில்,

"கிருஷ்ண ஜெயந்தி" பற்றி நான் எழுதிய முகப்புக் கட்டுரையில்,

> "குளத்திலே நீராடிக் கொண்டிருந்த பெண்களின் சேலைகளைத் திருடி, மரத்திலே அமர்ந்து குழலூதிக் கும்மாளம் போட்ட கோபாலகிருஷ்ணன்"

என்று குறிப்பிட்டிருந்தது, இந்த வயதிலும் என் நினைவுக்கு வந்தது.

அதனால்தான் 1945ஆம் ஆண்டு செப்டம்பர் 29ஆம் நாள் பெரியார் அவர்கள், 'குடியரசு' இதழில் கருப்புச் சட்டைப் படை அமைப்புக்கான அறிவிப்பு வெளியிட்டதையொட்டி, அந்தப் படையின் தற்காலிக அமைப்பாளர்களாக நண்பர்கள் ஈ.வெ.கி. சம்பத் அவர்களும், எஸ்.கருணானந்தம் அவர்களும் நியமிக்கப்பட்டபோது, அந்தக் கருப்புச் சட்டைப் படையின் முதல் தொண்டனாக 'குடியரசு' அலுவலகத்தில் நான்; என் பெயரை அவர்கள் இருவரிடமும் பதிவு செய்து கொண்டேன்.

தொடர்ந்து எப்பொழுதும் கருப்புச் சட்டை அணியத் தேவையில்லை என்று கருதிய அண்ணா அவர்கள் கூட, கருப்புச் சட்டைப் படைக்கு தடை வருகிறது என்ற செய்தி வந்த அடுத்த கணமே, கருப்புச் சட்டை அணிந்து கொண்டு பெரியாருடன்

கடற்கரைக் கூட்டத்தில் கலந்து கொண்டதெல்லாம், இந்தப் பகுத் தறிவு இயக்கத்தின் பழைய வரலாற்று அத்தியாயங்களாகும்.

"நான் பாப்பாத்திதான் - பகுத்தறிவு இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி நான்தான்-" என்று சுய புராணம் பாடி, சட்டப் பேரவையிலேயே சலசலப்பு உண்டாக்கிய ஜெயலலிதா, அன்றைக்கும் முதலமைச்சராக இருந்து கொண்டு அவையில் முழங்கிய அந்த அதிர் வெடி வசனங்களுக்கு மாறாக, பகுத்தறிவுப் படிக்கட்டுகளில் காலூன்றிட முடியாமல் எத்தனை முறை தலை குப்புற விழுந்திருக்கிறார் என்பதை, தன்மான உணர்வு கொண்ட தமிழர்கள் தெளிவாகத் தெரிந்தே வைத்திருக்கிறார்கள்.

தீபாவளிப் பண்டிகை வாழ்த்து, நரகாசுர வதத்திற்குப் பாராட்டு - சரஸ்வதி பூஜை நவராத்திரி வாழ்த்து - மகிஷாசூரன் வீழ்ச்சிக்கு மகிழ்ச்சி - விநாயக சதுர்த்தி வாழ்த்து - எனப் பண்டிகை பலவாயினும், அவற்றில் ஒன்றுகூடத் தவறாமல் இந்தப் பகுத்தறிவுப் "பரிணாம வளர்ச்சி" பரிபூரண வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டிருந்த போதெல்லாம், "பத்தொடு பதினொன்று அத்தொடு இதுவொன்று" என்றே எண்ணியிருந்த நிலையில், இன்று "கிருஷ்ண ஜெயந்தி"க்குக் கூறியுள்ள வாழ்த்தின் மூலம் ஒரு கிறுகிறுப்பையே ஏற்படுத்தி விட்டார்.

"திருமாலின் அவதாரங்களில் கிருஷ்ணாவதாரம் கீர்த்திமிக்கது" என்று கூறி, அத்துடன் நிறுத்தவில்லை ஜெயலலிதா!

> "கிருஷ்ணனின் சிறப்பு, கடவுளின் அவதாரம் என்பதில் மட்டும் அடங்கிவிடவில்லை. உலகம் போற்றும் ஞான நூலாம் ஒப்பற்ற பகவத் கீதையை அருளிச் செய்ததிலும், கிருஷ்ணனின் பெருமை, சுடர் விடுகிறது. பகவத் கீதையின் போதனைகள், எக்காலத்துக்கும் - எத்தேசத்துக்கும் பொதுவானவை. கீதையைப் படிப்பதும், கீதை வழி நடப்பதுமே மிகச் சிறந்தது"

என்றும் கூறி, கீதையை உலகப் பொதுமறையாகவும் ஏற்றுக் கொள்ளச் சொல்லியிருக்கிறார்.

கீதையை மட்டுமல்ல, அந்தக் கீதையை உபதேசித்ததாகக் கூறப்படும் கிருஷ்ணன் பிறந்த கதையை ஏற்றுக் கொள்ள முடிகிறதா என்று முதலில் பார்ப்போம்!

இதோ, 'அக்மார்க்' முத்திரையுடன் கூடிய ஆத்திகப் பத்திரிகையொன்றில், கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு விசுவாசத்துடன் அந்த ஏடு வெளியிட்டுள்ள கிருஷ்ணாவதாரம் பற்றிய கட்டுரையில் ஒரு பகுதி வருமாறு :-

"தேவகி ஏழாவது முறையாகக் கர்ப்பம் தரித்தபோது மகா விஷ்ணுவின் படுக்கையான ஆதிசேஷன், இவளது கர்ப்பத்தில் தோன்றினார். இதன்பின், அவர் எட்டாவது குழந்தையாக அவதரிப்பதற்கு முன் கிருஷ்ணர் தனது பிரதான உள் சக்தியான யோக மாயையை அழைத்தார். "தேவகியின் கர்ப்பத்தில் இருக்கும் ஆதி சேஷனை எடுத்து, விருந்தாவனத்தில் வசிக்கும் வசுதேவரின் மனைவியருள் ஒருவரான ரோகிணியின் கர்ப்பத்தில் மாற்றிவிடு. அதன் பின் நான் எனது முழு சக்தியுடன் தேவகியின் கர்ப்பத்தில் தோன்றி, தேவகி மற்றும் வசு தேவரின் மகனாக அவதரிப்பேன். நீ விருந்தாவனத்தில் நந்தனுக்கும், யசோதைக்கும் மகளாக அவதரிக்க வேண்டும்" எனக் கூறினார்."

உடன்பிறப்பே,

ஆதிசேஷன் எவ்வளவு பெரிய பாம்பு - பூமியையே தனது தலையில் தாங்கும் பாம்பு என்பர், புராணீகர் - அத்தனை பெரிய பாம்பு, தேவகியின் வயிற்றில் முதலில் கர்ப்பத்தில் இருந்ததாம்! அதை ரோகிணியின் கர்ப்பத்துக்கு மாற்றிவிட்டு, அந்தக் கர்ப்பத்தில் கிருஷ்ணன் போய் உட்கார்ந்து கொண்டாராம். தேவகிக்கு மகனாகப் பிறந்து, யசோதையால் வளர்க்கப்பட்டாராம் - இப்படி கர்ப்பங்களில் "எக்ஸ்சேஞ்ச் செய்யும் எக்ஸ்பர்ட்"டாக இருந்த கிருஷ்ணன் அருளிய பகவத் கீதையைத்தான் "உலகப் பொதுமறை" என்று சிலாகிக்கிறார் ஜெயலலிதா.

வள்ளுவர் செய் திருக்குறளை வழுவற உணர்ந்தோர் உள்ளுவரோ மனுவாதி குலத்துக்கொரு நீதி? எனக் கேட்ட திராவிட இயக்கப் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்; மட்டுமல்ல மனோன்மணியம் சுந்தரனார் - தமிழ் மலைகள், தமிழ்க் கடல்கள் எனப் புகழப் பெறும் அறிஞர் பெரு மக்கள் - புலவர் பிரான்கள் - அனைவருமே பொது மறையெனப் போற்றிய நம் குறள் இருப்பதையே எண்ணிப் பாராமல், பகவத் கீதைக்குப் பாராட்டும்,

சீராட்டும் செய்கிற ஜெயலலிதா, தன்னைப் பகுத்தறிவு இயக்கப் பரிணாம வளர்ச்சி எனக் கூறிக் கொண்டு இன்னும் எத்தனை நாளைக்கு மக்களை ஏமாற்றுவார்? எத்தனை நாளைக்கு திராவிட இனத்தையும், தமிழ்க் குலத்தையும் திசை திருப்பும் வேலையில் ஈடுபடுவார்?

நமது ஆருயிர் இளவல் திராவிடர் கழகத் தலைவர் வீரமணி அவர்கள், மிக அருமையாக, ஆராய்ச்சி பூர்வமாக - அரிய பெரிய மேற்கோள்களுடன் எழுதி வெளியிட்டுள்ள பயனுள்ள பகுத்தறிவு நூல் ஒன்று, "கீதையின் மறுபக்கம்" என்பதாகும்.

இதில் "ஸ்மிருதிகள், வேதங்கள், பகவத் கீதை எல்லாம் ஒரே துணியின் பல பகுதிகள்தான்" என்ற பெருந்தலைப்பில் "பின்னிணைப்பு: 8" என்று குறிப்பிட்டு, "டாக்டர் அம்பேத்கர் ஆய்வு" எனச் சுட்டிக்காட்டி, தொடர்ந்து "மத்திய அரசு வெளியிட்டுள்ள டாக்டர் அம்பேத்கரின் எழுத்தும், பேச்சும் கொண்ட 3 தொகுதியின் தமிழ்மொழி பெயர்ப்பு நூலிலிருந்து பின்வரும் பகுதி வெளியிடப்படுகிறது" எனக் குறிப்பிட்டு வந்துள்ளவை வருமாறு :-

"பகவத் கீதையில் கிருஷ்ணன் போதித்துள்ளவற்றைப் பின்வரும் நான்கு கூற்றுகளில் சுருக்கிக் காட்டிவிடலாம்.

1. "நானே நால்வகை (பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என மக்களை நான்கு வகையினராகப் பிரித்தல்) வருண அமைப்பினை அவரவர்களுக்குள்ள செயல் வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு படைத்துள்ளேன். எனவே, நானே இந்த சதுர்வருணங்களை உருவாக்கியவனாவேன்." கீதை 4 : 13.

2. "ஒருவன் இன்னொரு வருணத்தானின் தொழிலைச் செய்வது எளிதாக இருப்பினும், ஒருவன் தன் வருணத்திற்குரிய தொழிலை மிகுந்த திறனோடு செய்ய முடியாத போதிலும், தன் வருணத்திற்குரிய தொழிலைச் செய்வதே மிகச் சிறந்தது. ஒருவன் தன் வருணத்திற்குரிய தொழிலைச் செய்வதால் மரணமே நேர்வதாக இருந்தாலும், தன் வருணத் தொழிலைச் செய்வதே இனியது. ஆனால், பிற வருணத்தாரின் தொழிலைச் செய்வது ஆபத்தானது". கீதை 3 : 35.

3. “மக்கள் தத்தமக்குரிய தொழில்களைச் செய்ய வேண்டும் என்று விரும்பும் அறிவாளியானவன், தம் தொழிலில் பற்றுடைய அறிவீனர்களுக்குப் புத்திக் குழப்பத்தை உண்டாக்கக் கூடாது. அவனவன் தமது வருணத்திற்குரிய தொழிலைச் செய்து, மற்றவர்களையும் அவ்வாறே செய்விக்க வேண்டும். கற்றறிந்தவன் தன் தொழிலில் ஈடுபாடு இல்லாதவனாக இருக்கலாம். ஆனால், தம் தொழிலில் ஈடுபாடுடைய கல்லாதோரையும், மந்த புத்தியுள்ளவர்களையும் தம் தொழிலை விட்டு வேறு தொழிலைச் செய்வதற்குரிய கெட்ட வழியில் செல்வதற்குக் கற்றறிந்தவன் விட்டுவிடக் கூடாது”. கீதை 3 : 26, 29.

4. “அருச்சுனா! கடமைகளும், தொழில்களுமான இந்தத் தருமம் (நால் வருணமான இந்த மதம்) தளர்வுறும் போதெல்லாம், இந்த இழிவுக்குக் காரணமானவர்களை அழித்துத் தருமத்தை நிலைநாட்டுவதற்காக நானே பிறப்பேன்” - கீதை 4 : 7 - 8.

இதுதான் கீதையின் நிலை. இதற்கும், மனுஸ்மிருதிக்கும் என்ன வேற்றுமையுள்ளது? கீதை மனுவின் சுருக்கம். மனுஸ்மிருதியை ஒதுக்கிவிட்டு கீதையில் புகலிடம் தேடுவோர், கீதையை அறியாதவர்களாகவே இருப்பர்!”

இத்தகைய வர்ணாஸ்ரம போதனை நூலான பகவத் கீதையைத்தான் படிக்கச் சொல்கிறார் பகுத்தறிவின் பரிமாண வளர்ச்சி பெற்ற ஜெயலலிதா.

அம்மையாரின் சிபாரிசுப்படி, “பகவத் கீதை” படிக்கத் தொடங்குகிற யாராயினும் - அல்லது பகவத் கீதையைப் படித்து முடித்த யாராயினும் - “கீதையின் மறு பக்கம்” என்ற இந்த நூலையும் படித்து, பெரியாரின் 125 ஆம் ஆண்டு நிறைவு நாளைக் கொண்டாடுகிற தகுதியைப் பெற்றிடுவீர் என வாழ்த்துக் கூறுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

7-9-2004

3094. அய்யா, அண்ணா விழா நடத்தும் அருகதை யாருக்கு?

உடன்பிறப்பே,

சாலமன் கால சரித்திரமா? வேறு வரலாறா? புராணமா? நடந்ததா? நடக்காததா? கற்பனையா? காவியமா? என்றெல்லாம் அனுமானிக்க இயலாததும், ஆனால், நெஞ்சில் பதியத் தக்கதுமான ஒரு நிகழ்ச்சி- அந்த நிகழ்ச்சியை "காஞ்சித் தலைவன்" திரைக் காவியத்தில் நான் இடம் பெறச் செய்திருந்தேன்.

காஞ்சித் தலைவன் நரசிம்ம பல்லவனாகப் பாத்திரமேற்று, அருமை நண்பர், மக்கள் திலகம், எம்.ஜி.ஆர். அவர்களும்- படைத் தளபதி பரஞ்சோதியாக, இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். அவர் களும் நடித்த அந்தப் படம், தணிக்கைக் குழுவினரின் பயங்கரமான வெட்டுக் காயங்களுடன் தப்பித்தோம், பிழைத்தோம் என்று வெளிவந்தது. ஆம்! நான் எழுதிய "வெல்க காஞ்சி" என்ற பாடலே வெட்டப்பட்டது.

பல்லவர் காலத்துப் பழந்தமிழகச் சரித்திரக் குறிப்புகள் பலவும் விட்டுப் போகக் கூடாது என்பதிலே தனிக் கவனம் செலுத்தி, அந்தப் படம் தயாரிக்கப்பட்டது. வாதாபி மன்னன் புலிகேசியைக் காஞ்சி மண்ணில் நுழைய விடாமல் போரிட்டுத் துரத்திய மாமல்லனாம் நரசிம்ம வர்ம பல்லவன் பாத்திரத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள், கம்பீரமாகவும் - பீடு நடைபோடும் பெருமிதமிக்கப் பேரரசனாகவும்- கொலு மண்டபத்தில் நுழையும் அந்தக் காட்சிக்காகவே நான் எழுதிய அந்தத் திரைப்படத்தைத் திரும்பத் திரும்பப் பலமுறை பார்த்திருக்கிறேன். இப்போதும் சின்னத்திரைகளில் வெளியிடப் படும்போது பார்க்கத் தவறுவதில்லை.

அப்படியென்ன அந்தக் கொலு மண்டபக் காட்சியில் உன் உள்ளம் கொள்ளை கொண்ட விஷயம்? என்று கேட்கத் தோன்றும்.

முதலில் குறிப்பிட்டேனே! அந்த நிகழ்ச்சியைத்தான் எப்போதோ படித்த நூலிலிருந்து எடுத்து, அந்தக் கொலு மண்டபக் காட்சியில் இணைத்திருந்தேன். அதாவது, தாய்மைக்கு இலக்கணமாகத் திகழும் கட்டம் அது! அந்தத் தாய்ப் பாசத்தைத் தனது அறிவுத் திறன் கொண்டு அறிந்து, மன்னவன் நரசிம்ம வர்மன் தீர்ப்பளிக்கும்- உணர்ச்சிமயமான கட்டமாகும் அது!

இரு பெண்கள், ஒரு குழந்தைக்கு உரிமை கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு பெண்மணியும், அது தனது குழந்தைதான் என்பதற்கான அங்க அடையாளங்களை, ஆதாரங்களை அரசன் முன்னால் அடுக்கிக் காட்டுகிறார்கள்.

“யார் குழந்தை?”

“குழந்தையின் உண்மையான தாய் யார்?”

இந்தக் கேள்விக்கு விடை காண முடியாமல், இரு தாய்களுமே தங்கள் கண்ணீரால் வாதிடுகிறார்கள்.

எவ்வழியும் தோன்றாத மன்னன், கடைசியில் தீர்ப்பு வழங்குகிறான்.

“இந்தக் குழந்தையை என் வாள் கொண்டு, இரு கூறாகப் பிளந்து விடுகிறேன் - ஆளுக்குப் பாதியாக எடுத்துக் கொள்ளுங்கள்” என்று வாளை ஓங்குகிறான்.

இருவரில் ஒருத்தி அந்தத் தீர்ப்புக்குச் சம்மதிக்கிறாள்.

இன்னொருத்தியோ மன்னன் காலில் விழுந்து, “வேண்டாம், குழந்தையைக் கொன்று விடாதீர்கள்” என்று கதறி அழுகிறாள்.

அழுவது மட்டுமல்ல, “இந்தக் குழந்தையை அவளிடமே கொடுத்து விடுங்கள். என் குழந்தை யாரிடமாவது உயிரோடு இருந்தால் போதும்” என்கிறாள்.

இப்போது காஞ்சித் தலைவனுக்குத் தீர்ப்பு கூறுவது மிகவும் எளிதாகி விடுகிறது.

“உண்மையான தாய், குழந்தை உயிரோடு இருந்தால் போதுமென நினைக்கிறாள். எனவே அந்தத் தாயிடமே குழந்தையை ஒப்படைக்கிறேன்”

என்று அவளிடம் குழந்தையைக் கொடுத்தனுப்புகிறான் கொற்றவன்!

காஞ்சித் தலைவனின் கொலு மண்டபத்தில் குழந்தைக்காக வாதிட்ட இரு பெண்களில் ஒரு பெண்ணாக, உண்மைத் தாயாக, நம் கழகம் இருக்கிறது.

ஆனால் ஒன்று! தீர்ப்பு கூற முடியாமைக்காகக் குழந்தையை வெட்டிப் பங்கிட வேண்டாம். அது அவளிடமே இருக்கட்டும் என்ற உண்மைத் தாயின் நிலையை நாம் மேற்கொள்ள முடியுமா என்றால், தாய்ப் பாசம் அதற்கு இடம் கொடுக்கும். ஆனால் போலித் தாயுடன் குழந்தை போனால், அவள் அதை என்ன செய்வாளோ? நல்ல விலைக்கு விற்று விட்டாலும் வியப்பில்லையே!

உடன்பிறப்பே! குழந்தையை "அண்ணாவின் கொள்கை" என்று வைத்துக் கொண்டு பார்த்தால்- அண்ணாவின் பிறந்த நாள் விழாவுக்கு தஞ்சையில் பெருவிழா நடத்தி, என்னுடைய தலைமையில் 50 பொருள்களைப் பரிசாகக் கொடுத்தோமே! அப்போதெல்லாம் இன்றைக்கு அண்ணா விழா கொண்டாடச் சொல்லி அறிக்கை விடுகிற அம்மணியார் ஜெயலலிதா எங்கேயிருந்தார்?

இருந்த இடத்திலாவது அண்ணாவின் கொள்கை தெரிந்து இருந்தாரா?

தெரிந்த பிறகாவது அக்கொள்கைக்கு விசுவாசமாக இருந்தாரா?

அண்ணாவின் கொள்கை, தனக்குரியது என்று தம்பட்டம் அடித்தால் மட்டும் போதுமா?

இன்று அண்ணா பிறந்த நாள் விழா-

நாளைக்கு சங்கரமடத்திலே சாஷ்டாங்க நமஸ்கார விழா-

அடுத்த நாள் குருவாயூர் யானை காணிக்கை விழா-

அதற்கடுத்து மூகாம்பிகை கோயில் யாகம்- வேள்வி!

இதற்கெல்லாம் இல்லையோ கேள்வி!

யாரிடமிருந்தாலும் குழந்தை உயிரோடு இருந்தால் சரி! என்று எண்ணும் உண்மைத் தாயாக இருந்து விட்டால், அந்தக் குழந்தையின் உயிருக்கு யார் பொறுப்பு? யாரை நம்பி ஒப்படைப்பது? ஆம்! அண்ணாவின் கொள்கையை, பகவத் கீதை தான் பொது மறை என்றும்- ஞானநூல் என்றும்- அனைவரும்

அதைப் படிப்பதே சிறந்தது என்றும்- வாதாடி; வர்ணங்கள் நாலு இருப்பதே மேல் என வக்காலத்து வாங்கிப் பேசும் "பகவத் கீதை பக்தை ஜெயலலிதா" அண்ணாவின் பகுத்தறிவு ஒளியினைப் பாதுகாப்பார் என்றும்- படுதா போட்டு மறைக்க மாட்டார் என்றும் இருட்டாக்க மாட்டார் என்றும் எப்படி நம்புவது?

'குமரிக்கோட்டம்' எழுதி கோயில் பெருச்சாளிகளை அடையாளம் காட்டியவர் அண்ணா!

இவரோ, குருவாயூர் சென்று 'குஞ்சரம்' காணிக்கை தந்தவர்!

'ஆரியமாயை' எழுதி ஆபத்தை அடையாளம் காட்டியவர் அண்ணா;

இவரோ; அந்த மாயையின் மறுபதிப்பு!

மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமல்லவா?

இந்த அழகில் அ.தி.மு.க.- அண்ணாவின் கொள்கையை சீராட்டிப் பாராட்டி வளர்த்து, வாழ வைக்கும் தாயாக இருக்க முடியுமா?

முடியாது!- முடியவே முடியாது!

"குழந்தையை வெட்டியாவது ஒரு பாதியைக் கொடு" என்று பங்கு கேட்கும் பாழும் பேயாக(?)த் தான் இருக்க முடியும்!

அதனால் அண்ணாவின் கொள்கையைப் பத்திரமாகப் பாதுகாக்கும் பகுத்தறிவுத் தாய், அ.தி.மு.க. அல்ல! அது போலித் தாய்!

இதனை உணரவும்-

உண்மையான திராவிட இயக்கங்களைத் தேர்ந்து செயல்படவும்-

வாய்த்துள்ள சூழலைப் பயன்படுத்திப் பகுத்தறிவு- இன உணர்வு- மொழி உணர்வு-இந்த அடிப்படையில்,

அண்ணாவின் பிறந்த நாளையும்,

அந்த அண்ணா தொடங்கிய, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்திடும் கழகம் பிறந்த நாளையும்,

அண்ணா தலைவராக ஏற்றுக் கொண்ட அய்யாவின் பிறந்த நாளையும்,

விழாவாக எடுக்கும் அருகதை நமக்குண்டு என்பதைத் தொடர்ந்து செயல்படுத்திக் காட்டுவோம்.

அன்புள்ள,

மு.க.

8-9-2004

3095. தாழாது என் தலை! வீழாது என் உறுதி!

உடன்பிறப்பே,

“பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்”

இது திருக்குறள் - தமிழ் மறை - இந்தச் சமத்துவ முழக்கத்தை ஏற்றுக் கொள்ளாத நூல் ஒன்று உண்டு.

அதுதான் “பகவத் கீதை”.

“ஒருவன், தன் வருணத்திற்குரிய தொழிலைச் செய்வதே இனியது. எனவே, நானே இந்த நால் வருணங்களை உருவாக்கியவனாவேன்”.

இப்படி கிருஷ்ணன் உபதேசிப்பதுதான் கீதை.

எனவே பகவத் கீதையை ஏற்றுக் கொண்டால், வருண பேதங்களையும் - அவற்றுக்கு ஆதார மூலமாக இருக்கின்றதாகக் கூறப்படுகின்ற, பிராமண, ஷத்திரிய, வைசிய, சூத்திர என்ற சதுர் வர்ணங்களையும் ஏற்றுக் கொண்டதாகப் பொருள்.

சிறப்புகள் வேறுபடலாமே தவிர, பிறப்பு காரணமாக மனிதர்களைப் பகுத்துப் பார்க்க முடியாது - கூடாது என்பதே குறள் கூறுவதாகும்.

கீதை என ஒரு நூல் இருக்கலாம் - ஆனால் அது எமக்குரியதல்ல - அதில் காணப்படும் அறிவுரைகளும் யாம் கடைப்பிடிக்கக் கூடியதல்ல!

வேண்டுமானால், அந்த நூல் இருந்து விட்டுப் போகட்டும்! ஆனால், பெரியாரின் வழிவந்த நாம் - அண்ணாவின் பாதையில் பயணம் மேற்கொண்டுள்ள நாம் - நமக்கு வழிகாட்டியாகக் கொள்ள வேண்டியது,

“வள்ளுவர் செய் திருக்குறளை வழுவற உணர்ந்தோர், உள்ளுவரோ மனுவாதி குலத்துக் கொரு நீதி”

என்று வினவினாரே மனோன்மணியம் சுந்தரனார்! அவர் காட்டிய திருக்குறளை - திராவிட இயக்கப் பெருங்கவிஞர் புரட்சிக் கவிஞர்,

"அறமிதென்றும் - மறமிதென்றும் இயம்பிக் காட்டும் திருக்குறள்"

என்றாரே! அந்த மறைநூலை - நான் பின்பற்றுவேன் என்பதால் யாருக்கு என்ன நஷ்டம்?

எதற்காக வருகிறது கோபம்?

அண்ணல் டாக்டர் அம்பேத்கர், பகவத் கீதை பற்றி ஆய்வு நடத்தி அறிவித்துள்ளதில் சில துளிகள்தானே நான் எடுத்துக்காட்டியது? இதற்கேன் சிலருக்கு ஆத்திரம் கொப்பளிக் கிறது?

• சாதி மத பேதங்களுக்குச் சார்பாக சதுர் வருணத்தைச் சான்று காட்டுகிற கீதோபதேசத்திற்கும்,

• "பண்டைத் தமிழ் இலக்கணமான தொல்காப்பியத் திலோ மதம் என்னும் சொல்லாதல், 'சமயம்' என்னும் சொல்லாதல் எவ்விடத்துங் காணப்படவேயில்லை" என்றும்,

• மணிமேகலை காலத்திற்கு அதாவது ஆயிரெத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட எந்தத் தமிழ் இலக்கியத்திலுஞ் 'சமயம்' 'மதம்' எனும் சொற்கள் வழங்காமையை உற்று நோக்குக" என்றும்

மறைமலை அடிகளார் கூறிய கூற்றுக்கும் இடையே எத்துணை முரண்பாடு?

"இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கின்ற உண்மையான தமிழ் நெஞ்சங்களால் ஒப்புக் கொள்ள முடியுமா, நால் வருணம் போதிக்கும் பகவத் கீதையை?"

என்று கேட்டால், கிளர்ந்தெழுந்து என்னைக் கீறி எறிய சீறிச் சினங்கொள்வது ஏன்?

"நமது நாட்டில் நடைபெறுகிற முட்டாள் தனங்களிலும், பச்சை அயோக்கியத்தனங்களிலும்...

தலைசிறந்த முதல்தரமான காரியங்களில் முதலாவது காரியம் என்னவென்றால், "பகவத் கீதை" என்ற நூலைப் பிரச்சாரம் செய்வதும், மக்களிடம் பரப்புவதுமாகும்"

என்று முழங்கினாரே பெரியார்! அவ்வளவு கடுமையாகக்கூட நான் கூறவில்லையே? பிறகேன் கரடி, புலிகளைப் போல என் மீது காய்ந்து விழுந்து பாய்ந்து குதறுகிறார்கள்?

எல்லாம் மதத்தை அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் மதியூக தந்திரம்தான்!

அதற்காக, இன்று என் உருவப் பொம்மையை, கொளுத்திக் காட்டுகிறார்கள்!

என்றோ ஒரு நாள் இந்த உடலே, எரியுண்டோ, புதையுண்டோ போகப்போவதுதானே?

அதற்கிடையே பெரியாரும், அண்ணாவும் காட்டிய புத்தர் வழிவிடுத்து, இந்தப் பித்தர் வழியில் ஒண்டிக் கொள்வதற்கு நான் ஒன்றும் கொண்ட கொள்கையில் இடறி விழும் நொண்டிக் குதிரையல்ல!

பெரியார், அண்ணா இருவரின் கொள்கைகளை, வழிமுறைகளை ஏற்றிச் செல்லும் வண்டிக் குதிரை.

இறுதி மூச்சும் இலட்சியப் பயணத்திற்காகவே காற்றொடு கலந்திடும்.

தடந்தோள் வீரர் ஆயிரம் ஆயிரம் பேர் துணைக்குச் சூழ்ந்திருந்தாலும் - ஏன்? தனித்தே விடப்பட்டாலும், தாழாது என் தலை - வீழாது என் உறுதி!

அன்புள்ள,

மு.க.

14-9- 2004

3096. அன்று அண்ணன் சூட்டிய அந்தப் பெயர்!

உடன்பிறப்பே,

இந்தப் புகைப்படத்தில் என்னுடன் நிற்பவரின் பெயர் ஆனந்தன். 2004 ஜூலை 21ஆம் நாள் சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்தார். உறையிலிடப்பட்ட ஒரு கடிதம் தந்தார்.

கடிதத் தொடக்கமே "மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு" என்று அமைந்திருந்தது கண்டு அவரை ஏற இறங்கப் பார்த்தேன். நீயும் பார்த்துக் கொள். ஆஜானுபாகுவான உருவம். நல்ல உயரம். வீரம் செழித்த விழிகள். கம்பீரம் நிறைந்த முகம். கனிவும் குடி கொண்டிருக்கும் என்பதை அறிவிக்கும் தோற்றம்.

படத்தை நீயும் பார்த்துக்கொள் என்று எழுதியுள்ளதற்குக் காரணம், இனி அந்தக் கட்டிளங்காளையைக் காண இயலாது.

கடைசியாக என்னைக் காண்பதற்குத்தான் வந்து சென்றார் போலும்! என்னைக் கண்டு சென்றார் போலும்! அதனால்தான் விடைபெற்று வீதிவரை சென்றவர், திரும்ப வீட்டுக்கு வந்து இந்தப் புகைப்படம் எடுத்துக் கொண்டார் போலும்!

இத்தகைய உருக்கமிகு சந்திப்பின்போது அவர் தந்த கடிதத்தைப் படித்து, விபரமறிந்தது மட்டுமல்ல! அவர் வேண்டுகோளை நிறைவேற்றிட இரண்டொரு மாதங்கள் பொறுத்திருக்குமாறும் கேட்டுக் கொண்டேன். அவர் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தேன்.

திடீரென இரண்டு நாட்களுக்கு முன்பு, கழகப் பொருளாளர் அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள், கண் கலங்கிட என்னிடம் இந்தச் செய்தியால் என் நெஞ்சைச் சுட்டார்.

"அண்ணே! அன்று வந்து உங்களைச் சந்தித்து விட்டுச் சென்றாரே! ஆனந்தன் - அவர் காஷ்மீரில்

வன்முறையாளர்களை வளைத்த போது, அவர்களது தாக்குதலுக்குப் பலியாகிவிட்டார்”

என்பதுதான் அச்செய்தி!

வாணியம்பாடிக்கருகில் உள்ள ஆலங்காயம்தான் அந்த வடிவழகன் பிறந்து வாழ்ந்த ஊர்.

அவர் வந்தபோது தந்த கடிதம் வருமாறு :-

“மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு,

1989ஆம் ஆண்டு மத்திய ரிசர்வ் காவல் படையில் ஓர் உயர் அதிகாரியாக நான் சேருவதற்கு முன்புவரை ஏறக்குறைய 12 ஆண்டுகள் - பள்ளிப் பருவம் முதற் கொண்டே, தங்களுடைய தமிழாலும், தலைமையாலும் கவரப்பட்டு, எவ்வித எதிர்நோக்குமற்ற ஒரு உறுதியான கழகத் தொண்டனாக என் மறைந்த தந்தை வழியில் மனமுவந்து பணியாற்றியுள்ளேன் என்ற உறவின் சாரத்தாலும், உண்மைக்கும், உழைப்பிற்கும், அறிவிற்கும், நம்பிக்கைக்கும் உகந்தவன் என்ற தகுதியின் அடிப்படையிலும் தங்களின் மேலான கவனத்திற்கு பின்வருவனவற்றை சமர்ப்பிக்கிறேன்.

நான் இதுநாள் வரை மத்திய ரிசர்வ் காவல் படை (சி.ஆர்.பி.எப்.), சிறப்புப் புலனாய்வுக் குழு - மத்திய புலனாய்வுத் துறை (எஸ்.ஐ.டி. - சி.பி.ஐ.), சிவில் விமானப் போக்குவரத்து பாதுகாப்புத் துறை (பி.சி.ஏ.எஸ்), ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் காவல் கண்காணிப்புத் துறை (யு.என். போலீஸ் மானிட்டர்ஸ்) போன்ற துறைகளில் உயர் பதவிகளில் இருந்து கொண்டு நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும், அயல் நாடுகளிலும் தன்னிலை தாழாது பணியாற்றியுள்ள போதிலும், தமிழரோடு இணைந்து தமிழருக்காக என்னுடைய அரசுப் பணியில் இருந்து பணியாற்றும் வாய்ப்பு கிட்டியது இல்லை.

எனவே, நடுவண் அரசின் மாண்புமிகு அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் தலைமையேற்றிருக்கும் அமைச்சகத்திலோ அல்லது தங்களின் மேலான கருத்திற்கேற்ப ஏனைய தி.மு. கழக அமைச்சர்களைச்

சார்ந்த ஏதேனும் ஓர் அமைச்சகத்திலோ "சிறப்புப் பணி அதிகாரியாக (ஓ.எஸ்.டி.)" பணியுறுத்த ஆவன செய்ய வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கூறியபடி, "சிறப்புப் பணி அதிகாரியாக" பணியுறுத்தப்படுவதற்கான பதவி ரீதியான தகுதி எனக்கு உள்ள போதிலும், 1977ஆம் ஆண்டு முதற்கொண்டு 1989 வரை கழகப் பணி செய்து வந்தவன் என்பதையும், அதனால் 1983-84 ஆண்டுகளில் ஆலங்காயம் நகர தி.மு.க. இளைஞர் அணி செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டவன் என்பதையும், கல்லூரி கல்வி காலங்களில் (சென்னை பச்சையப்பர் கல்லூரி) சென்னை அண்ணா நகர் இடைத் தேர்தல், வாணியம்பாடி சட்டமன்றம் மற்றும் திருப்பத்தூர் நாடாளுமன்றத் தேர்தல்களில் கழகத்தின் வெற்றிக்காக என்னை ஈடுபடுத்திக் கொண்டு பல இன்னல்களை எதிர் கொண்டவன் என்பதையும், அதைத் தொடர்ந்து கழகக் கொள்கைகளில் உறுதியான நம்பிக்கையுடைய அனுதாபியாக விளங்கி வாய்ப்பு கிட்டியபோதெல்லாம் அதற்கேற்ப இன்றுவரை செயல்பட்டு வருபவன் என்பதையும், தங்களிடம் பெருமையுடன் கூறிக் கொள்ள விழைகிறேன்.

தாங்கள் வளர்த்த இனமானத்தில் ஊறிப் போயிருப்பினும், "நம் தலைவரிடம் தானே கேட்கிறோம்" என்ற உரிமையில், தயக்கமின்றி இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகிறேன். மேலும், இத்துடன் ரெஸ்யூம் என்கிற "சுய தகுதி விளக்கக் குறிப்பு" ஒன்றையும் தங்களின் மேலான கவனத்திற்காகத் தாழ்மையுடன் இணைத்துள்ளேன்.

வணக்கங்களுடன்!
தங்கள் உண்மையுள்ள,
(கோ.ஆ. ஆனந்தன்)

உடன்பிறப்பே,

இந்த அடலேறு ஆனந்தனை சுமார் ஐம்பது நாட்களுக்கு முன்பு சந்தித்து - அவர் வேண்டியவாறு அவர் ஆவலை

நிறைவேற்ற அனுதினமும் முயற்சி மேற்கொண்டிருந்த எனக்கு - எத்தனை அதிர்ச்சியான செய்தி காத்திருந்திருக்கிறது பார்த்தாயா?

களத்தில் யாசித்துப் பெறக் கூடிய வீர மரணம் என்று நமது சங்கத் தமிழ் இதனைப் பாராட்டு மெனினும்,

"சங்கத் தமிழ்" நாடகத்தில்,

"என் இரு விழி மழை தனைக் காணாதீர்,
என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே!"

என நான் எழுதிய வீரத் தாயின் பாடல் தானே நினைவிற் புகுந்து நெஞ்சைப் பிழிந்தெடுக்கிறது.

கடமை வீரனே -
உன் குடும்பத்தை கழகமெனும்
இப்பெருங்குடும்பம்
விட்டு விடாது - பாதுகாக்கும் -
"மானம்; நீ கேட்ட தாலாட்டு -
மரணம் நீ ஆடிய விளையாட்டு"

என ஆகி விட்டதேடா அருமைத் தம்பி!

உன்னை நான் மறக்க மாட்டேன் என்பதற்கு அடையாளமாக -

திராவிட இயக்கத் தியாகிகள் பலரின் பெயரை என் திரைப்படக் கதாநாயகர்களுக்கு சூட்டியது போல -

தேசத்துக்காக உயிர்த் தித்திப்பை எண்ணாத தீரனே!

"கலைஞரின் கண்ணம்மா" திரைப்படக் கதாநாயகன் - கார்கில் வீரன் - "ஆனந்தன்" என்ற உன் பெயருடன் திகழ்வான் என்பதைப் பெருமையுடன் தெரிவிக்கிறேன்.

அண்ணா பிறந்த நாளில் இதைத் தெரிவிப்பதில் ஓர் அர்த்தமும் உண்டு.

அவரது திரைக் காவியம் 'வேலைக்காரி' கதாநாயகனுக்கு (நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர்.) ஆனந்தன் என்றே அண்ணா அவர்களால் பெயர் சூட்டப் பெற்றது என்பதை நினைக்காமலிருக்க முடியுமா?

அன்று அண்ணன் சூட்டிய அந்தப் பெயரை இன்று தம்பி சூட்டுகிறேன்! வாழ்க ஆனந்தனின் திருப்பெயர்!

அன்புள்ள,

மு.க.

15-9-2004

(குறிப்பு :- தம்பி ஆனந்தன் நினைவுடன் இரவெல்லாம் விழித்திருந்து விடியற்காலை 3.30 மணிக்கு எழுதிய கடிதம் இது!

கடிதமல்ல! கண்ணீர்த் துளி!)

3097. உன் நெஞ்சில் நான் இருக்கும்போது...

உடன்பிறப்பே,

சட்டப் பேரவை சண்டமாருத வீராங்கனை - பெட்டிப் பாம்பாய் அடங்கிவிட்டார் டெல்லி போய் வந்த பிறகு!

அடடா! அம்மையாரின் சரணாகதிப் படலத்தை இங்குள்ள சகலகலாவல்லவர்கள் (?) சபாஷ் போட்டுக் கொக்கரித்துச் சல்லடம் கட்டிக் கொண்டு சதியாட்டம் ஆடுகின்ற காட்சி தான் என்னே என்னே!

கூனிகளும், சகுனிகளும் கூடிக்கொண்டு கூட்டணியை உடைத்து நொறுக்கி விடுவார்களாம் - குறிப்பாகத் தி.மு.க. - காங்கிரஸ் "தேன் நிலவு" முடிந்து விடுமாம் - முடிந்துவிட்டதாம் - எவ்வளவு அருமையான கற்பனைக் கனவு காண்கிறார்கள்!

"தேன் நிலவு முடிந்தால் என்ன? குடும்பம் நடத்து வதைத் தொடர்வோம்" - என்று பதிலுரைத்த பகுத்தறிவுப் பகலவன் அண்ணாவின் தம்பிகள் நாம் என்பதை, அரசியல் ரீதியாக அந்த அப்பாவிகளுக்கு உணர்த்துவோம். அடுக்கடுக்காக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, நமது கோரிக்கைகளை நிறைவேற்றி மகிழ்வதையும் - நம்மையும், நமது தமிழ் மக்களையும் மகிழ்விப்பதையும் கண்ட பிறகுமா, தி.மு.க., காங்கிரஸ் உறவை முறித்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணியைக் கலகலக்கச் செய்து விடலாம் என்று கனவு காண்பது? "பலிக்காதய்யா பலிக்காது" என்று பளார் என கன்னத்தில் அறைந்து சொல்வதுபோல் சொல்லுவோம் - ஆம்! தொடர்ந்து செயலில் காட்டுவோம்!

ஏதாவது கிடைக்காதா? எட்டப்பர்கள் கிட்ட மாட்டார்களா என்று எதிர்பார்த்து ஏமாறப் போகிறவர்களுக்கு, இப்போதே நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வைப்போம்!

விழுப்புரம் மாநாட்டுத் தீர்மானங்களை முன்னிறுத்தி மத்திய - மாநில ஆட்சி அலுவலகங்களின் முன்னால் அறப்போர் மறியல்

நடத்தி சிறை நிரப்பிய போராட்டத்தில் ஒரு இலட்சம் பேர் சிறை ஏகினோமே - அந்தக் கோரிக்கைகளில் குறைந்த பட்சம் ஒன்றிரண்டையாவது நிறைவேற்றுகிறோம் என்று வாஜ்பய் அரசு வாக்குறுதியாவது அளித்ததா?

செம்மொழியாக வேண்டும் தமிழ் மொழி என்பதற்குச் செவி சாய்த்ததுண்டா?

"சேது சமுத்திரம் திட்டம்" பற்றி, கடற்கரையில் வாஜ்பய் அளித்த வாக்குறுதி, கடற்காற்றோடுதானே போயிற்று?

நெசவாளர்களின் கோரிக்கை 'சென்வாட்' வரி நீக்கிட முன் வந்ததா அந்த அரசு?

இன்று போனதுபோல் அன்று பொடா போனதா?

இவையும், இவை போன்ற கோரிக்கைகளும், நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் நமது மேடைகளில் ஒலித்து, நம்மால் கூட்டப்பட்ட கூட்டணி, நாற்பதுக்கு நாற்பது வெற்றி பெற்று - அதனால் மத்தியிலே மன்மோகன்சிங் தலைமையிலே ஆட்சி அமைந்து திருமதி சோனியா காந்தி அவர்களின் அருந்துணை யுடன் நிறைவேற்றப்பட்டவைகள் அல்லவ!

சேது சமுத்திரத் திட்டம்

செம்மொழி தமிழ்

சென்வாட் வரி நீக்கம்

பொடா சட்டம் ரத்து

இவை மட்டுமா?

இந்தியா முழுதும் 11 கோடி சிறார்களுக்கு மத்திய அரசு அளிக்கும் மதிய உணவுத் திட்டம்..

இவை நூறு நாட்களில் நிறைவேறியவை -

இன்னும் பல உண்டு நிறைவேறியவை -

நிறைவேற்றப்பட வேண்டியவைகளுக்கு நமது கூட்டணி கட்சிகளும், இடது சாரி இயக்கங்களும் கொடுக்கின்ற குரல், வீண்போகப் போவதில்லை. பிறகென்ன நமக்குள்ளே பிணக்கு - இல்லாதபோது ஏன் பிளவு?

பிளவுபடுத்த முடியாதா என பித்துப் பிடித்து அலைகிறார்கள் - தத்துப் பித்து என்று குதிப்பதற்கெல்லாம் "ஆகா! தாளம் தவறாத நாட்டியம்" என்று தலையாட்டி சபாஷ் போடுகிறார்கள்.

அம்மணியார் டெல்லி போனாராம்! அப்படியே எல்லாம் மாறிவிட்டதாம்! அக்ரகாரம் குதிக்கிறது - கும்மாளம் போடுகிறது.

இனி அவர் சோனியாவை

"வெளிநாட்டுக்காரி" என்று சொல்ல மாட்டாராம்!

"பதிபக்தி இல்லாதவர்" என்று பழிக்க மாட்டாராம்!

"அரை வேக்காட்டு அரசியல்வாதி" என்று அநாகரிகமாகப் பேச மாட்டாராம்!

மன்மோகன் சிங்கை "தலையாட்டி பொம்மை" என்று கூற மாட்டாராம்!

"மத்ய அரசு செயல்படாத அரசு" என்று மமதையாக விமர்சிக்க மாட்டாராம்!

சரணாகதி -

சரணாகதி -

மண்டியிடல் -

மண்டியிடல் -

மன்னிப்போ;

மன்னிப்பு -

உடன்பிறப்பே! தி.மு.க.வை அழித்து விட எத்தனையோ சூழ்ச்சிகள் - சூதுவலைகள் - அச்சுறுத்தல்கள் - ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுகள் - அண்ணா கண்ட இந்தக் கழகத்தின் பெயரையே அபகரிக்க - அறிவாலயத்தையே சூறையாட - களம் பல கண்ட நமது கழகத்தின் இருவண்ணக் கொடியையே வஞ்சகத்தால் கவர்ந்திட,

வட்டமிடும் கழுகுகளாய் -

வாய் பிளந்த ஓநாய்களாய் -

வளைத்துவிடும் மலைப்பாம்புகளாய் -

சுருக்கமாகச் சொன்னால்,

சூழ்ச்சி ராணி வசந்தசேனையாய்

வால் நீட்டிப் பார்த்தவர்கள் எல்லாம் - வளையில் பதுங்கிடும் அளவுக்கு வலிமை காட்டிய நீ இருக்கும் போது உன் நெஞ்சில் நானிருக்கும் போது -

சூழ்ச்சிகள் சுக்கு நூறாகும்!
சூதர்கள் மண் கவ்விடுவர்!
உதயச் சுடரில் நிற்க முடியாமல்
உலுத்தர்கள் ஓடுவர்!

அன்புள்ள,

மு.க.

23-9-2004

3098. தி.மு.க. ஆட்சியும், திரைப்படத் துறையும்!

உடன்பிறப்பே,

மூன்றாண்டுகளுக்கு மேலாக 'முகாரி'யே முழங்கிக் கொண்டிருந்த கலையூரில் இன்று 'மோகனம்' கேட்கிறது. இதைக் கேட்பதற்காக கலையூர்வாசிகள் தாங்கிக் கொண்ட 'அடாணா'க்களை நினைத்துப் பார்த்தால், இப்போது விடுகிற நிம்மதிப் பெருமூச்சு, நிழலின் அருமை என்பது தெளிவாகப் புரியும்.

ஒன்று நன்றாக இருந்து அந்த நன்று ஓரங்கட்டப்பட்டு அதனை நினைவூட்டிக் கேட்பதற்குக்கூட அஞ்சிக் கூனிக் கொண்டிருந்த நிலை மாறி, வலிய வந்து வாரி வழங்குகிற வள்ளல் தன்மை திடீரெனத் துள்ளிக் குதித்து தோன்றியது ஏன்? எவ்வாறு? என்ன காரணத்திற்காக? என்பவை ஆராய்வதற்குரியவை எனினும், அதில் வீண் விவாதம் தேவையற்றது என்பதையும் விளைவுகள் விபரீதமாகாமல், வேண்டியது கிடைத்தது ஓரளவாவது என்பதையும் எண்ணிப் பார்க்குமிடத்து, இக்கடிதத்தைச் சர்ச்சைக்குரியதாக்காமல் கலைத்துறையினர் கடந்த காலத்தை எப்படிக் கடந்தனர் என்பதை நெஞ்சில் பதிய வைத்துப் பார்த்திடக்கூட அல்ல, மறந்து விடுவதற்காகவாவது பயன்படட்டுமென்ற நம்பிக்கையில், திரையுலகினர் தி.மு.க. ஆட்சியில் பெற்ற பயன்களைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சியிலும், அ.தி.மு.க. ஆட்சியிலும் அரசின் மற்ற துறைகள் பற்றி ஒப்பிடும் போது விரிக்கிற் பெருகுமென்பதால் தற்போது கலைத்துறை பற்றி மட்டுமே விபரங்களைத் தாங்கி வருகிறது இக்கடிதம்.

2003ஆம் ஆண்டு திரைப்படத் துறையினர் மிகுந்த இன்னலுக்கு ஆட்பட்டிருந்த நேரத்திலே, ஜெயலலிதா ஆட்சியில் திடீரென்று படப்பிடிப்பு கட்டணங்கள் எல்லாம் 25

மடங்கு அதிகமாக உயர்த்தப்பட்டது. அப்போதும் காரணம் நிதிப் பற்றாக்குறை என்றுதான் கூறப்பட்டது.

இதுபற்றி அரசிடம், குறிப்பாக முதல் அமைச்சரிடம் முறையிட திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு "நேரம்" கூட கொடுக்கப்படவில்லை. இப்போது "நேரம்" ஒதுக்கியதற்காக கலைத்துறையினரால் முதல்வருக்கு நன்றி தெரிவிக்க ஒரு பேரணியே நடத்தப்பட்டது. ஏடு கொள்ளா அளவுக்கு நன்றி அறிவிப்பு விளம்பரங்கள் தரப்பட்டன - இன்னமும் தரப்படுகின்றன. காலத்தாற் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது எனும் குறள் வழி நடப்பது குற்றமல்ல - அதனால் வரவேற்கிறோம் அனைத்தையுமே! எப்படியோ கொழுக்கட்டை வெந்தால் சரி!

காலம் கடத்தி, ஜெயலலிதா அரசு திரைப்படத் துறையினருக்குத் திடீரென சலுகைகளை வழங்கிடும் நேரத்தில், தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது இந்தத் துறைக்கு அறிவித்த சலுகைகளை நினைவூட்டுவது கடமையல்லவா?

தற்போது திரைப்படத் துறை சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் முக்கியமான ஒன்று, கடந்த ஆண்டு ஜெயலலிதா ஆட்சியில் உயர்த்தப்பட்ட படப்பிடிப்புக் கட்டணங்களை தி.மு. கழக ஆட்சியில் இருந்த அளவிற்குக் குறைக்க வேண்டும் என்பதுதான். ஆனால், தி.மு. கழக ஆட்சியிலே எந்த அளவிற்கு படப்பிடிப்பு கட்டணம் வசூலிக்கப்பட்டது? ஜெயலலிதா ஆட்சியிலே அந்தக் கட்டணம் எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டது? தற்போது அது எந்த அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது?

● 1996இல் தி.மு. கழக அரசு பொறுப்பேற்றதும், தொல் பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் வரும் புராதனச் சின்னங்கள் மற்றும் அது போன்ற கலைச் சின்னங்கள் உள்ள இடங்களில் படப்பிடிப்புகளை நடத்திட படப்பிடிப்புக் கட்டணம் நாள் ஒன்றுக்கு ஏற்கனவே 5000 ரூபாய் என்றிருந்ததை, 1000 ரூபாயாகக் குறைத்தது.

● ஏனைய இடங்களுக்கு 2500 ரூபாய் என்று இருந்ததை 500 ரூபாயாக குறைத்தது.

● ஜெயலலிதா அரசு பொறுப்பேற்ற பிறகு 2003 ஆம் ஆண்டு, ராஜாஜி மண்டபத்தில் படப்பிடிப்பு நடத்த நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் கட்டணத்தை ஒரு லட்சம் ரூபாயாக

உயர்த்தியது. தற்போது இதனை 25 ஆயிரம் ரூபாயாகக் குறைத் திருக்கிறார்கள். எனவே தி.மு. கழக ஆட்சியில் 10 ஆயிரம் ரூபாய் என்பது, தற்போது 25 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதுதான் உண்மை.

● வள்ளுவர் கோட்டம், புராதனக் கட்டிடங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு கல்லூரிகள், மாநகராட்சி ரிப்பன் மாளிகை உள்ளிட்ட பொது இடங்களில் படப்பிடிப்பு நடத்த, நாள் ஒன்றுக்கு தி.மு. கழக ஆட்சியில் 2000 ரூபாய் என்பது, ஜெயலலிதா ஆட்சியில் 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இந்தக் கட்டணத்தை தற்போது 10 ஆயிரம் ரூபாயாக நிர்ணயித்துள்ளார்கள். எனவே தி.மு. கழக ஆட்சியில் 2 ஆயிரம் ரூபாய் என்பது இப்போது 10 ஆயிரம் ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

● மெரினா கடற்கரை, வனத் துறை, மீன் துறை, சிறைத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்பு நடத்த, தி.மு. கழக ஆட்சியில் நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்பது, ஜெயலலிதா ஆட்சியில் 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இந்தக் கட்டணம் தற்போது 5 ஆயிரம் ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து, தி.மு. கழக ஆட்சியில் இருந்ததை விட தற்போது படப்பிடிப்புக் கட்டணம் எதுவும் குறைக்கப்படவில்லை என்பதை புரிந்து கொள்ளமுடியும். திரைப்படத் துறையினரின் படப்பிடிப்புக் கட்டணம் கழக ஆட்சியில் இருந்ததை விட குறைந்திடாவிட்டாலும், அப்போது வசூலிக்கப் பட்ட அளவிற்காவது குறைத்தால்தான் திரைப்படத் துறை பயன் பெற முடியும்.

ஜெயலலிதா அரசு தற்போது அறிவித்துள்ள முக்கியமான அடுத்த சலுகை கேளிக்கை வரி குறைப்பாகும். அந்த அறிவிப்பினையும் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன் என்ற போதிலும், தி.மு.கழக ஆட்சியில் கேளிக்கை வரி குறைக்கப்படவே இல்லையா என்பதற்கும் விளக்கமளிக்க விரும்புகிறேன்.

புதிய படங்களுக்குக் கேளிக்கை வரியை 54 விழுக்காட்டில் இருந்து 40 விழுக்காடாக 1989ஆம் ஆண்டில் தி.மு. கழக அரசுதான் குறைத்தது. மீண்டும் தி.மு.கழக ஆட்சியிலேதான் 1.8.1996 முதல் 40 விழுக்காட்டில் இருந்து 30 விழுக்காடாகவும், 2000ஆம்

ஆண்டில் 25 விழுக்காடாகவும், மேலும் குறைக்கப்பட்டது. இப்படி தி.மு.க. ஆட்சியில் படிப்படியாக பெருமளவு கேளிக்கை வரி குறைக்கப் பட்டதின் தொடர்ச்சியாகத்தான் இப்போதும் கேளிக்கை வரி குறைக்கப்பட்டுள்ளது.

பத்தாண்டுகளுக்கு முன் வந்த திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகக் குறைக்கப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியிலேதான். மொழி மாற்றுப் படங்களுக்கும், பிற தமிழ்ப் படங்களுக்குக் குறைக்கப்பட்டது போல் கேளிக்கை வரி 1-8-98 முதல் தி.மு.கழக ஆட்சியிலே தான் குறைக்கப்பட்டது. இதே போல இணக்க வரி முறையும் அதற்கு ஏற்றாற்போல் குறைக்கப்பட்டது. இவ்வரிக் குறைப்புகள் மூலம் திரைப்படத் துறைக்கு 1-8-1998 முதல் ஆண்டுக்கு 40 கோடி ரூபாய் அளவுக்கும், 12-6-2000 முதல் ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் அளவுக்கும் வரிச் சலுகைகள் தமிழ்த் திரைப்பட வரலாற்றிலேயே இல்லாத வகையில் தி.மு.கழக ஆட்சியிலேதான் வழங்கப்பட்டன.

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களுக்கு கடந்த மூன்றாண்டு காலத்தில் மானியத் தொகை வழங்கப்படவே இல்லை. தற்போது அந்த மானியத் தொகையை வழங்கப் போவதாக அறிவிப்பு வந்திருக்கின்றது.

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தி.மு. கழக ஆட்சியிலேதான் தகுதி வாய்ந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு அவை வெளியிடப்பட்டது முதல் நான்கு வாரங்கள் வரை, கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டம் முதன் முதலாக 12-12-1996முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தத் திட்டத்தின்கீழ் “மை இந்தியா”, “சாதி சனம்”, “புதல்வன்”, “குடும்பச் சங்கிலி”, “எல்லாம் பணத்துக்காக”, “நீதியின் வாசலிலே” ஆகிய திரைப்படங்களுக்கான கேளிக்கை வரியிலிருந்து நான்கு வாரக் காலத்திற்கும், ‘ஹவுஸ்புல்’, ‘உயிரின் உயிரே’, ‘காந்தி’ மற்றும் ‘பாரதி’ ஆகிய திரைப்படங்களுக்கு காலவரையறையின்றியும் முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு, 17-7-1996 முதல் தி.மு. கழக ஆட்சியிலேதான் தலா ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தி மானியத்

தொகை வழங்கப்பட்டது. 1994ஆம் ஆண்டே திரையிடப்பட்ட படங்களுக்கு, ஜெயலலிதா ஆட்சி நடைபெற்ற போது மானியத் தொகை வழங்கப்படவில்லை. 1996இல் தி.மு.கழக அரசு அமைந்த பிறகு திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள் முறையிட்டதின் பேரில், 94ஆம் ஆண்டு திரையிடப்பட்ட படங்களிலே தேர்வு செய்யப்பட்டு மானியம் வழங்காமலிருந்த 35 படங்களுக்கும், அதே போல் மானியம் வழங்காமலிருந்த 1995ஆம் ஆண்டிற்கான 40 படங்களுக்கும், மற்றும் 1996ஆம் ஆண்டிற்கான 28 படங்களுக்கும், 1997ஆம் ஆண்டிற்கான 11 படங்களுக்கும், 1998ஆம் ஆண்டிற்கான 18 படங்களுக்குமாக மொத்தம் 4 கோடியே 55 இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக திரைப்படத் துறைக்கு தி.மு.க. ஆட்சியிலேதான் வழங்கப்பட்டது.

தமிழ்த் திரைப்படங்களில் நடிக்கும் சண்டைப் பயிற்சியாளர்கள், சண்டைக் காட்சியின்போது உயிரிழக்க நேர்ந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு இலட்ச ரூபாயும், செயல்பட முடியாத அளவுக்கு காயமடைந்து ஊனமடைய நேர்ந்தால் அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண உதவியாக வழங்கும் திட்டமும் தி.மு. கழக ஆட்சியிலேதான் 1996ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1989ஆம் ஆண்டுக்கு முன்பு ராஜா சாண்டோ விருது மட்டுமே திரைப் படத்துறையிலே வழங்கப்பட்டு வந்தது. 15-6-89 அன்று தி.மு.கழக அரசில்தான் கலைவாணர் பெயரிலும், எம்.ஜி.ஆர். பெயரிலும் விருதுகள் வழங்க ஆணையிடப்பட்டது. பிறகு 22-11-1990 இல் தி.மு.கழக ஆட்சியிலே தான் அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் பெயரில் வித்தகர் விருதுகள் வழங்கிட ஆணையிடப்பட்டது. 20-3-1997 இல் தி.மு.கழக ஆட்சியிலேதான் கவியரசு கண்ணதாசன் பெயராலும், 10-1-2000 இல் நடிகர் திலகம் சிவாஜி பெயராலும், 30-8-2000 இல் தியாகராஜ பாகவதர் பெயராலும் வித்தகர் விருதுகள் வழங்கிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. 1994 முதல் அ.தி.மு.க. ஆட்சியிலே வழங்கப்படாமல் கிடப்பில் போடப்பட்ட வித்தகர் விருதுகளும் 1996 க்குப் பின் தி.மு.கழக ஆட்சியிலே தான் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், சிறந்த படங்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, சிறப்புப் பரிசு என வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகையான ரூ.1,25,000/-, ரூ. 75,000/-, ரூ. 50,000/-

ஆகியவற்றை 1999ஆம் ஆண்டிலிருந்து முறையே ரூ. 2,00,000, ரூ. 1,00,000, ரூ. 75,000ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டது தி.மு.கழக ஆட்சியிலே தான்.

விற்பனை வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்களுக்கான உரிமை மாற்றம் மீது 1-4-1986 முதல் 11.11.1999 வரை செலுத்த வேண்டிய வரியினைத் தள்ளுபடி செய்ததுடன், உரிமை மாற்றத்திற்கான விற்பனை வரியை 12-11-1999 முதல் 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு எனவும் தி.மு.கழக ஆட்சியிலே தான் குறைக்கப்பட்டது. 1-4-2000 முதல் திரைப் படங்கள் குத்தகை மீதான 4 விழுக்காடு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்திற்கு, 1996-97ஆம் ஆண்டுவரை பட்டயம் பெற படங்கள் தயாரிப்பதற்காகப் பத்து இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டதற்கு மாறாக, 1997-98ஆம் ஆண்டில் பதினைந்து இலட்சம் ரூபாயாகவும், 1998-99ஆம் ஆண்டில் 17 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டதும் தி.மு. கழக ஆட்சியிலேதான். இந்த நிறுவனத்திற்கு 1991-96 ஆட்சிக் காலத்தில், ஜெயலலிதா முதல்வராக இருந்த போது கருவிகள் வாங்குவதற்காக 26.74 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், 1996-2000ஆம் ஆண்டு வரை தி.மு.கழக ஆட்சிக் காலத்திலே 126.13 இலட்சம் ரூபாய் நவீனக் கருவிகள் வாங்குவதற்காக அரசின் சார்பில் வழங்கப்பட்டது.

திரைப்படத் துறையினருக்கு அவர்கள் வைத்த கோரிக்கைகளையெல்லாம் ஏறெடுத்தும் பாராமல், மூன்றாண்டு காலமாக எதுவுமே செய்யாமலிருந்து திடீரென்று என்ன காரணத்தாலோ நினைத்துக் கொண்டு ஜெயலலிதா அரசு அறிவித்துள்ள சலுகைகளையும் தி.மு.கழக ஆட்சியில் செய்யப்பட்ட சலுகைகளையும், அந்தத் துறையிலே உள்ளவர்கள் வெளிப்படையாக ஒப்பிட்டுக் காட்டி சொல்லிக் கொள்ள முடியாவிட்டாலும், தங்களுக்குத் தாங்களே மனதிற்குள்ளாவது சொல்லிக் கொள்வார்கள் என்றே நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

6-10-2014

3099. பகுத்தறிவுப் பாசறையின் பணி!

உடன்பிறப்பே,

சேலம் மாநாட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் திராவிட இயக்க இலட்சியங்கள், பகுத்தறிவுக் கொள்கைகள், தமிழ் இனமான உணர்வுகள், பண்டைய தமிழர் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை இன்றைய இளைய தலைமுறையினரிடையே முழுமையாகப் பரப்பிட, முழு நேரப் பணி மேற்கொள்ளும் உறுப்பினர்களைக் கொண்ட "கலைஞர் பகுத்தறிவுப் பாசறை" எனும் சார்பு அமைப்புகள், நகர, ஒன்றியங்கள்தோறும் அமைத்திட தம்பிகள் பரமத்தி சண்முகம், பெரம்பூர் க. கந்தன், திருவாரூர் இரா. திருவிடம் ஆகியோர் கொண்ட குழு ஒன்று மாவட்ட வாரியாகச் சுற்றுப் பயணம் மேற்கொள்கிற விபரத்தை நமது கழகத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் அறிவித்துள்ள இந்த நேரத்தில் இக்கடிதம் எழுதுகிறேன்.

ஏதோ புதிதாக இன்றைக்குத்தான், அதுவும் சேலம் மாநாட்டுக்குப் பிறகுதான் - இந்தச் சிந்தனை நமக்கு ஏற்பட்டு அதைச் செயலாக்க முனைந்திருக்கிறோம் என்று யாரும் கருதினால் அது தவறு.

தி.மு.கழகம் 17-9-1949-ல் துவங்கப்பட்டு, அப்போதுநிறுவப்பட்ட சட்ட திட்டக் குழு தயாரித்த நகல் சட்டதிட்டம், முறைப்படி பொதுக்குழுவில் ஏற்கப்பட்டு, 1951 டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலத்திலிருந்து, சில திருத்தங்களுக்குப் பிறகு இப்போதும் கழகத்தின் கொள்கை கோட்பாடாக இருப்பதில் -

> "கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு அடிப்படையில் அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணி ஆற்றிடவும், பொருளாதாரத் துறையில் வறுமையை

வென்று, சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும், பிறமொழி ஆதிக்கத்திற்கு இடம் கொடாமல் அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும், அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத் தரவும், மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மாநிலங்களில் சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் உருவாகிடவும் தொண்டாற்றுவது"

என்ற வாசகம் ஒளிவிடுவதையும் - பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப்பணி ஆற்றுவதில் கழகம் கொண்டுள்ள ஆர்வத்தையும் தெளிவாக உணர முடியும்.

எனினும், இன்றைய சமுதாய அமைப்பில் சாதி மத பேதங்கள் வளர்க்கப்படவும் - அதனால் உருவாகும் சண்டை சச்சரவுகளின் சந்து பொந்துகளில் ஒளிந்து கொண்டு - காட்டுமிராண்டித் தனமான நம்பிக்கைகளை வளர்த்து அவற்றில் குளிர் காய்ந்திடவும் குள்ள மனம் படைத்துக் குட்டை குழப்புவோர் தொகை நாளுக்கு நாள் பெருகி வருவதையும் -

ஆலைச் சாமியார் -

சாலைச் சாமியார் -

சேலைச் சாமியார் -

பீர் சாமியார் -

பிராந்தி சாமியார் -

சாராயச் சாமியார் -

சந்தைச் சாமியார் -

என நாள்தோறும் செய்திகள் வருவதும் - பெண்டிரும், ஆடவருமாக ஆங்காங்கு நூற்றுக்கணக்கானோர், ஆயிரக்கணக்கானோர் ஏமாற்றப்படுவதும் - கடவுளை நிந்திக்கும் கயவர்கள் என நம்மைக் கடிந்து கொண்டு, கடவுளைச் சந்திக்கு இழுத்துச் சாடுகிற - ஆடுகிற - பாடுகிற சண்டாளர்கள் நடத்தும் சதியில் நல்லோர் பலர் வீழ்வதும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்ட இந்தக் கால கட்டத்தில், பகுத்தறிவாளர்களுக்குரிய பணியை நினைவூட்டி அவர்களைச் செயல்பட வைத்திடத்தான் சேலம்

மாநாட்டுத் தீர்மானமும் - அதனைச் செயல்படுத்திட எடுத்துள்ள முயற்சியுமாகும்.

இது நம்முடைய தொடர்பணியாகத்தான் இருந்து வருகிறது என்பதையும் - கழகத்தில் என் போன்ற மூத்தவர்கள் - முன்னோடிகள் - பழைய சுயமரியாதைக்காரர்களின் பட்டியலிலேயே இடம் பெற்றவர்கள் எவரும் முனைமுறிந்து போகாத ஈட்டிகளாகவும், வேல்களாகவும், கூர் அம்புகளாகவுமே இருக்கிறார்கள்.

கூர் தீட்டப்பட வேண்டிய -

பட்டை தீட்டப்பட வேண்டிய -

சாணை பிடிக்கப்பட வேண்டிய

கருவிகளாக இன்னமும் சிலர் இந்த இயக்கத்தில் இருப்பதை உணர்ந்தும் உள்ளோம். அதற்கும் இந்தப் பகுத்தறிவுப் பாசறை நிச்சயம் பயன்படும் என்று நம்புகிறேன்.

ஒன்று கூற விரும்புகிறேன் - அமெரிக்காவிலிருந்து வெளிவரும் ஒரு ஏட்டில் திராவிடர் கழகத்தைப் பற்றியும், அதன் தலைவர் ஆருயிர் இளவல் வீரமணி அவர்களைப் பற்றியும் கொள்கை உறுதியினைப் பாராட்டி எழுதப்பட்டுள்ளது. அது நூற்றுக்கு நூறு கலப்படமற்ற உண்மை எனினும் - அதே கட்டுரையில் தி.மு.கழகம், மதத்துடனும், மடமையுடனும் சமரசம் செய்து கொள்ள அணியமாக உள்ளது அ.தி.மு.க. வைப்போல என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

அந்த அமெரிக்க ஏடு அதிகத் தொலைவில் இருப்பதாலோ - அல்லது நம்மைப் பற்றிய அறியாமையில் இருப்பதாலோ அப்படி எழுதியிருப்பதாக எண்ணுகிறேன்.

தி.மு.க. தலைமை மூகாம்பிகை கோயிலுக்கோ - குருவாயூரில் யானை காணிக்கை செலுத்துவதற்கோ - யாகம் வளர்ப்பதற்கோ - ஓமம் வளர்ப்பதற்கோ என்றைக்கும் சென்றதுமில்லை, அந்த மூட நம்பிக்கைகளுக்கு உடன்பட்டதுமில்லை.

இருந்தாலும் இப்படி ஒரு பிரச்சாரம் அமெரிக்கா வரையில் - இந்தச் சிறு துளி விஷமப் பிரச்சாரத்துக்கும் இடம் தராமல், தமிழகத்தை விவேக புரியாக ஆக்கிடும் விஞ்ஞான பூர்வமான

அணுகுமுறைக்கு ஆக்கமும், ஊக்கமும் தர - அய்யாவின் அடிப்படைக் கொள்கைகள் வென்றிட - அண்ணாவின் வழி நடக்க சூளுரை மேற்கொள்வதே கலைஞர் பகுத்தறிவுப் பாசறையின் குறிக்கோள் என்பதை மறவாமல் - உடன்பிறப்பே! உன்னைச் சந்திக்கும் குழுவினர் உற்சாகம் பெற்றிட ஒத்துழைப்பை வழங்கிடுக என வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

7-10-2004

3100. எப்போது விளங்கிக் கொள்வார்களோ?

உடன்பிறப்பே,

எந்த ஆட்சியாக இருந்தாலும் - அது எந்த நாட்டு ஆட்சியாக இருந்தாலும், எமர்ஜென்சியெனும் நெருக்கடி கால நிலையைப் பிரகடனப்படுத்தி விடுமேயானால் - ஆளுங்கட்சிக்காரர்களும், அதிகார வர்க்கத்தினரும் போடுகிற ஆட்டபாட்டங்களுக்கு அளவே இருக்காது என்பது நாம் அனுபவத்திலே கண்டதாகும்.

1975-76களில் இந்தியாவில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருந்தபோது - எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் பறிக்கப்பட்டதும், அதையும் மீறி ஏதோ ஒரு வழியில் நம் கருத்துகளைச் சொல்ல முயன்று கொடுமையான அடக்கு முறைக்கு ஆளானதும், "அவசர நிலைக்காலத்தில் அதிகார வர்க்கத்தினர் அத்துமீறித்தான் நடந்து கொண்டனர். அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அலை கடலோரம் லட்சக்கணக்கானோர் மத்தியில், அன்னை இந்திரா காந்தி அவர்கள் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துக் கொண்டார் என்பதும் வரலாறு. அந்தக் கூட்டத்தில் நானும் மேடையில் இருந்தேன், அருமை நண்பர்கள் மூப்பனாரும், சிவாஜியும் இருந்தார்கள் அண்ணா பிறந்த நாள் விழாக் கூட்டம் அது!

நெருக்கடி காலத்தை இப்போது நினைவு படுத்துவதற்குக் காரணம், அத்தகைய காலத்தில் அரசுக்கு எல்லா அதிகாரமும் உண்டு - அரசினர் எதிர்க்கட்சிகளைப் பற்றி எதை வேண்டுமானாலும் சொல்லலாம், எழுதலாம், விளம்பரப்படுத்தலாம் - ஆனால் அந்தக் கருத்துகளுக்கோ, குற்றச்சாட்டுகளுக்கோ, குறைந்தபட்சம் அரசின் தரப்புச் செய்திகளுக்கோ - எதிர்தரப்பிலிருந்து நியாயமான முறையில் உண்மைகளை வெளியிடக் கூடாது - அப்படி வெளியிட்டால் அவற்றைப் பத்திரிகைகள் வெளியிட்டு விடக்கூடாது, முடியாது!

அத்தகைய நிலை இப்போது இந்தியா முழுமைக்கும் இல்லாவிடினும், குறிப்பாகத் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மிகக் கொடுமையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆம்! எங்குமே - எந்த மாநிலத்திலுமே இல்லாத தொல்லை - இந்த மாநிலத்தில் உள்ள பத்திரிகைகளுக்குத் தொடர்ந்து தரப்படுகிறது. அதனால் அந்த ஏடுகளால், நல்லவைகளுக்காக வாதாடவும் முடியவில்லை - அல்லவைகளுக்காகப் போராடவும் முடியவில்லை.

காரணம் என்ன? அடக்குமுறையா? எனில், அப்பட்டமாக வெளியே தெரியும் - அம்பலமாகும்! அதனால் இங்கே அனுஷ்டிக்கப்படுவது ஒடுக்குமுறை - ஒளிந்து கொண்டு நிறைவேற்றும் ஒடுக்குமுறை - காவல்துறையினரின் கண் உருட்டல் - வாய் மிரட்டல் - பொய் வழக்கு - விளம்பர நிறுத்தம் - போன்ற பொருளாதாரத் தாக்குதல்கள் - பொல்லாதோரின் வலிய வம்புகள் - இந்தத் தொல்லைகள் ஏன் என்று வாயைக் கட்டிக் கொண்டு, பேனாவை மூடிக் கொண்டு, வாலைச் சுருட்டிக் கொண்டு கிடப்பதே மேல் என எண்ணிடும் இதழாளர் ஒரு புறம் -

ஆகா! இதுகளைப் பற்றி எதையும் எழுதிடவும், பேசிடவும் - இங்குள்ள ஆளவந்தார் பற்றி ஆகாயமளவுப் போற்றிப் புகழ்ந்து பாடவும் அரியதோர் வாய்ப்பாக, இந்த எமர்ஜென்சி அமைந்ததே யென்று எழுதுகோலில் ஏற்கனவே நனைத்தெடுத்த "பொய்மை" போதாதென்று மேலும் மேலும் அதே "மை"யில் நனைத்தெழுத நிமிர்ந்து நிற்கும் ஏடுகள் ஒரு புறம் -

இந்த நிலையை ஏறத்தாழ ஒரு நெருக்கடி கால நிலை போலவே கருதிக்கொண்டு செயல்பட, ஜெயலலிதா அரசுக்கு யாரும் சொல்லிக் கொடுக்கவா வேண்டும்?

இதோ! எவ்வளவு பெரிய பொய் மூட்டையை அவிழ்த்துக் கொட்டி தமிழ்நாட்டுப் பொதுமக்களைத் "தண்டச் சோற்றுத் தடிராமன்"களைப் போல நடத்தியிருக்கிறார் என்பதற்கு அண்மையில் நடை பெற்ற விருது வழங்கிய நிகழ்ச்சி ஒன்று போதாதா?

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிற ஐ.நா. மன்றம் தன்னைக் கௌரவிக்கிறது - விருது வழங்குகிறது

- இந்தியாவிலேயே நல்ல பெண்மணி இவர்தான் என்று பெருமைப்படுத்துகிறது - என்பதாக "பவானி" ஜமக்காளத்தை நான்காக மடித்துப்போட்டு அதிலே வடிகட்டிய பொய்யை முதலில் செய்தியாக்கினார்கள்.

"ஐ.நா. மன்றமா? அது ஜெயாவுக்குக் கௌரவ விருது தருகிறதா?" என்று விசாரித்தறிந்து விபரங்களைப் பலரும் வெளியிட்டு - அது வெறுமனே வெத்து வேட்டு என்பதாக வேஷம் கலைந்தவுடன் "ஐ.நா. சபையல்ல! அது ஐ.நா. சபையின் ஆலோசனை அமைப்பு" என்றும் "மனித உரிமைப் பாதுகாப்புக் குழு" என்றும் விருது தரும் அமைப்பின் விலாசத்தை மாற்றிக் கொண்டார்கள். இறுதியாக, அந்த விலாசத்தையும் விட்டுவிட்டார்கள்!

அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்ப்பதுபோல் பிட்டுப் பார்த்தால் - இங்கிருந்து அங்கே போய் இதேபோன்ற "ஏஜண்டு" வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் சிலரும், இங்கேயே அத்தகைய ஏஜண்டுகள் சிலரும் சேர்ந்து செய்த ஏற்பாடு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் இப்போது விளங்கி விட்டது.

கோபி அன்னான் அவர்களுக்கு அளிக்கப்பட்ட விருதுதான் இதுவும் என்றார்கள் - அப்படியே இருக்கட்டுமே! அறிஞர் அண்ணா சொன்னதுபோல் "செஞ்சிக் கோட்டை ஏறியவர்கள் எல்லாம் ராஜா தேசிங்குகளாகிவிட முடியுமா?"

இந்த அழகில் இந்தச் செய்தி ஒரு கற்பனை என்று நேரில் விசாரித்தவர்கள் அறிக்கை தந்துள்ளார்கள். அந்த அறிக்கையை வெளியிட இங்குள்ள ஏடுகளுக்கு தயக்கம்! நெருக்கடி நிலை இல்லாமலே, அவர்களுக்கு நெருக்கடி!

அறிக்கை தந்தவர்கள் ஒன்றும் அறியாத அப்பாவிகள் அல்லர்!

"ஐ.நா. சபையில் இந்திய நாடாளுமன்றத்தின் பிரதிநிதியாக உரையாற்றச் சென்றுள்ள ஆர். சண்முக சுந்தரம், எம்.பி. அவர்களும், அவருடன் சென்றுள்ள காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஆனந்த சர்மா அவர்களும், மற்றும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், பிரபல மலையாள ஏடான "மாத்ரு பூமி" இதழின் ஆசிரியர் திரு. மாதவன் குட்டியும்

"இந்த விருது பற்றி விரிவாக விசாரித்து" அது ஒரு வீண் ஜம்பச் செய்தியென்று விளக்கி, விருதுக்கும் ஐ.நா.வுக்கும் எந்த தொடர்பும் இல்லையென்று அறிவித்திருக்கிறார்கள்.

அந்த அறிக்கையை ஆளுங்கட்சிக்குப் பயந்து பல ஏடுகள் வெளியிடாமலே விட்டு விட்டன.

இதோ! ஓர் உண்மை விளக்கம் என்ற தலைப்பிட்டு, "சென்னை சமூகநீதி கோரும் வழக்கறிஞர் மன்றம்" வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை வருமாறு:-

> "ஜெயலலிதாவுக்கு விருது வழங்கும் 'அனைத்துலக மனித உரிமைப் பாதுகாப்புக் குழு' ஐ.நா. சபையின் அதிகாரப்பூர்வ அமைப்பு எனக் கூறப்படுவது சுத்தப் பொய்! ஐ.நா. சபையின் ஆலோசனைக் குழுவில் பங்கேற்க உலகில் 2531 அரசு சாரா அமைப்புகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. இந்த 2531 அமைப்பு களின் பட்டியலில் ஜெயலலிதாவுக்கு விருது வழங்கும் அமைப்பு இல்லவே இல்லை.
>
> அதாவது, ஜெயலலிதாவுக்கு விருது வழங்கும் அமைப்பு ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பே இல்லை. (ஐ.நா. சபை அங்கீகரித்துள்ள 2531 அமைப்புகள் அடங்கிய முழுப்பட்டியலைக் காண www.un.org./esa/coordination/ngo/pdf/INF_List.pdf எனும் ஐ.நா. இணையத் தளத்தைக் காண்க).
>
> முதல்வருக்கு விருது வழங்கிய IHRDC அமைப்பு 'A Chartered consultative body of the United Nations' என்ற விளம்பரங்களில் கூறப்பட்டிருப்பதுகூட தவறுதான். ஐ.நா.வில் General category, Special category, Roster ஆகிய மூன்று வகை அங்கீகாரங்கள்தான் உள்ளன. 'Chartered Consultative body' என்ற அங்கீகாரம் ஐ.நா.விலேயே கிடையாது. (ஆதாரம்: www.un.org/esa/coordination/ngo/about.htm).
>
> மேலும், ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அமைப்புகள்கூட ஐ.நா.வின் பெயரையோ, சின்னத்தையோ எதற்கும் பயன்படுத்தக் கூடாது

என ஐ.நா. விதி முறைகள் கூறுகின்றன. (They are not representatives or agents of the UN, nor are they authorized to enter into business arrangements on behalf of the UN- ஆதாரம், ஐ.நா. இணையதளம் : www.un.org/esa/coordination/ngo/fag.htm).

அதிகாரப்பூர்வ குழு என தனக்குத் தானே கூறிக்கொள்ளும் உக்ரைன் நாட்டு அமைப்பின் தலைவர் நட்டாலியா கிரிவுட்சா என்பவர், தமிழக முதல்வருக்கு விருது வழங்கினாராம். ஆனால், இவர் அந்த அமைப்பின் துணைத் தலைவர்தான் என அவ்வமைப்பின் இணையத் தளம் குறிப்பிட்டுள்ளது. அதுமட்டுமின்றி, ஐ.நா. சபையின் அதிகாரப்பூர்வ அமைப்பென இக்குழுவின் இணையத் தளத்தில் கூறப்படவில்லை. (காண்க: www.committee.org.ua/dok35.html).

ஆக, ஐக்கிய நாடுகள் சபையின் விதிமுறைகளை மீறி, ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்படாத ஓர் சிறிய "அரசு சாரா" அமைப்பினைச் சாக்காக வைத்து, ஐ.நா. சபையின் பெயரால் விருது பெறுவது போன்ற மாயத் தோற்றத்தை தமிழக மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் முயற்சிதான் இந்த 'தங்கத் தாரகை' விருது விழா!

"ஐ.நா. சபையின் தங்கத் தாரகை விருது" என்ற பெயரால் தமிழக முதல்வரும், அமைச்சர்களும் தமிழக மக்களை ஏமாற்றினார்களா?

அல்லது

ஐ.நா. சபையின் பெயரைச் சொல்லி உக்ரைன் நாட்டு அமைப்பினர் தமிழக முதல்வரை ஏமாற்றினார்களா?

உண்மையை தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு!" எனக் கூறுகிறது அந்த அறிக்கை!

நடந்தது என்ன என்ற உண்மைக்குத் திரை போடவும் - பொய்ச் செய்திக்கு வெளிச்சம் போடவும் - நடமாடுபவைகளுக்குப் பெயர்தான் பத்திரிகா தர்மமா? அப்படியானால், அந்தத் தர்மம் தழைத்தோங்குக! என்றுதான் தாரை தப்பட்டை முழங்க வேண்டும்.

இங்கே அம்மா ஆட்சி - அங்கே ஐ.நா. மன்றமே இந்தப் பாடுபடுகிறது!

யார்தான் சற்று துணிச்சலுடன், நடுநிலையுடன் சிந்தித்து - நாட்டுக்கு நல்லது, கெட்டது எது என்பதை விளக்கப் போகிறார்களோ? மக்களும் எப்போது விளங்கிக் கொள்ளப் போகிறார்களோ?

அன்புள்ள,

மு.க.

14-10-2004

3101. ஆளுநர் நெஞ்சில் அலை மோதும் வேதனை!

உடன்பிறப்பே,

தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கம் தொடங்கியபோது, அந்த இயக்கத்தின் சார்பில் வீசத் தொடங்கிய பகுத்தறிவுச் சூறாவளியை, சனாதனம் என்ற பலகணிக் கதவை மூடித் தடுத்து விடலாமென்று வைதீகபுரியினர் வரிந்து கட்டிக் கொண்டு வாய் ஜாலம் பேசினர்.

“தன்மான இயக்கம் தளிர் விட்டுக் கிளம்புவதே சந்தேகம்! அந்த இயக்கமாவது மூட நம்பிக்கைகளை முறியடிப்பதில் வெற்றி பெறுவதாவது! கூடாது, கூடாது இந்த வகுப்புவாத இயக்கத்தை வளர விடக் கூடாது! நாத்திக இயக்கத்தை நசுக்கியே தீர வேண்டும் - திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளைத் திக்கெட்டும் கூட்டுவோம் வாரீர் - இந்த தீயவர்களைத் தீர்த்துக் கட்டுவோம் வாரீர்” என்று சீறிப் பாய்ந்தனர் - திராவிட இயக்கத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்துவோம் - அதன் பிறகே மறு வேலை பார்ப்போம் என மார் தட்டினர்!

பெரியாரைப் பழித்தனர் - அவர் எடுத்து வைத்த கொள்கைகளை எதிர்த்தனர் - அவரது அறிவியக்கத் தளபதியாகச் செயல்பட்ட பேரறிஞர் அண்ணாவை ஏசினர். நமதியக்க முன்னோடித் தலைவர்களை நாவினாற் சுட்டனர். பெரியாரின் மறைவுக்குப் பிறகு, பகுத்தறிவு இயக்கமே இனி தலைதூக்க இயலாது என்றும், அந்தக் கொள்கைகளைப் பரப்புவதற்கு இனி யாரும் கிடையாதென்றும் தங்களுக்குத் தாங்களே மகிழ்ந்து கொண்டனர். அத்தகையோர் மகிழ்ச்சி நீடிக்கவும், நிலைபெறவும் உதவிடும் வண்ணம், மூட நம்பிக்கையினை உரம் விட்டு வளர்க்க ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்களே பெரியாரின் பெயரைச் சொல்லிக் கொண்டு வர்ணாஸ்ரம தர்ம காரியங்களில் ஈடுபட்டனர். விநாயகர் சதுர்த்தி, விஜய தசமிகளுக்கு வாழ்த்துக் கூறினர். யாகம்

வளர்த்திடவும், கோவில்களுக்கு யானைகளை தானம் வழங்கிடவும் முற்பட்டு அன்றாடம் அறிவியக்கத்திற்கெதிராக செய்திகளைப் பரப்பினர்.

ஆனால், அவற்றுக்கு மாறாகப் பெரியாரின் சுயமரியாதை, பகுத்தறிவு கொள்கைகளைக் காத்திட ஆருயிர் இளவல் வீரமணி அவர்களின் தலைமையில் திராவிடர் கழகம் பெரியாரின் பணிகளை வர்ணாஸ்ரம, சனாதன, மூடநம்பிக்கை எதிர்ப்புப் போரினை தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் வருகின்றது. அதுபோலவே திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும், இல்லாதபோதும் அந்தப் பணியை அதன் தொடர்ச்சி கெட்டுவிடாமல், ஆற்றிவருகின்றது. மேலும் அப்பணியை பரவலாக்குவதுதான் கலைஞர் பகுத்தறிவு பாசறைகளை மாவட்டந்தோறும் தொடங்குகின்ற காரியமுமாகும். இந்தப் பாசறைக்கும் முழு நேர அரசியலுக்கும் தொடர்பு கிடையாது. இந்தப் பாசறைகள் முழுக்க முழுக்க அறிவியக்கப் பணிகளை ஆற்றுவதற்காகத்தான் தொடங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பாசறைகளில் பணியாற்றவிருப்போர், பாசறை வீரர்களாக உலவிட விரும்புவோர் கழகத்திலே உறுப்பினர்களாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. அவர் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் என்ற நிபந்தனை எதுவுமில்லாமல், அவர்கள் அறிவியக்கத் தூதுவர்களாக, பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பும் சிப்பாய்களாகப் பணியாற்றினால் மட்டும் போதும்.

பகுத்தறிவு கொள்கைகளைப் பரப்புவதற்காக நாம் இந்த அளவில் பணியாற்றிக் கொண்டிருக்கும் நிலையில், அந்தக் கொள்கையே பூண்டற்று போய்விட்டது என்று ஒரு சாரார் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டு, அந்தக் கொள்கையை ஆதரித்துப் பேசுவதற்கே யாரும் இல்லை என்று சண்டமாருதம் செய்து கொண்டிருக்கும் வேளையில், அவர்தம் செயலுக்குர் பதிலடி கொடுப்பது போல உ.பி. ஆளுநர் அவர்கள் தன் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்.

தமிழக ஆளுநரையும் மேடையிலே வைத்துக் கொண்டு, உத்தரப் பிரதேச மாநிலத்திலே ஆளுநராக வீற்றிருக்கும் கவர்னர் டி.வி. ராஜேஸ்வர் அவர்கள், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்திலே ஆற்றிய உரை, இன்று "இந்து" இதழிலேயே வெளியாகியிருப்பதைக் கண்டு பெரியாரின் கொள்கைகள்

என்றைக்கும் அழியக் கூடியவைகள் அல்ல என்ற எண்ணம் நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திடத் தவறவில்லை. பெரியாரின் கொள்கைகள் தமிழகத்திலே ஒரு சாராரால் இருட்டடிப்பு செய்யப்படுவதைக் கண்டு மனம் நெகிழ்ந்த நிலையில், தன் உரையை உ.பி. ஆளுநர் அவர்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார்.

திரு. டி.வி. ராஜேஸ்வர் அவர்கள் ஒரு தமிழர்! சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்! சென்னை மாநிலக் கல்லூரியில் படிப்பை முடித்த பிறகு, காவல் துறையிலே அதிகாரியாகப் பணியாற்றத் தொடங்கி, புலனாய்வுத் துறை இயக்குநராக 1980களில் திறம்படப் பணியாற்றி, 1983இல் முதன் முதலாக ஒரு காவல் துறை அதிகாரி ஆளுநராக நியமனம் செய்யப்பட்டார். அருணாசல பிரதேசம், சிக்கிம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் ஆளுநராகப் பணியாற்றிய அனுபவம் பெற்று தற்போது உத்தரப் பிரதேச மாநில ஆளுநராக இருந்து வருகிறார்.

1990ஆம் ஆண்டு குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமன் அவர்களின் கட்டளையின் பேரில், பல ஆளுநர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தபோது, ராஜேஸ்வர் அவர்களும் மேற்கு வங்க ஆளுநர் பதவியிலிருந்து விலகினார்.

அவர் நேற்றையதினம் ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு :-

> "எந்தப் புதிய விஷயத்தையும் ஏற்றுக் கொள்வதற்கு முன் பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் புதிய பூசாரியோ, சாமியாரோ தோன்றிக் கொண்டே இருக்கிறார். மந்திர வித்தைகள் மூலம் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என கூறுகின்றனர். பூசாரிகள் சிலர், ஆட்டின் கழுத்தை கடித்து ரத்தத்தைக் குடிக்கின்றனர். சிலர் சாராயம் குடித்து விட்டு பக்தர்கள்மீது துப்புகின்றனர். குணப்படுத்துவதாகக் கூறி நோயாளிகளை அடிக்கின்றனர். சாமியார்களுக்கு வயதும், குடும்ப வாழ்க்கையும் தடையே கிடையாது. ஒருவர் பத்து வயதில் சாமியார் என்று சொல்லிக் கொள்கிறார். ஒருவர் திருமணம் முடிந்து குழந்தை பெற்ற பின் தன்னை புதிய அவதாரமாக அறிவித்துக் கொள்கிறார். 70 ஆண்டுகளுக்கு முன்பே மூட நம்பிக்கைகளை

விட்டொழித்து, சுயமரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என ஈ.வெ.ரா. அழைப்பு விடுத்தார். சுயமரியாதை இயக்கங்கள்தான் பிற்காலத்தில் அரசியல் இயக்கங்களாக மாறின. ஆனால், அவரது கொள்கைகள் மக்களால் மறக்கப்பட்டது வேதனை அளிக்கிறது. இளைஞர்கள் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும். முடிந்தளவு பாமர மக்களின் மனதில் மாற்றத்தை உருவாக்க வேண்டும்"

உத்தரப் பிரதேச மாநில ஆளுநரின் உரையினைப் படித்தபோது, அவர் எந்த அளவிற்கு வேதனையோடு தந்தை பெரியாரின் கொள்கைகள் தமிழகத்திலே மறைக்கப்படுவதைக் கண்டு நொந்து போயிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

தமிழகத்தை விட்டுப் பல ஆண்டுகள் அவர் பிரிந்திருந்தபோதிலும், தமிழகத்தில் நடக்கும் விஷயங்களை தான் கவனித்து வருவதாகக் குறிப்பிட்டு தனது உரையை ஆற்றியிருக்கிறார்.

பெரிய சாமியார்கள், குட்டிச் சாமியார்கள், வரம் தரும் சாமியார்கள், நினைத்ததை நடக்க வைக்கும் சாமியார்கள், மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் மக்களை ஏமாற்றுகின்றவர்கள் ஆங்காங்கு தோன்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அத்தகையவர்களுக்கு அதிகாரப் பொறுப்பிலே உள்ளவர்களே தரும் மரியாதையும், மதிப்பும் உத்தரப் பிரதேச ஆளுநரை பாதிக்கச் செய்ததால்தான், இத்தகைய எண்ணம் அவருடைய உள்ளத்திலே தோன்றி அவரைப் பேச வைத்துள்ளது. பக்தியின் பெயராலும், மதத்தின் பெயராலும் ஊரை ஏமாற்றுவோரின் எண்ணிக்கை பெருகிவிடாமல் கருகி விட வேண்டும் என்ற உத்தரப் பிரதேச மாநில ஆளுநரின் எண்ணம் வெற்றிபெற பகுத்தறிவாளர்கள் அனைவரும் செயல்பட வேண்டும், பணியாற்ற வேண்டும் என்பதுதான் எனது எண்ணமும் ஆகும்.

அன்புள்ள,

மு.க.

27-10-2004



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதற்பதிப்பு 2022